தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—132

பன்னாட்டுப் பொருளாதாரம்-I

(THE INTERNATIONAL ECONOMY)

ஆசிரியர் :

பீ. டி. எல்ஸ்வோர்த்

தமிழாக்கம் :

ஏ. குழந்தை, பி.ஏ. (ஆனர்ஸ்),
துணைப் பேராசிரியர்,
பொருளாதாரத் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—132

பன்னாட்டுப் பொருளாதாரம்-I

(THE INTERNATIONAL ECONOMY)

ஆசிரியர் :

பி. டி. எல்ஸ்வொர்த்

தமிழாக்கம் :

ஏ. குழந்தை, பி.ஏ. (ஆனர்ஸ்),
துணைப் பேராசிரியர்,
பொருளாதாரத் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—April, 1967

B.T.P. No. 132

THE INTERNATIONAL ECONOMY

P. T. Ellsworth

Translation

A. KULANDAI

Price Rs. 7-50

Printed by
The Ideal Printers,
Madras-6

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பன்னாட்டுப் பொருளாதாரம்-I' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 132ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 85 நூல்களையும் சேர்த்து இதுவரை 167 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்.

மூன்றும் பதிப்பின் முன்னுரை

துரிதமான மாறுதல்களின் விளைவாக இந் நூலின் 1958ஆம் ஆண்டுப் பதிப்பிலுள்ள பிந்திய அதிகாரங்கள் தற்காலத்திற்குப் பொருந்தாதவை ஆகிவிட்டன. எனவே, அவற்றைத் திருத்தி அமைப்பது இன்றியமையாததாகிவிட்டது. இன்றைய பிரச்சினைகளைப்பற்றிய இவ்வதிகாரங்களை மட்டும் திருத்தி எழுதினால் போதும் என்றுதான் முதலில் எண்ணினேன். ஆனால், மற்றவர்கள் திறனாய்ந்து செய்த விமரிசனங்களும் எனக்கே தோன்றிய சில குறைகளும் சேர்ந்து இந் நூலைப் பெருமளவில் மாற்றி அமைக்குமாறு செய்துவிட்டன. இருப்பினும், முந்திய பதிப்புகளில் வரலாற்றையும் கோட்பாட்டையும் ஆதாரமாகக் கொண்ட அமைப்பை இப் பதிப்பிலும் அப்படியே வைத்துள்ளேன்.

1, 3, 5ஆம் மடல்களிலுள்ள வரலாற்று அதிகாரங்களை அதிகமாக மாற்றவில்லை. கோட்பாட்டுத் தத்துவங்களுக்குப் பல சான்றுகளை அவை தருவதோடு, 18ஆம் நூற்றுண்டிற்குப் பின், புரட்சிகரமான தொழில்மாறுதல் காரணமாக, உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கவேண்டிய அவசியத்திற்கும் தேசியப்பற்றுச் சக்திகளுக்கும் இடைவிடாமல் நிலவிவரும் முரண்பாட்டையும் அவை எடுத்துக்காட்டுகின்றன என்று நான் நம்புகிறேன். 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தேசியப்பற்றுச் சக்திகளுக்கு வலுவான எதிர்ப்பு ஏதுமில்லாததால் அவை வெற்றி கண்டன. 1930ஆம் ஆண்டுகளில் பன்னாட்டுக் கூட்டுறவை ஏற்படுத்துவதற்காகச் சர்வதேச சங்கம் மேற்கொண்ட பல முயற்சிகளை இச் சக்திகள் பயனற்றவையாக்கிவிட்டன. பெருங் கேடு விளைவித்த இரண்டாம் உலகப் போருக்குப் பின், புனரமைப்பையும், வாணிபம், செலுத்தல் முறை ஆகியவற்றின் மீது இருந்த தடைகளை நீக்குவதையும், வறுமை நிறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்ட பன்னாட்டுக் கூட்டுறவு முயற்சிகள் பல தோன்றியதன் விளைவாக, உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது. இருந்தபோதிலும், தேசியப் பற்றுதல்களுக்கும் பன்னாட்டு ஐக்கியத்திற்குமிடையே முரண்பாடு இருந்துகொண்டேதானிருக்கிறது. அதேசமயம்,

கம்யூனிச முறைக்கும் அதற்கு நேர்மாறான முதலாளித்துவ முறைக்கும் இடையே இதைக் காட்டிலும் தீவிரமான முரண்பாடு இருந்துவருகிறது.

2ஆம் மடலில் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சி, வாணிபம் ஆகியவற்றின் கோட்பாட்டு ஆதாரங்களையும், அவ் வாணிபத்தால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கும் அதிகாரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. ஆதம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ ஆகியோரின் கோட்பாடுகள் முதல் காரணிப் பேற்றினையும் உற்பத்திசார் பலன்களையும் கொண்டு விளக்கும் நவீன கோட்பாடுவரையுள்ள பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டின் வளர்ச்சி 1958ஆம் ஆண்டுப் பதிப்பிலுள்ளதைப்போன்றே இங்கும் சித்திரிக்கப்படுகிறது. பிற வாய்ப்புப் பெறுமானத்தின் அடிப்படையில் விளக்கப்படும் தராதரச் செலவுக் கோட்பாட்டின் நவீன விளக்கம் என்ற புதியதோர் அதிகாரத்தைப் புகுத்தியதன் வழியாக, இவ் வளர்ச்சி தொடர்ச்சியாக இருந்துவருவது காட்டப்படுகிறது. பன்னாட்டுக் கோட்பாடுபற்றிய ஏனைய அதிகாரங்கள் ஓரளவிற்கோ அல்லது முழுவதுமோ திருத்தி எழுதப்பட்டுள்ளன. காரணி விகிதாசாரக் கோட்பாடுபற்றிய சில திறனாய்வினைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, பன்னாட்டு வாணிபத்தின் மாறும் இயல்புடைய அம்சங்கள் என்ற புதிய அதிகாரமும் இங்கு இடம் பெறுகிறது.

4ஆவது மடலில் செலுத்துநிலைபற்றிய அதிகாரங்கள் உள்ளன. செலுத்துநிலை என்ற கோட்பாட்டின் பொருள் என்ன, அது எதைக் குறிக்கிறது, பன்னாட்டுச் செலுத்தல்களின் உலைவுகள் எத்தகையவை, அவற்றைத் திருத்தும் பல்வேறு வழிகள் யாவை ஆகியவற்றை இம் மடல் விவரிக்கின்றது. தேசிய வருமானத்தையும், அதற்கும் செலுத்துநிலைக்குமுள்ள தொடர்பையும் கூறுகின்ற 14 ஆவது அதிகாரம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வாணிபப் பெருக்கியைப்பற்றிய (foreign trade multiplier) 15ஆம் அதிகாரம், பல இடங்களில் புதுப்பிக்கப்பட்டு மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. மாருத நாணயமாற்று வீதங்கள், மாறும் வீதங்கள் ஆகியவற்றின் சூழ்நிலையில் திருத்தம் செயல்படும் முறையைப்பற்றிக் கூறும் 19, 20ஆம் அதிகாரங்களும் பெருமளவில் மாற்றி எழுதப்பட்டுள்ளன.

இன்று மட்டுமன்றி, இனிமேலும் முக்கியமானதாக இருக்கக் கூடிய பெரும் பன்னாட்டுப் பிரச்சினைகளை 6ஆவது மடல் ஆய்கிறது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட புனரமைப்பையும், அதனல்

நாடுகளின் செலுத்துநிலைகள்மீது ஏற்பட்ட விளைவுகளையும் 25ஆம் அதிகாரம் கூறுகிறது. அதனோடு, சமீபத்தில் அவற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் சுருக்கமாக அது கூறுகிறது. பொருளாதார வளர்ச்சியின் பன்னாட்டு அம்சங்களை விளக்கும் 28ஆம் அதிகாரமும் முற்றிலும் திருத்தி எழுதப்பட்டுள்ளது.

முழு வேலைநிலை, விலைத் திடநிலை, தீவிர வளர்ச்சி ஆகிய தேசியக் குறிக்கோள்களையும், செலுத்துநிலையைச் சமநிலையில் வைத்திருப்பதையும் முரண்பாடின்றி இணைக்கும் வழிகளில்தான் தேசியப் பற்றிற்கும் பன்னாட்டுப் பொருளாதார அமைப்பிற்கும் இடையேயுள்ள பிணக்கம் தெளிவாகத் தெரிகிறது. 26, 27ஆம் அதிகாரங்கள் இப் பிணக்கத்தை விவரமாக ஆய்கின்றன. போருக்குப் பின் ஏற்பட்ட பணப் பிரச்சினைகளையும் பன்னாட்டுச் செலாவணியைச் சீர்திருத்தும் பல மாற்று வழிகளையும்பற்றி இவ்வதிகாரங்கள் கூறுகின்றன. ஐரோப்பியப் பொதுச்சந்தை (European Common Market), இன்னும் இதர பிரதேச அமைப்புகள் உருவாகியுள்ளதால், சுதந்திர உலகின் பொருளாதாரத்தை நன்கு அமைப்பதில் புதுவகையான முரண்பாடு எழக்கூடும். இதையும் இது சம்பந்தமான பொருள்களையும் பற்றி 29, 30ஆம் அதிகாரங்கள் ஆய்கின்றன.

இந் நூலைத் திருத்தி எழுதுவதற்காக ஆஃப்ரிக்காவிற்கான ஐக்கிய நாட்டுப் பொருளாதாரக் கமிஷனைச் சேர்ந்த டாக்டர் டேவிட் கார்னி (Dr. David Carney) அவர்கள் பயனுள்ள பல சீரிய குறிப்புரைகளைத் தந்துள்ளார். அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, என் உடனாசிரியர்களான தியோடர் மார்கன் (Theodore Morgan) அவர்களும், ஹென்ஸ் ஸ்மிட் (Hans Schmitt) அவர்களும் தம் நேரத்தை எனக்காகச் செலவிட்டு, கையெழுத்துப் பிரதியின் பல பாகங்களைப் படித்து, தம் கருத்தைத் தெரிவித்துள்ளனர். இவ்வுதவிக்கு என் நன்றி.

பி. டி. எல்ஸ்வொர்த்.

மேடிஸன், விஸ்கான்ஸின்

பொருளடக்கம்

பன்னாட்டுப் பொருளாதாரம்

(தொகுதி I)

பன்னாட்டுப் பொருளாதாரம்

தொகுதி I

1. பன்னாட்டுப் பொருளாதாரம் எதைப்பற்றியது?

தனது வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதற்காக மனிதன் மேற்கொள்ளும் (தொழில்) நடவடிக்கைகளைப்பற்றியது பொருளாதாரம். உற்பத்தித்திறன் (productivity), பொருளாதார மந்தம் (depression), பணவீக்கம் (inflation), சர்வாதீனம் (monopoly), வருமான ஏற்றத்தாழ்வு (inequality of income) ஆகிய பிரச்சினைகளைப்பற்றிப் பொருளாதாரம் பொதுவாக ஆய்கிறது; எனினும், ஏனைய அறிவியல்களைப் போலவே, இவ்வியலை நாம் பயின்ற பின்னர்தான் அதன் தன்மையைத் திட்டவட்டமாகக் கூற இயலும்.

பன்னாட்டுப் பொருளாதாரம் என அழைக்கப்படும் இப் பிரிவிற்கும் இது பொருந்தும். இது பல நாடுகளுக்கிடையே ஏற்படும் பொருளாதார உறவுகளைப்பற்றியது என்பதை இதன் தலைப்பு காட்டுகிறது. ஆனால், இவ்வுறவுகள் திட்டவட்டமாக எவற்றைக் கொண்டன? பன்னாட்டுப் பொருளாதாரம் என்னும் தனிப்பட்டதோர் ஆய்வு அவசியம்தானா?

இவ் வினாக்களுக்குத் தோராயமானதொரு விடையை இவ்வதிகாரம் தருகிறது. அதோடு, முக்கியமான சில பிரச்சினைகளைப்பற்றியும், அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுபற்றியும் இங்கு ஆராயப்பெறுகிறது. இப்போது ஒரு சிறு விளக்கத்தை மட்டும் பார்ப்போம். நாம் பிற நாடுகளோடு கொண்டுள்ள பொருளாதாரத் தொடர்பில் என்ன வாய்ப்புகளும் சிக்கல்களும் உள்ளன என்று தெளிவாக அறிந்த பின்னர், பன்னாட்டுப் பொருளாதாரம் எதைப்பற்றியது என்பதை நீங்கள் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

எதற்காக நாம் வாணிபம் செய்யவேண்டும்?

வாணிபத்தின் பங்கு

எந்த மனிதராலும் தனித்துப் பயனுறுதியுடன் வாழ இயலாது. அதைப் போன்றே எந்த நாடும் தனியாக வாழ முடியாது. தனித்து வாழும் ஒரு குடும்பம் தனது தேவையைத் தானே தேடிக் கொள்வதாயின், அதன் வாழ்க்கை ஏழ்மையானதாயும் புராதன மானதாயும் இருக்கும். இது எவ்வளவு உண்மையெனில், புராதன மக்களிடங்கூட ஓரளவு சிறப்புத் தேர்ச்சியும் (specialization), அதன் விளைவாகப் பண்டமாற்றுதலும் இருப்பதை நாம் காண் கின்றோம். நெருப்பு, அரைவைக் கல், சக்கரம், மின் வழிமுறை வரை பல்வேறு கண்டுபிடிப்பிற்கு வழியாயிருந்த தொழில்நுட்பம் (technology) வளர வளரச் சிறப்புத் தேர்ச்சியும் வளர்ந்து கொண்டேபோகிறது. அதன் விளைவாக நமது விருப்பங்களைத் திருப்திசெய்யக்கூடிய பொருள்களும் (goods) பணிகளும் (services) பெருகிக்கொண்டிருக்கின்றன. தான் உற்பத்தி செய்யும் பண்டத்தைச் சிறப்புத் தேர்ச்சிபெற்ற உற்பத்தியாளர் சிறிதுகூடப் பயன்படுத்தாமலிருக்கக்கூடும்—அல்லது சிறிதுமட்டும் பயன் படுத்தலாம். எஞ்சியதையெல்லாம் ஏனைய சிறப்புத் தேர்ச்சியாளர் களுக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து தனக்கு வேண்டியனவற்றைப் பெறுவர். அதாவது, வாணிப மிருந்தால்தான் சிறப்புத் தேர்ச்சி நடைபெறமுடியும்; இல்லை யெனில், சிறப்புத் தேர்ச்சிக்கு இடமில்லை.

மொத்த வாணிபத்தில் பெரும்பகுதி அந்தந்த இடங்களில் அல்லது வட்டாரங்களில்தான் நடைபெறுகிறது. இடைக் காலத்தில் உலக மக்களில் பத்தில் ஒன்பது பேர் விவசாயத்தை நம்பியே வாழ்ந்தனர்; உற்பத்தி முறைகளெல்லாம் மிக எளிமை யாயும் வருமானம் மிகத் தாழ்வாயும் இருந்தன; எனவே, மொத்த வாணிபத்தில் மிகமிகக் குறைந்த அளவுதான்—முக்கியமாய்ச் செல்வந்தர்களுக்கு வேண்டிய போகப்பொருள்கள் (luxuries) மட்டும்தான்—வெகு தூரம்வரை வியாபாரம் செய்யப்பெற்றது. இன்றுகூட மொத்த வாணிபத்தில் நாடு கடந்து நாடு நடக்கின்ற வாணிபம், அல்லது பன்னாட்டு வாணிபம் ஐந்திலிருந்து ஆறு சதவீதம்வரைதான் இருக்கும். இருந்தபோதிலும், இவ் வாணி பத்தின் மதிப்பு வருடத்திற்குப் பல மில்லியன் டாலர்களுக்குமேல் இருப்பதால் இது மிக முக்கியமானதாகும். இது மிகக் குறைந்த அளவாயிருப்பதற்குக் காரணம், உள்நாட்டில் நடைபெறும் அன்றாட வியாபாரம் மிகப் பெருமளவில் பெருகிவிட்டதுதான்,

வாணிபம் செய் அல்லது அழிந்து போ

பல நாடுகளுக்குப் பன்னாட்டு வாணிபம் உண்மையாகவே ஓர் உயிர்ப் பிரச்சினையாகும் என்பதைக் காண்போம். சிறிய நிலப்பரப்பும் குறைந்த அளவு சாதனங்களும்கொண்ட மேற்கு ஐரோப்பாவில் 20ஆம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்வோரின் எண்ணிக்கை 300 மில்லியன். ஜனநெருக்கமுடைய இச் சமுதாயம் தமக்கு வேண்டிய அளவு உணவைக்கூட உற்பத்தி செய்ய முடிவதில்லை. அதோடு தமக்கு வேண்டிய பருத்தி, பட்டு, சணல், ஆட்டு ரோமம் ஆகிய நெசவுப் பண்டங்களைப் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்தே பெறவேண்டியுள்ளது. மலேயாவிலிருந்து ரப்பரும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் மேற்கு உலக நாடுகளிலிருந்தும் பெட்ரோலும் கிடைக்காவிட்டால், இதன் கார்களும் பஸ்களும் ஓடமுடியாது. மேலும், தேயிலை, காப்பி, கொக்கோ, புகையிலை ஆகிய போகப்பொருள்கள் (மேற்கு ஐரோப்பிய மக்களுக்கு இவை அனைத்தும் போகப்பொருள்கள்) கிடைப்பதற்கு அயல்நாட்டு வாணிபத்தையே நம்பவேண்டியுள்ளது.

இதைப் பிறிதொரு வழியிலும் விளக்கலாம். ஐரோப்பா பிற நாடுகளிலிருந்து மூலப்பொருள்களையும் உணவையும் பெருமளவில் பெற இயலாதிருந்திருக்குமாயின், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதனுடைய தொழிலையே மாற்றி அமைத்து, அதை உலகின் தொழிற்கூடமாகச் செய்த தொழிற் புரட்சி (Industrial Revolution) அங்கு ஏற்படுவதற்கு ஒன்று வழியே இல்லாமலிருந்திருக்கும், அல்லது அப் புரட்சி இவ்வளவு வேகமாகப் பரந்து ஏற்பட்டிருக்காது. அதோடு, 1800-ல் 100 மில்லியனாக இருந்த மக்கள்தொகை ஏறக்குறைய 50 சதவீதம்தான் அதிகரித்திருக்குமேயன்றி, இன்றுள்ளதைப்போல் மூன்று மடங்காய்ப் பெருகியிருக்காது. அவ்வாறாயின், ஐரோப்பிய மக்கள் இன்று பெற்றுள்ள வாழ்க்கைத்தரத்தில் பாதிகூட இருந்திருக்காது.

வாணிபம் செய் அல்லது ஏழையாகப் போ

ஐரோப்பாவைப் போன்று அயல்நாட்டு வாணிபத்தைப் பெரிதும் சார்ந்துள்ள பகுதிகள் ஒருபுறமிருக்க, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் நாடுபோன்ற பெரிய பகுதிகள் மற்றொருபுறமுள்ளன. இவைகளுக்குங்கூட அயல்நாட்டு வாணிபம் மிக முக்கியமானது; சில வேளைகளில் அவசியமானதும் ஆகும். அயல்நாட்டு வாணிபமில்லாதிருப்பின், ஐரோப்பியர்களைப்போல் அமெரிக்க ஐக்கியநாட்டு மக்களும் தாங்கள் பயன்கொள்ளும் காப்பி, தேயிலை, சாக்லெட், இன்னும் வெப்பமான நாடுகளில் விளையும் வாழைப்பழம், இதர வகைப் பழங்கள் ஆகிய வழக்கமான போகப்பொருள்களின்றி

(conventional comforts) வாழவேண்டியதிருக்கும். சர்க்கரைகூடப் போதுமான அளவு கிடைக்காமல் கிராக்கியாகிவிடும். இரும்புக் கனிப்பொருளில் முன்பெல்லாம் தன்னிறைவு பெற்றிருந்திருப் பினும், இன்று அதன் இரும்புக் கனிச்சுரங்கங்கள் வெறுமையாகிக் கொண்டேவருவதால், கனடா, பிரேசில், சிலி, வெனிஸுவேலா (Venezuela)ஆகிய நாடுகளை வெகுவாய்ச் சார்ந்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடு இன்றுள்ளதைவிட 50 சதவீத இரும்புக் கனியை அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டே வருமாயின், 1975ஆம் ஆண்டிற்குள் தமக்குத் தேவையான, தொழில் வளர்ச்சிக்கு அவசியமான மூலப்பொருள்களில் மிக அடிப்படையான இரும்புக் கனியனைத்தையும் வெளிநாடுகளிலிருந்துதான் பெறவேண்டிய தேற்படும் என்று பிரசிடென்ட்சியல் கமிஷன் (Presidential Commission) ஒன்று மதிப்பிட்டுள்ளது. முக்கியமான இதர கனிப் பொருள்களில் நிக்கலும் தகரமும் நம்மிடம் கிடையா; இவற்றிற்கும் நாம் இறக்குமதியைத்தான் சார்ந்திருக்கின்றோம். இவ்வாறு நாம் அயல்நாடுகளைச் சார்ந்துள்ள பொருள்கள் இன்னும் பல உள்ளன. இப் பொருள்களைப் பெறுவதற்கு மென்மேலும் நாம் மற்றவர்களைத்தான் நம்பியிருக்கவேண்டும்.

மேற்கூறிய பொருள்களில் பெரும்பாலானவை இறக்குமதி நாடுகளில் கிடைப்பதில்லை; அல்லது அவ்வாறே கிடைத்தாலும் போதுமான அளவில் கிடைப்பதில்லை. எனினும், இவ்வகைப் பொருள்கள் உலகின் மொத்த வியாபாரத்தில் முக்கியமானதா யிருப்பினும், சிறிய அளவுதான். அதிக அளவில் உலக நாடுகளுக் கிடையே வாணிபம் செய்யப்படும் பொருள்களை எடுத்துக் கொண்டால், அவற்றையெல்லாம் இறக்குமதி செய்யும் நாடுகளே உற்பத்தி செய்யமுடியும். ஆனால், அவை அவ்வாறு செய்யாமல் அவற்றை இறக்குமதி செய்கின்றன. காரணம், அவற்றை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்வதைக் காட்டிலும் வெளிநாடுகளி லிருந்து மலிவாகப் பெறமுடியும். ஏற்றுமதி நாடுகள் அவற்றை மலிவாக உற்பத்தி செய்வதற்கும் காரணம் உண்டு. அதாவது, அவற்றை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய தரமான சாதனங்கள் இறக்குமதி நாடுகளைவிட அவற்றிற்கு அதிகம் கிடைக்கின்றன. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குள் நடைபெறும் சிறப்புத் தேர்ச்சிமட்டும் மேன்மையான, அதிக அளவு உற்பத்தியைத் தருவதில்லை; பல நாடுகளுக்கிடையே நடைபெறும் சிறப்புத் தேர்ச்சியும் அவ்வாறே செய்கிறது.

பன்னாட்டு வாணிப முக்கியத்துவத்திற்கு அடிப்படையான காரணங்கள் இப்போது தெளிவாகியிருக்கவேண்டும். உள்

நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை வெளிநாடுகளிலிருந்து பெறமுடியும். இறுதியாக, உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து மலிவாகப் பெறமுடியும். சுருங்கக் கூறின், பன்னாட்டு வாணிபம் நடைபெறுத நிலையில் இருப்பதைக் காட்டிலும், அது நடைபெறுவதால் அதிக மக்கள் வாழவும், பல்வேறு பற்றுதல்களை நிறைவு செய்யவும், உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அடைந்து மகிழவும் வழி ஏற்படுகிறது.

சாதனங்கள், தொழில்நுட்பம் ஆகியவற்றின் பன்னாட்டு இடப்பெயர்ச்சி

(The International Movement of Resources and Techinque)

நாடுகளுக்கிடையே வாணிபம் முக்கியமானது. ஆனால், நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார உறவுகளைமட்டுமே எடுத்துக்கொண்டால், அவை வாணிபத்தோடு நின்றுவிடுவதில்லை. வேறு பொருளாதார வழிகளிலும் அவற்றின் பொருளாதாரங்கள் பின்னிச் செயற்படுகின்றன. பொருள்கள்மட்டுமன்றி, அவற்றிற்கான சாதனங்களும் நாடுவிட்டு நாடு செல்கின்றன. அவ்வாறே பொருள்களை எப்படி உற்பத்தி செய்வதென்பதன் நுட்பத்தைக்கொண்ட மனித அறிவாற்றலின் விரிவான சக்திகளும் செல்கின்றன. இவ்வித இடப்பெயர்ச்சிகள் உலகப் பொருளாதாரத்தில் பெருமாறுதல்களை உருவாக்குகின்றன. உதாரணமாக, 19ஆம் நூற்றுண்டின் மத்திய பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடு பிரிட்டனிலிருந்து பெருவாரியான முதலைப் பெற்றது. பிரிட்டிஷ் மக்களின் இச் சேமிப்பு, பண வடிவில் அல்லது குறிப்பிட்ட காரியத்திற்கென இல்லாத வாங்கும் திறன் (purchasing power) வடிவில் நமக்கு வந்து சேர்ந்தது. இதைப் பெற்ற அமெரிக்கக் கடன்காரர்கள் இங்கிலாந்திலேயே எஃகு இரயில் தண்டவாளம், இரயில்வே உருள்கலங்கள் (rolling-stock) இவற்றை உற்பத்தி செய்வதற்காக வளர்ந்துவந்த ஆலைகளுக்கு வேண்டிய எந்திரங்கள் (machinery) ஆகியவற்றைத் தேர்ந்து இவற்றில் செலவிட்டனர். விவசாய நாடாக இருந்த நமது நாட்டின் பொருளாதாரத்தைத் துரிதமாக மாற்றியமைத்ததற்கு இந்த அயல்நாட்டு முதல் பெருந்துணை செய்துள்ளது. பின்னர் பிரிட்டனிலிருந்து வெளியேறிய முதல் கனடா, லத்தீன், அமெரிக்கா, பிரிட்டனின் காலனிகள் முதலிய இடங்களுக்குச் சென்றது. இதேபோல் ஃபிரெஞ்சுக்காரர்கள் ரஷியாவிலும், ஜெர்மானியர் மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலும் பெருமளவில் முதலீடு செய்தனர்.

இம் முதலோடு என்ஜினியர்கள், கட்டடத் தொழிலாளிகள், சிலவகைத் திறம்பெற்ற உழைப்பாளிகள் (skilled labourers) ஆகியோரும் சென்றனர். அவ்வாறு சென்ற இடங்களிலெல்லாம் ஆலைகளையும் (factories) இரயில்வேக்களையும் கட்டினர்; புதிய எந்திரத் தளவாடங்களை (plants) அமைத்தனர்; தங்களுடைய வேலையைப் பின்னர் செய்வதற்காக அங்குள்ள ஆட்களுக்குப் பயிற்சியும் அளித்தனர். இவ் வகைத் தொழில்நுட்ப அறிவு கொண்ட தற்காலிகமாகக் குடிபெயர்ந்தவர்கள்மட்டுமன்றி, குடியிறங்கிய ஏராளமான மக்களில் பலர் ஜனநெருக்கமான ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளியேறியவர்கள் ஆவர். அவ்வாறு வெளியேறி வந்தவர்கள் தங்கள் திறமையினுல் இப் புதிய நாடுகளின் எந்திரமயமான தொழில்கள் விரிவடைவதற்குப் பெருந்துணை செய்தனர்.

எனினும், நல்வாய்ப்புகளுக்காக ஐரோப்பாவிலிருந்து புது உலகிற்குக் குடியேறியவர்களில் பெரும்பாலானேர் பயிலாத் தொழிலாளிகள் (unskilled labourers) அல்லது பயிர்த் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள்தாம். இவர்கள் தொழில்நுட்பத் திறனே அல்லது முதலோ இல்லாதவர்கள் என்ருலும், நாடுகளின் உற்பத்திச் சக்தியைச் சமன்படுத்துவதில் இவர்கள் பெரும் பங்குகொண்டனர். 1830ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டு வரை ஐரோப்பா, ஆசியாவிலிருந்து ஏறக்குறைய 60 மில்லியன் மக்கள் தென், வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் குடியேறினர். மக்கள்தொகை இல்லாதிருந்த நாடுகள் இதனுல் மக்கள்தொகை பெற்றன. எனவே, இந் நாடுகளின் விவசாய உற்பத்தி பெருகியதோடு, ஐரோப்பிய அங்காடிகளுக்குத் தேவையான கோதுமை, தானியம், மாட்டிறைச்சி, வெண்ணெய் ஆகிய பொருள்களும் பெருமளவில் அளிக்கப்பட்டன. இதுவரை ஆளே இல்லாதிருந்த இடங்களிலெல்லாம் ஆலைகளும் நகரங்களும் தோன்றின.

அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அர்ஜென்டைனு, தென் ஆஃப்ரிக்கா ஆகிய உலகின் 'புதிய' பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சிக் காலம் இது. இவ்வாறு இடம் பெயர்ந்த உழைப்பாளிகளோடும் மூலதனத்தோடும்மட்டுமின்றி, இவ் விடப்பெயர்ச்சி நடப்பதற்கு முன்னுலும் பல பொருள்களில் வாணிபம் நடந்தது. இம் மூலதனத்தையும் உழைப்பாளிகளையும் பெற்ற நாடுகள்மட்டுமன்றி, இவற்றை அனுப்பிய நாடுகளும் இதனுல் பயன்பெற்றன. ஐரோப்பாவிலிருந்து மக்கள் வெளியேறியதால், அங்கு சாதனங்களை நோக்க,

மக்கட் பெருக்கம் குறைந்தது. குடியிறக்கத்தின்மூலம் அதிக உழைப்பாளிகள் கிடைத்ததால், அந் நாடுகளில் ஏராளமாக இருந்த சாதனங்களைப் பயன்படுத்த வசதி ஏற்பட்டது. வெளி நாடுகளில் ஐரோப்பிய முதலைக்கொண்டு செய்யப்பட்ட முதலீட்டினால் உயர்ந்த இலாபம் கிடைத்தது; அதே சமயம் அம் முதலோடு இணைந்த நிலம், உழைப்பு ஆகியவற்றின் உற்பத்தித் திறனும் உயர்ந்தது.

கண்டங்களுக்கிடையே நடைபெற்ற முதல், உழைப்பு ஆகியவற்றின் இடப்பெயர்ச்சியோடு அவற்றை உற்பத்தித் திறனுள்ளவையாக்கும் தொழில்நுட்ப அறிவின் இடப்பெயர்ச்சியும் 19ஆவது நூற்றாண்டின் இணையற்ற அம்சமாகும். முதல் உலகப் போருக்குப் பின்னர் இக் குடியிறக்கம் மிகவும் குறைந்துவிட்டது. பன்னாட்டு முதலீடும் 1914ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த முக்கியத்துவத்தை இன்னும் அடையவில்லை. உள்நாட்டிலேயே உற்பத்திக்கு உதவக்கூடிய வகையில் அமைந்த வேலை வாய்ப்பினை அளிக்க முடியாத அளவில் எகிப்துபோன்ற சில நாடுகளில் மக்கள்தொகை உபரியாக உள்ளது; ஆனால், அதே சமயத்தில் மேலும் உழைப்பாளிகள் இருந்தால் பலனடையக் கூடிய முறையிலுள்ள வெனிஸுவேலா, பிரேஸில் போன்ற நாடுகளிலோ மக்கள்தொகை போதாததாயுள்ளது. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகள் என அழைக்கப்படும் ஆசியா, ஆஃப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் பெரும் பகுதிகளுக்கு முதல் தேவைப்படுவது இதைக் காட்டிலும் கருத்தைக் கவருவதாகும். இப் பகுதிகளில் பொருளாதாரத் துறையில் முன்னணியிலுள்ள நாடுகளைப்போல் தாமும் பொருள் சார் முன்னேற்றத்தை (material progress) அடையவேண்டுமென்ற எழுச்சியும் துடிப்பும் பிறந்துள்ளன. தனியார் முதலின் ஊக்கமற்ற தன்மையை நிறைவு செய்யவும், அம் முதலை அதிகரிக்கவும், மேற்கத்திய தொழில்நுட்ப அறிவு பின்தங்கிய நாடுகள் பெறுவதற்குள்ள வழிவகைகளைக் காண்பதற்கும் ஆராய்ச்சிகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் கட்டுப்பாடுகளின் தீவிர வளர்ச்சி

முதலும் உழைப்பாளரும் ஒரு கண்டத்திலிருந்து பிறிதொன்றுக்கு இடம்பெயர்வதையும், பன்னாட்டு வாணிபத்தின் நலன்களையும் 19ஆவது நூற்றாண்டில் மகிழ்ச்சியுடன் உலகம் ஏற்றுக் கொண்டது. இவ் வாணிபப் போக்குவரத்தில் ஒருசில தடைகள்

மட்டும்தான் இருந்தன. நிலையானவும் மட்டானவுமான சுங்க வரிகளுக்கும், குறைந்தபட்ச ஒழுங்கு முறைகளுக்கும் (formalities) கட்டுப்பட்டு, தாங்கள் விரும்பும் மூலப்பொருள்களை அல்லது பொறிசெய் பொருள்களை (manufactures) மலிவாக வாங்குவதற்கோ அல்லது அவற்றிற்கு ‘ஆர்டர்’ செய்து குறித்த சமயத்தில் பெறுவதற்கோ வாங்குவோருக்கு எவ்விதத் தடையு மில்லாமலிருந்தது. வெளிநாடுகளுக்குச் செல்வோர் தமது சக்திக்கேற்ப வெளிநாட்டுச் செலாவணியைப் (foreign currency) பெறவும், பயண அனுமதிச் சீட்டும் (passport) வரம்புகடந்த விசாரணையுமின்றி அல்லது கொண்டு செல்லும் செலாவணி யைப்பற்றியும் தமது அரசியல் கருத்தைப்பற்றியும் எவ்வித அறிக்கையும் (declaration) செய்யாமல் தாம் செல்லவேண்டிய இடத்திற்குப் புறப்படவும் முடிந்தது. குடியிறங்குவோரும் எவ் விதத் தடையுமின்றி அனுமதிக்கப்பட்டனர். முதலீடு செய்வோர் தமது விருப்பப்படி எந்த நாட்டிலும் முதலீடு செய்யவோ அல்லது செய்த முதலீட்டை அகற்றவோ முடிந்தது.

1914ஆம் ஆண்டிற்குப்பின் இவை அனைத்துமே மாறிவிட் டன. பொதுவாகச் சுங்கவரி (tariffs) உயர்ந்ததுமட்டுமன்றி, பல நாடுகளில் அதை மாற்றவும் முடியும் என்றாகிவிட்டது. அடுத்து வந்த 50 ஆண்டுகளில் நேரடியான அளவைக் கட்டுப்பாடு (quantitative restrictions) வாணிபக் கொள்கையின் முக்கிய அம்சமாகிவிட்டது. சில நாடுகள் குறிப்பிட்ட சில பண்டங்கள் இறக்குமதியாகாதபடி முழுத்தடை செய்தன; வேறு பல நாடுகள் இறக்குமதி லைசென்சு அவசியம் தேவைப்படும் பல பொருள்களின் நீண்ட பட்டியலைத் தயாரித்ததோடு, வெளி நாடுகளில் செலவிடுவதையும் தடை செய்தன. குடியிறங்கு வோர் உறுதியான தேசியக் கோட்டாவின் (national quotas) மூலமும், மனுதாரர்களை ஆய்ந்து தேர்ந்தெடுப்பதன் வழியாகவும் இன்றுங்கூடக் கட்டுப்படுத்தப்படுகின்றனர். மிக அவசியமாக முதல் தேவைப்படும் நாடுகள்கூட தீவிரமான கட்டுப்பாடுகளை யும் தடைகளையும்கொண்டு அயல்நாட்டு முதலை விரட்டியடிக் கின்றன.

வெளிநாட்டுப் பயணம் செல்வோரின் தொல்லைகளில் பயண அனுமதிச் சீட்டும், அயல்நாட்டு நுழைவு அனுமதியும் (visa) தாம் குறைந்த தொல்லையுடையவை. சமீப காலம்வரை வெளிநாட்டுப் பயணத்திற்கு வேண்டிய அயல்நாட்டுச் செலாவணியின் அளவைப் பல நாடுகள் வரையறை செய்துவந்தன; சில நாடுகள் இன்றும் அவ்வாறு செய்துவருகின்றன. வெளிநாட்டில் நுழைந்த

வுடனும், அந் நாட்டைவிட்டு வெளியேறும்போதும் தாம் கொண்டுள்ள அந் நாட்டுச் செலாவணி எவ்வளவென்று பயணம் செய்வோர் அறிவிக்கவேண்டும். இத் தொல்லைகளையெல்லாம் 1914ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த சுதந்திரத்தோடும் எளிமையோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இவ்வுலகம் தனது அறிவை இழந்துவிட்டதுபோல் சில சமயங்களில் தோற்றமளிப்பதற்குக் காரணமாயிருந்த இந்தக் கட்டுப்பாடு நிறைந்த காலம் போய், அண்மையில் பாராட்டத்தக்கவிதமாய் மாறி நிதான நிலைக்கு வந்துள்ளது. தீவிரமான பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன. இப்போதெல்லாம் சுங்க அதிகாரிகள் (குறிப்பாக மேற்கு ஐரோப்பாவில்) வெளிநாட்டுப் பயணம் செய்வோரின் பெட்டிபடுக்கைகளைச் சந்தேகத்தோடு பார்ப்பதில்லை. ஒருவேளை நாம் பன்னாட்டு உறவுகளில் தடையிலா மற்றொரு காலத்தை அடையலாம். இது நாம் மிகுந்த அக்கறைகொண்டுள்ள பிரச்சினையாகும்.

நாடுகளின் தகுநிலையில் மாறுதல்கள்
(Changes in the Status of Nations)

பிரிட்டிஷ் ஆதிக்கம்

19ஆவது நூற்றாண்டில், அல்லது குறிப்பாக நெப்போலினியப் போருக்கும் (Napoleanic wars) முதல் உலகப் போருக்கும் இடைப்பட்ட நூறு ஆண்டுகளில் (1814—1914) நாடுகளிடையே தனி முதன்மை நிலை அடைகின்ற பேறு கிரேட் பிரிட்டனுக்குக் கிடைத்தது. வாட்டர்லூ (Waterloo) என்னுமிடத்தில் நெப்போலியனை வீழ்த்திய பிறகு தனி ஒரு நாடு ஆதிக்கநிலையை அடைந்துவிடும் என்று தோன்றியபோது, தனது செல்வாக்கினை ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்கு மாற்றுவதன்மூலமாக ஐரோப்பாவில் சக்தி சமநிலையை (balance of power) நிலைநிறுத்தும் சூழ்ச்சித்திற முறையை (strategy) கிரேட் பிரிட்டன் பின்பற்றியது. இதன் விளைவாக ஃபிரான்கோ-பிரஷ்ஷியப் போர் (Franco-Prussian war), அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆகியவற்றினாலேயே சிதைவுற்ற நிலையற்றதான அமைதி (uneasy peace) ஒரு நூறு ஆண்டுகளுக்கு நிலைத்திருந்தது. அக் காலத்தில் சில சிறுசிறு பூசல்கள் எழுந்தன என்பது உண்மையே.

அரசியல்-இராணுவத் துறையில் பிரிட்டன் இயக்கமுடையதொரு சரி எதிர் எடையாக (movable counter-weight) இருந்ததெனின், பொருளாதார உலகில் அந் நூற்றாண்டிலேயே

நிலையான, ஆனல், விரிவடைந்துகொண்டேயிருந்த மைய நாடாக இருந்ததெனக் கூறுவது பொருந்தும். கடல் சூழ்ந்த அதன் அமைப்பு, வாணிப உலகிற்கே தலையான நிலை, சுதந்திரமுடைய நிறுவனங்கள், விரைவாக அதிகரித்துவந்த மக்கள்தொகை எல்லாம் ஒருங்கிணைந்து, தொடக்கத்தில் மெதுவாகவும், பின்னர் புலனுக்கெட்டாத முறையிலும், இறுதியாக மிக விரைவாகவும் தொழில்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தத் தூண்டின. இப் புரட்சிதான் அந் நூற்ருண்டின் மத்தியில் அதை உலகிற்கே தலைசிறந்த தொழில்வளமிக்க நாடாக மாற்றியது.

அதன் ஆதிக்கம் பொருளாதாரத்துறையில் மட்டுமன்றி, வாணிபம், நிதி ஆகிய துறைகளுக்கும் பரவியது. பிரிட்டிஷ் பொறிசெய் பொருள்களைத் தொலைவான இதர நாடுகளுக்கு ஏற்றிச் செல்வதும், விரைவாக வளர்ந்துவந்த தனது தொழில்களுக்கும் பெருகிவந்த மக்களுக்கும் வேண்டிய ரோமம், பருத்தி, புகையிலை, சர்க்கரை, இன்னும் இதர உணவுப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டுவருவதுமாக எல்லா இடங்களிலும் பிரிட்டிஷ் கப்பல்களே காணப்பட்டன. ஒருவர் தான் விரும்பும் எந்தப் பொருளையும் வாங்கவோ விற்கவோ முடியும் என்று சொல்லும் அளவிற்கு லண்டன் மாநகரம் உலகின் மைய அங்காடித் தலமாக விளங்கியது. வாணிபத்துறையில் இருந்த இச் சிறப்பை முழுமையாக்குகின்ற வகையில், நிலையான பொன் நாணயத் திட்டத்தை ஆதாரமாகக்கொண்டு, ஒப்பற்ற தனித் திறனும் சிறப்புத் தேர்ச்சியும் பெற்ற நிதி அங்காடியுடன் நிதித் துறையிலும் சிறப்பெய்தியது.

சிறந்த வணிகராகவும், உலகிற்கே பாங்கராகவும் இருந்த ஒப்பற்ற இந் நிலையை 1914ஆம் ஆண்டுவரைதான் பிரிட்டன் நிலைக்கச் செய்தது. ஆனல், தொழில் வளத்தில் அடைந்திருந்த முதலிடத்தைப் படிப்படியாக வேறு சில நாடுகள் கைப்பற்றிக் கொண்டன. தொழில் உற்பத்தியில் முதலில் அமெரிக்க ஐக்கிய நாடும்,பின்னர் ஜெர்மனியும் பிரிட்டனை எஞ்சிவிட்டன. 1890ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா சிறந்த தொழில் வளத்தை அடைய முடிந்ததெனினும், உலகின் தலைசிறந்த நாடாக இருந்த பிரிட்டனுக்கு அதனுல் எவ்வித அச்சமும் ஏற்படவில்லை. காரணம், உள் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலுமே கவனம் செலுத்தியதால், அமெரிக்கா வெளிநாட்டு அங்காடிகளைப் பற்றிச் சிந்திப்பதற்கே அவகாசம் இல்லாமற்போய்விட்டது. அடுத்து, பிரிட்டனுக்குப் போட்டியாக இருந்த ஜெர்மனியோ, 1914—1918ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகப் போரால் தற்காலிகமாக நசுக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்காவின் தலைமை

தனது சொந்த செல்வப் பெருக்கத்தாலும் சக்தியாலும் மட்டுமன்றி, இரண்டு உலகப் போர்களினால் ஐரோப்பாவில் விளைந்த நாசத்தாலும், முதல் உலகப் போருக்குப் பின், 40 ஆண்டுகள் அமெரிக்கா, பிரிட்டன் வகித்த தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டது. எனினும், நாம் தலைமை வகிக்கும் காலமோ பிரிட்டனின் காலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய்மட்டுமன்றி, ஆபத்தான சூழ்நிலைகளைக்கொண்டதாயும் உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் நாடுகள் ஒன்றுக்கொன்று எதிரிகளாய்ப் பிரிந்திருந்தன என்பது உண்மைதான். ஆனால், சமூக அமைப்பில் விரும்பப்படும் நற்பண்புகளைப் பொறுத்தவரை, தங்களுக்குள் இருந்த ஒருவிதக் கட்டுக்கோப்பின்கீழ் அவை ஒற்றுமையாய் இருந்துவந்தன. முதலாளித்துவ முறைதான் எங்கும் ஆதிக்கம் பெற்றிருந்தது. சோஷியலிச இயக்கத்தால் எதிர்க்கப்பட்டதெனினும், அத் தாக்குதல்களுக்கேற்ப இணக்கமும் மாறும் தன்மையுமுடையதாய் அது நிலைத்திருந்தது.

ஆனால், இன்று அவ்வித ஒற்றுமை கிடையாது. ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு தத்துவங்களால் உலகம் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று, ‘தனி மனிதன் ஒன்றுமில்லை; அரசுதான் (State) எல்லாம்’ என்ற தத்துவத்தைக்கொண்ட சர்வாதிகார அரசின் மேன்மையான நலன்களைப் போற்றிப் புகழ்வதோடு, பலத்தினாலும் புரட்சியினாலும் தனது கருத்தை உலகெங்கும் திணிக்க விரும்புகிறது; பிறிதொன்றோ, வாக்குரிமையின் வழியாகத் தானே தனது அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைக்கொண்ட தனி மனிதனின் உரிமையிலும், கட்டுப்பாடுகளால் நிதானமாக்கப்பெறும் தனி மனிதனின் பொருளாதாரச் சுதந்திரத்திலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது.

உலகிலேயே தாங்கள்தாம் ஆதிக்கம் பெறவேண்டுமென்ற நோக்கம் கம்யூனிஸ்டுகளிடம் இல்லாதிருக்குமாயின், இப் பிளவினால் அவ்வளவாகப் பூசல் இருக்காது. அவர்களின் நோக்கத்தை நாம் ஒப்புக்கொள்வதாயின், கடந்த முப்பது ஆண்டுகளாக சோவியத் நாடு அடைந்துள்ள பொருளாதார, இராணுவ வளர்ச்சியைக்கொண்டு பார்க்கும்போது, கம்யூனிசம் பரவுதலை எதிர்த்துத் தமது அயல்நாட்டுக் கொள்கையை அமைக்கவேண்டிய அவசியம் சுதந்திர நாடுகளுக்கு ஏற்படுகிறது என்பது புலனாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை இது உண்மையே.

மத்திய 20ஆம் நூற்றுண்டிற்கும் 19ஆம் நூற்றுண்டிற்கும் உள்ள வேறுபாடுகள், இன்றுள்ள அரசியல், பொருளாதாரச் சிந்தனையில் காணப்படும் முரண்பாடான பிளவுகளோடுமட்டும் நின்றுவிடுவதில்லை. இன்றுள்ள பொருளாதார உலகம் பல துண்டுகளாகப் பிளக்கப்பட்டுவிட்டது. லண்டன் மாநகரை மையமாகக்கொண்டு நடைபெற்ற தடையிலா வாணிபமும் (free trade), அதை ஆதாரமாகக்கொண்டு விளங்கிய ஒருங்கிணைக்கப்பட்ட உலகப் பொருளாதாரமும் 1914ஆம் ஆண்டிற்குப்பின் வாணிபத் தடைகளுக்கும் பிரிவுகளுக்கும் வழி கொடுத்துவிட்டது. 1930ஆம் ஆண்டிற்கும் 1939ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தால், பொருளாதார உலகம் குழப்பம் நிறைந்ததாயிற்று. அதோடு ஒப்பிடும்போது, இன்றுள்ள சூழ்நிலை நல்ல முன்னேற்றம் கொண்டதுதான். எனினும், முதல் உலகப் போர் முடிந்த சிறிது காலத்திற்குள், மேற்கு ஐரோப்பா, பொருளாதாரச் சீரமைப்பை (economic reconstruction) முடித்துவிட்டு, பின்னர் சுமார் பத்து ஆண்டுகளுக்குமேல் உற்பத்தித் திறனை உயர்த்தி, விரைவான முன்னேற்றம் பெற்று மகிழ்ந்தது. மேலும் மேலும் பொருளாதார ஒற்றுமையை அடைவதற்காகத் தற்போது முயன்று வருகிறது. சுங்க வரிகளைத் தளர்த்துவதிலும், வாணிபக் கட்டுப்பாடுகளை நீக்குவதிலும் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால், இன்றுள்ள கொள்கைப் பிணக்கம் (ideological split) உலகைக் கம்யூனிஸ்டு தொகுதி என்றும், கம்யூனிஸ்டு அல்லாத தொகுதி என்றும் இரு தொகுதிகளாகப் பிரித்துவிட்டதோடு, இவ்விரு தொகுதிகளுக்குமிடையே எவ்வித வாணிபத் தொடர்பும் இல்லாமற் செய்துவிட்டது. சுதந்திர நாடுகள்கூட, முக்கியமானதோர் இடத்தை மையமாகக் கொண்டு, தாமாக இயங்கும் அங்காடிச் சக்திகளால் ஒன்றுபட்டிராமல், அங்காடிக்கு வெவ்வேறு முக்கியமான பல இடங்களை மையமாகக்கொண்டுள்ளன. கூட்டுறவு உபாயங்களைக்கொண்டு ஏதோ பெயரளவிற்கு ஒருவகைச் சமநிலை (equilibrium) அமைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களிலும் நடவடிக்கைகளிலும் ஒற்றுமை பெறுவதற்கான இம் முயற்சிகள் வெற்றியடைந்துவிட்டால், நிலையான, செயற்படக்கூடிய பன்னாட்டுப் பொருளாதார அமைப்பை நாம் மறுபடியும் பெறலாம். நாம் ஆயப்போகும் தலைப்புகளில் இதுவும் ஒன்ருகும்.

இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலத்திய பன்னாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள்

பன்னாட்டு வாணிபத்தை நாடுகள் எவ்வாறு சார்ந்துள்ளன, அதனுல் ஏற்படும் பலன்கள் யாவை என்பதைப்பற்றி அறிந்து

கொள்ள இதுவரை முயற்சி செய்தோம். அதோடு, இவ் வாணிபத்தால் பல நன்மைகள் ஏற்படுகின்றனவெனினும், கடந்த 50 ஆண்டுகளாக நாடுகள் இதைப் புறக்கணித்துவிட்டன என்பதையும் கண்டோம். மேலும், பன்னாடுகளுக்கிடையே உழைப்பாளிகளும் முதலும் இடம்பெயர்வதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும், அவ்வித இடப்பெயர்ச்சியும் தொழில்நுட்ப அறிவும் பரவும்போது நாடுகளின் தகுநிலைகள் எவ்வாறு மாறுபடுகின்றன என்பதையும் ஆய்ந்தோம்.

இன்றைய நாடுகளுக்கிடைவே உள்ள பொருளாதார உறவுகள் எவ்வாறு நிலையற்றனவாயும் பல கூறுகளையுடையனவாயும் உள்ளன என்பதையும், இதற்குக் கடந்த நூற்றுண்டுகளுக்குமேல் ஏற்பட்டுள்ள தீவிரமான மாறுதல்கள்தாம் காரணம் என்பதையும் இவ்வாய்வு புலனுக்குகிறது. இதனுல், பல்வேறு நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் எவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கின்றனவென்றும், அதனுல் இன்று ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சினைகளையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

பிராந்தியப் பொருளாதாரம் (Economic Regionalism)

இரண்டாம் உலகப்போர் முடிந்த சில ஆண்டுகள்வரை, யுத்தத்தினுல் நலிந்துபோன மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரத்திற்கு எவ்வாறு வலிமையையும் நலத்தையும் தருவது என்பதே சுதந்திர நாடுகளின் முக்கியமான பிரச்சினையாக இருந்தது. ஏறக்குறைய ஆறு ஆண்டுக் காலம் நடந்த போரினுல் அதன் உற்பத்திச் சக்தி குலைந்துவிட்டது; வாணிபமோ இரு நாடுகளுக்கிடையேமட்டும் நடக்கக்கூடியதாகக் குறுகிவிட்டது; பணவீக்கமோ பல நாடுகளில் ஆபத்தான நிலையையும், சில நாடுகளில் அளவுக்கு மிஞ்சிய நிலையையும் அடைந்துவிட்டது; தமக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் பொருள்களைக்கூட இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு அவற்றின் உற்பத்திச் சக்தி குன்றிவிட்டது. அதிர்ஷ்டவசமாக அமெரிக்க உதவி, ஐரோப்பியக் கூட்டமைப்பு, சொந்த முயற்சி ஆகியவற்றின் விளைவாகத் துரிதமான முன்னேற்றம் ஏற்பட்டது. 1950-ல் மேற்கு ஐரோப்பாவின் உற்பத்தி, போருக்குமுன் இருந்ததைக் காட்டிலும் ஓரளவு அதிகரித்தது; அயல்நாட்டுக் கொடுக்கல் வாங்கல் நிலை சமநிலையானது. 1950 முதல் 1960 வரை மேற்கு ஐரோப்பிய நாடுகள் விரைவாக முன்னேறின; பல நாடுகளில் தலா வருமானம் (per capita income) மகிழ்ச்சி தரும் வீதத்தில் உயர்ந்தது.

இச் செழிப்பால், மேற்கு ஐரோப்பா பொருளாதார, அரசியல் துறைகளில் ஏதாவதொரு வகை இணைப்பை நிரந்தரமாக ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, இதைப்பற்றிச் சிந்தித்துச் செயலாற்றவேண்டுமென்ற நோக்கம் பிறந்தது. 1957-ல் ஃபிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய ஆறு நாடுகளும் தமக்குள் ஒரு சுங்கவரி ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொண்டு சில ஒப்பந்தங்கள் செய்தன. அவற்றின்படி, தங்களுக்குள் நடைபெறும் வாணிபத்திற்குச் சுங்கவரியே இருக்கக்கூடாதென்றும், பிற நாடுகளோடு நடைபெறும் வாணிபத்தில் ஒரு சுங்கவரிமட்டும்தான் இருக்க வேண்டுமென்றும் ஒத்துக்கொண்டன. தம் நாடுகளுக்கிடையே முதலும் உழைப்பாளிகளும் இடம்பெயர முடியாதபடியுள்ள தடைகளையெல்லாம் நீக்குவதற்கும், ஒவ்வொரு நாடும் தத்தம் தேசிய, பண, நிதிக் கொள்கையை நிர்ணயம் செய்வதற்கு இதர நாடுகள் ஒத்துழைப்பதற்கும் சம்மதித்தன. அதன்படி, 1958ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் (European Economic Community) அமைக்கப்பெற்றது. அந்த ஆண்டிலிருந்து இச் சமுதாயம் தம் உயர்ந்த குறிக்கோள்களை அடைவதில் சிறந்த முன்னேற்றம் பெற்றுள்ளது.

இவ்விதத் துணிகரமான செயலால் தூண்டப்பட்ட ஏழு இதர ஐரோப்பிய நாடுகள்[1] ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தைப் போன்று துணிச்சலாகச் செயற்பட மனமின்றி (அல்லது முடியாமல்) ஐரோப்பியத் தடையிலா வாணிபச் சங்கம் (European Free Trade Association) ஒன்றை அமைத்தன. அதன்படி, அங்கம் வகிக்கும் நாடுகளுக்குள் நடக்கின்ற வாணிபத்தில் தொழிற்சாலைப் பொருள்களுக்குமட்டும் (industrial products) சுங்கவரி இருக்கக்கூடாதென வரையறுத்தன. அங்கத்தினரல்லாத நாடுகளோடு நடக்கும் வாணிபத்திற்குப் பொதுவான சுங்கக் கொள்கை எதையும் ஏற்படுத்தவில்லை.

இவ்வகைப் பொருளாதாரச் சங்கத்தை ஏற்படுத்துவதற்கான எழுச்சி ஐரோப்பாவில்மட்டுமன்றி, அமெரிக்கக் கண்டத்திற்கும் பரவியது. 1962-ல் தென் அமெரிக்காவில் ஏற்கெனவே சுங்க இணைப்பில் ஒன்றுபட்டிருந்த எட்டு நாடுகள், தமக்குள் நடைபெறும் வாணிபத்தில் சுங்கவரியைக் குறைப்பதென முதல் நடவடிக்கை எடுத்தன. அதே சமயம் ஐந்து மத்திய அமெரிக்கக் குடியரசு நாடுகளும் இவ் வழியைக் கடைப்பிடித்தன.

1 ஆஸ்திரியா, டென்மார்க், நார்வே, போர்ச்சுகல், சுவீடன், சுவிட்சர்லாந்து, பிரிட்டன்.

ஐரோப்பிய சங்கத்தில் அங்கத்தினராக உள்ள நாடுகளெல்லாம் நல்ல பலனை அடைந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. மிக உற்சாகமான போட்டியினால் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய ஊக்கத்தையும், உற்பத்தித் தளவாடங்களின் (industrial plants) சிறப்புத் தேர்ச்சி விரிவடைவதால் ஏற்படும் பலன்களையும், உழைப்பாளிகளும் முதலும் இடம் பெயர்வதற்குரிய நல் வாய்ப்பையும் அவை பெற்றுள்ளன. ஒருவேளை லத்தீன் அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ள சங்கத்திற்கும் இது உண்மையாயிருக்கலாம்.

இருப்பினும், இவ்விதப் பிராந்தியத் தொகுதிகளால் இதர நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள விளைவுகளை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தச் சங்கம் ஏற்படுவதற்குமுன், அதன் நாடுகளிலிருந்த சுங்கவரிகளின் சராசரி அளவைக் காட்டிலும், அப் பிராந்தியத்தின் இப்போதைய சுங்கவரி அதிகமில்லை என்பது உண்மையே. எனினும், இந்தச் சுங்கவரிச் சங்கத்தை அமைத்ததனால், அதன் உற்பத்தியாளர்களில் சிலர் பொது அங்காடியின் எல்லாப் பகுதிகளுக்கும் தம் பொருள்களை வரியின்றி அனுப்ப முடிவதால், இன்னும் வரிகளுக்குட்பட்ட இறக்குமதிகளின் இடத்தை அவர்கள் பிடித்துக்கொள்ள முடிகிறது.

இவ்விதப் பிராந்திய வாணிபத் தொகுப்பால் இதர நாடுகள் சாதகமான வழியில் பாதிக்கப்படுமா அல்லது பாதகமான முறையில் பாதிக்கப்படுமா என்பது, இப் பிராந்தியங்களிலுள்ள நாடுகள் இதர நாடுகளிலிருந்து வரும் இறக்குமதியை எந்த அளவிற்குக் குறைக்க முடியும் என்பதையும், இப் பிராந்தியங்களின் வருங்காலச் சுங்கக் கொள்கையையும் பொறுத்தது. இக் கேள்விக்குரிய பதில்கள்தாம் வருங்காலப் பன்னாட்டு வாணிபத்திற்கும் நிலையான வர்த்தக உலகிற்கும் மிக முக்கியமானவை.

பன்னாட்டுப் பணப் பிரச்சினைகள் (International Monetary Problems)

1950-க்குப் பின் ஒருசில ஆண்டுகள்வரை, அதாவது, ஐரோப்பாவின் புனரமைப்பு (reconstruction) முடியும்வரை, மேற்கு ஐரோப்பாவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் (balance of payments) எப்படியாவது ஒருவகைச் சமன்பாட்டை மறுபடியும் கொண்டுவரவேண்டுமென்பதுதான் முக்கியப் பன்னாட்டுப் பணப் பிரச்சினையாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் உற்பத்தித் திறன் மேன்மையானதாயிருக்க, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் கொண்டிருந்த கட்டங்களெல்லாம்

சமாளிக்க முடியாத அளவிற்கு முற்றிவிட்டன என்ற எண்ணங் கூட நிலவியது. ஆனால், உண்மையில் அங்கு நடந்த முன்னேற்றம் இப் பயத்தைப் பொய்ப்பித்துவிட்டது. ஐரோப்பா ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்தித் திறனை மீண்டும் பெற்ற—அமெரிக்க ஐக்கிய நாட்டின் இடைவிடா உதவியும், இராணுவச் செலவும், தனியார் செய்த அயல்நாட்டு முதலீடும் சேர்ந்து கொடுத்த—சக்தியால், மேற்கு ஐரோப்பா கொண்டிருந்த பற்றுக்குறை நிலை மாறி உபரி நிலைக்கு வந்துவிட்டது. அதாவது, 1956-ல் மேற்கு ஐரோப்பிய நாடுகள் 10 பில்லியன் டாலரை ஒதுக்கு நிதியில் சேர்க்கக்கூடிய அளவிற்கு நிலை மாறிவிட்டது. ஆனால், அதே சமயம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் செலுத்து நிலையில் சராசரி ஆண்டொன்றுக்கு 1 பில்லியன் டாலருக்குமேல் பற்றுக்குறை ஏற்பட்டுவிட்டது.

1958ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடு, பிரச்சினையுள்ள நாடாக மாறியது. அதாவது, தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிற்கும் அதன் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்பட்ட பற்றுக்குறை சுமார் 4 பில்லியன் டாலருக்குச் சற்றே குறைவாகும். இதைச் சரிக்கட்டுவதற்காகப் பல எதிர்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், பற்றுக்குறை நீங்காமல் 1961-ல் 2·5 பில்லியன் டாலரும், 1962-ல் 2·1 பில்லியன் டாலருமாயிருந்தது. அதோடு, வெளிநாட்டார் டாலர்மீது கொண்டிருந்த குறுங்கால உரிமை 8·2 பில்லியன் டாலரிலிருந்து 22 பில்லியன் டாலருக்கு உயர்ந்துவிட்டது.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற் கேற்பட்ட பற்றுக்குறைதான் வெளிநாட்டார் டாலர்மீது கொண்டிருந்த குறுங்கால உரிமைக்குக் காரணமானது. இது அமெரிக்க டாலரின்மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும், அதை அவர்கள் தம் 'காப்பு நாணயமாக' (reserve currency) வைத்துப் பயன்படுத்தலாம் என்ற அவர்களது விருப்பையும் புலனாக்குகிறது. அதாவது, பல நாடுகள் தங்கள் 'ரிசர்வின்' ஒரு பகுதியைத் தங்கமாக வைத்திருப்பதற்குப் பதிலாக டாலராக வைத்திருக்க விரும்பின என்று தெளிவாகிறது. இருப்பினும், இவ்வாறு டாலரின்மீது மற்றவர்கள் கொண்டிருந்த உரிமையை அளவுக்கு மிஞ்சி விட்டுவிட இயலாது. ஏனெனில், அவ்வாறு விட்டுவிட்டால், அயல்நாட்டவர் டாலரின்மீது கொண்டிருந்த நம்பிக்கை நீங்கி, தம் இருப்பைத் தங்கமாகக் கேட்டால், அமெரிக்க ஐக்கிய நாடு வைத்திருந்த தங்கமெல்லாம் செலவாகி, பின் பன்னாட்டுப் பணவிஷயத்தில் பெருங் குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடும்.

அவ்வாறாயின், பன்னாட்டுக் கணக்குவழக்கில் அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டிருந்த பற்றுக்குறையை நீக்குவதெப்படி? அதே சமயம் போதுமான அளவு பன்னாட்டு 'ரிசர்வை' வளர்ப்பதெவ்வாறு? இவைதாம் 1960ஆம் ஆண்டிற்குப்பின் உள்ள முக்கியமான பிரச்சினைகளாகும். இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கெனப் பல சர்வதேச மகாநாடுகளும், அமெரிக்கக் காங்கிரஸின் விசாரணைகளும் நடந்தன. பன்னாட்டுப் பண முறையை (international monetary system) சீர்திருத்தம் செய்வதற்காகப் பலவகையான யோசனைகள் கூறப்பட்டன.

பொருளாதார வளர்ச்சி

பொருளாதாரத்துறையில் பின்தங்கிய நாடுகள், தங்கள் நாட்டின் தேக்கமான பொருளாதார நிலையை முன்னேற்றுவதன் வழியாகவும், நவீனமயமாக்குவதன் வழியாகவும் மக்களின் நலன்களைமட்டுமன்றித் தமது செல்வாக்கையும் உயர்த்தவேண்டுமென விரும்புவதும் முயலுவதும் பல பிரச்சினைகளை உருவாக்குகின்றன. இம் முயற்சி அந் நாடுகளைமட்டுமன்றிப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள மேற்கத்திய நாடுகளையும் பாதிக்கிறது. பின்தங்கிய நாடுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தவிர்க்கப்பட முடியாதவை. எனவே, அவற்றின் பொருளாதார முன்னேற்றம், செல்வமிக்க நாடுகளின் கணிசமான, இடைவிடா உதவியை ஓரளவு சார்ந்ததாகிறது. இவ்வகையான உதவியை எல்லோருமே ஒப்புக்கொள்வர்; எனினும், இது பல இக்கட்டான வினாக்களுக்கு இடமளிக்கிறது. இவ்வித உதவியை எவ்வித நிபந்தனையுமின்றிச் செய்யவேண்டுமா? அல்லது உதவி பெறும் நாடுகளின் சாதனைகளை இலக்காகக்கொண்டு உதவ வேண்டுமா? உதவி பெறும் நாடுகளின் பொருளாதார முயற்சியிலும் திட்டங்களிலும் எவ்வளவு தூரம் உதவிசெய்யும் நாடுகள் பங்குகொள்ளவேண்டும்? அவ்வாறு பங்குகொண்டால், திட்டங்களின் வெற்றிக்கு அவை எவ்வளவு தூரம் காரணமாகின்றன? பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளின் அமைப்பு (structure) பொதுவாக மாறும்போது, அல்லது குறிப்பாகச் சொல்லவேண்டுமாயின், அவை மென்மேலும் தொழில்மயமாகிவரும்போது, தொழில் வளமிக்க நாடுகள் தமது கொள்கையில் எந்த மாறுதல்களைப் புகுத்தி எப்படிச் சரிக்கட்டவேண்டும்?

பின்தங்கிய நாடுகளில் எழும் திடமான எந்தப் பிரச்சினையும், அவற்றின் வாணிபத் தன்மையையும், அதன் போக்கையும் பொறுத்தது. இந் நாடுகள் செய்யும் ஏற்றுமதியில் பெருமளவு மூலப்பொருள்களாகத்தான் (primary products) உள்ளது.

அவற்றின் ஏற்றுமதிகள் சமீப காலந்தொட்டு விரிவடைந்து கொண்டேபோகிறதெனினும், அவ்வதிகரிப்பு வீதம் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளின் விதத்தைக் காட்டிலும் குறைவாகத்தான் உள்ளது. அதோடு பின்தங்கிய நாடுகளின் இறக்குமதி, குறிப்பாக, முன்னேற்றத்திற்குத் தேவையான முதற்கருவிப் பொருள்களின் (capital goods) இறக்குமதி, அவற்றின் ஏற்றுமதியைவிடக் கணிச மாக அதிகரித்துள்ளது. இதனால் அயல்நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய மிகுதியான பணத்தை வெளிநாட்டுக் கடன்களின் வழியாகச் சரிக்கட்டுகின்றன. ஆனால், இக் கடனையெல்லாம் என்றாவது வட்டியோடு திருப்பிக்கொடுக்கவேண்டுமாதலால், தமக்குத் தேவையான இறக்குமதிக்காகப் போதுமான அளவு ஏற்றுமதி செய்ய முடியாத பிரச்சினை நிவர்த்தியாகாமலே இருந்து விடுகிறது.

பன்னாட்டு வாணிபத்தில் இன்னும் பொதுவானவையும் நெருக்கடியானவையுமான பொருளாதாரப் பிரச்சினைகள் மேலும் சில உள்ளன. அதோடு, அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு மட்டும் பொருத்தமான வேறு சில பிரச்சினைகளும் உண்டு. இவற்றில் சுங்கக் கொள்கைபற்றிய பிரச்சினைதான் எப்போதும் காணப் படுகிற பிரச்சினையாகும். அமெரிக்க அரசியல் வரலாற்றில் ஏனைய எல்லாப் பிரச்சினைகளையும்விட இப் பிரச்சினைதான் ஊக்கமிக்க அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு மறுபடியும் மறுபடியும் இடங் கொடுத்துள்ளது. இப் பிரச்சினைதான் என்றும்போல் இன்றும் காரசாரமான வாதமுடையதாய் உள்ளது. நமது சொந்த நாட்டின் நீண்ட கால நலனைக் கருதி ஐரோப்பாவும் ஜப்பானும் மேலும் உருப்படியாகக்கூடிய முறையில் நமது சுங்க வரிகளைத் தளர்த்தவேண்டுமா? அவ்வாறு செய்தால் யாருக்கு எவ்வளவு தீங்கு நேரிடும்? நமது தாராள மனப்பான்மையுடைய பன்னாட்டு வாணிபக் கொள்கைக்கும், வெளிநாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வரக்கூடிய விவசாயப் பண்டங்களைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு நமது விவசாயப் பொருள்களின் விலைவாசிகளைச் செயல் முறையில் உயர்ந்த நிலையில் வைத்திருக்கும் கொள்கைக்கும் எவ்வாறு பொருத்தம் ஏற்படக்கூடும்?

கம்யூனிசப் பிரச்சினை இல்லாமலிருந்தால்கூட இச் சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும்; அப்போது பொருத்தமான கொள்கை களைப்பற்றி முடிவு எடுப்பதும் அவசியமாகும். ஆனால், கம்யூனிசப் போட்டி இருப்பதால், ஒவ்வொரு பன்னாட்டுப் பிரச்சினைக்கும் உடனடியாகத் தீர்வுகாண வேண்டியுள்ளது. எனவே, ஐரோப்பியப் பொருளாதார சங்கம், அந் நாடுகளின் உற்பத்தி

யையும் வளத்தையும் பெருக்குவதற்குரிய சாதனமாய்மட்டும் இல்லாமல், ரஷ்யாவின் உற்பத்தித்திறன் அதிகரித்துக்கொண்டே யிருக்கும்போது சுதந்திர நாடுகளாக அவை வாழ்வதற்கும் இச் சங்கம் அவசியமாகிறது. மேலும், கம்யூனிசம் இல்லாத நாடுகள் தமது பொருளாதார நிலையை வலிமைப்படுத்துவதற்கு உதவும் வகையில் தாராளமான வாணிபக் கொள்கை நமக்கு மிக அவசர மாகிறது. இறுதியாக, பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகள் கம்யூனிச அடிப்படையின் திட்டங்களையும் அடக்குமுறையையும் மேற்கொள்ளாமலிருக்கவேண்டுமாயின், அவைகளுக்கு (வேறு எந்தக் குறிக்கோளுமின்றி அதற்காகவே தரவேண்டிய) பொருளா தார உதவி அத்தியாவசியமன்றோ?

முக்கியமானவை முதலில்

இதுவரை நாம் ஆய்ந்த பிரச்சினைகளெல்லாம் முக்கிய மானவையாகும். இவற்றையெல்லாம் நேரடியாகவும் உடனடி யாகவும் தாக்கி, இந் நூலைத் 'தற்காலத்திய பன்னாட்டுப் பொரு ளாதாரப் பிரச்சினைகளின் ஆய்வு' நூலாக அமைக்க முடியும். இவ்வகை நூல்கள் ஏராளமாயுள்ளன. இவை குறிப்பிட்டதொரு கருத்திற்கு அல்லது செயல்முறைக்கு மற்றவர்களின் எண்ணங் களும் ஒப்பும் வகையில் எழுதப்பெற்றவையாகும். இவற்றில் அனுபவமிக்கவர்கள் மிகச்சிறந்த நூல்களையும் எழுதியுள்ளனர். அவர்கள் ஆதரிக்கும் கருத்துகள் சிலவேளை சிறந்தனவாகவும் இருக்கக்கூடும். ஆனால், இந்தத் துறையிலுள்ள பிரச்சினைகள் சிக்கலானவைமட்டுமன்றிக் கஷ்டமானவைகளுமாகும். எனவே, பொதுவாகப் பல விஷயங்களை, குறிப்பாக, அவர்கள் எந்தத் தத்துவங்களின்மேல் தமது ஆய்வையும் முடிவையும் ஆதார மாகக் கொள்கின்றனரோ அவைகளை மற்றவர்களும் அறிந் திருப்பர் என்ற அனுமானத்தில் பேசவேண்டியுள்ளது.

இன்றியமையாத கருவிகளேயன்றி முடிவுகளல்ல

இன்றைய பன்னாட்டுப் பிரச்சினைகளுக்கு ஏற்கெனவே தயாரா யுள்ள முடிவுகளைக் கொடுப்பதுமட்டும் இந் நூலின் நோக்க மன்று. இப் பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படையான சில தத்துவங்களை இது உங்களுக்கு அளிக்கிறது. எனவே, மாற்று வழிமுறைகளின் தராதர நற்பயனைப்பற்றி நீங்களே ஒரு நல்ல முடிவிற்கு வர இயலும். இதை நன்கு பயில்வதன்மூலம் ஒரு நல்ல மதிப்பீட்டு முடிவிற்கு வருவதற்கு அவசியமான கருவிகளை நீங்களே பெறவேண்டுமேயன்றி, எவ்வளவுதான் ஆதாரங்களைக் கொண்டதாயினும் ஏற்கெனவே செய்யப்பட்டுத் தயாராக உள்ள

முடிவிற்கு நீங்கள் வரக்கூடாது. இதனால் நாம் பிரச்சினைகளை ஆராயாமல் விட்டுவிடப்போவதில்லை; ஆனால், அடிப்படைதான் மிக முக்கியமானது.

வாணிபத் தத்துவங்கள்

'முக்கியமான காரியங்களில்' கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட தத்துவங்கள் சிலமட்டும்தான் உண்டு. முதலாவது தத்துவம் நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபத்தின் அடிப்படைகளைக் கூறுகிறது. ஒரு நாடு எந்தப் பண்டங்களைச் சிறப்பாக உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும்; எப் பண்டங்களை அது இறக்குமதி செய்தால் பயனுண்டு என்பதற்குரிய அனுகூலமான காரணிகளை இது விளக்கிக் கூறுகிறது. பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபத்தைப் பாதிக்கக்கூடிய கொள்கைகளின், உதாரணமாக, சுங்கவரிக் கொள்கை, இன்னும் இதர இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் தராதர மதிப்பினை நாம் செம்மையாகப் புரிந்துகொள்ளவேண்டுமாயின், இந்தக் கோட்பாட்டை நன்ருக அறிந்திருப்பது அவசியம். பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நாடு, தன்னிடமுள்ள பற்ருக்குறை சாதனங்களை விரயம் செய்யாமல், உற்பத்தித் திறனை அதிகரிக்கக்கூடிய வகையில் அவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றம் பெறவேண்டுமாயின், இக் கோட்பாட்டை நன்ருக ஆய்வது அவசியம்.

கோட்பாட்டிற்கான ஆய்வின் இப் பகுதி நிலையான தன்மையுடையது; அதாவது, கொடுக்கப்பட்ட நிலைகளில் எது உண்மையானது என்பதை இது சுட்டிக்காட்டும். ஆனால், மாறுதல்களைப் பற்றி இது ஒன்றுமே கூறுவதற்கில்லை என்று கொள்ளக்கூடாது. ஏனெனில், உற்பத்திச் செலவுகளிலும் தேவையிலும் ஏற்படும் மாறுதல்கள் எவ்வாறு ஒரு நாட்டின் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் மாறுதல்களை விளைவிக்கின்றன என்பதை நமது பகுத்தாய்வே விளக்கும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆய்வு (Balance of Payments Analysis)

ஒரு நாடு விற்கின்ற ஏற்றுமதிப் பொருள்களின் அளவிலோ அல்லது இறக்குமதி செய்யும் பண்டங்களின் விலையிலோ ஏற்படும் மாறுதல்கள் அந் நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல் வாங்கல் நிலையை உடனடியாகப் பாதிக்கும். அதுபோன்றே, அயல்நாட்டு முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் அல்லது கடன் வாங்குகின்ற அல்லது கொடுக்கின்ற தொகை

யில் ஏற்படும் மாறுதல்களும் அந் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையைப் பாதிக்கும். ஆனால், இம்மாதிரியான விளைவுகள் இதோடுமட்டும் நின்றுவிடுவதில்லை ; இவற்றின் எதிரொலியாக அந் நாட்டின் உள்நாட்டுப் பொருளாதார அமைப்பிலும் (அதாவது, வேலைநிலை, தொழில் நடவடிக்கைகள், விலைகள், எனவே, பன்னாட்டு அங்காடிகளில் அதன் போட்டித் திறன் ஆகியவற்றிலும்) பெருமாறுதல்கள் ஏற்படும்.

இவ்வகையான மாறுதல்களைப்பற்றிப் பிறிதொரு கோட்பாடு விளக்கும். இம் மாறுதல்களின் விளைவுகள், ஒரு நாட்டின் பணத்திற்கும் பிறநாட்டுப் பணத்திற்குமுள்ள மாற்று வீதம் (exchange rate) பொன் நாணயத் திட்டத்திலுள்ளதைப்போன்று நிலையானதா அல்லது மாறும் இயல்புடையதா என்பதைப் பொறுத்து வேறுபடும். எனவே, நிலையான மாற்று வீதத்திலும், மாறும் மாற்று வீதத்திலும் அந் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையை நாம் ஆயவேண்டியதிருக்கும். இவ்வித ஆய்வு, கடந்த 40 ஆண்டுகளில் 30 ஆண்டுகள்வரை ஏன் பொன் நாணயத் திட்டம் (gold standard) கைவிடப்பட்டது, மறுபடியும் அதை வேறோர் உருவில் கொண்டுவந்தபோது ஏன் திருப்திகரமாக இயங்கவில்லை, பன்னாட்டுப் பணச் சீர்திருத்தம் (international monetary reforms) பற்றிய பல புதிய கருத்துகளுக்கு என்னென்ன ஆதாரங்கள் உண்டு என்பவற்றையெல்லாம் நாம் புரிந்துகொள்வதற்கு உதவவேண்டும்.

அமைப்புகளைப்பற்றிய அறிவும் அவசியம்

பன்னாட்டு வாணிபம், அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆகியவைபற்றிய ஆழ்ந்த அறிவு, பன்னாடுகளைப் பாதிக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சுயமாகவே நீங்கள் அணுகுவதற்கு வேண்டிய சாதனத்தை உங்களுக்கு அளிக்கிறது. இவ் ஆய்வின்மூலம் நீங்கள் பெறும் சாதனங்கள் கருத்தியலான தன்மையுடையவைதாம். இருப்பினும், கடந்த காலத்திலிருந்து வளர்ந்துவந்த (அதாவது, தொடக்கத்திலிருந்து எவ்வாறு வளர்ச்சிபெற்றுவந்துள்ளது என்பதை முழுமையாக அறியக் கூடிய) ஒரு புலனீடான சூழ்நிலைக்குரிய முறையில் அவற்றைப் பயன்கொள்ளவேண்டும். மேலும், கோட்பாட்டைச் சார்ந்த ஆய்விலிருந்து தோன்றும் பொதுத் தத்துவங்கள், உண்மை நிலையினை மிக எளிமையாக்கிய உபாயங்களால் பெறப்படுபவை. எனினும், குறிப்பிட்ட கோட்பாட்டைச் சார்ந்த நிலைக்கும், சிக்கல்கள்நிறைந்த உண்மையான நிலைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் மறந்துவிடக்கூடாது. சில வேளைகளில், பொதுவான

ஒரு கோட்பாடு அளிக்கின்ற தீர்வு நிராகரிக்கக்கூடிய அள விற்கு இவ் வேற்றுமை அதிகமாயிருக்காது. ஆனால், வேறு சில சந்தர்ப்பங்களில் சமூக அமைப்பிற்கேற்ப அதை நாம் சரிப் படுத்திக்கொள்ளவேண்டியிருக்கலாம்; மற்றும் சில சமயங்களில் எடுகோள்களை ஆதாரமாகக் கொண்டதொரு கொள்கை உண்மை நிலைக்குப் பொருத்தமற்றதாயும் இருக்கக்கூடும்.

எடுத்துக்காட்டாக, பணவிக்கத்தின் தீங்குகளில் கவலை யுடையோர், 1914ஆம் ஆண்டிற்குமுன் இருந்ததைப்போன்று பொன் நாணயத் திட்டத்தை மறுபடியும் புகுத்தினால் மகிழ்ச்சி யடையக்கூடும். ஏனெனில், அத் திட்டம் நாணயமாற்று வீதத்தை (அது செயற்படவேண்டிய முறையில் செயற்பட்டால்) நிலையாக வைத்திருப்பதோடுமட்டுமன்றி, ஒரு நாட்டின் பண அளிப்பை யும் கட்டுப்படுத்தக் கூடியது. ஒரு நாட்டின் மொத்தப் பண அளவிற்கும், ரிசர்விலுள்ள பொன்னிற்கும் குறிப்பிட்டதொரு விகிதாசாரத் தொடர்பை ஏற்படுத்துவதன் வழியாக இவ்வாறு செயலாற்ற முடிகிறது. பணத்தையும் பாங்கு செலாவணியை யும் (bank credit) விரிவுபடுத்தும்போது, குறிப்பாகப் பணவீக்கத் தின் அறிகுறிகளும் சேர்ந்துகொள்ளுமாயின், ரிசர்விலுள்ள பொன்னின் அளவு குறைந்துவிடுவதால் பண அளிப்பைச் சுருக்க நேரிடும். இதுதான் தன் இயக்கமான பணச்சுருக்கம் (automatic deflation) எனப்படும். அத் திட்டம் 19ஆம் நூற்றுண் டில் திருப்திகரமாகச் செயற்பட்டபோதிலும், வெகுவாக மாறுதல் களைக்கொண்ட இந்த 20ஆம் நூற்றுண்டில் நன்ருகச் செயற் படுமா என்பது சந்தேகம். ஒரே ஒரு வேறுபாட்டைமட்டும் கூறுவதாயின், பணச்சுருக்க நிலையால் 19ஆம் நூற்றுண்டைக் காட்டிலும் பல பேர் இன்று பாதிக்கப்படலாம்; அதோடு பணச் சுருக்க விளைவுகளால் பல வழிகளில் பாதிக்கப்படுவோர் ஏராளம். முன்பு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை இன்று வன்மையாகக் கண்டிக்கப்பெறலாம். பொன் நாணயத் திட்டத்தின் கோட்பாட்டிற்குரிய வாதம் பொருத்தமானது தான்; ஆனால், அதைச் செம்மையாகச் செயற்படுத்துவதற்குரிய சூழ்நிலை தற்போது கிடையாது.

கலாசார, பழக்கவழக்க மரபிலுள்ள வேறுபாடுகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை (economic growth) எவ் வாறு பாதிக்கிறதென்பதை மற்ருேர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பல லத்தீன் அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றபோது, அந் நாடுகளின் பொருளாதார நிலை ஏறக்குறைய அமெரிக்க ஐக்கிய நாட்

டினைப்போலவேதான் இருந்தது. இருப்பினும், அதன் பிறகு வந்த 150 ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் செல்வமும் உற்பத்தித்திறனும் மிகப் பெருமளவில் அதிகரித்தது. ஆனால், லத்தீன் அமெரிக்க நாடுகளோ, மிக அண்மைக் காலம்வரை, அன்று இருந்ததைப்போலவே ஏழ்மையான, தேக்கநிலையுடைய விவசாய நாடுகளாகவேதாம் இருந்தன. இவ்வளவு பெரு வேறுபாட்டிற்கு இயற்கை வளங்கள் ஒரு காரணியாக இருக்கக் கூடுமெனினும், இயற்கை வள வேறுபாடுகள்தாம் காரணம் என்று சொல்ல முடியாது. அவ்வாறாயின், அதன் காரணம் இவ்விரு பகுதிகளின் கலாசார வேறுபாடுகளேயன்றி வேறன்று. வட அமெரிக்காவில் முதலில் குடியேறியவர்களில் பெரும்பாலானோர் கீழ்த்தர நடுவகுப்பினைச் சேர்ந்தவர்கள்—அதாவது, கடைக்காரர்கள், கைவினைஞர்கள், சிறு விவசாயிகள். அவர்கள் சொந்த முயற்சி, ஆணையுரிமைக்கு விளக்கம் கேட்டல், பொருளாதார வளர்ச்சிக்குரிய ஆவல் ஆகிய மரபுப் பண்புகளை உடையவர்கள். தென் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளிலெல்லாம் குடும்பத்தினரைக்கொண்டு பயிர் செய்வதற்கேற்ற சிறு பண்ணைகளையே அவர்கள் அமைத்தனர். மிகக் குறைந்த எண்ணிக்கையில் சிதறிக் காணப்பட்ட பூர்வீகக் குடிமக்களான இந்தியர்களை நாட்டின் உட்பகுதிக்கு விரட்டியடித்துவிட்டனர்.

மாறாக, லத்தீன் அமெரிக்க நாடுகளில் குடியேறியவர்களோ, நிலப்பிரபுத்துவ (feudal) மேற்குடி மக்களான அல்லது மேற்குடி மக்களாவதற்கு விரும்பிய ஸ்பானிய வெற்றி வீரர்கள் ஆவர். புதிய இடத்தை வென்றதன் காரணமாக அவர்களுக்குப் பெரும் பண்ணைகளை மன்னர் இலவசமாக அளித்தார். அவ்வாறு பெரும் பண்ணைகளுக்குச் சொந்தமாவதன் வழியாக அவர்கள் மேற்குடி மக்களாக முடிந்தது. இப் பண்ணைகளுக்கு வேண்டிய தொழிலாளிகளை ஏற்கெனவே குடியிருந்த பல இந்தியர்கள் வழியாகப் பெற்றனர். இவைதாம் ஹேஸியண்டா முறையின் (Hacienda system) அங்கக் கூறுகள் ஆகும். இம் முறைப்படி பெரும் பண்ணைகளுக்குச் சொந்தமான செல்வந்தர்கள் மிகச் சிறந்த நிலத்தையெல்லாம் தமது சர்வாதீன உடைமையாக்கிக் கொண்டு, அரசியல் மேடையில் செல்வாக்குடையவர்களாகி, பொருளாதார வாழ்க்கையைத் தேக்கமுடையதாகச் செய்துவிட்டனர்.

இவ்வித வேறுபாடுகளின் முக்கியத்துவம் வருமாறு: அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசாங்கத் தலையிடாக் கொள்கை (policy of laissez faire), செயலற்றிருத்தல் ஆகியவை விரைவான

பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலின. மாருக, லத்தீன் அமெரிக்க நாடுகளின் சூழ்நிலையில் இதே கொள்கை புகுத்தப் பட்டதெனினும், அந்த அளவு முன்னேற்றம் ஏற்பட முடியவில்லை. ஏனெனில், அங்கு ஆசையும் ஊக்க முயற்சியும் உடைய நடுத்தர வகுப்பினர் இல்லாததால், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில் தலைமையை மக்களால் அளிக்க முடியவில்லை. முன்னேற்றத்திற்கு அவசியமான இத் தொழில் தலைமையை அவர்கள் ஒன்றில் உருவாக்க வேண்டியிருந்தது. அன்றேல், அதற்குப் பதிலாக மற்ருேர் ஏற்பாட்டைச் செய்யவேண்டியிருந்தது. அத் தலைமை இல்லாத காரணத்தால், லத்தீன் அமெரிக்காவின் வளர்ச்சி, அமெரிக்க ஐக்கிய நாட்டின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இன்றுங்கூடப் பாதிக்கப்படுகிறது. இவ்வாருக, வரலாற்று ஆய்வையும் கோட்பாட்டு ஆய்வையும் இணைப்பதன் வழியாக முக்கியமானதொரு பிரச்சினையை ஆய்வதற்குரிய துணைச் சாதனம் அவசியமாகிறது என்பது தெளிவாகிறது.

நமது ஆய்வு 16, 17ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த மெர்க் கன்டலிஸ்டுகளின் (mercantilists) கருத்தைச் சுருக்கமாகக் கொண்டு தொடங்குகிறது. இவ்வாறு தொடங்குவதற்குக் காரணமுண்டு. மெர்க்கன்டலிஸ்டுகளின் கருத்துகளில் பல தவருனவைகளாயிருந்தபோதிலும், அவற்றின் ஆயுள் அதிகம். அவற்றில் பல கருத்துகள் இன்றும் நம்முடன் இருக்கின்றன. மெர்க்கன்டலிஸக் கருத்துகளைப் புரிந்துகொள்வதால் தொன்மைப் பொருளாதார வல்லுநர்களின் (classical economists) சாதனையின் உண்மையான பெருமையை நாம் நன்கு உணர முடிகிறது. இவர்கள்தாம் பன்னாட்டு வாணிபத்தைப்பற்றிப் போதுமான அளவு திருப்திகரமாகப் புரிந்துகொண்டு முதன்முதலில் கூறியவர்கள்.

மடல் I

வாணிபம், தொழில் ஆகியவற்றில் கட்டுப்பாடும் தடை நீக்கமும்

2. கட்டுப்படுத்தப்பட்ட வாணிபம்: மெர்க்கன்டலிசம்

(Regulated Trade: Mercantilism)

பன்னாட்டு வாணிபம்பற்றிய அரசாங்கங்களின் மனப்பான்மைகளும் கொள்கைகளும் நவீன காலத்திலேயே பல அடிப்படையான மாறுதல்களை அடைந்துள்ளன. இன்றைய அரசாங்க வாணிபக் கொள்கைகளையும், அவற்றிற்குச் சாதகமான வாதங்களையும் புரிந்துகொள்வது நமது கவனத்திற்குரியதொரு பிரச்சினையாகும். ஓரளவிற்கு ஒரேவிதச் சூழ்நிலையையும், பிறிதோர் அளவிற்கு மாறுபட்ட சூழ்நிலையையும் கொண்ட நாடுகள் இன்று என்ன செய்கின்றன, கடந்த காலத்தில் என்ன செய்தனவென்று ஒப்பிட்டறிவதன் வழியாக இத் தலைப்பில் நாம் தெளிவு காண வேண்டும். மேலும், கடந்த காலத்தில் கொண்டிருந்த பல கருத்துகள் மறையாது உறுதியாய் வளர்ந்துவந்துள்ளன; இன்றுங்கூட அவை நடைமுறைத் தீர்மானங்களை எடுப்பதற்குத் தூண்டுகோலாய் உள்ளன. அக் கருத்துகள் தோன்றிய விதத்தையும், அவை நிலைத்திருந்த காலத்திய சூழ்நிலைகள் இன்று இருக்குமாயின் அவை பொருத்தமாயிருக்குமா என்பதையும் ஆய்வது முக்கியமானதாகும்.

துவக்கம்

மெர்க்கன்டலிச காலத்திலிருந்து நாம் தொடங்குவோம். இக் காலம் சுமார் 1500ஆம் ஆண்டிலிருந்து 1750ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியைக்கொண்டது. இக் காலத்தில்தான்

மேற்கு ஐரோப்பா இடைக்காலத்திலிருந்த (middle ages) தேக்க நிலையிலிருந்து (stagnation) மீட்சிபெற்று, நிலப்பிரபுத்துவ அமைப்புகளையெல்லாம் (feudal institutions) சிறிதுசிறிதாகக் கைவிட்டு, நவீன தேசியக் கோட்பாட்டின் (nationalism) பல அம்சங்களைப் பெற்றது. முதலாவதாக, 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த மேற்கு ஐரோப்பிய சமுதாயத்தின் முக்கிய அம்சங்களைப் பார்ப்போம். அதோடு, பின்னர் வந்த 250 ஆண்டுகளில் அச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்த முக்கியமான நிகழ்ச்சிகளைப்பற்றியும் ஆய்வோம்.

மெர்க்கன்டலிசக் காலத்திலிருந்த சமூக, பொருளாதார இயல்புகள்

1500-ல் விவசாய சமுதாயம்

1500ஆம் ஆண்டில் மேற்கு ஐரோப்பாவில் ஏறத்தாழ 55 முதல் 60 மில்லியன் மக்கள்வரை வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் நிலப்பிரபுக்களின் நிலத்தில் வெறும் பண்ணையாட்களாகவோ (serfs), அல்லது மிகச் சிறிய பண்ணைகளையுடைய விவசாயிகளாகவோ போதுமான வருமானமின்றி வாழ்ந்தனர். இவ்வாறு விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்கள் ஏறக்குறைய 80 முதல் 90 சதவீதம்வரை இருந்திருக்கலாம். ஏனையோரில் பெரும்பாலானவர்கள் கைவினைஞர்களாயும் (craftsmen), சிறிய கடைக்காரர்களாயும், அல்லது மிகக் குறைந்த எண்ணிக்கையிலிருந்த பிரபுக்கள், பெரிய மதகுருக்கள், அல்லது அரசியல், பொருளாதாரத்துறையில் செல்வாக்குடன் வாழ்ந்த பணக்கார வியாபாரிகள் ஆகியோரின் ஊழியர்களாயும் வாழ்ந்தனர்.

குடிசைத் தொழில்

இச் சமுதாயம் பெரும்பாலும் விவசாயிகளைக்கொண்டதாக இருந்தது. லண்டன், பாரிஸ், நேப்பிள்ஸ், மிலான் ஆகிய நான்குமட்டுமே ஏறக்குறைய 2,00,000 மக்கள்தொகையுடைய மாநகரங்களாய் விளங்கின. அன்ட்வெர்ப் (Antwerp), அம்ஸ்டெர்டம் (Amsterdam), லிஸ்பன், செவில் (Seville), ரோம், பலெர்மோ (Palermo) ஆகிய மாநகரங்களில் சுமார் 1,00,000 பேர் வாழ்ந்தனர். 40,000 முதல் 50,000 பேர்வரை கொண்டிருந்த நகரங்கள் பல பரவலாகப் பல இடங்களில் காணப்பட்டன. இந்நகரங்களில் இன்றுள்ளவைபோலத் தொழிற்சாலைகள் கிடையா. ஒருசிலவற்றைத் தவிர, ஏனைய தொழிற் பொருள்கள் அனைத்தும் குடியானவர் வீடுகளிலோ, அல்லது கைவினைஞர்களின் கடைகளிலோதாம் உற்பத்தி செய்யப்பட்டன. இக் கடைகளில் ஒரு

சில தொழில் பயில்வோரும் தேர்ந்த கூலியாட்களும் (journeymen) வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். தட்டுமுட்டுச்சாமான்கள் (furniture), பண்டபாத்திரங்கள், மட்பாண்டங்கள், மெழுகு வத்திகள், உலோகப் பண்டங்கள், துணிமணிகள் ஆகிய அனைத்தும் இவ்வாறே உற்பத்தியாயின. ஆனால், இங்கிலாந்து, ஃபிளாண்டர்ஸ் (Flanders), வட இத்தாலி ஆகிய நாடுகளில் பிரபலமான வர்த்தக நகரங்களில் முக்கியத்துவம் பெற்ற கம்பளி நெசவுத் தொழிலில்மட்டும் தொழில் கில்டு முறை (craft gild system), 'வீட்டுத் தொழில்' (domestic), அல்லது 'கொடுத்துச் சேகரிப்பு' (putting-out) முறை இருந்து வந்தது. இம் முறையில் வியாபாரி அல்லது வணிகர் ஆட்டு ரோமத்தை விலைக்கு வாங்கி, நூற்போர் வீடுகளிலும், நெய்வோர் வீடுகளிலும் அதை வேலைக்குக் கொடுத்தார். பின்னர், நெய்யப் பட்ட முரட்டுக் கம்பளித் துணியை அவர்களிடமிருந்து பெற்று, அதை மற்ற வேலையாட்களிடம் கொடுத்துச் சுத்தம் செய்து, அழுத்தமாக்கி, சாயம் தோய்த்து, மெருகேற்றி முடிவான கம்பளித் துணியை விற்பனைக்கு எடுத்துச் செல்வர். இதைக்காட்டிலும் மேலான முதலாளித்துவ முறை (capitalistic method) சில இடங் களில் விருத்தியடைந்திருந்தது. அங்கெல்லாம் முதலாளிகள் கச்சாப் பொருள்களைமட்டுமன்றி, உற்பத்திக்குத் தேவையான கருவிகளையும் கொடுத்து, நெசவுத் தொழிலிலுள்ள பல்வேறு உற்பத்தி நிலைகளுக்கும் (processes) வேண்டிய நூற்றுக்கணக்கான ஆட்களைத் தமது சொந்த கட்டடத்திலேயே வேலைக்கமர்த்தி யிருந்தனர். சுரங்கத் தொழில், போர்க்கவசத் தொழில்போன்ற இதர சில தொழில்களில் முதலாளிகள் செல்வாக்கான நிலையில் இருந்தனர். மற்றபடி, இடைக்காலத் தொழில் முறைகளனைத்தும் அதிக மாறுதலின்றி அப்படியே நடந்துவந்தன.

வாணிப இயல்பு

பெரும்பாலான மக்களின் வருமானம் உணவு, உடை, உறை விடம் ஆகிய இன்றியமையாத தேவைகளைமட்டும் திருப்தி செய்யக்கூடிய அளவினதாயிருந்ததால், 15ஆம் நூற்றுண்டின் தொழில்களனைத்தும் நகரங்களிலும் அவற்றின் சுற்றுவட்டாரங் களிலுமே நடைபெற்றன. பால்ட்டிக் பகுதியிலிருந்து நகரவாசி களுக்கு அனுப்பப்பட்ட தானியவகைப் பொருள்கள், பால்ட்டிக் கடற் பகுதிகளிலிருந்தும் வடகடற் பகுதியிலிருந்தும் அனுப்பப்பட்ட உலர்த்தப்பெற்ற மீன்கள், செல்வந்தர்களுக்கு வேண்டிய போகப் பொருள்கள் ஆகியவற்றில்தான் வாணிபம் வெகுதூரம்வரை நடந்துவந்தது. இவற்றில் இறுதியாகக் கூறப்பட்ட பொருள் களின் வாணிபத்தில் உயர்ந்த ரகப் பருத்தி, பட்டாடைகள்,

வாசனைத் திரவியங்கள், நறுமணச் சரக்குகள், மருந்து வகைகள் சாயப் பொருள்கள் ஆகியவற்றில் கிழக்கிந்திய நாடுகளோடு வெகுகாலமாகவே நடைபெற்றுவந்த வாணிபமும், லத்தீன் நாடுகளிலிருந்து வடதிசை நாடுகளுக்கு அனுப்பப்பட்ட பழ வகைகள், மதுபானம் ஆகியவையும் சேரும். இப் பொருள் களுக்கும், இன்னும் போர்க்கவசம், தோல்பொருள்கள், வெனி ஸியாவின் கண்ணாடிச் சாமான்கள், மென்மயிர் ஆகியவற்றிற்கும் பரிவர்த்தனையாக (exchange) வட இத்தாலி, ஃபிளாண்டர்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் பிரசித்திபெற்ற கம்பளிப் பொருள் களில் நடந்த வாணிபமும் முக்கியமானதாகும்.

இதுவரை மிக மெதுவாக ஏற்பட்டுவந்த மாறுதல்கள் 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் மிக விரைவாக ஆயின. பொருளாதார வாழ்க்கையில், சிறப்பாக வாணிபம் நடந்த முறையில் ஒரு புரட்சியே உருவாகிவிட்டதென்றுகூடக் கூறலாம். இவ்வாறு திடீரென்று மனித வாழ்க்கையை யாற்றி அமைத்ததற்குப் பல காரணங்கள் இருப்பினும், அவற்றில் மூன்றுமட்டும் மிக முக்கிய மானவைகளாகும். அவை : (1) அறிவியல் விழிப்புணர்ச்சி (intellectual awakening) ஏற்பட்டு, இதுவரை தெரியாமலிருந்த வற்றை மிக ஆழ்மையாகவும் விரைவாகவும் மனிதன் அறிந்து கொள்ள முடிந்தது ; (2) உலகில் பல புதிய இடங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கண்டுபிடித்ததன் வழியாக அவற்றைப் பயன் கொள்வதற்கும், அவற்றில் மக்கள் குடியேறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது ; (3) மிக விரைவாக வளர்ச்சிபெற்ற மக்கள்தொகை.

மறுமலர்ச்சி (The Renaissance)

16ஆம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்த அறிவியல் விழிப் புணர்ச்சி, சிந்திக்கும் முறையிலும் கண்ணோட்டத்திலும் ஏற்பட்ட அடிப்படையான மாறுதலைப் பிரதிபலித்தது. 14ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் வடபகுதியில் தொடங்கி, கலை, இலக்கியம், கிரேக்க —ரோமானிய நாகரிகம் ஆகியவற்றின்மீதுள்ள அக்கறை மறு பிறப்பு எடுத்தது. இம் மறுபிறப்பு அரிஸ்டாட்டிலின் அளவை இயல், மறைநூலறிவு ஆகியவற்றின்மீது இடைக்காலத்தவர் கொண்டிருந்த அக்கறையினின்று அடிப்படையான வேறுபாடு கொண்டதாகும். கிரேக்க, ரோமானிய நூல்களின் சுவைநலமும், கவிதைத் திறமும், குறைவற்ற முழுமையான வாழ்வுபற்றிய கிளாசிக்கல் கருத்துகளும்தாம் இப்போது மக்களின் கவனத்தை ஈர்த்தன. கலை வளர்த்த பெருமக்களான அரசர்களும் நகரத் தலைவர்களும் இப் பண்புகளுடைய இலக்கியத்திற்குப் பெரும் ஆதரவு தந்தனர். இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

ஏனெனில், திருச்சபைக்கு (Church) அப்போதுங்கூட அவர்கள் விசுவாசமுடையவர்களாயிருந்தனர் ; எனினும், அரச சபையிலும் சொந்த அலுவல்களிலும் அவர்கள் காட்டிய அக்கறை காரணமாக அவர்களுடைய மனப்பான்மை சமயச் சார்பற்று உலகியல்பாக மாறிற்று. மேலும், இடைக்காலத்தில் வாழ்ந்த தமது முன்னோர்களைக் காட்டிலும் செல்வந்தர்களாயிருந்ததால், இவ்வுலக இன்பங்களையெல்லாம் அவர்கள் துய்த்தனர். மறுமையைப்பற்றிய அக்கறை இம்மையை நாடியது.

இவ்வுலகச் சார்பான கருத்துகள், அக் காலத்திய இலக்கியத்தில் மட்டுமன்றிப் பல்வேறு துறைகளில் மேதைகளாக விளங்கியவர்களின் நூல்களிலும் காணப்பட்டன. ஏற்கெனவே யுள்ள கோட்பாடுகள் காட்டும் பொருள்களை ஆய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக, உண்மை உலகத்தைப்பற்றி அறிய அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்தின் காரணமாக இவ்வுலகின் உண்மை நிகழ்ச்சிகளை ஆய்வதில் முனைந்தனர். ஆழ்ந்த ஆய்வையும் பரிசோதனையையும் நுட்பமாக்கியதன் விளைவாகத் தோன்றிய புதிய கண்டுபிடிப்புகள் — கடிகாரம், உருப்பெருக்கி (microscope), தொலைநோக்கி (telescope), காற்று அழுத்தமானி (barometer)— இயற்பொருள் சார்ந்த உலகினைப்பற்றிய படிப்பிற்குப் பெருந்துணை செய்தன. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் நவீன விஞ்ஞான அறிவியலுக்கு அசைக்க முடியாத அடிக்கோல் நாட்டப்பட்டு விட்டது.

புதிய இடங்களைக் கண்டுபிடித்ததன் விளைவுகள்

15ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த பேரறிஞர்கள் இவ்வுலகைப்பற்றி மற்றவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை விடுத்து, அதைப் பற்றித் தாமே ஆராயத் தொடங்கிய அதே சமயத்தில், துணிகர வீரம் படைத்தோர் இவ்வுலகில் பல ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு, புதிய உலகையும் கிழக்கு நாடுகளுக்குச் செல்லப் புதிய கடல் வழியையும் கண்டுபிடித்தனர்.

அமெரிக்கக் கண்டங்களைக் கண்டுபிடித்ததும், ஸ்பானியர்கள் மெக்ஸிகோவையும் பெருவையும் (Peru) கைப்பற்றினர். இவ்விடங்களிலிருந்த கலைச்செல்வங்கள்மட்டுமன்றி, சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட தங்கமும் வெள்ளியும் ஸ்பெயின் நாட்டில் வந்து குவிந்தன. இதனால், ஸ்பெயின் நாட்டு வலிமை நூற்றாண்டுகளுக்குமேல் வலுத்திருந்தது. குடியேற்றம் நடந்ததன் விளைவாக ஐரோப்பியப் பொருள்களை விற்பதற்கு ஸ்பானியக் காலனி

களில்தான் முதன்முதலாக வாய்ப்பு ஏற்பட்டது. நூறுண்டுகளுக்குப் பின்னர்தான் ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள், செவ்விந்தியர்களை விரட்டியடித்து விட்டு, இதுவரை விவசாயமே நடக்காத அடர்ந்த காடுகளைச் செம்மைப்படுத்தி, புகையிலை உற்பத்தி, மீன் பிடித்தல், மரம் வெட்டல் ஆகிய தொழில்களைப் படிப்படியாக உருவாக்கியதோடு, மென்மையான ரோமங்களில் வாணிபத்தையும் ஆரம்பித்தனர்.

வாஸ்கோ-டி-காமா நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவிற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்ததன் (1498) விளைவாக, போர்ச்சுகல் நாட்டிற்கு வலிமையும் செழிப்பும் ஏற்பட்டதுமட்டுமன்றி, வாசனைத் திரவியங்கள் விளையும் இந்தியாவோடும், இதர தீவுகளோடும் நடந்த வர்த்தகத்தில் வெனிஸுக்குப் பதிலாக லிஸ்பன் தலைநகரானது. அமெரிக்காக்களைக் கண்டுபிடித்து அவற்றில் குடியேற்றம் நடந்ததுமட்டுமன்றி வாணிபத்தைப் பெருக்கவும் வாஸ்கோ-டி-காமாவின் சாதனை வழிவகுத்தது. வெனிஸ் நகரக் கப்பல்கள்மூலம் மத்தியதரைக் கடற்பகுதியிலும், ஒட்டகங்களின்மூலம் அண்மைக் கிழக்கு நாடுகளிலும்,குதிரைகள் மூலம் ஆல்ப்ஸ் மலை வழியாகவும் நடந்துவந்த வியாபாரம், இப்போது பெரியபெரிய கப்பல்கள்மூலம் பெருங்கடல் மார்க்கமாகக் குறைந்துவரும் செலவில் நடைபெற முடிந்தது.

வணிகர்களுடைய மேற்பார்வையிலேயே வெகுதூரம் வியாபாரம் நடப்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இவ் வியாபாரத்தினுல் இலாபம் பெருகிக்கொண்டே யிருந்தது. பொன்னும் வெள்ளியும் முதலில் ஸ்பெயின் நாட்டில் வந்து குவிந்து, பின்னர் அங்கிருந்து இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுகொண்டிருந்ததால், விலைவாசிகள் உயர்ந்தன. இதனுல், ஓரளவு பணவீக்கம் ஏற்பட்டு, 1650வரை அது நிலைத்திருந்தது. எனினும், கூலி வீதங்கள் மிகவும் தாழ்வாகவே இருந்தன. உள்நாட்டில்மட்டுமன்றி வெளிநாடுகளிலும் புதிய அங்காடிகளை ஏற்படுத்தியதால், பணவீக்கம் மேலும் விரிவாக முற்பட்டது. இலாபம் பெருகப் பெருக முதல் திரட்சியும் (accumulation of capital) விரைவாகியது. தனிப்பட்டவர்களுக்குப் பெருவாரியான செல்வம் வந்து குவிந்தது. எனவே, இச் செல்வந்தர்களின் செல்வாக்கு அரசியல், பொருளாதார உலகில் உயர்ந்துகொண்டேபோனது.

மக்கள்தொகைப் பெருக்கம்

ஐரோப்பியப் பொருளாதார வாழ்க்கையைத் துரிதமாக்கின மூன்றுவது காரணி, மக்கள்தொகை வளர்ச்சியாகும். உலகியல்

சார்ந்த அறிவியல் தொடங்கியதற்கும், வாணிபம் செய்வதற்குப் புதிய மார்க்கங்களைக் கண்டுபிடித்ததற்கும் இணையாக மக்கள்தொகைப் பெருக்கமும் ஏற்பட்டது. 1300-ல் மேற்கு ஐரோப்பாவின் மக்கள்தொகை சுமார் 53 மில்லியன் எனத் தெரிகிறது. அடுத்து வந்த 150 ஆண்டுகள்வரை இம் மக்கள் தொகை பெருகியிருக்க முடியாது. ஏனெனில், பெருங் கொள்ளை நோயாலும் (black death), இதர கொள்ளைநோய்களாலும் பல மக்கள் மடிந்தனர். மேலும், 1337முதல் 1453வரை நடந்த நூறுண்டுப் போர் (hundred year's war) ஃபிரான்சு நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. எனவே, இப் பகுதிகளின் மக்கள் தொகை 1600-ல் சுமார் 70 மில்லியனுக்குமட்டுமே அதிகரித்தது. இவ்வாறு அதிகரித்த 17 மில்லியன் மக்கள் தொகையில் பெரும் பகுதி (சுமார் மூன்றிலொன்று) 1450ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் அதிகரித்தது.[1]

மக்கள்தொகைப் பெருக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன. நாட்டுப்புறங்களிலிருந்து நகரங்களில் வந்து பலர் குடியேறியதால், வளர்ந்துவந்த தொழில்களுக்கு வேண்டிய தொழிலாளிகள் கிடைத்தனர்; கப்பல் தொழிலில் பல பேர் புகுந்தனர்; படையில் பலர் சேர்ந்தனர்; கடலுக்கப்பாலிருந்த காலனிகளில் பலர் சென்று குடியேறினர். மேலும், மீன், தானிய வகைப் பண்டங்கள், இறைச்சி, நெசவுப் பொருள்கள், மண் பாண்டங்கள், துப்பாக்கி, காலணிகள், கத்திகள், கிறித்துவ மறைநூல் (Bible) ஆகிய பொருள்களுக்கெல்லாம் முன்பைவிட இப்போது தேவை அதிகரித்தது. எனவே, இப் பொருள்களை யெல்லாம் உற்பத்தி செய்தோருக்கும் விற்பனை செய்தோருக்கும் கிடைத்த இலாபம் உயர்ந்தது. இலாபம் உயர்ந்ததால் சேமிப்பும், சேமிப்பினுல் முதலும் அதிகரித்தன. அதோடு, போகப் பொருள்களுக்கான தேவையும் அதிகரித்ததால், அவற்றினின்று கிடைத்த இலாபமும் பெருகியது.

வர்த்தக வகுப்பினர் உயர்வு

புதிய முதலாளித்துவ வகுப்பினர் சக்தி வாய்ந்த, செல்வாக்கான நிலைக்கு உயர்ந்தது, அக் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான வளர்ச்சிகளில் ஒன்றுகும். இதுவரை நாம் குறிப்பிட்ட தூண்டுகோல்களனைத்தும் பின்வருமாறு இயங்கின. பரந்த மனப்பான்மை வர்த்தகச் செயல்களுக்குச் சாதகமான

1 Shepard B. Clough and Charles W. Cole, **'Economic History of Europe'** pp, 98-99, Copyright 1941 by D. C. Heath & Co., Boston.

எண்ணச் சூழ்நிலையை உருவாக்கியது; புதிய இடம் கண்டு பிடிப்பும், மக்கள்தொகைப் பெருக்கமும் தொழில் துணிவுள்ளோருக்கு விரிவான வாய்ப்பைக் கொடுத்தது. விலையுயர்ந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றின் கிடைப்பு நிலையான அதிக இலாபத்தைக் கொடுப்பதன் வழியாக, முதல் எளிதாகப் பெருக்குவதற்குத் துணை செய்தது. முதலாளிகள் தம் வியாபார நடவடிக்கைகளை எல்லா வழிகளிலும் விரிவாக்கினர். தானியம், மீன், மரம் ஆகிய பொருள்களில் நடைபெற்ற வியாபாரம் பெருகியது. ஆணிகள், சங்கிலிகள், இன்னும் இதர உலோகப் பொருள்களான பூட்டு, சாவி, கதவுக் கீல்கள், விளக்குகள் போன்ற உறுதிப் பொருள்களுக்கேற்பட்ட தேவை, பல சிற்றளவுத் தொழிற்சாலைகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. 1538ஆம் ஆண்டிலேயே பர்மிங்ஹாமில் இவ்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைகள் தோன்றின. இடைக் காலத்தில் செல்வந்தர்கள்மட்டும் பயன்படுத்திவந்த சர்க்கரை 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஏழைகளைத் தவிர,இதர மக்கள் அனைவரும் பயன்கொள்ளக்கூடிய மலிவுப் பொருளாக ஆயிற்று. அப்போது மேற்கிந்தியத் தீவுகளோடு நடைபெற்ற வியாபாரத்தில் சர்க்கரை, வெல்லப் பாகு, ரம் என்னும் மதுபானம் ஆகிய பொருள்கள் முக்கிய இடம் பெற்றன. இதோடு தொடர்புடைய நீக்ரோ அடிமை வியாபாரம் 1510-ல் தொடங்கி, 17ஆம் நூற்றாண்டில் ஆண்டொன்றுக்குச் சராசரி 15,000 பேராகவும், பின் 18ஆம் நூற்றாண்டில் 30,000 பேராகவும் பெருகியது.

வாணிப முதலாளிகள் ஐரோப்பிய மக்களுக்குப் புதியவான தேயிலை, காப்பி, கொக்கோ, அவுரி ஆகிய பொருள்களைக் கிழக்கிந்திய நாடுகளிலிருந்தும், புகையிலை, தக்காளி, தானியம், உருளைக் கிழங்கு ஆகியவற்றை அமெரிக்கக் கண்டங்களிலிருந்தும் இறக்குமதி செய்து விற்க ஆரம்பித்தனர். தொழில் நிருவாகிகளான முதலாளிகள் புத்தம் புதிய உற்பத்தி முறைகளைத் தம் தொழில்களில் புகுத்தினர். ‘கொடுத்துச் சேகரிப்பு முறை’ அல்லது எந்திரங்களின்றிப் பெருமளவில் நடைபெற்ற தொழிற்சாலை முறை, கம்பள நெசவு, போர்க்கவசம், சுரங்கம் ஆகிய தொழில்களில்மட்டுமன்றித் துப்பாக்கி, பீரங்கி, இரும்புக் கருவிகள், இரும்புச் சரக்கு, கப்பல் கட்டல் ஆகிய தொழில்களிலும், இன்னும் இதர தொழில்களிலும் பிரசித்தி பெற்றது. வர்த்தக முதலாளிகள் மிகப் பெரிய நபர்களாகக் கருதப்பட்டனர். முதலீடு செய்வோராயும், தொழில் நடத்துவோராயும்மட்டுமன்றி, அரசர்களுக்கும் இளவரசர்களுக்கும் கடன் கொடுப்போராயும், அவர்களுக்கு ஆலோசகராயும் பெயர் பெற்றனர்.

தேசிய அரசுகளின் தோற்றம் (The Rise of National States)

16ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பொருளாதார விரிவும், அதனுடன் தோன்றிய செல்வாக்கும் வலிமையும் மிக்க வர்த்தக முதலாளிகள் நிலையும் எவ்வளவு முக்கியமானவையோ, அது போன்றே மேற்கு ஐரோப்பாவின் அரசியல்துறையில் அந் நூற்ருண்டில் தோன்றிய சக்திவாய்ந்த தேசிய அரசுகளும் முக்கியமானவையாகும். ஏறக்குறைய 1450ஆம் ஆண்டுவரை 'இங்கிலாந்து', 'ஃபிரான்சு', 'ஸ்பெயின்', 'நெதர்லண்ட்ஸ்' என்னும் சொற்கள் பெரும்பாலும் புவியியல், மொழி ஆகியவை சார்ந்த பொருளில்தான் பயன்பட்டுவந்தனவேயன்றி, அவைகளுக்கு அரசியற் பொருள் எதுவும் இல்லை. நார்மானிய வெற்றிக்குப்பின் (Norman conquest) இங்கிலாந்திலும் ஃபிரான்சிலும் மன்னர்கள் ஆட்சி செய்துவந்தபோதிலும், குடிமக்களின் முழுப் பற்றுறுதியைப் பெறக்கூடிய அளவிற்கு அவர்களிடம் அதிகாரம் இல்லை. ஏனெனில், நிலமானியப் பிரபுக்கள் அவ்வதிகாரத்தை வன்மையாக எதிர்த்தனர். ஸ்பெயின் நாடு 'காஸ்டீல்' (Castile), ஆரகான் (Aragon), மூர்களின் (Moors) ஆதிக்கத்திலிருந்த பகுதிகளெனப் பிரிந்திருந்தது. அதே சமயத்தில் தாழ்நிலங்கள் பர்கண்டி (Burgundy) கோமக்களின் அரசுகளாகத் திகழ்ந்தன.

இடைக்காலத்தின் இறுதியில் எண்ணிலடங்கா நிலமானியப் பிரபுக்களிடையே அதிகாரம் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களுடைய அதிகாரத்திற்குரிய ஆதாரம் சிறிதுசிறிதாகக் கலைக்கப்பட்டுவிட்டது. மெதுவாக, ஆனல், நிலையாக வளர்ச்சி பெற்றுவந்த வாணிபம் பண அளிப்பை அதிகரித்ததோடு, அவ்வதிகரிப்பால் வலுவும் பெற்றது. நகரங்கள் வளர்ச்சியும் பெருக்கமும் பெற்றன. நகரப் பிரபுக்களான செல்வந்தர்களின் எண்ணிக்கை பெருகியதோடு, அவர்களின் செல்வாக்கும் அதிகரித்தது. பணப்புழக்கம் பரவி, நிலமானிய முறையில்கூடப் புகுந்துவிட்டது. பிரபுக்களுக்குப் பண்ணையாட்களும், பண்ணையாட்களுக்குப் பிரபுக்களும் செய்து வந்த பணிகளும் தொண்டுகளும் மறைந்து, அவற்றிற்குப் பதிலாக ஒப்பந்த முறையில் பணம் செலுத்தும் நிலை ஏற்பட்டது. பணப் புழக்கமுடைய பொருளாதாரம் வளரவளர, படைப்பலத்திற்காக குதிரை வீரர்களை நிலமானியத் தண்டலாகப் பெறவேண்டிய அவசியம் அரசர்களுக்கு இல்லாமற்போயிற்று. மாருக, பொருள்களாக வசூலிப்பதற்குப் பதிலாக அவர்கள் வரி வசூலித்து, அப்பணத்தைக் கொண்டு வீரர்களுக்குக் கூலி கொடுத்துப் படைபலத்தைப் பெற முடிந்தது. வாணிபத்திலும் நிதியாட்சியிலும் அனுபவம் நிறைந்த நகரப் பிரபுக்கள் அதிகரித்துக்கொண்டுவந்ததால், அவர்களைக் கொண்டு சிக்கலான தமது அலுவல்களை நடத்தவும், வேண்டிய

போது அவர்களிடமிருந்து பெருந்தொகையைக் கடனாகப் பெறவும் முடிந்தது. இறுதியாக, சீனாவிலிருந்து புகுத்தப்பட்ட வெடிமருந்து, புதியவாய்க் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி, பீரங்கி முதலிய வற்றைக்கொண்டு கோட்டைச் சுவர்களையெல்லாம் தகர்த்தெறிய முடிந்ததால், சங்கிலிக் கவசங்களுக்கும் தகட்டுக் கவசங்களுக்கும் மதிப்பில்லாமற்போய், அவை பொருட்காட்சிச்சாலைகளின் மூலை களுக்குப் போய்ச் சேர்ந்தன.

அதிகாரமனைத்தும் மையமாக்கப்படுவதற்குரிய சூழ்நிலைகள் உருவானபோதிலும், அரசனின் அதிகாரத்தையும் இங்கிலாந்தின் ஒருங்கிணைப்பையும் நிலைபெறச் செய்வதற்கு ஏழாம் ஹென்றியின் (1485-1509) உறுதியும் விடாமுயற்சியும் அவசியமாயின. இங்கிலாந்து நாட்டை ஒருங்கிணைப்பதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த எட்டாம் ஹென்றியாலும் (1509-47) எலிஸபத் இராணியாலும் (1558-1603) வலுவாக்கப்பட்டன. ஏறக்குறைய ஃபிரான்சு நாட்டின் பாதி அளவிற்கு ஆங்கிலேயர்கள் கொண்டிருந்த உரிமை 1453ஆம் ஆண்டில் முடிவடைந்த நூறாண்டுப் போரின் விளைவாக விரயமானது. அதன் பிறகுதான் ஃபிரான்சு நாட்டிலிருந்த எண்ணிலடங்காக் கவுன்டிகளையும் (counties) டுக்கிகளையும் (duchies) இணைத்து ஒரு தேசமாக்கி, ஒரே தேசிய அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவர முடிந்தது. பின்னர் நிலமானியப் பிரபுக்களையெல்லாம் தம் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவருவதற்காகத் தம் முன்னோர்கள் மேற்கொண்ட பெரு முயற்சியை ஆதாரமாகக்கொண்டு, பதினோராம் லூயி (1461-83) தனது கூர்மையான அறிவாலும் சதியினாலும் நாட்டை ஒருமைப்படுத்த முயன்றார். அவருடைய காலத்திலிருந்து மன்னரின் முழு அதிகாரத்தைப்பற்றி யாருமே சந்தேகப்பட்டதில்லை. ஐரோப்பாவின் சக்திவாய்ந்த நாடுகளில் ஃபிரான்சு நாடும் ஒன்றானது.

ஸ்பெயின் நாட்டின் நுழைவு உலக அரங்கில் திடீரெனக் காஸ்டீல், ஆரகான் ஆகிய நிலமானிய அரசுகள் தனித்தனியாகப் பல நூற்றாண்டுகள் முயற்சி செய்தபோதிலும், மூர்களின் ஆதிக்கத்தை நாசம்பண்ண முடியவில்லை. ஆனால், 1469ஆம் ஆண்டில் ஆரகானைச் சேர்ந்த ஃபெர்டினாண்டுக்கும் காஸ்டீலைச் சேர்ந்த இசபெல்லாவிற்கும் நடந்த திருமணத்தால், அவ்விரு நிலமானிய அரசுகளும் உடனடியாக இணைந்துவிட்டன. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த அதே ஆண்டில், மூர்கள் வசம் கடைசியாக இருந்த கிரானடாவை வெல்லுவதில் கொலம்பசுக்கு ஆதரவாக இருந்த மன்னரின் படைகள் ஈடுபட்டன. இதன் விளைவாக, தனி நாடாகவே இருந்த போர்ச்சுகல் தவிர, இபேரியா

தீபகற்பம் முழுவதும் ஒரே ஸ்பானிய அரசரின் ஆளுகைக்கு உட்பட்டது.

நவீன காலத்தின் தொடக்கத்தில் ஐரோப்பாவின் சக்தி வாய்ந்த நாடுகளில் நான்காவது இடத்தைக்கொண்ட டச்சுக் குடியரசு—ஸ்பானிய நாட்டு ஒருங்கிணைப்பு முடிந்து நூருண்டுகள் முடிந்துங்கூட ஒன்ருக்கப்படவில்லை. தொடர்ந்து நடைபெற்ற பல திருமணங்களால் பர்கண்டியின் கடைசிக் கோமகனிடமிருந்து தாழ்பகுதிகள் (low countries) ஸ்பெயின் நாட்டு மன்னரான ஐந்தாம் சார்லஸ் கைக்குச் சென்றது. இவரது மகனுன இரண்டாம் பிலிப் டச்சு நாட்டில் வாழ்ந்த 'புராட்டஸ்டன்ட்' கிறித்துவர்களைச் சலிப்புத் தன்மையின்றிக் கொடுமைப்படுத்தி, இறுதியாகத் தனது பேராளான(delegate)ஆல்வாவின் கோமகனைக் கொடுவதை செய்தார். இது பிரபலமாகாத கொடுவதை எனினும், டச்சுக்காரர்கள் புரட்சி செய்வதற்குத் தூண்டுகோலாயிருந்தது. ஸ்பானியக் கொடுமையை எதிர்த்து அவர்கள் நடத்திய கோரப் புரட்சி நாற்பது ஆண்டுகள் நீடித்து, பின் 1609-ல் அவர்கள் நிலையான சுதந்திரத்தைப் பெற்றனர்.

உலக சமுதாயத்தில் முக்கிய அங்கம் வகித்த நாடுகளில் இன்னும் ஐந்து தேசிய அரசுகளும் உள. இவை நவீன காலத்தின் தொடக்கத்தில் இருந்த பெரிய நான்கு (big four) நாடுகளைவிடக் குறைந்த செல்வாக்கும் சக்தியும் கொண்டவை என்பது உண்மையே. ஸ்வீடன் நாடு 16, 17ஆம் நூற்ருண்டுகளில் மத்திய ஐரோப்பாவிலேயே சக்திவாய்ந்த, செல்வாக்குப் பெற்ற நாடாக மாறியது. நார்வேயும் டென்மார்க்கும் 16ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் தேசிய ஒருமைப்பாட்டை அடைந்தன. சுவிட்சர்லாந்தின் கான்டன்கள் (Cantons) ஹாப்ஸ்பர்க்கின் (Hapsburg) ஆதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டு, 1499-ல் சுதந்திர நாடானது. எனினும், அந் நாடு ஒன்ருகி நல்ல அமைப்பைப் பெறுவதற்குப் பல ஆண்டுகள் ஆயின. போர்ச்சுகல் நாடு பிரபலமான புதிய இடங்களைக் கண்டுபிடித்த காலத்திலேயே தேசியத் தன்மையைப் பெற்றது என்பதை ஏற்கெனவே நாம் பார்த்தோம்.

தேசிய அரசுகளின் தோற்றத்தினுல் நிலமானியப் பிரபுக்கள் அடிபணிந்து, அரச சபையின் உறுப்பினர்களாக மாறினர். மேலும், இத் தோற்றத்தால் கத்தோலிக்க திருச்சபையோடு முக்கியமான பூசல்கள் ஏற்பட்டன. கத்தோலிக்க திருச்சபை பெரியதொரு நிலக்கிழாராக இருந்தமையால், சமய ஒழுக்கத்திற்குரிய அதிகாரத்தைமட்டுமன்றி, இவ்வுலகைச் சார்ந்த அதிகாரத்தையும் அது செலுத்திவந்தது. மேலும், மேற்கு நாட்டுக் கிறித்துவ உலகைச்

சமயவாயிலாக ஒன்றித்த காரணத்தால், திருச்சபைக்குத்தான் மக்கள் முதற்கண் விசுவாசமுள்ளவர்களாயிருந்தனர். ஆனால், தேசிய அரசுகளின் மன்னர்களோ, தத்தம் குடிமக்களிடமிருந்து நிறைய வருமானத்தைப் பெறவேண்டிய அவசியத்தாலும், அவர்கள்மீது தத்தம் அதிகாரத்தைச் செலுத்தவேண்டுமென்ற நோக்கத்தாலும், இதுவரை வரியினின்று விலக்குப் பெற்றிருந்த திருச்சபை நிலங்கள், மதகுருக்களின் நிலங்கள் ஆகியவற்றின்மீது வரி விதிக்கும் அதிகாரத்தை வலுவந்தமாகப் பயன்படுத்தினர்; இவ்வுலகைச் சார்ந்த அதிகாரம் முழுவதும் தமக்கே உரியதென்றும் திட்டவட்டமாக வாதாடினர். இதன் விளைவாக ஏற்பட்ட பூசலில் மன்னர்களே வெற்றி கண்டனர். சமயச் சீர்திருத்தத்தாலும், அதன் விளைவாக வடபகுதியில் பல நாடுகள் கத்தோலிக்க திருச்சபையைவிட்டு விலகி புராட்டஸ்டன்ட் மதத்தைத் தழுவியதாலும், கத்தோலிக்க திருச்சபைக்கு இருந்துவந்த ஏக அதிகாரம் முடிவுற்றது.

மெர்க்கன்டலிசச் சிந்தனையின் அடிப்படைகளும் முக்கிய அம்சங்களும்

(The Bases and Chief Elements of Mercantilist Thought)

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பொருளாதாரக் கருத்தினை உருவாக்கிய கருமூலம் இப்போது நம்முன் உள்ளது. அவற்றில் ஒன்று பொருளாதார விரிவாக்கம் ஆகும். இது வாணிபத்தைப் பல வழிகளில் பெருக்கியதோடு மட்டுமன்றி, பழையனவும் புதியனவுமான பல்வேறு பொருள்களை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்துவந்த துறைமுகப்பட்டினங்களில் குவித்தது. புதிய உலகிலிருந்து வந்த ஏராளமான தங்கமும் வெள்ளியும் விலைவாசிகளையும் இலாபத்தையும் உயர்த்தியதோடு மட்டுமன்றி, மூலதனம் விரைவாகப் பெருகவும் வழிசெய்தன. பெருகிக்கொண்டே வந்த மக்கள்தொகை, பொருள்களை வாங்குவதற்கு வேண்டிய வாடிக்கையாளர்களையும், அவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தொழிலாளிகளையும், அமெரிக்கக் கண்டங்களின் இயற்கை வளங்களைப் பயன் கொள்வதற்காக அங்குப் போய்க் குடியேறுவதற்கு வேண்டிய மக்களையும் அளிக்க ஏதுவாயிருந்தது. இரண்டாவது கருமூலம் வர்த்தக-முதலாளிகளின் தோற்றம் ஆகும். இது வாணிபம், கப்பல் போக்குவரத்து, உற்பத்தித் தொழில் ஆகிய தொழில்களை உருவாக்குவதற்கு வேண்டிய தலைவர்களை மட்டுமன்றி, அரச சபைக்கு வேண்டிய ஆலோசனைகளையும், அரசர்களுக்கு வேண்டிய நிதியையும் தரக்கூடிய செல்வர்களையும் உருவாக்கியது. மூன்றாவதாக,

தத்தம் வலிமையைப் பெருக்கவும், செல்வத்தை அதிகரிக்கவும், வாணிபத்தை விரிவாக்கவும் ஆசைகொண்டிருந்த புதிய தேசிய அரசுகள் ஆகும்.

அக் காலத்திலிருந்த மேற்கு ஐரோப்பாவின் சூழ்நிலையை விளக்குவதற்கு இவ் அம்சங்கள்மட்டும் போதுமானவையெனின், அக் காலத்தை அமைதியாகச் செல்வத்தைச் சேகரித்த, புதிய நாடுகளில் சண்டைசச்சரவின்றிக் குடியேற்றம் ஏற்பட்ட, வாழ்க்கை வசதிகள் உயர்ந்து சென்ற அமைதியான காலமெனக் கருதுவது பொருத்தமாயிருக்கக்கூடும். ஏனெனில், அக் காலத்தில் ஏராளமான சாதனங்களும், எல்லையற்ற வாய்ப்புகளும் நிறைய இருந்தன.

ஆனால், செல்வக் கொழிப்பும், குடியேற்றமும், வாழ்க்கை முன்னேற்றமும் அக் காலத்தில் இருந்தபோதிலும், போர்களும் பூசல்களும் மலிந்துவிட்டன.

'தேசிய அரசுகளுக்குள் போர் சர்வ சாதாரணமாயிருந்தது. 1494 முதல் 1559 வரை ஐரோப்பாவின் சில பகுதிகளில் ஏறக்குறைய ஒவ்வோர் ஆண்டும் போர் நடந்துவந்தது. 17ஆம் நூற்றாண்டிலோ, ஏழு ஆண்டுகள்மட்டும்தான் போரின்றி அமைதி நிலவியது. 1650 முதல் 1815 வரையுள்ள 165 ஆண்டுகளில் 84 ஆண்டுகள் இங்கிலாந்து போரில் மூழ்கியிருந்தது.'[2]

உலகினைப்பற்றி நிலையான கண்ணோட்டம் (A Static View of the World)

இவ் வகைப் போர்கள் மூள்வதற்கு அரசர்களின் பொறாமையும் பேராசையும் சிறிதளவு காரணமாயிருந்திருக்கலாம்; அல்லது சமயப் பித்தும் சகிப்புத்தன்மையற்ற நிலையும்கூடச் சிறிதளவு காரணமாயிருந்திருக்கக்கூடும். ஆனால், உலகைப்பற்றியும், அதன் இயற்கை வளங்களைப்பற்றியும் அவர்கள் கொண்டிருந்த குறுகிய மனப்பான்மைதான் முக்கியக் காரணம் என்பதற்கு ஐயமில்லை. எல்லோரும் பயன்கொள்ளக்கூடிய அமெரிக்கக் கண்டத்தின் பரப்பளவுபற்றியோ, விரிவாக்கக்கூடிய வாய்ப்புப் பற்றியோ, அல்லது செல்வ அதிகரிப்புப்பற்றியோ வெகுநாட்கள் வரை அவர்கள் சிந்தித்துப் பார்த்தது கிடையாது. இதற்கு மாறாக, தத்தம் நாட்டிற்குள் வளர்ச்சி வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தது. வணிகர்கள், பொருள் உற்பத்தியாளர்கள்

[2] Herbert Heaton, 'Economic History of Europe,' p. 228; Copyright 1936 by Harpes & Brothers, New York.

ஆகிய எல்லோருமே தத்தம் தொழில் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்குரிய வாய்ப்பினை அதிகரிக்கவே ஆசைப்பட்டனர். புதிதாகத் தோன்றிய தேசிய அரசுகளின் அரசர்களும் ஆலோசகர்களும் தத்தம் அரசு வலிமைபெற்று முன்னேறவேண்டுமென்றே ஆசித்தனர். எனவே, அவர்களின் ஆசைப்படி அவரவர்கள் அரசு விரிவடைவதற்கு வேண்டிய சாதனங்கள் நிரந்தரமாக வரையறை பெற்றிருந்தால், ஒரு நாட்டின் குறிக்கோளுக்கும் பிறிதொரு நாட்டின் குறிக்கோளுக்கும் பிணக்கம் ஏற்படுவது அவசியமன்றோ? இவ்வாறாக, பல நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போர் தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

இந் நிலையை மெர்க்கன்டலிசக் கொள்கையின் சிறந்த ஆய்வாளர் ஒருவர் கீழ்க்காணுமாறு விவரித்துள்ளார்:

'தத்தம் அரசுக்குள் முழுமையான இயக்க நிலைகொண்ட குறிக்கோள்களைத்தான் மெர்க்கன்டலிசம் பின்பற்றியது. ஆனால், உலகிலுள்ள பொருளாதாரச் சாதனங்கள் அனைத்தும் இவ்வளவு தான் என்ற இயக்கமற்ற எண்ணத்தில் இது சிக்கிவிட்டது என்பதுதான் முக்கியம். இச் சிக்கல்தான் அடிப்படையான பொருத்தமின்மையை உருவாக்கி எண்ணிலடங்கா வாணிபப் போருக்குக் காரணமாயிருந்தது. குறிப்பிட்டதொரு நாடு தன் நிலையை மாற்றவும், தான் முன்னேறவும் முடியும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், பிற நாடுகளிலிருந்து வலுக்கட்டாயமாய்ப் பெறுவதன்மூலம்தான் அவ்வாறு முன்னேற முடியும் என்பதையே இவ்விரு அம்சங்களும் புலனாக்குகின்றன. இதுதான் மெர்க்கன்டலிசத்தின் துயர்கதை. இதன் விளைவுகளை முற்றிலும் நிலைமாறாக் கருத்தையுடைய இடைக்காலம் மட்டுமன்றி, தலையிடாக் கொள்கை என்னும் இயக்கநிலைக் கருத்தைக்கொண்ட இடைக் காலமும் தவிர்த்துவிட்டன. இதைப்பற்றி நன்றாய்ப் புரிந்து கொள்ளாமல் மெர்க்கன்டலிசக் கொள்கையையோ அல்லது அதன் செயல் முறையையோ அறிந்துகொள்ள முடியாது.'[3]

அரசின் வலிமைக் கோட்பாடு (The Doctrine of State Power)

மேற்கு ஐரோப்பாவில் தோன்றிய புதிய அரசுகளனைத்தும் தத்தம் செல்வம், மக்கள்தொகை, எல்லை முதலியவற்றை விரிவு படுத்த வேண்டுமென விரும்பின. அதே சமயம் அவ்வாறு விரிவு படுத்துவதற்குரிய வாய்ப்புகள் அனைத்தும் வரையறை பெற்

[3] August Heckscher, 'Mercantilism' Vol. II, pp. 25-36; Copyright 1936 by George Allen & Unwin Ltd., London.

றுள்ளன என்றும் நம்பின. இவ்விரண்டு கருத்தையும் ஆதாரமாகக்கொண்டுதான் எல்லாவற்றிற்கும் மேலான தத்தம் தேசியக் கொள்கையை அவை நிர்ணயம் செய்தன; சாத்தியமான எல்லா வழிகளிலுமே தமது தேசிய வலிமையை அதிகரிப்பதுதான் முதன்மையான குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று எண்ணின. உலகின் கருத்துக்கு இசைந்திருந்த இக் குறிக்கோள் தான் மெர்க்கன்டலிசக் கொள்கையையும் செயல்முறைகளையும் உருவாக்கியது. ஆனால், பகைமை நிறைந்த இக் குறுகிய உலகில் தம் தேசிய வலிமையை எவ் வழிகளில் அதிகரிக்க முடியும்? ஒரு நாட்டின் வலிமையில் படைபலம் முக்கியமானதொரு பகுதியாகும் என்பது நிச்சயம். எனவே, பெரிய கால்படைக்கு வேண்டிய ஆட்களைத் தேர்ந்தெடுப்பதையும், அவர்களுக்குப் பயிற்சிகள் அளிப்பதையும் மெர்க்கன்டலிஸ்டுகள் முக்கிய வழியாகக் கொண்டனர். இதைவிடக் கப்பற்படைதான் அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரிந்தது. ஏனெனில், வெளிநாட்டுச் சுரங்கங்களிலிருந்து தங்கமும் வெள்ளியும் கடல் மார்க்கமாக வரவேண்டியிருப்பதால், அவற்றைப் பத்திரமாக ஏற்றிவர வேண்டியது அவசியம். அதோடு, எல்லாவகைப் பொருள்களையும் இலாபகரமாக ஏற்றிச் செல்வதற்குரிய வணிகக் கப்பல்களும் முக்கியம். மேலும், மக்கள் பெருகிவந்தால் அவர்கள் குடியேறுவதற்குத் தேவையான காலனிகளும் அவசியம். அதோடு, காலனிகள் இருந்தால்தான் தாய்நாட்டிலுள்ள திறம்பெற்ற தொழிலாளிகள் வேலைசெய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்களையும், மரங்கள், கப்பலுக்கு வேண்டிய பாகங்கள், இன்னும் இதர கப்பற்படைப் பொருள்கள் முதலியவற்றையும் பெறமுடியும். இவை தவிர, காலனிகள் சுயமாகவே முக்கியத்துவம் பெற்றவையாகையால், அவைகளைப் பாதுகாக்கக் கப்பற்படை அவசியமானது.

ஆக்கமில்லாப் (unproductive) படைவீரர்களையும் கப்பலோட்டிகளையும் பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்கவும், அவர்களைப் பராமரிக்கவும் வேண்டுமாயின், துப்பாக்கி, பீரங்கி, வெடிமருந்து, கப்பல்கள், துணிமணிகள், உணவுப் பொருள்கள் முதலியன நிலையாக உற்பத்தி செய்யப்படவேண்டும். எனவே, ஒரு நாடு பொருளாதார வலிமை பெற்றதாயுமிருக்கவேண்டும். இதற்கு நாட்டிற்குத் தேவையான பலவகை உற்பத்திப் பொருள்களும் மூலப்பொருள்களும் கிடைக்கவேண்டும். சுருக்கமாகக் கூறின், ஒரு நாட்டின் வலிமைக்கு அடிப்படையானது அந் நாட்டின் செல்வம்தான்.

கட்டுப்பாட்டின் அவசியம்

ஒரு நாடு வலிமை வாய்ந்ததாக இருப்பதற்கு இவையனைத்தும் அவசியமென்றால், இவற்றை நிச்சயமாகப் பெறுவதற்குச் சிறந்த வழி என்ன ?

இவை அனைத்தும் ஏதோ தற்செயலாகக் கிடைக்குமென்றோ, அல்லது தனி நபர்களின் முயற்சியின்றிக் கிடைக்குமென்றோ மெர்க்கன்டலிச அரசியல் அறிஞர்கள் கருதவில்லை. தனி நபர்களின் நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்தவேண்டும். அரசிற்குக் கீழ்ப்பட்டவர்களாயும், தேசிய வலிமையை எப்படியும் பெற வேண்டுமென்ற குறிக்கோளுக்கு இசைந்தவர்களாயும் அவர்கள் இருக்கவேண்டும். பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தவேண்டிய அவசியத்திற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது, வேறு எந்தக் கொள்கையிலும் யாருக்கும் அனுபவம் கிடையாது என்பதாகும். இடைக்காலத்திலெல்லாம் கைவினைஞர் களின் உற்பத்தி முறைகளையும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களின் தரத்தையும் தொழில் கில்டுகள் மேற்பார்வை யிட்டதுமட்டுமன்றிக் கட்டுப்படுத்தியும் வந்தன. தாம் விரும்பும் தொழிலைச் செய்வதற்கு வெகு சிலருக்கு மட்டுமே உரிமை இருந்தது. பெரும்பாலானோர் தலைமுறை தலைமுறையாகத் தம் முன்னோர்கள் செய்துவந்த தொழிலையே மேற்கொள்ள வேண்டி யிருந்தது. வியாபாரம்கூடப் பொருமையின் காரணமாக வெகுவாய்க் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறாக, பொருளாதாரச் செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் மெர்க்கன்டலிசக் காலத்தில் வாழ்ந்த அரசியல் அறிஞர்களுக்குமட்டும் தோன்ற வில்லை; இது பரம்பரைப் பழக்கத்திற்கும் ஒத்திருந்தது.

மெர்க்கன்டலிசத் தத்துவத்தின் சாரத்தைக் கூறுவதாயின், தேசிய வலிமையை அடையும் குறிக்கோளுக்கு முதலிடம் கொடுத்து நாட்டின் செல்வத்தை நிச்சயமாக அதிகரிக்கவேண்டு மென்ற விருப்பத்திற்கிணங்கப் பொருளாதார வாழ்வைக் கட்டுப் படுத்தும் கொள்கையினைக் கொண்டதுதான் மெர்க்கன்டலிச மாகும் எனக் கூறலாம்.

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகள் முழுவதும் ஐரோப்பிய அச்சகங்களிலிருந்து வெளியான ஏராளமான துண்டு வெளியீடு கள், நூல்கள் ஆகியவற்றில் இக் கண்ணோட்டம்தான் காணப் பட்டது. எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலும், குறிப்பாக, அக்காலத்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளிலும் மிகுந்த அக்கறை காட்டினர். இவைபற்றிய வாதங்களில் தலை

சிறந்த வணிகர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க நிதி ஆலோசகர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகிய எல்லோருமே தீவிரமாகப் பங்குகொண்டனர். இவ்வாறு பல்வேறு துறைகளிலுமிருந்த எழுத்தாளர்கள்தாம் பிற்பாடு மெர்க்கன்டலிஸ்டுகள் என அழைக்கப்பட்டனர். மெர்க்கன்டலிசக் கொள்கையின் சாரமாக நாம் மேற்கூறிய கருத்துகளைக்கொண்ட விவரங்களில் அவர்களுக்குள் வேறுபாடுகள் இருந்தன என்பது உண்மை. எனினும், அக் கருத்துகள் பொதுவாக எல்லோரிடமும் காணப்பட்டன. இவ்வாறு ஒன்றித்த கருத்துகளை அவர்கள் கொண்டிருந்ததில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. ஏனெனில், அவர்களின் எடுகோள்கள் (assumptions) அக் காலத்தின் உலகச் சூழ்நிலையை ஆதாரமாகக் கொண்டவை; அதோடு, ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாதலால், அவர்கள் எல்லோரும் ஒரே கண்ணோட்டத்தில் காணமுடிந்தது.

வாணிபநிலைக் கோட்பாடு (The Balance-of-Trade Theory)

நாட்டின் வலிமையைப் பெருக்குவதன் குறிக்கோளிலும், அக் குறிக்கோளை அடைவதற்கு ஏராளமான செல்வம்தான் சிறந்த சாதனம் என்பதிலும், அச் செல்வத்தைப் பெறுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுதான் சிறந்த வழி என்பதிலும் மெர்க்கன்டலிஸ்டுகள் ஒரேவிதக் கருத்தைக் கொண்டிருந்தனர். அதேபோல, நமது முக்கிய கவனத்திற்குரிய பன்னாட்டு வாணிபத்திலும் அவர்கள் பொதுவானதொரு கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். அயல்நாட்டு வாணிபத்தில் சாதகமான நிலையை, அதாவது, இறக்குமதியைக் காட்டிலும் ஏற்றுமதியின் மதிப்பு உயர்வாயிருக்கும் நிலையை அடைந்தால்மட்டுமே ஒரு நாடு இலாபமடைய முடியும் என்று அவர்களின் கோட்பாட்டைச் சுருக்கமாகக் கூறலாம். இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாயிருந்தால், அவ்வதிகப்படியான ஏற்றுமதிக்கென்று பொன்னும் வெள்ளியும் கிடைப்பதன் வழியாக இலாபம் கிடைக்கிறது. எனவே, இவ் விலையுயர்ந்த உலோகங்களை அல்லது செல்வத்தை அடைவதுதான் ஒரு நாடு செல்வமிக்க நாடாவதற்குரிய வழியாகும். தங்கச் சுரங்கமும் வெள்ளிச் சுரங்கமும் இல்லாத நாட்டிற்கு வேறு எந்த வழியும் கிடையாது.

சாதகமான இவ் வாணிபநிலைக் கோட்பாடு, விலையுயர்ந்த உலோகங்கள்தாம் எல்லாவற்றையும்விட முக்கியமானவை என்ற பற்றுக்கோளை (conviction) ஆதாரமாகக்கொண்டது என்பது தெளிவாகிறது. மற்ற எல்லாவற்றையும்விடப் பொன்னும் வெள்ளியும்தாம் செல்வத்தின் இலக்குகளென மெர்க்கன்ட

லிஸ்டுகள் கருதினர். 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இங்கிலாந்தின் மெர்க்கன்டலிஸ்டுகளில் ஒருவரான திரு. கிளமென்டு ஆம்ஸ்டிராங் (Clement Armstrong) என்பார் 'ஏராளமான வணிகர்களையும் வாணிபச் சரக்குகளையும்விட (merchandises) ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் கொண்டிருப்பதுதான் ஒரு நாட்டிற்கு நல்லது' என வலியுறுத்திக் கூறியுள்ளார். இவருக்கு நூறாண்டுகளுக்குப்பின் எழுதிய ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த திரு. மொன்கிரெடியென் (Monchrētien) என்பவர், 'பொன்னையும் வெள்ளியையும் கொண்டு தான் நாம் வாழ்கிறோமேயன்றி, மூலப்பொருள்களில் நாம் வாணிபம் செய்வதாலன்று'[4] என்று கூறினர்.

பொன்னுக்கும் வெள்ளிக்கும் முக்கியத்துவம் ஏன் ?

இன்று நாம் அவ்வாறு கருதுவதில்லை. மக்களின் விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய ஏராளமான பொருள்களும், அவற்றைவிட முக்கியமாக அவைகளை இடைவிடாது உற்பத்தி செய்வதற்குத் தேவையான சாதனங்களும்தாம் ஒரு நாட்டின் முக்கியமான செல்வமேயன்றி, நாட்டின் மொத்தச் செல்வத்தில் சிறிதளவு பங்குகொள்ளும் பொன்னும் வெள்ளியுமல்ல என்பதை நாம் அறிவோம்.

மேலும், பன்னாட்டு வாணிபத்தின்மூலம் கிடைக்கும் வருவாய், பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியின் வழியாகக் கிடைக்கும் பலன்களைச் சார்ந்ததேயன்றிப் பொன்னும் வெள்ளியும் வந்து குவிவதையன்று என நாம் கருதுகிறோம். ஒரு நாடு இறக்குமதி செய்யும் பொருள்களைத் தானே உற்பத்தி செய்வதைவிட, அவற்றைப் பிற நாடுகளிடமிருந்து மலிவாகப் பெறுவதன்மூலமே நன்மை அடையமுடிகிறது. எனவே, சுயதேவையைப் பூர்த்தி செய்வதைக்காட்டிலும் பிற நாடுகளோடு வாணிபம் செய்தால், அதன் உண்மை வருவாய் (real income) அதிகரிக்கும்.

மெர்க்கன்டலிஸ்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அளவிற்கு மட்டில்லா நிலைக்குப் போகக் காரணம் என்ன? ஓர் அறிவியல் இளமைப் பருவத்திலிருக்கும்போது, துல்லியமற்ற சொற்களைப் பயன்படுத்தியது இதற்கு முக்கியமான காரணமாயிருக்கலாம். இன்றுகூடப் பொருளாதாரத்தில் இவ்விதத் தொல்லைகள் உள்ளன. 'செல்வம்' என்னும் சொல், பொன், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் உட்படப் பல

[4] Cited in Heckscher, op. cit., p. 187.

பொருள்களை உள்ளடக்குகிறது. எனினும், மெர்க்கன்டலிஸ்டு களின் காலத்தில் பொன்னிலும் வெள்ளியிலும்மட்டுமே பணப் புழக்கமிருந்தது. இன்றுள்ள காகிதப் பணமோ, பாங்குச் செலா வணியோ அக் காலத்தில் இல்லை. செல்வத்தைப் பணத்தால் அளவிடுவதாலும், செல்வத்திற்கும் பணத்திற்கும் பரிவர்த்தனை நடந்ததாலும் (குறிப்பாக, மெர்க்கன்டலிஸ்டுகளில் பலர் வணிகரா யிருந்ததால்), அவர்களுக்கு ஏற்பட்ட குழப்பத்தை நாம் புரிந்து கொள்ளக்கூடும்.

பொன்னுக்கும் வெள்ளிக்கும் எல்லாவற்றையும்விட முக்கி யத்துவ நிலை கொடுத்ததற்குச் 'செல்வம்' என்னும் சொல்லின் பொருளில் ஏற்பட்ட குழப்பம்மட்டுமன்றி, இதர காரணங்களும் உண்டு. பொன்னும் வெள்ளியும் நீடித்திருக்கக்கூடியவைமட்டு மன்றி, சேகரித்துவைப்பதற்கு அல்லது முடக்கிவைப்பதற்கு (hoarding) வசதியாயுமுள்ளன. செல்வம் பெருகுவதற்குச் சேமிப்பு ஓர் உபாயம் என்று திடமாக நம்பினர்; ஆனால், சேமிப்பையும் முடக்குதலையும் அவர்கள் ஒன்றெனக் கருதியதால், பொன்னும் வெள்ளியும்தாம் அவர்கள் சிந்தனையில் முக்கியமானவையாகப் பட்டன. எல்லாவற்றையும்விடப் பணத்தைக்கொண்டு போருக்கு வேண்டிய பண்டங்களையும், படைக்கருவிகளையும், படையினரின் பணிகளையும் வாங்க முடிந்ததால், எப்போதும் போர் நடத்திக் கொண்டோ அல்லது போருக்குத் தயார் செய்துகொண்டோ இருந்த நாடுகளுக்குப் பணம்தான் முக்கியமானதாகப் பட்டது.

பொன்னும் வெள்ளியும்தாம் செல்வத்துளெல்லாம் தலை யானவை என்ற மெய்க்கோளை (premise) வைத்துப் பார்க்குமிடத்து, வாணிபநிலைக் கோட்பாடு வாதப்பொருத்தமுடையதாய் மட்டு மன்றி, மெர்க்கன்டலிசக் கருத்தின் பொதுத் தத்துவங்களுக்கு மிகப் பொருத்தமாயும் அமைகிறது. அரசு வலிமை மிக்கதாயிருக்க வேண்டுமாயின், அவ் வலிமைக்குச் செல்வம் முக்கியப் பாது காப்பாயும், அச் செல்வத்துள் பணம்தான் மிகச் சிறந்ததாயும் இருந்தால், நாட்டின் அமைச்சர்கள் பொன்னும் வெள்ளியும் தம் நாட்டில் வந்து குவிவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் கையாளவேண்டும்.

வாணிபநிலைக் கோட்பாட்டில் ஓர் உண்மை அம்சம்

சாதகமான வாணிப நிலையில் ஏற்படும் குறுங்காலப் பண விளைவுகளைப் (short-run monetary effects) பொறுத்தவரை, மெர்க்கன்டலிஸ்டுகளின் பொதுவான கருத்துதான் அவர் களுக்குப்பின் தோன்றிய கிளாசிக்கல் பொருளாதார அறிஞர்களின்

கருத்தைக்காட்டிலும் உண்மைக்கு ஒப்பாகும். இன்று நாம் அறிந்துள்ளதுபோல், வேலையின்மை அதிகமாயும், முதலீடு செய்வதற்குரிய ஊக்கம் குறைவாயுமிருக்கும்போது, வட்டி வீதத்தைக் குறைப்பது முதலீட்டையும் வேலை வாய்ப்பையும் அதிகரிக்கத் தூண்டலாம். மேலும், குறுங்காலத்தின்போது பண அளிப்பை அதிகரிப்பது பொதுவாக வட்டி வீதம் குறைவதற்கு ஏதுவாயிருக்கக்கூடும்.

பண அளிப்பிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பொதுவாக எல்லா மெர்க்கன்டலிஸ்டுகளுமே அறிந்திருந்தனர். ஆனால், அத் தொடர்பிற்குக் காரணம் என்ன என்பதை அவர்களில் கூர்மையான அறிவு பெற்ற ஒருசிலர் மட்டுமே அறிந்திருந்தனர்.[5] ஏராளமான பணம் என்றால், குறைந்த வட்டி வீதம், விரிவான முதலீடு, விரிவாகும் வேலை வாய்ப்பு என்று பொருள். பற்றுக்குறைப் பணம் என்றால் இதற்கு நேர்மாறான விளைவுகள் என்று அர்த்தம். சாதகமான வாணிப நிலையை விரும்பியதற்கு—சிறப்பாக உலோக நாணயம் புழக்கத்திலிருந்த காலத்தில்—மிகப் பொருத்தமான மற்றொரு காரணம் உண்டு.[6]

இருப்பினும், கணிசமான அளவு வேலையின்மை நிலவும் காலத்திற்குமட்டுமே இக் காரணம் பொருத்தமாயிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. எல்லாத் தொழிலாளிகளுமே வேலையிலிருக்கும்போது, பண அளிப்பை அதிகரிப்பதன்மூலம் வட்டி வீதத்தைக் குறைப்பது வேலை வாய்ப்பைப் பாதிக்காமல் விலைகளைத்தான் குறிப்பாகப் பாதிக்கும். இவ் உண்மையைப் பிற்பாடு நாம் ஆய்வோம்.

வாசகர்களில் சிலர் இக் கேள்வியைக் கேட்கலாம். பணத்தின் அளிப்பை அதிகரிப்பதன்மூலம் வட்டிவீதத்தைக் குறைக்கவும், வேலை வாய்ப்பை ஊக்குவிக்கவும் முடியுமாயின், சாதகமான வாணிப நிலையின் வழியாக உலோக நாணயத்தின் அளிப்பை விரிவுபடுத்தச் சிக்கல்கள் நிறைந்த வழிவகைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, காகிதப் பணத்தையும் பாங்குச் செலாவணியையும் ஏன் விரிவாக்கக் கூடாது? இக் கேள்வியைத்தான் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பிந்திய

[5] Heckscher, op. cit., p. 200.

[6] இதுபற்றிய முழு விவரங்களுக்கு J. M. Keynes எழுதிய **'The General Theory of Employment, Interest and Money'** என்ற நூலில் 23ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்; Copyright 1936 by Macmillan & Co., London.

மெர்க்கன்டலிஸ்டுகள் எழுப்பிப் பின்னர் சாதகமான வாணிப நிலைக் கோட்பாட்டை அவர்கள் கைவிட்டனர். பணத்தின் பணியைப்பற்றியும், பணத்திற்கும் இதர வகைச் செல்வத்திற்கு முள்ள தொடர்புபற்றியும் தெளிவான கருத்துகள் இருந்திருந் தால், அக் காலத்திற்கு முன்பே இக் கோட்பாட்டைப் புறக்கணித் திருப்பர்.

வாணிபநிலை பின்தொடர்புகள் (Balance-of-Trade Corollaries)

சாதகமான வாணிப நிலையை அடைவதுதான் பொருளா தாரக் கொள்கையின் முக்கியக் குறிக்கோள் என்னும் அடிப் படையான பொருளாதாரக் கோட்பாட்டிலிருந்து பல பின் தொடர்புகள் வந்தன. கூடுமானவரை ஏற்றுமதிப் பொருள் களின் மதிப்பு உச்சமாக இருக்கவேண்டும். அதாவது, கூடு மான அளவு அதிகப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதைமட்டுமன்றி, மற்றவைகளைக்காட்டிலும் விலையுயர்ந்த பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதையும் இது புலனுக்கியது. இதனுல்தான் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய் வது பழிக்கப்பட்டது; அவற்றை உள்நாட்டிலேயே வைத்து உற்பத்தி செய்து முடிவுப் பொருள்களாக ஏற்றுமதி செய்வதற்காக எல்லா வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டன. அடுத்து, கூடுமான வரை இறக்குமதியைக் குறைக்கவேண்டும். முடிவுப் பொருள் களைவிட அவற்றின் மூலப்பொருள்களின் விலை குறைவாயிருக்கு மாதலால், முடிந்தவரை மூலப்பொருள்களையே இறக்குமதி செய்யவேண்டும். முடிவுப் பொருள்களை, குறிப்பாகப் போகப் பொருள்களை இறக்குமதி செய்வதை முற்றிலும் தடை செய்ய முடியாவிட்டாலுங்கூட, கடுமையாகக் கட்டுப்படுத்தவாவது வேண்டும்.

இக் கருத்துகளைப்பற்றிய தெளிவும் சுருக்கமுமான விளக் கத்தை ஒருவேளை ஆஸ்திரிய மெர்க்கன்டலிஸ்டான வான் ஹார்னிக் (Von Hornick : 1638—1712) அவர்களின் நூலில்தான் காணலாம்.

‘ மூலப்பொருள்களைக்காட்டிலும் முடிவுப் பொருள்களின் விலை இரண்டு, மூன்று, பத்து, இருபது, ஏன் நூறுமடங்குகூட அதிகமாயிருப்பதால், இயற்கையான நிலையில் ஒரு நாட்டிலுள்ள பொருள்களையெல்லாம் அப்படியே பயன்கொள்ள முடியா தாகையால், அவற்றை அந் நாட்டிலேயே வைத்து உற்பத்திக்குப் பயன்படுத்தவேண்டும்........’

'ஒரு நாட்டில் வாழ்வோர் தம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைக்கொண்டே வாழவும், உள்நாட்டுப் பொருள்களி லிருந்தே தமது போகப் பொருள்களைப் பெறவும், கூடுமான வரை அயல் நாட்டுப் பொருள்களின்றி வாழவும் முற்சி செய்ய வேண்டும் (வேறு வழியே இன்றி மிக அவசரமாகத் தேவைப் பட்டால் அல்லது தேவை இல்லையெனின், எல்லோரும் பயன் கொள்ளும் அல்லது இந்திய வாசனைப் பொருள்கள் உதாரண மாக இருப்பதுபோல் தவிர்க்க முடியாதபடி பாழாக்கும் பொருள்களைத் தவிர).........'

'இவ்வகை வெளிநாட்டுப் பொருள்கள் அப்படியே தேவைப் பட்டாலும், அவற்றை உள்நாட்டில் முடிவுப் பொருள்களாக ஆக்கவும், அதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு ஊதியம் கிடைக்கும்படி செய்யவும் கூடுமான முறையில் முடிவுபெருத நிலையில் அவற்றை இறக்குமதி செய்யவேண்டும்.........'

'உள்நாட்டிற்குத் தேவையில்லாத பொருள்களை எவ்வளவு தேவையோ அவ்வளவிற்கு அந்த அயல்நாட்டுக்காரர்களுக்கு முடிவுப் பொருள்களாகப் பொன்னுக்கும் வெள்ளிக்கும் விற்பதற்கு வேண்டிய வாய்ப்பினை எப்போதும் தேடவேண்டும்; இதற்காக எந்தக் கோடியிலிருந்தாலும், நுகர்ச்சியைத் தேடி அதை எல்லா வழிகளிலும் வளர்க்கவேண்டும்.........'

'மிக முக்கியமான காரணத்திற்காக இருந்தாலொழிய, போதுமான அளவில், பொருத்தமான தரத்தில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை எந்தச் சூழ்நிலையிலும் இறக்குமதி செய்ய அனுமதிக்கக்கூடாது. இவ் விஷயத்தில் அயல் நாட் டவர் நண்பர்களாயிருந்தாலும் சரி, எதிரிகளாயிருந்தாலும் சரி, அல்லது உறவினர்களாயிருந்தாலும் சரி, அல்லது நேசமானவர் களாயிருந்தாலும் சரி, அவர்களுக்கு யாருமே இரக்கமோ ஒத் தாசையோ காட்டக்கூடாது. ஏனெனில், அது என்னுடைய சொந்த பலவீனத்தையும் அழிவையுமே உள்ளடக்குவதால், நட் பெல்லாம் முறிந்துவிடுகிறது. அயல் நாட்டுப் பொருள்களைக் காட்டிலும் உள்நாட்டுப் பொருள்கள் விலையுயர்ந்தனவாயிருந்தா லும் சரி, அல்லது தரக்குறைவாயிருந்தாலும் சரி, இது நிலைக்க வேண்டும். ஏனெனில், உள்நாட்டிலிருந்து வெளியேறும் ஒரு பண்டத்திற்கு ஒரு டாலர் கொடுப்பதைக்காட்டிலும், உள் நாட்டிலேயே இருக்கும் பண்டத்திற்கு இரண்டு டாலர்கள்

கொடுப்பது மேல். இது விவரம் தெரியாதவர்களுக்குப் பெரு வியப்பைத் தரக்கூடியதாக இருந்தாலும் இருக்கலாம்.'[7]

உனக்கு அயல் நாட்டவன் எவ்வளவு செலுத்த முடியுமோ அவ்வளவு செலுத்தும்படி செய்; அவனுக்கு நீ எவ்வளவு குறை வாய்ச் செலுத்த முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் செலுத்து. இவ் விதி வாணிபம் செய்யப்படும் பொருள்களுக்குமட்டுமன்றி, எல்லா வகைப் பன்னாட்டுச் செலுத்துதல்களுக்கும் பொருந்தும். கட்டண வருவாய், இன்சூரன்ஸ் கட்டணம், வெளிநாட்டுத் தூதரகச் செலவு, படைச்செலவு ஆகியவைபோன்ற 'புலனாகா இனங்கள்' (invisible items) அக் காலத்திலேயே அறியப்பட்டிருந்தன. எனவே, ஒரு நாட்டின் சாதகமான வாணிபநிலையைக் கணக் கிடும்போது இவற்றையெல்லாம் சேர்க்கவேண்டுமென்ற அவசி யத்தை முக்கியமான மெர்க்கன்டலிஸ்டுகள் அனைவரும் வற்புறுத் தினர். எனவே, மிச்ச இருப்பு (balance) என அவர்கள் கூறிய போது, வாணிப இனங்களில் மட்டுமன்றி எல்லாவகைப் பன்னாட்டுச் செலுத்துதல்களிலும் ஏற்படும் மிச்ச இருப்பை மனத்தில் கொண்டனர். எடுத்துக்காட்டாக, மன் (Mun) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :

'நமது சொந்தக் கப்பல்களிலேயே நாம் ஏற்றுமதி செய்யும் போது, நமது ஏற்றுமதியின் மதிப்பு மிக உயர்வுறும்; எவ்வா றெனில், நாம் அவர்களிடமிருந்து பணம் பெறும்போது நமது சரக்குகள் இங்கு என்ன விலை பெறுமோ, அவ் விலையைமட்டுமன்றி வணிகர்களின் இலாபத்தையும், இன்சூரன்ஸ் கட்டணத்தையும் கடலுக்கப்பால் அச் சரக்குகளைக் கொண்டு செல்வதற்குரிய ச்ரக்குக் கட்டணத்தையும் சேர்த்துப் பெறுகிறோம்.'[8]

செயல்முறையில் மெர்க்கன்டலிசம் : நடைமுறைக் கொள்கைகள்

(Mercantilism in Action : Concrete Policies)

அரசின் வளமைக் கோட்பாட்டிலிருந்தும், அக் கோட்பாட்டி லிருந்து வருவிக்கப்பெறும் வாணிபநிலைக் கோட்பாட்டிலிருந்தும் மெர்க்கன்டலிசத்தின் நடைமுறைக் கொள்கைகள் புலனாகின்றன.

[7] Phillip W. Von Hornick, 'Austria Over All If She Only Will' reprinted in Arthur Eli Monroe, '**Early Economic Thought,**' pp. 223–25; Copyright 1927 by Harvard University Press, Cambridge, Mass.

[8] அதே நூல், பக்கம் 174.

வாணிபக் கட்டுப்பாடு

பொன்னும் வெள்ளியும் இடைவிடாமல் வந்துகொண்டேயிருப்பதற்கு வாணிபம்தான் முக்கியமான வழி என்று கருதினுல், தன்னியல்பாகவே அது நடைபெறுமாறு விட்டுவிட முடியாது; எப்போதும் அதை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்தவும் வேண்டும். வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வல்லமையான ஒரு செயற்களக் கருவியை மெர்க்கன்டலிஸ்டுகள் அமைத்தனர்; சில்லறையானது அல்லது எரிச்சலூட்டுவது என்றுகூடப் பார்க்காமல், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் இறக்குமதியைக் குறைப்பதற்கும் வேண்டிய எல்லா உபாயங்களையும் மேற்கொண்டனர்.

பொன், வெள்ளிப் பற்றுக் கோட்பாடு (Bullionism)

மிகப் பழமையானவும் திருத்தமற்றவுமான மெர்க்கன்டலிசக் கட்டுப்பாடுகளில் பொன் கட்டியையும் வெள்ளிக் கட்டியையும் ஏற்றுமதி செய்யாமலிருக்கும்படி நேரடியாகத் தடை செய்வது ஒன்ருகும். உலோகப் பற்றுக் கோட்பாடு எனப் பின்னர் அழைக்கப்பட்ட இக் கோட்பாட்டிற்கு ஆதாரமான பகுத்தறிவாய்வு மிகவும் எளிமையானதுமட்டுமன்றி, வெளிப்படையானதும் ஆகும். பொன்னும் வெள்ளியும் நாட்டிற்குள் வந்தால், அவற்றைப் பத்திரமாக வைத்திருக்கவேண்டும்.

பொன், வெள்ளிக் கட்டுப்பாடுகள் இடைக்காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன; ஆனுல், 16, 17 ஆம் நூற்ருண்டுகளில்தான் அவை பொதுவாக வழக்கில் வந்தன. அமெரிக்கக் கண்டங்களிலிருந்து ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் பெற்ற ஸ்பெயின் நாடுதான், இக் கட்டுப்பாடுகளை மிக நீண்ட காலமாய்க் கண்டிப்பான முறையில் வழக்கில் கொண்டிருந்தது. பொன்னையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்வோருக்கு மரண தண்டனை விதித்தது; அவர்களைக் காட்டிக்கொடுப்போருக்கு வெகுமதி வழங்கியது. அயல் நாட்டவர்கள் இவற்றை வாங்கக்கூடாதெனத் தடை விதித்தது. இருந்தபோதிலும், பெருகிவந்த அதன் காலனி மக்களுக்கு, ஏன் உள்நாட்டு மக்களுக்குங்கூடத் தேவையான அளவு பொருள்கள் இல்லாததாலும், அவற்றை உற்பத்தி செய்வதற்குரிய திறம் இல்லாத அளவிற்கு அதன் பொருளாதார நிலை நலிவுற்றிருந்ததாலும், நாட்டில் குவிந்துகொண்டிருந்த பொன்னும் வெள்ளியும் பொருள்களின் விலைவாசிகளை மிக உயர்த்தின. இந்நிலையில் அவற்றை இறக்குமதி செய்வது அதிக இலாபகரமானதாயிற்று; அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதும் சர்வசாதாரண

மாயின. எனவே, இவ் வுலோக நாணயம் கள்ளத்தனமாக அயல் நாட்டவருக்குச் சென்றது. இறுதியாக, பொன், வெள்ளி ஏற்றுமதிக்கு ஸ்பெயின் வரையறை செய்தது. இங்கிலாந்திலும் ஹாலந்திலும் 16ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே இவ்வுலோகக் கட்டுப்பாடுகள் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டன.

வாணிபச் சர்வாதீனம்

குறிப்பிட்ட பகுதிகளில் அயல் நாட்டவர் வாணிபம் செய்ய முடியாதபடி கொண்டுவந்த திட்டங்கள்தாம் மெர்க்கன்டலிசத் திட்டங்களில் மிக முக்கியமானவையாகும். கிழக்கிந்திய நாடுகளோடு நடைபெற்றுவந்த வாணிபத்தில் சர்வாதீனம் பெற வேண்டுமென்பதை 16ஆம் நூற்றாண்டு முழுவதும் தனது அடிப்படைக் கொள்கையாகப் போர்ச்சுகல் கொண்டிருந்தது. இதற்குக் குறுக்கே வந்த பிற நாடுகளின் கப்பல்களைப் பிடிக்கவும், நாசமாக்கவும்கூடத் துணிந்துவிட்டது. மேலும், இவ் வாணிபத்தைத் தனக்கென்று அரசர் சொந்தமாக்கிக்கொண்டார். அதோடு, மற்ற வணிகர்களின் வாணிபத்திற்கென அரசருடைய கப்பல்களில் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்ததால், அவர்கள் சிறிய அளவில்தான் வாணிபம் செய்ய முடிந்தது.

அடுத்து, தனது வாணிபத்தை அரசர் கையில் ஒப்படைக்காவிட்டாலும், தனது காலனிகளோடு நடைபெற்ற வாணிபத்தைச் சர்வாதீனமாக்கிக்கொள்ள வேண்டுமென ஸ்பெயின் நாடுகூட முயன்றது. தனி வணிகர், ஸ்பெயின் நாட்டில் பொருள்களை வாங்கி, அவற்றைக் காலனிகளிலிருந்த தனது பதிலாளுக்குக் (agent) கப்பலேற்றினர். அப் பதிலாள் அவற்றைக் காலனியில் விற்று, அங்குக் கிடைக்கக்கூடிய வாசனைப் பொருள்களையும் இதர பண்டங்களையும் வாங்கி ஸ்பெயின் நாட்டிலிருந்த தனது முதலாளிக்கு அதே கப்பலில் அனுப்பினுர். எனினும், இவ் வாணிபமனைத்தும் அரசருக்குச் சொந்தமான கப்பல்களில்தான் நடைபெற வேண்டியிருந்தது. வணிகர்களின் நடவடிக்கையை அரசர் மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்திவந்தார். இக் கட்டுப்பாட்டில் மிகக் கண்டிப்பாக இருப்பதற்கென்று காலனி வாணிபம் அனைத்தும் ஸ்பெயின் நாட்டிலுள்ள செவில் (Seville) துறைமுகத்தின் வழியாகவும், அமெரிக்காவிலுள்ள ஒருசில துறைமுகப் பட்டினங்கள் வழியாகவுமே நடைபெறுமாறு செய்தார். கடற்கொள்ளைக்காரர்களும், துணிச்சலாக உரிமையின்றி வணிகம் செய்வோர், அல்லது அயல் நாட்டவரும் திட்டமிட்டுத் தமது கப்பல்களைத் தாக்காமல் இருக்கவேண்டுமென்பதற்காக, 1560ஆம் ஆண்டிற்குப்பின் ஆண்டிற்கு இரு முறைமட்டும் வியாபாரக்

கப்பல்களையெல்லாம் இணைத்துக் கூட்டமாக அனுப்பினர். அவற்றைப் பாதுகாக்கப் போர்க்கப்பல்களும் கூடவே அனுப்பப் பட்டன. மேற்கிந்தியத் தீவுகளை அடைந்ததும், பெரிய சந்தை களில் தம் சரக்குகளை விற்றுவிட்டு, பின் தாய்நாட்டிற்கு எடுத்துச் செல்லவேண்டிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு அவை திரும்பின.

ஓரளவிற்குக் கள்ளக் கடத்தல் இருந்தபோதிலும், இந்த முறை 16ஆம் நூற்றாண்டில் நல்லபடியாகச் செயற்பட்டது. ஆனால், 17ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் நலிந்து கொண்டே சென்றதால், இம்முறை கைவிடப்பட்டது. அளவுக்கு மிஞ்சி ஆடுகளை மேய்த்துவந்ததால் நிலங்கள் அரிக்கப்பட்டுப் பாழாயின; உழைப்பில் உயர்ந்த குடிமக்களும் திறம்பெற்ற கைவினைஞர்களுமான யூதர்களும் மூர்களும் நாடுகடத்தப்பட்ட னர்; வெளிநாடுகளுடன் போர் நடத்துவதற்காக அதிக வரி விதிக்கப்பட்டதாலும், பணவீக்கம் செய்யப்பட்டதாலும், அதன் பொருளாதார நிலை குலைந்தது. இந் நிலையில் காலனி மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய இயலவில்லை. இதனால் டச்சு, ஃபிரெஞ்சு, ஆங்கிலேய வணிகர்களெல்லாம் ஸ்பெயின் நாட்டுக் காலனி வாணிபத்தின் பெரும் பகுதியைச் சட்ட விரோத மாகக் கைப்பற்றினர். இதற்குக் காலனிகளிலிருந்த கவர்னர்களும் உடந்தையாயிருந்தனர்.

டச்சு மெர்க்கன்டலிசம் (1602-ல் நிறுவப்பட்டது) கிழக்கிந் தியக் கம்பெனியின் சர்வாதீனத்தின் வழியாகச் செயற்பட்டது. அதன் அதிகாரிகள் ஜாவா, அம்போய்னா (Amboina), இன்னும் இதர கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகக் களங்களை (trading posts) ஏற்படுத்தி, இதர நாட்டு வணிகர்கள் அங்கு வியாபாரம் செய்ய முடியாதபடி அவர்களையெல்லாம் விரட்டியடித்துவிட்டு, மறுபடியும் அவர்கள் அங்கு வரமுடியாதபடி பார்த்துக்கொண்டனர். இவ் இந்தியத் தீவுகளைத் தமது சொந்த வியாபார ஸ்தலங்களாகக் கொண்டதுமட்டுமன்றி, அக் கம்பெனி சர்வாதீனத்தைப் பெற இதர உபாயங்களையும் மேற்கொண்டது. காப்பி, மிளகு, சாதிக் காய், இலவங்கம், அவுரிபோன்ற சில பண்டங்கள் குறிப்பிட்ட அளவுமட்டும் உற்பத்தியாகும் முறையில், சில இடங்களில்மட்டும் அவை பயிராக அனுமதித்துவிட்டு, இதர இடங்களிலெல்லாம் அவற்றை நாசமாக்கிவிட்டனர். உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மிகக் குறைந்த விலையைக் கொடுப்பதற்கென்று தனது பேரம் பேசும் அதிகாரத்தைப் பயன்படுத்தியது. இவ்வாறாக, வேண்டு மென்றே திட்டமிட்டு இப் பண்டங்களைப் பற்றாக்குறையாகவும் மலிவாகவும் செய்து, அவற்றை ஐரோப்பிய நாடுகளில் மிக உயர்ந்த

விலைகளில் விற்றது. எனவே, வரலாற்றிலேயே அதிக இலாப ஈவு (dividend) கொடுத்த கம்பெனியென்று அது பெயர் பெற்றதில் விந்தை ஒன்றுமில்லை.

நேர்முக வாணிபக் கட்டுப்பாடு

தமது வர்த்தகச் சர்வாதீனங்களின் வழியாகப் பல நாடுகள் தமக்குத் தேவையான பொருள்களைத் தம் பேரரசுப் பகுதியிலிருந்து மட்டும் (imperial area) பெற்றும், இதர நாடுகளுக்குத் தேவையான பொருள்களை மலிவாக வாங்கி கிராக்கியாக விற்றும் தம் வாணிப நிலை மேம்படுமாறு செய்துவந்தன; அதோடு, ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் பல நேரடியான கட்டுப்பாடுகளையும் புகுத்தின. ஹாலந்து நாடு நீங்கலாக, இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளனைத்தும் இவ் வழிகளை மேற்கொண்டன. எனினும், இவ் வழிவகைகள் இதர நாடுகளைவிட இங்கிலாந்தில்தான் அதிகமாயும் முதிர்ச்சி நிலையிலும் இருந்தன.

எவ்வித உதவியுமின்றி, அயல் நாடுகளுடன் போட்டியிட முடியாத நிலையிலிருந்த பிரிட்டிஷ் ஏற்றுமதித் தொழில்கள், பல வழிகளில் உதவிபெற்றன. ஏற்கெனவே அவை மூலப்பொருள்களுக்கென்று உள்நாட்டு வரியோ வெளிநாட்டு வரியோ செலுத்தியிருந்தால், குறைந்தபட்சம் அவ் வரிப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேலும், உதவி தேவைப்பட்டால் அரசாங்கப் பணவுதவி (subsidy) எளிதாகப் பெறமுடிந்தது. ஏற்றுமதிப் பொருள்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்கென்று கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்வது தடுக்கப்பட்டது. ஏனெனில், இக் கச்சாப் பொருள்கள் உள்நாட்டிலேயே ஏராளமாக இருந்தால்தான் அவற்றை மலிவாகப் பெறுவதன் வழியாக முடிவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வோருக்கு அனுகூலமாக இருக்கும் எனக் கருதினர். 1700-ல் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் பாதிக்குமேல் ஏற்றுமதி செய்த கம்பள நெசவுத் தொழில் இவ்வகை அனுகூலத்தைப் பெற்றது. ஆடுகள், ஆட்டு ரோமம், கம்பள நூல், கம்பளத்தைச் சுத்தம் செய்யப் பயன்படும் உழமண் ஆகியவை ஏற்றுமதி செய்யக்கூடாத பொருள்களின் பட்டியலில் இடம் பெற்றன. இதற்குரிய சட்டம் மிகக் கெடுபிடியான முறையில் அமலாக்கப்பட்டது. இச் சட்டத்தை முதல் தடவை மீறினால் வலது கை துண்டிக்கப்படவேண்டும்; இரண்டாவது முறை மீறினால் மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றிருந்தது.

இவற்றிற்கிணையாக, ஏற்றுமதியைப் பாதிக்கக்கூடிய இறக்குமதிக்கும் பல தடைகள் விதிக்கப்பட்டன. இங்கிலாந்தில் இறக்கு

மதியான எல்லாப் பொருள்களுக்குமே பளுவான வரி விதிக்கப் பட்டது. சில பொருள்களின்மீதான வரி, அவற்றை இறக்குமதியே செய்யமுடியாத அளவிற்கு உயர்வாயிருந்தன. இங்கிலாந்தின் மிக முக்கியமான தொழில்செய் பொருள்களான கம்பள, பட்டு நெசவுப் பொருள்களின் இறக்குமதி நேரடியாகவே தடைசெய்யப் பட்டது. மாறாக, இவற்றின் கச்சாப் பொருள்களின் இறக்குமதி எவ்வித வரியுமின்றி அனுமதிக்கப்பட்டது. சில பொருள்களின் (முக்கியமாய் அமெரிக்கக் காலனிகளிலிருந்து வந்த அவுரி, கப்பற் பண்டங்கள்) இறக்குமதிக்குப் பணவுதவிகூட அளிக்கப்பட்டது.

இக் கட்டுப்பாடுகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டால், அது குறிப்பிட்டதொரு தொழிலுக்குச் சாதக மாகவே அமைந்திருந்தது. எனவே, ஒவ்வொரு தொழில்துறை யினரும் தத்தம் நன்மையைக் கருதி இக் கட்டுப்பாட்டு முறையை விரிவுபடுத்த முயன்றனர்; எனினும், மெர்க்கன்டலிஸ்டுகளின் பொருளாதாரத் தத்துவத்தின்படி அவை பொது நலனை அதிகரிக்க வும் செய்தன.

வாணிபக் கட்டுப்பாட்டால் தனியார் நலமும் பொதுநலமும் ஒன்றோடொன்று இணைந்துவிடுகின்றன எனக் கூறுகிறது இத் தத்துவம். ஆனால், ஆதம் ஸ்மித் அவர்கள் தடையிலா வாணிபத் தினால்தான் (laissez faire) இவ்விரு நலன்களும் இணைகின்றன என்று பின்னர்க் கூறினார். இவ் விரண்டு கோட்பாடுகளும் ஒரே வினையைக் காட்டும் நேர்மாறான கோட்பாடுகளாகும். ஆனால், மெர்க்கன்டலிசம் அதைச் சாதிக்காது என்பது ஆதம் ஸ்மித்தின் வாதம். அதனுடைய முக்கியக் குறிக்கோளான நாட்டின் வலிமையை அதிகரிப்பதையோ, அல்லது அதன் அடிப்படை எடுகோளான பொன், வெள்ளியின் பெருமுக்கியத்துவத்தையோ அவர் ஒப்புக்கொள்ள மறுத்தார்.

கப்பல் போக்குவரத்து முறை (The Navigation System)

சிக்கலான வாணிபக் கட்டுப்பாட்டு முறை மெர்க்கன்டலிஸ்டு களின் வாணிபநிலைக் கோட்பாட்டிலிருந்து வாதப்பொருத்தத் தோடு பெறப்பட்டதெனின், உள்நாட்டுக் கப்பல் தொழிலை விருத்தி செய்வதற்காகப் பல நாடுகள் கொண்டுவந்த சட்டங்களும் வாதப் பொருத்தமுடையதாகும். ஏனெனில், வாணிபச் செலுத்துநிலையில் ஒரு நாடு கொண்டுள்ள மீதப்பணத்தை, கப்பல் கட்டணம் குறைக் கலாம் அல்லது அதிகரிக்கலாம் என்பதை முன்னரே நாம் பார்த் தோம். ஒரு நாட்டின் பொருளாதார வலிமைக்கு மட்டுமன்றி அந் நாட்டின் படைவலிமைக்கும் கப்பல் துறை முக்கியமான

தாகும். வணிகக் கப்பல்கள், ஏன் மீன்பிடிக்கும் படகுகள்கூடக் கப்பற்படை நடத்துவதற்கு வேண்டிய மாலுமிகளைத் தரமுடியும்; அதோடு போர்க்காலத்தில் உளவு பார்க்கும் கப்பல்களாகவும், பக்கபலக் கப்பல்களாகவும் அவற்றை மாற்றி அமைக்கவும் கூடும்; அல்லது வெளிநாடுகளிலிருந்து வரவேண்டிய பண்டங்களைக் கொண்டுவர அவற்றைப் பயன்படுத்தலாம். எனவே, மெர்க்கன்டலிசக் கொள்கையில் கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் **(Navigation Acts)** ஏராளமாக உள்ளன. தேசிய வலிமைக்கான இத்தகைய விஷயத்தில் முழுக் கவனமும் சிறந்த ஆய்வும் செலுத்திய நாடு இங்கிலாந்துதான். கடலால் சூழப்பட்டிருப்பதால், கடல் சம்பந்தப்பட்ட காரியங்களில் கவனம் செலுத்தப் பழங் காலத்திலிருந்தே அது தூண்டப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

பதினைன்காம் நூற்றுண்டிலேயே கப்பல் போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் நடவடிக்கை எடுத்து, பின்னர்த் தனது காலனி முறை வளர வளரப் பல கட்டுப்பாடுகளை இங்கிலாந்து கொண்டு வந்தது. எனினும், அவை அனைத்தும் பிரபலமான 1651, 1660ஆம் ஆண்டுகளின் கப்பல் போக்குவரத்துச் சட்டங்களில் ஒருங்கிணைக்கப்படுவதற்கும் உறுதிபெறுவதற்கும் இரண்டரை நூற்றுண்டுகளாயின. இச் சட்டங்களைக் கொண்டுவந்ததற்கு முக்கியமான காரணம் உண்டு. அதாவது, 1642-46-ல் நடந்த உள்நாட்டுப் போரில் இங்கிலாந்து தன் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தபோது, பிரிட்டிஷ் கப்பல்களைக்கொண்டு நடத்தி வந்த வாணிபத்தில் டச்சுக்காரர்கள் பெருமளவில் தலையிட்டனர் (படையெடுத்தனர்). எனவே, பிரிட்டனுக்கும், அதன் காலனிகளுக்குமிடையே நடைபெற்ற வாணிபம் கூடுமானவரை பிரிட்டிஷ் கப்பல்களிலேயே நடக்கவேண்டுமென்பதுதான் அச் சட்டங்களின் நோக்கமும் விளைவும் ஆகும்.

உள்நாட்டுக் கடற்கரை வாணிபம், பிரிட்டனுக்கும் அதன் காலனிகளுக்குமிடையே நடைபெற்ற வாணிபம், ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கக் கண்டங்களிலிருந்து பிரிட்டனுக்கோ, அல்லது அதன் காலனிகளுக்கோ கொண்டுவந்த இறக்குமதிப் பொருள் வாணிபம் ஆகியவை அயல்நாட்டுக் கப்பல்களில் நடைபெறக்கூடாது என்ற முறையில் இச் சட்டங்கள் வெற்றி கண்டன. மேலும், பிரிட்டிஷ் கப்பல்கள் பிரிட்டிஷாரால் கட்டப்பட்டவையாயிருக்கவேண்டும் என்றும், அவற்றை இயக்கும் மாலுமிகளில் நான்கில் மூன்று பகுதியினராவது பிரிட்டிஷாராய் இருக்கவேண்டுமென்றும் அவை வலியுறுத்தின. இருந்தபோதிலும், இங்கிலாந்திலிருந்து அதன் காலனிகளல்லாத இதர நாடுகளுக்கு ஏற்றுமதியாகும்

பொருள்களை அயல் நாட்டவர்கள் ஏற்றிச்செல்லத் தடையிருக்கக் கூடாதென உணர்ந்தனர். ஏனெனில், அவ்வாறிருந்தால்தான் இங்கிலாந்து நிறைய பொருள்களை ஏற்றுமதி செய்யமுடியும். இது கப்பல் போக்குவரத்து சர்வாதீனத்தைப்போலவே முக்கியமானதாகும். மேலும், அவ்வாறு அயல்நாட்டுக் கப்பல்கள் இங்கிலாந்தின் துறைமுகங்களுக்கு வரவேண்டுமாயின், அவை சரக்குகளைக் கொண்டுவரவும் அனுமதி அவசியம். இதனால் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்து சரக்குகளை இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்பட்டது. ஆனால், அவை வரும்போது இரட்டிப்புத் தீர்வை கட்டவேண்டும் என்றும், டச்சுக்காரர்களின் வாணிபத்தை வீழ்த்துவதற்காக அவை புறப்படும் இடத்திலிருந்து நேராக இங்கிலாந்திற்கு வரவேண்டுமென்றும் நிபந்தனைகள் இருந்தன. நடைமுறைக் காரணங்களுக்காக, கப்பல் போக்குவரத்தில் பிரிட்டன் கொண்டிருந்த சர்வாதீனத்திற்குச் சில விதிவிலக்குகளும் செய்ய வேண்டியதிருந்தது. அதாவது, டச்சு-கிழக்கிந்தியத் தீவுகளில் உற்பத்தியான வாசனைப் பொருள்கள் பிரிட்டனுக்குத் தேவைப்பட்டதால், ஸ்பானிய, போர்ச்சுகீசிய காலனிகளிலிருந்து வரும் பொருள்கள், இத்தாலியிலிருந்து தரைமார்க்கமாக ஹாலந்திற்கு வரும் பொருள்கள் ஆகியவை பண்டகசாலைகளிலிருந்து எதிரிக் கப்பல்களான டச்சுக் கப்பல்களில்கூட வருவதற்கு அனுமதிக்கப்பட்டன.

'பட்டியலுக்குட்பட்ட' பண்டங்கள் என்ற திட்டத்தை ஏற்படுத்தியதன் வழியாகக் காலனி வாணிப சர்வாதீனம் வலுவடைந்தது. இப் பட்டியலில் காணப்பட்ட முக்கியமான காலனிப் பண்டங்களை பிரிட்டனின் ஆதிக்கத்திலுள்ள இடங்களுக்கு மட்டுமே காலனிகள் ஏற்றுமதி செய்யவேண்டும்.[9] ஸ்பானிய, ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியத் தீவுகளோடு சர்க்கரையிலும் வெல்லப்பாகிலும் நடந்துவந்த இலாபகரமான வாணிபத்திற்கென்றே இக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. ஏனெனில், பிரிட்டிஷ் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்த கரும்பு உற்பத்தியாளர்கள் தாங்களே இவ் வாணிபத்தை மேற்கொள்ள விரும்பினர். ரம் என்னும் மதுபானம் தயாரிப்பதற்காக இப் பண்டங்கள் அமெரிக்காவிலிருந்த காலனிகளுக்கு அனுப்பப்பட்டன. பின், தயாரான ரம்மை ஆஃப்ரிக்காவிற்கனுப்பினர். அங்கு ரம்மைக் கொடுத்து அடிமை

[9] முதன் முதலாக சர்க்கரை, புகையிலை, பருத்தி, அவுரி, இஞ்சி, சாய மரக் கட்டைகள் (dye-woods) முதலியனமட்டுமே பட்டியலில் சேர்க்கப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் மேலும் 20 பண்டங்களைச் சேர்த்தனர். அதன்பின்னர், 1766–ல் ஃபினிஸ்டெர் முனைக்கு (Cape Finisterre) வடக்கேயுள்ள துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்ட காலனிப் பண்டங்கள் அனைத்துமே தடைசெய்யப்பட்டன.

களை வாங்கி, அவர்களை மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பி வைத்தனர். இம் மார்க்கமாக ஒரு முறை பயணம் சென்றாலே 1000 சதவீதம் இலாபம் கிடைத்தது. அவ்வாறாயின், அமெரிக்கர் (Yankees) நடத்திய கள்ளக் கடத்தலை நிறுத்த முடியாதது வியப்பிற்குரியதன்று.

ஸ்பெயின் நாடும் ஃபிரான்சு நாடும்கூட தத்தம் காலனிக ளோடு கொண்டிருந்த வாணிபத்தை சர்வாதீனமாக்க முயன்றன. எனினும், அந் நாடுகளின் கொள்கை பிரிட்டன் நாட்டிலிருந் ததைப்போன்று கடுமையானதாகவோ வெற்றிகரமானதாகவோ இல்லை.

இதற்கு நேர்மாறாக, டச்சுக்காரர்கள் அக் காலத்தில் வழக்கில் இல்லாத முறையில் பரந்த மனப்பான்மை கொண்டிருந்தனர். தாங்கள் மிகவும் போற்றி வளர்த்த கிழக்கிந்திய வாணிபத்தில் மட்டும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, ஏனைய வாணிபங்களி லெல்லாம் சர்வாதீனத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாகப் போட்டியை வளர்த்தனர். அக் காலத்தில் பொதுவாக உபயோகத் திலிருந்த பீரங்கிகளுடைய, அமைப்பில் குறைபாடு கொண்ட 'தொட்டிக் கப்பல்களுக்குப்' பதிலாக, எளிதாகச் செலுத்தக்கூடிய இலேசான விரைவுக் கப்பல்களை அவர்கள் கட்டினர். பெருமளவில் கட்டுமானப் பொருள்களை வாங்கி, இன்று தொழிற்சாலைகளில் பாகங்களைப் பொருத்தும் வரிசைமுறையைப் போன்ற (modern assembly line) வழியைப் பின்பற்றி, அவற்றை ஒரே மாதிரியாகக் கட்டினர். பிற நாடுகள் தம் கப்பல்களில் தத்தம் நாட்டு மாலுமி களையே வேலைக்கமர்த்தினர். அதற்கு மாறாக, டச்சுக்காரர்கள் குறைந்த சம்பளத்திற்கு எந்த நாட்டு மாலுமிகளையும் வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தயாராயிருந்தனர். இதனால் கப்பல் கட்டும் செலவு குறைவாயிருந்ததாலும், அதை இயக்கக் குறைந்த எண்ணிக்கையில் மாலுமிகள் போதுமானோராயிருந்ததாலும், அவர்களின் சம்பளம் குறைவாயிருந்ததாலும், டச்சுக் கப்பல்களின் நடைமுறைச் செலவு (operating costs) குறைவாக இருந்தது. அவர்களுடைய போட்டியாளர்கள் வாங்கிய கட்டணங்களில் பாதி அல்லது மூன்றில் இரண்டு பங்கு அளவுக்குதான் டச்சுக் கப்பல் கட்டணங்கள் இருந்தன. எனவே, 17ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் ஐரோப்பாவின் மொத்தக் கப்பல் அளவில் ஏறக்குறைய பாதி அளவு டச்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிருந்ததிலும், ஐரோப்பாவின் கப்பல் கட்டும் நாடாக ஹாலந்து விளங்கியதிலும் வியப்பில்லை.

பழைய காலனி முறை

தமது காலனிகளின் முன்னேற்றத்திற்கு வேண்டிய மக்களையும் முதலையும் வழங்கியதன் காரணமாகத் தம்முடைய முக்கிய அரசியற் குறிக்கோளான தேசிய வலிமையை அதிகரிக்கும் வகையில் அவற்றின் காரியங்களில் தலையிடுவதற்கு உரிமை இருப்பதாகத்தான் ஆங்கிலேயர் கருதினர். மெர்க்கன்டலிசத் தத்துவத்தின்படி இதைக் கூறுவதாயின், இங்கிலாந்திற்கு வேண்டிய பொருள்களைத் தருகின்ற மூலதனமாகவும், அது ஏற்றுமதி செய்யும் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கச்சாப் பொருள்களை வழங்கும் இடமாகவும், தம் உழைப்பாளிகளால் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கேற்ற அங்காடித் தளமாகவும் காலனிகள் இருக்கவேண்டுமென அவர்கள் நினைத்தனர்.

தாய்நாட்டின் பொருளாதார நிறைவிற்குத் துணைசெய்யும் வகையில் காலனிகளை எவ்வாறு நடத்துவது என்னும் வழி வகைகள் ஏராளமாக இருந்தன. அவற்றில் சிலவற்றை நாம் முன்பே பார்த்தோம். கப்பல் போக்குவரத்து முறை, பிரிட்டிஷ் மக்களுக்கு வேண்டிய வாணிபப் பொருள்களின்மீது ஒருவகை சர்வாதீனத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி, காலனி முறையின் முக்கிய அம்சமாகவும் திகழ்ந்தது. குறிப்பாக, 'பட்டிய லுக்குட்பட்ட' பண்டங்களின் தத்துவம், அப்பண்டங்களின் பெரும் பகுதியை இங்கிலாந்து நாடு பெறுவதற்கும், அவற்றில் எஞ்சியதை ஆங்கிலேய வணிகர்கள் மறு ஏற்றுமதி செய்து இலாபம் அடைவதற்கும் உத்தரவாதம் அளித்தது.

காலனி வாணிபத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியதோடு, காலனித் தொழில்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் கப்பல் போக்குவரத்துச் சட்டங்களைப் பயன்படுத்தினர். தமக்குத் தேவையான பொருள்களோ, அல்லது தாம் ஏற்றுமதி செய்து இலாபம் அடைவதற்கான பொருள்களோ காலனிகளில் உற்பத்தி யானல், அவற்றை ஊக்குவிப்பதற்காக நேர்நிலையான (positive) உற்சாகம் காட்டினர். அதாவது, அவற்றை உற்பத்தி செய் வோருக்கு அரசாங்கப் பணவுதவி கொடுத்து அல்லது அவை பிரிட்டிஷ் தீவுகளில் இறக்குமதி செய்யப்படும்போது சுங்கவரிச் சலுகை காட்டி அவற்றை ஊக்குவித்தனர். அதோடு, தாய் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் வகையில் அவர்களுக்குப் போட்டியாகச் செய்யப்படும் காலனி உற்பத்தியை நசுக்குவதற்காக எதிர்மறையான (negative) நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இவற்றில் காலனிகள்

கம்பளத் துணிப் பொருள்களையும் தொப்பிகளையும் ஏற்றுமதி செய்வதும், இரும்புச் சாமான்கள் உற்பத்தி செய்வதும் தடுக்கப் பட்டது முக்கியமானதாகும்.

காலனி மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினரெனினும், இங்கிலாந்து வணிகர்களும் கப்பல்காரர்களும் அடைந்த சலுகைகள் காலனிவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டன என்பதை மறந்துவிடலாகாது. காலனி முறையினால் பெரிதும் பாதிக்கப் பட்டோர் பொதுமக்களான நுகர்வோர்தாம். மெர்க்கன்டலிசக் கொள்கைக்காகத் தாய்நாட்டிலிருந்த நுகர்வோரும் காலனி நுகர்வோரைப்போன்று பல தியாகம் செய்யவேண்டியிருந்தது. இருப்பினும், காலனித் தொழில்கள் முக்கியத்துவம் அடையக் கூடிய அளவிற்குக் காலனி மக்களும் காலனிச் செல்வமும் வளர வளர, அத் தொழில்களை நசுக்குவதற்காக மேற்கொண்ட நட வடிக்கைதான் அமெரிக்கப் புரட்சிக்கு வழிகோலியது.

உள்நாட்டுத் தொழிற் கட்டுப்பாடு

உள்நாட்டுத் தொழிலை வழிப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் வேண்டுமென ஃபிரெஞ்சு மெர்க்கன்டலிசம் வலியுறுத்தியது. இதற்கென மேற்கொள்ளப்பட்ட கொள்கை இரண்டு முக்கியக் கூறுகளைக் கொண்டது: ஒன்று, தொழில் செய்பொருள்களுக்கு ஆழ்ந்தாராய்ந்து அளிக்கப்படும் ஊக்கம்; பிறிதொன்று, உற்பத்தியின் ஒவ்வோர் அம்சத்தையும் கவனமாக ஒழுங்கு படுத்தல்.

17ஆம் நூற்றாண்டில் வரிச்சலுகை, பணமானியம், இதர சலுகைகள், அரசாங்கப் பணத்தைத் தாராளமாய் முதலீடு செய்தல் ஆகிய வழிகளில் தொழில்செய் பொருள்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. இன்றும்கூட ஃபிரான்சு நாட்டில் புகழ் பெற்றுள்ள தொழில்களான கச்சாப் பட்டு உற்பத்தியும், பட்டுத் துணி உற்பத்தியும் கொண்ட தொழில்கள் அரசாங்க நிதியைக் கொண்டு அக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவைதாம்.

பதினான்காம் லூயியின் (Louis XIV) புகழ்பெற்ற மந்திரி யான கால்பெர்ட் (Colbert) என்பவரின்கீழ்த் தொழில்களை முன்னேற்றுவதற்கான கொள்கை வலுவாக்கப்பட்டதோடு, விரி வாக்கவும்பட்டது. பல தொழில்கள் ‘அரச செய்பொருள் தொழில்களாக’ (Royal manufactures) ஆக்கப்பட்டன. இவற் றில் மிகப் புகழ்பெற்றது காபெலின்ஸ் திரைச்சீலைத் தொழில் (Gobelins' tapestry) ஆகும். ‘அரசத் தொழில்கள்’ என்ற பட்டம்

அத் தொழில்களுக்குப் பெருமையும் பகட்டும் அளித்ததோடு, அத் தொழில்களில் உற்பத்தியான பண்டங்களை அரசர் வாங்குவதற்கான உத்தரவாதமும் கொடுத்தது.

ஃபிரெஞ்சு தொழிற் கொள்கையின் இரண்டாவது கூறான 'தொழிலை அரசு ஒழுங்குபடுத்தல்' அம்சத்தை முன்னதைவிடத் துரிதமாகக் கால்பெர்ட் மேற்கொண்டார். கில்டுமுறைக் கட்டுப்பாடுகளை ஆதாரமாகக்கொண்டு, ஒவ்வொருவகைத் தொழிலுக்கும் ஒரேவிதமான கட்டுப்பாடுகளை முழுமையாகக் கொண்டுவந்தார். இக் கட்டுப்பாடுகளைச் சட்டத்தின் வழியாகப் புகுத்தி, அவற்றைச் செயற்படுத்துவதற்காக அந்தந்த இடங்களில் மேற்பார்வையாளர்களை நியமித்தார்.

இங்கிலாந்து நாடும் ஃபிரான்சு நாடும் தத்தம் தொழிற் கட்டுப்பாடுகளை மையமாக்க முயன்றன. எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் முன்னர் இருந்த தேசிய சட்டங்களின் சில பகுதிகளையும் தலக் கட்டுப்பாடுகளையும் ஒருங்கிணைத்து, கைவினைஞர் சட்டம் (1563) என்னும் (Statute of Artificers) ஒரு முக்கிய தேசியச் சட்டம் அமலாக்கப்பட்டது. கில்டு முறை சீர்குலைவாலும், அத் தொழில்கள் கிராமப்புறத்திற்குப் பரவியதாலும் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்குப் போதுமான தொழிற் பயிற்சி கொடுக்க வசதி கொடுப்பது, விவசாயத்திற்கு வேண்டிய தொழிலாளிகள் போதுமான எண்ணிக்கையில் கிடைக்க ஏற்பாடு செய்வது, தொழிலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது ஆகிய முக்கியமான குறிக்கோள்களை அச் சட்டம் வலியுறுத்தியது. இக் குறிக்கோள்களை அடைவதற்கென்று ஒவ்வொரு தொழிலுக்கும் புதியோராய் வருவோர் ஏழு ஆண்டுகள் பயிற்சி பெறவேண்டுமென்றும், ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரே மாதிரியான பயிற்சிதான் நாடு முழுவதும் இருக்கவேண்டுமென்றும் இச் சட்டம் வலியுறுத்தியதுடன், எவ்விதத் தொழிலும் செய்யாதோர் கட்டாயம் விவசாயத் தொழிலில் ஈடுபடவேண்டுமென்றும் கோரியது. அதோடு, தொழிலாளிகளைக் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்காகிலும் வேலைக்கமர்த்தவேண்டுமென்றும் நிர்ணயம் செய்தது. மேலும், 14ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் கடுங் கொள்ளைநோயால் ஏற்பட்ட தொழிலாளிகளின் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கென்று கொண்டுவரப்பட்ட சட்டதிட்டங்களும் தொடர்ந்து அமலில் இருக்குமாறு செய்தது.

இவை தவிர, வேறு பல உபாயங்களும் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்டன; ஆனால், அவையனைத்தும் ஃபிரான்ஸில் இருந்ததைப்போன்று அவ்வளவு விரிவானவையல்ல. கம்பளப் பொருள்

களின் தரத்தைக் கட்டுப்படுத்தும் வழக்கம் முற்காலத்திலிருந்தே செயற்பட்டுவந்தது. இங்கிலாந்து நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப் படும் பொருள்கள் உயர்ந்த தரமுடையனவாயிருக்கவேண்டு மென்பதற்காக, துணிகளின் தரத்தைக் கண்காணிப்பதற்கென்று அல்நஜர் (Alnager) என்னும் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். தரக்குறைவான பொருள்களை உற்பத்தி செய்வோருக்குத் தண்டப் பணம் விதிக்கப்பட்டது, அல்லது அப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 17ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பட்டு வியாபாரம், இரும்பு உருக்கல், தகரம், ஈயம், நிலக்கரிச் சுரங்கம் ஆகிய தொழில்களும் இவ்வதிகாரி மேற்பார்வைக்குக் கொண்டு வரப்பட்டன.

ஹாலந்து நாட்டிலோ அல்லது ஸ்பெயின் நாட்டிலோ இருந்த தொழிற்சாலைக் கொள்கை ஃபிரான்ஸில் அல்லது இங்கிலாந்தில் இருந்ததைப்போன்று முக்கியமானதாக இல்லை. நாம் ஏற்கெனவே பார்த்தபடி, ஹாலந்து, கிழக்கிந்தியத் தீவுகளோடு நடைபெற்று வந்த வாணிபத்தில்தான் சர்வாதீனத்தை அடைந்து, அதைப் பேணவேண்டுமென்பதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது. மற்ற நாடுகளைக் காட்டிலும் தன் நாட்டில் தடையிலா வாணிபக் கொள்கையையும், தொழிற் சுதந்திரக் கொள்கையையும் மேற்கொண்டது. அதேபோல, ஸ்பெயின் நாடும் தனது அமெரிக்கக் காலனிகளோடு கொண்டிருந்த வாணிபத்தில் சர்வாதீனக் கட்டுப்பாட்டை அடைய முயன்றது; ஆனுல், அதில் அவ்வளவாக வெற்றிகாண இயலவில்லை. இது, தன் நாட்டு அங்காடிகளில் அயல்நாட்டுப் பொருள்களோ வியாபாரிகளோ இல்லாமலிருக்க ஸ்பெயின் முயன்றது என்பதைக் குறிப்பாகப் புலனுக்குகிறது. ஆனுல், ஸ்பெயின் நாட்டுத் தொழில் களால் போதுமான பொருள்களை விநியோகம் செய்ய இயலவில்லை; எனவேதான், அதனுடைய காலனிகளுக்கு வேண்டிய பொருள்கள் பெரும்பாலும் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி யாயின.

மெர்க்கன்டலிசத்தில் உழைப்பாளிகள்

கப்பல் போக்குவரத்து, காலனி, வாணிபம் ஆகியவற்றின் கொள்கைகள் மட்டுமன்றி, உழைப்பைப்பற்றி மெர்க்கன்ட லிஸ்டுகள் கொண்டிருந்த கருத்துகளும் கொள்கைகளும் அவர் களின் வாணிபநிலைக் கொள்கையை உருவாக்கின. சிறியவும், எளியவுமான உற்பத்திக் கருவிகளைக் கொண்டிருந்த அக் காலத்தில் உழைப்பாளிதான் உற்பத்தியின் (சிறப்பாக, செய் தொழிற் பொருள் உற்பத்தியின்) முக்கியக் காரணியாக விளங்

கினன். பொன்னையும் வெள்ளியையும் பெறுவதற்குச் சிறந்த வழியாகச் செய்தொழிற் பொருள்களின் ஏற்றுமதி இருந்ததால், ஏராளமான உழைப்பாளிகளைப் பெறுதற்கு மெர்க்கன்டலிஸ்டுகள், பெருகிவரும் அதிக மக்கள்தொகையின் அவசியத்தை வலியுறுத்தியதில் வியப்பொன்றுமில்லை. போதுமான அளவு மக்கள் தொகையைப் பெருக்குவதற்காகத் திருமணம் செய்வோருக்குக் கலியாணப் பரிசுகள் கொடுத்தல், குழந்தைகளுக்குக் கொடை வழங்கல், திருமணம் செய்யாதிருப்போருக்குத் தண்டப் பணம் விதித்தல் ஆகிய உபாயங்களை அவர்கள் மேற்கொண்டனர். உழைப்பிற்குக் 'கேந்திர முக்கியத்துவமாகிய நிலையை' அளிக்கவும் தயாராயிருந்தனர்.[10]

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள்போன்றவை சாதாரண வழக்கில் பேசப்பட்டன:

> 'மக்களே நாட்டின் செல்வமும் வலிமையும் ஆவர்'—நிக்கொலஸ் பார்போன் (Nicholas Barbon).
>
> 'உழைப்பாளர் அதிகமுள்ள நாடுதான் செல்வமுள்ள நாடாகும் அன்றோ?'— ஜோசையா டக்கர் (Josiah Tucker).
>
> 'சமுதாயத்தின் வலிமையும் செல்வமும் அதன் மக்கள் தொகையில் காணப்படுகிறது என்ற கூற்று அரசியலில் முக்கியமானதொரு முதுமொழியாக இடம்பெற்றுள்ளது' —ஹென்றி ஃபீல்டிங் (Henry Fielding).

உழைப்பாளிகளின் எண்ணிக்கை மட்டுமல்லாமல், அவர்களின் அறிவும் விடாமுயற்சியும் முக்கியமாகும். ஏனெனில், இப்பண்புகளெல்லாம் உழைப்பாளிகளிடம் இருந்தால்தான் அதிகமாயும் தரமானவையாயும் உற்பத்தி செய்து ஏற்றுமதியைப் பெருக்கமுடியும். மெர்க்கன்டலிச காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு பொருளாதார அறிஞரும் தொழிற் பழக்க வழக்கங்களையும், உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அறிவைப் பெறுவதையும் முக்கியமாகக் கருதி வலியுறுத்தினர்.

கூலியைப்பற்றி அவர்களது சிந்தனை எவ்வாறிருந்தது? 'மக்கள்தாம் ஒரு நாட்டின் செல்வமும் வலிமையும்' என்ற

[10] Edgar S. Furniss, 'The Position of the Laborer in a System of Nationalism,' p. 31; Copyright 1930 by Houghton, Miffin Co., Boston. இதைத் தொடர்ந்து வரும் மேற்கோள்கள் 22ஆம் பக்கத்தின் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

எண்ணமுடைய மெர்க்கன்டலிஸ்டுகள், உழைப்பாளிகள் உயர்ந்த கூலியைப் பெற்று, சௌகரியமாக வாழ்ந்து, எல்லோருமே திருப்தியாக வாழவேண்டுமென்ற எண்ணமுடையோராயிருந்திருக்கவேண்டும் என்று தோன்றலாம். ஆனால், பெரும்பாலும் மெர்க்கன்டலிஸ்டுகள் அனைவருமே இதற்கு நேர்மாறான கருத்துடையோராகவே இருந்தனர். சாதகமான வாணிபநிலை இருக்கவேண்டுமாயின், அயல்நாட்டுப் போட்டியாளர்களைவிடக் குறைந்த விலையில் விற்கவேண்டும்; உற்பத்திச் செலவில் பெரும் பாகம் வகிக்கும் கூலி தாழ்வாயிருக்கவேண்டும் எனக் கருதினர். அதிக மக்கள்தொகையை வலியுறுத்தியதற்குக் காரணம், அதிகமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்குமட்டுமன்று; கூலியும் அதனால் உற்பத்திச் செலவும் குறைந்து போட்டி வலிமை உயர்வதற்குதான்.

கூலி குறைவாயிருந்தால்தான் உழைப்புச் செலவு (labour cost) குறைவாயிருக்குமென்று இன்று நாம் கருதுவதில்லை. உழைப்பாளியின் உற்பத்தித் திறன் அதிகமாயிருக்குமாயின், குறைந்த உழைப்புச் செலவும் அதிகக் கூலியும் இருப்பதற்கு வழியுண்டு. ஆனால், அதிகக் கூலி கொடுத்தால் சுறுசுறுப்பின்றி உழைப்பாளிகள் சோம்பேறிகளாகிவிடுவர் என்று மெர்க்கன்டலிஸ்டுகள் கருதினர். 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து நல்லறிவும் திறனும் பெற்று விளங்கிய ஆர்தர் யங் (Arthur Young) என்பார், தனது காலத்தில் மட்டுமன்றி அதற்கு முந்திய காலத்திலும் அறிஞர்கள் கொண்டிருந்த பொதுவான கருத்தைக் கீழ்க்காணுமாறு கூறியுள்ளார் :

‘தாழ்ந்த வகுப்பினரை ஏழைகளாகவே வைத்திருக்கவேண்டும்; இல்லையெனில், அவர்களிடம் செயலூக்கமே இராது என்பது முட்டாளைத் தவிர மற்ற எவனுக்கும் தெரியும். இங்கிலாந்திலுள்ள ஏழைகள் ஃபிரான்சிலுள்ள ஏழைகளைப்போன்று இருக்கவேண்டுமென நான் கருதவில்லை. ஆனால், ஒவ்வொரு நாட்டின் நிலைமைக்கேற்ப (எல்லா மக்களையும்போல்) அவர்களை வறுமையிலேயே வைத்திருக்கவேண்டும்; இல்லையெனில், அவர்கள் வேலை செய்யமாட்டார்கள்.’ [11]

விடாமுயற்சியுடன் வேலை செய்வதற்கு உழைப்பாளிகளைத் தூண்டுவதற்கான குறிக்கோளைக்கொண்ட இழிவான இக்கருத்து, குறைந்த ஊதியத்தின் அவசியத்தை ஒரு கோட்பாடாக

[11] Arthur Young, ‘Eastern Tour’ (1771), p. 361; Furniss என்பார் வரைந்த, முன்பு கூறிய அதே நூலில், பக்கம் 118.

அமைப்பதற்காக (முதலாளிகளின் சுயநல நோக்கத்தையும் கொண்டு) வாணிபநிலைக் கோட்பாட்டுடன் இணைக்கப்பட்டது. அதே சமயம் நாட்டின் பொருளாதார நிலைக்கு உழைப்புதான் உயிர்நாடி என்ற ஆழ்ந்த நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது. எனினும், இவ்விரு கருத்துகளும் ஒன்றோடொன்று முரண்படுவதில்லை. ஏற்றுமதிக்கும் செல்வத்திற்கும் மூலகாரணியாக விளங்கும் உழைப்பாளிகளின் பெருக்கம்தான் நாட்டின் வலிமைக்கும் வளத்திற்கும் இன்றியமையாதது. ஆனால், இவ்வுழைப்பாளிகள் உற்பத்தித் திறனுடையவர்களாயும் கடின உழைப்புள்ளவர்களாயும் இருக்கவேண்டும்; அவர்களை வேலை செய்ய வைப்பதற்கு வறுமை இன்றியமையாததாயின், ஏராளமான உழைப்பாளிகளைப் பெறுவதற்குக் குறைந்த கூலி இன்றியமையாததாகும்.

மெர்க்கன்டலிசவாதிகள் உழைப்பாளிக்கு மிக முக்கியமான இடத்தைக் கொடுத்து, அதே சமயம் பிழைப்புக் கூலிக்கு மேல் (subsistence wage) சிறிதுகூட அதிகமாகக் கூலி இருக்கக் கூடாதென வலியுறுத்தினர். இது அவர்களுக்கு எளிதாக இருந்தது. ஆனால், பெருவாரியான மக்கள் உண்ணப் போதுமான உணவின்றி, உடுத்த நல்ல உடையின்றி, இருக்கத் தகுந்த உறைவிடமின்றி வறுமையில் உழலும்போது, அந் நாடுமட்டும் எவ்வாறு செல்வமிக்க நாடாக இருக்கமுடியும்? இதற்கு மெர்க்கன்டலிஸ்டுகள் எளிமையாக இவ்வாறு விடையளித்தனர்: நாட்டின் செல்வத்திற்கும் சாதாரண மக்களின் நலனுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதுதான் சரியான மெர்க்கன்டலிஸ்டுகளின் வாதமாகும். ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் கொண்டுள்ள நாடுதான் செல்வமிக்க நாடேயன்றி, நல்ல உணவும் வளமான வாழ்க்கையும் கொண்ட மக்களைப் பெற்ற நாடன்று. பொன், வெள்ளி ஆகியவற்றின் முக்கியத்துவத்தில் வெறியும், சாதகமான வாணிபநிலையால்தான் அவற்றை அடைய முடியுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையும், வறுமையில் இருந்தால்தான் மக்கள் கடினமாக உழைப்பார்கள் என்ற தீவிரமான எண்ணமும் உடைய ஒருவன் 'மக்களின் வறுமைதான் நாட்டிற்குச் செல்வம்' என்று கருதுவான். செல்வமிக்க நாடும், வறுமை நிறைந்த மக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல; உண்மையில் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று காரணத் தொடர்புடையவை. செல்வத்தின் தன்மை பற்றிய இத்தகைய குறுகிய கண்ணோட்டத்தின் காரணமாக அவர்கள் விந்தையான முடிவிற்கு வரவேண்டியிருந்தது.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்

Clough, Shepard B. and Charles W. Cole, 'Economic History of Europe.' Boston : D. C. Heath & Co., 1941ஆம் ஆண்டுப் பதிப்பு.

Ferguson, W. K., 'The Renaissance.' New York : Henry Holt & Co., 1940-ல் பதிப்பித்தது. பரபரப்பான இக் காலத்தில் மேற்கு ஐரோப்பிய சமுதாயத்தில் ஏற்பட்ட முக்கியமான மாறுதல் களைச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் இந் நூல் ஆய்கிறது.

Furniss, Edgar S., 'The Position of the Laborer in a System of Nationalism.' Boston : Houghton Mifflin Co., 1930-ல் பதிப்பித்தது. இந் நூல், குறிப்பாக இதன் 2ஆம் அதிகாரம் மெர்க்கன்டலிசக் கருத்தில் உழைப்பாளிபற்றிய முழு விவரத்தைப் படிப்பதற்கு எளிமையான முறையில் தருகிறது.

Heaton, Herbert, 'Economic History of Europe.' New York: Harper & Bros., 1936ஆம் ஆண்டுப் பதிப்பு. இந் நூலிலும் Clough and Cole வரைந்த நூலிலும் மெர்க்கன்டலிசக் காலச் சூழ்நிலை பற்றிய அருமையான அதிகாரங்கள் உள்ளன.

Heckscher, August, 'Mercantilism,' 2 vols. London, Geo. Allen & Unwin, Ltd., 1936-ல் பதிப்பித்தது. மெர்க்கன்டலிச ஆய்வுபற்றிய நூல்களில் மிகச் சிறந்த நூல் இது. மெர்க்கன்ட லிசக் கோட்பாடுகள், செயல்முறைகள் அனைத்தையும் இது முழுமையாகக் கூறுகிறது.

Lipson, E., 'A Planned Economy or Free Enterprise' London: Adam & Chas. Black, 1946-ல் பதிப்பித்த இரண்டாம் பதிப்பு. இந் நூலின் 2ஆம் அதிகாரம், மெர்க்கன்டலிசம் என்பது ஒரு 'திட்டமிட்ட பொருளாதாரம்' என்ற வாதத்தைச் சுவைபடச் சித்திரிக்கிறது.

Mosse, George L., 'The Reformation.' New York: Henry Holt & Co., 1953-ல் பதிப்பித்தது; சிறப்பாகவும் சுருக்கமாகவும் ஆய்வதற்கு இந்நூல் சிறந்தது.

Viner, Jacob, 'Studies in The Theory of International Trade.' New York: Harper & Bros., 1937-ல் பதிப்பித்தது. 1, 2ஆம் அதிகாரங்கள், அயல்நாட்டு வாணிபம்பற்றிய மெர்க் கன்டலிசக் கோட்பாடு இங்கிலாந்தில் எவ்வாறு விளக்கப்பட்டது என்பதை மிகச் சிறந்த முறையில் ஆய்கின்றன.

3. தடையற்ற பொருளாதாரத்தை நோக்கிச் செல்லல்

வரலாற்றின் எந்த ஒரு காலகட்டமும் மாறக்கூடியதே யன்றி நிலையானதன்று. எனினும், அது பின்னல் நிகழக்கூடிய வற்றை முன்னறிவிக்கக்கூடிய வகையில் பல மாறுதல்களைக் கொண்டது; அதே சமயம் முந்திய காலத்தின் பழக்கவழக்கங் களிலிருந்தும் அமைப்புகளிலிருந்தும் மெதுவான மாற்றத்தை யுடையதெனினும், அவைகளை ஓரளவு சார்ந்து இருக்கக் கூடியவை. உதாரணமாக, 1500 முதல் 1750 வரையுள்ள காலத் தில் மெர்க்கன்டலிசக் கருத்துகள் பரவியிருந்தன; ஆனல், அதே சமயம் அவை இடைக்காலக் கோட்பாடுகளுக்கும் செயல் முறைகளுக்கும் முரண்பாடுள்ளவைகளாய்மட்டுமன்றி, அவற்றி னின்று பரவிவந்தவையுமாகும். மெர்க்கன்டலிசக் கோட் பாடும் செயல்முறையும், அவற்றை வளர்த்த வணிக முத லாளித்துவ வகுப்பினர் பெருகிச் செல்வாக்குடையவராயும் நம்பிக்கைக்குரியவராயும் வளர்ந்த அதே சமயத்தில் பல மாறு தல்களை அடைந்தன. அவற்றிற்கு இணையாக வளர்ந்த மன்ன ராட்சியுடைய அரசியலமைப்பும் வெகுவாய் மாற்றி அமைக்கப் பட்டது. குறிப்பாக, இங்கிலாந்தில் அதிகாரம் பெற்றதாகத் தேசிய அரசு நிரந்தரமாய் அமைக்கப்பட்டவுடன் இம் மாற்றம் ஏற்பட் டது. பொருளாதாரக் கருத்துகள் மட்டுமன்றி, அரசாங்கத் தத்துவங்களும் நடைமுறைகளும், விஞ்ஞான வளர்ச்சியையும் அவ் வளர்ச்சியால் உலகினைப்பற்றி மனிதன் கொண்டிருந்த கண்ணேட்டத்தின் மாறுதல்களையும் பிரதிபலித்தன.

வரலாற்றின் தொடர்ச்சி

மொத்தத்தில் இடைக்காலம் 1500ஆம் ஆண்டோடு முடிந்து விட்டதென்ருே அல்லது தலையிடாக் கொள்கைக் காலம் ஆதம் ஸ்மித்தின் காலத்தில்தான் தொடங்கியதென்ருே கூறுவதற்கில்லை.

தற்காலத்தில்கூட இடைக்கால அம்சங்கள் உள்ளன; ஆதம் ஸ்மித் காலத்தில் பூத்த தடையிலா வாணிபச் செடி பல ஆண்டுகளுக்கு முன்னரே முளைத்துவிட்டது. ஜி. எம். டிரெவெலியன் என்னும் வரலாற்றுப் பேரறிஞர் வரலாற்றின் தொடர்ச்சிபற்றிக் கீழ்வருமாறு விவரித்துள்ளார்:

'இங்கிலாந்து நாட்டில் எந்தத் தேதியில் அல்லது காலப் பகுதியில் இடைக்காலம் முடிவுற்றது என்பதை ஆய்வதில் பயனில்லை. 13ஆம் நூற்றுண்டில் இருந்த ஆங்கில சமுதாயமும் அதன் கருத்தும் இடைக்காலத்தவையாயிருந்தன. ஆனல், 19ஆம் நூற்றுண்டில் அவ்வாறில்லை என்றுமட்டும்தான் சொல்லக்கூடும். இருந்தபோதிலும், பிரபுத்துவம், பாராளுமன்றத்தில் கூடும் பொது மக்கள், ஆங்கிலப் பொதுச் சட்டம், சட்டத்தின் ஆட்சியைப் பொருள் விளக்கம் செய்கின்ற நீதிமன்றம், நிறுவப்பட்டுள்ள திருச்சபையின் படிமுறை அமைப்பு, திருச்சபைப் பங்குமுறை, பல்கலைக் கழகங்கள், பொதுப் பள்ளிகள், இடைக்கால இடைநிலைப் பள்ளிகள் ஆகிய இடைக்காலத்தின் அமைப்புகளை இன்றும் நாம் கொண்டுள்ளோம். நமது ஆங்கில மரபுகளையெல்லாம் மறந்துவிட்டு, சர்வாதிகார அரசாக நமது அரசு மாறினாலன்றி, நமது எண்ணங்களில், குறிப்பாகப் பொதுமக்களும் மாநகராட்சி மன்றங்களும் கொண்டுள்ள சுதந்திரத்தையும் உரிமைகளையும் சட்டப்படியான முழு அதிகாரம் பெற்றுள்ள பாராளுமன்றம்கூட ஓரளவிற்கு மதிக்கத்தான் வேண்டும் என்ற நமது கருத்தில் இடைக்காலத்தைச் சார்ந்த அம்சம் இருந்துகொண்டேதானிருக்கும். பழமைப் பற்றும் (conservatism), தாராள மனப்பான்மையும் (liberalism) மட்டுமன்றி, தொழிற் சங்கங்கள்கூட (Trade Unions) இடைக்காலத்தில் தோன்றியவைதாம் என்று பரந்த பொருளில் கொள்ளலாம். 17ஆம் நூற்றுண்டில் பொதுமக்களின் உரிமைகளை நிறுவியவர்கள், ஸ்டூவர்ட் அரசர்கள் (Stuarts) மேற்கொண்ட முடியாட்சியின் நவீனமயமாக்கும் முயற்சிகளுக்கு எதிராக இடைக்கால முன் நிகழ்வுகளை நாடினர். உண்மையில் வரலாற்றுப் பாங்கு சிக்கல்கள் நிறைந்ததொரு பின்னல்தான். இதனுடைய இடையருச் சிக்கல்களைத் தனியொரு வரைபடத்தால் விளக்க முடியாது.'[1] வலிமை மிக்கதொரு சமுதாயப் பழக்கவழக்கத்தின் செல்வாக்கு உடனடியாக மறைந்துவிடுவதில்லை; அதுபோன்றே எந்தப் பழக்க வழக்கமும் திடீரெனத் தோன்றிவிட்டதுமில்லை. மெர்க்கன்டலிச காலத்திற்குப்பின் தோன்றிய தனியுரிமைக் கோட்பாட்டின்

[1]G. M. Trevelyan, 'English Social History,' pp. 95-96. Copyright 1942 by Longmans, Green & Co., New York. இந் நூலை வெளியிட்டோரின் அனுமதியுடன் இப் பகுதி அச்சிடப்பட்டுள்ளது.

காலம், உயர்ந்தபட்ச சாதகமான வாணிபநிலையை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட அரச கட்டுப்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் கொண்ட சூழ்நிலையிலிருந்து மெதுவாக வளர்ந்துவந்ததேயன்றித் தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் படைத்த படைப்பன்று.

சில காலத்திற்குச் செல்வாக்குப் பெற இருந்த புதிய பொருளாதாரக் கண்ணோட்டமும், புதியதோர் அரசாங்கத் தத்துவமும் வளர்ச்சி பெறுவதற்கு ஆதாரமாக இருந்த முக்கியமான கருத்துகளை இவ்வத்தியாயம் தனது ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. இவை மாறுபட்டதொரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் பிரதிபலிப்பதிலும் ஈடுபட்டு, புதிய அரசாங்க, பொருளாதாரத் தத்துவங்களை இறுதியில் மாற்றியும் திருத்தியும் அமைக்கத் துணைபுரிந்தன.

புதிய முதலாளித்துவ வகுப்பினரின் செல்வாக்கு

மெர்க்கண்டலிசக் கருத்து, கட்டுப்பாடுகள் சிதைவுறுவதற்கும் சுதந்திரம் தோன்றுவதற்கும் வழியாயிருந்த மிக முக்கியமான காரணங்களில் வணிகர்களின் எண்ணிக்கை, செல்வம், செல்வாக்கு ஆகியவை உயர்ந்ததால் ஏற்பட்ட விளைவுகளுள் ஒன்று. 15ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அவ்வளவு செல்வாக்கின்றி, ஒருசிலர்மட்டுமே இருந்த இவ் வகுப்பினர், 18ஆம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில் வளர்ந்து, செல்வமிக்கவர்களாயும், அதனால் செல்வாக்குடையோராயும் ஆயினர். முதலில் மாநகர அலுவல்களில் செல்வாக்குப் பெற்று, பின்னர் பாராளுமன்றத்திலும் பெரும் எண்ணிக்கையில் இடம்பெற்று, அரசு கவுன்ஸிலில்கூடச் செல்வாக்குடையோராயினர்.

சவாலும் பதிலும்

வாணிப விரிவால் ஏற்பட்ட வாய்ப்புகளைத் துணிகரமாகவும் வெற்றிகரமாகவும் பயன்கொண்ட காரணத்தால், இவர்களெல்லாம் மேல்நிலைக்கு வந்தனர். புதிய இடங்களைக் கண்டுபிடித்ததன் விளைவாக, அமெரிக்கக் கண்டங்களோடும் கிழக்கு நாடுகளோடும் புதிய வாணிபம் தொடங்க வாய்ப்பு ஏற்பட்டது என்பதை முன்னரே கண்டோம். இவ்வாறாக விரிவடைந்த வாணிபத்திற்கு இன்னும் பல ஊக்கிகளும் இருந்தன. அவை, விலைவாசி ஏற்றம், இதற்குக் காரணமாக இருந்த ஸ்பெயின் நாட்டுப் பொன் வெளியேற்றம், டிரேக் (Drake), ஹாவ்கின்ஸ் (Hawkins), ஃபுரோபிஷர் (Frobisher) ஆகிய கடற் கொள்ளைக்காரர்களின் துணிச்சலால்

அவ்வப்போது கிடைத்த பொன், வெள்ளி ஆகியவையாகும். வாணிபத்தில் அதிக இலாபம் கிடைத்ததால் மூலதனம் பெருகியது. ஆங்கில, டச்சு வணிகர்கள், உற்பத்தியாளர், கப்பல் காரர்கள், பாங்கர்கள் ஆகியோர் பெருஞ் செல்வந்தர்களாயும் செல்வாக்குடையோராயும் ஆயினர்.

பழைய செய்தொழில் கில்டுமுறைகள் வளர்ந்துவந்த பொருளாதார நிலையைச் சமாளிக்க முடியாது திணறின. அவைகளுக்குப் பதிலாகத் தொழில் முயற்சியுடைய தனி மனிதர் முக்கியமாயினர். 18ஆம் நூற்றுண்டுவரை வணிக-முதலாளியின் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்த குடிசைத் தொழில்முறை கம்பளத் தொழிலில் மட்டுமன்றிக் கப்பல் கட்டுதல், இரும்பு உற்பத்தி செய்தல், சுரங்கம் ஆகிய எல்லாத் தொழில்களுக்கும் பரவி பிரபலியமானது. ஆனல், 18ஆம் நூற்றுண்டில் சிற்றளவு தொழிற்சாலைமுறை ஏற்பட்டதால், கில்டுமுறையே பெரும்பாலும் இல்லாமல்போய்விட்டாது.

செய்தொழில் கில்டுமுறை மறைந்து, தனி வணிகர்முறை ஏற்பட்டதால் மனிதனின் சாதனைகளை மதிப்பிடும் குறிக்கோளும் மாறிவிட்டது. ‘போதுமான’ வருவாய் கிடைத்தால் போதும் என்ற குறிக்கோள் நீங்கி, விரைவில் பெருஞ் செல்வந்தர்களாக உயரவேண்டுமென்ற ஆசை வளர்ந்தது. அறநெறிக் கொள்கையின் வழியாகப் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற இடைக்காலக் கருத்து மறைந்து, செல்வத்தை அதற்காகவே ஈட்டவேண்டுமென்ற நோக்கம் பிறந்தது.

நாம் ஏற்கனவே பார்த்ததைப்போல் பொன்னையும் வெள்ளியையும் வைத்துக் கும்பிடும் அளவிற்கு இந் நோக்கம் மக்களை இழுத்துச் சென்று, அவற்றைப் பெறுவதற்கான சாதகமான வாணிப நிலையை எய்துவதற்கு வேண்டிய வாணிபக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளச் செய்தது.

வாணிப விரிவிற்குத் தனியுரிமை சாதகமாகிறது

மெர்க்கண்டலிசக் கருத்தும் போக்கும் தீவிரமாயிருந்த காலத்திலேயே தொழில் சுதந்திரம்தான் சிறந்த பலனைத் தருமென்று சிலர் கருதினர். தனியார் உரிமை பாதிக்கப்படாத தடையிலா அங்காடிதான் தனியார் முயற்சிக்குச் சிறந்த வாய்ப்பைக் கொடுக்கக்கூடியதென்றும், அந் நிலையில்தான் உற்பத்தி அளவைப் பெருக்கவும், புதிய இடங்களிலிருந்து சாதனங்களைப் பெற்றுப் புதுவகை உற்பத்தி முறைகளைப் புகுத்துவதன்மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், இலாபத்தை உயர்ந்தபட்ச

மாக்கவும் முடியுமென அவர்கள் எண்ணினர். தமது வாணி பத்தைப் பெருக்குவதற்குரிய தனியுரிமையை விரும்பிய சில வணிகர்கள் மெர்க்கண்டலிசக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்று முறையீடு செய்தனர்.

வாணிபக் கட்டுப்பாடுகளின் மீதான இவ்வகை வெறுப் புணர்ச்சி புதிதன்று. 1550ஆம் ஆண்டிலேயே வெண்ணெய், பாலடைக்கட்டி ஆகியவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவதற் காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தைப்பற்றி சர் ஜான் மேசொன் **(Sir John Masone)** அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டனர்:

'இவ்வித அவசர ஆணைகளில் பல எவ்வாறு செயல்பட்டன என்று எனக்கு நன்ருகத் தெரியும். இவ்வகையான ஆணைகளின் வழியாக எந்தப் பொருள்கள் மலிவாகக் கிடைக்கவேண்டுமென விரும்புகின்ருேமோ அவை கிடைக்காமலே போய்விடும். இயற் கையின் போக்கை நாம் மாற்ற முடியாது....ஒரு பென்னி விலை யுள்ள பொருளை ஒரு பார்திங்குக்கு ($\frac{1}{4}$ பென்னிக்கு) விற்கச் சொல்லி இயற்கையைக் கட்டாயப்படுத்த எவராலும் முடியாது. பால் கறக்காத பசுவை விற்க முயற்சிபுரிபவனும் அதை வாங்கும் வியாபாரியும் எவ்வாறு ஒத்துப்போக முடியும்?'[2]

அரை நூற்ருண்டிற்குப் பின்னல் உள்ள பிறிதோர் உதா ரணத்தை எடுத்துக்கொள்வோம். நிலத்தின் ஒரு பகுதியில் கட்டாயமாக சணல் விளைவிக்கவேண்டுமென்ற மசோதாவின்மீது சர் வால்டர் ராலே **(Sir Walter Ralgieh)** அவர்கள் கூறிய விம ரிசனம்தான் இவ்வெடுத்துக்காட்டு.

'என்னைப் பொறுத்தவரை நிலச் சொந்தக்காரர்கள் தமது நிலத்தை நமது விருப்பப்படி பயன்படுத்தவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதை நான் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அவனவன் விருப்பப்படி எந்தப் பயனிற்குத் தன் நிலம் பொருத்த மானதெனக் கருதுகிருனே அதற்குப் பயன்படுத்த அவனுக்கு வேண்டிய உரிமையை அளித்துவிடுவதுதான் நல்லது.''[3]

இது போன்ற கருத்துகள் படிப்படியாக வளர்ந்து பெருகி வந்தது. சுதந்திரத்திற்கு ஆதரவான மனநிலையை அது சிறிது

[2]**H. M. Robertson** அவர்களின், 'Aspects of the Rise of Economic Individualism' என்ற நூலில் 70ஆம் பக்கத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. Copyright 1933 by Cambridge University Press, New York.

[3]அதே நூல்.

சிறிதாக உருவாக்கியது. அதே சமயம், உள்நாட்டு வர்த்தகம், தொழில் ஆகியவை விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டுமென்ற நம்பிக்கை கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்துபோகலாயிற்று.

அரசாங்கக் கட்டுப்பாட்டின் வீழ்ச்சி

கட்டுப்பாடுகளின்மீதிருந்த வெறுப்பு, சிறப்பாக இங்கிலாந்து நாட்டில் சர்வாதீன உரிமை வழங்கும் முறையைக்கொண்டு அரசாங்கம் தொழில்களைக் கட்டுப்படுத்தியதன் வழிவகைகளையெல்லாம் எடுத்துக்காட்டி அனுபவ வாயிலாக அவற்றை வெளிப்படுத்தத் தூண்டின. அயல் நாடுகளில் வளர்ச்சி பெற்ற தொழில்கள் உள்நாட்டில் வளரவேண்டுமென்றோ, அல்லது புதிய தொழில்களைச் சொந்த நாட்டில் ஆரம்பிக்க வேண்டுமென்றோ, அல்லது அத் தொழிலின் இலாபத்தில் ஒரு பங்கை அல்லது குறிப்பிட்டதொரு தொகையைப் பெறுவதன்மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்க வேண்டுமென்றோ அரசர்கள் தனி நபர்களுக்கு அல்லது ஒருசிலரைக் கொண்ட தொகுதிகளுக்குச் சர்வாதீன உரிமை வழங்கிவந்தார்கள். 16ஆம் நூற்றுண்டிலும் 17ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் கண்ணுடி, உப்பு, சோப்பு, படிகாரம் வெட்டி எடுத்தல், குண்டூசி செய்தல், கம்பி, நிலக்கரி விற்றல் ஆகிய தொழில்கள் இங்கிலாந்து நாட்டின் இம் முறையின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனுல் விலைவாசிகள் உயர்ந்தன; பொருள்களின் தரம் குறைந்தது; போதுமான அளவில் பொருள்கள் கிடைக்கவில்லை. ‘ஏறக்குறைய எல்லா சர்வாதீனர்களும் (monopolists) மலிவான விலையில் தரமான பொருள்களை அளிக்கப்போவதாக வாக்குக் கொடுத்தனர்; ஆனுல், ஒருவர்கூடத் தம் வாக்கை நிறைவேற்றியது கிடையாது.’[4] அவர்கள் அனைவருமே பேராசை கொண்டவர்களாய், திறமையற்றவர்களாய், ஊழல் நிறைந்தவர்களாய் இருந்தனர். காரணம், அரசர்கள் இச் சர்வாதீன உரிமையை நல்வாய்ப்புடைய தொழில் துணிவோருக்கு வழங்காமல், தமக்கு வேண்டியவர்களுக்கும் நண்பர்களுக்கும்தாம் வழங்கினர்.

இதனுல் பொதுமக்கள் வெறுப்படைந்து, பொதுக்கூட்டங்களிலும் துண்டு வெளியீடுகளிலும் தம் வெறுப்பை வெளிக்காட்டியதோடு, பாராளுமன்றத்தில்கூட காரசாரமாக வாதாடினர். இறுதியாக, 1688ஆம் ஆண்டின் புரட்சியின் விளைவாகப் பாராளு

[4] Herman Levy அவர்களின் ‘Economic Liberalism’ என்னும் நூலில் 30ஆம் பக்கம். Copyright 1913 by The Macmillan Company, London.

மன்ற மேலாதிக்கம் ஏற்பட்டு, சட்டங்களை நீக்கிவைக்கும் அரச அதிகாரம் ரத்து செய்யப்பட்டது. அதன் பின்னரேதான் விரும்பும் எந்தத் தொழிலையும் ஒருவர் மேற்கொள்வதற்குரிய உரிமை கிடைத்தது.

எனினும், கட்டுப்பாட்டின்மீது ஏற்பட்ட வெறுப்பு அரசாங்க ஆதரவு பெற்ற சர்வாதீனங்களோடு நிற்கவில்லை. இடைக் காலத்தில் தோன்றி நடைமுறையிலிருந்த விலைக் கட்டுப்பாடு, கூலிக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் பரவியது. காபினெட் சபைக்கும் மேலானதொரு சபையைப்போன்ற பிரிவி கவுன்ஸிலின் தலைமையில்தான் (Privy Council) இக் கட்டுப்பாட்டுச் சட்ட திட்டங்கள் மேற்பார்வையிடப்பட்டு அமல் நடத்தப்பட்டது. அமைதி காக்கும் நீதிபதிகள் (Justices of the Peace) இச் சட்ட திட்டங்களை ஆங்காங்கே நிறைவேற்றிவந்தனர். கிராம்வெல் காலத்திய புரட்சியின்போது (1642-46) பிரிவி கவுன்ஸில் ரத்து செய்யப்பட்டதால், இம் முறையின் தலைமை மறைந்துவிட்டது. தலையின்றி வெறும் அங்கங்களால் செயல்பட வேண்டியிருந்ததால், இம் முறை நலிவுற்று, ஒத்திசைவின்றிச் சிறிது காலம்வரைதான் செயல்பட முடிந்தது. அமைதி காக்கும் நீதிபதிகள் பல்வேறு கடமைகளோடு இதையும் சுமக்க முடியாது தவித்தனர். கூலிக் கட்டுப்பாட்டிற்கும், விலைக் கட்டுப்பாட்டிற்கும் கடுமையான எதிர்ப்பு கிளம்பிய இடங்களிலெல்லாம் இச் சட்டங்களைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை. அதன் விளைவாக 18ஆம் நூற்றுண்டில் இக் கட்டுப்பாட்டு முறை அழிந்துவிட்ட நிலைக்கு வந்துவிட்டது.

17ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அல்லது 18ஆம் நூற்றுண்டில் அரசாங்கத்தின் இதர கட்டுப்பாடுகளும் சிறிது சிறிதாய் மறைந்துவிட்டன. அரசியலமைப்பில் வல்லமைமிக்க உறுப்பாகப் பாராளுமன்றம் அமைந்தபோது, அரசர்கள் தம் பதிலாட்களைக் கொண்டு பொருள்களின் தரத்தைக் கட்டுப்படுத்திவந்த சட்ட திட்டங்கள் கைவிடப்பட்டன. தொழில் பயில்வோரின் நிலையை ஒழுங்குபடுத்துவதற்காக எலிஸபெத் ராணி காலத்தில் அமலாக்கப்பட்ட கைவினைஞர்கள் சட்டம்கூட சரியாக அமல் நடத்தப்பெறவில்லை. பாராளுமன்றம் இச் சட்டத்தின் கீழிருந்த ஒவ்வொரு தொழிலுக்கும் விதிவிலக்குக் கொடுத்துவந்தது.

இவ்வாறாக, 17ஆம் நூற்றுண்டின் இறுதியில் பொருளாதாரத்துறையில் மட்டுமன்றி, இன்னும் ஏனைய துறைகளிலும் தனியுரிமை வேண்டுமென்ற வலுவான உணர்ச்சி பரவிவந்தது.

முதலாளித்துவ வாணிபமும் தொழிற்சாலை முதலாளித்துவமும் வளர்ச்சி பெற்றதுதான் இதற்குக் காரணமாகும். புதிய இடங்களைக் கண்டுபிடித்ததன் விளைவாக ஏற்பட்ட பெரு வாணிப வாய்ப்புகளைப் பயன்கொள்ளத் தனி மனிதர் கொண்டிருந்த எழுச்சிதான் இதற்குக்காரணமாக இருந்தது.

மதம்

இடைக்காலம் முழுவதும் மதத்தின் செல்வாக்கு தனிநபருக்கு எதிராகவும் சமுதாயத்திற்குச் சாதகமாகவும்தாம் இருந்துவந்தது. ஒவ்வொரு மனிதனின் நிலையையும், தொன்மைதொட்டு இருந்து வந்த அவனது உரிமைகளையும் கடமைகளையும் கொண்ட இடைக் காலத் தகுநிலை முறையைத் தனது அதிகாரத்தால் ஆதரித்து வந்தது. அதோடு, சமுதாய அமைப்பின் கட்டுக்கோப்பிற்கும் வெகுவாய் உதவிவந்தது. கத்தோலிக்கத் திருச்சபை 'நியாய விலைக்கு' மேல் (just price) வசூலிப்பதை மட்டுமன்றி, அமித வட்டி வசூலிப்பதையோ அல்லது வட்டிக்காகக் கடன் கொடுப் பதையோ ஆதரிக்க மறுத்துவிட்டது. இவற்றில் எதைச் செய் தாலும் அது வலிந்து பெறுதலான குற்றமும், பேராசையான பாவமும் ஆகும் என்று போதித்தது. உண்மையில் திருச்சபையும் அதன் அறநெறிப் போதனையும் சமுதாயத்தை மட்டுமன்றி, மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் ஒன்றாகக் கலந்து காணப் பட்டது.

வாணிபம் செய்வதற்குரிய வாய்ப்புகள் அதிகரித்து, இலாபம் பெறவேண்டுமென்ற குறிக்கோள் வலுவான சக்தியாக வளர்ந்தபோது, தனி மனிதனின் சுதந்திர ஆர்வமும் வளர்ந்தது; அதே சமயம், அவ் வளர்ச்சிக்குக் குறுக்கே இருந்த தடைகள் தகர்த்தெறியப்படலாயின. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் சட்டத் தையும் மக்களின் மனப்பான்மையையும் இது எவ்வாறு மாற்றி அமைத்தது என்பதைச் சற்று முன்னர்தான் பார்த்தோம். இதன் செல்வாக்கிலிருந்து மதம்கூடத் தப்ப முடியவில்லை. இடைக்காலத் திலேயே 'நியாய விலைக்' கோட்பாடும், அமித வட்டித் தத்துவமும் வணிகருக்கும் முதலீடு செய்வோருக்கும் சாதகமான வகையில் சிறிது தளர்த்தப்பட்டன. வணிகரும் தொழிற்சாலை முதலாளிகளும் மேலும் மேலும் வளர்ந்து, செல்வாக்கு மிக்கவர் களாக உயர உயர, பொருளாதார வாழ்க்கையின் மாறுதல்களைப் பிரதிபலிப்பதாக அமைந்த அவர்களின் கருத்துகள், கத்தோ லிக்கத் திருச்சபையைமட்டுமன்றி இதர கிறித்துவத் திருச்சபை களையும் படிப்படியாகப் பின்வாங்கும்படி செய்துவிட்டன.

'தமக்குப் புறம்பான வர்த்தக மனப்பான்மை வளர்ச்சிக்கு ஏற்ப, கிறித்துவத் திருச்சபைகள் அனைத்தும் பொருத்தமாய்த் தம்மைமாற்றிக்கொள்ளுமாறு செய்துவிட்டன......முதலாளித்துவம் தானாக உருவாக்கிக்கொண்ட அல்லது ஏற்கெனவே இருந்த ஒன்றை ஏற்றுக்கொண்ட கருத்தைத் திருச்சபைகளும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற பணியை உண்டாக்கியது.'[5]

வர்த்தகத் துறையில் வளர்ந்த தனியுரிமைக் கோட்பாட்டிற்கும் (individualism) மதத்திற்கும் நடந்த போராட்டத்தில், பொதுவாக மதம்தான் தோல்வியுற்றது. புராட்டஸ்டன்ட் (protestant) திருச்சபையைப் பொறுத்தவரை, தனியுரிமைக் கோட்பாடு அம் மதத்திலேயே புகுந்து அதைத் தனது நோக்கத்திற்கு இசைய வைத்தது. டாவ்னி (Tawney) அவர்கள் குறிப்பிடுவதுபோல், புராட்டஸ்டன்ட் மதம் தோன்றிய புதிதில் மதப் பிரிவு ஒழுங்கு முறையும் பழமைப் பற்றும் அதிகமாக இருந்தபோதிலும், 17ஆம் நூற்றாண்டில் அவை பொருளாதார உரிமைக்கு அடிபணிந்தன.[6] பின்னர் வந்த புராட்டஸ்டன்ட் திருச்சபை தனியுரிமைக் கோட்பாடு பரவுவதற்குத் தீவிரமான ஊக்கம் தந்தது. உதாரணமாக, பியூரிட்டானிய (puritans) வேலைக் கோட்பாடு பொருளாதாரச் செயல்களின் பெருமையை வற்புறுத்தியதோடு மட்டுமன்றி, வேலையின்றிச் சோம்பலாயிருப்பது பாவம் என்றும் கருதியது. பியூரிட்டானிய மதம் கேளிக்கை, கட்டுப்பாடற்ற வாழ்வு, மட்டற்ற விடுதலை ஆகியவற்றை ஏளனம் செய்ததோடு அவற்றை வெறுக்கவும் செய்தது. ஆனால், அதேசமயம், தனது அங்கத்தினர்கள் உற்பத்தி முயற்சியுடையோராய் மட்டுமல்லாது, வேலைகளில் அக்கறை காட்டவேண்டுமென்றும் செட்டாக வாழவேண்டுமென்றும் தூண்டியது. ஒரு கிறித்துவன் தனது தொழிலை வாழ்க்கைக்கு இன்றியமையாததாய்க் கொள்ளாமல், தனக்கேற்றதோர் அழைப்பாக அதைப் பாவிக்கவேண்டுமென உழைப்பிற்கு உயர்வு தந்தது.

புராட்டஸ்டன்ட் மதம் தனியுரிமைக் கோட்பாட்டுச் சக்திகளை மற்றொரு வழியிலும் வலுப்படுத்தியது. காரணம், அதிகாரத்தை மறுப்பதையே தனது மதத்தின் அடிப்படையான அம்சமாகக்

[5] H. M. Robertson அவர்களின், 'Aspects of the Rise of Economic Individualism' என்னும் நூலில், 165ஆம் பக்கம். Copyright 1933 by Cambridge University Press, New York.

[6] R. H. Tawney அவர்களின் 'Religion and the Rise of Captalism' என்னும் நூலில் குறிப்பாக 4ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும். Copyright 1926 by Harcourt, Brace & Co., New York.

கொண்டிருந்தது. தனி மனிதனின் மனச்சாட்சி உரிமையை வலியுறுத்தியதன் வழியாக மதத்தின் அதிகாரத் தன்மையை மறுக்கவும், தனியுரிமைவாதியாக வாழவும் தூண்டியது. இங்கிலாந்து நாட்டின் வசதியான நடுத்தர வகுப்பினருள் திருச்சபைக்கு இணங்காதார் (dissenters) பெரும்பான்மையினராக இருப்பதிலும், இங்கிலாந்தின் திருச்சபையையும் அதற்கு ஆதரவான முடியாட்சியையும் அவர்கள் எதிர்த்தலும், பாராளுமன்ற ஆதிக்கத்தை ஏற்படுத்த அவர்கள் நடத்திய புரட்சியிலும் எதிர்பாராதது ஒன்றுமில்லை.

மெர்க்கன்டலிஸக் கருத்துகளின் சீரழிவு

மெர்க்கண்டலிஸ்டுகள் பொன்னுக்கும் வெள்ளிக்கும் அமித முக்கியத்துவம் கொடுத்ததற்கு அவர்கள் செல்வத்திற்கும் பணத்திற்குமுள்ள வேறுபாட்டை அறியாததுதான் காரணமென்பதும், இத் தவறுதான் தங்கச் சுரங்கமும் வெள்ளிச் சுரங்கமும் இல்லாத நாடுகள் சாதகமான வாணிப நிலையைக் கொண்டுதான் அவற்றைப் பெறமுடியுமென்ற மெர்க்கன்டலிஸக் கோட்பாட்டிற்கு வழி வகுத்தது என்பதும் நம் ஆய்விலிருந்து தெளிவாகிறது.

இக் கோட்பாட்டிற்கு எதிரான கண்டனங்களின் காரணமாக, பணத்திற்கும் இதரவகைச் செல்வங்களுக்குமுள்ள தராதர மதிப்பைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களை மெர்க்கண்டலிஸ ஆசிரியர்கள் சிறிது சிறிதாக மாற்றிக்கொண்டனர். பணம்தான் எல்லாவற்றையும்விட முக்கியமான செல்வம் என்ற எண்ணம் 18ஆம் நூற்றுண்டுவரை காணப்பட்டது; எனினும், செல்வத்தின் உண்மையான இயல்புகளைப்பற்றிய கருத்து எங்கும் உலவியது.

பண அளவும், விலை-பொன்-இடப்பெயர்ச்சிக் கோட்பாடும் (The Quantity of Money and the Price-Specie-Flow Theory)

வாணிபத்தையும் முதலீட்டையும் ஊக்குவிப்பதற்கு ஏராளமான பண அளிப்பு அவசியம் என்ற தத்துவம்தான் வாணிப நிலைக் கோட்பாட்டிற்கு ஆதாரமாக இருந்தது. ஆனல், இக் கருத்து வேலையின்மை நிலை இருந்தால்மட்டுமே பொருத்தமானதாயிருக்க முடியும்; எனினும், இக் கருத்தை ஆதரித்தோர் அவ்வித வரையறை ஏதும் செய்யவில்லை. பணத்தின் அளிப்பை அதிகரிக்க அதிகரிக்க, உற்பத்தியின் அளவும் வாணிப அளவும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும் என்று அவர்கள் கருதினர்கள். பண அளவுக் கோட்பாடு பற்றி (quantity theory of money) அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாததுதான் இத் தவற்றுக்குக் காரணமாகும். இக் கோட்பாடு

17ஆம் நூற்றாண்டிலேயே பலரால் சுருக்கமாகவும் எளிதாகவும் விளக்கப்பட்டதெனினும், அக் காலத்திய சிந்தனையில் முக்கிய இடம் பெறவில்லை. எனவேதான், பண அளவுக் கோட்பாடு, வரையறையில்லாத வாணிப நிலைக் கோட்பாட்டோடு சரியாகப் பொருந்தாது என்பதை அவர்கள் உணர முடியவில்லை.

இத் தவற்றை நிவர்த்திப்பதற்காகப் பலர் திருத்தங்களைக் கொடுத்தனர். 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜான் லாக் (John Locke) என்பார் பண அளவுக் கோட்பாட்டிற்குத் தெளிவான விளக்கம் கொடுத்து அதை வலியுறுத்தினர். ஆனால், அக் கோட்பாட்டிற்கும் வாணிப நிலைக்குமுள்ள தொடர்பை ஆராய அவர் தவறிவிட்டார்.[7] லாக் அவர்களின் காலத்திலேயே வாழ்ந்த டட்லி நார்த் (Dudley North) என்பவர் வாணிபத் தேவைக்கேற்ப பண அளிப்புத் தானாகவே சரிப்பட்டுவிடுகிறது என்ற முடிவிற்குத் தம் கருத்தை வெளியிட்டார்.[8] ஆனால், பண அளவுக் கோட்பாட்டை அவர் நன்கு அறியாத காரணத்தால் சரியான முடிவிற்கு வர அவரால் இயலவில்லை.

பண அளவுக் கோட்பாட்டையும் வாணிப நிலைக் கோட்பாட்டையும் சேர்த்துவைத்து, ஒன்றோடொன்றைப் பொருத்தி ஆய்ந்த பின், வாணிப நிலைக் கோட்பாட்டின் அடிப்படையையே தகர்த்தெறிந்த பெருமை டேவிட் ஹியூம் (David Hume) அவர்களைச் சாரும்.

‘கிரேட் பிரிட்டனிலுள்ள பணத்தில் ஐந்தில் நான்கு பங்கை ஓரிரவில் அளித்துவிடுவதாகக் கொள்வோம்..............இதன் விளைவு என்னவாகும்? பண்டங்களின் விலை, தொழிலாளர்களின் கூலி ஆகியவை இந்த விகிதத்தில் குறைந்துவிட வேண்டாமா? ....அப்படியானால் வெளிநாட்டு அங்காடியில் நம்மோடு எந்த நாடு போட்டியிட முடியும், அல்லது கப்பலோட்டக்கூடும்? அல்லது நமக்குப் போதுமான ஆதாயம் தரக்கூடிய அதே விலையில் எந்த நாடு தம் செய்பொருள்களை விற்கமுடியும்? எனவே, இவ்வாறு நாம் இழந்த பணத்தை எவ்வளவு குறுகிய காலத்தில் இது திரும்பவும் கொண்டுவந்து, நமது அயல்நாட்டவர்களின் நிலைக்குச் சமமாக இது நம்மை உயர்த்தவும் செய்கிறது? அவ்வித

[7] John Locke, ‘Some considerations,’ etc., in works Vol. 5, பக்கம் 43.

[8] James W. Angell அவர்களின், ‘The Theory of International Prices’ என்னும் நூலில் 16-18 பக்கங்கள். Copyright 1926 by Harvard University Press, Cambridge.

நிலையை நாம் எய்தியவுடன் பண்டங்களின் விலையும் தொழிலாளரின் கூலியும் மலிவாக இருந்த நிலையை நாம் உடனே இழந்துவிட்டு, மேலும் பணம் நம் நாட்டிற்குள் ஓடிவருவது நமது நிறைவினாலும் பூரணத்துவத்தாலும் நிறுத்தப்பட்டுவிடும் அல்லவா?"[9]

இதில் தொன்மைப் பொருளாதார விலை-பொன்-இடம் மாற்றுக் கோட்பாட்டின் சாரம் உள்ளது. ஒரு நாட்டிலுள்ள விலைகளை அந் நாட்டின் பண அளவுதான் நிர்ணயிக்கிறது; பல நாடுகளில் நிலவும் விலைகளோ ஒன்றையொன்று சார்ந்தவைகளாகும். விலை தாழ்வாயுள்ள நாடு விலை உயர்வாயுள்ள நாட்டில் குறைந்த விலையில் விற்கும்போது விலை தாழ்வாயுள்ள நாட்டிற்குத் தங்கம் வந்துகொண்டிருக்குமாகையால், அங்கு விலை உயரவும், உயர்வாயிருந்த நாட்டில் தாழவும் முற்படும். இவ்வாறு ஒவ்வொரு நாட்டின் விலை மட்டமும் (price level) பொதுவான தொடர்புடையதாகி, இறுதியில் சமநிலையை (equilibrium) அடைகிறது.

முரண்பாட்டு நீக்கம் (Reconciliation)

மெர்க்கன்டலிஸ்டுகளின் காலத்தில் பன்னாட்டு வாணிப நிலைக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றிருந்ததைப்போல், விலை-பொன்-பெயர்ச்சிக் கோட்பாடு 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. வாணிப நிலைக் கோட்பாடு 'வேலை வாய்ப்பினைத் தூண்டுதற்குரிய' வாதப் பொருத்தமுடன் கூறப்பட்டதெனினும், வேலை நிறைவு (full employment) உள்ளபோது பணத்தின் அளிப்பை அதிகரிப்பது வேலை வாய்ப்பை ஏற்படுத்தாது விலையைத்தான் உயர்த்தும் என்ற இயல்பை அது கண்டுணரவில்லை. மாறாக, விலை-பொன்-பெயர்ச்சி ஆய்வோ, வேலை நிறைவை இயல்பான சமநிலையாக அனுமானித்துக்கொண்டு இச் சமநிலையிலிருந்து பிறழ்ந்தால், அதற்கேற்ப நாணயம் நாட்டைவிட்டு வெளியேறி அல்லது நாட்டிற்குள் புகுந்து விலைகளைப் பாதிப்பதன் வழியாகப் பண்டங்களுக்குள்ள தேவையைப் பாதிக்கும் என்ற விளக்கத்தின்மூலம் இயல்பான சமநிலையை எண்பிக்க முனைகிறது. 1937-ல் லார்டு கீன்சு (Lord Keynes) அவர்களின் 'வேலை, வட்டி, பணம்பற்றிய பொதுத் தத்துவம்' என்ற நூல் வெளியாகி, பின்னர் இத் தத்துவத்தை அயல்நாட்டு வாணிப ஆய்விற்கு விரிவுபடுத்தியதன் பின்னர்தான்

[9] David Hume அவர்களின், 'Essay of the Balance of Trade' என்னும் நூலிலுள்ள இப் பகுதியை Arthur Eli Munroe அவர்களின் 'Early Economic Thought' என்னும் நூலில் 325ஆம் பக்கத்தில் பார்க்கவும். Copyright 1927 by Harvard University Press, Cambridge.

இவ்விரண்டு முரண்பாடான கருத்துகளுக்குள் சமரசம் ஏற்பட்டது. பயன்படுத்தப்பெறாத சாதனங்கள் இருந்தால்மட்டுமே சாதக மான வாணிப நிலை (அல்லது விரிவான ஏற்றுமதி) வேலை வாய்ப் பினைத் தூண்டமுடியும் என்பதை இன்று நாம் அறிவோம். ஆனால், வேலை நிறைவு உள்ளபோது சாதகமான வாணிப நிலை ஏற்பட்டால் அது விலைகளைத்தான் உயர்த்துமேயன்றி வேலை வாய்ப்பை அல்ல.

அரசியல் சிந்தனையில் தனியுரிமைக் கோட்பாடு

நவீன மெய்யுணர்வு நூல் (philosophy) டெகார்டெஸ் (Decartes) என்பவரிலிருந்துதான் தொடங்குகிறது. இதற்குத் தகுந்த காரணம் உண்டு. அவர் தம் நூலை எழுதிய காலம் (1630 முதல் 1649 வரை), அதிகாரமுடையோரை நம்பி அறிவைப் பெறு வதற்குப் பதிலாக ஆய்வறிவு சார்ந்த விளக்கத்தை நம்பிப் பெறுவதில் மக்கள் ஈடுபட்ட காலமாகும். அப்போது மனிதனின் அறிவால் கண்டுபிடிக்கக்கூடிய விதிகளால்தான் இயலுலகம் இயங்குவதாக அவர் உணர்ந்தார். அறிவைப் பயன்படுத்துவது தனி மனிதனுடைய செயல் என்பதால், அவன் தன்னைச் சுற்றி யுள்ள உலகத்தைக் கண்டு அறிந்து விளக்குவதிலே கொள்கின்ற சுதந்திரமும் சிறப்பு நிலையும் வெகுவாகத் தூண்டப்பெற்றது.

லாக்கும் அரசாங்கத்தின்மீதான வரம்புகளும்

இயலுலகம்பற்றிய இந்த நவீனக் கருத்தினை ஜான் லாக் என்பார் (John Locke) ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி, அதை அரசியல் பிரச்சினைகளுக்குப் பொருத்தி ஆயலானார். தனது சொந்த விதிகளுக்குமட்டுமே கட்டுப்பட்ட 'இயற்கை நிலையில்' (state of nature) மக்களெல்லாம் சமத்துவம் வாய்ந்தவராயிருந் தனர் என்று அனுமானித்துக்கொண்டார். இச் சமத்துவத்தின் காரணமாக மக்களுக்குச் சில இயற்கை உரிமைகள் இருந்தன. 17ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தின் குடிமகன் என்ற முறையில் வாழ்க்கை, சுதந்திரம், சொத்துரிமை ஆகியவற்றை இயற்கை நிலை உரிமைகளாகவே லாக் கருதினார். ஆனால், மக்களெல்லாம் உரிமையில் ஒத்தவர்களாயிருந்தபோதிலும், அறிவாற்றலில் வேறுபாடு உடையவர்களாதலால், இயற்கைச் சட்டங்களுக்கு வெவ்வேறு விதமாகப் பொருள் கொள்வர். அப்போது குழப்பமும் சிக்கலும்தாம் ஏற்படும். எனவே, ஒவ்வொரு மனிதனும் அமைதி யான வழியில் தன் இயற்கை உரிமைகளை அடையவும், ஒழுங்கை நிலைபெறச் செய்யவும் வேண்டுமாயின், அரசாங்கம் இன்றியமை

யாததாகிறது. மக்கள் தங்கள் 'சமுதாய ஒப்பந்தத்தின்' (social contract) வழியாக அரசாங்கத்தை அமைத்து, வாழ்க்கை, சுதந்திரம், சொத்துரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக வேண்டிய சட்டங்களைமட்டும் இயற்றுவதற்கு அதற்கு அதிகாரம் வழங்கினர். இவ்வாறாக, அரசாங்கம் தெளிவான, வரம்பிற்குட் பட்ட பணிகளைமட்டுமே கொண்டதாகும்—தனி மனிதன் இயற்கை நிலையில் எவ்வாறு வாழ்வானோ, அவ்வாறு வாழவிடாமல் இயற்கைச் சட்டங்களுக்கு அமைந்து வாழ வழிசெய்வதுதான் அரசாங்கத்தின் பணியாகும்.

சமுதாய ஒப்பந்தப்படி, அடக்குமுறை ஆட்சிக்கு இடமே இல்லை. ஏனெனில், அடக்குமுறை அரசாங்கம் சமுதாய ஒப்பந்த வரம்பினை மீறுவதாயிருக்கும். அப்போது அவ்வரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சிகள் ஏற்படும். அவ்வாறு புரட்சி இன்றியமையாத தாயின், அது பெரும்பான்மையோரால் செயல்பட வேண்டும். இவ்வகை ஆட்சியைத் தவிர்க்கவேண்டுமாயின், மக்கள் ஆட்சி அவசியம்—இது பெரும்பான்மையோரின் எண்ணத்தைப் பிரதி பலிப்பதாக இருக்கவேண்டும்.

இவ்வாறாக, லாக் அவர்கள் தனிநபர்களின் நலனைப் பாது காக்கக்கூடிய, வரம்பிற்குட்பட்ட மக்களாட்சி அரசாங்கத்தை எடுத்து விளக்கினார். 1688ஆம் ஆண்டின் இங்கிலாந்து புரட்சியில் பாராளுமன்றத்திற்கும் அரசருக்குமுள்ள உறவுகளை நிர்ணயிப் பதில் அவருடைய அரசியல் சுதந்திரக் கோட்பாடு பயன்பட்டது. அவரைப் பின்பற்றிய பலர் இக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட தோடு, அதை விரிவாக்கவும் செய்தனர். அவ்வாறு விரிவாக்கப் பட்ட கோட்பாடுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், அமெரிக்க சுதந்திர அறிக்கைக்கும், ரூசோ (Rousseau) அவர்கள் பொருள் கொண்டதன்படி பிரெஞ்சுப் புரட்சிக்கும் அறிவார்ந்த அடிப்படை யாக அமைந்தது.

ஆதம் ஸ்மித்தும் புதுப் பொருளாதாரமும்
(Adam Smith and the New Economics)

அங்காடிக்காக உற்பத்தி

நவீன கால முற்பகுதியில் ஏற்பட்ட வாணிப, அரசியல் புரட்சிகளெல்லாம் 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் தம் பணிகளை முடித்துவிட்டன. இங்கிலாந்திலும் ஹாலந்திலும் இருந்த எளிமை யான விவசாய சமுதாயம், செழித்தோங்கும் வாணிபத்தையும் தொழிற்சாலைகளையும் கொண்ட சிக்கல் நிறைந்ததொரு சமுதாய

மாக மாறிவிட்டது. வேறு சில நாடுகளுக்கும்கூட இது ஓரளவு பொருந்தும். அந்தந்த இடங்களில்மட்டும்' நடைபெற்றுவந்த வாணிபம், நாடு முழுவதும் நடக்கக்கூடிய அளவினதாய்மட்டு மன்றி, உலகெங்கும் நடைபெறக்கூடிய அளவிற்கு விரிந்தது. ஆட்டு ரோமத்தையும் கோதுமையையும் ஏற்றுமதி செய்துவந்த இங்கிலாந்து நாடு, இப்போது நெசவுப் பொருள்கள், செருப்பு, தொப்பி, தோல் பொருள்கள், இரும்பு, வெள்ளீயக் காரீயப் பொருள்கள், நிலக்கரி முதலியனவற்றை ஏற்றுமதி செய்தது. குடிசைத் தொழில் முறையும், ஆங்காங்கே காணப்பட்ட சிற்றளவு தொழில் முறையும் நீங்கி, இப்போது பெரிய முதலாளித்துவ முறைக்கு இடம் கொடுத்துவிட்டன. தொழிலாளிகளுக்கு வேண்டிய ஆணைகளையும், கச்சாப். பொருள்களையும், கருவி களையும் பெரு முதலாளிகள் கொடுத்தனர். தமது உழைப்பிற்கு ஈடாக, அங்காடிச் சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட கூலியைத் தொழிலாளிகள் பணமாகப் பெற்றனர். தொழில்களுக்கும் வாணிபத் திற்கும் பணிபுரிவதற்கென்று 1694ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இங்கிலாந்து பாங்கின் (Bank of England) தலைமையில் பாங்கு செலாவணியையும் உண்டியல்களையும் (Bills of exchange) பெரு மளவு பயன்படுத்திவரும் பாங்கு முறை வளர்ச்சியுற்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக, கில்டு முறைக் கட்டுப்பாடு, நகரசபை அதிகாரம், திருச்சபை ஒழுங்குமுறை, அரசின் ஆணை எதுவுமின்றிப் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. எதை, எந்த முறையில் உற்பத்தி செய்து, என்ன விலைக்கு விற்பது என்பதையெல்லாம் பொது முறையைக்கொண்டு வளர்ந்துவந்த அங்காடியில் பணிபுரியும் தொழில்முயல்வோரே தீர்மானித்தனர்.

விவசாயத்துறையில் பழைய மேனர் பண்ணை முறை நீங்கி, அங்காடிக்கென்று உற்பத்தி செய்யும் முறை தோன்றிவிட்டது. நிலச் சொத்துகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிமை வளர்ந்தது. எனவே, துணிச்சல் கொண்ட பெரு விவசாயிகள் மிகச் சிறிய பண்ணைகளை வாங்கித் தத்தம் பண்ணைகளை ஒருங்கிணைப் பதில் முனைந்தனர். எலிஸபெத் ஆட்சிக் காலத்தோடு பண்ணையாள் முறை மறைந்துவிட்டது. இப்போது சிறுசிறு பண்ணைகளில் அவற்றின் சொந்தக்காரர்களே சாகுபடி செய்தனர். பெரு நிலக் கிழாருக்குச் சொந்தமான பெரும் பண்ணைகளிலும் நடுத்தர அளவு பண்ணைகளிலும் குத்தகைதாரரைக்கொண்டு சாகுபடி நடந்தது. செல்வமிக்க வணிகர்கள் தாமும் நிலச் சொந்தக்காரர்களாய் ஆகவேண்டுமென்பதற்காகப் பண்ணைகளை வாங்க முற்பட்டதால்,

பெரும் பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. பெருங் கொள்ளை நோயின் விளைவாக (1348-49) போதுமான தொழிலாளர் கிடைக்காததால், திறந்த வயல் சாகுபடியைக்கொண்ட மேனர் பண்ணை முறையில் (Manorial open-field system) அங்கும் இங்கும் துண்டாகக் கிடந்த சிறுசிறு பண்ணைகளையெல்லாம் ஒருங்கிணைத்துப் பெரும் பண்ணைகளாக்குவதன்மூலம் நில அடைப்பு இயக்கம் (enclosure movement) தொடங்கியது. இங்கிலாந்து நாட்டின் கம்பளித் தொழில் முக்கியத்துவம் பெற்றதால், அதற்கு வேண்டிய கச்சாப் பொருள்களின் தேவை அதிகரித்தது. பயிர் சாகுபடியைக்காட்டிலும் ஆட்டு மந்தை வளர்க்கும் தொழில் இலாபகரமானதாகியதால், டியூடர் (Tudors) ஆட்சியில் நில அடைப்பு இயக்கம் விரைவாகியது. இருந்தபோதிலும், 17ஆம் நூற்றுண்டின் இறுதியில் நில அடைப்புச் செய்யப்பட்ட நிலம் மொத்தத்தில் சிறு விகிதாசாரம்தான்.[10] ஆனால், 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பழைய திறந்த வயல் சாகுபடி முறையே மறைந்துவிடக்கூடிய அளவிற்கு நில அடைப்பு இயக்கம் விரைவாக நடந்தேறியது.

புதிதாகவோ அல்லது அனுபவமற்றதாகவோ இல்லாது, பாதுகாப்புடன் நன்கு அமைந்த தற்கால அரசு அதனுடைய அதிகாரத்தை வளர்க்கும் நோக்கோடுதான் கொள்கைகள் யாவற்றையும் வகுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தம் விருப்பப்படி எந்தத் தொழிலையும் நடத்துவதற்குரிய தனிநபர் உரிமையை அது சகித்துக்கொள்ளக்கூடும். மேலும், ஹாலந்து நாட்டில் வணிக வகுப்பினரே அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அதே சமயம் இங்கிலாந்தில் நிலக்கிழாரிடமிருந்த அரசாங்கத்தில் அவர்கள் பங்கு கொள்ள முடிந்தது. உள்நாட்டு வணிகம், தொழில் ஆகியவற்றின் மெர்க்கன்டலிஸக் கட்டுப்பாடுகளுடன், அது ஆதரித்த இடைக்காலத்திற்குரிய அம்சங்களையும் நிலைக்கச் செய்யவேண்டுமென்ற அக்கறை அரசாங்கத்திற்குக் குறைந்துவிட்டதாலும், இவற்றை நீக்க வேண்டுமென்று வணிகரும் உற்பத்தியாளரும் அதிக அக்கறை காட்டியதாலும் அவை அனைத்தும் மறைந்தன. பொருளாதார ஆய்வு வளரவளர, மெர்க்கன்டலிஸத் தத்துவத்தின் தூண்டிய சாதகமான வாணிப நிலை—ஏற்றுமதி செய்யும் வகுப்பினருக்கு இது வரவேற்கத் தகுந்ததாயிருந்தும்கூட—ஆட்டம் கண்டது.

[10] நில அடைப்பு இயக்கத்திற்கு W.H.R. Curtler அவர்களின், 'A Short History of English Agriculture' என்னும் நூலில் 7, 9, 11ஆம் அத்தியாயங்களைக் குறிப்பாகப் பார்க்கவும். Published in 1909 by Clarendon Press, Oxford.

ஆதம் ஸ்மித்தும் 'கண்ணுக்குப் புலனாகாக் கரமும்' (Adam Smith and 'the Invisible Hand')

18ஆம் நூற்றாண்டின் மத்தியில் தனி உரிமைக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றிருந்தது மட்டுமன்றி, லாக் அவர்களின் நூலின் வழியாக அரசியல் ரீதியான விளக்கத்தையும் பெற்றிருந்தது. இருந்தபோதிலும், அது முழுமையானதொரு பொருளாதாரத் தத்துவமாக உருப்பெறவில்லை. ஆதம் ஸ்மித் அவர்கள் ஆற்றுவதற்கிருந்த சிறப்புமிக்க பணி அதை உருவாக்குவதுதான். அரசாங்கத்திற்கு லாக் என்ன செய்தாரோ, அதைப் பொருளாதாரத்திற்கு ஆதம் ஸ்மித் செய்தார். இவ் வியனுலகம் அனைத்தும் இயற்கை விதியால் ஆளப்படுகிறது; தனியார் தொழில் முயற்சிதான் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மிகச் சிறந்த வழியென்று அன்று நிலவிவந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில் முழு உருப்பெற்ற தனியார் உரிமைப் பொருளாதார அமைப்பினை அவர் உருவாக்கினார். அவரது கருத்துகளின் சாரம் கீழ்க்காணும் சொற்றொடர்களில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

தனி மனிதன்தான் தனது சொந்தக் காரியங்களில் முடிவு செய்வதற்குச் சிறந்த தகுதி பெற்றவன்.

தனியார் நலன்கள் இயற்கையின் ஒருமைப்பாட்டிற்கு முரண்பட்டவையல்ல; அவற்றிற்குக் கட்டுப்பட்டவையே.

எனவே, தனிநபரின் தன்னலச் செய்கைகள் எல்லோருக்கும் நன்மை பயப்பனவாகவே அமைகின்றன. இதனால் அரசாங்கத்தின் இடையறுக் கட்டுப்பாடு அவசியமற்றது. அரசாங்கம் சும்மா இருந்துகொண்டு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுமானால், மிகச் சிறந்த பயனை அடைய முடியும்.

ஏன் ஆதம் ஸ்மித்தே தனக்காகப் பேசிக்கொள்ளட்டும்:

'தனிநபர் ஒவ்வொருவரும் தன்னால் முடிந்தவரை தனது மூலதனத்தை உள்நாட்டுத் தொழிலுக்கு ஆதரவாகப் பயன்படுத்தவும், அத் தொழிலின் உற்பத்திப் பொருள் சிறந்த மதிப்பை அடையும்படி அதை நடத்தவும் முயற்சி செய்கிறான். இவ்வாறு ஒவ்வொருவரும் சமுதாயத்தின் ஆண்டு வருமானத்தை எவ்வளவு அதிகமாக்க முடியுமோ அவ்வளவு பெரிதாக்க நிச்சயமாகப் பாடுபடுகிறான். உண்மையில் அவன் பொதுநலத்தை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடோ அல்லது தான்

பொதுநலத்தை எவ்வளவு தூரம் விருத்தி செய்கிறேன் என்று அறிந்தோ செய்வதில்லை. தனது சொந்த இலாபம் கருதித்தான் வெளிநாட்டுத் தொழிலுக்குப் பதிலாக உள்நாட்டுத் தொழிலை விரும்பி மேற்கொள்கின்றான். ஆனால், ஏனைய பல காரியங்களைப் போலவே இதிலும் அவனது நோக்கத்திற்கு அப்பாற்பட்ட முடிவை மேற்கொள்ளும்படி கண்ணுக்குப் புலனாகாததொரு கரத்தால் அவன் வழிநடத்தப் பெறுகிறான். அவ்வாறு அவன் தன்னை அறியாமலே பொது நோக்கத்தை மேற்கொள்வதால் சமுதாயத்திற்கு ஒன்றும் நட்டமில்லை. ஏனெனில், தனது சொந்த நலத்தையே விருத்திசெய்ய முற்படும் அவன், உண்மையிலேயே சமுதாயத்தின் நலத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று கருதிச் செய்வதைக்காட்டிலும் சிறப்பாக அதை விருத்தி செய்துவிடுகிறான்.'[11]

இந்த ஆய்விலிருந்து முக்கியமானதொரு முடிவு வெளிப்படுகிறது. கூடுமானவரை தொழிலுரிமையால்தான் 'நாட்டின் செல்வத்தைப்' பெறமுடியுமேயன்றி, நுணுக்கமான கட்டுப்பாடுகளால்—குறிப்பாக அயல்நாட்டு வாணிபத்தில் நடைமுறையிலிருந்த கட்டுப்பாடுகளால்—அல்ல. எனவே, வர்த்தகன் இதுநாள்வரை கொண்டிருந்த பொருளாதாரச் சுதந்திர ஏக்கம் இப்போது முழுமையாகத் தணிந்துவிட்டது. அதோடு, செழிப்பானதொரு சமுதாயத்திற்காகத் தனது சக்திகளையெல்லாம் வெளிக்காட்டுவதே சரியான விதி என்றும் அமைந்துவிட்டது.

ஆதம் ஸ்மித்தின் தலையிடாக் கொள்கைக் கோட்பாடு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 19ஆம் நூற்றாண்டின் சிறந்த பொருளாதாரக் கொள்கையாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், விரைவில் அரசியல் துறையில் செல்வாக்குப் பெறவிருந்த வணிக வகுப்பினர் தாம் எதைச் செய்ய விரும்பினரோ அதைச் செய்யுமாறு இக்கொள்கை விட்டுவிட்டது.

பாதுகாப்புத் தொடர்ந்து நிலவுகிறது

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில்மட்டும்தான் சுதந்திரம் இருக்கவேண்டுமென்று ஆதம் ஸ்மித் கூறவில்லை; தடையிலா அயல் நாட்டு வாணிபக் கொள்கையையும் அவர்

[11] Adam Smith, The Wealth of Nations p. 400, Modern Library Edition.

தீவிரமாக வலியுறுத்தினர்.[12] ஆனால், அவருடைய கொள்கை உடனடியான விளைவுகளைத் தரவில்லை. பாதுகாப்புக் கொள்கையால் நன்மை பெற்றவர்கள், அது தேவையில்லா திருந்தும் ஆதம் ஸ்மித்தின் கொள்கையை ஒப்புக்கொண்ட போதிலும்கூடப் பாதுகாப்பை விட்டுவிட முன்வரவில்லை. அதோடு, இங்கிலாந்தின் பாதுகாப்புக் கொள்கையின் உயிர்நாடியான தானிய வரிச் சட்டம் அல்லது எல்லோரும் அறிந்த தானியச் சட்டம்தான் (Corn Laws) அயல்நாட்டு வாணிபத்தின்மீதான கட்டுப்பாடுகளில் மிக முக்கியமானதாயிருந்தது. இச் சட்டத்தால் பலனடைந்த நிலச்சுவான்தார்கள்தாம் அன்றும் பாராளு மன்றத்தில் பெருவாரியாக இருந்தனர்.

நடுத்தர வகுப்பினருள் பெரும்பான்மையோருக்குப் பிரதி நிதித்துவம் அளித்த 1832ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் (Reform Act of 1832) வரும்வரை, பாராளுமன்றத்தில் தானியச் சட்டத்தை நேரடியாகத் தாக்க இயலாமல் போய்விட்டது. ஆதம் ஸ்மித் எழுதிய 1776ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலையைவிட வணிகர், உற்பத்தியாளர் ஆகியோரின் நலன்கள் தடையிலா வாணிபத்தில்தான் அதிகமாக இருக்கிறதெனத் தெளிவாக உணரப்பட்டபோதுதான், தடையிலா வாணிப இயக்கத்திற்கு ஆதரவாக வல்லமைமிக்கதொரு பொதுமக்களின் மனப்பான்மை உருவாக முடிந்தது. ஆனால், இவ்வித மனப் பான்மை வளர்ச்சி தொழில் புரட்சி தோன்றும்வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

தொழில் புரட்சி: தொழில் நுட்ப அம்சங்கள்
(The Industrial Revolution: Technical Aspects)

‘நாடுகளின் செல்வம்’ என்னும் நூலை ஆதம் ஸ்மித் எழுதிய காலத்தில் அரசியல், மதம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் தத்துவங்களில் தனியுரிமைக் கோட்பாடு ஆதிக்கம் பெற்றிருந்தபோதிலும், இங்கிலாந்து நாட்டை, எளிய உற்பத்திக் கருவிகளையும் அவற்றைப் பயன்படுத்திய திறம்பெற்ற கைவினைஞர்களையும் ஆதாரமாகக்கொண்ட குடிசைத் தொழிலில் பொருளாதாரத்திலிருந்து, இயந்திரங்களையும் நீராவி சக்தியையும் ஆதாரமாகக்கொண்ட தொழிற்சாலைப் பொருளா தாரத்திற்கு மாற்றியமைத்த தொழில்புரட்சி ஏற்படும்வரை

[12] அவருடைய பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டைப்பற்றிய சுருக்கமான ஆய்விற்கு இந் நூலில் 4ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

தனிநபரின் சக்திகளை வெளிக்காட்டுவதால் ஏற்படும் முழு விளைவுகள் அங்கு ஏற்படவில்லை.

புத்தமைப்புகள் : தொடர் விளைவு (Inventions: A Chain Effect)

தொழில் துறையில் ஏற்பட்ட, ஒன்றோடொன்று தொடர்புடைய பல புத்தமைப்புகள்தாம் தொழில் புரட்சி எனப்படும். இப் புத்தமைப்புகள் தொழில் துறையில் இன்றியமையாத தேவையினை நிவர்த்தி பண்ணின என்பது உண்மை. ஆனால், அதே சமயம் மேலும் பல புத்தமைப்புகளை இன்றியமையாதவைகளாக்கியதன்மூலம் தொழில்களின் சமநிலையை அவை கெடுத்தும்விட்டன. பருத்தி நெசவாலைத் தொழிலில் வரிசையாக ஏற்பட்ட முன்னேற்றங்களை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்வோம். ஏறக்குறைய 1600ஆம் ஆண்டு முதல் லினன்-பருத்தித் துணி நெசவுத் தொழில், தனக்குப் போட்டியாயிருந்த கம்பள நெசவுத் தொழிலைப்போன்று குடிசைத் தொழிலாகத்தான் இங்கிலாந்தில் ஆரம்பமானது. எனினும், நூறாண்டுகாலம்வரை, அதாவது, 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சடிக்கப்பட்ட பருத்தித் துணிமணிகளை இறக்குமதி செய்யக்கூடாதென்று தடை விதிக்கப்படும்வரை, இத் தொழில் மெதுவாகத்தான் வளர்ச்சி பெற்றது. இந்தியாவின் கைத்தறிப் பொருள்களான வர்ண அச்சுப்பெற்ற துணிகளுக்கு இங்கிலாந்தின் பட்டு, கம்பளத் துணி உற்பத்தியாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய அளவிற்கு அவை பிரபல்யமடைந்திருந்தன. ஆனால், இங்கிலாந்தின் லினன்-பருத்தி நெசவுத் தொழிலுக்கு இவ்வித ஆபத்து எதும் எழவில்லை. அவற்றிற்கு நெருங்கிய பதிலீட்டுப் பொருளான சுத்தப் பருத்தித் துணியின் போட்டி நீக்கப்பட்ட பின்னர்தான் இதன் உற்பத்தி விரைவாக அதிகரித்தது.

நெசவுத் தொழிலில் முதன்முதலில் ஏற்பட்ட புத்தாக்கம், உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தடையாயிருந்த பழைய காலத் தறியின் குறையை நீக்குவதற்காக ஏற்பட்ட சிறியதொரு திருத்தம்தான். இதுவரை நெய்யப்பட்ட துணிகளனைத்தும் அகலமற்றவையாயிருந்தன. ஏனெனில், நெசவாளர் தனது ஒரு கையிலிருந்த நூல் சுற்றிய நாடாவை மற்றொரு கைக்குள் தள்ள வேண்டியிருந்ததால், அவருடைய கைகள் எட்டும் அளவிற்குத்தான் துணியின் அகலம் இருந்தது. அதைவிட அகலமான துணி நெய்ய வேண்டியிருந்தால் இரண்டிற்கு மேற்பட்ட நெசவாளர் வேண்டியிருந்தது. 1733-ல் பொறித்திறன் பெற்ற

நெசவாளரான ஜான் கே (John Kay) அவர்கள் புதியதோர் எறிநாடாவைக் கண்டுபிடித்தார். இது சக்கரங்களுடன் கூடியதாயும், போதுமான பொறிகொண்டு இயக்கப்படுவதாயும் இருந்ததால், அதிக அகலமான நூல் பாவுகளைத் தாண்டிச் செல்ல முடிந்தது.

துணி உற்பத்தியைக் கணிசமான அளவு அதிகரிக்க எறிநாடா உதவியதால் நெசவுத் தொழிலின் சமநிலை பாதிக்கப்பட்டது. ஐந்து அல்லது ஆறு பேர் நூற்றால்தான் ஒரு நெசவாளருக்கு வேண்டிய நூலை நூற்க முடியும் என்ற நிலைதான் இதுவரை நூற்புத் தொழிலில் இருந்துவந்தது. ஆனால், இப்போது தேவையான அளவு நூலை நூற்க முடியாமல் நூற்போர் திணறவேண்டியதாயிற்று. எனவே, நூல் நூற்றலிலும் ஏதாவது முன்னேற்றம் இன்றியமையாததாகிவிட்டது. இதற்கு வேண்டிய புத்தாக்கத்தைக் கண்டுபிடிப்போருக்கு உற்பத்தி, கலை ஊக்கத்திற்கான சங்கம் (Society for the Encouragement of Arts and Manufactures) பரிசளிக்க முன்வந்தது.[13] இதற்காகப் பலர் பெருமுயற்சியுடன் ஈடுபட்டனர்.

இறுதியாக, 1769-க்கும் 1779-க்குமிடையே கண்டுபிடிக்கப்பட்ட ஹார்க்ரீவ்ஸின் நூற்பு ஜென்னி (Hargreaves' Spinning jenny), ஆர்க்ரைட்டின் நீர்ச்சட்டம் (Arkwright's water frame), கிராம்ப்டனின் மியூல் (Crompton's mule) ஆகிய மூன்று புத்தமைப்புகள் நூற்புத் தொழிலில் புரட்சியை ஏற்படுத்தின. இயக்குபவர் (operator) உயர்தரமான பல நூலிழைகளைக்கொண்டு நூற்பதற்கு ஜென்னி வகை செய்தது. எனினும், லினனுக்குப் பதிலாகத் தரமான பருத்தி நூலை வார்ப்பில் பொருத்துவதற்கு வேண்டிய வலிமை இல்லாமல் போய்விட்டது. ஆர்க்ரைட்டின் நீர்ச்சட்டத்தால், சக்தியால் இயங்கும் இயந்திரங்களின்மூலம் திடமான முரட்டு நூலை நூற்பதற்கும், இங்கிலாந்தின் வரலாற்றிலேயே முதன்முறையாகச் சுத்தப் பருத்தித் துணிகளை உற்பத்தி செய்வதற்கும் சாத்தியமானது.[14] நீர்ச்சட்டத்தின் தத்துவத்தையும்

[13] Paul Mantoux, 'The Industrial Revolution in the Eighteenth Century' p. 220; Copyright 1927 by Harcourt, Brace & Co., New York. தொழில் புரட்சியில் புத்தமைப்புகள் கொண்ட பங்கினைப்பற்றிய சிறந்த விளக்கம் இந் நூலில் உள்ளது. இந் நூலுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

[14] ஆர்க்ரைட் அவர்கள் பாராளுமன்றத்தில் கொடுத்த விளக்கத்தின் விளைவாக, பருத்தித் துணிமணிகளை உற்பத்தி செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டிருந்த அவரது ஆலைக்கு விதிவிலக்களிக்கப்பட்டது.

ஜென்னியின் தத்துவத்தையும் இணைப்பதன்மூலம் உயர்ந்த ரகமானதும் வலுவானதுமான நூலை நூற்க மியூல் உதவியது. பின்னர் விரைவில் 300 முதல் 400 வரையான நூற்கும் கதிர்களுள் அதைப் பொருத்தியதன் விளைவாக, தனித்தனியாக கைராட்டையைக்கொண்டு நூற்றுவந்த பல நூற்பாளர்களின் வேலையை ஒரு இயந்திரம் மட்டும் செய்ய முடிந்தது. அதிர்ஷ்டவசமாக, நூற்புத் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்ட அதே சமயம் எலி விட்னி (Eli Whitney) என்னும் அமெரிக்கர், பருத்திப் பஞ்சிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் ஜின் (gin) என்ற கருவியை விருத்தி செய்ததால், நூற்பதற்கு வேண்டிய ஏராளமான பஞ்சு கிடைத்தது. இக் கருவியைக்கொண்டு பஞ்சிலிருக்கும் விதைகளைச் சுலபமாகப் பிரித்தெடுக்க முடிந்ததால், வளர்ந்து வந்த தேவையைச் சமாளிக்கக்கூடிய அளவிற்குப் பஞ்சு அளிக்க முடிந்தது.

நூற்பு இயந்திரங்களை நீர் சக்தியைக்கொண்டு (அதன் பின்னர் நீராவி சக்தியைக்கொண்டு) சிக்கனமாக உற்பத்தி செய்ய முடிந்ததால், ஆலை உற்பத்திக்குப் பெரும் ஊக்கம் அளித்தது. எனவே, அவ் ஆலைகளை நீர் சக்தியுள்ள இடங்களில் பெருவாரியாக அமைக்க நேர்ந்தது. ஆர்க்ரைட் அவர்களை ஒரு புத்தமைப்பாளராக ஏற்றுக்கொள்வதற்கு ஐயுறவிருப்பினும், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு தொழில் நிபுணராக இருந்தார் என்பது வெளிப்படை. மூலதனத்தை அடைவதிலும், தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதிலும், கட்டடம் கட்டி 150 முதல் 600 தொழிலாளர்வரை வேலைக்கமர்த்திய பல தொழிற்சாலைகளை அமைப்பதிலும் அவர் நிபுணர். அடுத்து வந்த 100 ஆண்டுகளில் ஏனைய புத்தமைப்புகளைப் பயன்படுத்தி இங்கிலாந்தின் குடிசைத் தொழில் முறையை மாற்றுவதற்கிருந்த தொழில் முதலாளித்துவப் புது வகுப்பினரில் அவர்தாம் முதலிடம் பெற்றவர் என்பதற்குத் தகுந்த ஆதாரம் உண்டு. இரும்பு, எஃகு தொழிலதிபர்கள், ஏன் பருத்தி நெசவுத் தொழில் முதலாளிகள்கூட அவரையே பின்பற்றினர்.

நூற்புத் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தமைப்புகளை எல்லோரும் பயன்படுத்திய சமயம், நெசவுத் தொழிலின் இதர துறைகள் 1790-ல் தம் சமநிலையை இழந்து வெகுவாகப் பாதிக்கப் பட்டன. இதற்கு முப்பதாண்டுகளுக்கு முன்னால் போதுமான அளவு கிடைக்காமலிருந்த நெசவு நூல், இப்போது நூற்பாலைகளிலிருந்து வெள்ளம்போல் வந்துகொண்டிருந்ததால் அவற்றைக் கொண்டு துணி நெய்வதற்குப் போதுமான நெசவாளர்கள் இல்லாமல் செய்துவிட்டது. கார்ட்ரைட் (Cartwright) என்னும்

கிராமப்புறத்து மதகுரு இதைப்பற்றி நண்பருடன் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, நண்பர் கூறியதற்கு மாறாக, விசைத் தறியை அமைப்பது சாத்தியமானதுதான் என்று சொல்லி அதை அமைத்துக் காட்டுவதில் முனைந்தார். பல ஆண்டு முயற்சிக்குப் பின்னர், 1785-ல் தனது சாதனையின்மூலம் அதை நிரூபித்துக் காட்டினார். ஆனால், அவர் கண்டுபிடித்த விசைத்தறி (power loom) பயன்படுத்தப்படுவதற்குப் பல ஆண்டுகளாயின. கைத்தறி நெசவாளர்கள் இதை எதிர்த்துப் பலாத்கார முறையில் கிளர்ச்சி செய்ததுதான் இதற்கு முக்கிய காரணம். 1810ஆம் ஆண்டில் தான் அது ஓரளவு பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர் ஒரு சில ஆண்டுகளுக்குள் எல்லா நெசவாலைகளுமே விசைத்தறியைத்தான் பயன்படுத்தின.

நூற்புத் துறையின் புத்தமைப்புகளை எல்லாக் கம்பள நூற்பு ஆலைகளும், சிறப்பாக யார்க்ஷையரிலிருந்த கம்பள நூற்புத் தொழிற்சாலைகள் மேற்கொண்டன. அருகிலிருந்த பருத்தித் தொழிற்சாலைக்கு முக்கியத்துவம் பெற்றிருந்த லங்காஷையர் மாவட்டங்களின் போட்டி காரணமாக யார்க்ஷையரில் கூலி உயர்ந்தது; அதோடு நீர் சக்தியைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. கம்பள நெசவுத் தொழிலில் விசைத் தறியை விரைவாகப் புகுத்த முடியவில்லை. அது கம்பள நெசவிற்கு அவ்வளவாக உகந்ததாக இல்லை என்பதும், அதைப் புகுத்துவதற்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகளும்தான் இதற்குக் காரணம். எனவே, மென்டுக்ஸ் (Mantoux) அவர்கள் கூறியபடி, 1803-ல் யார்க்ஷையர் மாவட்டத்தில் உற்பத்தியான கம்பளத் துணிகளில் பதினறில் ஒரு பங்குதான் தொழிற்சாலைகளில் நெய்யப் பட்டவை; 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை கைத்தறிகள்தாம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

நெசவாலைத் தொழில்போன்றே இரும்புத் தொழிலிலும் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட புத்தமைப்புகள் அதன் சமநிலையைப் பாதித்து, மேலும் அவசியமான பலவகைப் புத்தமைப் புகள் வளர வழிசெய்தன. உதாரணமாக, 18ஆம் நூற்றாண்டு தொடங்கிய ஒரு சில ஆண்டுகளில் மிட்லண்டில் (Midland) இருந்த இரும்புத் தொழிலாளிகளுக்கு வேண்டிய தேனிரும்பை (pig iron) இங்கிலாந்து நாட்டின் இரும்புத் தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்தளிக்க முடியவில்லை. அதனால் அத் தொழிலையே மூடிவிடவேண்டிய பயம்கூட ஏற்பட்டது. வரலாற்றுக் காலம் தொடங்குவதற்கு முன்பே உலோகக் கனிப் பொருள்களிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்க மனிதன் அறிந்திருந்தான்;

எனினும், உலோகப் பொருளை உற்பத்தி செய்வதில் மரக்கரிதான் உலோகத்தை உருக்குவதற்குப் பயன்பட்டு வந்தது. இதனால் இரும்புச் சுரங்கங்களுக் கருகாமையிலிருந்த காடுகள் அனைத்தும் 1720ஆம் ஆண்டிற்குள் அழிக்கப்பட்டுவிட்டன. 1720-ல் இங்கிலாந்தில் அறுபது ஊது உலைகள் (blast furnaces) மட்டுந்தான் இருந்தன. அவை ஆண்டொன்றுக்குச் சுமார் 17,000 டன் தேனிரும்பைமட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது.[15] எனவே, ஸ்வீடன், ஜெர்மனி, ஸ்பெயின், அமெரிக்கக் காலனிகள் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேனிரும்பையே இங்கிலாந்து வெகுவாகச் சார்ந்திருந்தது. பல நாடுகளில் நிலக்கரி ஏராளமாக இருந்தும், அதை எரிபொருளாகத்தான் பயன்படுத்தி வந்தனர். இரும்புக்கனியோடு கலந்து தேனிரும்பை உருக்க அதைப் பயன்படுத்தவில்லை. நிலக்கரியில் இருந்த கந்தகம், உற்பத்தியான இரும்பை உடையக்கூடியதாகவும் பயனற்றதாகவும் செய்ததுதான் இதற்குக் காரணம். நிலக்கரியை இரும்பு உருக்குவதற்குப் பயன்படுத்துவதில் ஏதாவதொரு வழி கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. இதற்கான பல முயற்சிகள் 17ஆம் நூற்றுண்டெல்லாம் நடந்தது. இறுதியில் சுமார் 1709-ல் இங்கிலாந்தில் தேர்ச்சிபெற்ற இரும்புத் தொழிலாளியான ஆப்ரஹாம் டார்பி (Abraham Darby) நிலக்கரியிலிருந்து கோக்கைத் (Coke) தயாரித்தார். இரும்பை உருக்குவதற்கு அதைப் பயன்படுத்த முடிந்தது.

கோக் மிகுந்த பயனுடையதெனத் தெரிந்திருந்தும் அதைக் கொண்டு பேரளவில் தேனிரும்பு செய்ய மேலும் 70 ஆண்டுகளாயின. அதற்குப்பின் எளிதாக உடையக்கூடிய இரும்பாக மாற்றும் ஆற்றலுக்கும் அதிகமான அளவில் தேனிரும்பு உற்பத்தியானது. இத் துறையில் மேலும் அதிகமான ஊக்கத்தோடு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் 1784ஆம் ஆண்டில் உருக்கிரும்பைக் கலந்து, தேனிரும்பு செய்வதற்கான செயல்முறை ஒன்றைக் கோர்ட் (Cort) என்பார் கண்டுபிடித்தார். இச் செயல்முறையில் இரும்பாக்ஸைடோடு கலந்த தேனிரும்பு சூடாக்கிக் கலக்கப்படுகிறது. இதன்மூலம் கோக்கோடு சேர்த்து இரும்பைக் கலக்கியபோது விட்டுச் செல்லப்படும் கரி முழுவதும் எரிந்துவிடுகின்றது. மேற்கூறிய செயல்முறைகளோடு இத் துறையில் நடந்த முன்னேற்றங்கள் நின்றுவிடவில்லை. ஓர் உருளை ஆலையும் (rolling mill) கண்டுபிடிக்கப்பட்டது. இக் கண்டுபிடிப்பின் வழியாக முக்கியமானதொரு நன்மை ஏற்பட்டது.

15 முன்பே கூறிய Mantoux அவர்களின் நூலில் 278ஆம் பக்கம்.

சுத்தி செய்யப்பட்ட உலோகத்தைப் பழுக்க அடித்து உருவேற்ற வேண்டிய கடினமான உடல் உழைப்பு அவசியமில்லாமல் போயிற்று.

மேற்கூறிய அடிப்படையான கண்டுபிடிப்புகளைத் தவிர, மேலும் சில சிறிய கண்டுபிடிப்புகளும் ஏற்பட்டன. இவற்றுள் ஊதுலையில் போதுமான அளவிற்குக் காற்றடிக்க உதவும் காற்றுப் பம்புகள், எஃகு சம்மட்டி, உலோகப் பொருளுக்குப் பல்வேறு உருவம் கொடுக்கப் பயன்படும் பொறி (metal turning lathes) முதலியன அடங்கும். இவற்றால் இரும்பின் உற்பத்தி விரைவாகப் பெருகியதோடுமட்டுமன்றி, அதன் உற்பத்திச் செலவும் குறைந்தது. அதோடு, கருவிகளை மேலும் நுட்பமாகச் செய்ய முடிந்தது. இரும்பைக்கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்களின் உபயோகமும் பெருகியது. இரும்புத் தொழிற்சாலையிலேயே பல் வேறுவகையில் இப் புதிய முறை பயன்படுத்தப்பட்டது. இவ் இரும்பிலிருந்து மேலும் தரமான, வலுவுடைய, திட்டவட்டமான, நீடித்து உழைக்கக்கூடிய பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதால், 1785ஆம் ஆண்டிற்கு முன்னர் பயன்பட்டு வந்த நூற்பதற்கான மர மியூல்கள், நீர்ச்சட்டங்கள் யாவும் விரைவாக மறைந்து விட்டன.

நீராவி இயந்திரத்தின் தோற்றம்

நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பு இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கு மிக வலுவானதோர் அடித்தளமாக அமைந்தது. உற்பத்தித் துறைகளில் இயந்திரங்களின் பயனில் இருந்துவந்த தடங்கல்களெல்லாம் இக் கண்டுபிடிப்பால் முற்றிலும் நீங்கின. நீராவி இயந்திரத்தோடு, கோக் செய்வது, உருக்கிரும்பைக் கலந்து தேனிரும்பு செய்வதுபோன்ற இரசாயனத்துறை கண்டுபிடிப்பு களும்சேர்ந்து தொழில் வளர்ச்சியைத் துரிதமாக்கின. 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் இரண்டு புராதன நீராவி இயந்திரங்கள் பயனிலிருந்தன. இவை மிக விரிவாகப் பயன்பட்டும் வந்தன. ஆனால், இவற்றில் சில அமைப்புக் குறைபாடுகளாலும், இயந்திரத்திலிருந்து ஓர் ஓட்டுச் சக்கரத்திற்கு சக்தியைக் கடத்து வதற்குரிய வழி ஏதுமில்லாததாலும் இவை நீரை இறைப்பதற்கு மட்டுமே பயன்பட்டன.

வேண்டிய அளவு சக்தியையும் நுட்பத்தையும் கொண்ட இயந்திரத்தை அமைப்பது, ஒரு பிஸ்டன் நேரடியாக ஏற்படுத்தும் அழுத்தத்தைச் சுழல் இயக்கமாக மாற்றுவதுபோன்ற பிரச்சினை களுக்கு ஜேம்ஸ் வாட் (James Watt) முடிவான தீர்வு கண்டார்.

விஞ்ஞானப் பயிற்சி, நல்லறிவு, அறிவார்வம் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் இவர். மேலும், கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானக் கருவிகளைப் படைப்பவராகவும், என்றுமே பயிலும் மாணவராகவும், சிறப்புப் பெற்ற விஞ்ஞானிகளின் நண்பராகவும் இருந்த ஜேம்ஸ் வாட், வேலைத்திறனற்ற நியூகமன் இயந்திரத்தை, இயக்குவிசை அளிக்கக்கூடிய சிறந்த மூலமாக மாற்றும் ஆராய்ச்சியில் பல ஆண்டுக் காலம் ஊக்கத்தோடு ஈடுபட்டிருந்தார். 1769ஆம் ஆண்டில் தான் வெற்றியடைந்து அதற்கு 'பேட்டன்ட்' (patent) உரிமையை முதலாவதாகப் பெற்றார். பொதுவாக, கண்டுபிடிப்புகள் எவற்றையுமே உடனடியாகத் தொழில் துறைகளில் பயன்படுத்துவதில்லை; கண்டுபிடிப்பிற்கும், அவை தொழில் துறையில் பயன்படுத்தப்படுவதற்குமிடையே நீண்டகால இடைவேளை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால், வாட் அவர்களின் இயந்திரம் இதற்கு ஒரு விதிவிலக்காகும். அதிர்ஷ்டவசமாக இவர் பர்மிங்ஹாம் நகரத்து சிறிய உலோகப் பொருள்களின் தயாரிப்பாளரான பௌல்டன் (Boulton) என்பாரோடு கூட்டாகத் தொழிலில் இறங்கினார். பௌல்டனிடமிருந்து தாராளமான நிதி உதவி கிடைத்தது. இதன் வழியாக வாட் அவர்களின் புதிய இயந்திரம் பரிசோதனை நிலையைத் தாண்டியது. பௌல்டன் கொண்டிருந்த வியாபாரத் தொடர்புகள் இந்த இயந்திரம் விற்பனையாவதற்குரிய வழியை வகுத்தது. இக் கூட்டு வியாபார முயற்சிக்குத் தொடக்கத்தில் பல முட்டுக்கட்டைகள் எழுந்தன. ஆயினும், அவற்றை வெற்றிகொண்டு இத் தொடர்பு வலுப்பெற்று மேம்பாடுற்றது. பிரிட்டன் முழுவதற்கும் நீராவி இயந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக 'பௌல்டன் அண்டு வாட்' விளங்கியது. 1800-ல் அவர்களின் பேட்டன்ட் உரிமை காலம் முடிவடைந்தபோது, நீர் சக்திக்குப் பதிலாக நீராவி சக்திதான் அதிகமாகப் பயன்பட்டது.

'இப் புதிய நிகழ்ச்சியான நீராவி இயந்திரக் கண்டுபிடிப்பினால் தொழில் புரட்சி தொடங்குவதற்குத் தீர்மானமான கட்டம் உருவாயிற்று. நீராவி சக்தியானது கடைசித் தளையிலிருந்து தொழில் புரட்சிக்கு விடுதலை அளித்ததன் வழியாக, பெருவாரித் தொழில்கள் விரைவாகவும், எங்கும் பரவி வளர்ச்சி பெறவும் வழி வகுத்தது. ஏனெனில், நீராவி சக்தியின் பயன்பாடு, நீர் சக்தியைப்போன்று பூமி அமைப்பையோ, அல்லது நீர்வள வசதியையோ சார்ந்ததன்று. எங்கெல்லாம் மலிவாக நிலக்கரி கிடைக்குமோ அங்கெல்லாம் நீராவி இயந்திரத்தை அமைக்க முடிந்தது. இங்கிலாந்தில் ஏராளமான நிலக்கரி கிடைத்ததோடுமட்டுமன்றி, 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அதைப் பல வழிகளில் அங்குப் பயன்படுத்த ஆரம்

பித்துவிட்டனர். அதோடு, போக்குவரத்திற்கென்று நீர் வழிகள் அமைக்கப்பட்டதால், அதை எங்கு வேண்டுமானாலும் மலிவாகக் கொண்டு செல்ல முடிந்தது. ஏனைய நாடுகளைக்காட்டிலும் தொழில் வளர்ச்சிக்கு உகந்த நாடாகமட்டுமன்றி, ஓர் உரிமை நாடாகவும் இங்கிலாந்து திகழ்ந்தது. பள்ளத்தாக்குகளிலே பெருகி ஓடும் அருவிகளின் கரைகளிலே, தனிமையின் சூழ்நிலையில் முன்னர் வளர்ந்ததுபோல் இராமல் தொழிற்சாலைகள் இப்போது எங்கும் அமைய முடிந்தது. கச்சாப் பொருள்களை வாங்கவும், முடிவுப் பொருள்களை விற்கவும்கூடிய அங்காடிகளுக்கருகிலும், தொழிலாளிகள் கிடைக்கக்கூடிய மக்கள் நெருக்கம் கொண்ட இடங்களுக்கருகிலும் அவற்றைத் தொடங்குவதற்குச் சாத்தியமாயிற்று. ஒன்றுக்கொன்று அருகில் தோன்றி அவை நெருக்கமாக அமைந்ததால், சுற்றிலும் நீராவி இயந்திரங்கள் ஓயாது எழுப்பிய புகை மண்டலத்தைக்கொண்ட பெரிய கரிய தொழிற்சாலை நகரங்கள் தோன்றின.'[16]

தொழில் புரட்சி: சமூகப் பொருளாதார அம்சங்கள்

நெசவுத் தொழிலிலும் இரும்புத் தொழிலிலும் கண்டுபிடிக்கப் பட்ட புதிய கருவிகள், நிலக்கரியின் பயனிலும் இரும்பு உற்பத்தி முறையிலும் ஏற்பட்ட புதிய இரசாயனக் கண்டுபிடிப்புகள் ஆகியவை பழைய தொழில் அமைப்பின் அஸ்திவாரத்தையே மாற்றிவிட்ட தொழில் நுண்ணியல் சார்ந்த புரட்சியை (technological revolution) இயக்கிவிட்டன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எரிபொருளுக்காக மரக்கட்டைகளையும், சக்தி பெறுவதற்காக மக்கள் நீர், கால்நடை முதலியனவற்றையும், செய்முறைக்காக மனிதனின் திறமையையும் அறிவையுமே சார்ந்திருந்த நிலை இப்போது நீங்கிவிட்டது. அவற்றிற்குப் பதிலாக இன்னும் திருத்தமானதும் நம்பகரமானதுமான நிலக்கரி, இரும்பு, இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட சாதனங்கள் இடம்பெற்றன. இதற்கு முன்பு ஏற்பட்ட தொழில் முன்னேற்றமனைத்தும் முன்னேற்றம் தானா என்று ஐயுறும் வகையில், விரைவான தொழில் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நூறாண்டுகள்வரை நிலையுற்று வாழ வகை செய்தன.

தொழிற்சாலை முறை

தொழில் புரட்சி வேறு எவ்வித விளைவுகளுக்கும் காரணமாக இல்லாது இவ் விளைவுகளைமட்டுமே ஏற்படுத்தியது என்று வைத்துக்

[16] முன்பு கூறிய Mantoux அவர்களின் நூலில் 344-345ஆம் பக்கங்கள்.

கொண்டால்கூட அதை ஒரு புரட்சியாகவே கருதமுடியும். ஆனால், உண்மையில் தொழில் நுட்பத் துறையில் ஏற்படுத்தியதைப் போன்றே சமூக, பொருளாதாரத் துறைகளிலும் அது பெரு மாறுதல்களை ஏற்படுத்தியது. தொழில் புரட்சியால் விளைந்த புதிய உற்பத்தி முறைகளையும் இயந்திரத்தளவாடங்களையும் பயன்படுத்து வதற்குரிய சாதனங்களையெல்லாம் அமைக்கப் பேரளவு ஸ்தாப னங்கள் அவசியமாயின. இதற்கு நீராவி இயந்திரத்திலிருந்து கிடைக்கும் பெருமளவு சக்தியும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய உற்பத்தி முறைகளும்தான் காரணமாகும். இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளிகளைப் பெருந்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்த வேண்டியிருந்தது; வேலை நேரத்திலும், வேலைப் பழக்கத்திலும், ஏன் வேலைத் தன்மையிலும்கூட இதுவரை பழக்க மானதொரு நிலையிலிருந்து மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டது மன்றி, சகித்துக்கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகளைக் கொண்ட தொழிற்சாலை முறை வளர்ந்தது. தொழில் புரட்சியின் மாறுதல்கள் நிர்வாக வகுப்பினருக்கும் ஆணையிடும் வர்க்கத் தவருக்கும் முழு சுதந்திர உரிமையை அளித்துவிட்டு, பெரும் இனத்தவரான தொழிலாளிகள் இரும்புப் பிடிப்புள்ள ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுமாறு செய்தது விநோதமானதுதான்.

பழைய குடிசைத் தொழில் முறைக்குப் பதிலாக ஏற்பட்ட இத் தொழிற்சாலைமுறை, நன்கு உருவாகச் சில ஆண்டுகள் பிடித்ததால் அது ஏற்படுத்திய இப் புதிய வேலைச் சூழ்நிலையும் மெதுவாகத்தான் அமைந்தது. ஆனால், 1830ஆம் ஆண்டிற்குள் பருத்தி நெசவுத் தொழில் முழுவதும் இயந்திரமயமாகிவிட்டது; இரும்பு உற்பத்தித் தொழிலில் முன்பைவிடப் பெருமளவு நிறுவ னங்கள் தோன்றிவிட்டன; அத் தொழிலில் இருந்த கைவினைஞர் களின் சின்னஞ்சிறு பட்டறைகளனைத்தும் விரைவாக மறைந்து கொண்டே போயின. இருந்தாலும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் 19ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதி முடிந்த பின்னர்தான் கம்பள நெசவுத் தொழிலில் இருந்துவந்த கைத்தறிகள் அனைத்தும் மறையலாயின.

தொழிற்சாலை முறை தவிர்க்கப்பட முடியாதது என்பதுதான் இங்கு முக்கியமானதேயன்றி, அது பரவுவதற்கு எவ்வளவு காலமானது என்பதன்று. நீராவி எந்திரம், உற்பத்தித் தளவாடங்கள், தொழிற்சாலை ஒழுங்குமுறை ஆகியவை அனைத்தும் தவறின்றி ஒழுங்காக இயங்கிவந்தன. தமக்குச் சொந்தமான கருவிகளைக்கொண்டு, சொந்த வீட்டிலேயே, இஷ்டப்பட்ட நேரத்தில் வேலை செய்து வருமானம் பெற்று

வந்த முறை நூற்றாண்டுகளில் மறைந்துவிட்டது. அதற்குப் பதிலாக, குறிப்பிட்ட நேரத்தில், தமக்குச் சொந்த உரிமை யில்லாத விலை உயர்ந்த இயந்திரங்களுக்கு முன்னால் நின்று கொண்டு தொழிலாளர் வேலை செய்யவேண்டி நேரிட்டது. அவர்களின் வேலை நேரம், வேலை செய்ய வேண்டிய முறை, விரைவு ஆகியவை கெடுபிடியான சட்டதிட்டங்களை உருவாக்கும் ஈவு இரக்கமற்றதொரு 'மனித இயந்திரத்தால்' நிர்ணயிக்கப் பட்டன. இயந்திரங்களும் நீராவி சக்தியும் பழக்கமில்லாத புதியதொரு வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்ட பாட்டாளி வர்க்கத்தினர் தோன்றுவதற்கு அடிகோலியது; அவ்வாறு செய்ததன் வழியாகப் புது நகரங்கள் தோன்றவும் பெரிய தூண்டு விசையாய் இப் புரட்சி அமைந்தது.[17]

தொழில் தலைமை

தொழில் புரட்சியால் ஏற்பட்ட சமூக விளைவுகளில் புதிய நகரங்களின் தோற்றமும், நகரப்புறத்துத் தொழில்களில் வேலைக்கமர்த்தப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினரின் வளர்ச்சியும் சேரும். அதோடு, மூலதனத்திற்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட மாபெரும் முக்கியத்துவமும் அதன் விளைவுதான். ஏற்கெனவே நாம் பார்த்ததுபோல் பழங்காலக் குடிசைத் தொழில் அல்லது இல்லத் தொழில் முறையில்கூடப் பல்வேறு செய்முறைகளை ஒருங்கிணைத்து நடத்திய முதலாளிகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். எனினும், அவர்களெல்லாம் எவ்வளவு பெரிய செய்தொழிலை நடத்திய போதிலும், உண்மையில் வியாபாரிகளாகவே கருதப் பட்டனர். ஆனால், இப்போது சின்னஞ்சிறு எளிய உற்பத்திக் கருவிகளுக்குப் பதிலாக மாபெரும் இயந்திரங்களையும், நீர் சக்தி

[17] 2,000 பேர்கொண்ட ஊரை நகரமாகக்கொண்டு கணக்கெடுத்தால் 1801-ல் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சேர்த்து 283 நகரங்களே இருந்தன. மொத்த மக்கள் தொகையில் 31 சதவீதம் பேர்தான் இந் நகரங்களில் வாழ்ந்தனர். 1841-ல் நகர மக்கள் தொகை 46 சதவீதமாக உயர்ந்தது. 1841ஆம் ஆண்டிற் கான புள்ளிவிவரம் ஓரளவு மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றலாம்; ஆனால், இது சரியானதுதான் என்பதற்கு ஆதாரமுண்டு. G. P. Jones and A. G. Pool அவர்களின் **A Hundred years of Economic Development in Great Britain** என்னும் நூலில் பக்கம் 19. Gerald Duckworth and Co. Ltd., London, Published in 1940.

இம் மக்கள் தொகை விவரத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் தொகை விவரத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு 1820–1940ஆம் வருடங்களுக்கிடைப்பட்ட காலத்திய மக்கள் தொகை விவரம் உள்ளது. 1820-ல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 82 சதவீதம் உழைப்பாளிகள் விவசாயத் துறையிலும், 18 சதவீதம் பேர் ஏனைய துறைகளிலுமிருந்தனர். 1940-ல் இவ் வீதம் தலைகீழாக மாறி விவசாயத் துறையில் 18 சதவீதமும் இதரத் துறைகளில் 82 சதவீதமென்றும் ஆனது. [இதர துறைகள் என்பன தொழிற்சாலைகளை மட்டுமன்றி, போக்குவரத்து, வணிகம், அரசாங்கம், இதர மேல்தரப் பணியாளர் ஆகிய துறைகளையும் குறிக்கும். இவையனைத்தும் தொழிற்சாலை வளர்ச்சியோடு வளர்ந்தவையாகும்.]

அல்லது மக்கள் சக்திக்குப் பதிலாக நீராவி சக்தியையும் பயன் படுத்தியதால், நூறு அல்லது பத்து என்று பணமுதலீடு செய்ததுபோய், ஆயிரக்கணக்கான டாலர்களை அல்லது பவுன்களை முதலீடு செய்யவேண்டியிருந்தது. எனவே, இப் பெருந்தொகையை அடைந்து, அதை எந்தெந்த வழியில் செலவிட வேண்டுமோ அவ்வாறு செலவு செய்த இப்போதைய முதலாளிகள் பழைய வியாபார-முதலாளிகளைப் போன்றவர் களல்லர்.[18] தம் தொழிலை நடத்துவதற்கு அங்காடிபற்றிய விவரத்தையும், தொழிலின் நுட்பம்பற்றிய விவரத்தையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டியதோடு, தொழில் அமைப்புத் திறன் அவர்களுக்கு இன்றியமையாததாகும். தம் தொழில் முன்னேறப் பெருமளவில் மூலதனம் தேவைப்பட்டதால் அம் மூலதனம் தம்மிடம் இல்லாதபோது அதை எவ்வாறு திரட்டுவ தென்பதையும் அவர்கள் நன்குணர வேண்டியிருந்தது. இரும்பு, நிலக்கரி காலமான இப் புதிய காலத்தில், புத்தமைப்பாளர்களாகவும் தொழில் துணிவுடையோராகவும் பெயர் பெற்ற பருத்தி நெசவுத் தொழிலதிபரான ஆர்க்ரைட் (Arkwright), இரும்புத் தொழிலதிபர் களான பௌல்டன், வில்கின்ஸன் (Wilkinson) போன்ற மனிதர்கள்தாம் இப் புதிய 'தொழில் தலைவர்களுக்கு' உண்மையான மாதிரியாக விளங்கியவர்கள்.

இப் புதிய தொழில்-முதலாளிகள் தம் புத்தமைப்புப் பணிகளை மேற்கொள்ளச் சாத்தியமானதற்குக் காரணம், முந்தைய நூற்றுண்டிலிருந்து அவர்கள் பெற்ற பாரம்பரியம்தான்— அதாவது, சமுதாயத்தின் 'பரந்த' (liberal) மனப்பான்மை. இம் மனப்பான்மை தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவை பல: விரிவடைந்து வந்த வாய்ப்புகளால் ஏற்பட்ட பலன்களைப் பயன் கொள்வதற்காக வர்த்தக வகுப்பினர் செய்த வற்புறுத்தல்; அறிவியல் சிந்தனை வளர்ச்சியும், அதற்கு இணையாக மதம், அதிகாரம் ஆகியவை கொண்டிருந்த செல்வாக்கு வீழ்ச்சியும் சேர்ந்து தோற்றுவித்த தனிநபரின் சிந்தனை உரிமை, சுதந்திர எழுச்சி முதலியன குறிப்பிடத்தக்கவை. இன்று பழக்கத்திலுள்ள (லாக், ஆதம் ஸ்மித், ஜெரெமி பென்தம் அவர்களின் நூல்களின்

[18] வியாபாரத்தின் வழியாக அல்லது சிறு தொழிலின் வழியாகத் திரட்டப்பட்ட பணத்திலிருந்துதான் தொடக்கத்தில் மூலதனம் சேர்ந்தது. பெரும்பாலும் 2 அல்லது அதற்கு மேற்பட்ட பங்குதாரர்கள் தத்தம் கூட்டுப் பணத்தைச் சேர்த்து இம் மூலதனத்தைத் திரட்டினர். புதிய தொழில்களிலிருந்து கிடைத்த ஏராளமான இலாபத்தின் பெரும் பகுதியைத் தொழிலை விரிவாக்குவதற்கும், புதிய உற்பத்தித் தளவாடங்களை வாங்குவதற்கும் பயன்படுத்தினர். 19ஆம் நூற்றுண்டின் மத்தியப் பகுதிக்குப் பின்னர்தான் வரையிட்ட பொறுப்பும், சிறுசிறு சேமிப்பாளரைக் கவரும் சக்தியும் கொண்ட நவீனப் பங்கு கம்பெனி முறை இங்கிலாந்தில் தோன்றியது.

வாயிலாக முறைப்படுத்திக் கூறப்பட்ட) பொருளாதார, அரசியல் துறைகளின் தாராள மனப்பான்மை உருவாக்கிய சாதகமான சூழ்நிலைகள் இல்லாதிருந்திருக்குமாயின், புதிய தொழில் நுட்ப முறைகளையும் இயந்திரங்களையும் கண்டுபிடித்து, அவற்றை நடைமுறைத் தொழிலில் புகுத்துவதற்கு அவசியமான சுதந்திரம் இல்லாமல் இருந்திருக்கும். அவ்வாறு இருந்திருந்தால், கைவினைத் தொழில்களின் பழைய விதிமுறைகளையே கடைப் பிடித்து, இடைக்காலத்தில் தொழில்கள் எவ்வாறு இயங்கி வந்தனவோ அவ்வாறே தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கும். ஆனால், அவ் விதிகளைத் தவிர்த்ததால் குடிசைத் தொழில்கள் தோன்றின; அதன் பின்னர் அக் குடிசைத் தொழில்களின் விதிமுறைகளையும் தொடர்ந்து தவிர்க்க முடிந்ததாலும், மெர்க்கன்டலிஸக் காலத்தில் புகுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை யெல்லாம் தகர்த்தெறிந்ததாலும்தான் நவீனத் தொழில்முறை தோன்றுவதற்கு வேண்டிய அடித்தளம் ஏற்பட்டது.

தொழில் கூட்டுச் சட்டங்கள் (The Combination Act)

18ஆம் நூற்றுண்டின் இறுதிவரை தனியுரிமைக் கோட் பாட்டின் தத்துவம் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருந்ததெனில், மக்கள் அரசாங்கத் தலையீட்டை வெறுத்ததுமட்டுமன்றி, பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதாரமாகத் தலையிடாக் கொள்கையை ஆதரிக்கவும் தலைப்பட்டனர். 1799ஆம் ஆண்டின் தொழில் கூட்டுச் சட்டத்தின்படி, தம் வேலை நிலையை முன்னேற்றுவதற்காகத் தொழிலாளிகள் ஒன்று சேருவது சட்ட விரோதமானது. அதன் பின்னர், தனியார் நலன்களைத் தனியாரே அக்கறைகொண்டு மேற்கொள்வதுதான் பொது நியதியை அளிக்கும் என நம்பப்பட்டது. முதலாளியின் பேரம் பேசும் வலுவான சக்தியை ஈடுசெய்வதற்காகத் தம் வலிமை யனைத்தையும் ஒன்றுசேர்க்க முடியாத தொழிலாளிகள். எலிஸபெத் காலத்திய கைவினைஞர் சட்டம் போன்ற பழைய சட்டங்களையாவது அமுல் நடத்தும்படி கோரிக்கை விடுப்பதன் மூலம், தமது தாழ்ந்த கூலி, நீண்ட நேர வேலை, இழிவான வேலை நிபந்தனைகள் ஆகியவற்றைச் சரிப்படுத்த முயன்றனர். ஆனால், அதற்கெனக் கொண்டுவரப்பட்ட பல சட்டங்கள் பாராளுமன்ற ஏடுகளில்தான் இருந்தன; அல்லது ஒரு சில தொழில்களில் மட்டுமோ நகரங்களில் மட்டுமோ பெயரளவில்தான் இருந்தன; அவற்றை ஏற்படுத்தியதன் நோக்கம் மடிந்து விட்டது. தவிர அச் சட்டங்களின்படி தொழில் முயல்வோரின் குறிப்பிட்ட எண்ணிக்கை, உற்பத்திமுறைகளை ஒழுங்கு படுத்தல் ஆகியவை விரைவாக மாறிவந்த தொழில் தேவைக்கும், அவற்றின்

சொந்தக்காரர்கள், நிருவாகிகள் ஆகியோரின் சொந்த நலன் களுக்கும் ஒவ்வாதவையாயிருந்ததால் அப் பழஞ் சட்டங்களை முதலில் தற்காலிகமாக நிறுத்திவைத்து, பின்னர் ரத்து செய்து விட்டனர்.[19] 'எளிதான இயற்கை உரிமைநிலை' நிலவியது. தொழிலின் தன்மையும், தொழிலாளிகளின் தகுநிலையும் தடை யிலாப் போட்டியினால் கட்டுப்பாடற்ற அங்காடியில் நிர்ணய மாக்கப்பட வேண்டியிருந்தது. அறியாமையைப் போக்குவதற்குக் கல்வி வசதியையும், முன்னேற்றத்தைத் தூண்டுவதற்கான அறிவியலுக்கும் புத்தமைப்புகளுக்கும் ஊக்கத்தை அளிப்பதும், கள்ளங்கபடற்றவர்கள் ஏமாற்றப்படாமலிருக்கப் பாதுகாப்பை அளிப்பதும்தான் அரசாங்கத்தின் கடமை என்றாகிவிட்டது. இவ்வாறு வரம்பிற்குட்பட்டதாக அரசாங்கம் இருந்த சமயம் தொழிற்சாலை முறை பரவுவதற்கு முட்டுக்கட்டையாயிருந்த தடங்கல்களெல்லாம் மாயமாய் மறைந்தன.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள்

Halevy, Elil, 'The Growth of Philosophic Radicalism', London: Faber & Gwyer, Ltd. *1928*-ல் பதிப்பித்தது. அதிகாரம் *3*, பிரிவு *1*, ஆதம் ஸ்மித்தின் கருத்துகளை, குறிப்பாகத் தனி நலமும் பொதுநலமும் இயற்கையாகவே இணையும் தத்துவத்தை நன்கு ஆய்கிறது.

Mantoux, Paul, 'The Industrial Revolution in the Eighteenth Century', New York : Harcourt, Brace & Co., *1927*-ல் பதிப் பித்தது. தொழிற்புரட்சி பற்றிய சிறந்த ஆய்வு நூல்களில் இதுவும் ஒன்று.

Polanyi, Karl, 'The Great Transformation' New York: Farrar & Rhinehart, *1944*-ல் பதிப்பித்தது. *18*, *19*ஆம் நூற்றாண்டுகளில் அங்காடிப் பொருளாதாரம் வளர்ச்சியுற்று, பின்னர் குன்றிவிட்டதை ஆயும் நூலான இது சிந்தனையைத் தூண்டும் நூலாகும்.

Robertson, H. M., 'Aspects of the Rise of Economic Individualism', New York: Cambridge University Press, *1933*-ல் பதிப்பித்தது. அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குப் பதிலாகத் தனி யுரிமைக் கோட்பாடு எவ்வாறு இடம் பெற்றது என்பதை

[19] கைவினைஞர்களின் சட்டம் 1809-ல் ரத்து செய்யப்பட்டது. இதுபோன்ற நடவடிக்கைகளால் தொழிற் பயிற்சியையும் கூலியையும் ஒழுங்குபடுத்திவந்த தேசியக் கட்டுப்பாடு நின்றுவிட்டது.

விவரமாகக் கூறுவதோடு, அதற்குப் பல சான்றுகளையும் இந் நூல் தருகிறது.

Smith, Adam, 'The Wealth of Nations' என்ற நூலின் வேலைப் பாகுபாட்டையும், அதற்கும் அங்காடியின் விரிவிற்கும் உள்ள தொடர்பையும் விளக்கும் 1, 2, 3 அதிகாரங்கள் அவசியம் படிக்க வேண்டியவை.

Tawney, R. H., 'Religion and the Rise of Capitalism', New York: Harcourt, Brace & Co. 1926-ல் பதிப்பித்தது மதம், வாணிபம், பொருளாதார நன்மைகள் ஆகியவற்றின் ஆய்விற்குக் குறிப்பாக 4ஆம் அதிகாரத்திலுள்ள 2,3 ஆம் பிரிவு களைப் பார்க்க.

Trevelyan, G. W., 'English Social History', New York: Longmans, Green & Co. 1942-ல் பதிப்பித்தது. இக் காலத்திய சமூகச் சூழ்நிலையை இந் நூல் தத்ரூபமாகச் சித்திரிக்கிறது.

தொகுதி II

சிறப்புத் தேர்ச்சி, வாணிபம் ஆகியவற்றின் அடிப்படைகள்: பன்னாட்டு வாணிபக் கோட்பாடு

4. தராதரச் செலவின் தொன்மைக் கோட்பாடு

(The Classical Doctrine of Comparative Cost)

இங்கிலாந்தின் உள்நாட்டுத் தொழிலின்மீதும் வாணிபத்தின் மீதும் இருந்த அரசக் கட்டுப்பாடுகள் செம்மையாகச் செயல்பட வாய்ப்பின்றிச் சிறிது காலம் மட்டுந்தான் அமலில் இருந்தன என்பதை ஏற்கெனவே நாம் பார்த்தோம். கிராம்வெல் காலத்துப் புரட்சிக்குப் பின்னர் அவை மறைந்துவிட்டன. 18ஆம் நூற்றுண்டின் இறுதியில் வணிகர்கள் தத்தம் தொழில் துறையைத் தேர்ந்தெடுப்பதற்கும் அதை நடத்துவதற்கும் முழு உரிமை பெற்றிருந்தனர். தனியுரிமைக் கோட்பாட்டின் தத்துவம் படித்த மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது; அதே சமயம் தொழிலதிபர்களும் அரசியல் தலைவர்களுங்கூட அதன் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினர்.

இக் காலத்திலிருந்துதான் மெர்க்கன்டலிசக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளான சுங்கம், தடை, பண உதவி, காலனி முறை, கப்பல் போக்குவரத்து முறை ஆகியவை அயல்நாட்டு வாணிபத்தைப் பெரிதும் பாதித்தன. 1786-ல் இக் கட்டுப்பாடுகளையெல்லாம் தளர்த்துவதற்கான முதல் முயற்சியாக ஃபிரான்ஸ் நாட்டோடு ஈடன் ஒப்பந்தம் (Eden Treaty of 1786) செய்யப்பட்டது; எனினும், இதுபற்றி வணிகர்களிடமும் தொழிலதிபர்க

ளிடமும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. 1793-க்கும் 1815-க்குமிடையேயான இந்த நீண்ட இடைவேளையின்போது ஃபிரான்ஸ் நாட்டோடு நடைபெற்ற போரின் காரணத்தால் இக் காரியத்தில் முன்னேற்றமான நடவடிக்கை எதுவும் செய்ய முடியாது போயிற்று.

இருப்பினும், இந்த யுத்தகாலத்தின்போது இங்கிலாந்தின் புதிய தொழில்களான பருத்தித் துணி நெசவு, இரும்பு - எஃகு, நிலக்கரி, பொறியாக்கம் ஆகிய தொழில்களெல்லாம் விரிவாக்கப்பட்டு எந்திரமயமாயின. பழைய தொழிலான கம்பள நெசவுத் தொழிலில்கூட எந்திரங்களைக்கொண்டு உற்பத்தி செய்யும் முறைகள் புகுத்தப்பட்டன. ஐரோப்பாவின் இதர நாடுகளிலெல்லாம் இவ்வித முன்னேற்றம் ஏற்பட முடியவில்லை. இதற்குப் போர்தான் முக்கியக் காரணமாகும். போர் முடியும் சமயத்தில் அந் நாடுகள் போட்டியிட முடியாத அளவிற்கு பிரிட்டனின் தொழில்கள் முன்னேறி உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டன. உலகின் எந்த நாடுமே பிரிட்டனோடு போட்டிபோட முடியாதிருந்தது. ஆனால், அதே சமயம், போர் முடிந்தபின் பிரிட்டனின் அங்காடிகள் சீர்குலையலாயின. பீரங்கிகளும் துப்பாக்கிகளும் செய்வதற்கு வேண்டிய எஃகு பொருள்களுக்கும், படையினருக்கு வேண்டிய சீருடைகளுக்கும் சால்வைகளுக்கும் இதுவரை இருந்துவந்த தேவை மறைந்தது; அதுமட்டுமன்றி, யுத்தத்தால் நலிவுற்றிருந்த ஐரோப்பிய நாடுகளால் பெருமளவில் இங்கிலாந்தின் பொருள்களை வாங்க இயலாமல் போய்விட்டது. எனவே, அங்காடிபற்றிய அக்கறை, உற்பத்தியாளரும் வணிகரும் கொண்டிருந்த தடையிலா வாணிப மனப்பான்மையை வலுவாக்கியது. இவ்வாறு மாறிய மனப்பான்மைதான் முக்கியமான பல விளைவுகளைப் பின்னர் ஏற்படுத்தக் காரணமாயிருந்தது என்பதை இப்போது நாம் பார்க்கப்போகிறோம்.

ஆதம் ஸ்மித்

மெர்கன்டலிஸ்டுகளின் அயல்நாட்டு வாணிபக் கொள்கைகளைப் புறக்கணிக்கத் தயார் செய்யும் வகையில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவந்த அதே சமயத்தில், அக் கொள்கைகளைத் தாக்குவதற்கு வேண்டிய அறிவு கூர்மையாக்கப்பெற்று வளர்ச்சிபெற்று வந்தது. வேலைப் பாகுபாட்டின் தத்துவத்தை மேற்கொள்வதால்தான் செல்வம் அதிகரிக்கின்றது என்ற அடிப்படையைக்கொண்டு, நாடுகளுக்கிடையே நடைபெறும் சுதந்திர வாணிபம்தான் அவற்றின் செல்வத்தை (உண்மையான செல்வம் என்ற பொருளில்) அதிகரிக்கச் செய்கிறது என்று விளக்கியதன்

வழியாக, ஆதம் ஸ்மித் மெர்க்கன்டலிஸ்டுகள் வகுத்த கட்டுப்பாடு களின் முட்டாள்தனத்தை வலியுறுத்தி, தடையிலா வாணிபத் திற்குச் சாதகமான வாதத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

'பிறரிடமிருந்து மலிவாக வாங்கக்கூடிய பொருளைத் தானே தனது வீட்டில் அதிகச் செலவில் உற்பத்தி செய்ய முயலக் கூடாது என்பதுதான் விவேகமுள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனின் கோட்பாடு. தையல்காரன் தனக்குத் தேவையான செருப்பைத் தானே செய்துகொள்ள முயல்வதில்லை; மாருக, செருப்புத் தைப்போனிடமிருந்து அதை வாங்குகிருன். செருப்புத் தைப்போன் தனக்கு வேண்டிய துணிமணிகளைத் தானே தைத்துக்கொள்ள முயல்வதில்லை; மாருக, அவற்றைத் தைப்ப தற்காகத் தையல்காரனை அமர்த்துகிருன். விவசாயி தனக்கு வேண்டிய செருப்பையோ அல்லது துணிமணிகளையோ தானே செய்துகொள்ள முயலாமல், அவற்றில் ஈடுபட்டுள்ள கைவினைஞரை அமர்த்திக்கொள்கிருன். தமது அயலாரைக் காட்டிலும் சிறப்பான திறமையுள்ள தொழிலில் தமது முழு முயற்சியையும் ஈடுபடுத்து வதுதான் நன்மையானதென்றும், தாம் உற்பத்தி செய்தனவற்றில் ஒரு பகுதியைக்கொண்டு அல்லது அப் பகுதியின் விலையைக் கொண்டு தமக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொள்வதுதான் சிறந்ததென்றும் அவர்களுக்குத் தெரியும்.'

'குடும்ப நடவடிக்கைகளில் விவேகமாக இருப்பது நாட்டின் நடவடிக்கைகளில் தவருனவையாயிருக்க முடியாது. ஒரு பண்டத்தை நாமே உற்பத்தி செய்வதைக் காட்டிலும் மலிவாக அதை அயல்நாடு நமக்கு அளிக்க முடிந்தால், நாம் சாதகமான நிலையிலுள்ள நமது சொந்தத் தொழில் உற்பத்தியிலிருந்து ஒரு பகுதியைக் கொடுத்து அதை வாங்குவதே மேலானதாகும்......'

'குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு பிறிதொரு நாட்டைக்காட்டிலும் கொண்டுள்ள இயற்கையான சிறப்புகள் சில சமயம் எவ்வளவு அதிகமாயிருக்குமென்ருல், அச் சிறப்புகள் தெளிவாக உலகிற்குத் தெரிவதோடுமட்டுமன்றி, அப் பண்டங்களை உற்பத்தி செய்ய மற்ற நாடு முயல்வது வீண் என்பதும் உலகிற்கு நன்கு தெரியும். பாத்திகளை மட்கிய தழை எருக்கொண்டு வெதுவெதுப்பாகச் செய்து, கண்ணுடிகளைக் கொண்டு திராட்சைக் கொடிகளை மூடிவைப்பதன் மூலமாகவும், பக்கச் சுவர்களை மிதச்சூடு செய்வதன்மூலமாகவும் ஸ்காட்லாந்தில் கூடத் தரமான திராட்சை விளைவிக்க முடியும்; அதோடு அயல் நாட்டிலிருந்து மதுவை வாங்கும் செலவைக்காட்டிலும் ஏறத்தாழ

முப்பது மடங்கு செலவில் அவற்றிலிருந்து தரமான மதுவையும் அங்குத் தயாரிக்கக்கூடும். அதற்காக, ஸ்காட்லாந்தில் கிளாரெட் (Claret), பர்கண்டி (Burgundy) ஆகிய மதுவைத் தயாரிப்பதற்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்று அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மதுவைத் தடை செய்வதற்குச் சட்டம் கொண்டு வந்தால் அது எப்படி அறிவுக்கேற்றதாகும்? எனவே, பிற நாடுகளிலிருந்து நமக்குத் தேவையான பண்டங்களை வாங்குவதற்கு ஏற்படும் செலவைவிட முப்பது மடங்கு மூலதனத்தையும் தொழில் முயற்சியையும் செலவிட்டு அப் பொருளை உற்பத்தி செய்ய முயல்வது வெளிப்படையான மடமையாகும்; முப்பதில் ஒன்று, ஏன் முந்நூறில் ஒன்றுகூட அதிகம் செலவிடுவது வெளிப்படையான மூடத்தனம் இல்லையெனினும், மூடத்தனம்தான். ஒரு நாடு கொண்டுள்ள சிறப்பு இயற்கையானதா அல்லது பெறப்பட்டதா என்பது இவ் விஷயத்தில் முக்கியமன்று. அந்த நாட்டிற்கு இச் சிறப்பு இருக்கும்வரை, அச் சிறப்பின் பயனை மற்றொரு நாடு விரும்பும்வரை, இரண்டாவது சொல்லப்பட்ட நாடு தானாக அப் பொருள்களை அடைய முயல்வதைக்காட்டிலும் அந்த நாட்டிலிருந்து பெறுவதுதான் அதிக நன்மை பயப்பதாகும். ஒரு கைவினைஞன் பிறிதொரு தொழிலிலுள்ள மற்றொருவனைக் காட்டிலும் கொண்டுள்ள சிறப்பு பெறப்பட்டதாகும். இவ்விருவரில் ஒருவர் செய்யும் பொருளை மற்றவர் செய்வதைக்காட்டிலும் ஒருவருக்கொருவர் தத்தம் பொருள்களைப் பரிவர்த்தனை செய்வது தான் இருவருக்குமே நன்மையானதென்று அறிவர்.'[1]

அனுமானிக்கப்பட்ட தனிச் சிறப்புகள் (Absolute Advantage Assumed)

இக் கூற்று அழுத்தம் திருத்தமாய் இருப்பினும், நுட்பமானதன்று. எவ்வளவு தூரம் அது எடுபட்டிருக்குமோ, அவ்வளவிற்கு நல்லதுதான்; ஆனால், அவ்வளவாக எடுபடவில்லை. ஏற்றுமதி செய்யும் நாடு அதன் உற்பத்தியில் தனிச் சிறப்புக் கொண்டிருப்பதாக அனுமானித்துவிட்டதால் வாதத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது; அதாவது, கொடுக்கப்பட்ட மூலதனத்தையும் தொழிலாளரையும் கொண்டு வேறு எந்தப் போட்டித் தொழிலையும்விட ஏற்றுமதித் தொழிலில் அதிக அளவு உற்பத்தி செய்யும் திறன் பெற்றதாயிருக்கவேண்டும்.

ஆனால், மற்ற நாடுகளைக்காட்டிலும் சிறப்பாக எந்தப் பொருளையும் உற்பத்தி செய்ய முடியாத ஒரு நாடு இருந்தால்

[1] ஆதம் ஸ்மித் அவர்களின் 'Wealth of Nations' என்னும் நூலில் 424-426 பக்கங்கள். Modern Library Edition.

என்ன செய்வது? உதாரணமாக, வளர்ச்சி குன்றியதொரு நாட்டின் மூலதனமும் தொழிலும் (வளர்ச்சி பெற்ற நாடுகளைக் காட்டிலும்) திறன் குறைந்ததாயிருந்து, எந்தப் பொருளையுமே மற்ற நாடுகளைவிடக் குறைவாகத்தான் உற்பத்தி செய்ய முடியு மென்று வைத்துக்கொள்வோம்—இவ்வாறு இருப்பது சாத்திய மானதே. அவ்வாருயின், தன்னைக்காட்டிலும் திறன்மிக்க நாடுகளோடு தொடர்பின்றித் தனித்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்படுமா? அல்லது தனது பயிர்த் தொழிலும் இதர தொழில்களனைத்தும் பயங்கரப் போட்டியினுல் சிதைவுறுமாறு விட்டுவிடுமா? ஆதம் ஸ்மித்தின் ஆய்வைக்கொண்டு இத்தகைய சூழ்நிலையை நம்மால் ஆராய முடியாது போய்விடுகிறது. டேவிட் ரிக்கார்டோ (David Recardo) அவர்கள் பன்னுட்டு வாணிபத்தைப்பற்றிய தெளிவானதொரு கோட்பாட்டை அமைத்துத் தந்த பிறகுதான் ('அரசியல் பொருளாதாரத்தின் தத்துவம் 1817' என்ற நூலில்—'Principles of Political Economy', 1817) பொதுவான பன்னுட்டு வாணிபக் கோட்பாடு நமக்குக் கிடைக்கலானது.

டேவிட் ரிக்கார்டோ

உள்நாட்டு மதிப்பை உழைப்புச் செலவு நிர்ணயிக்கிறது

ரிக்கார்டோவின் பன்னுட்டு வாணிப விளக்கத்தை ஆய்வ தற்காக நாம் சிறிது புறம்பாகப் போவதற்குரிய காரணம் அவருடைய மதிப்பீட்டுக் கோட்பாடுதான் (theory of value). இக் கோட்பாட்டின்படி ஒரு பண்டத்தின் மதிப்பு அதிலுள்ள உழைப்புச் செலவினைப் (labour costs) பொறுத்ததாகும். 'உழைப்பால் உற்பத்தியாகும் பண்டங்களின் தராதர அளவுதான் அவற்றின் இப்போதைய அல்லது கடந்தகால தராதர மதிப்பினை நிர்ணயம் செய்கிறது.'[2] ஒரு நாட்டின் உள்நாட்டு வாணி பத்தைப் பொறுத்தவரை, இவ் விதிதான் ஏற்றுக்கொள்ளப் பட்டது. உதாரணமாக, குறிப்பிட்டதோர் அளவு (X கெஜம்) துணியை உற்பத்தி செய்ய யார்க்ஷையரில் 60 நாள் உழைப்புச் செலவும், லண்டனில் 100 நாள் உழைப்புச் செலவும் ஏற்படுவ தாகவும், குறிப்பிட்ட அளவு (Y பவுண்டு) பாலடைக்கட்டிக்கு யார்க்ஷையரில் 30 நாள் உழைப்புச் செலவும், லண்டனில் 90 நாள் செலவும் ஏற்படுவதாகவும் வைத்துக்கொள்வோம். யார்க்ஷையரில் இரண்டு பண்டங்களுக்குமே செலவு தாழ்வா யிருப்பதால் அவ் விரண்டுமே அங்கு உற்பத்தி செய்யப்படும்.

[2] David Ricardo அவர்களின், 'Principles of Political Economy' என்னும் நூலில் 9ஆம் பக்கம்.

1 அலகு துணி 2 அலகு பாலடைக்கட்டிக்குச் சமம் என்ற விகிதத்தில் அவை அங்குப் பரிவர்த்தனை செய்யப்படும்.

இவ்விரு பகுதிகளிலும் இந்த இரண்டு பண்டங்கள் மட்டும் உற்பத்தி செய்யப்படுவதாயிருந்தால், (அல்லது ஏனைய எல்லாப் பண்டங்களின் உற்பத்திச் செலவும் லண்டனைவிட யார்க்ஷையரில் தாழ்வாயிருக்குமாயின்), லண்டனிலுள்ள உழைப்பாளிகளும் மூலதனமும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட யார்க்ஷையர் பகுதிக்குச் சென்றுவிடும். ஆனால், உண்மையில் யார்க்ஷையரைக்காட்டிலும் சிறப்பாக மூலதனத்தையும் உழைப்பையும் பயன்கொள்ள இதரவகைச் சாத்தியங்கள் லண்டனில் நிச்சயமாக இருக்கும். அவற்றில் ஒன்று இரும்புப் பொருள் என்று வைத்துக்கொள்வோம். இதன் உற்பத்திக்கு லண்டனில் 20 நாள் உழைப்புச் செலவும், யார்க்ஷையரில் 60 நாள் உழைப்புச் செலவும் ஏற்படுவதாகக் கொள்வோம். அவ்வாறுயின், இச் செலவினைக் காட்டும் அட்டவணை கீழ்க் காணுமாறு இருக்கும் :

உற்பத்தியின் உழைப்புச் செலவு:

	(X கெஜம்) துணி	(Y பவுண்டு) பாலடைக்கட்டி	(Z அலகுகள்) இரும்புப் பொருள்
யார்க்ஷையர்	60	30	60
லண்டன்	100	90	20

இவ்வாறுயின், இரும்புப் பொருள் தொழில் லண்டனிலும், துணி, பாலடைக்கட்டித் தொழில்கள் இரண்டும் யார்க்ஷையரிலும் அமையும்; அப் பொருள்களின் பரிவர்த்தனை 1 துணி = 2 பாலாடைக்கட்டி = 3 இரும்புப் பொருள் என்ற விகிதத்தில் நடைபெறும்.

ஆனால், பன்னாட்டு வாணிபத்தின் பரிவர்த்தனை மதிப்பிற்கு (exchange value) உழைப்புச் செலவின் தத்துவம் (labour-cost principle) பொருத்தமற்றது. இதை ரிக்கார்டோ பின்வருமாறு கூறினர்:

'பண்டங்களின் தராதர மதிப்பினை உள்நாட்டில் நிர்ணயிக்கும் அதே விதி, இரு நாடுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே பரிவர்த்தனை செய்யப்படும் பண்டங்களின் தராதர மதிப்பினை நிர்ணயிப்பதில்லை...............இங்கிலாந்தின் துணிக்காகத் (போர்ச்சுகல்) தரும் மதுவின் அளவு, அவை ஒவ்வொன்றின் உற்பத்தியிலும் செலவாகியுள்ள உழைப்பின்

தராதர அளவால் நிர்ணயிக்கப்படுவதில்லை; ஆனால், இவ் விரண்டு பண்டங்களுமே இங்கிலாந்திலோ அல்லது போர்ச்சுகலிலோ உற்பத்தியாகி யிருக்குமாயின், அவ்வாறுதான் நிர்ணயிக்கப் படுகிறது.'[8]

அவ்வாறெனில், பன்னாட்டுப் பரிவர்த்தனையில் பண்டங் களின் மதிப்பினை நிர்ணயிப்பது யாது? இதற்கு விடையளிக்க, போர்ச்சுகலிலும் இங்கிலாந்திலும் மதுவையும் துணியையும் உற்பத்தி செய்ய ஏற்படும் உழைப்புச் செலவினைக் கீழ்க்காணும் எண் இலக்கில் ரிக்கார்டோ அனுமானித்துக்கொள்கிறார் :

உற்பத்தியின் உழைப்புச் செலவு

	மது (X பவுண்டு)	துணி (Y கெஜம்)
போர்ச்சுகல்	80	90
இங்கிலாந்து	120	100

போர்ச்சுகலில் இரண்டு பொருள்களின் உற்பத்திச் செலவுமே இங்கிலாந்தைவிடக் குறைவுதான். இருந்தபோதிலும், மது உற்பத்தியில்மட்டும் அது சிறப்புத் தேர்ச்சி செய்து அதை இங்கிலாந்தின் துணிக்காகப் பரிவர்த்தனை செய்வதுதான் அதற்கு இலாபகரமானதாகும். அவ்வாறு செய்யும்போது மது உற்பத்தியில் செலவிடும் 80 நாட்களுக்கு, உள்நாட்டிலேயே துணி உற்பத்தி செய்யச் செலவிட்டிருக்கக்கூடிய 90 நாட்கள் அதற்குக் கிடைக்கிறது. இப் பரிவர்த்தனையால் இங்கிலாந்திற்கும் இலாபம் கிடைக்கும். எவ்வாறெனில், துணி உற்பத்தியில்மட்டும் அது சிறப்பாக ஈடுபட்டுத் துணியை மதுவிற்காகப் பரிவர்த்தனை செய்யும்போது 100 நாள் உழைப்புச் செலவிற்கு, வாணிப மில்லாத நிலையில் மதுவிற்குச் செலவிட்டிருக்கக்கூடிய 120 நாள் உழைப்பு அதற்குக் கிடைக்கிறது.

பன்னாடுகளுக்கிடையே காரணிகளின் இடப்பெயர்ச்சியின்மை

உள்நாட்டில் நடக்கும் வாணிபத்தில் பரிவர்த்தனை நிர்ணய மாகும் தத்துவத்திற்கும், பன்னாட்டு வாணிபத்தில் பரிவர்த்தனையை நிர்ணயிக்கும் தத்துவத்திற்கும் இவ்வளவு பெரிய வேறுபாடு இருப்பதேன்? இதற்கு விளக்கம் தருவது மிக எளிது.

'உள்நாட்டிற்கும் பன்னாட்டிற்குமிடையே இவ் விஷயத் திலுள்ள வேறுபாடு ஏன் என்பதைத் தெளிவாக விளக்க முடியும். அதாவது, ஒரு நாட்டிற்குள் ஒரு மாநிலத்திலிருந்து பிறிதொன்றுக்கு

[8] அதே நூல், பக்கங்கள் 81–82.

அதிக இலாபகரமான தொழிலை நோக்கி மூலதனம் எளிதாக இடம் பெயர்கிறது; ஆனால், ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு அவ்வாறு இடம் பெயர்வது எளிதன்று.'

'மதுவும் துணியும் போர்ச்சுகல் நாட்டில்தான் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றும், இதற்காக இங்கிலாந்தில் துணி உற்பத்தி செய்வதில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளிகளும் மூலதனமும் அங்கிருந்து வெளியேறி போர்ச்சுகல்லிற்குச் செல்ல வேண்டும் என்றும் வைத்துக்கொண்டால், இங்கிலாந்தின் முதலாளிகளுக்கு மட்டுமன்றி, இரண்டு நாடுகளிலுமுள்ள நுகர் வோருக்கும் இலாபகரமானதாயிருக்கும்........'

'எனினும், முதலாளியின் சொந்தக் கண்காணிப்பில் இல்லாத போது உண்மையாகவோ அல்லது கற்பனையிலோ மூலதனத்திற்கு ஆபத்து வரும் என்ற பயமும், தன்னுடைய பிறந்த நாட்டையும் உறவுகளையும்விட்டு நீங்கித் தனது பழக்கவழக்கங்கள் ஏற்கெனவே ஏற்பட்டிருக்க, ஒரு புது அரசாங்கம், புதுச் சட்டங்கள் ஆகியவற்றின்கீழ் வாழ இயற்கையாகவே ஒவ்வொரு மனித னுக்கும் விருப்பம் இல்லாதிருப்பதும் மூலதனம் நாடுவிட்டு நாடு போவதைத் தடுக்கிறது என்பதை அனுபவத்தில் காண்கிறோம். இந்த உணர்ச்சிகளெல்லாம் தளர்ச்சியடைவதை நான் விரும்ப வில்லை. தமது செல்வம் அதிக இலாபகரமான வழியில் வெளி நாடுகளில் பயன்படுவதைக்காட்டிலும் குறைந்த இலாபத்தை அடைந்தாலும் அவற்றைச் சொந்த நாட்டிலேயே பயன் படுத்துமாறு அவை செல்வந்தர்களைத் தூண்டுகின்றன.'[4]

நவீன சொற்களில் இதைக் கூறுவதாயின், உழைப்பாளி, மூலதனம், தொழில்துணிவு ஆகியவற்றின் இடப்பெயர்ச்சி யின்மைதான் அவற்றைச் சொந்த நாட்டிலேயே வைத்திருக்கவும், உழைப்புச் செலவுகள் மிகத் தாழ்வாயுள்ள இடங்களில் செய்யப் படக்கூடிய உற்பத்தியைத் தடுக்கவும் முற்படுகிறது. பல நாடு களுக்கிடையே எங்கு உற்பத்தித் தொழிலை அமைப்பது என்பது தராதரச் செலவின் தத்துவத்தால் நிர்ணயமாகிறது; ஒவ்வொரு நாடும் தத்தம் தராதரச் (உழைப்புச்) செலவுகள் எந்தப் பொருள் களில் குறைவாயிருக்குமோ, அப் பொருள்களில் சிறப்புத் தேர்ச்சி நடைபெற முற்படும்.

வேலைப் பாகுபாட்டுத் தத்துவத்தின் விரிவுதான் இதன் அடிப்படையாகும். எதில் உச்சமான தகுதி இருக்கிறதோ, அதில்

[4] அதே நூல், பக்கம் 83

சிறப்புத் தேர்ச்சி பெறவேண்டும்; எதில் உச்ச அளவு தகுதி குறைவு இருக்கிறதோ அதை விட்டுவிடவேண்டும். இது தனி மனிதர்களுக்கு மட்டுமன்றி நாடுகளுக்கும் பொருந்தும். ரிக் கார்டோ அவர்கள் இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கு கிறார்:

'செருப்பு, தொப்பி ஆகிய இரண்டையுமே இருவர் செய்யக் கூடும்; இவ்விரண்டிலுமே ஒருவன் மற்றொருவனைக்காட்டிலும் கெட்டிக்காரன். ஆனால், தொப்பி செய்வதில் தனக்குப் போட்டி யாக உள்ள மற்றவனைவிட 1/5 மடங்கு அல்லது 20 சதவீதம்தான் சிறந்தவன்; செருப்புச் செய்வதிலோ 1/3 மடங்கு அல்லது 33 சத வீதம் சிறந்தவன்—தேர்ச்சி மிக்கவன் செருப்புச் செய்வதில்மட்டும் ஈடுபடுவதும், தேர்ச்சி குறைந்தவன் தொப்பி செய்வதில் ஈடுபடு வதும்தாம் இருவருக்கும் பயனுள்ளதாயிருக்குமன்றோ?'[5]

தராதரச் செலவுக் கோட்பாடு ஆதம் ஸ்மித்தின் பன்னாட்டு வாணிபத் தத்துவத்தைக்காட்டிலும் மேலானது என்பது வெளிப் படை. இது பொதுவானதொரு கோட்பாடு; அதோடு, ஸ்மித்தின் தத்துவத்தில் உள்ளடங்காத சூழ்நிலையைக் கூறுவதோடு, ஒரு நாடு கொண்டுள்ள தராதரச் செலவின் சிறப்பு தனிச் சிறப்பாகவும் அமைகிறது என்பதைச் சிறப்பாக இது விளக்குகிறது.

ஆனால், இக்கோட்பாடு வாணிபத்தால் ஏற்படும் நன்மைகளைப் போதுமான ருசுவோடு மெய்யெனக் காட்டியபோதிலும், ரிக்கார் டோவின் காலத்திற்குப் பின்னர், பன்னாட்டுப் பரிவர்த்தனையின் உண்மையான விகிதத்தை அல்லது பன்னாட்டு விலைகளை நிர்ண யிக்காமல் விட்டுவிட்டது. போர்ச்சுகல் 80 அலகுகள் உழைப்புச் செலவுடைய மதுவை (X பவுண்டு) 100 அலகு உழைப்புச் செல வுடைய இங்கிலாந்தின் துணிக்கு (Y கெஜம்) பரிவர்த்தனை செய்யு மென்று ரிக்கார்டோ சுலபமாக அனுமானித்துக்கொண்டார். அதாவது, பன்னாட்டு வாணிபத்தில் தேவைப்புறத்தை (demand side) ஆயாமல் அளிப்புப் புறத்தில் (supply side) அல்லது செலவுப் புறத்தில்மட்டுமே தமது கவனத்தைச் செலுத்தினார். ஒருவேளை இலாபகரமான பன்னாட்டு வாணிபத்திற்குத் தராதர உழைப்புச் செலவிலுள்ள வேறுபாடுகள்தாம் முக்கியமேயன்றித் தனிச் செலவு வேறுபாடன்று என்பதை மட்டும் விளக்குவதிலேயே தமது கவனத்தைச் செலுத்திவிட்டதால், இன்னும் ஆழமாக ஆய்ந்து இலாபகரமான பரிவர்த்தனை விகிதத்தைத் தெளிவாக அவர் கூற மறந்திருக்கக்கூடும்; அல்லது அவர் எடுத்துக்கொண்ட உதாரணத் தின் காரணமாக வாணிப விகிதப் பிரச்சினைகள் அவரது கவனத்தி

[5] அதே நூல், பக்கம் 83

லிருந்து தப்பியிருக்கக்கூடும். காரணம் எதுவாயிருந்தாலும், அடுத்து வரவிருந்த இப் பணி, ரிக்கார்டோவின் தலைசிறந்த வழித் தோன்றலான ஜான் ஸ்டுவர்ட் மில்லின் (John Stuart Mill) அக் கறைக்காகக் காத்திருக்கவேண்டியதாயிற்று.

ஜான் ஸ்டுவர்ட் மில்

மில் அவர்கள் ரிக்கார்டோவின் தராதரச் செலவுக் கோட் பாட்டை மேலும் தெளிவாக விளக்கிய பின்னர், பன்னாட்டு மதிப்பை அல்லது பண்டங்கள் எந்த விதத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் என்ற கேள்வியை ஆய்வதில் ஈடுபட்டார். இதற் கென்று அவர் அமைத்த உதாரணம்தான் இப் பிரச்சினைக்கு ஆழ்ந்த கவனத்தை ஈர்த்தது. இரு நாடுகளில் ஒவ்வொரு பண்டத் தின் உற்பத்தி அளவை அனுமானித்துக்கொண்டு, அவற்றை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழைப்புச் செலவு எவ்வாறு நாட்டிற்கு நாடு வேறுபடுகிறதென்பதை ஆய்வதற்குப் பதிலாக, அந்தந்த நாட்டின் உழைப்புச் செலவினை அனுமானித்துக் கொண்டு, அவற்ருல் உற்பத்தி செய்யப்படும் அளவு எவ்வாறு நாட்டிற்கு நாடு வேறுபடுகிறதென்பதை ஆய்ந்தார்.[6] இவ்வாருக, அவருடைய கோட்பாடு தராதரச் சிறப்பு அல்லது உழைப்பின் தராதர உற்பத்தி ஆக்கம் என்பதைக்கொண்டு விளக்கப்படுவதா கிறது. இது ரிக்கார்டோவின் தராதர உழைப்புச் செலவு என்னும் ஆய்விலிருந்து வேறுபட்டது.

மில்லின் கோட்பாட்டைக் கீழ்வரும் எடுத்துக்காட்டைக் கொண்டு விளக்கலாம்:[7]

உழைப்புச் செலவு (ஆள்-ஆண்டுகள்)	நாடு	உற்பத்தி அளவு: எஃகு (டன்கள்)	கோதுமை (டன்கள்)
10	பெல்ஜியம்	20	20
10	ஃபிரான்ஸ்	10	15

[6] 'இங்கிலாந்தில் 10 கெஜம் பருத்தித் துணிக்கேற்படும் செலவுதான் 15 கெஜம் லினன் துணிக்கு ஏற்படுவதாகவும், ஜெர்மனியில் 20 கெஜம் லினனுக்கு ஏற்படுவதாகவும் வைத்துக்கொள்வோம்........... இவ்வாறு நாம் அனுமனித்துக் கொண்டால், இங்கிலாந்து ஜெர்மனியிலிருந்து லினனையும், ஜெர்மனி இங்கிலாந்தி லிருந்து பருத்தித் துணியையும் இறக்குமதி செய்வது இரண்டு நாடுகளுக்குமே இலாபகரமானதாகும்.' J. S. Mill அவர்களின், **'Principles of Political Economy,'** **Ashley Edition,** நூல் 3, அத்தியாயம் 18, பிரிவு 8, பக்கங்கள் 584-585. **Published by Longmans, Green & Co., London.**

[7] இவ்வெடுத்துக்காட்டைப் பின்வரும் வகையில் ரிக்கார்டோ பயன்படுத்தி யிருப்பார்:

	எஃகு செலவு (1 டன்)	கோதுமைச் செலவு (1 டன்)
பெல்ஜியம்	$\frac{1}{2}$ ஆள்–ஆண்டு	$\frac{1}{2}$ ஆள்–ஆண்டு
ஃபிரான்ஸ்	1 ஆள்–ஆண்டு	$\frac{2}{3}$ ஆள்–ஆண்டு

ஒரே உற்பத்திச் செலவில் எஃகு, கோதுமை ஆகியவற்றின் உற்பத்தி இவ்விரு நாடுகளுக்கிடையே வேறுபடுகிறது. இரண்டு பண்டங்களிலுமே பெல்ஜியம் தனிச் சிறப்புடையதாக (absolute advantage) உள்ளது. (ஃபிரான்ஸ் நாட்டில் உற்பத்தியாகும் 10 டன் எஃகு 15 டன் கோதுமைக்குப் பதிலாக இங்கு 20 டன் எஃகு 20 டன் கோதுமை உற்பத்தியாகிறது). எனினும், எஃகு பொருளில்தான் அதன் தராதரச் சிறப்பு உயர்வாயுள்ளது. (கோதுமையில் 4-க்கு 3 அல்லது 2-க்கு 1·5 விகிதத்திற்கும், எஃகு பொருளில் 2-க்கு 1 என்ற விகிதத்திற்கும் உளது.) ஃபிரான்ஸ் நாட்டின் சிறப்புக் குறைவு எஃகு பொருளை நோக்கக் கோது மையில் சிறிதளவுதான். எனவே, வாணிபம் நடக்கும்போது தராதரச் சிறப்புதான் இலாபகரமான சிறப்புத் தேர்ச்சிக்கு வழிகாட்டும்.

சாத்தியமான வாணிப மாற்று வீதம்

வாணிபம் நடைபெருதிருக்கும்போது, ஃபிரான்ஸில் 10 டன் எஃகு பொருளுக்கும் 15 டன் கோதுமைக்கும் ஒரே அளவு உழைப்புச் செலவு ஏற்படுவதால், 10 டன் எஃகு பொருளுக்கு 15டன் கோதுமை என்னும் விகிதத்தில் அங்குப் பரிவர்த்தனை நடை பெறும்; அதே சமயம் பெல்ஜியத்தில் 10 டன் எஃகு பொருளுக்கு 10 டன் கோதுமை என்னும் விகிதத்தில் பரிவர்த்தனை நடை பெறும். ஆனால், பெல்ஜியத்தில் 10 டன் கோதுமை அல்லது 10 டன் எஃகு 5 ஆள்-ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டது. எனவே, தனது 10 டன் எஃகு பொருளுக்குப் பதிலாக பெல்ஜியம் 10 டன் கோதுமைக்குமேல் பெறமுடிந்தால் அதற்கு இலாபம் ஏற்படும்; அதே சமயம் ஃபிரான்ஸ் 15 டன்னுக்குக் குறைந்த அளவு கோதுமையை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக 10 டன் எஃகு பொருளைப் பெறமுடிந்தால், அதற்கு இலாபம் ஏற்படும் என்பது தெளிவு. அதாவது, அந்தந்த நாட்டின் தராதர உழைப்புத் திறனைக்கொண்டு நிர்ணயமாகும் உள்நாட்டுப் பரிவர்த்தனை விகிதம்தான் சாத்தியமான அயல்நாட்டு வாணிப மாற்று வீதத்தின் வரம்பினை நிர்ணயிக்கிறது.

சாத்தியமான பண்டமாற்று வீதத்தின் வீச்சை (range) இவ்வாறு விளக்கலாம்:

எஃகு	கோதுமை
10	10+
	15−

இந்த வீச்சிற்குள்தான் சாத்தியமான எந்த வீதமும் அமைய முடியும். அடுத்து, பண்டங்களின் வாணிபத்தில் உண்மையான மாற்றுவீதத்தை (actual terms) நிர்ணயிக்கும் காரணிகள் யாவை என்ற வினாவிற்கு விடையளிக்க மில் ஈடுபட்டார்.

பரஸ்பர தேவை (Reciprocal Demand)

சுருக்கமாகக் கூறின், மில்லின் விடை இதுதான் : பொருள்கள் உண்மையாகவே எந்த மாற்று வீதத்தில் வாணிபம் செய்யப்படுமென்பது, ஒரு நாட்டின் பொருளுக்குப் பிறிதொரு நாடு கொண்டுள்ள தேவையின் தீவிரத்தையும் தேவை நெகிழ்ச்சியையும் பொறுத்தது ; அல்லது அந் நாடுகளின் பரஸ்பர தேவையைச் சார்ந்தது. ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியும் அதனதன் இறக்குமதிக்குச் சரிசமமாக இருக்கும்போது, இந்த விகிதம் மாருமல் நிலையானதாயிருக்கும்.

நமது உதாரணத்தில் பணக் கூலியைப் (money wages) புகுத்துவதன்மூலம் மில்லின் பரஸ்பர தேவைத் தத்துவத்தை இன்னும் தெளிவாகக் காட்டலாம்.[8] ஒவ்வோர் ஆள் - ஆண்டிற்குமுள்ள கூலி பெல்ஜியத்தில் 10,000 பிராங்குகளாயும், ஃபிரான்ஸில் 6,000 பிராங்குகளாயும் இருப்பதாக அனுமானித்துக்கொள்வோம். இப்போது திட்டவட்டமாகப் பணச்செலவு எவ்வளவு என்பதை நாம் அறியக்கூடும் ; மேலும், இச் செலவிலிருந்து பண்டமாற்று விகிதத்தையும் நாம் எளிதாகக் கணக்கிடக்கூடும்.

				எஃகு		கோதுமை	
உழைப்பின் உள்ளிடுகை (ஆள்-ஆண்டு-கள்)	தலா ஆள்-ஆண்டுக் கூலி (பிராங்கு)	மொத்தச் செலவு (பிராங்கு)	நாடுகள்	உற்பத்தி (டன்)	தலைக்குச் செலவு (பிராங்கு)	உற்பத்தி (டன்)	தலைக்குச் செலவு (பிராங்கு)
10	10,000	100,000	பெல்ஜியம்	20	5,000	20	5,000
10	6,000	60,000	ஃபிரான்ஸ்	10	6,000	15	4,000

[8] மில் அவர்கள் இதற்கு வேறுவிதமாக விளக்கம் தந்தார். ஆனால், இன்னும் தெளிவாக இருக்கவேண்டுமென்பதற்காக இங்கு இந்த விளக்கம் தரப்பட்டுள்ளது. அவர் பணக்கூலியைப் புகுத்தாமல், வாணிபப் பண்டமாற்று வீதத்தை ஆய்ந்தார். எனவே, ஒவ்வொரு நாட்டின் தேவையும் பன்னாட்டு வாணிப மாற்று வீதத்தில் பொதுவானதொரு மடங்காக (multiple) நிலைத்திருந்தால், உதாரணமாக, பெல்ஜியம் $1,000,000 \times 12.5$ அலகுகள் அல்லது 12,500,000 அலகுகள் கோதுமையை விரும்பும் அதே சமயம் ஃபிரான்ஸ் $1,000,000 \times 10$ அல்லது 10,000,000 அலகுகள் எஃகு விரும்புமாயின், 12.5 கோதுமைக்கு 10 எஃகு என்ற மாற்று வீதம் இருக்கும் எனக் கூறியிருப்பார்.

இச் செலவு கணக்கின்படி, பெல்ஜியத்தில் 10 டன் எஃகுக்கு 50,000 பிராங்கு செலவாகும்; இதே தொகையில் ஃபிரான்ஸ் (1 டன்னுக்கு 4,000 பிராங்கு வீதம்) 12.5 டன் கோதுமை உற்பத்தி செய்ய முடியும். 10 எஃகுக்கு 12.5 கோதுமை என்ற இப் பண்டமாற்று வீதத்தில் பெல்ஜியத்தில் 50,000 மில்லியன் பிராங்கு மதிப்புடைய 12·5 மில்லியன் அலகு கோதுமையும், ஃபிரான்ஸில் 50,000 மில்லியன் பிராங்கு மதிப்புடைய 10 மில்லியன் டன் எஃகும் தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது இந் நாடு ஒவ்வொன்றின் ஏற்றுமதி மதிப்பும் அதனதன் இறக்குமதி மதிப்பிற்குச் சமமாகிவிடுகிறது; எனவே, அதனதன் வாணிபச் செலுத்துக் கணக்குச் சரிசமமாகி விடுகிறது. அவ்வாறுயின், இவ் வாணிபப் பண்டமாற்று வீதம் மாறுமல் நிலையாயிருக்கும்.[9]

இப்போது, இந்த மாற்று வீதமும் விலையும் மாறுமல் அப்படியே இருக்க, ஃபிரான்சுக்குத் தேவைப்படும் எஃகு 60,000 மில்லியன் பிராங் மதிப்புடைய 12 மில்லியன் டன்னுக்கு அதிகரிப்பதாகக் கொள்வோம். அவ்வாறுயின், 10,000 மில்லியன் பிராங்கு மதிப்புடைய தங்கத்தை ஃபிரான்ஸ் பெல்ஜியத்திற்கு அனுப்பவேண்டியிருக்கும். அவ்வாறு அனுப்பினால் பெல்ஜியத்தில் விலைவாசிகளும் கூலியும் உயரவும், ஃபிரான்ஸில் அவை இறங்கவும் வேண்டும். பெல்ஜியத்தில் கூலி 10,500 பிராங்கிற்கு உயர்வதாகவும், ஃபிரான்ஸில் 5,500 பிராங்கிற்கு இறங்குவதாகவும் வைத்துக்கொள்வோம். அப்போது நமது எடுத்துக்காட்டு பின்வருமாறு மாறிவிடும்:

உழைப்பின் உள்ளிடுகை (ஆள்-ஆண்டு)	தலா ஆள்-ஆண்டுக் கூலி	மொத்தச் செலவு	நாடுகள்	எஃகு (டன்)	எஃகு (பிராங்கு)	கோதுமை (டன்)	கோதுமை (பிராங்கு)
10	10,500	105,000	பெல்ஜியம்	20	5,250	20	5,250
10	5,500	55,000	ஃபிரான்ஸ்	10	5,500	15	3,667

இப்போது எஃகு விலை 5,250 பிராங்கிற்கு உயர்ந்து விட்டதால், ஃபிரெஞ்சு நாட்டவர் எஃகு வாங்குவதை ஓரளவு குறைத்துவிடுவர்; அதே சமயம் கோதுமை விலை 3,667 பிராங்கிற்கு இறங்கியுள்ளதால் பெல்ஜிய நாட்டவர் அதிகமாகக்

[9] எளிமையாக்கப்பட்ட இந்த உதாரணத்தில் இரண்டு பொருள்களில்மட்டும், இரண்டு நாடுகளுக்கிடையே வாணிபம் நடப்பதாக அனுமானிக்கப்பட்டுள்ளது; போக்குவரத்துச் செலவு இல்லாததாகவும் அனுமானிக்கப்பட்டுள்ளது. மேலும், 1 பெல்ஜிய பிராங்கு 1 ஃபிரெஞ்சு பிராங்கிற்குச் சமமென்றும், பொன் நாணயத் திட்டத்தில் அவை இயங்குவதாயும் அனுமானித்துள்ளோம்.

கோதுமை வாங்குவர். ஃபிரெஞ்சு நாட்டுத் தேவை 11 மில்லியன் அலகு எஃகு என்றால், அதன் இறக்குமதி 57,750 மில்லியன் பிராங்கு மதிப்புதான் இருக்கும். 3,667 பிராங்கு விலையில் கோதுமைக்கேற்படும் பெல்ஜிய நாட்டுத் தேவை (ஏறக்குறைய) 15·75 மில்லியன் டன் என்று இருக்குமானால், அதன் இறக்கு மதியும் 57,750 மில்லியன் பிராங்குதானிருக்கும். அவ்வாறாயின், மறுபடியும் சமநிலை ஏற்பட்டு, பண்டமாற்று வீதம் 10 எஃகு = 14.32 கோதுமை என்று நிலவும். ஆனால், பெல்ஜியத்திற்குத் தேவைப்படும் கோதுமை இதைவிடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தால், ஏதாவதொரு சமநிலையை அடையும் வரை பரஸ்பர தேவைக்கேற்ப விலையும் கூலியும் மாறிக் கொண்டேயிருக்கும்.

இவற்றையெல்லாம் சுருக்கமாகக் கூறின், (1) சாத்தியமான வாணிப மாற்று வீதத்தின் வீச்சு, ஒவ்வொரு நாட்டின் தராதர உற்பத்தித் திறனால் நிர்ணயிக்கப்படும். உள்நாட்டு வாணிப வீதங்களைக் கொண்டு அமையும்; (2) இந்த வீச்சிற்குள் இருக்கக்கூடிய உண்மையான வாணிப வீதம் ஒவ்வொரு நாடும் பிறநாட்டுப் பொருள்களுக்குக் கொண்டுள்ள தேவையைச் சார்ந்தது; (3) இறுதியாக, ஒரு நாட்டிற்குத் தேவைப்படும் பொருள்களின் மதிப்பும், மற்றொரு நாட்டிற்குத் தேவைப்படும் பொருள்களின் மதிப்பும் சமமாயிருக்கும் நிலையிலுள்ள பண்ட மாற்று வீதங்கள்மட்டும்தான் மாறாமல் நிலையான சமநிலையில் இருக்கும்.

கூலி வேறுபாடுகளுக்கு வரம்புகள்

இன்னும் ஒரு நிலை மேலே சென்று ஆய்வது நல்லது. ஒவ்வொரு நாட்டின் தராதர உற்பத்தித் திறனால் பண்டமாற்று வீதத்தின் வரம்புகள் நிர்ணயிக்கப்படுவதோடு, தராதரக் கூலியின் வரம்பும் அதனால் நிர்ணயமாகிறது. உழைப்புத் திறனின் வீதம் எஃகு உற்பத்தியில் 2-க்கு 1 என்றும், கோதுமை உற்பத்தியில் 2-க்கு 1·5 என்றும் உள்ளது. பெல்ஜியத்தில் ஃபிரான்ஸிலுள்ளதைக்காட்டிலும் கூலி இரண்டு மடங்குதான் அதிகமாயிருக்க முடியும்; அதற்குமேல் அதிகமாயிருக்க முடியாது. ஏனெனில், அவ்வாறு அதிகமாயிருந்தால், அது பெல்ஜியம் எஃகில் கொண்டுள்ள தராதரச் சிறப்பிற்கு மாறாக இயங்கி, எஃகு பொருளை ஏற்றுமதி செய்யமுடியாத நிலைக்கு ஆக்கிவிடும். அப்போது பெல்ஜியத்திற்கேற்படக்கூடிய அதே செலவில் ஃபிரான்ஸ் தனக்கு வேண்டிய எஃகு பொருளைத் தானே உற்பத்தி செய்துகொண்டு, அதே சமயம் பெல்ஜியத்திற்கு

வேண்டிய கோதுமையை ஏற்றுமதி செய்யும். ஆனால், அக் கோதுமைஇறக்குமதிக்காக பெல்ஜியம் ஃபிரான்ஸிற்குத் தங்கத்தை அனுப்பவேண்டியதிருக்கும். மேலும், பெல்ஜிய நாட்டிற்கும் ஃபிரான்ஸ் நாட்டிற்குமுள்ள கூலி 2-க்கு 1·5 என்ற வீதத்தைக் காட்டிலும் தாழ்வாக இருக்கவும் முடியாது. அவ்வாறிருப்பின், கோதுமையை உற்பத்தி செய்வதற்கேற்படும் செலவு இரண்டு நாடுகளுக்குமே ஒன்றென ஆகிவிடும். அப்போது பெல்ஜியம் கோதுமை, எஃகு ஆகிய இரண்டையும் தானே உற்பத்தி செய்துகொண்டு, ஃபிரான்ஸிற்கு வேண்டிய எஃகு பொருளை ஏற்றுமதி செய்து, அதற்காகத் தங்கத்தைப் பெறும்.

இவ்விரு நிலைகளிலும் சமநிலையான வாணிபம் ஏற்பட முடியாது. ஏனெனில், விலையும் கூலியும் உயர்வாயிருக்கும் போது, விலை-பொன்-பெயர்ச்சி இயக்கம் அவற்றைக் குறைக்கும்; தாழ்வாயிருக்கும்போது அவற்றை உயர்த்தும். இவ் விரண்டு நாடுகளின் பரஸ்பர தேவையும் ஒன்றுக்கொன்று சமமாகும் வரை இவ்வாறு செயல்பட்டுக்கொண்டே யிருக்கும்.

தொன்மைக் கோட்பாட்டின் நயமாக்கமும் விரிவாக்கமும்

ரிக்கார்டோ, மில் ஆகியோரின் பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டின் இன்றியமையாத அம்சங்கள், அவர்கள் காலம் தொட்டு இன்றுவரை அடிப்படை மாற்றம் ஏதுமின்றி அப்படியே உள்ளன. எனினும், இக் கோட்பாடு பல வழிகளில் மேம்படுத்தப் பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் மிக முக்கியமான மேம்பாட்டை டாசிக் (Taussig) செய்துள்ளார். போட்டியிடாத வகுப்பினர்களும் (non-competing groups) மூலதனக் கட்டணமும் (capital charges) இருக்கின்ற காரணத்தால் ஏற்படும் பிரச்சினைகளை ஆய்வதற்கென்று அவர் இக் கோட்பாட்டைச் சிறிது விரிவுபடுத்தினார்.

போட்டியிடாத வகுப்புகள்

மூலக் கோட்பாட்டின்படி, ஒரு நாட்டிலுள்ள உழைப்பாளிகள் அனைவரும் ஒரே தன்மையுடையவராகவும், நாட்டிற்கு நாடு மட்டும் அவர்களின் உற்பத்தித் திறன் மாறுவதாகவும் அனுமானிக்கப்பட்டது. ஆனால், ஒரு நாட்டிலுள்ள உழைப்பாளிகளைப் பல வகுப்புகளாகப் பிரிக்கலாம். (உதாரணமாக, ஒரு பொதுவான பாகுபாட்டு அடிப்படையை மட்டும் கொண்டு

அவர்களைத் தொழில்நுட்பம் பெற்ற, தேர்ச்சி பெற்ற, முழுதும் தேர்ச்சி பெருத, பயிலாத தொழிலாளிகள் என்று வேறு படுத்தலாம்.) இவ்வாறுள்ள பல்வேறு பிரிவுகளில் ஒரு பிரிவிலுள்ள தொழிலாளிகள் மற்ரெரு பிரிவிற்கு இடம் பெயர்வது கடினம். இவ்வகையில் வெவ்வேறு வகுப்புகளாகப் பாகுபடுத்தப் பட்டுள்ள தொழிலாளிகளின் கூலிகள் ஒரே அளவாய் இருப்பதில்லை; வகுப்பிற்கு வகுப்பு ஏற்றத்தாழ்வான கூலிகள் அல்லது கணிசமான அளவு மாறுதல்கள் இருப்பதால், இவர்களைப் 'போட்டியிடா' வகுப்பினர் எனக் கருதுவர்.

எல்லா நாடுகளிலும் உழைப்பாளிகளுக்கு ஒரே அளவு கூலி இருக்குமாயின், அவர்களைப் பல இனங்களாகப் பிரிப்பதால் பன்னாட்டு வாணிபக் கோட்பாடு பாதிக்கப்படாது. ஆனல், ஒரு நாட்டில் பயிலாத் தொழிலாளிகள் மிதமிஞ்சி இருந்தால் அவர்களின் தராதர ஊதியம் அந் நாட்டில் குறைவாக இருக்கும். அதோடு, அந் நாட்டிற்குத் தராதாச் சிறப்பேதும் இல்லாதிருந்தால்கூட, சில பண்டங்களை மற்ற நாடுகளைக் காட்டிலும் மலிவாக உற்பத்தி செய்ய முடியும். இது போன்றே தேர்ச்சி பெற்ற உழைப்பாளிகளின் கூலியோ, அல்லது போட்டியிடாத வகுப்புகளுள் வேறெந்தப் பிரிவினரின் கூலியோ, அல்லது குறிப்பிட்டதொரு தொழிலிலுள்ள எல்லா வகுப்பினரின் கூலியுமோ மிகத் தாழ்வாய் மந்தமான நிலையில் இருப்பின், அப்போதும் மலிவாக உற்பத்தி செய்ய முடியும். வேறுவிதமாகக் கூறின், குறிப்பிட்டதொரு வகை உழைப்பாளிகளின் கூலி மிகத் தாழ்வாயிருந்தால், அது ஒரு நாட்டின் தராதரச் சிறப்பினைப் போன்றே அதற்கு ஒரு பதிலீடாக வேலை செய்யும்.

இதை டாசிக் மிக விவரமாக எடுத்துக்கூறினர். இருப்பினும், இவ்வாறு போட்டியிட முடியாத வகுப்பினர் இருக்கும்போது அச் சூழ்நிலையை, 1914ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜெர்மனியில் இரசாயனத் தொழிலிலும், அமெரிக்காவில் இரும்பு-எஃகு தொழிலிலும் இருந்ததைப் போன்று விதிவிலக்கானதொரு நிலையாகக்கொண்டு விளக்க வேண்டுமென அவர் கருதினர். 1914ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜெர்மனியின் இரசாயனத் தொழில் முதலாளிகள் மிகக் குறைந்த ஊதியத்தில்கூடத் தேர்ச்சிமிக்க இரசாயனத் தொழிலாளிகளை வேலைக்கமர்த்த முடிந்தது; அதே சமயம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இரும்பு-எஃகு தொழிலுக்கு இதர நாடுகளிலிருந்து குடியிறங்கிய பயிலாத் தொழிலாளிகள் நிறைய கிடைத்ததால் கூலி மிகவும் குறைவாகிவிட்டது. இதனுல் தான் இவ் விரண்டு தொழில்களின் ஏற்றுமதித் திறன் கணிசமான

அளவு அதிகரித்ததென்று டாசிக் கருதினர். எனினும், இவ்வாறான விதிவிலக்குப் பெற்ற சில சூழ்நிலைகளில் தவிர, தராதரச் செலவின் மூலக் கோட்பாடு வேறு எந்த முறையிலும் மாற்றப்படவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், போட்டியிடாத வகுப்பினரின் படிமுறை நிலையும் கூலியின் தராதர வேறுபாடும் ஒரேமாதிரியாகவே இருந்தன.[10]

மூலதனக் கட்டணம்

மூலதனக் கட்டணத்தையும் இதைப்போன்றே டாசிக் ஆய்ந்தார். மூலதனத்திற்கான வட்டியைப் பணச் செலவின் ஓர் அம்சமாக ஏற்றுக்கொண்டு, உற்பத்தி செய்யப்படும் பொருள் களின் தன்மைக்கேற்ப வட்டி மாறினாலன்றிப் பண்டங்களின் தராதர விலையை (relative price) அது பாதிப்பதில்லை என்று கருதினர்.

இது உண்மையாயிருப்பதற்கு, (1) வட்டி வீதங்கள் நாட்டிற்கு நாடு வேறுபட்டிருக்க வேண்டும்; (2) மூலதனத்தின் தராதரப் பயன் தொழிலுக்குத் தொழில் மாறியிருக்கவேண்டும். இவ்வாறாக, வட்டி வீதம் தாழ்வாயுள்ள நாடு, தராதரச் செலவுக் கோட்பாட்டின் அனுகூலங்களைப் போன்றே, விலையில் அனுகூல நிலையை அடையும்; ஆனால், அந்த அனுகூலம் பிற தொழில்களைவிட எந்தத் தொழிலில் அதிக மூலதனம் பயன்படுத்தப்படுமோ அதற்கு மட்டுமே கிடைக்கும். உள்நாட்டிற்குள் வட்டிவீதம் அவ்வளவாக வேறுபடாது என்று கருதப்பட்டதாலும், தொழிலுக்குத் தொழில் பயன்படுத்தப்படும் மூலதனத்திலும் அவ்வளவாக வேறுபாடு இல்லையென அனுமானித்துக்கொண்டதாலும், வட்டி வீதம் பாதிக்கக்கூடிய வீச்சு 'சிறப்பானதொரு சூழ்நிலையால் வரையறை பெறுகிறது' என்று கூறினர். மூலதனத்தைப் புகுத்தி ஆய்வதால் 'முதலாவது நாம் கொண்ட முடிவுகளில் எவ்விதப் பெரிய மாறுதலும் ஏற்படுவதில்லை.'[11]

பல்வேறு வகுப்புத் தொழிலாளிகளின் கூலி மாறுதல்களும், வட்டிவீத வேறுபாடுகளும் விதிவிலக்கான சூழ்நிலைகளில்மட்டுமே முக்கியப் பாகம் வகிக்கின்றன என்று டாசிக் ஒத்துக்கொண்டதன்

[10] **F.W. Taussig** அவர்களின், **'International Trade'** என்னும் நூலில் 6ஆவது அத்தியாயத்தைப் பார்க்கவும். மேற்கு நாடுகளிடையே நடைபெறும் வாணிபம் தராதரச் செலவுக் கோட்பாட்டால் நிர்ணயமானதாக டாசிக் கருதினர். அதே சமயம் உஷ்ண மண்டல நாடுகளோடும் தூர நாடுகளோடும் நடைபெற்ற வாணிபம் தராதரச்செலவின் அல்லது சிறப்பின் வேறுபாடுகளாலன்றித் தனிச் சிறப்பின் அல்லது சிறப்பின் வேறுபாடுகளால் நிர்ணயமானதென்றும் கருதினர்.

[11] அதே நூல், பக்கங்கள் 67-68.

மூலம், பன்னாட்டு விலை மாறுதல்களையும், சிறப்புத் தேர்ச்சி, வாணிபம் ஆகியவற்றின் போக்கினையும் விளக்குவதற்கு உழைப்பின் தராதரச் செலவுக் கோட்பாட்டையே முக்கியமான தத்துவமாக அவர் வைத்துக்கொள்ள முடிந்தது.

தொன்மைக் கோட்பாட்டின் குறைகள்

தராதரச் செலவுக் கோட்பாடு, நல்லதோர் ஆய்வுக் கருவியாக நூருண்டுகளுக்குமேல் பயன்பட்டுவந்துள்ளது. மேலும், இன்றியமையாத சில மாறுதல்களுடன் பல்வேறு பிரச்சினைகளை ஆய்வதற்கும் அதைப் பயன்படுத்தக்கூடும். எனினும், அது உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டை (labour theory of value) ஆதாரமாகக்கொண்டு, 'உழைப்பு' என்ற ஒரு காரணியை மட்டும் வைத்து ஆய்வது பெருங்குறையாகும். உள்நாட்டு விலைகளை அல்லது மாற்று வீதங்களை விளக்குவதாக அமைந்த உழைப்பின் மதிப்பீட்டுக் கோட்பாடு வெகு நாட்களுக்கு முன்னரே கைவிடப்பட்டுவிட்டது. உழைப்புச் செலவைமட்டும் கொண்டு ஆய்வது, உற்பத்தியில் மேலும் பல காரணிகள் உள்ளன என்ற உண்மைக்குப் புறம்பானதாகும்; அதோடு, உழைப்பையே ஆதாரமாக எடுத்துக்கொண்டாலும், அது ஒரே தன்மையுடைய காரணியன்று. எனவே, இவ்வுண்மைகளையெல்லாம் விதிவிலக்காகக்கொண்டு ஆய்வது நியாயமாகாது. மேலும், இது சுற்றுவழிமுறையைக்கொண்ட வில்லங்கமான விளக்கமாகும்.[12]

இறுதியாக, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பன்னாட்டு வாணிபத்தின் பலன்களை விளக்குவதில் மட்டுமே அக்கறை காட்டினர்; அது எவ்வாறு இயங்குகிறது என்ற முறையில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. அவர்களின்

[12] இதற்கு மற்ருெரு விளக்கம் உண்டு. அது உற்பத்திக் காரணிகள் எண்ணிலடங்காதிருப்பதால் ஏற்படும் சிக்கலை ஆய்வதற்கான முறையில் 'உண்மையான செலவுகள்' என்ற கருத்தினைக்கொண்டு ஆய்கிறது. இச் செலவுகள் பல்வேறு வகை உழைப்பாளிகளின் முயற்சி அல்லது பயனின்மை, சேமிப்போரின் துய்ப்புத் தவிர்ப்பு (abstinence) ஆகியவை போன்ற ஆள்சார் செலவுகள் பலவற்றை உள்ளடக்கும். இவற்றை நாம் கணிக்க முடியாதாகையால் (உழைப்பின் பயனிழப்பும் சேமிப்பின் பயனிழப்பும் வெவ்வேறு வகையானதால் அவற்றை நாம் கூட்டி மொத்தமாக்க முடியாது) எல்லாத் தொழில்களிலும் தொகுக்கப்பட்டுள்ள மூலதனமும் உழைப்பும் ஒரேமாதிரியானவை என்று அனுமானித்துக்கொள்ள வேண்டியுள்ளது; அல்லது அங்காடியில் அவைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மதிப்பு (அதாவது, கூலி, வட்டி முதலியன) அவற்றின் பயன் இழப்பின் விகிதாசாரத்தில் இருப்பதாக அனுமானித்துக்கொள்ள வேண்டும். (அவ்வாருனல், அவற்றின் விலைகளைக் கூட்டிய மொத்தத் தொகை உண்மைச் செலவுத் தொகையைத் துல்லியமாகப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமுடியும்.) இவ்விரு வழிகளில் எதுவும் உண்மையானதென்று ஏற்றுக்கொள்ள முடியாதாகையால், உண்மைச் செலவினைக்கொண்டு ஆயும் வழி நியாயமானதாகாது. மேலும், பருத்திக்குப் பதிலாகப் புகையிலையை நிலத்தில் பயிராக்க வேண்டிய அவசியத்தைப்போன்று, பயனை இழந்துவிடாத 'உண்மைச்' செலவினை அது செலவுக் கணக்கில் அளவிட முடியாது.

கோட்பாடு வாணிபத்தால் ஏற்படும் நன்மைகளை விளக்குவதற்குப் பெரிதும் பயன்படுகிறது என்பது உண்மைதான்; ஆனால், விளக்கமானதொரு திட்டமாக அதை நோக்குமிடத்து, அதில் பல பெருங்குறைகள் உள்ளன. எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் எடுத்துக்காட்டு, உழைப்புச் செலவில் குறிப்பிட்ட அளவு மாறுதல் இருப்பதைக்கொண்டு, அயல்நாட்டு வாணிபம் எவ்வாறு இரண்டு நாடுகளுக்குமே பயனளிக்கும் என்பதை விளக்கிக் காட்டியது. ஆனால், ஏன் ஒரு நாட்டைவிட மற்றொரு நாட்டில் செலவு குறைவாயிருக்கிறது என்பதையோ, அல்லது ஒரு நாட்டைக்காட்டிலும் பிறிதொன்றில் ஏன் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாயிருக்கிறது என்பதையோ விளக்க முனைவதில்லை. இதை விளக்க வேண்டுமாயின், உயர்தரமான சாதனங்கள், பல்வேறு எந்திரப் பயன்கள், பேரளவில் அல்லது திறமைமிக்க நிர்வாகத் திறன் ஆகியவைபோன்ற காரணிகளையெல்லாம் எடுத்தாய வேண்டும்.[18] என்றாலும், ஓர் உற்பத்திக் காரணியின், அதாவது, உழைப்பின் உற்பத்தித்திறன் முன்பைவிட அதிகமாயிருப்பதற்குக் காரணம் பிற காரணிகள் நிறைய இருப்பதால்தான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பல்வேறு நாடுகள் பெற்றுள்ள எல்லா உற்பத்திக் காரணிகளின் அளவுகளிலுள்ள பெரு வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பன்னாட்டு வாணிபத்தை விளக்கினால்தான் அது மேலும் பொருத்தமாக இருக்கும். அதோடு, ஒரே ஒரு காரணியைமட்டும் அடிப்படையாகக்கொண்டுள்ள விளக்கத்தின் குறைகளையும் அது நீக்கும்.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள்

Ellsworth, P. T., 'International Economics', New York; Macmillan, *1938-ல்* பதிப்பித்தது. அதிகாரம் 2, பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டு வளர்ச்சிக்குத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் பங்கினைத் திறனாய்வு செய்கிறது. 3ஆம் அதிகாரம் பல மாறுதல்களுடன் தொன்மைக் கோட்பாட்டை நவீனமயமாக்கிச் சுருக்கமாகத் தருகிறது.

Haberler, G., 'The Theory of International Trade', London; Wm. Hodge & Co., Ltd., *1936-ல்* பதிப்பித்தது. *9–10*ஆம் அதிகாரங்கள் தொன்மைக் கோட்பாட்டிற்கு ஒப்பற்ற விளக்கம்

[18] இதற்கு உதாரணம் வேண்டுமாயின், **Taussig** அவர்களின், **'International Trade'** என்னும் நூலில் 15, 16ஆம் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்.

தருகின்றன. இக் கோட்பாட்டின் சுருக்கமான ஆய்விற்கு Haberler, G. அவர்கள் வரைந்த 'A Survey of International Trade Theory,' Special Papers in International Economics, No. 1 என்னும் நூலைப் பார்க்க. இது Princeton, N. J., International Finance Section, Princeton University, *1961*-ல் பதிப்பித்தது.

Marsh, Donald B., 'World Trade and Investment', New York: Harcourt, Brace & Co., *1951*-ல் பதிப்பித்தது. 19, 20ஆம் அதிகாரங்கள், பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டை உண்மைச் செலவைக்கொண்டு கடினமாக விளக்குகின்றன. இந் நூல் படிப்பதற்குக் கடினமானதெனினும் பயனுள்ளதாகும்.

Mill, John Stuart, 'The Principles of Political Economy', மில் அவர்களின் பரஸ்பர தேவைக் கோட்பாட்டை 3ஆம் நூலிலுள்ள 18ஆம் அதிகாரம் விளக்குகிறது.

Ohlin, Bertil, 'Interregional and International Trade', Cambridge, Mass., Harvard University Press, *1933*-ல் பதிப்பித்தது. 3ஆம் பிற்சேர்க்கை, தொன்மைக் கோட்பாட்டினை மிகக் கடுமையாகத் தாக்குகிறது.

Ricardo, David, 'The Principles of Political Economy and Taxation', 7ஆம் அதிகாரம், தராதரச் செலவுக் கோட்பாட்டின் மிகப் பிரபலியமான விளக்கத்தைத் தருகிறது.

Viner, Jacob, 'Studies in the Theory of International Trade', New York; Harper & Bros. *1937*-ல் பதிப்பித்தது. உண்மைச் செலவைக்கொண்டு விளக்கப்படும் பன்னாட்டு வாணிப ஆய்விற்கு ஆதரவான கருத்திற்கு 7ஆம் அதிகாரத்தில் 1, 7, 8, 10, 11, 12ஆம் பிரிவுகளைப் பார்க்க.

5. தராதரச் செலவினை நவீனமாக்கல்
(Modernization of Comparative Cost)

மேலும் முழுமையான கோட்பாடு

பன்னாட்டு வாணிபத்தின் நவீனக் கோட்பாடுகள், தராதரக் காரணிப் பேற்றினை ஆதாரமாகக்கொண்டே வளர்ச்சி பெற்றுள்ளன. இவற்றுள் அதிகமாகப் பயன்படுத்தப்பெறும் இரண்டு கோட்பாடுகளை இங்குப் பார்ப்போம். ஒன்று, பேராசிரியர் காட்ஃபிரைய்டு ஹேபெர்லர் (Professor Gottfried Haberler) அவர்கள் உருவாக்கிய 'பிற வாய்ப்புப் பெறுமானக் கோட்பாடு' (opportunity cost theory) எனப்படும். இது பழைய தராதரச் செலவுக் கோட்பாட்டின் வழியாக நேரடியாகப் பெறப்பட்டது. இதை ஆய்வதற்கு, ஹேபெர்லர் அவர்கள் அடிக்கடி பயன்படுத்தும் உற்பத்தி சாத்தியங்கள் (production possibilities) அல்லது உற்பத்திப் பதிலீட்டுக்கோடு (product substitution curve) என்னும் கருத்தைக்கொண்டு இக் கோட்பாட்டைக் கூறுவதன் வழியாகத் தொடங்குவோம்.

முந்திய அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக் காட்டின்படி, குறிப்பிட்ட அளவு உழைப்பின் உள்ளிடுகை (10 ஆள்-வருடம்) மூலம் பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் எவ்வளவு எஃகும் கோதுமையும் உற்பத்தியாகுமென்று தெரிகிறது. இவ்வுள்ளிடுகையை மாற்றினால் உற்பத்தி அளவும் அவசியம் மாறும்; உழைப்பின் அளவை மாற்றும்போது, விகிதாசாரத்தில் மாறா விளைவு (constant return) ஏற்படுவதாக நாம் அனுமானித்துக் கொண்டால், உற்பத்தியில் மாறாச் செலவு (constant cost) ஏற்படும் நிலையை நாம் அடைவோம். அப்போது, உழைப்பின் உள்ளிடுகைக்கேற்ப உற்பத்தி அளவு மாறா விகிதாசாரத்தில் இருப்பதைக் காட்டும் அட்டவணையை நாம் வரைய முடியும். அது பின்வரும் முறையில் இருக்கக்கூடும்:


உழைப்பின் உள்ளிடுகை (மில்லியன் ஆள்-வருடம்)	உற்பத்தி அளவு			
	பெல்ஜியம்		ஃபிரான்ஸ்	
	எஃகு (மில்லியன் டன்)	கோதுமை (மில்லியன் டன்)	எஃகு (மில்லியன் டன்)	கோதுமை (மில்லியன் டன்)
20	—	—	20	30
10	20	20	10	15
8	16	16	8	12
6	12	12	6	9
4	8	8	4	6
2	4	4	2	3

இவ்வெடுத்துக்காட்டில் உழைப்பின் ஆள்-வருடத்தையும் உற்பத்தியின் அலகினையும் மில்லியன் இலக்கில் கூறுவதன்மூலம் இது தேசிய உற்பத்தி அளவினைக்கொண்டதாக இருக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அட்டவணையில் உழைப்பின் உள்ளிடுகை மாறு விளைச்சலைக்கொண்டது என்பது புலனாகிறது; 2 மில்லியன் அலகு உழைப்பைக்கொண்டு தொடங்கினால், பெல்ஜியத்தில் 4 மில்லியன் டன் எஃகு அல்லது 4 மில்லியன் டன் கோதுமை கிடைக்கிறது; அதே சமயம் ஃபிரான்ஸில் 2 மில்லியன் டன் எஃகு அல்லது 3 மில்லியன் டன் கோதுமை கிடைக்கிறது. உழைப்பின் உள்ளிடுகை 2 மில்லியனிலிருந்து 4 மில்லியனுக்கு அதிகரித்தால், ஒவ்வொரு பண்டத்தின் விளைச்சலும் இரண்டு நாடுகளிலுமே இரண்டு மடங்காகிறது. இதுபோன்று, உழைப்பின் உள்ளிடுகையை அதிகரிக்க அதிகரிக்க, எந்த விகிதத்தில் அதிகரிக்கின்றோமோ அதே விகிதத்தில் உற்பத்தி அளவும் அதிகரிக்கிறது.

இதை வசதியாகவும் சுருக்கமாகவும் விளக்குவதற்கு வரைபடத்தைப் பயன்படுத்த முடியும். வரைபடம் 5.1-ல் செங்குத்துக் கோட்டில் எஃகு உற்பத்தி அளவும், படுகிடைக் கோட்டில் கோதுமை அளவும் அளவிடப்படுகின்றன. எந்த அளவிற்கு உழைப்புப் பயன்படுத்தப்படுகிறதென்று இதில் காட்டப்படவில்லை.[1]

[1] முவ்வளவைப் படத்தை (**three dimensional diagram**) நாம் பயன்படுத்த வேண்டுமாயின், மற்ற இரு அச்சுகளுமுள்ள தளத்திலிருந்து செங்குத்தான அச்சில் உழைப்பை அளவிடலாம். அப்போது இரு பண்டங்களின் உற்பத்தி அளவு தோற்று வாயிலிருந்து (**origin**) ஆரம்பித்து மாறுத சரிவுடன் (**slope**) ஒரு தளத்தின் வழியாக உயர்வதாகக் காண்பிக்கலாம்.

ஆனால், அட்டவணையில் உள்ளபடி உற்பத்தி அளவிற்கேற்ப அது பயன்படுத்தப்படுவதாக அனுமானித்துள்ளோம். உதாரணமாக, பெல்ஜியத்தின் வரைபடத்தில் 2 மில்லியன் தொழிலாளரையும் எஃகு உற்பத்தி செய்வதற்காகமட்டும் வருடம் முழுவதும் அமர்த்தினால் 4 மில்லியன் டன் எஃகு கிடைக்கும்; அதே சமயம் அவர்களைக் கோதுமை உற்பத்தி செய்வதற்குமட்டும் அமர்த்தினால் அதே 4 மில்லியன் டன் கோதுமை கிடைக்கும். அதேபோல் ஃபிரான்ஸில் 2 மில்லியன் தொழிலாளிகளைக்கொண்டு முறையே 2 மில்லியன் டன் எஃகு அல்லது 3 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்யலாம். ஆனால், அவர்களை ஒரு பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தாமல் ஏதாவதொரு விகிதாசாரத்தில் பிரித்து இரண்டு பண்டங்களையுமே உற்பத்தி செய்யப்



வரைபடம் 5.1 உற்பத்தி சாத்தியக் கோடுகள் : மாறுச் செலவு

பயன்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். பெல்ஜியத்தின் எஃகு தொழிலிலுள்ள 2 மில்லியன் தொழிலாளிகளில் சரிபாதிப் பேரைக் கோதுமை உற்பத்தி செய்வதற்கு அமர்த்தினால், எஃகு உற்பத்தி அளவு சரிபாதி அளவு குறைந்துவிடுகிறது; ஆனால், அதற்குப் பதிலாக 2 மில்லியன் டன் கோதுமை உற்பத்தியாகிறது.[2] இத் தொழிலாளர்களை எந்த விகிதாசாரத்தில் வேண்டுமானாலும் பிரித்து இவ் விரண்டு பண்டங்களையுமே உற்பத்தி செய்யப் பயன்படுத்தக்கூடும். குறிப்பிட்டதொரு விகிதாசாரத்தில் மட்டுமே அவர்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றனர் என்று வைத்துக்கொண்டால், அது அவ்விரண்டு பண்டங்களுக்கும் சமுதாயம் கொண்டுள்ள தேவையைக் குறிப்பிடும்.


[2] இவ்வாறாக, நமது ஆய்வின் அடுத்த நிலையை எதிர்பார்க்கக்கூடிய முறையில், 2 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்வதற்காக விட்டுவிடவேண்டிய 2 டன் எஃகுதான் அக் கோதுமையின் உற்பத்திச் செலவென்று கருதமுடியும். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்பின் மாற்றுச் செலவை அளவிடுவதற்கு இது பிறிதொரு வழியாகும்.

2 மில்லியன் ஆள்-வருட உழைப்பின் உற்பத்தி அளவினைக் காட்டும் இக் 'கோடு' உற்பத்தி சாத்தியக் கோடு அல்லது உற்பத்திப் பதிலீட்டுக் கோடு எனப்படும். இவ்வகைக் கோட்டைக்கொண்ட ஒரு குடும்பமே உள்ளது; அவற்றில் பெல்ஜியப் படத்தில் ஐந்து கோடுகளும், ஃபிரான்ஸ் படத்தில் ஆறு கோடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது உழைப்பின் அளிப்பு (supply of labour) பெல்ஜியத்தில் 10 மில்லியன் ஆள்-வருடங்களாகவும், ஃபிரான்ஸில் 20 மில்லியன் ஆள்-வருடங்களாகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வாருயின், பெல்ஜியத்திலுள்ள உழைப்பாளிகள் அனைவரையும் வேலைக்கமர்த்திஞல் 20 மில்லியன் டன் எஃகு அல்லது 20 மில்லியன் டன் கோதுமை உற்பத்தியாக்க முடியும்; அல்லது உச்சமான கோட்டில் ஏதாவதொரு புள்ளி காட்டுகின்ற தொகுதியில் இவ்விரண்டு பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும். அதுபோன்று, ஃபிரான்ஸில் 20 மில்லியன் டன் எஃகு அல்லது 30 மில்லியன் டன் கோதுமையோ, அல்லது இவ்விரண்டையும் ஏதாவதொரு தொகுப்பில் உற்பத்தி செய்யக்கூடும். இவைதாம் இவ்விரண்டு நாடுகளின் அதிகபட்ச அல்லது உத்தமநிலை உற்பத்தி சாத்தியக் கோடுகள் ஆகும். பொதுவாக, வேலை நிறைவு (full employment) அனுமானிக்கப்பட்டுவிடுவதால், இந்த உத்தமநிலைச் சாத்தியக் கோடுகள்தாம் பயன்படுத்தப்படும். பின்னர், வேலை நிறைவின்றிக் குறைவாயிருக்கும் நிலையில் உற்பத்தி அளவைக் காட்டும் கோடுகளையெல்லாம் புறக்கணித்துவிடலாம்.

மாருச் செலவின் வரைபட விளக்கம்

பெல்ஜியத்திற்கும் பிரான்ஸிற்குமுள்ள உத்தமநிலை உற்பத்திச் சாத்தியக் கோடுகளை மறுபடியும் 5.2 வரைபடத்தில் வரைவோம். பெல்ஜியம் நாடு வெளிநாட்டுத் தொடர்பின்றித் தனித்து இருப்பதாகவும், இரண்டு பண்டங்களுக்கும் அங்குள்ள தேவை, உச்சமான உற்பத்தி சாத்தியக் கோட்டில் P என்னும் புள்ளி காட்டும் அளவில் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்போது அப் புள்ளி காட்டுவதுபோல் அங்கு 10 மில்லியன் அலகு எஃகும், அதே 10 மில்லியன் அலகு கோதுமையும் உற்பத்தி செய்யப்படும். அதேபோல் ஃபிரான்ஸை எடுத்துக்கொண்டால், அங்கு கோதுமைக்குள்ள தேவை பெல்ஜியத்தைவிட அதிகமாயிருப்பதாக அனுமானித்துக்கொண்டு, அதன் உச்சமான உற்பத்தி சாத்தியக் கோட்டில் P என்ற உற்பத்திப் புள்ளியில் 6⅔ மில்லியன் அலகு எஃகும், 20 மில்லியன் அலகு கோதுமையும் உற்பத்தி செய்யப்படுவதாகக் கொள்வோம்.

ஒவ்வோர் உற்பத்தி சாத்தியக் கோடும் ஒரு நேர் கோடாகவே இருப்பதால், அதன் சரிவு மாறுமலிருக்கிறது. இது, ஒவ்வொரு கோடும் மாறுச் செலவினைப் பிரதிபலிப்பதைக் குறிக்கிறது. உதாரணமாக, பெல்ஜியத்தில் கோதுமைக்குள்ள தேவை அதிகரிப்பதாகவும், எஃகு தேவை குறைவதாகவும் வைத்துக்



வரைபடம் 5.2 மாறுச் செலவில் உற்பத்தி

கொண்டால், அதன் உற்பத்திப் புள்ளி இக் கோட்டின் வழியாகக் கீழே சரிந்து படத்திலுள்ளபடி P_1 என்ற புள்ளிக்குத் தாழ்ந்து விடலாம். அப்போது அங்கு 5 மில்லியன் அலகு எஃகும், 15 மில்லியன் அலகு கோதுமையும் உற்பத்தியாகும். ஃபிரான்ஸில் இதற்கு நேர்மாறுன முறையில் தேவை மாறுவதாகக் கொண்டால், அதன் உற்பத்திப் புள்ளி மேலே சென்று படத்திலுள்ளபடி P_1 என்ற புதிய உற்பத்திப் புள்ளியை அடையும். இந் நிலையில் அங்கு 10 மில்லியன் அலகு எஃகும், 15 மில்லியன் அலகு கோதுமையும் உற்பத்தியாகும். நமது இவ்வாய்வைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கோட்பாட்டின்படி உழைப்புச் செலவைக் கொண்டும் விளக்க முடியும்; அவ்வாறு ஆய்வதாயிருந்தால், ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பண்டத்திற்கும் உழைப்புச் செலவின் அலகு மாறுமலிருப்பதாகக் காட்டலாம்.[8]

உழைப்புச் செலவுபற்றிய எடுகோளை விட்டுவிடுவதற்கு இது தான் நல்ல சமயம். பெல்ஜியத்தில் அதிகப்படியாகக் கோதுமை

[8] உதாரணமாக, பெல்ஜியத்தில் P என்ற உற்பத்திப் புள்ளியில் எஃகு உற்பத்திக்கும், கோதுமை உற்பத்திக்கும் உழைப்பாளிகள் சரிசமமாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் 5 மில்லியன் ஆள்–வருடங்கள் என்று அமர்த்தப்படுவர். ஒவ்வொரு பண்டத்தின் உற்பத்திச் செலவும் அலகிற்கு $\frac{1}{2}$ ஆள்-வருடம் என இருக்கும். கோதுமை உற்பத்தியை 5 மில்லியன் அலகு அதிகரித்து, எஃகு உற்பத்தியை 5 மில்லியன் அலகு குறைக்கவேண்டுமானுல், $2\frac{1}{2}$ மில்லியன் ஆள்–வருடங்கள் எஃகு தொழிலிலிருந்து கோதுமை உற்பத்திக்கு இடம் மாறவேண்டும். அதிகப்படியான கோதுமை உற்பத்தியின் செலவு முன்புபோல் அலகிற்கு $\frac{1}{2}$ ஆள்–வருடமாகவேதான் இருக்கும். ஃபிரான்ஸ் நாட்டிற்கும் இதுபோன்ற ஆய்வை மேற்கொள்ளலாம்.

உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவு, அதற்காகக் கைவிடப் பட்ட எஃகு உற்பத்தி அளவுதான் எனக் கொள்ளலாம். அதாவது, மேலும் ஓரளவு கோதுமையைப் பெறுவதற்காக எவ்வளவு எஃகு கைவிடப்படுகிறதோ அதுதான் அக் கோதுமை யின் பிற வாய்ப்புப் பெறுமானம் ஆகும். உற்பத்தி சாத்தியக் கோடு நேர்கோடாக இருப்பதால் எந்த ஒரு பண்டத்தின் பிற வாய்ப்புப் பெறுமானமும் மாறுமல் அதே வீதத்திலிருக்கிறது. பெல்ஜியத்தை எடுத்துக்கொண்டால், அங்கு ஓர் அலகு எஃகுக்கு ஓர் அலகு கோதுமை என்றும், ஃபிரான்ஸில் 1 அலகு எஃகுக்கு 1.5 அலகு கோதுமை என்றும் உள்ளது.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கோட்பாட்டிலுள்ள குறுகிய எடுகோள்களில் பிறிதொன்றையும் இப்போது நிராகரித்து விடலாம். உழைப்பால்தான் எஃகும் கோதுமையும் உற்பத்தி யாகின்றன என்ற எடுகோளுக்குப் பதிலாக, அந்தந்த நாட்டி லுள்ள எல்லா உற்பத்திக் காரணிகளின் — நிலம், உழைப்பு, மூல தனம் — உள்ளிடுகையால் அவை உற்பத்தி செய்யப்படுவதாக நாம் எடுத்துக்கொள்ளலாம். எந்தப் பண்டமாயிருந்தாலும் அதை உற்பத்தி செய்ய உழைப்புமட்டுமன்றி இதர உற்பத்திக் காரணிகளேயும் பயன்படுத்தவேண்டியிருப்பதால், நமது எடுத்துக் காட்டு முன்பைவிட இப்போது உண்மைக்கு ஒத்ததாக ஆகிறது. மேலும், உற்பத்திச் செலவை உழைப்பைக்கொண்டு மட்டும் கணிக்காமல், கைவிடப்பட்ட உற்பத்திப் பொருளின் அளவைக் கொண்டு விளக்குவதால், முன்பைவிடப் பொதுமையானதோர் ஆய்வாகிறது.

மாருச் செலவினேக்காட்டும் உற்பத்தி சாத்தியக் கோட்டிற்கு மேலும் ஒரு பண்பை நாம் கொடுக்கமுடியும். அதாவது, வெளி நாட்டு வாணிபம் தொடங்குவதற்கு முன்னுல் தனித்திருக்கும் ஒரு நாட்டில் பரிவர்த்தனே செய்யப்படும் மாருத பண்டமாற்று வீதத்தை அல்லது மாருத் தராதர விலேயை அதன் சரிவு பிரதி பலிக்கிறது. பெல்ஜியத்தில் 1 : 1 என்ற வீதத்திலும், ஃபிரான்ஸில் 1:1.5 என்ற வீதத்திலும்தான் எஃகுக்குக் கோதுமை பரிவர்த்தனே செய்யப்படும். பெல்ஜியத்தில் கோதுமைக்கு அதிக அளவு எஃகு தரப்படுமானுல், உதாரணமாக 1 அலகு கோதுமைக்கு 1.1 அலகு எஃகு பரிவர்த்தனே செய்யப்பட்டால், அப்போது உற்பத்தி யாளர்கள் அதிக இலாபம் பெறுவதற்காக எஃகு தொழிலில் பயன் பட்டுவந்த சாதனத்தை, பழைய மாற்றுவீதம் நிலேயாக ஏற்படும் வரை, கோதுமை உற்பத்தி செய்வதற்காக மாற்றுவர்.

எடுகோள் வழியிலிருந்து சிறிது விலகுவோம்

துரதிர்ஷ்டவசமாக, நடைமுறைக்கு மேலும் உகந்த ஆய்வை மேற்கொள்வதற்காகத் தனியொரு காரணிக்குப் பதிலாக மூன்று காரணிகளையும் ஆதாரமாகக்கொண்டு நமது உதாரணத்தை அமைக்க ஓர் அடி முன்னே செல்லும் அதே சமயத்தில், உண்மைக்குப் புறம்பானதும், உள்ளதைக் குறைக்கின்றதுமான எடுகோளை நாம் கொள்வதன்மூலம் ஓர் அடி பின்னால் போக வேண்டியுள்ளது. அதாவது, ஒன்று, உற்பத்திக் காரணிகளெல்லாம் ஒரே விகிதாசாரத்தில்தான் தொகுக்கப்படுகின்றன என்ற உண்மைக்குப் புறம்பானதோர் எடுகோளை நாம் கொள்ள வேண்டும்; அல்லது, எந்த ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய வேண்டுமானாலும், உற்பத்திக் காரணிகள் ஒன்றுக்கொன்று வேறுபாடின்றி எல்லாமே சமதிறனுடையவை என்று அனுமானிக்க வேண்டும். இவ்வாறாக, கைவிடப்பட்ட மாற்றுவழி உற்பத்தியைக் கொண்டு விளக்கினாலுஞ் சரி, அல்லது ஓர் அலகுப் பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான சாதனங்களைக் கொண்டு விளக்கினாலுஞ் சரி உற்பத்திச் செலவு மாறாத விகிதாசாரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்ளவேண்டுமானால், இவ்விரண்டில் ஏதாவதோர் எடுகோள் இன்றியமையாததாகிறது.


இவ்வகை எடுகோள்களையெல்லாம் நாம் விரைவில் புறக்கணித்துவிடுவோம். அதன் பிறகு, மற்றவைகளைவிடக் குறிப்பிட்டதொரு காரணிதான் (உதாரணமாக, நிலம்தான்) குறிப்பிட்டதொரு பண்டத்தை (உதாரணமாக, உணவு தானியத்தை) உற்பத்தி செய்ய உகந்ததாயிருக்கமுடியும் என்பதும், அப்போது வளர்ந்து செல் செலவு (increasing costs) ஏற்படும் என்பதும் விளங்கும். எல்லா வகையான உற்பத்திகளிலும் பயன்படுத்தப்படும் காரணிகளனைத்தும் ஒரே தன்மையுடையன என்று அனுமானிக்கும்போது, ஒரு நாட்டின் தராதரச் சிறப்பை விளக்குவதற்கு — தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டைப் போன்று — ஆய்விலுள்ள குறிப்பிட்ட காரணிகளுக்குப் பதிலாக, நாட்டிற்கு நாடு சீதோஷ்ண நிலையிலோ உற்பத்தித் திறனிலோ ஏற்படும் வேறுபாடுகளைப்போன்று பல காரணங்கள் இருப்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

மாறாச் செலவு நிலைமைகளில் பன்னாட்டு வாணிபம்

பன்னாட்டு வாணிபத்தை விளக்கமாக ஆய்வதற்காக நமது வரைபடத்தை இப்போது மாற்றி அமைத்துக்கொள்ளலாம். P என்ற உற்பத்திப் புள்ளி காட்டுவதைப்போல், பெல்ஜியமும்

ஃபிரான்சும் அவ்விரண்டு பண்டங்களை உற்பத்திசெய்வதற்காக எப்படியெல்லாம் தத்தம் சாதனங்களைத் தொகுக்க முடியும் என்பதைக் காட்டும் உற்பத்தி சாத்தியக் கோடுகளை மறுபடியும் வரைபடம் 5.3-ல் வரைவோம். வாணிபம் செய்வதற்கு முன்பு, அந்தந்த நாட்டிலிருக்கக்கூடிய விலைகளை அல்லது மாற்று வீதங்களைத்தான் இக்கோடுகளின் சரிவு புலனாக்குகிறது. அவை பெல்ஜியத்தில் 1 எஃகு = 1 கோதுமை (அல்லது 20 எஃகு = 20 கோதுமை) என்றும், ஃபிரான்ஸில் 1 எஃகு = 1.5 கோதுமை (அல்லது 20 எஃகு = 30 கோதுமை) என்றும் உள்ளது. எனவே, பெல்ஜியம் ஃபிரான்ஸைவிட எஃகு உற்பத்தியில் சிறப்புடையதாக இருப்பதால், இவ்விரண்டு நாடுகளுக்கும் வாணிபம் நடக்கும் போது, பெல்ஜியம் எஃகு உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி செய்யும். மாறாக, ஃபிரான்ஸ் கோதுமையில் சிறப்புத் தேர்ச்சி செய்யும். அதன் கோதுமை உற்பத்தி அதற்குரிய படத்தில் P_1 என்ற புள்ளியால் காட்டப்படுகிறது.[4]

வாணிபத்தால் பெல்ஜியத்திற்கு நன்மை ஏற்படவேண்டுமானால், 1 : 1 அல்லது 20 : 20 என்ற (கோதுமையில்) விலையைக் காட்டிலும் நல்ல விலை வேண்டும். அது அடையக்கூடிய சாத்தியமான விலைகளிலெல்லாம் 20 : 30 விலைதான் மிகச் சிறந்தது.



வரைபடம் 5.3 பன்னாட்டு வாணிபம் : மாறாச் செலவுகள்

[4] வாணிபம் செய்யும் நாடுகள் ஒன்றுக்கொன்று சமமானதாக இருந்தால், இச் சிறப்புத் தேர்ச்சி முழு அளவிற்கு நடைபெறும். ஒரு நாடு பெரியதாயும் மற்றொன்று சிறியதாயுமிருந்தால், பெரிய நாடு முழுமையாகச் சிறப்புத் தேர்ச்சி செய்யமுடியாத வண்ணம் சிறிய நாட்டின் தேவை குறைவாக இருக்கும். அப்போது சிறிய நாடு மட்டும் தனது ஏற்றுமதிப் பொருளில் சிறப்புத் தேர்ச்சி செய்யும். மேலும், பெரிய நாட்டின் மாற்று வீதத்தில் வாணிபம் நடைபெறுமாதலால், சிறிய நாடுதான் இவ் வாணிபத்தால் முழுப் பயனடையும்.

இந்த வீதங்களில் (அல்லது விலையில்)தான் ஃபிரான்ஸ் நாட்டில் பரிவர்த்தனை நடைபெறுகிறது. பெல்ஜியத்தின் படத்தில் இவ் விலைக்கோடு (price line) வரையப்பட்டுள்ளது. இதற்கிணையாக, ஃபிரான்ஸ் நாட்டிற்கு 20 எஃகுக்கு 30 கோதுமை (உள்நாட்டுப் பரிவர்த்தனை வீதம்) என்ற வீதத்தைக்காட்டிலும் இலாபகரமான வீதம் வேண்டும்; ஃபிரான்ஸிற்கு சாத்தியமான உயர்ந்தபட்ச இலாபகரமான வீதம் பெல்ஜியத்திலுள்ள 30 எஃகுக்கு 30 கோதுமை (அல்லது 1 : 1) என்ற வீதம்தான். 20-லிருந்து 30-க்கும் 30-லிருந்து 30-க்கும் வரையப்பட்டுள்ள சரிவுக்கோடுகள் ஒவ்வொரு நாட்டிற்குமுள்ள அயல்நாட்டு மாற்று வீதத்தின் வரம்புகளைக்(எல்லைகளைக்) காட்டுகிறது. நடைமுறையில் ஏற்படக் கூடிய பரிவர்த்தனை வீதம் அல்லது வாணிப மாற்று வீதமான பன்னாட்டு விலை இவ்விரண்டு எல்லைகளுக்குமிடையே எந்தப் புள்ளியிலும் இருக்கமுடியும்.

நடைமுறையில் ஏற்படும் பரிவர்த்தனை வீதம் இரு நாடுகளின் பரஸ்பர தேவையால் நிர்ணயிக்கப்படும் என்று முன்னரே பார்த்தோம். நடைமுறையில் அமையும் வாணிபம் 20 எஃகு — 25 கோதுமை (10 : 12.5 அல்லது 1 : 1.25) என்ற வீதத்தில் அமைவதாகவும், இவ் வீதத்தில் அல்லது பன்னாட்டு விலையில் பெல்ஜியம் 10 மில்லியன் டன் கோதுமையை ஃபிரான்ஸிலிருந்து இறக்குமதி செய்வதாகவும் வைத்துக்கொள்வோம். இவ்விறக்கு மதிக்கு அது 8 மில்லியன் டன் எஃகை (8 : 10 : : 10 : 12.5) ஏற்றுமதி செய்யவேண்டும். அப்போது பெல்ஜியத்தின் வாணிப நிலை பன்னாட்டு விலைக் கோட்டில் T என்ற புள்ளியில் அமையும். ஃபிரான்ஸ் நாடு 10 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்து, அதற்குப் பதிலாக 8 மில்லியன் எஃகை இறக்குமதி செய்யும். இவ் வாணிபநிலை ஃபிரான்ஸ் நாட்டின் படத்தில் T என்னும் புள்ளியில் காட்டப்படுகிறது.

வாணிபம் ஏற்படுவதற்கு முன்பும் ஏற்பட்டபின்பும் உள்ள நிலைகளை அட்டவணை வாயிலாகக் காட்டினுல், நமது ஆய்வு இன்னும் தெளிவாக இருக்கும். இங்கு நாம் குறிப்பிடவேண்டியது யாதெனில், வாணிபத்திற்கு முன்பு உள்நாட்டு உற்பத்தியின் வழியாக அடைந்த அதே அளவு கோதுமையைத்தான் பெல்ஜியம் வாணிபத்திற்குப்பின் இறக்குமதிமூலமாகப் பெறுகிறது; எனினும், அதை அடைவதற்கேற்படும் செலவு இப்போது 8 மில்லியன் டன் எஃகுதான். மேலும், மொத்த உற்பத்தியான 20 மில்லியன் டன் எஃகு பொருளில் 8 மில்லியன் டன்களை மட்டும் ஏற்றுமதி செய்வதால் 12 டன் எஃகு உள்நாட்டு நுகர்ச்சிக்காகக் கிடைக் கிறது — எனவே, 2 மில்லியன் டன் இலாபம். அதேசமயம்

ஃபிரான்ஸிற்கும் இலாபம் கிடைக்கிறது; அது நுகரும் கோதுமை முன்னர்போல் அதே அளவாகத்தானிருக்கிறது; எனினும், முன்பைவிட இப்போது $1\frac{1}{3}$ மில்லியன் எஃகு அதிகம் கிடைக்கிறது.

	பெல்ஜியம்		ஃபிரான்ஸ்	
	எஃகு (மில்லியன் டன்)	கோதுமை (மில்லியன் டன்)	எஃகு (மில்லியன் டன்)	கோதுமை (மில்லியன் டன்)
வாணிபத்திற்குமுன்				
உற்பத்தி	10	10	$6\frac{2}{3}$	20
நுகர்ச்சி	10	10	$6\frac{2}{3}$	20
வாணிபத்திற்குப்பின்				
உற்பத்தி	20	—	—	30
நுகர்ச்சி	12	10	8	20
ஏற்றுமதி	8	—	—	10
இறக்குமதி	—	10	8	—

இந் நாடுகளின் வாணிபத்தில் சாத்தியமான மற்ரொரு நிலையைப் பார்ப்போம். குறிப்பிட்டதொரு பன்னாட்டு விலையில் (20 : 25) பெல்ஜியம் 12.5 மில்லியன் டன் கோதுமையை ஃபிரான்ஸிலிருந்து இறக்குமதி செய்வதாகவும், அதே சமயம் ஃபிரான்ஸ் நாடு 10 மில்லியன் டன் எஃகைப் பெல்ஜியத்திலிருந்து இறக்குமதி செய்வதாகவும் அமையக்கூடிய வகையில் அவற்றின் பரஸ்பர தேவை இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒவ்வொரு நாட்டின் படத்திலும் T_1 என்ற புள்ளிகளில் வாணிபம் அமைகிறது. இந் நிலையில் பெல்ஜியத்திற்கு முன்னர்போல் அதே அளவு (10 மில்லியன் டன்) எஃகு பொருள்தான் கிடைக்கிறது; ஆனால், இப்போது 12.5 மில்லியன் டன் கோதுமையை இறக்குமதி செய்வதால் 2.5 மில்லியன் டன் கோதுமை இலாபம். இவ்வாருக, பெல்ஜியத்தின் வாணிபக் கோட்டில் T-க்கும் T_1-க்குமிடையே எந்தப் புள்ளியிலும் அதற்கு இலாபம் கிடைக்கும் என்பது தெளிவு; முன்பைவிட இப்போது இரண்டு பண்டங்களுமே அதிகமாகக் கிடைக்கும். T, T_1 ஆகிய வரம்புப் புள்ளிகளில் எந்தப் புள்ளியில் இருந்தாலும் ஒரு பண்டம் முன்னர்போல் அதே அளவு இருக்கப் பிறிதொரு பண்டம் முன்பைவிட அதிகமாகக் கிடைக்கிறது.

ஃபிரான்ஸ் நாட்டின் நிலை எவ்வாறிருக்கும்? அதன் புதிய வாணிபப் புள்ளி (T_1) வரம்புகளுக்கப்பால் (ஃபிரான்ஸ் நாட்டில் $T—T_2$) அமைகிறது; இவ் வரம்புப் புள்ளிகளில் எந்தப் புள்ளியில் வாணிபம் நடந்தாலும் ஒரு பண்டத்தின் அளவு அப்படியே இருக்க, மற்றென்றின் அளவு அதிகம் கிடைக்கும்; இப் புள்ளி களுக்கிடையே எந்தப் புள்ளியிலும் இரண்டு பொருள்களுமே அதிகமாகக் கிடைக்கும். T_1-ல் ஃபிரான்ஸ் 10 மில்லியன் டன் எஃகை இறக்குமதி செய்து 12.5 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்கிறது; அப்போது உள்நாட்டு நுகர்ச்சிக்கு 17.5 மில்லியன் டன் கோதுமைதான் கிடைக்கிறது; எனினும், ஃபிரான்ஸின் நுகர்வோர் முன்பைவிட இப்போது கணிசமான அளவு அதிக எஃகைப் ($6\frac{2}{3}$ மில்லியனுக்குப் பதிலாக 10 மில்லியன் டன்) பெறுகின்றனர். ஆனால், முன்பைவிட $2\frac{1}{2}$ மில்லியன் டன் கோதுமை குறைந்துவிடுகிறது. இந்த வாணிப நிலைமையால் ஃபிரான்ஸ் நாட்டிற்கு நன்மை உண்டா? நிச்சயமாக உண்டு. ஃபிரான்ஸ் நாட்டு நுகர்வோர்—கோதுமைக்கும் எஃகுக்கும் உள்ள புதிய மாற்று வீதத்தில்—தமது கோதுமை நுகர்வைச் சிறிது குறைத்துவிட்டு, முன்பைவிட அதிக அளவு எஃகு பொருளை அடைய விரும்பியிருக்கவேண்டும் என்பது தெளிவு. இல்லையெனில், அவர்கள் தம் கோதுமை நுகர்வைக் குறைத்துக்கொள்ள அவ்வளவாக விரும்பியிருக்காவிட்டால், பரிவர்த்தனை செய்யப்பட்ட பண்டங்கள் நிச்சயமாகவும் வெளிப் படையாகவும் இலாபம் கிடைக்கக்கூடிய வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கும்.[5]

வளர்ந்துசெல் செலவு (Increasing Costs)

இதுவரை, மாருச் செலவு நிலைகளில் உற்பத்தி நடைபெறுவ தாக அனுமானித்திருந்தோம். இது, இரண்டு பண்டங்களின் உற்பத்தி எந்த அளவிருந்தாலும், பயன்படுத்தப்படும் சாதனங் களின் உற்பத்தித் திறன் மாருமல் அப்படியே இருக்கிறது என்பதைப் புலனுக்குகிறது. ஆனால், நாம் ஏற்கெனவே குறிப்


[5] இந்த இலாபத்தை மற்றொரு வழியிலும் விளக்கலாம். நுகர்வோரில் வெவ் வேறு வகுப்பினர் தத்தம் நுகர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களால் எவ்வாறு பாதிக் கப்பட்டிருக்கக்கூடும் என்பதை இவ் வழி எடுத்துக்காட்டுகிறது. நமது கடைசி உதாரணத்தின்படி புதிய பன்னாட்டு விலை முன்பைவிட மலிவாக இருப்பதால், எஃகு நுகர்ச்சியாளர் தம் நுகர்வை இப்போது அதிகமாக்க முடிகிறது; அதே சமயம், கோதுமை முன்பைவிட கிராக்கியாகிவிடுவதால், கோதுமை நுகர்ச்சியாளர் தமது நுகர்வைக் குறைத்துக்கொள்ளவேண்டியுள்ளது. எனினும், ஃபிரெஞ்சு அரசாங்கம் எஃகு நுகர்வோர்மீது வரி விதித்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கோதுமை நுகர்வோருக்கு உதவிப் பணமாகக் கொடுக்க இயலும். இவ் வழியின்மூலம் அது நுகர்வோர் நலன் நிலையை T-க்கு அல்லது அதற்கும் கீழ்ப்புள்ளிக்குக் கொண்டு வரமுடியும்.

பிட்டதுபோல், இது (நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய) சாதனங் களெல்லாம் எல்லாத் தொழில்களிலும் ஒரே விகிதாசாரத்தில் தான் தொகுக்கப்படுகின்றன என்பதையோ, அல்லது அவற்றின் உற்பத்தித் திறன் குறைந்துவிடாமல் அவற்றை ஒன்றுக்கொன்று பதிலீடு செய்ய முடியுமென்பதையோ புலனுக்கவேண்டும். ஆனால், நடைமுறை உலகிற்கு இவ்விரண்டு எடுகோள்களுமே ஒவ்வா தவையாகும்.

உதாரணமாக, காய்கறி பயிரிடுவதற்கு நிலம்மட்டுமன்றி, உழைப்பு, உரம், இன்னும் இதர பயிர்த் தொழில் சாதனங்கள் போன்ற முதற் கருவிப் பொருள்கள் அவசியமென்றாலுங்கூட, நிலம்தான் மிக முக்கியமான, இன்றியமையாத காரணியாகும். குறிப்பிட்டதொரு பிராந்தியத்திலுள்ள நிலம் அனைத்தும் சாகுபடிக் காகப் பயன்படுத்தப்பட்டபின், மேலும் அதிகமான உழைப்பையும் முதற் கருவிப் பொருள்களையும் செறிவாகப் பயன்படுத்துவதன் மூலம், அதாவது, மேலும் நிலம் இல்லாத காரணத்தால் அதற்குப் பதிலாக இக் காரணிகளை அதிகரிப்பதன் வழியாக, அந் நிலத்தின் உற்பத்தி அளவை அதிகரிக்கக்கூடும். எனினும், இக் காரணிகள் எந்த விகிதாசாரத்தில் அதிகரிக்கப்படுமோ அந்த விகிதா சாரத்தில் உற்பத்தி அளவு அதிகரிக்காது; மாறாக, அது குறைந்து கொண்டேதானிருக்கும்.

பயிர்த் தொழிலுக்குப் பதிலாக, பொறித் தளவாடங்களும் துணைச்சாதனங்களும் கொண்ட முதற் கருவிப் பொருள்கள் (மூலதனம்) இன்றியமையாத பொறிவழியாக்கத் தொழிலை எடுத்துக்கொள்வோம். இம் முதற் கருவிப் பொருள்களை அதிகரிக் காமல் அப்படியே வைத்துக்கொண்டு, மேலும் மேலும் உழைப் பாளிகளை வேலைக்கமர்த்திக்கொண்டே போனால், உற்பத்தி அளவு விகிதாசாரத்திற்கேற்ப குறைந்துதான் ஆகும். இன்று பயன் படுத்தப்படும் துணைச்சாதனங்களுக்குப் பதிலாக வேறுவகைச் சாதனங்களைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு மிகக் குறுகிய காலத்தில் இது உண்மை என்பது தெளிவு. மேலும், காலம் செல்லச் செல்ல எந்திரத் தளவாடங்கள் தேய்ந்துகொண்டே செல்கின்றன; அப்போது தேய்மானத்திற்கான ஒதுக்கு நிதியி லிருந்து (depreciation reserves) மேலும் எளிமையான, சிக்கலற்ற எந்திரத் தளவாடங்களை வாங்கி, அவற்றோடு முன்பைவிட அதிக உழைப்பைக்கொண்டு அதிக உற்பத்தித் திறனுடன் பயன்படுத்தக் கூடும். இவ்வாறாக, நீண்ட காலத்தில்கூட முதற் கருவிப் பொருள் களுக்குப் பதிலாக உழைப்பை அதிகமாகப் பதிலீடு செய்வது மேன்மையானதாயிருக்கலாம்; ஆனால், நிறைவுள்ளதாகாது.

எனவே, பல்வேறு உற்பத்தித் துறைகளில் பயன்படுத்தப்படும் காரணிகளில் ஒன்றுக்குப் பதிலாகப் பிறிதொன்றை முழுமையாகப் பதிலீடு செய்ய முடியாதாகையால் வளர்ந்துசெல் செலவு ஏற்படு கிறது. இவ் உண்மையை 5·4 வரைபடம் உணர்த்துகிறது. இப் படம், உணவுப் பண்டம், பொறிவழியாக்கப் பண்டம் ஆகிய வற்றில் ஒரு நாட்டிற்கான உற்பத்தி சாத்தியக்கோட்டைக் காட்டுகிறது. அந் நாட்டின் சாதனங்கள் அனைத்தும் பொறிவழி



வரைபடம் 5.4 வளர்ந்துசெல் பிற வாய்ப்புப் பெறுமானம்

யாக்கத் தொழிலில் பயன்படுத்தப்படுவதாக அனுமானித்துக் கொண்டு தொடங்குவோம். இது, அதிக மூலதனம் பயன்படுத்தப் படும் அல்லது மூலதனம் செறிந்த தொழில் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். அந் நாடு பொறிவழியாக்கப் பொருளைமட்டும் உற்பத்தி செய்யும்போது, அந் நாட்டின் மூலதனம் அனைத்தும் முழு அளவிற்குப் பயன்படுத்தப்படும்; அப்போது மூலதனத்திற்கு அதிகத் தேவை இருக்குமாதலால், அதிலிருந்து கிடைக்கும் வருமானமும் உயர்வாயிருக்கும். எனவே, நிலத்தையும் உழைப் பையும் கொண்டு பதிலீடு செய்வதன்வழியாக மூலதனத்தின் உபயோகத்தை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்த எல்லா முயற்சி களும் மேற்கொள்ளப்படும். விலையுயர்ந்த எந்திரங்களோடு எவ்வளவிற்கதிகமாய் உழைப்பைப் பயன்படுத்த முடியுமோ அவ் வளவிற்கு உழைப்பாளிகள் வேலைக்கமர்த்தப்படுவர். அப்போது அந் நாட்டின் உழைப்பாளிகளும் முழுமையாகப் பயன்படுத்தப் பெறுவர். ஆனல், பொறிவழியாக்கத் தொழிலில் நிலத்தை அவ்வள வாகப் பயன்படுத்துவதில்லை; எனவே, தொழிற்சாலைகளுக்கும்

பண்டகசாலைகளுக்கும் விரும்பிய அளவு நிலத்தைப் பயன்படுத்தினால்கூட, அந் நாட்டு நிலத்தின் பெரும் பகுதி பயன்படுத்தப் படாமல்தானிருக்கும். அங்குள்ள நிலம் ஓர் இலவசப் பொருளாக **(free goods)** இருக்கும்.

இப்போது பொறிவழியாக்கப் பொருள் உற்பத்தி அளவைச் சிறிது (உதாரணமாக Om_7க்கு) குறைத்துவிட்டு, அதனால் எஞ்சும் சாதனங்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துவதாகக் கொள்வோம். உணவு உற்பத்தி செய்ய இன்றியமையாத நிலம் அங்குத் தாராளமாகக் கிடைக்கும்; ஆனால், அந் நிலத்தை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தும்போது, அதற்கு வேண்டிய உழைப்பும் மூலதனமும் சிறிதளவே கிடைக்கும். எனினும், முன்பைவிட இப்போது அதிக அளவு உணவு (Of_1) உற்பத்தியாகும். பயிர்த்தொழிலுக்குகந்த மிகச் சிறந்த நிலம்தான் (மிகச் செழிப்பான, நகர அங்காடிக்கருகிலுள்ள நிலம்) முதலில் பயன் படுத்தப்படுமாதலால், உணவு உற்பத்தி அதிகமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வாறு, பொறிவழியாக்கத் தொழிலின் சாதனங்களை மேலும் மேலும் உணவு உற்பத்தி செய்யப் பயன் படுத்தினால், பொறிவழியாக்கப் பொருள் உற்பத்தி அளவு அதற் கேற்பக் குறையும்; ஆனால், அதே சமயம் மேலும் மேலும் கிடைக்கும் சாதனங்களை நிலத்தில் பயன்படுத்தும்போது அவற்றின் விகிதாசாரத்திற்கேற்ப உணவு உற்பத்தி அளவு அதிகரிக்காமல் குறைந்துகொண்டே செல்லும். இது உணவு உற்பத்தி அளவைக் காட்டும் படுகிடை அச்சில் f_1, f_2, f_3, f_4 ஆகிய குறைந்து செல்லும் இடைவெளிகளால் காட்டப்படுகிறது.[6]

சாதனங்கள் இடம் பெயர்ந்து உணவு உற்பத்தியில் ஈடுபடும் போது, அவ் வுற்பத்தியில் குறைந்துசெல் விளைவு ஏற்படுகிறது; இதற்குக் காரணம், உணவு உற்பத்தியில் மேலும் மேலும் சாதனங்களைப் பயன்படுத்தும்போது அச் சாதனங்களின் 'கலப்பு' **(mix)** பொருத்தமின்றி அமைவதேயாகும். அந் நாட்டின் நிலமனைத்தும் பொறிவழியாக்கத் தொழிலில் அல்லது உணவு உற்பத்தியில்மட்டும் பயன்படுத்தப்படுவதாக அனுமானித்துக் கொண்டால், Om_6 அளவு பொறிவழியாக்கப் பொருளும் Of_2 உணவுப் பொருளும் உற்பத்தி செய்யப்படும்போது, மேலும் மேலும் பொறிவழியாக்கப் பொருள் உற்பத்தி அளவைக்

[6] உணவு உற்பத்தியில் (OF-ல்) சிறப்புத் தேர்ச்சி முழுமையாக நடைபெறுவதாகக் கொண்டு தொடங்கி, மேற்கூறிய வழியைத் தலைகீழாக மாற்றி ஆய்ந்தால், உணவு உற்பத்தி மாறாத விகிதாசாரத்தில் குறைவதாகவும், அதனால் பொறிவழி யாக்கப் பொருள் குறைந்துசெல் வீதத்தில் அதிகரிப்பதாயும் காட்டலாம்.


குறைத்தால், அதிலிருந்து வெளியேறும் மூலதனம் பெருமளவாயும் நிலம் மிகக் குறைந்த அளவாயும்தான் இருக்கும். ஆனால், உணவு உற்பத்தி செய்யப்படும் நிலத்திற்கு மூலதனம் சரியான பதிலீடாகாது. எனவேதான் இடம் பெயர்ந்த சாதனங்களால் விளையும் உணவு உற்பத்தி அளவு குறைந்துகொண்டே செல்கிறது.

உற்பத்தி சாத்தியக்கோடு தோற்றுவாயிலிருந்து விரிந்த (concave) உருவம் கொண்டிருப்பது, வளர்ந்துசெல் செலவைப் பிரதிபலிக்கிறது; இதிலிருந்து பிற வாய்ப்புப் பெறுமானமும் வளர்ந்து செல்வதாக இருக்கும் என்றும் அறிய முடியும். இக் கோட்டில் இடமிருந்து வலம் செல்லச் செல்ல, கைவிடப்பட்ட பொறிசெய் பொருளின் ஒவ்வோர் அலகிற்கும் பதிலாகக் கிடைக்கும் உணவுப் பொருள் மேலும் மேலும் குறைந்துகொண்டே செல்கிறது. அதிகரிக்கப்படும் ஒவ்வோர் அலகு உணவுப் பொருளுக்கும், மேலும் மேலும் அதிக அளவு பொறிசெய் பொருளைக் கைவிடவேண்டும் என்பதை இது குறிக்கிறது. அதாவது, மாற்று வழி உற்பத்திப் பொருளைக்கொண்டு பார்க்குமிடத்து, உணவுக்கேற்படும் உற்பத்திச் செலவு வளர்ந்துகொண்டே செல்கிறது.

உற்பத்தி சாத்தியக் கோட்டின் அமைப்பிற்கும், உற்பத்திக் காரணிகளின் பதிலீட்டுச் சாத்தியங்களில் உள்ள வேறுபாட்டிற்கும் உள்ள முறையான தொடர்பை இந்த இடத்தில் கூறுவது நல்லது. இதற்கு மிகக் குறுங்காலத்தைக் கொண்டு(உதாரணமாக, ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தைக்கொண்டு) தொடங்குவோம். இக் குறுகிய காலத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் உற்பத்தித் தளவாடங்கள், துணைச் சாதனங்கள், இதர கருவிகள் ஆகியவற்றை மாற்றி அமைக்க இயலாது. உழைப்பாளிகளோ, பல்வேறு வகுப்பினராய்மட்டுமின்றி, பலவகைச் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராயும் இருப்பர். நிலமோ, குறிப்பிட்டதொரு பண்டத்தை விளைவிப்பதற்காக முதற்கருவிப் பொருள்களோடும் உழைப்பாளிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். எனவே, இக் காரணிகளில் ஒன்றுக்குப் பதிலாகப் பிறிதொன்றை இக் குறுகிய காலத்தில் பதிலீடு செய்ய இயலாது. அப்போது உற்பத்தி சாத்தியக்கோடு வரைபடம் 5·5-ல் M_1PF_1 அமைந்திருப்பதுபோல் செவ்வக வடிவமாக (rectangular) இருக்கும். ஒவ்வோர் உற்பத்தித் துறையின் உற்பத்தி அளவை (உதாரணமாக, OM_1 பொறிசெய் பொருள்களும் OF_1 உணவுப் பொருளும்) நடைமுறையிலிருக்கின்ற சாதனப் பங்கீட்டு முறைதான் நிர்ணயிக்கும். மேலும், இக் குறுங்காலத்தில் ஓர் உற்பத்தித் துறையிலிருக்கும் காரணிகளைப்

பிறிதொன்றுக்கு மாற்ற இயலாதாகையால், ஒன்றின் உற்பத்தி அளவைக் குறைத்தால் அது மொத்த உற்பத்தி அளவைக் குறைத்துவிடும்.

அடுத்து, கால அளவு கணிசமான அளவு (உதாரணமாக, இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என்று) நீண்டதாயிருப்பின், உழைப்பாளிகளில் சிலருக்குப் பயிற்சி அளித்து அவர்களை வேறு துறைகளுக்கு அனுப்ப முடியும்; அதே சமயம் இருக்கின்ற உற்பத்தித் தளவாடங்களும் துணைச்சாதனங்களும் தேய்மானம் அடைந்திருந்தால் அவற்றிற்குப் பதிலாகப் புதுவகைத் தளவாடங்களையும் துணைச்சாதனங்களையும் வாங்கிப் பயன்படுத்த ஒதுக்கு



வரைபடம் 5·5. உற்பத்தி சாத்தியக்கோடுகள்:
வளர்ந்துசெல் காரணிப் பதிலீட்டுடன்

நிதியைச் செலவு செய்யக்கூடும். அப்போது உற்பத்தி சாத்தியக் கோடு அதிக நெகிழ்வுடையதாக இல்லாவிட்டாலும் M_2PF_2 வைப்போல் கொஞ்சம் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.

அடுத்து, நீண்ட காலத்தை எடுத்துக்கொள்வோம். இன்றுள்ள உற்பத்தித் தளவாடங்கள், துணைச்சாதனங்கள் ஆகியவற்றின் மிக முக்கியமான பாகங்களை வேறு வகையானதாக மாற்றுவதற்கும், உழைப்பாளிகளுக்குப் பயிற்சி அளித்து வேறு தொழில்களுக்கு அனுப்புவதற்கும் போதுமான அளவு நீண்ட காலமாக (உதாரணமாக, 10 முதல் 20 ஆண்டுகள்வரை) இருப்பின், காரணிகளின் பதிலீடு வெகுவாக அதிகரிக்கப்படும். அப்போது உற்பத்தி சாத்தியக் கோடு M_3PF_3 அமைந்திருப்பதைப்போல் முன்பைவிடச் சீரான வளைவுடையதாய் (curvature) அமையும். ஆனால், இந் நீண்ட காலத்தில்கூடக் காரணிகளின் பதிலீடு நிறைவானதாயிராது; குறுங்காலத்திலிருப்பதைவிட நெருங்கிய பதிலீடாக இருக்கும். உற்பத்தி சாத்தியக்கோடு நேர்கோடாக (M_4PF_4 போன்று) இருந்தால், அது காரணிகளின் முழுமையான (கச்சிதமான) பதிலீட்டைப் பிரதிபலிக்கும்—இது நடைமுறைக்கு ஒவ்வாத, ஆனால் கோட்பாட்டளவில் கற்பனை செய்து பார்க்கக் கூடிய நிலையைக் குறிக்கும்.

உற்பத்தியும் தேவையும்

பன்னாட்டு வாணிபத்தைப் புகுத்தி ஆய்வதற்கு முன்பு, பிற நாடுகளோடு வாணிபத் தொடர்பின்றித் தனித்து வாழும் நாடு பல்வேறு மாற்றுவழி உற்பத்திகளில் எவற்றை, எவ்வாறு, எக் காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கும் என்பதை அறிந்து கொள்வது அவசியம். மாறாச் செலவு நிலையில், ஒரு பண்டத்தின் பிற வாய்ப்புப் பெறுமானம் பிறிதொரு பண்டத்தில் எவ்வளவாகும் என்பதையும், பண்டங்கள் எந்த விலையில் அல்லது மாற்று வீதத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் என்பதையும் உற்பத்தி சாத்தியக்கோட்டின் சரிவு நிர்ணயிப்பதாக நாம் பார்த்தோம். ஒவ்வொரு பண்டத்திற்குமுள்ள தேவை, அது எந்த அளவு உற்பத்தி செய்யப்படுகிறது அல்லது அதன் உற்பத்திப் புள்ளி எங்கே அமைகிறது என்பதைக்கொண்டு அமைவதாக விட்டு விட்டோம்.

வளர்ந்துசெல் செலவு நிலைகளில் உற்பத்தி சாத்தியக் கோட்டின் சரிவு ஒரே மாதிரியாயில்லாமல் அதன் நீளம் முழுவதிலும் மாறுபடுகிறது. எந்த ஒரு புள்ளியை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய சரிவு (அந்தப் புள்ளியில் வரையப்

படும் தொடுகோடு) இறுதிநிலை மாறுபாட்டு வீதம் (marginal rate of substitution) ஆகும்; அல்லது உற்பத்திச் சாதனங்களை ஒரு சிறு அளவு மாற்றி அமைக்கும்போது எந்த வீதத்தில் ஒரு பண்டம் குறைந்து மற்ருெரு பண்டமாக மாறுகிறது என்பதைக் காட்டும் வீதம் ஆகும். இது, அந்தப் புள்ளி குறித்துக் காட்டும் தராதரப் பிற வாய்ப்புப் பெறுமானம் எனப்படும். உதாரணமாக, ஓர் அலகு எஃகை குறைத்துவிட்டு, அதனல் மீதியாகும் சாதனங்களைக் கோதுமை உற்பத்தி செய்யப் பயன்படுத்திஞல், கோதுமை எந்த அளவு அதிகரிக்கும் என்பதைக் காட்டுவதுதான் இவ் வீதம். உற்பத்தி சாத்தியக்கோட்டின் முழு நீளத்திற்கும் தராதரச் செலவு மாறுவதால், பண்டங்களின் தராதர விலையும் இவ் வீச்சு முழுவதிலும் மாறுபடும். எனவே, பண்டங்கள் எந்த




FIGURE 5.6 Price, Cost, and the Production Possibilities Curve

வரைபடம் 5.6 விலை, செலவு, உற்பத்தி சாத்தியக்கோடு

வீதத்தில் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்யப்படும் என்பதைச் செலவு நிலையால்மட்டும் நிர்ணயிக்க முடியாது. இதற்குரிய விடைக்குத் தேவை சக்திகளையும் நாம் கவனிக்கவேண்டும்.


பெல்ஜியத்தில் 2 எஃகு = 1 கோதுமை என்ற விலை வீதத்தை நிர்ணயிக்கும் வகையில் தேவை இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதை 5.6 வரைபடத்திலுள்ள P_1P_1 சரிவையுடைய கோட்டால் விளக்கலாம். இக் கோடு உற்பத்தி சாத்தியக் கோட்டை a, c ஆகிய புள்ளிகளில் வெட்டுகிறது. a என்ற புள்ளியில் உற்பத்தி நடைபெறுவதாகக் கொள்வோம். அப்போது Ow_1 அளவு கோதுமையும் Os_1 அளவு எஃகும் உற்பத்தி செய்யப் படும். இப் புள்ளியில் நிலவக்கூடிய இறுதிநிலை மாறுபாட்டு வீதத்தை அல்லது இவ்விரு பண்டங்களின் தராதர விலையை MRT கோடு காட்டுகிறது. இக் கோடு a புள்ளியில் தொடுகோடாயும் 1 : 1 சரிவையுடையதாயுமுள்ளது. இது, விட்டுவிடப்படும் ஒவ்வோர் அலகு கோதுமைக்கும் 1 அலகு எஃகு பெற முடியு மென்பதைக் காட்டுகிறது. ஆனால், அங்காடியிலோ 1 அலகு கோதுமை 2 அலகு எஃகுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. இப் பரிவர்த்தனை வீதத்தில் எஃகு தொழிலிலுள்ள சாதனங்களை ஓரளவு எடுத்து, அவற்றைக் கோதுமை உற்பத்தி செய்யப் பயன் படுத்தினால் இலாபகரமானதாகும். இவ்வாறு செய்யும்போது, உற்பத்தி சாத்தியக்கோட்டிலுள்ள b என்ற இடத்தை அடையும் வரை உற்பத்திப் புள்ளி அக் கோட்டின் வலப்புறமாகச் சரிந்து கொண்டே செல்கிறது. b என்ற இடத்தில் MRT கோடு (P_1P_1-க்கு இணையாக வரையப்பட்ட) PP விலைக்கோட்டோடு ஒன்றித்துச் சமமாகிறது. இப்போதுதான் தராதரப் பிறவாய்ப்புப் பெறுமானமும் தராதர விலையும் ஒன்றுக்கொன்று சமமாகின்றன. இவ்விடத்தில் தான் மாறுத சமநிலை ஏற்படுகிறது. பொதுவாக இதைக் கூறுவ தாயின், (ஒரு பண்டத்தின் தராதரத் தேவைத் தீவிரத்தால் நிர்ணயிக்கப்பட்ட) விலைக்கோடு, உற்பத்தி சாத்தியக்கோட் டிற்குத் தொடுகோடாக எந்தப் புள்ளியில் அமைகிறதோ, அந்தப் புள்ளியில்தான் சமநிலை ஏற்படுகிறது.[7]

[7] இது முழுமையாக அனுமானிக்கப்பட்ட நிறைவுப் போட்டியில்தான் (perfect competition) உண்மையாயிருக்கும். அதோடு, இது உண்மையாயிருப்பதற்கு இன் னும் பல சூழ்நிலைகள் அவசியம். அதாவது, உற்பத்திக் காரணிகள் (குறிப்பாக உழைப்பாளிகள்) தாம் பயன்படுத்தப்படும் தொழில்களில் ஒன்றைவிடப் பிறிதொன்றை அதிகமாக விரும்பாமல், எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் அதில் சமநோக் குடையவராயிருக்கும் நிலைமையும், புறச் சிக்கனங்களோ (external economics) அல்லது சிக்கன இழப்புகளோ (diseconomics) ஏற்படுவதில்லை என்ற நிலைமையும் அவசியம். இவற்றைப்பற்றி விளக்கமாக நாம் கூறப்போவதில்லை. இவற்றைப்பற்றிய ஆய்விற்கு 'Economic Journal' (June 1950) வெளியீட்டில் G. Haberler அவர்கள் வரைந்துள்ள 'Some Problems on the Pure Theory of International Trade' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

வளர்ந்துசெல் செலவு நிலைகளில் பன்னாட்டு வாணிபம்

பன்னாட்டு வாணிபத்தின் விளைவுகளை ஆயும் நேரம் வந்து விட்டது. ஒவ்வொரு நாடும் தனித்து வாழ்வதாகக் கொண்டு தொடங்குவோம். பெல்ஜியம் P_b புள்ளியில் (வரைபடம் 5.7) 2 எஃகு = 1 கோதுமை என்ற வீதத்தில் உற்பத்தி செய்கிறது. அதே சமயம் ஃபிரான்ஸ் அதற்கு இணையான புள்ளியில் (P_f) 1 எஃகு = 2 கோதுமை என்ற விலை வீதத்தில் உற்பத்தி செய்கிறது. பெல்ஜியத்தில் எஃகு மலிவாகவும், ஃபிரான்ஸில் கோதுமை மலிவாகவும் இருக்கிறது. இப்போது இவ் இரண்டு நாடுகளுக்கிடையே வாணிபம் தொடங்குவதாகக் கொள்வோம். பெல்ஜிய வணிகர்கள் ஃபிரான்ஸ் நாட்டவர்களுக்கு எஃகை கொடுத்து, அதற்குப் பதிலாகக் கோதுமை வாங்குவது இலாபகர மானதென்பதை அறிவர். அதே சமயம் ஃபிரெஞ்சு வணிகர்கள் தம் கோதுமைக்குப் பரிவர்த்தனையாக எஃகு வாங்குவது இலாபகர மானதென்று அறிவர். ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படுகின்ற அயல் நாட்டுத் தேவை அதனதன் மலிவான பொருளின் பரிவர்த்தனை மதிப்பை உயர்த்திவிடுகிறது. அப்போது அயல்நாட்டுத் தேவையால் நிர்ணயிக்கப்படும் புதியதொரு விலை ஏற்படுகிறது. உதாரணமாக, அவ் விலை 1 எஃகு = 1 கோதுமை என்று ஏற்படு வதாக வைத்துக்கொள்வோம். பெல்ஜிய நாட்டு உற்பத்தியாளர் புதியதோர் உற்பத்திப் புள்ளியை (P) அடையும்வரை தமது எஃகு உற்பத்தியை அதிகரித்து, கோதுமை உற்பத்தி செய்வதைக் குறைப்பர். இப் புள்ளியில் பிற வாய்ப்புப் பெறுமான விகிதம் பன்னாட்டுப் பண்டமாற்று விகிதத்திற்குச் சமமாகிறது. ஃபிரான்ஸ் நாட்டில் கோதுமை உற்பத்தி செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்காக அதன் வரைபடத்திலுள்ள P′ புள்ளியில் பண்டங் களின் உற்பத்தி மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நாட்டிலும் இப்போது ஏற்பட்டுள்ள புதிய உற்பத்திப் புள்ளி சமநிலையை அடைகிறது. இச் சமநிலை ஏற்படுவதற்கு ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியும் இறக்குமதியும் சரிசமமாக இருக்கவேண்டும்— அதாவது, நடப்பிலுள்ள பன்னாட்டு விலையில் ஒவ்வொரு நாடும் தத்தம் ஏற்றுமதிக்குப் பதிலாகப் பெறும் இறக்குமதியால் மன நிறைவு பெறுவதன்வழியாக அவற்றின் பரஸ்பர தேவை சம நிலையிலிருப்பது அவசியம்.

இந்த வரைபடத்தில், நடப்பிலுள்ள பன்னாட்டு விலையில் ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியும் அதனதன் இறக்குமதிக்குச் சரிசமமாக இருப்பதன்மூலம் இச் சமநிலை காட்டப்படுகிறது. பெல்ஜியம் Os_p அளவு எஃகு உற்பத்தி செய்து, அதில் Os_c



வரைபடம் 5.7 இரு நாடுகளுக்கிடையே வாணிபம் தொடங்கல்

அளவை நுகர்ந்து, $S_c S_p$ (=MP) அளவு எஃகை ஏற்றுமதி செய்கிறது. ஃபிரான்ஸ் Ow_p அளவு கோதுமை உற்பத்தி செய்து, Ow_c அளவை நுகர்ந்து, $w_c w_p$ (=MP′) அளவு கோதுமையை ஏற்றுமதி செய்கிறது. பெல்ஜியம் செய்யும் ஏற்றுமதி ஃபிரான்ஸின் இறக்குமதியாகும்; அதேபோல் ஃபிரான்ஸ் செய்யும் ஏற்றுமதி பெல்ஜியத்தின் இறக்குமதியாகும். எனவே, **PP′** கோட்டின் சரிவு காட்டும் விலையில் ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியும் அதனதன் இறக்குமதிக்குச் சமமாகிறது.

முன்னர் நாம் பயன்படுத்திய அட்டவணையைப் போன்றதோர் அட்டவணை இவ் வாணிப இலாபத்தின் இயல்பை நிர்ணயிக்கின்ற அடிப்படையைக் காட்டுகிறது.

	பெல்ஜியம்		ஃபிரான்ஸ்	
	எஃகு	கோதுமை	எஃகு	கோதுமை
வாணிபத்திற்குமுன் :				
உற்பத்தி	Os_b	Ow_b	Os_f	Ow_f
நுகர்ச்சி	Os_b	Ow_b	Os_f	Ow_f
வாணிபத்திற்குப்பின் :				
உற்பத்தி	Os_p	Ow_c	Os_c	Ow_p
நுகர்ச்சி	Os_c	$Ow^c + w_cw_p$	$Os_c + s_cs_p$	Ow_c
ஏற்றுமதி	s_cs^p	——	——	w^cw_p
இறக்குமதி	—	w_cw_p	s_cs_p	—

வாணிபத்தின் விளைவாக பெல்ஜியத்தின் கோதுமை நுகர்ச்சி அளவு (Ow_c அளவு உள்நாட்டு உற்பத்தியும் w_cw_p அளவு இறக்குமதியும் சேர்ந்து) ஏறக்குறைய இருமடங்காகிவிட்டது. அதாவது, Ow_b-யிலிருந்து Ow_p-க்கு அதிகரித்துவிட்டது; ஆனால், அதே சமயம் எஃகு நுகர்ச்சி அளவு Os_b-யிலிருந்து Os_c-க்கு குறைந்து விட்டது. இதற்கு மாறாக, ஃபிரான்ஸின் எஃகு நுகர்ச்சி அளவு (Os_c அளவு உள்நாட்டு உற்பத்தியும் s_cs_p அளவு இறக்குமதியும் சேர்ந்து) Os_f-லிருந்து Os_p-க்கு அதிகரித்துவிட்டது; ஆனால், அதே சமயம் கோதுமை நுகர்ச்சி அளவு Ow_f-லிருந்து Ow_cக்கு குறைந்துவிட்டது.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இறக்குமதிப் பொருள் நுகர்வோர் இப்போது முன்பைவிடத் திருப்தியாயிருக்கும் சமயம், ஏற்றுமதிப் பொருளை நுகர்வோர் முன்பைக்காட்டிலும் குறைவான திருப்தியை அடைகின்றனர். தடையிலா அங்காடியில் நுகர்வோர் அனைவருமே தமக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுப்பதால், மொத்தத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் இலாபம் கிடைக்கிறது. விலை குறைத்து விற்கப்படும் கடைக்கு ஏராளமான வாடிக்கையாளர் போவதுபோல, கோதுமை அதிகம் தேவைப்பட்ட பெல்ஜிய மக்களும் எஃகு பற்றுக்குறை கொண்டிருந்த ஃபிரெஞ்சுக்காரர்களும் பழைய உள்நாட்டு விலையைக்காட்டிலும் மலிவான இறக்குமதியைப் பெறுவதற்குத் துடித்துக்கொண்டிருந்தனர். வாணிபம் ஏற்படுமுன் ஃபிரான்ஸில் எஃகு விலையும், பெல்ஜியத்தில் கோதுமை விலையும் உயர்வாயிருந்ததால், அப்பண்டங்களை நுகர்வோர் தமக்குத் தேவைப்பட்டதைக்காட்டிலும் குறைந்த அளவே வாங்கி நுகர்ந்திருப்பர். இப்போது வாணிபம் நடைபெறுவதன்மூலம் குறைந்த விலையில் முன்பைவிட அதிகமாய் நுகர்வதற்கு வசதி ஏற்படுகிறது. ஆனால், அதே சமயம்

ஏற்றுமதிப் பொருள்களை நுகர்வோர் தமது நுகர்ச்சி அளவைக் குறைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது.

ஏற்றுமதிப் பொருளை நுகரும் மக்களே இறக்குமதிப் பொருளையும் நுகரும் மக்களாக இருந்தால், இவ் வாணிபத்தால் ஏற்படும் நன்மை தீமைகளால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால், ஏற்றுமதிப் பொருளை நுகர்வோர் வேறு, இறக்குமதிப் பொருளை நுகர்வோர் வேறு என்று இருந்தால் பிரச்சினை தோன்றிவிடுகிறது. இப் பிரச்சினையை, முன்னரே நாம் சுட்டிக் காட்டியதுபோல், வருமான மறுபகிர்வு செய்வதன்வழியாகத் தீர்க்க முடியும். அதாவது, இறக்குமதிப் பொருளை நுகர்வோரின் வருமானத்தின் மீது வரி விதித்து, அதிலிருந்து கிடைக்கும் பணத்தை ஏற்றுமதிப் பொருளை நுகர்வோருக்குக் கொடுப்பதன்மூலமோ, அல்லது ஏற்றுமதிப் பொருளை நுகர்வோரைக்காட்டிலும் இறக்குமதிப் பொருளை நுகர்வோரின்மீது அதிக வரி விதிப்பதன்மூலமோ இப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடும். இவ் இரண்டு வழிகளைத் தவிர, இன்னும் பல சாத்தியமான வழிகளும் உண்டு.[8]

முழுமையற்ற சிறப்புத் தேர்ச்சி (Partial Specialization)

மாறுச் செலவினை ஆய்ந்தபோது, வாணிபத்தால் சிறப்புத் தேர்ச்சி முழு அளவிற்கு நடைபெறும் எனப் பார்த்தோம். ஆனால், வழக்கிலுள்ள வளர்ந்துசெல் செல்வின்கீழ் அவ்வாறு நடைபெறுவதில்லை. ஒவ்வொரு நாடும் தனது சாதனங்களின் ஒரு பகுதியை இறக்குமதி செய்யப்படும் பொருளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கென்று பயன்படுத்திக்கொண்டிருக்கும். பன்னாட்டு விலை வீதத்தைக்காட்டிலும் தம் உற்பத்திச் செலவு அதிகமாயில்லாததால் உற்பத்தியாளர்களில் சிலர் இறக்குமதியோடு போட்டியிடவும் கூடும். உதாரணமாக, வரைபடம் 5·7-ல் P′ புள்ளியில் ஓர் அலகு எஃகின் பிற வாய்ப்புப் பெறுமானம் ஓர் அலகு கோதுமைதான். நடப்பிலுள்ள பன்னாட்டுப் பரிவர்த்தனை வீதமும் இதுதான். இவ் வீதத்தளவு அல்லது

8 சிறப்புத் தேர்ச்சியும் பன்னாட்டு வாணிபமும் இல்லாதபோது ஏற்படுவதைக் காட்டிலும், அவை நடைபெறும்போதுதான் அதிகப் பலன்கள் ஏற்படுகின்றன. இந்தப் பலன்களைச் சமுதாய சமநோக்குக் கோடுகளைப் (Community Indifference Curves) பயன்படுத்தி விளக்கமுடியும். ஆனால், இவ் வகைக் கோடுகளைப் பயன்படுத்துவதால் அடிப்படையான பல கருத்துணர்வுடைய இடர்ப்பாடுகள் ஏற்பட்டுவிடும். அதோடு, பன்னாட்டு வாணிபத்தால் வருமானப் பகிர்வு மாறும்போது, அக் கோடுகளின் உருவமும் மாறவேண்டியுள்ளது. எனவே, அவற்றைப் பயன் கொள்வதை விட்டுவிடுவதே நல்லது. சமநோக்குக் கோடுகளின்மூலம் விளக்கப்படும் ஆய்விற்கு **C. P. Kindleberger** அவர்களின் **'International Economics'** என்ற நூலின் மூன்றும் பதிப்பில் (1963) 6ஆம் அதிகாரத்தையோ, அல்லது **Delbert A. Snider** என்பாரின் **'An Introduction to International Economics'** என்னும் (1963-ல் பதிப்பித்த) நூலில் 4ஆம் அதிகாரத்தையோ பார்க்கவும்.

இதற்கும் குறைவான பிற வாய்ப்புப் பெறுமானத்தைக்கொண்ட (P' புள்ளியிலும் அதற்கு வலப் புறமும்) ஃபிரெஞ்சு எஃகு உற்பத்தியாளர், இறக்குமதி செய்யப்படும் எஃகிற்குப் போட்டியாக உற்பத்தி செய்வர்.

சாதனங்களின் செலவினைக்கொண்டு இதை விளக்குவதாயின், P' புள்ளியில் ஓர் அலகு கோதுமைக்கு வேண்டிய அதே சாதனங்களைக் கொண்டு ஓர் அலகு எஃகு உற்பத்தி செய்ய முடியும். வாணிபம் ஏற்படுவதற்குமுன் P_f-ல் 2 அலகு கோதுமையை உற்பத்தி செய்யக்கூடிய சாதனங்களைக்கொண்டு 1 அலகு எஃகுமட்டுமே உற்பத்தி செய்யக்கூடியதாயிருந்த செலவில் இப்போதைய செலவு பாதி அளவுதான். P_f-லிருந்து P'-க்குச் செல்லும்போது, நிலத்தை மிகத் தீவிரமாகப் பயன்படுத்துவதாலும், கோதுமை உற்பத்திக்கு முன்பிருந்ததைப் போன்று காரணிகளின் தொகுப்பு ஏற்றதாக இல்லாததாலும், கோதுமை உற்பத்திச் செலவு அதிகரித்துவிடுகிறது; மிகச் சிறந்த காரணித் தொகுப்பினைக்கொண்டு தளவாடங்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுவதே இதற்குக் காரணம்.

தராதரச் செலவு என்பதன் பொருள்

தொன்மைக் கோட்பாடான தராதரச் செலவுக் கோட்பாட்டின் படி, நாட்டிற்கு நாடு தராதர உழைப்புச் செலவு வேறுபடும்போது அல்லது உற்பத்தியில் ஒவ்வொரு நாட்டிற்கும் தராதரச் சிறப்பு நிலை இருக்கும்போது, வாணிபத்தால் இலாபம் ஏற்படுகிறது என்பதை நாம் பார்த்தோம். ஆனால், வாணிபம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலைகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை ஆய்வதற்குத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் முயற்சி செய்யவில்லை. மக்களிடையே உள்ள இயல்பான தகுதி வேறுபாடு எவ்வாறு சிறப்புத் தேர்ச்சிக்குக் காரணமாக உளதோ, அதேபோல்தான் நாட்டிற்கு நாடு வேறுபடும் தகுதி நிலையும் வாணிபத்திற்குக் காரணமாகிறது என்றுமட்டும் கூறினர். இவ்வகையான தகுதி (போர்ச்சுகல் மது உற்பத்தியில் கொண்டுள்ளதைப்போன்று) உகந்த தட்பவெப்ப நிலை காரணமாகவோ, அல்லது பொறித் திறனிலும், புத்தமைப்புத் திறனிலுமுள்ள சமூக சூழ்நிலை, அல்லது நிலவளம், அல்லது பயிர்த்தொழிலிலும் பொறிசெய் தொழில்களிலும் உழைப்பாளியின் திறனை உயர்த்தியுள்ள மூலதனம் ஆகியவை காரணமாகவோ இருக்கலாம். இவற்றையெல்லாம் அவர்கள் தெளிவாகக் கூறவில்லை; அதோடு கோட்பாட்டு ஆய்வில் மறைவாய் இருந்த இவற்றை அப்படியே விட்டுவிட்டார்கள்.

இப்போது நாம் செய்துள்ள ஆய்வில், உழைப்பு ஒன்று மட்டும்தான் உற்பத்திக் காரணி என்ற எடுகோளைப் புறக்கணித்து விட்டோம். அதற்குப் பதிலாக, ஒரு நாட்டிலுள்ள நிலம், உழைப்பாளிகள், மூலதனம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும் உற்பத்தி சாதனங்களைப் புகுத்தியுள்ளோம். இக் காரணிகளில் ஒவ்வொன்றும் பல்வேறு உபகாரணிகளாகப் பிரிக்கப்படக் கூடியவை என்பது உண்மையே. அதோடு, இக் காரணிகளை வெவ்வேறு விகிதாசாரங்களில் தொகுக்க முடியும் என்பதையும் நாம் மறந்துவிடவில்லை. இறுதியாக, உழைப்புச் செலவிற்குப் பதிலாகப் பிறவாய்ப்புப் பெறுமானம் என்பதை—ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்காக அல்லது நுகர்வதற்காக நீ கைவிட்டு விடும் பிறிதொன்றை—புகுத்தியுள்ளோம்.

மிக அண்மைக் காலத்திய இவ்வாய்வு முறையில்கூடத் தராதரச் செலவுதான் பன்னாட்டு வாணிபத்தின் ஆதாரமாகும். ஆனால், தராதர உழைப்புச் செலவு என்பதைப் பயன் கொள்ளாமல், அதற்குப் பதிலாகப் பிற வாய்ப்புப் பெறுமானம் என்ற கருத்து பயன் படுத்தப்படுகிறது. கோதுமைக்குப் பதிலாக எஃகை உற்பத்தி செய்வதில் ஏற்படும் பிற வாய்ப்புப் பெறுமானம், ஃபிரான்ஸ் நாட்டைவிட பெல்ஜியத்தில் குறைவாக இருக்கும். அதே சமயம், எஃகிற்குப் பதிலாகக் கோதுமை உற்பத்தியில் ஏற்படும் பிற வாய்ப்புப் பெறுமானம் பெல்ஜியத்தைக்காட்டிலும் ஃபிரான்ஸில் தாழ்வாயிருக்கும்போது பன்னாட்டு வாணிபம் இலாபகரமானதா கிறது. எனினும், பிற வாய்ப்புப் பெறுமானத்தில் ஏற்படும் இவ்வகை வேறுபாட்டை எவ்வாறு நாம் விளக்கிக் கூறுவது? இந்த அத்தியாவசியமான கேள்விக்குரிய விடை இதுவரை தரப்படவில்லை.

இதற்கு எல்லோராலும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகத் திருப்திகரமான பதில் எலி ஹெக்ஷெர் (Eli Heckscher), பெர்டில் ஓளின் (Bertil Ohlin) ஆகிய இரு ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார அறிஞர்களின் நூல்களில்தான் உள்ளதெனலாம். 1919-ல் தன் முதல் முயற்சியாக எழுதிய கட்டுரையின் வாயிலாகப் பன்னாட்டு வாணிபத்திற்குரிய நவீனக் கோட்பாட்டின் முக்கியக் கருத்தினை ஹெக்ஷெர் அவர்கள் தந்தார்கள்.[9] இக் கருத்துகளை

[9] Eli Heckscher, 'The Effect of Foreign Trade on the Distribution of Income,' Ekonomisk Tidskrift, XXI, 1919. இக் கட்டுரை அவரது **'Readings in the Theory of International Trade'** என்ற நூலில் மறுபடியும் பதிப்பிக்கப்பட்டது *(1949)*, Blakiston, Philadelphia.

ஓளின் விரிவாக்கி, விளக்கத்துடன் முறைப்படுத்தி சிறப்பான தொரு நூல் எழுதினார்.[10]

சிக்கலான நிகழ்ச்சிகளுக்கிடையேயுள்ள சில தொடர்பினைப் பொதுமையாகக் கூறும் எந்தவொரு கோட்பாட்டையும் போலவே தான் ஹெக்ஷேர்-ஓளின் அவர்களின் கோட்பாடும் சிக்கலான நிகழ்ச்சிகளை மிதமிஞ்சி எளிமையாக்குகிறது. இக் கோட்பாடு, பன்னாட்டு வாணிபத் தத்துவத்தின் சில அம்சங்களை முழுமையாக விளக்குவதில்லை என்று அண்மையில் குறை கூறப்பட்டுள்ளது. இக் குறைபாடுகளில் சிலவற்றை நாம் பின்னர் ஆய்வோம். இருந்தபோதிலும், பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சி, வாணிபம் ஆகியவற்றின் அடிப்படையைப் பொருத்தமான முறையிலும் முக்கியமான வழியிலும் தெளிவாக இது விளக்குகிறது.

பிற வாய்ப்புப் பெறுமானக் கோட்பாட்டிற்கும், ஹெக்ஷேர்-ஓளின் கோட்பாட்டிற்கும் என்ன தொடர்பு உளது? ஒரு கோட்பாடே போதுமானதாக இருக்கும்போது, எதற்காக இரண்டு கோட்பாடுகள் வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம்.

அடிப்படையில் பிற வாய்ப்புப் பெறுமானக் கோட்பாடு, ஓளின் பயன்படுத்திய பொதுச் சமநிலை முறையின் எளியதோர் உருவம்தான். அதைப் பொதுச் சமநிலைக் கோட்பாடாக மாற்றவும் கூடும். பொதுச் சமநிலைக் கோட்பாடு, பணச் செலவுகளைக் கொண்டும் விலைகளைக்கொண்டும் விளக்கப்படுகிறது. அதை விளக்க உற்பத்திப் பொருள் விலைகளையும் காரணி விலைகளையும் பற்றிய எளிய எடுகோள்கள் சில பயன்படுத்தப்படுகின்றன.[11] இருந்தபோதிலும் பொதுச் சமநிலைக் கோட்பாட்டைவிடப் பிற வாய்ப்புப் பெறுமானக் கோட்பாடு எளியது; அதோடு, அதன் மற்றொரு சிறப்பு யாதெனில், தொன்மைப் பொருளாதார அறிஞர் களின் கருத்துகளுக்கும் நமது கருத்துகளுக்கும் மிக அதிகமான வேறுபாடின்றி, நமது கருத்துகள் வளர்ச்சி அடைந்திருப்பதை அது குறிக்கிறது.[12] மேலும், பொதுக் கோட்பாட்டைவிடக்

[10] Bertil Ohlin, **'Interregional and International Trade'**, Published in 1933 by Harvard University Press, Cambridge.

[11] பொதுச் சமநிலை உருவில் எவ்வாறு இதை மாற்றிப் புணர்வது என்று ஹேபர்லர் (Haberler) அவர்களே காட்டுகின்றார். இதற்கு Gottfried Haberler அவர்களின் **'The Theory of International Trade'** என்னும் நூலில் 180-182 பக்கங் களைப் பார்க்கவும். Published 1936 by Wm. Hodge & Co., Ltd., London.

[12] இந் நூலின் முந்தைய பதிப்புகளில் ஹெக்ஷேர்-ஓளின் கோட்பாட்டின்மீது எனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக, இதன் வேறுபாட்டை மிகைப்படுத்தி யும், இதன் எண்ணத் தொடர்ச்சியைக் குறைவுபடுத்தியும் கூறினேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

காரணிகளின் பதிலீட்டுப் பிரச்சினைகளைப்பற்றி இது அதிகமாகக் கூறுகிறது. அதோடு, அதைவிட இது வரைபடம்மூலம் விளக்கு வதற்கும் உகந்ததாயிருக்கிறது. இவ்வகையில் விளக்குவது பல சமயங்களில் சிறப்பாகப் பயன்படும்.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்:

Caves, Richard E., 'Trade and Economic Structure'. Cambridge, Mass. : Harvard University Press, *1960-ல்* பதிப் பித்தது. தொன்மைக் கோட்பாடு முதல், நவீன விளக்கம் வரையுள்ள பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டு வளர்ச்சியை அதிகாரம் 2 சித்திரிக்கிறது.

Haberler, Gottfried, 'The Theory of International Trade', London: Wm. Hodge & Co., Ltd., *1936-ல்* பதிப்பித்தது. பேராசிரியர் ஹேபர்லர் அவர்கள், தமது பிற வாய்ப்புப் பெறு மானக் கோட்பாட்டை 12ஆம் அதிகாரத்தில் விளக்குவதோடு எவ்வாறு அக் கோட்பாட்டை ஒரு பொதுச் சமநிலைக் கோட் பாடாக மாற்றி அமைக்கலாம் என்பதையும் காட்டுகிருர்.

'A Survey of International Trade Theory'. Princeton, N. J.: International Finance Section, Princeton University, *1961-ல்* வெளியிட்டது. தொன்மைக் கோட்பாட்டுக் காலம் முதல் இக் கோட்பாடு எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்ற சுருக்கமான விளக்கத்திற்கு 1 முதல் 3 வரையுள்ள அதிகாரங்களைப் பார்க்க.

(ஜூன் *1950-ல்* வெளியான) 'Economic Journal' வெளியீட்டில் 'Some Problems in the Pure Theory of International Trade' என்ற கட்டுரை, பேராசிரியர் ஹேபர்லர் அவர்களின் நூலிலுள்ள விளக்கத்தை இக் கட்டுரை விரிவாக்குவதோடு, அவ் விளக்கத்தில் சில அங்காடிக் குறைபாடுகளைப் புகுத்தி, அக் குறைபாடுகளின் விளைவுகளை ஆய்கிறது.

6. பன்னாட்டு வாணிபத்தில் பணச் செலவையும் விலையையும் நிர்ணயிப்பவை

இவ் அதிகாரம் இரு குறிக்கோள்களையுடையது. ஒன்று, தராதரச் செலவில் ஏன் வேறுபாடு ஏற்படுகிறது என்பதைத் திருப்திகரமாக விளக்குவது; பிறிதொன்று, பணப் புழக்கத்தை யுடைய நமது பொருளாதார அமைப்பில், நாம் நினைப்பதுபோல் செலவையும் விலையையும் கொண்டு பன்னாட்டு வாணிபத்திற்கு விளக்கம் தருவது.

தராதரச் செலவு வேறுபாட்டின் அடிப்படை

சிறப்புத் தேர்ச்சிக்கும் வேலைப் பாகுபாட்டிற்கும் தனிநபர்கள் இயல்பாகக் கொண்டுள்ள, அல்லது வேறு வழியில் பெற்றுள்ள திறன் ஒரு காரணமாகும் என்று ஆதம் ஸ்மித் கூறினார். மனிதன் இயல்பாகவே கொண்டுள்ள பண்புகளில் புத்திகூர்மை, கைத் திறன், சங்கீத ஆர்வம், அல்லது பொருளமைப்பில் அவனது கண்ணோட்டம் ஆகியவை உள்ளடங்கும்; மாறாக, பெறப்பட்ட திறன் என்பது பயிற்சியின்மூலமாகவும் அனுபவத்தின் வாயிலாக வும் ஏற்படும் திறனைக் குறிக்கிறது. இவ்வகைத் திறன் மிக்க ஒருவன் அது இல்லாதவர்களைக்காட்டிலும் குறிப்பிட்டதொரு பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். அப்போது அவ் வேலையில் அவன் மேலும் திறன் மிக்கவனாக இருப்பான். எனவே, மற்றவர் களைவிட அவன் அவ் வேலையைச் சுலபமாகச் செய்து, உயர்ந்த ஊதியத்தைப் பெற முடியும். தனது சொந்த நன்மைக்காகவும் சமுதாயத்தின் நன்மைக்காகவும் அதில் அவன் சிறப்புத் தேர்ச்சி செய்கிறான்.

எந்த வேலையைக் கொடுத்தாலும் அதை நன்றாகச் செய்யக் கூடிய திறன் பெற்றவர்களும் உளர். அப்படியானால், தாங்கள் நன்றாகச் செய்யக்கூடிய வேலைகளிலெல்லாம் எதில் திறன்

மிக்கவர்களாக இருப்பரோ, அதில் அவர்கள் ஈடுபடுவர். உதாரணமாக, சில நிர்வாகிகள் தம்மிடம் பணிபுரியும் தட்டெழுத்தர்களைக் காட்டிலும் சிறந்த தட்டெழுத்தர்களாகவும் இருக்கின்றனர். இருப்பினும், நிர்வாகத்தில் அவர்களுக்கு இன்னும் அதிகப் பலன் கிடைக்குமாதலால், அதில் ஈடுபடுவதே நல்லது. எந்த வேலையில் அதிக வருவாய் உண்டோ, அதில் சிறப்புத் தேர்ச்சி செய்வதுதான் இலாபகரமானது.

ஒரு நாட்டைவிட மற்றொரு நாடு கொண்டுள்ள இயற்கைச் சிறப்பினை ஆதாரமாகக்கொண்டு, தனிநபர்களுக்கான இவ் வேலைப் பாகுபாட்டின் தத்துவத்தை ஆதம் ஸ்மித் நம் நாட்டிற்கும் விரிவுபடுத்தினார். ஆனால், ரிக்கார்டோவும் அவர் வழித்தோன்றியோரும் பன்னாட்டு வேலைப் பாகுபாட்டிற்கு ஒரு நாடு பெற்றுள்ள தனிச் சிறப்பை ஆதாரமாகக் கொள்ளாமல், அதன் தராதரச் சிறப்பை அடிப்படையாகக் கொண்டனர் என்பதை நாம் முன்பே பார்த்தோம். எனினும், இவர்களில் ஒருவர்கூட ஒரு நாட்டின் இயற்கையான அனுகூலத்தில் என்னென்ன அம்சங்கள் உள்ளன என்பதை முறைப்படுத்திக் கூற முயற்சி செய்யவில்லை.

இவ்வாறு முறைப்படுத்திக் கூறுவதில்தான் பன்னாட்டு வாணிபத்தின் நவீன கோட்பாட்டின் அடிப்படை அமைகிறது. இயல்பான அல்லது பெறப்பட்ட திறனில் தனிநபர்களிடையே வித்தியாசம் இருப்பதுபோல், காரணிப் பேற்றில் நாட்டிற்கு நாடு வேறுபாடு உள்ளதென ஓலின் குறிப்பிடுகிறார். தனிநபர்களிடையே வேலைப் பாகுபாடு ஏற்படுவதற்கு அவர்கள் கொண்டுள்ள திறன் வேறுபாடு காரணமாயிருப்பதுபோல், பன்னாடுகளுக்கிடையே வேலைப் பாகுபாடு ஏற்படுவதற்கு அவற்றின் இயற்கைவள வித்தியாசம் காரணமாகிறது; அதனால், சில நாடுகள்மட்டும் ஒருசில பொருள்களின் உற்பத்தியில் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளன. உதாரணமாக, ஒரு நாடு செம்புக் கனிப்பொருளை உற்பத்தி செய்யவேண்டுமானால் அங்கு அக் கனிப்பொருள் கிடைக்குமிடங்கள் இருக்கவேண்டும். ஒருசில நாடுகளில்தான் இச் செம்புப் படுகைகள் உள்ளன; அல்லது அந் நாடு வெப்ப மண்டல நாடுகளில் விளையும் பயிர் வகைகளைப் பயிரிட வேண்டுமானால், வெப்ப சீதோஷ்ண நிலை இன்றியமையாததாகிறது. இருப்பினும், நடைமுறையில் ஏற்பட்டுள்ள சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும் இவ் வகைத் தனிச் சிறப்பு வித்தியாசத்தால் ஏற்பட்டவையல்ல; மாறாக, அவை தராதர வேறுபாடுகளை ஆதாரமாகக்கொண்டு நடைபெறுகின்றன. எல்லா நாடுகளிலுமே உழைப்பாளிகள் இருக்கின்றனர்; எல்லா நாடுகளுக்குமே நிலம்

இருக்கிறது; மூலதனமும் எல்லா நாடுகளிலும் உண்டு. இருந்த போதிலும், இக் காரணிகளெல்லாம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; அவற்றின் தராதர அளவிலும் தன்மையிலும் வேறுபாடுகள் நிறைய உள்ளன.

'கிரேட் பிரிட்டனைக் காட்டிலும் ஆஸ்திரேலியாவில் நிறைய சாகுபடி நிலம் உள்ளது; ஆனால், அங்குள்ள மூலதனம், உழைப்பாளிகள், சுரங்கங்கள் ஆகியவை மிகக் குறைவு. எனவே, சாகுபடி நிலத்தைக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஆஸ்திரேலியா உகந்த நாடாக உள்ளது. மாறாக, இதர காரணிகளை அதிகமாய்ப் பயன்படுத்தவேண்டிய பொருள்களை உற்பத்தி செய்வதில் கிரேட் பிரிட்டன் சிறப்பாக உள்ளது.'[1]

இவ்வாறாக, ஒரு நாடு கொண்டுள்ள சிறப்பு நிலை, அது பெற்றுள்ள உற்பத்திக் காரணிகளின் தராதரப் பேற்றினைச் சார்ந்ததாகிறது.

இக் குறிப்புகளை மனத்தில் கொண்டு இப்போது 5.7 வரை படத்தைப் பார்ப்போம். ஃபிரான்ஸிற்கும் பெல்ஜியத்திற்கும் உள்ள உற்பத்திச் சாத்தியக் கோடுகளில் கணிசமான வேறுபாடு உண்டு. ஃபிரான்ஸ் நாட்டுக் கோடு, கோதுமை அளவிடப்பட்டுள்ள அச்சில் நீட்டமாயும், எஃகு அளவிடப்பட்டுள்ள அச்சில் தட்டையாயும் உள்ளது. தனது சாதனங்களையெல்லாம் கோதுமை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தினால், ஃபிரான்ஸ் நாட்டில் விளையும் கோதுமை அளவு பெல்ஜியத்தைக் காட்டிலும் அதிகமாயும், எஃகு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தினால் அதன் உற்பத்தி குறைவாயும் உள்ளது என்பதையே இது புலப்படுத்துகிறது. அதோடு, ஃபிரான்ஸ் நாட்டின் கோதுமை உற்பத்தியில் பிற வாய்ப்புப் பெறுமானம் குறைவு என்பதையும் காட்டுகிறது. பெல்ஜியத்தை எடுத்துக்கொண்டால், அங்கு எஃகு உற்பத்தியில் தான் பிற வாய்ப்புப் பெறுமானம் குறைவு. இப்போது இலாபகரமான வாணிபத்திற்கு ஆதாரமான இத் தராதரச் செலவு வேறுபாடுகளை நாம் விளக்கிக் கூறமுடியும். கோதுமை உற்பத்திக்கு இன்றியமையாத நிலத்தின் அளவு பெல்ஜியத்தைவிட ஃபிரான்ஸில் அதிகமாயிருக்கவேண்டும். அதே சமயம், எஃகு உற்பத்திக்கு முக்கியமாகத் தேவைப்படும் காரணியாகிய மூலதனம் பெல்ஜியத்தில் ஏராளமாயிருக்கவேண்டும். இவ்விரண்டு பண்டங்களுக்கும் அவசியமான காரணிப் பேற்றின் வித்தியாசம்

[1] முன்னர் குறிப்பிட்ட Ohlin அவர்களின் நூலில் 12ஆம் பக்கம்.

கொடுக்கப்பட்டதாயிருக்க, இவ்விரு நாடுகளும் பெற்றுள்ள காரணிப் பேற்றில் வித்தியாசம் இருப்பதால், இப் பண்டங்களின் சாத்தியமான உற்பத்தி அளவும் இந் நாடுகளுக்கிடையே வேறுபடுகிறது. எனவே, உற்பத்திச் சாத்தியக் கோடுகளின் அமைப்பும் மாறுபடுகிறது. இதன் காரணமாக, பிற வாய்ப்புப் பெறுமான விகிதமும் விலை விகிதமும் வேறுபட்டு, வாணிபம் இலாபகரமானதாக அமைகிறது.[2]

உற்பத்திக் காரணிகளின் பகிர்விலுள்ள பூமி அமைப்பு மாறுதல் வித்தியாசமே தராதரச் செலவிற்கு அடிப்படையாகிறது என்பதைக் காட்டியதன் வழியாக, தனிநபர்களின் சிறப்புத் தேர்ச்சிக்கு உள்ள அடிப்படையைப் போன்ற ஆதாரத்தையே இக் கோட்பாட்டிற்குக் கொடுத்துவிட்டோம். ஆனால், தராதரச் செலவுக் கோட்பாட்டை, கைவிடப்பட்ட மாற்று வழி உற்பத்தியைக்கொண்டு விளக்கும்போதுதான், அது உண்மையான செலவுக் கோட்பாடாகும். சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்யும்போது அதனால் சமுதாயத்திற்கேற்படும் உண்மையான செலவை அளவிடுவது முக்கியமானதாக இருக்கலாம். உதாரணமாக, நாட்டின் பாதுகாப்பிற்கென்று அமெரிக்க ஐக்கிய நாடு செலவிடும் செலவீட்டை எடுத்துக்கொள்வோம். நடைமுறையில் அதற்காகச் செலவிடப்படும் பணத்தைக்கொண்டு அந் நாடு கட்டியிருக்கக்கூடிய பள்ளிகள், மருத்துவ நிலையங்கள், சாலைகள், வீடுகள், தொழிற்சாலைகள் ஆகியவைதாம் அதன் பாதுகாப்பு முயற்சியின் அம்சங்களான ஏவுகணைகள் (missiles), ஏவுகணை நிலையங்கள், அவற்றின் போக்கினைக் காட்டும் கருவி அமைப்புகள், ரடார் (radar) அமைப்பு போன்றவற்றின் உண்மைச் செலவாகும். கணக்கிடக் கடினமான இலக்குகளில் பணத்தொகையின்மூலம் பாதுகாப்புச் செலவினை விளக்குவதைக் காட்டிலும், இவ் வகையில்

[2] ஒரே மாதிரியான உற்பத்திக் காரணிப் பேற்றினைப் பிரதிபலிக்கக்கூடிய, உருவத்தில் ஒத்ததாயிருக்கும் உற்பத்திச் சாத்தியக் கோடுள்ள இரு நாடுகளுக் கிடையே சாத்தியமான வாணிபத்தின் அடிப்படையை ஏற்படுத்த முயலுங்கள். அப்போது அவ்விரு நாட்டிலும் வாழும் மக்களின் பற்றுதல்கள் வித்தியாசமாக இருப்ப தாகக்கொண்டு தொடங்குங்கள்; அவ்வாறு தொடங்கும்போது, ஒவ்வொரு விலைக் கோடும் வெவ்வேறான இரண்டு புள்ளிகளில் உற்பத்திச் சாத்தியக் கோட்டினைத் தொடும். இது அந் நாடுகளில் நிலவுகின்ற தராதர விலையையும், அவை வெவ்வேறு பண்டங்களில் தனிச் சிறப்புப் பெற முற்படுவதையும் பிரதிபலிக்கும். அவ்விரு நாடு களுக்கும் வாணிபம் நடக்கும்போது பொதுவானதொரு விலை விகிதம் நிலவும். அப்போது தோன்றும் புதிய விலைக் கோடு, ஒவ்வொரு நாட்டின் படத்திலும் அதே புள்ளியில் தொடுகோடாய் அமையும். பின்னர் சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும் நடைபெறும்; உற்பத்தியை மாற்றி அமைக்க நேரிடும்; பன்னாட்டுத் தேவைகளும் விலைகளும் வேறு விதமாக அமையும்.

விளக்குவதுதான் மேலும் உண்மையானதாயும் புரிந்துகொள்ளக் கூடியதாயும் உள்ளது.[8]

எனினும், ஒரு நாடு குறிப்பிட்ட சில பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கும், வேறு சில பண்டங்களை இறக்குமதி செய்வதற்கும் ஆதாரமான சக்திகள் யாவை என்பதை அறிந்துகொள்வதற்கு உண்மைச் செலவினைக்கொண்டு ஆய்வது பொருத்தமற்றதாகிறது. ஏனெனில், இப் பிரச்சினை பன்னாட்டு வாணிபத்தின் இயக்கத்தைப் பற்றியதேயன்றி, அதன் நல வேறுபாட்டு நிலைகளை ஒப்பிடுவதைப் பற்றியதன்று. பன்னாட்டு வாணிபம் ஏற்படுவதற்கு உடனடியான காரணம் யாது என்பதைக்கொண்டுதான் இப் பிரச்சினையை அணுகவேண்டியுள்ளது. அவ்வாறு அணுகும்போது, பொருள்களை உற்பத்தி செய்வதில் ஏற்படும் பணச் செலவுகளிலும், அப் பொருள் களின் விலைகளிலும் நாட்டிற்கு நாடு வித்தியாசம் இருப்பதுதான் இதற்குக் காரணம் என்று தெளிவாகப் புலப்படும். நாட்டிற்கு நாடு வேறுபட்டுள்ள இயற்கை வளம், அதாவது, உற்பத்திக் காரணிகளின் பேற்றில் அவை கொண்டுள்ள வித்தியாசம்தான் பல்வேறு நாடுகளின் விலை வித்தியாசங்களாக மாறுகின்றன என்பதை இங்கு விளக்குவோம்.

தனியோர் அங்காடியில் விலை நிர்ணய முறை

இவ் விளக்கத்திற்குத் தனியோர் அங்காடியைக்கொண்டு தொடங்குவோம். இவ்வங்காடிக்குள் கச்சாப் பொருள்களோ, நுகர்ச்சிக்குத் தயாராகவுள்ள முடிவுப் பண்டங்களோ, அல்லது உற்பத்திக் காரணிகளோ (நிலத்தைத் தவிர) இடம்பெயர்வதில் எவ்விதத் தடையும் இல்லாதிருப்பதாக வைத்துக்கொள்வோம். இவ்வங்காடி சிறியதொரு நாட்டைக்கொண்டதாக இருந்தால், அது தேசிய அளவினதாயிருக்கலாம்; அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போன்று பெரிய நாடாயிருந்தால், அதில் இடப் பெயர்ச்சி ஏற்பட எவ்விதத் தடையுமில்லாதிருக்கும் ஒரு

[8] உண்மைச் செலவான இப் பிற வாய்ப்புப் பெறுமானம் என்பதன் கருத்து, உண்மைச் செலவுபற்றிய தொன்மைக் கருத்தினின்று முற்றிலும் வேறுபட்டதாகும். தொன்மைப் பொருளாதார அறிஞரும், புதுத் தொன்மைப் பொருளாதார அறிஞரும் (neoclassical economists) ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் செலவிடப்படும் உழைப்பை, அல்லது தேவையான மூலதனத்தை அளிப்பதற்காகச் செய்யும் தியாகத்தையே உண்மைச் செலவாகக் கருதினர். இவ்விரு தியாகங்களும் வெவ்வேறான தன்மையுடையனமட்டுமன்றி, அளவிட முடியாதவையுமாயிருப்பதால், இரண்டையும் ஒன்றாகக் கூட்ட முடியாது என்ற உண்மை ஒருபுறமிருக்க, நிலத்தைப் பயன்படுத்துவதில் ஏற்படும் செலவு உண்மைச் செலவில் இடம்பெறாது. எனினும், நிலத்தைப் பயன்கொள்ளுவதில் ஆள்சார் தியாகம் இல்லாததால், தொன்மைக் கருத்தின்படி, நிலத்தைப் பயன்படுத்துவதில் சமுதாயத்திற்கு உண்மையான செலவு ஏற்படுகிறது; ஒரு பொருளை விளைவிப்பதற்காக அதைப் பயன்படுத்தும்போது அதில் விளைவித்திருக்கக்கூடிய இதர பொருள்களை இழந்துவிடவேண்டியுள்ளது.

மாநிலத்தை அவ்வங்காடி குறிப்பிடுவதாக வைத்துக்கொள்ளலாம். நமது 'மாதிரி' அங்காடியை எளிமையானதாகக் கொள்வதற்கு, அதில் நிறைவுப் போட்டி இருப்பதாகவும் அனுமானித்துக் கொள்வோம். அதாவது, சர்வாதீனமோ அல்லது பேரளவு உற்பத்தியோ (large-scale production) ஏற்படுத்தக்கூடிய பிரச்சினை எதுவுமே இல்லாததாகத் தற்போதைக்கு எடுத்துக் கொள்வோம்.[4]

சுயேச்சைப் பொருளாதார அமைப்பில் (free economy) இறுதியாக உள்ள நுகர்வோரின் தேவைகளைத் திருப்தி செய்வதற்கென்றுதான் சாதனங்கள் செலவிடப்பட்டுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, உற்பத்தியை ஊர்ஜிதப் படுத்தி, அதை வழிநடத்துகின்ற நுகர்வோரின் தேவையைக் கொண்டு விலை இயங்கும் முறையை ஆயத் தொடங்குவதே பொருத்தமானதாகிறது.

குறிப்பிட்ட விருப்பு வெறுப்புகளின் தொகுதியை அடிப் படையாகக்கொண்டு வாங்குவோரின் விருப்பங்கள் அமைகின்றன; அவர்களின் வாங்கும் திறனும் இவ் விருப்பங்களும் சேர்ந்துதான் பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தேவையை உண்டாக்குகின்றன. அவர்களின் விருப்பங்கள் இவ்வகைத் தேவையின்மூலம் அங்காடியில் உணரப்படுகின்றன. குறிப்பிட்ட தொரு பண்டத்திற்குள்ள தேவையை எடுத்துக்கொண்டால், நுகர்வோர் அப் பண்டத்தைப் பெறுவதற்காகப் பல்வேறு விலைகளைச் செலுத்தச் சித்தமாயிருப்பதை (தேவைப் பட்டியல்) அது பிரதிபலிக்கிறது. அப் பண்டத்தின் விலையை மட்டுமன்றி, வாங்குவோரின் செலவுத் திட்டத்திலுள்ள இன்னும் இதர பண்டங்களின் விலைகளையும் அவர்களின் பற்றுதல்களையும் அது சார்ந்ததாகிறது.

ஒவ்வொரு தேவைப் பட்டியலிலும் திட்டவட்டமாக அடையப் பெற்றதோர் இடம் — அதாவது, உண்மையில் நுகரப்பட்ட ஒவ்வொரு பண்டத்தின் அளவும்—அப் பண்டம் விற்கப்படும்

[4] ஒரு மாநிலத்திற்குள் ஏற்படும் வாணிபத்திற்கும், பல மாநிலங்களுக்கிடையே அல்லது பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபத்திற்குமுள்ள வேறுபாடு இது தான் : ஒரு மாநிலத்திற்குள் உற்பத்திக் காரணிகள் எளிதாக இடம்பெயரமுடியும்; ஆனால், மாநிலத்திற்கு மாநிலம் அல்லது நாட்டிற்கு நாடு அவை அவ்வாறு இடம்பெயர இயலாது. மாநிலத்தின் சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும், பன்னாட்டு வாணி பத்தைப் போன்ற ஆதாரங்களைக்கொண்ட நிகழ்ச்சிகள்தாம். எனினும், பல காரணங்களால் பன்னாட்டு வாணிபப் பிரச்சினைகள்தாம் அதிக முக்கியமானவை யாயும் செல்வாக்குடையவையாயுமிருப்பதால், அவற்றை மட்டும் நாம் முக்கியமாகக் கவனிப்போம்.

விலையினைச் சார்ந்ததாகும். இது இருபுறமான நிலைமைகளை, அதாவது, உற்பத்தியாளர்கள் பயன்படுத்தக்கூடிய பல்வேறு உற்பத்தி முறைகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தி முறையில் பயன்படுத்தவேண்டிய பலவகைக் காரணிகளுக்குச் செலுத்த வேண்டிய விலைகளையும் குறிப்பிடுகின்றது. உற்பத்தி முறைகளில் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வழியில் காரணிகளைத் தொகுக்க வேண்டியுள்ளது. இவ்வுற்பத்தி முறைகள் (கடந்த காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞானப் புத்தமைப்புகளை மேற்கொள்வதைக் கொண்ட) தொழில்நுட்ப நிலையால் நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும், இவற்றில் பெருமளவில் மூலதனத்தைப் பயன்கொள்ளும் முறைகள் அல்லது தொழில்நுட்பங்களைக்கொண்ட முறைகள் முதல், மூலதனமே இல்லாமல் பெருவாரியான உழைப்பாளிகளைக் கொண்டு உற்பத்தி செய்யும் முறைகள்வரை பல்வேறு முறைகள் உள்ளன.[5] இவற்றில் எந்த உற்பத்தி முறை தேர்ந்தெடுக்கப் படும் என்பது, அதில் பயன்படுத்தவேண்டிய காரணிகளின் தராதர விலையைப் பொறுத்ததாகும்.

காரணிகளின் விலைகள் அறியப்பட்டபின், உற்பத்தியாகும் ஒவ்வொரு பண்டத்திற்கும் குறிப்பிட்டதோர் உற்பத்தி முறை மேற்கொள்ளப்படும். இம் முறையே குறிப்பிட்டதோர் அளவில் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உள்ளிடுகையின் (அல்லது காரணிகளின்) அளவினை உறுதிப்படுத்துகின்றது. இவ் வுற்பத்தியின் மொத்தச் செலவு என்பது, அதில் பயன்படுத்தப் பெறும் காரணிகளுக்குச் செலுத்தப்பட்ட மொத்த விலைதான். அதாவது, உழைப்பின் அளவு-காலத்திற்குச் செலுத்தப்பட்ட கூலி, நிலத்தின் அளவு-காலத்திற்குக் கொடுக்கப்பட்ட வாரம், மூலதனத்தின் அளவு-காலத்திற்குச் செலுத்திய வட்டி, இறுதியாக மூலதன நுகர்ச்சிக்கு (capital consumption) அல்லது அதன் தேய்மானத்திற்கு (depreciation) ஒதுக்கப்பட்ட தொகை ஆகிய வற்றைக் கூட்டினால் மொத்த உற்பத்திச் செலவு கிடைக்கும். மொத்தச் செலவை உற்பத்தி அளவால் வகுத்தால், ஓர் அலகின் சராசரிச் செலவு அல்லது ஒவ்வோர் அலகு உற்பத்திக்கும் செலுத்திய காரணி விலைகளின் மொத்தம் கிடைக்கும். உற்பத்தி தொடர்ந்து நடைபெறவேண்டுமாயின், இச் செலவுகளையெல்லாம் சரிக்கட்டவேண்டும். எனவே, சமநிலையில் ஒவ்வோர் அலகின் சராசரிச் செலவும் நுகர்வோர் செலுத்தும் விலையும் ஒன்றாகி விடுகிறது.

[5] உற்பத்தியில் பயன்படுத்தவேண்டிய, குறிப்பாக விவசாயப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலத்தின் விகிதாசாரமும் இதில் அடங்கும்.

அவ்வாருனல், பண்டங்களின் விலைகளை நிர்ணயம் செய்வதில் நுகர்வோரின் தேவைக்கு ஒன்றும் இடமில்லை என்று பொருளன்று. ஏனெனில், தேவை வேறுவிதமாக இருந்தால், உற்பத்திக் காரணிகளுக்குள்ள தேவையும் வேறுபட்டு, விலைகளும் மாறுபட்டதாயிருக்கும். நுகர்வோரின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காகவென்று தொழில்முயல்வோர் உற்பத்திக் காரணிகளைப் பயன் கொள்வதால், உற்பத்திக்காரணிகளுக்கேற்படும் தேவை பண்டங்களுக்குள்ள தேவையின் வழியாகத் தோன்றுவதாகும். உற்பத்தியில் ஒவ்வொரு காரணியும் கொண்டுள்ள இறுதிநிலை ஆக்கத்தின் பெறுமான மதிப்பிற்கேற்ப, தொழில் முயல்வோர் அதற்கு விலை செலுத்துவர். காரணியின் இறுதிநிலை ஆக்கம் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் அதன் அளவைப் பொறுத்ததாகும். குறிப்பிட்டதொரு காரணி, உதாரணமாக, உழைப்பாளிகள், ஏனைய காரணிகளைவிடப் பற்ருக்குறையாக இருந்தால், இறுதியான அல்லது கடைசி உழைப்பாளி உற்பத்தியில் கணிசமான அளவு பங்குகொள்வான். அப்போது தொழில்முயல்வோர், அவ் வுழைப்பாளிகளின் பணியைப் பெறுவதற்காகத் தமக்குள் போட்டியிட வேண்டியிருக்கும். இதனுல் கூலி உயர்வாயிருக்கும். மூலதனமும் நிலமும் அதே அளவில் இருக்க, இயல்பாகவேயுள்ள அதிகப் பிறப்பு வீதத்தாலோ அல்லது குடியிறக்கத்தாலோ உழைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டால், அதிகமாகியுள்ள உழைப்பாளிகளையும் வேலைக்கமர்த்தும்போது குறைந்து செல் விளைவு ஏற்படும். அப்போது அதிகரிக்கப்பட்ட உழைப்பாளியின் இறுதிநிலை ஆக்கம் குறைந்துவிடுவதால் கூலி தாழ்வாகிவிடும்.

இவ்வாறு, காரணிகளின் விலைகளை நிர்ணயித்ததன் வழியாக, சுற்றிவந்து மீண்டும் தொடங்கின இடத்திற்கே, அதாவது, காரணிகளை உடையவர்களின் வருமானத்திற்கே வந்துவிட்டோம். எந்தப் பகுதியிலும் விலை நிர்ணய இயக்கம் என்பது, பல காரணிகள் ஒன்றையொன்று சார்ந்த பொதுச் சமநிலையிலுள்ளதோர் அமைப்பேயாகும். அணுவைப்போன்றதோ, சூரியமண்டலத்தைப்போன்றதோ, அல்லது பல வகுப்பினரின் முரண்பட்ட அக்கறைகளை வெற்றிகரமாக இணைக்கும் அரசாங்கத்தைப் போன்றதோதான் விலை இயக்கம் என்பதும், பல காரணிகள் ஒன்றையொன்று நிர்ணயிக்கும் உறவோடு ஒரு சுழல் வடிவமாக அமைந்துள்ள அம்சங்களைக்கொண்டதுமாகும்.

பல்வேறு விலைமுறைகள் ஒன்றையொன்று பாதித்தல்

விலைமுறையின் அம்சங்கள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. தனிநபர்களின் வருமானம் பண்டங்களுக்குள்ள தேவை

யோடும், பண்டங்களுக்கேற்படும் தேவை (அவற்றின் அளிப்பு நிலைமைகளோடு கூடிய) அப் பண்டங்களின் விலை நிர்ணயத் தோடும் காரணத் தொடர்புடையதாகின்றன; பின்னர், இவற்றி லிருந்து பெறப்பட்ட உற்பத்திக் காரணிகளுக்கேற்படும் தேவையும், அவை அளிக்கப்படவிருக்கும் அளவும் சேர்ந்து காரணி விலைகளோடும், இக் காரணி விலைகள் தனிநபர்களின் வருவாயோடும் காரணத் தொடர்புடையனவாகின்றன. இவ்வாருக, விலைமுறை என்பது ஒன்றேடொன்று இணைக்கப்பட்ட சங்கிலித் தொடர்போல் பல அம்சங்களைக் கொண்டதாகும்.

தொழிலுரிமையுள்ள பொருளாதார அமைப்புடைய எல்லா நாடுகளுக்கும் இவ் விலைமுறையின் அம்சங்கள் பொதுவான தெனினும், குறிப்பிட்டதொரு நாட்டின் அங்காடியில் ஏதாவதொரு விலை நிர்ணய சக்தியோ அல்லது சில சக்திகளோ கணிசமாக மாறுபட்டதாயிருக்குமாஞல், அங்கு நிலவும் பண்டங்களின் விலைகளும் வேறுபட்டிருக்கும்.

பொருள்களின் உற்பத்தியில் ஒரு நாடு கொண்டுள்ள இயல்பான சிறப்பின் அடிப்படை—உதாரணமாக, அதன் காரணிப் பேறு—நமது ஆய்வில் இப்போது இடம் பெறுகிறது. அளிப்புப் புறத்திலிருந்து நோக்குமிடத்து, பண்டங்களின் விலைகள் அவற்றின் உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுகின்றன என்று தெரிகிறது. ஏனெனில், உற்பத்திக் காரணிகளின் விலைகள்தாம் உற்பத்திச் செலவாகும்.[6] எனினும், உற்பத்திக் காரணிகளின் பேற்றில் நாட்டிற்கு நாடு வித்தியாசமிருப்பதால், காரணிகளின் விலைகளும் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படும். ஏராளமான நிலப் பகுதியுடைய நாடுகளில் அல்லது மாவட்டங்களில்—உதாரணமாக, அர்ஜென்டைஞு, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேற்குப் பகுதி ஆகியவற்றில்—நிலம் மலிவாக இருக்கும். எனவே, உற்பத்தி செய்வதற்குப் பெருமளவில் நிலம் தேவைப்படும். கோதுமை, மாட்டிறைச்சிபோன்ற பண்டங்களின் விலை, குறைந்த அளவிலும் கிராக்கியாயுமுள்ள நிலப்பகுதி கொண்ட பிரிட்டன்

[6] பொருள்களின் அல்லது பணிகளின் விலையில் குறிப்பிட்டதோர் உற்பத்திப் படிநிலையின் (stage of production) பங்கு, அதாவது, அப் படிநிலையில் சேர்க்கப் படும் மதிப்பு, அதில் பயன்படுத்தப்படும் காரணிகளுக்குச் செலுத்தப்படும் தொகையே யாகும். அதன் அடக்கச் செலவுகளில் உழைப்பாளிகளின் கூலிகள், மூலதனத்திற் கான வட்டி, அப் படிநிலையில் பயன்படுத்தப்பட்ட நிலத்திற்கான வாரம் ஆகிய செலவுகள் தவிரப் பிற செலவுகளனைத்தும் சேர்க்கப்படும். அவ்வாறு சேர்க்கப்படும் செலவுகளில் கச்சாப் பொருள்கள், எரிபொருள், விசை, இன்ஷூரன்ஸ் ஆகியவற்றிற் கான செலவுகளை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனுல், சேர்க்கப்படாத இந்தச் செலுத்தல்கள் உற்பத்தியின் முந்திய படிநிலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பைக் குறிப்பிடுகின்றன. இவற்றைக் காரணிகளின் செலவாக இறுதியில் பிரிக்கலாம்.

அல்லது பெல்ஜியம்போன்ற நாடுகளில் இருப்பதைவிட மலிவாக இருக்கும். அதே சமயம், ஏராளமான உழைப்பாளிகளைக்கொண்ட இந்தியா, ஜப்பான்போன்ற நாடுகளில் கூலி தாழ்வாக இருக்கும்; எனவே, உற்பத்தி செய்வதற்கு அதிக உழைப்புத் தேவைப்படும் சணல், பருத்தி, நெசவுப் பொருள், மண்பாண்டம், சைக்கிள் போன்ற பண்டங்கள் அங்கு மலிவாக இருக்கும்.

பன்னாடுகளுக்கிடையேயுள்ள விலை வித்தியாசத்திற்கும், அதன் வழியாகப் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சி, வாணிபம் ஆகிய வற்றிற்கும் அடிப்படையான விளக்கம் இப்போது கிடைத்து விட்டது. காரணிகளின் விலை வித்தியாசத்திற்கு அவற்றின் பேற்றிலுள்ள வேறுபாடு காரணமாகிறது; காரணிகள் தம் மிச்சைப்படி ஒரு நாட்டிலிருந்து பிறிதொன்றுக்கு இடம்பெயர முடியாததால், அவற்றின் விலை வேறுபாடுகள் தொடர்ந்து நிலைத்து விடுகின்றன.[7] காரணிகளின் விலைகளே கடைசியில் உற்பத்திச் செலவாக இருப்பதால், அச் செலவுகளும், எனவே, பொருள்களின் விலைகளும் நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன.

பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் நாடுகள் பெற்றுள்ள காரணிப் பேற்றின் வேறுபாட்டினால் தோன்றும் தகுதி முக்கியமானதாக இருந்தபோதிலும், அத் தகுதிமட்டும் போதாது என்பது குறிப்பிடத்தக்கது. 'உற்பத்திக் காரணிகளைப் பல வகையில் தொகுத்துப் பார்ப்பதும் அவசியம்.' வேறுவிதமாக இதைக் கூறுவதானால், இருக்கின்ற தொழில்நுட்ப அறிவைக் கொண்டு (technical knowledge) உள்ளிடுகைக்கும் (input) வெளிப் படுகைக்கும் (output) உள்ள தொடர்பினைக் காட்டும் உற்பத்தி சார் பலன்கள் (production functions) பண்டத்திற்குப் பண்டம் வித்தியாசப்படவேண்டும்.

எடுத்துக்காட்டாக, சாகுபடி நிலம் ஏராளமாயும் மலிவாயும் இருப்பதால்மட்டும் ஆஸ்திரேலிய நாடு மலிவாகக் கோதுமை உற்பத்தி செய்வதில்லை. அதோடு, கோதுமை உற்பத்தி செய் வதற்கு இதர காரணிகளைக் காட்டிலும் நிலம் அதிகமாகத் தேவைப்படுவதும் ஒரு காரணமாகும். எந்தப் பண்டத்தை உற்பத்தி செய்யவேண்டுமானாலும் காரணிகள் ஒரே விகிதா சாரத்தில்தான் தொகுக்கப்பட வேண்டுமென்றிருந்தால், காரணிகள் ஏராளமாகவும் மலிவாகவும் இருப்பதால் என்ன பயன்? அவ்வாறிருக்குமானால், பண்டங்களின் தராதர விலைகள் எல்லா

[7] காரணிகள் நாட்டிற்கு நாடு இடம்பெயர இயலாததாக இப்போதைக்கு அனுமானித்துக்கொள்வோம்.

நாடுகளிலும் ஒரே மட்டத்தில்தானிருக்கும்; அப்போது வாணிபத்திற்கு இடமிராது.[8]

இறுதியாக, மக்களின் பற்றுதல்களிலும் தேவையிலும் நாட்டிற்கு நாடு உள்ள மாறுதல்கள் வாணிபத்திற்குத் தனியொரு காரணமாக இருக்க முடியுமென்றோ, அல்லது காரணிப் பேற்றிலுள்ள வித்தியாசத்தை அது முக்கியமில்லாததாகச் செய்துவிட முடியுமென்றோ நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். உதாரணமாக, இரண்டு நாடுகளிலும் உற்பத்திக் காரணிகள் ஒரே விகிதாசார அளவில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு நாட்டிலுள்ள மக்கள் பிறிதொரு நாட்டு மக்களைவிட அதிக அளவு உணவை விரும்புவதாகவும், மாறாக, பிந்திய நாட்டு மக்கள் முந்திய நாட்டு மக்களைவிட ஆள்சார் பணிகளை (personal services) அதிகமாய் விரும்புவதாகவும் கொண்டால், முந்தைய நாட்டில் நிலம் அதிகக் கிராக்கியானதாகவும், பிந்திய நாட்டில் உழைப்பு அதிகக் கிராக்கியானதாகவும் இருக்கும். அப்போது, உழைப்பை

[8] உதாரணமாக, எந்தப் பண்டத்திற்கும் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை முறையே 10 : 6 : 2 என்ற விகிதாசாரத்தில் தொடுக்கவேண்டியிருப்பதாக வைத்துக்கொள்வோம். மேலும், **A** என்றதொரு நாட்டிலும் **B** என்ற பிறிதொரு நாட்டிலும் உழைப்பாளிகள் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையில் இருப்பதாகவும், **A**–யில் **B**–யைக் காட்டிலும் நிலம் மலிவாயும் ஏராளமாயும் இருப்பதாகவும், அதே சமயம் **B**–யில் **A**–யைக் காட்டிலும் மூலதனம் ஏராளமாயும் மலிவாயும் இருப்பதாகவும் கொள்வோம். அதோடு, இந் நாடு ஒவ்வொன்றிலும் தேனிரும்பு, கோதுமை, அலுமினியம் ஆகியவற்றை உற்பத்தி செய்ய 10 அலகு நிலம், 6 அலகு உழைப்பு, 2 அலகு மூலதனம் பயன்படுத்தப்படுதுவதாகக் கொண்டால், அவற்றின் உற்பத்திச் செலவினைக் கீழ்வரும் அட்டவணையின் வாயிலாகக் கணிக்கமுடியும் :

	தேவைப்படும் காரணிகள்	காரணி விலைகள்		உற்பத்திச் செலவு					
				A–யில்			B–யில்		
		A–யில்	B–யில்	தேன் இரும்பு	கோதுமை	அலுமினியம்	தேன் இரும்பு	கோதுமை	அலுமினியம்
நிலம்	10	1	5	10	10	10	50	50	50
உழைப்பு	6	2	2	12	12	12	12	12	12
மூலதனம்	2	5	1	10	10	10	2	2	2
உற்பத்தி அளவின் மொத்தச் செலவு :				32	32	32	64	64	64
உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் :				1 டன்	2 டன்	4 டன்	1 டன்	2 டன்	4 டன்
ஓர் அலகின் செலவு :				32	16	8	64	32	16

ஒவ்வொரு பண்டத்திற்கும் ஏற்படும் செலவுகளைக் கூட்டினால், உற்பத்தியான அளவின் மொத்தச் செலவு கிடைக்கும். வேறு எவ்வித நிபந்தனையுமின்றி, ஒவ்வொரு நாட்டிலும் இது ஒரேமாதிரியாகவே இருப்பதாக அனுமானித்துக்கொள்ள வேண்டும். அப்போது 1 டன் தேனிரும்பு, 2 டன் கோதுமை, 4 டன் அலுமினியம் என்று உற்பத்தி இருப்பதாக வைத்துக்கொண்டால், ஒவ்வொரு டன்னுக்கும் ஏற்படும் செலவைக் (ஆகவே, விலையைக்) கீழ்வரிசையிலுள்ள இலக்குகள் காண்பிக்கின்றன. எனவே, இரண்டு நாட்டிற்கும் தராதர விலை ஒன்றாகிவிடுகிறது—**B**–யில் ஒவ்வொரு பண்டத்தின் விலையும் **A**–யிலுள்ளதைவிட சரியாக இரண்டு மடங்காகிறது. அப்போது, ஒரு நாட்டில் மற்றொரு நாட்டைவிட உற்பத்தி மலிவாக இல்லையாதலால், வாணிபத்திற்கு இடமில்லை என்றாகிவிடுகிறது.

அதிகம் பயன்படுத்தவேண்டிய பொருள்களுக்காகப் பிந்திய நாடு முந்திய நாட்டிற்கு விவசாயப் பண்டங்களை ஏற்றுமதி செய்யலாம். மற்றுமோர் உதாரணமாக, வெவ்வேறு விகிதா சாரத்தில் உற்பத்திக் காரணிகளைப் பெற்றுள்ள இரு நாடுகளை எடுத்துக்கொள்வோம். பெருமளவு நிலமுடைய நாட்டின் மக்கள் உணவுப் பொருள்களையும் இதர விவசாயப் பண்டங்களையும் மிகத் தீவிரமாக விரும்புவதாக வைத்துக்கொண்டால், அந் நாட்டின் நிலக் குத்தகை, மக்கள் நெருக்கம் கொண்டதும் போதுமான அளவு நிலம் இல்லாததுமான பிறிதொரு நாட்டில் இருக்கும் குத்தகையைவிட உயர்வாயிருக்க முடியும். அதே சமயம் வட்டியும் கூலியும் அவ்வளவு அதிகமாக இருக்க முடியாது. இருந்த போதிலும், இவ்வெடுத்துக்காட்டின்படி நிகழ்வதற்குச் சாத்தியமே கிடையாது. ஏனெனில், ஓரேமாதிரி அமைப்புடைய இரு பகுதிகளை எடுத்துக்கொண்டால்கூட, அங்குக் காரணிப் பேற்றில் கணிசமான அளவு வித்தியாசம் அவசியம் இருக்கும். அதே சமயம் அவற்றிற்கான தேவை அளவில் ஏற்படும் வித்தியாசம், இக் காரணிப் பேற்றிலுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் குறை வாகத்தானிருக்கும்.

எனவே, காரணிகளின் அளிப்பிலுள்ள தராதர வேறுபாடு தான் வாணிபத்திற்கு முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, அர்ஜென்டைனவையும் இந்தியாவையும் எடுத்துக் கொள்வோம். 1,079,000 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட அர்ஜென்டைனவைக் காட்டிலும் ஏறக்குறைய 1,250,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்தியாவில் நிலம் அதிகம்தான். ஆனல், அர்ஜென்டைனவில் 21 மில்லியன் மக்கள்தாம் உளர்; அதே சமயம் இந்தியாவில் 456 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். எனவே, மக்கள்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தியாவில்தான் நிலம் பற்றுக்குறையாக உள்ளது என்று சொல்லவேண்டும். இருந்தாலும், அங்கு ஏராளமான உழைப் பாளிகள் இருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. அதேபோல் அர்ஜென்டைனவை எடுத்துக்கொண்டால், அங்கு ஏராளமான நிலம் உள்ளது; ஆனல், வேலை செய்வதற்குப் போதுமான ஆள் கிடையாது. இதையே தலா எண்ணிலக்கில் கூறவேண்டு மானல், இந்தியாவில் தலா ஒவ்வொரு நபருக்கும் 1·8 ஏக்கர் நிலம்தான் உண்டு. ஆனல், அர்ஜென்டைனவில் தலா ஒவ்வோர் ஆளுக்கும் 34·5 ஏக்கர் நிலம் இருக்கிறது. மூலதனம் இவ்விரு நாடுகளிலும் எவ்வளவு இருக்கிறது என்பதற்கு நம்பகமான புள்ளி விவரங்கள் கிடையா. ஒருவேளை இரண்டு நாடுகளிலும் ஒரே அளவு மூலதனம் இருக்கக்கூடும்.

விலைகளில் நாட்டிற்கு நாடு உள்ள வேறுபாடுகள்; சில எடுத்துக் காட்டுகள்

பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியையும் வாணிபத்தையும் பற்றிய நமது நவீன விளக்கத்தின்படி, நாட்டிற்கு நாடு பண்டங்களின் விலை நிலவரம் வேறுபடுவதன் காரணங்களை இரு பெரும் பிரிவுகளாகக் கொள்ளலாம். ஒருபுறம், காரணிகளின் பேற்றில் நாட்டிற்கு நாடு உள்ள வேறுபாடு அக் காரணிகளின் விலையில் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது; மறுபுறம், தொழில் நுண்ணியல் சார்ந்த காரணங்களால் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக வேண்டிய காரணிகளைத் தொகுப்பதில் பல மாற்று வழிகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, மோட்டார் கார்கள் உற்பத்தி செய்வதற்குப் பெருமளவு மூலதனமும் கணிசமான அளவு உழைப்பும் வேண்டியுள்ளது; ஆனால், நிலம் அவ்வளவாகத் தேவை இல்லை. இவை அதிக மூலதனச் செலவுள்ள பொருள்களாகும். எஃகு பொருள், எந்திரக் கருவிகள், செயற்கை நார், சுத்தி செய்யப்பட்ட பெட்ரோல் ஆகிய உற்பத்திப் பொருள்களும் அவ்வாறே பெருமளவு மூலதனச் செலவுள்ளவையாகும். இவற்றோடு ஒப்பிடும் போது, தரமான கடிகாரங்கள், புகைப்பட, விஞ்ஞானக் கருவிகள், இரும்புச் சாதனங்கள் முதலியவற்றிற்கு உழைப்பாளிகள், குறிப்பாகத் திறம்பெற்ற உழைப்பாளிகள் அதிக எண்ணிக்கையில் வேண்டியுள்ளனர். கையால் செய்யும் கண்ணாடிச் சாமான்கள், இசைக் கருவிகள், சரிகைகள், உயர்ந்த ரகக் கம்பளம், மென் மயிராலான மேலங்கி ஆகியவற்றைச் செய்வதற்கு இன்னும் அதிகமான தொழிலாளிகள் தேவை. இவற்றிற்கு மாறாக, பயிர்த் தொழில் பண்டங்களை எடுத்துக்கொண்டால், அவற்றை விளைவிக்க நிலம்தான் பெருமளவில் வேண்டும். இவற்றில் பயிரின் தன்மைக்கேற்ப வேண்டிய நிலத்தின் அளவு மாறுபடும் என்பது உண்மையே. உழைப்பாளிகளோ அல்லது எந்திரங்களோ தேவைப்படாத தொழிலுக்குக் கால்நடை வளர்ப்புத் தொழில் சிறந்த உதாரணமாகும். ஆனால், இதற்கு விஸ்தாரமான மேய்ச்சல் நிலம் அவசியம். இவ்வாறு பெருமளவில் நிலம் தேவைப் படும் உற்பத்திப் பொருள்களில் கோதுமையும் சேரும். இதற்கு நேர்மாறாக, கிழக்கத்திய நாடுகளில் செய்யப்படும் நெல் சாகுபடிக்கு ஓரளவு நிலமும் பெருமளவு உழைப்பும் தேவைப்படுகின்றன. மூலதனமோ மிகச் சிறிய அளவில் விவசாயக் கருவிகள், ஒருசில காளைகள் அல்லது எருமைகள் வடிவில் உள்ளது.

இவ்வாறாக, உற்பத்தி முறைகளில் பயன்கொள்ள வேண்டிய காரணிகளின் அளவு பண்டத்திற்கேற்ப வித்தியாசப்படுகின்ற

அதே சமயம், காரணிகளின் விலைகளும் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுகிறது. எனவே, பண்டங்களின் விலைகள் நாட்டிற்கு நாடு மாறுவது அவசியமாகிறது.

இதற்கு இரண்டே நாடுகளையும் இரண்டே பண்டங்களையும் கொண்டதொரு 'மாதிரியை' (model) எடுத்துக்கொள்வோம். அர்ஜென்டைனு போன்ற A என்னும் நாட்டில் ஏராளமான நிலமும், சுமாரான அளவு உழைப்பாளிகளும், சிறிதளவு மூலதனமும் இருப்பதாகவும், பர்மா போன்ற B என்னும் நாட்டில் உழைப்போர் ஏராளமாயும், நிலம் சுமாரான அளவிலும், மூலதனம் சிறிதளவுமட்டும் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். இந்த அனுமானங்களுக்குக் கீழ்க்காணும் காரணி விலைகள் பொருத்தமானவையாயிருக்கும் :

காரணி விலைகள்

	A-யில்	B-யில்
நிலம்	1 டாலர்	20 டாலர்கள் (அலகு : 1 ஏக்கர்-வருடம்)
உழைப்பு	600 டாலர்கள்	100 டாலர்கள் (அலகு : 1 ஆள்-வருடம்)
மூலதனம்	80 டாலர்கள்	150 டாலர்கள் (அலகு : 1 ஆண்டிற்குப் பயன்படுத்தப்படும் 1,000 டாலர்கள்)

நிலம் A-யில் ஏராளமாயும் மலிவாயும் உள்ளது ; ஆனல், B-யில் போதுமான அளவில் இல்லாததால் அது கிராக்கியாயுள்ளது. உழைப்பு B-யில் ஏராளமாயும் மலிவாயும் உள்ளது ; ஆனல், A-யில் போதுமான அளவு இல்லாததால் B-யைவிட 6 மடங்கு விலையில் உள்ளது ; மூலதனம் A-யைக் காட்டிலும் B-யில் குறைவாயுள்ளதால் அங்கு ஏறக்குறைய அதற்கு இரண்டு மடங்கு விலையுள்ளது.

இப்போது வெவ்வேறு உற்பத்தி முறைகளைப் பயன்கொள்ளும் இரண்டு பண்டங்களைப் புகுத்துவோம். மாட்டிறைச்சியும் அரிசியும் இதற்குப் பொருத்தமான பண்டங்களாகும். மாடு வளர்ப்பதற்கு நிறைய நிலம் வேண்டும் ; ஆனல், மிகச் சொற்ப ஆட்களே போதும். மாருக, நெல் சாகுபடி செய்வதற்கு நிலத்தைச் சிக்கனப்படுத்தவேண்டிய முறை அவசியம்; ஆனல், உழைப்பாளிகள் அதிகம் வேண்டும். இப் பண்டங்களின் உற்பத்திக்குப் பின்வரும் அளவில் காரணிகள் தேவைப்படுவதாக வைத்துக்கொள்வோம்.

	உற்பத்திக்குத் தேவையான காரணிகளின் அளவு	
	மாட்டிறைச்சி (1 மெட்ரிக் டன்)	அரிசி (1 மெட்ரிக் டன்)
நிலம்	1,000	2
உழைப்பு	1	1
மூலதனம்	1	½

இவ்விரண்டு அட்டவணைகளையும் இணைப்பதன் மூலம் மாட்டிறைச்சியையும் அரிசியையும் உற்பத்தி செய்வதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் எவ்வளவு செலவு ஏற்படுமென்று கணக்கிட்டுப் பார்க்க முடியும்.

அதிக நிலம் தேவையான மாட்டிறைச்சியை உற்பத்தி செய்வதற்கு, நிலம் ஏராளமாயும் மலிவாயுமுள்ள A-யில் ஒரு கிலோகிராம் மாட்டிறைச்சிக்கு 1·68 டாலர் அல்லது ஒரு பவுண்டுக்கு 76 சென்டுகள் செலவாகும். B-யில் நிலம் போதுமான அளவின்றிக் கிராக்கியாயுள்ளதால், மாட்டிறைச்சியே உற்பத்தி செய்ய முடியாத அளவிற்கு அதன் செலவு அதிகமாயிருக்கும். இவ்விரண்டு நாடுகளில், நாடு A மாட்டிறைச்சியில் சிறப்புத் தேர்ச்சி செய்யும் என்பது வெளிப்படை. மாருக, அரிசி உற்பத்தி செய்ய அதிகம் தேவைப்படும் உழைப்பு B-யில் ஏராளமாயும் மலிவாயும் உள்ளதால், 1 கிலோகிராமிற்கு 21½ சென்டுகள் அல்லது 1 பவுண்டுக்கு 10 சென்டுகள்தாம் அங்குச் செலவாகும். ஆனல், A-யில் அரிசி உற்பத்தி செய்வதற்கு 1 பவுண்டுக்கு 30 சென்டுகள், அதாவது B-யில் செலவாவதைவிட மூன்று மடங்கு அதிகமாகச் செலவாகிறது. A-யில் நிலம் ஏராளமாயிருந்தாலும், போதுமான அளவு உழைப்பு இல்லாததால், கூலி உயர்வாகி விடுவதே இதற்குக் காரணம். B அரிசி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி செய்வதோடுமட்டுமன்றி, A-க்கு ஏற்றுமதியும் செய்யும். ஆனல், அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவு 1 பவுண்டுக்கு 20 சென்டுக்குக் குறைவாக இருக்கவேண்டும்.

உற்பத்தி முறைகளும் உற்பத்திசார் பலன்களும் (Methods of Production and Production Functions)

பண்டத்திற்கேற்ப உற்பத்தி முறை மாறுவதாயிருப்பினும், குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் தனியொரு முறை பயன்படுவதாகவும், அதில் காரணிகளின் தொகுப்பு நிலையானதொரு விகிதாசாரத்தில் இருப்பதாகவும் இதுவரை அனுமானித்தோம்.


	காரணி விலைகள்		தேவையான காரணிகள்	மாட்டிறைச்சிக்கு ஏற்படும் செலவு		தேவையான காரணிகள்	அரிசிக்கு ஏற்படும் செலவு	
	A (டாலர்கள்)	B (டாலர்கள்)		A-யில் (டாலர்கள்)	B-யில் (டாலர்கள்)		A-யில் (டாலர்கள்)	B-யில் (டாலர்கள்)
நிலம்	1	20	1000	1,000	20,000	2	2	40
உழைப்பு	600	100	1	600	100	1	600	100
மூலதனம்	80	150	1	80	150	½	40	75
1 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யச் செலவு				1,680	20,250		642	215
1 கிலோ கிராம் உற்பத்தி செய்யச் செலவு				1.68	20.25		0.64	0.215
1 பவுண்டு உற்பத்தி செய்யச் செலவு				0.76	9.20		0.30	0.10

ஆனால், நடைமுறையில் இவ்வாறு இருப்பதில்லை. பெரும்பாலும் பண்டங்களின் உற்பத்தியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தி முறைகள் உள்ளன; இவை ஒவ்வொன்றிலும் காரணிகளை வெவ்வேறாகத் தொகுக்க முடியும். குறிப்பிட்டதோர் உற்பத்தி முறையிலுள்ள படிநிலையை எடுத்துக்கொண்டால், அதில்கூடக் காரணிகளின் தொகுப்பு நிலையானதாயில்லாமல், ஓரளவிற்கு மாற்றி அமைக்கக்கூடியதே. நாம் முதலில் அனுமானித்த மாறுத விகிதாசாரத்தில் காரணிகளைப் பயன் படுத்தும் தனியோர் உற்பத்தி முறைக்கு நேர் எதிராகத் தொடர்ச்சியான உற்பத்திசார் பலன் உள்ளது. இதில் பல்வேறு உற்பத்தி முறைகள் தனித்தனியாக இருப்பது தெரிவதில்லை. தடங்கலின்றிப் படிப்படியாக இதில் பயன்படுத்தப்படும் காரணிகளின் விகிதாசாரங்களை மாற்ற முடியும் என்பதே இதற்குக் காரணம்.

இவ்வுண்மைகளை வரைபடத்தின் வாயிலாக விளக்குவது அவசியம். பின்வரும் வரைபடங்களில் செங்குத்து அச்சில் மூலதன அலகுகளும், படுகிடை அச்சில் உழைப்பின் அலகுகளும் அளவிடப்படுகின்றன. கிடையானதொரு தளத்தில் இரண்டு அச்சுகள்மட்டுமே உள்ளதால், இரண்டு காரணிகள் கொண்ட சூழ்நிலையைமட்டும்தான் ஆயமுடிகிறது. மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் உள்ளிடுகைக்கேற்ப வெளிப்படும் உற்பத்தி அலகுகள் செங்குத்துக் கோணத்தில் அளவிடப்படுகின்றன. சம உயரக் கோடுகளைக்கொண்ட படத்தில் ஒரே உயரத்திலுள்ள இடங்களை அளவிடுவதைப் போன்று, இவை நமது வரைபடத்திற்குள் மேல்நோக்கிச் செல்வனவாக உள்ளன.

தனியோர் உற்பத்தி முறைமட்டும் இருக்கின்ற உற்பத்திசார் பலனை வரைபடம் 6·1 காட்டுகிறது. இதில் காரணிகளின் விகிதாசாரத்தை மாற்ற இயலாத நிலை அனுமானிக்கப்படுகிறது. இடப்புறமுள்ள பட்த்தின்படி 2 அலகு மூலதனத்தையும் ½ அலகு உழைப்பையும் கொண்ட (காரணி அலகுகள் ஒரே தன்மையுடையனவாயும் பொருத்தமான முறையிலும் இங்குப் பொருள் கொள்ளப்படுகிறது) தொகுப்பில் ஒரு நாளைக்கு 100 பீப்பாய் பெட்ரோல் உற்பத்தி செய்ய முடியும்; அல்லது 4 அலகு மூலதனத்தையும் 1 அலகு உழைப்பையும் கொண்டு 200 பீப்பாய் பெட்ரோல் உற்பத்தி செய்ய முடியும். மூலதனத்திற்கும் உழைப்பிற்குமுள்ள விகிதாசாரத்தை மாற்றுவதால் எவ்விதப் பயனுமில்லை. 1 அலகு உழைப்போடு 4 அலகு மூலதனத்திற்கு மேல் சேர்ப்பதால், உற்பத்தி அளவு 200-க்குமேல் அதிகரிக்கப்போவதில்லை.

அவ்வாறு சேர்த்தால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கம் சூனியமாக (zero) இருக்கும். அதேபோன்று 4 அலகு மூலதனத்தோடு 1 அலகு உழைப்பிற்குமேல் பயன்படுத்தினாலும், உற்பத்தி அதிகரிக்காமல் அதே அளவுதானிருக்கும்.



வரைபடம் 6·1 மாறுத உற்பத்திசார் பலன்கள்: தனியோர் உற்பத்தி முறை


இந்த எடுத்துக்காட்டில் உற்பத்திசார் பலன் (உற்பத்திக் காரணிகளின் உள்ளிடுகைக்கும் உற்பத்தி அளவு வெளிப்படுகைக்கும் உள்ள தொடர்பினைக் கூறும் சமன்பாடு) தனியோர் உற்பத்தி முறையைமட்டும் கொண்டுள்ளது—4:1 என்ற விகிதாசாரத்தில் மூலதனமும் உழைப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது OP என்னும் கதிரில் (ray) காட்டப்படுகிறது. இக் கதிரில் O-விலிருந்து OP வழியாக உற்பத்தி ஆக்கத்தின் மட்டம் அளவிடப்பட்டுள்ளது. இந்த அளவு செவ்வக அமைப்பைக்கொண்ட சம அளவுக் கோடுகளால் (isoquants) அல்லது சம உற்பத்தி அளவுக் கோடுகளால் (equal product curves) காட்டப்படுகிறது.[9]

வரைபடம் 6·1-ன் வலப்புறப் படம், தனியோர் உற்பத்தி முறையுடைய, உழைப்பு அதிகம் தேவைப்படும் உற்பத்திசார் பலன்களைக் காட்டுவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இங்கு மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் உள்ள விகிதாசாரம், 1 மூல

[9] OP என்னும் கதிர் இக் காகிதத்திலிருந்து மேலே மூலைவிட்டமாகப் போவதாகக் கற்பனை செய்துகொள். அப்போது உற்பத்தித் தளம் OP என்ற விளிம்புக் கோட்டில் ஒன்றுசேரும் இரு சமதளங்களைக் கொண்டிருக்கும். உச்சமான உற்பத்திப் புள்ளிகளெல்லாம் இந்த விளிம்புக் கோட்டில் இருக்கும். உற்பத்தித் தளத்தின்மேல் உள்ள பிற புள்ளிகள் அவ்வளவு இலாபத்தைத் தரமாட்டா. ஏனெனில், அந்தப் புள்ளிகளில் ஒவ்வொன்றுக்கும் இணையான விளிம்புக் கோட்டுப் புள்ளியில் உள்ளதைவிட அதிகமான மூலதனத்தையோ உழைப்பையோ பயன்படுத்தவேண்டியிருக்கும்.

தனத்திற்கு 5 உழைப்பு என்று மாருத விகிதத்தைக் கொண்டதாகிறது. இம் மாருத விகிதாசாரத்தில், காரணிகளின் உள்ளிடுகைக் கேற்ப விளையும் உற்பத்தி அளவுகள் சம உற்பத்தி அளவுக் கோடுகளால் காட்டப்படுகின்றன. இங்கும் OP என்னும் கதிர் உற்பத்தி சார் பலனின் போக்கிணைக் காட்டுவதாக அமைகிறது.

இரண்டு உற்பத்தி முறைகளைக் கொண்ட உற்பத்திசார் பலனை ஆய்வதற்கு வரைபடம் 6.2-க்குச் செல்வோம். இவ்வுற்பத்தி முறைகள் ஒவ்வொன்றும் மாருத காரணி விகிதாசாரத்தைக் கொண்டதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக அரிசி உற்பத்தியை ஆய்வோம். ஏனெனில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக



வரைபடம் 6.2 மாருததோர் உற்பத்திசார் பலன்: இரண்டு உற்பத்தி முறைகள்

ஜப்பானில் பின்பற்றிவரும் அதிக உழைப்பைப் பயன்படுத்தும் முறைக்குப் பதிலாகப் பயிர் நடுவதற்கும் அறுவடை செய்வதற்கும் எந்திரத்தைப் பயன்கொள்ளும் ஒரு மாற்று வழிமுறை வந்துள்ளது.[10] எந்திர உற்பத்தி முறை OP என்ற உற்பத்திக்


[10] ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆசியாவில் பின்பற்றப்பட்டுவரும் உற்பத்தி முறைகளில் ஜப்பானிய முறைதான் அதிக உழைப்பைக் கொண்டதாகும். இம் முறைகளைக் காட்டுவதற்கு வேருெரு கதிரை அல்லது சில கதிர்களைப் புகுத்தக் கூடும். ஆனல், இம் முறைகளனைத்தும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று ஒத்ததாகையால், இக் கதிர்களெல்லாம் ஒன்ருேடொன்று நெருக்கமாக இருக்கும்.

கதிரால் காட்டப்படுகிறது. இம் முறையில் மூலதனமும் உழைப்பும் முறையே 30:1 என்ற விகிதத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. OP′ என்ற கதிர் அதிக உழைப்புப் பயன்படுத்தப்படும் முறையைக் காட்டுகிறது. இம் முறை, 5 அலகு மூலதனத்திற்கு 5 அலகு உழைப்பு என்ற விகிதத்தைக்கொண்டதாகும். இவ்விரு முறைகளில் ஏதாவதொன்றையோ அல்லது இரண்டையும் சேர்த்தோ பயன்படுத்தி அரிசி உற்பத்தி செய்யக்கூடும். எனவே, இவற்றின் உற்பத்திசார் பலன்கள்—குறிப்பிட்டதோர் அளவு, உதாரணமாக, 5 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்வதற்கு—மூலதனம் அதிகம் தேவைப்படும் முறையையும், அதே அளவு உற்பத்தி செய்வதற்கு அதிக உழைப்பைக்கொண்ட முறையையும் இணைத்து ஒரே சம அளவு உற்பத்திக் கோட்டால் காட்ட முடியும். இக் கோடு மேலே மூலைவிட்டமாகப் போகும். இவ்வுற்பத்திசார் பலனனைத்தும்—உற்பத்தி எந்த அளவினதாயிருந்தாலும் சரி, அல்லது காரணிகள் சாத்தியமான எந்தத் தொகுப்பைக் கொண்டதாயிருந்தாலும் சரி—OP உற்பத்திக் கதிருக்கும் OP′ உற்பத்திக் கதிருக்குமிடையே அமையக்கூடிய தளத்தால் காண்பிக்கப்படும்.

ஒன்று அல்லது இரண்டு உற்பத்தி முறைகளுக்கோ அல்லது சிக்கனமான காரணித் தொகுப்பு வழிகளுக்கோ பதிலாக மூன்று, நான்கு—ஏன்—அதற்கு மேற்பட்ட முறைகள் அல்லது வழிகள் இருக்கக்கூடும். மாறுத உற்பத்திக் காரணிகளின் தொகுப்பைக் கொண்ட தனியோர் உற்பத்தி முறைக்கு நேர் மாறுகத் தொடர்ச்சியான உற்பத்திசார் பலன் இருக்கும். இதில் உற்பத்திக் காரணிகளை வெளிப்படையாகத் தெரியாதவாறு சிறிது மாற்றித் தொகுக்கக்கூடும். அப்போது எண்ணிலடங்கா உற்பத்தி முறைகளை இது காட்டும். இவற்றில் ஒரு காரணித் தொகுப்பிற்கும் பிறிதொன்றுக்கும் மிகச் சிறிய வேறுபாடுதான் இருக்கும். இந்த நிகழ்ச்சியை 6.3 வரைபடத்திலுள்ளதைப் போல் இணக்கமான சம உற்பத்தி அளவுக் கோடுகளால் காட்ட முடியும்.

குறிப்பிட்டதோர் அளவு, உதாரணமாக, 100 அலகு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குப் பெருமளவு மூலதனத்தை மட்டும் பயன்படுத்தலாம்; அல்லது பெருமளவு உழைப்பையும் சிறிதளவு மூலதனத்தையும் சேர்த்துப் பயன்படுத்தலாம்; அல்லது தொடர்ச்சியான பல்வேறு காரணித் தொகுப்புகளில் ஏதாவதொரு தொகுப்பைப் பயன்படுத்தியும் உற்பத்தி செய்யக்கூடும். இடது பக்கத்திலுள்ள படத்தில் மிக அதிகமாக மூலதனம் தேவைப்படும் பகுதியில் சம உற்பத்தி அளவுக் கோட்டின் வளைவு

மிக அதிகமாக உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இப் பகுதியில் காரணிகளுக்கிடையேயுள்ள பதிலீட்டுச் சாத்தியம் மிக அதிகம் என்பதை இது குறிக்கிறது. ஆனால், எந்த சம அளவுக் கோட்டிலும் அதிக உழைப்பைக்கொண்ட பகுதியை நோக்கி



வரைபடம் 6.3 தொடர்ச்சியான உற்பத்திசார் பலன்கள்

(a-க்கு வலது புறமாக) நகரும்போது, அது ஏறக்குறைய கிடைக் கோடாக அமைந்துவிடுகிறது. காரணிகளின் பதிலீட்டுச் சாத்தியம் இப் பகுதியில் குறைவு என்பதை இது காட்டுகிறது. வேறுவிதமாக இதைக் கூறுவதாயின், அதிக மூலதனம் கொண்ட பகுதிகளில் உற்பத்திக் காரணிகளைப் பல்வேறு மாற்று வழிகளில் தொகுக்க முடியும்; ஆனால், மூலதனத்தோடு சேரவேண்டிய உழைப்பு ஓரளவு அதிகமாகும்வரை, இவ்வகை மாற்று வழியே கிடையாது. இவ்வகையான கோடுகள் மூலதனம் பெருமளவில் தேவைப்படும் பண்டங்களைக் குறிக்கிறது. காரணிகளின் தராதர விலைகள் எப்படி இருந்தாலும், அப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு மற்றப் பண்டங்களுக்கு வேண்டியதைக் காட்டிலும் (6.1 வரைபடத்தில் இடப்பக்கமுள்ள தனியோர் உற்பத்தி முறையைக் கொண்ட உற்பத்திசார் பலனைப் போன்று) அதிக மூலதனம் வேண்டும் என்பதை இது காட்டுகிறது.

இதற்கு நேர்மாறான நிலைகளை வலது பக்கத்திலுள்ள படம் காட்டுகிறது. அதாவது, குறைந்த மூலதன—உழைப்பு விகிதாசாரத்தைக்கொண்ட பகுதியில் காரணிகளின் பதிலீட்டுச் சாத்தியம் அதிகமென்றும், சம உற்பத்தி அளவுக் கோட்டின் நெகிழ்ச்சி அதிகமானதென்றும் காட்டப்படுகிறது. மாறாக, அதிக மூலதன—உழைப்பு விகிதாசாரத்தைக்கொண்ட நிலைகளில் காரணிகளின் பதிலீட்டுச் சாத்தியம் குறைவாயும், சம அளவுக் கோடு நெகிழ்ச்சியற்றதாயும் உள்ளது என்பது தெரிகிறது.

பொதுவாக, கோட்பாட்டளவில் ஆய்வதற்கு 6.3 வரை படத்திலுள்ளதைப் போன்ற இழைவான (smooth) தொடர்ச்சி யுடைய சம அளவுக் கோடுகள்தாம் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் இந்தமாதிரியான நிலைமையைக் காண்பது அரிது; ஏனெனில், காரணிகளை மாற்றித் தொகுக்கக்கூடிய வழி முறைகள் வெகு சொற்பம். உற்பத்தி முறையிலோ அல்லது காரணித் தொகுப்பிலோ மிகச் சிறிதளவு மாற்றம்தான் நடை முறையில் சாத்தியமாக உள்ளது.

இதைப்பற்றிய டார்ஃப்மன் (Dorfman) அவர்களின் விமரிசனம் பயனுள்ளதாகும். இழைவான தொடர்ச்சியுடைய சம அளவுக் கோடு காட்டும் உற்பத்தியைப் பற்றி அவர் குறிப்பிடுவதாவது:

'சில வகைப் பண்டங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை இது உண்மையாயிருக்கக்கூடும். ஆனால், பெரும்பாலும் பொறிவழி யாக்கத் தொழில்களில், அல்லது பெருவாரியாக எந்திரங்களைப் பயன்படுத்தும் எந்தத் தொழிலிலும் இது பொருத்தமற்றதாகும். நவீன எந்திரத் தளவாடங்களின் இயல்பினை ஆய்ந்து பார்க்கு மிடத்து, ஒவ்வொரு வகை எந்திரமும் தன் வேகத்தில் குறிப்பிட்ட தோர் எல்லைக்குள்தான் மிகத் திறமையாக இயங்கும் என்பதும், அந்த எந்திரம் இயங்குவதற்கு உதவுகின்ற உழைப்பு, சக்தி, இதர சாதனங்கள், இன்னுமுள்ள காரணிகள் ஆகியவற்றின் அளவுகள் எந்திரத்தின் அமைப்பையும் அதன் நுட்பத்தையும் சார்ந்திருப்பதால், அவற்றைப் பெருமளவில் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ முடியாது என்பதும் தெரிந்ததே. மேலும், குறிப்பிட்டதொரு காலத்தில் குறிப்பிட்டதொரு வேலைக்குப் பயன்படும் எந்திரத்தை எடுத்துக்கொண்டால், அதில் சிலவகை தாம் இருக்க முடியும்.........மண்ணை வெட்டி எடுப்பதற்குக் கைபிடி மண்வெட்டியை அல்லது நீராவிச் சக்தியாலோ எண்ணெய்ச் சக்தியாலோ இயங்கும் மண்வெட்டியைப் பயன்படுத்தலாம்; அல்லது புல்டோசரைப் (bulldozer) பயன்கொள்ளலாம். இவற்றில் புல்டோசரை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது சக்தியால் இயங்கும் மண்வெட்டி எந்திரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதில் ஒருசில வகையே இருக்கமுடியும். இவற்றில் ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு சக்தி செலவாகிறது என்பதிலும், அதை இயக்குவதற்கு எத்தனை பேர் வேண்டியுள்ளனர் என்பதிலும் அல்லது ஒரு மணிநேரத்தில் அது எத்தனை கன அடி மண்ணை வெட்டித்தள்ள முடியும் என்பதிலும் ஒவ்வொரு ரகமும் மாறு படலாம். அச்சுக்கோப்பை எடுத்துக்கொண்டால், கையால் இயக்கும் பொறியைக்கொண்டோ அல்லது லினோடைப் (linotype)


எந்திரத்தையோ அல்லது மோனோடைப் (monotype) எந்திரத்தையோதாம் பயன்படுத்த முடியும். அதோடு, எந்த எந்திரமாக இருந்தாலும் அதில் சில வகையே இருக்க முடியும். ஒவ்வோர் எந்திரமும் இயங்குவதற்குக் குறிப்பிட்ட அளவு விஸ்தாரம், சக்தி, இன்னும் இதர மாற்ற முடியாத அம்சங்கள் உள்ளன......... பொருளாதாரச் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் வரையறை பெற்ற சில உற்பத்தி முறைகள்தாம் உள்ளன. காரணிகளின் உள்ளிடுகைக்கும் பண்டங்களின் வெளிப்படுகைக்கும் உள்ள விகிதத்தை எடுத்துக்கொண்டால், இவை ஒவ்வொன்றும் மாற்ற முடியாததாக இருக்கும். உற்பத்தி செய்யும் நிலையிலுள்ள எல்லாச் செய்நுட்ப முறைகளையும் மாற்றினாலன்றி, ஒன்றுக்குப் பதிலாகப் பிறிதொரு காரணியை நாம் பதிலீடு செய்ய முடியாது. ஏனெனில், ஒவ்வோர் உற்பத்தி முறையும் அதனதன் இயல்பு சார்ந்த குறிப்பிட்ட விகிதங்களில்தான் காரணிகளைப் பயன்கொள்கிறது.'[11]

காரணி விலைகளும் உற்பத்திசார் பலன்களும்

உற்பத்திசார் பலன் என்பது குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் எத்தனை வகையான தொழில்நுட்ப முறைகள் உள்ளன என்பதைக் காட்டுகிறது. இதற்குமுன் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானப் புத்தமைப்புகளைக்கொண்டு எத்தனை வழிமுறைகளில் காரணிகளைத் தொகுத்துப் பயன்படுத்த முடியும் என்பதை இது விளக்குகிறது. இம் மாற்று வழிமுறைகளில் எந்த முறையை வேண்டுமானாலும் பின்பற்றுவது எளிது. ஆனால், எது சிக்கனமான முறை என்பது உற்பத்திக் காரணிகளின் விலையை அல்லது உள்ளிடுகைகளின் விலையைச் சார்ந்தது.

காரணிகளின் விலைகள் கொடுக்கப்பட்டிருக்க, குறிப்பிட்டதொரு பண்டத்தை (உதாரணமாக, ஃபிளாஷ்லைட் பேட்டரிகளை) உற்பத்தி செய்வதற்கு எந்தத் தொகுப்பில் அக் காரணிகள் பயன்படுத்தப்படும் என்பதை அறிவதற்குத் தொடர்ச்சியான உற்பத்திசார் பலனிற்கேற்ப அமையும் சம அளவுக் கோட்டினை (வரைபடம் 6.4-ல் உள்ளதைப்போல்) வரைவோம். A என்ற நாட்டில் மூலதனம் ஏராளமாயும் மலிவாயும் இருப்பதாகவும், உழைப்புப் பற்றாக்குறை யுடையதாயும் கிராக்கியாயும் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்போது குறிப்பிட்டதொரு தொகையைக்கொண்டு பெரிதளவு மூலதனத்தையோ அல்லது சிறிதளவு

[11] Robert Dorfman, "Mathematical, or 'Linear' Programming: a Non-mathematical Exposition," American Economic Review, XLIII (December, 1953), p. 803.



வரைபடம் 6·4 வெவ்வேறு காரணி விலைகளில் தனியோர் உற்பத்திசார் பலன்

உழைப்பையோதான் பெறமுடியும். உதாரணமாக, 10 டாலர் செலவில் 1 அலகு உழைப்பையோ அல்லது 3 அலகு மூல தனத்தையோ பெறமுடிவதாகக் கொள்வோம். அப்போது மூலதன அச்சில் 3 அலகுள்ள புள்ளியிலிருந்து உழைப்பு அச்சில் 1 அலகுள்ள புள்ளிக்கு மூலைவிட்டமாக வரையப்படும் கோடு இந் நிலையைக் காட்டும். இதற்கு இணையாக 6 அலகு மூலதனம் கொண்ட புள்ளியிலிருந்து 2 அலகு உழைப்புக்கொண்ட புள்ளி வரை உயரத்தில் வரையப்படும் கோடு 20 டாலர் செலவினைக் காட்டும். இக் கோடுகளின் சரிவோ அல்லது இவற்றிற்கு இணையாக வரையப்படக்கூடிய இதர கோடுகளின் சரிவோ, 1 அலகு மூலதனத்தின் விலை $3 \cdot 33\frac{1}{3}$ டாலர் என்பதையும், 1 அலகு உழைப்பின் விலை 10 டாலர் என்பதையும் காட்டுவதோடு, 1 அலகு உழைப்பிற்குச் சுமார் 3 அலகு மூலதனம் பரிவர்த்தனை செய்யப்படும் என்பதையும் காட்டும். இவ்வாருக, இக் கோடுகளின் சரிவு காரணிகளின் விலையை அல்லது அவற்றின் மாற்றுவீதத்தைக் காட்டுவதாய் அமைகிறது. தோற்றுவாயிலிருந்து இக் கோடுகள் அமைந்துள்ள தூரம் செலவுத் தொகையைக் காட்டுவதாகிறது.

A என்ற நாட்டில் மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் தராதர விலை 1 : 3 (அல்லது 3·33⅓ : 10) என்ற விகிதத்தில் இருக்க, 6.4 வரை படத்திலுள்ள சம அளவுக் கோடு காட்டும் 10 அலகு களுக்குக் குறைந்த பட்சம் எவ்வளவு செலவாகும் என்பதை இச் சம அளவுக் கோட்டிற்குத் தொடுகோடாக உள்ள விலை- செலவுக் கோடு (price-expenditure line) காட்டுகிறது. ஏனெனில், கொடுக் கப்பட்ட இக் காரணி விலைகளில் 10 பாட்டரிகள் உற்பத்தி செய் வதற்குக் குறைந்தபட்சம் [$20(A) கோட்டால் காட்டப்படுவது போல்]இச் செலவாகும். இச் செலவில் அதிகபட்சம் 10 பாட்டரிகள் தான் கிடைக்கும். எனவே, 1 பாட்டரியின் செலவு 2 டாலர்.

$ 20(A) கோடு, சம அளவுக் கோட்டினைத் தொடும் புள்ளியில் அதிக மூலதனம் தேவைப்படுவதைக் காட்டுகிறது என்பது குறிப் பிடத்தக்கது. 6C : IL-க்குச் சமீபத்திலுள்ள Oa கதிரின் சரிவால் இதை அளவிட முடியும்.

இப்போது வேறு விலையுள்ள B என்னும் மற்ரொரு நாட்டை எடுத்துக்கொள்வோம். இங்கு 10 டாலர் பணத்தைக்கொண்டு 1 அலகு மூலதனம் அல்லது 4 அலகு உழைப்புப் பெறமுடியும் எனக்கொள்வோம். [இதை $ 10 (B) கோடு காட்டுகிறது.] இங்கு மூலதனம் கிராக்கியாயும் உழைப்பு மலிவாயும் உள்ளன. 20 டாலர் செலவுக் கோடு 10 அலகு சம அளவுக் கோட்டிற்கு நெருக்கமாக வர முடிவதில்லை. 30 டாலர் செலவுக் கோடு வரை நந் தால்கூட இச் சம அளவுக் கோட்டைத் தொடாமல் சிறிது தூரத்தில் தான் இருக்கும். எனவே, இந் நாட்டில் ஒரு பாட்டரியின் செலவு 3 டாலருக்குமேல் இருக்கும்.


B என்ற நாட்டிற்கு விலை-செலவுக் கோடு தொடும் சாத்தியமான புள்ளி b-ல் இருக்கக்கூடும். அப்போது ஏறக்குறைய 2½ மூல தனத்திற்கு 2½ உழைப்பு என்று தொகுக்கப்படலாம். இது 1:1 என்ற மூலதன-உழைப்பின் விகிதாசாரத்தைப் போன்றது. எனவே, a என்னும் புள்ளியில் இருப்பதைக் காட்டிலும் குறைந்த அளவு மூலதனத்தைப் பயன்கொள்ளும் நாடு இது என்பது தெளிவு. இவ்வாருக, இதுவரை நாம் வெறும் சொற்களால் விவரித்த வாதத்தை இந்த வரைபடம் விளக்கிவிட்டது. அதாவது, மூலதனம் மலிவாக உள்ளதொரு நாட்டில் மூலதனம் அதிகம் தேவைப்படும் பொருளை மலிவாக உற்பத்தி செய்ய முடியும்.

இப்போது பாட்டரி உற்பத்திசார் பலனைப் போன்றில்லாமல், வேருெருவகை உற்பத்திசார் பலனுடைய பிறிதொரு பண்டத்தைப்

புகுத்துவதன்மூலம் நமது ஆய்வை விரிவுபடுத்துவோம். இப் பண்டம் வெங்காயம் என வைத்துக்கொள்வோம். இதன் உற்பத்திக்கு அதிக அளவு உழைப்பு தேவை என்று அனுமானித்துக்கொள்வோம். உழைப்பிற்காக ஓரளவுவரை மூலதனத்தைப் பதிலீடு செய்ய முடியுமெனினும், அவ்வாறு பதிலீடு செய்வதற்கு ஓர் எல்லை உண்டு என்பதை இது புலனாக்குகிறது. இந்த அளவிற்குத்தான் மூலதனத்தைப் பயன்படுத்த முடியும் என்றதொரு நிலைக்குமேல் உழைப்பிற்குப் பதிலாக மூலதனத்தைப் பயன்படுத்த இயலாது. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமாயின், குறிப்பிட்டதோர் அளவு வெங்காயத்தைப் பெருமளவில் தொழிலாளிகளையும் மண்வெட்டிகளையும்மட்டும் பயன்கொண்டு உற்பத்தி செய்யக்கூடும்; அல்லது இன்னும் சிறிதளவு உழைப்பாளிகளைக் குறைத்துவிட்டு, மண்வெட்டிகளையும் களைகொட்டிகளையும் பயன்கொண்டு உற்பத்தி செய்யலாம்; அல்லது உழைப்பாளிகளை இன்னும் கொஞ்சம் குறைத்துவிட்டுக் கையினால் இயக்கும் சாகுபடி எந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம். இவ்வாறு உழைப்பாளிகளின் எண்ணிக்கையை மேலும் மேலும் குறைத்துவிட்டு, பெட்ரோல் சக்தியால் இயங்கும் சாகுபடி சாதனங்கள்வரை பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம். இந் நிலைமையில் உழைப்பாளிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்பட்டுவிடும். இதிலுள்ள மூலதனம்—உழைப்பு விகிதம் மூலதனம் அதிக அளவு தேவைப்படும் இதர துறைகளிலுள்ள உற்பத்தி முறையில் இருப்பதைக்காட்டிலும் குறைவாகத்தானிருக்கும். இன்றுள்ளதைக்காட்டிலும் அதிகமான அல்லது இதுவரை கண்டுபிடிக்கப்படாத, இனிமேல் கண்டு பிடிக்கக்கூடிய முதற்கருவிப் பொருள்களைக்கொண்டு அதிக மூலதன விகிதத்தில் உற்பத்தி செய்யக்கூடிய தொழில் நுட்ப முறையை அனுமானித்துக்கொள்வோம்.

வரைபடம் 6.5-ல் பாட்டரி உற்பத்திக்கான 10 அலகு சம அளவுக் கோட்டை மறுபடியும் வரைந்துள்ளோம். அதோடு $ 20 செலவினைக்கொண்ட A, B ஆகிய நாடுகளின் விலை—செலவுக் கோடுகளையும் கொடுத்துள்ளோம். முன்போன்றே 1 பாட்டரிக்கு 2 டாலர் செலவில் A நாடு பாட்டரி உற்பத்தி செய்யும். O என்னும் சம அளவுக் கோடு, உற்பத்தி அளவு 10 அலகாக இருக்கும் போதுள்ள வெங்காய உற்பத்தியைக் காட்டுகிறது.

B என்ற நாட்டில் மூலதனம் கிராக்கியாயும், அதே சமயம் உழைப்பு மலிவாயும் இருப்பதால், அதன் விலை-செலவுக் கோடு A-ல் உள்ளதைக்காட்டிலும் படுகிடையாக அமைகிறது. அதிக



வரைபடம் 6.5 வெவ்வேறு உற்பத்திசார் பலன்கள்

அளவு உழைப்புத் தேவைப்படும் வெங்காயப் பண்டத்தின் சம அளவுக் கோட்டினை $ 20 கோடு P' புள்ளியில் தொடுகிறது. இவ்வாருக, ஓர் அலகு (உதாரணமாக, ஒரு புஷெல்) வெங்காயத்தை 2 டாலர் செலவில் அது உற்பத்தி செய்யமுடியும். மாருக, A என்ற நாடு, அதே ஓர் அலகு வெங்காயத்தை உற்பத்தி செய்வதற்கு 3 டாலர் செலவிடும். காரணம், Bஐவிட A-ல் மூலதனம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் A-ல் நிலவும் காரணி விலைகளில் மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் 30 டாலர் செலவு செய்தால்கூட அந் நாடு 10 அலகு வெங்காயத்தை விளைவிக்க இயலாது.

இவ்வாருக, இவ்விரண்டு பண்டங்களையும் பொறுத்தவரை, மூலதனம் ஏராளமாயும் உழைப்பு போதாததாயுமுள்ள A என்ற நாடு, மூலதனத்தை அதிகம் பயன்படுத்தி பாட்டரிகளை மலிவாக உற்பத்தி செய்ய முடியும்; அதே சமயம் B என்னும் நாடு உழைப்பை அதிகம் பயன்படுத்தும் உற்பத்தி முறையில் தனது சாதனங்களைப் பயன்படுத்தி வெங்காயத்தை மலிவாக உற்பத்தி செய்ய முடியும்.

இப் பிரிவில் ஆய்ந்தவற்றை இப்போது சுருக்கமாகப் பார்ப்போம். பல்வேறு காரணித் தொகுப்பின் உற்பத்தித் திறனை உற்பத்திசார் பலன் அல்லது காரணிகளின் உள்ளிடுகைக்கும் பண்டங்களின் வெளிப்படுகைக்குமுள்ள நுட்பமான தொடர்பு நிர்ணயம் செய்கிறது. இத் தொடர்பினை உற்பத்தி சம அளவுக் கோட்டை அல்லது சம அளவு உற்பத்திக் கோட்டைப் பயன் படுத்தி வரைபடத்தில் காட்டமுடியும். இச் சம அளவுக் கோட்டி லுள்ள ஒவ்வொரு புள்ளியும் ஒரே அளவு உற்பத்தியைக் காட்டு வதால், காரணித் தொகுப்புகள் சம திறன் பெற்றவை என்பதை இப் புள்ளிகள் குறிக்கின்றன. இவற்றில் எந்தப் புள்ளியில் உச்சமான ஆதாய நிலை ஏற்படும் என்பது பயன்படுத்தப்படும் காரணிகளின் விலையைப் பொறுத்ததாகும். மூலதனம் ஏராளமாயும் மலிவாயு முள்ள நாடுகளில், மூலதனம் அதிகம் வேண்டிய பண்டங்களைக் குறைந்தபட்ச செலவில் (அல்லது உயர்ந்தபட்ச சிக்கனத்தில்) உற்பத்தி செய்யமுடியும். மாருக, உழைப்பு ஏராளமாயும் மலிவாயும் உள்ள நாடுகளில் அதிக உழைப்பைப் பயன்கொள்ள வேண்டிய பண்டங்களை மலிவாக உற்பத்தி செய்யமுடியும்.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்

Caves, Richard E., 'Trade and Economic Structure.' Cambridge, Mass. : Harvard University Press, *1960*-ல் பதிப்பித்தது. பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டின் நவீன விளக்கத்தையும், அக் கோட்பாட்டு வளர்ச்சியின்போது தோன்றிய தத்துவப் பிரச்சினைகளையும் இந் நூல் விரிவாய் ஆய்கிறது.

Haberler, G., 'A Survey of International Trade Theory.' Princeton, N. J. : International Finance Section, Department of Economics, Princeton University, *1961*-ல் பதிப்பித்த திருத்தப் பதிப்பு. அதிகாரம் 3 பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டிற்கு அண்மையில் விளக்கம் தந்த ஓலின் அவர்களின் கருத்தையும் இன்னும் இதர நவீன கருத்துகளையும்பற்றித் திறனாய்வு செய்து மதிப்புரை தருகிறது.

Kindleberger, Charles P., 'International Economics' 3ஆம் பதிப்பு. Homewood, Ill. : Richard D. Irwin, Inc. *1963*-ல் பதிப் பிக்கப்பட்டது. காரணி விகிதாசாரக் கோட்பாட்டையும், இன்னும் பல்வேறு வகையில் தராதரச் சிறப்புக் கோட்பாட்டையும் 5ஆம் அதிகாரம் அளிக்கிறது. 6ஆம் அதிகாரம் 'விருப்பறிவிப்பு' கோடுகளைப் ('offer' curves) புகுத்தி, தேவை நிலையிலிருந்து

பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டை ஆய்கிறது. இக் கோடுகள் எவ்வாறு பெறப்படுகின்றன என்பதைப் பிற்சேர்க்கை C காட்டுகிறது.

Ohlin, Bertil, 'Interregional and International Trade.' Cambridge, Mass. Harvard University Press, 1933-ல் பதிப்பிக்கப் பட்டது. 1ஆம் பாகம், பன்னாட்டு வாணிபத்தின் பொதுச் சமநிலைக் கோட்பாட்டை ஆசிரியர் விளக்கும் சாரத்தைக் கொண்டுள்ளது. பிற்சேர்க்கை-1, கணக்கியல் வடிவில் அதை விளக்கம் செய்கிறது.

Robinson, Romney, 'Factor Proportions and Comparative Advantage,' Quarterly Journal of Economics, LXX (May-August, 1956 வெளியீடு). காரணி விகிதாசார ஆய்வைக் கடுமையாகத் தாக்குகிறது.

Snider, Delbert A., 'Introduction to International Economics', மறுபதிப்பு. Homewood, Ill.: Richard D. Irwin, Inc., 1963-ல் பதிப்பிக்கப்பட்டது. 3, 4ஆம் அதிகாரங்கள் பன்னாட்டு வாணிபத்தின் நவீன கோட்பாட்டைச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் விளக்குவதோடு, சம நோக்குக் கோடுகளை இவ் ஆய்வில் பயன்படுத்துவதைப்பற்றியும் கூறுகிறது.

7. மாறுதல்கள்; ஒரே தன்மையற்ற காரணிகள்; போக்குவரத்துச் செலவுகள்

பன்னாட்டு வாணிபத்தின் காரணி விகிதாசாரக் கோட்பாட்டை மிக எளிமையானதொரு 'மாதிரியா'கக்கொண்டு இதுவரை விளக்கினோம். இரண்டு நாடுகள், இரண்டு காரணிகள், இரண்டு பண்டங்களைமட்டும் நமது ஆய்விற்கு எடுத்துக் கொண்டோம். நாம் எடுத்துக்கொண்ட காரணிகள் ஒரே தன்மையுடையனவாக அனுமானித்துக்கொண்டோம்—அதாவது, குறிப்பிட்டதொரு காரணியின் அலகுகள் அனைத்தும் ஒரே உற்பத்தித் திறன் கொண்டவையென்றும், எனவே, அலகுகளை ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்துவதால் உற்பத்தி அளவு மாருமல் அப்படியே இருக்குமென்றும், ஒரு நாட்டிலுள்ள அலகுகளைப்போலவே மற்றொரு நாட்டின் அலகுகள் அதே உற்பத்தித் திறன் கொண்டவை அல்லது அதே பொருளாதாரத் தன்மை கொண்டவை என்றும் அனுமானித்தோம். மேலும், இக் காரணிகள் ஒரு நாட்டிற்குள்மட்டுமே இடம்பெயரக்கூடியவை என்றும், நாடுவிட்டு நாடு இடம்பெயர இயலாதவை என்றும் அனுமானித்துக்கொண்டோம். அதோடு, உற்பத்திசார் பலன்கள் எங்கும் ஒரே மாதிரி இருப்பதாகவும் வைத்துக் கொண்டோம்; அதாவது, குறிப்பிட்டதோர் உற்பத்திசார் பலன் மேற்கொள்ளும் பல்வேறு செய்முறைகளை எந்த நாட்டு உற்பத்தி யாளர்களுமே பயன்கொள்ளமுடியும் என்று அனுமானித்துக் கொண்டோம். மேலும், கணக்கியல் கூற்றில் 'தன்மையில் முதல் தரமான ஒப்புமையுடையவை' எனப்படும் உற்பத்திசார் பலன்கள் ஒன்றைமட்டுமே நாம் விளக்கினோம். இது, காரணிகளும் உற்பத்தி அளவும் ஒரே விகிதாசாரத் தொடர்புடையன என்பதைக் குறிக்கிறது. இறுதியாக, நிறைவுப் போட்டியின் எடுகோளைக் கொண்ட நிலையில் ஆய்ந்ததால், போக்குவரத்துச் செலவு இருப்பதையே புறக்கணித்துவிட்டோம்.

காரணிகளின் விகிதாசாரக் கோட்பாட்டின் அடிப்படையான அம்சங்களைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்கு மிக எளிமையாக ஆக்கப்பெற்ற எடுத்துக்காட்டு அவசியம். முதலாவது, வெவ்வேறு காரணிப் பேர்களின் ஆதாரமான பங்கையும், அக் காரணிப் பேர்களின் தராதர விலை வித்தியாசங்களின் பங்கினையும் புலப் படுத்துவது அவசியம். இரண்டாவது, உற்பத்திக் காரணிகளை வெவ்வேறு தொழில்நுட்ப முறைகளில் தொகுப்பதன் விளைவுகளைப் (வெவ்வேறு உற்பத்திசார் பலன்களை) புலப்படுத்துவதும் இன்றி யமையாதது. நாட்டிற்கு நாடு காரணிப் பேற்றிலுள்ள வேறுபாடுகள், வெவ்வேறு உற்பத்திசார் பலன்கள் இருப்பது ஆகிய இரண்டு அடிப்படைகளில்தான் பண்டங்களில் விலைகள் நாட்டிற்கு நாடு வித்தியாசமாக அமைகின்றன. ஒரு நாடு எப் பண்டங்களை ஏற்றுமதி செய்யும், எவற்றை இறக்குமதி செய்யும் என்பதை இவ் விலை வேறுபாடுதான் நேரடியாகத் தீர்மானிப்ப தாகும்.

பன்னாட்டு வாணிபத்தை இயக்கும் சக்திகள்பற்றிய நமது ஆய்வு உண்மைக்கு ஏற்றதாயும், எனவே, மேலும் சிக்கல்கள் கொண்டதாயும் இருப்பதற்காக நாம் கொண்ட எளிமையான எடுத்துக்காட்டின் அனுமானங்களைத் தளர்த்துவதற்கு இதுதான் தருணம். முதலில் குறிப்பிட்டதோர் உற்பத்திக் காரணியின் அலகுகளெல்லாம் எங்கும் ஒரே தன்மையுடையன என்னும் அனுமானத்தை எண்ணிப் பார்ப்போம்.

உற்பத்திக் காரணிகளின் விளக்கம்

உற்பத்திக் காரணிகளின் ஒரே தன்மையுடையன என்ற எடுகோளிற்கான அவசியம் வெளிப்படையானது. ஏனெனில், ஓர் உற்பத்திக் காரணியின் அலகுகள் அனைத்தும் எல்லா இடங்களிலும் ஒரே உற்பத்தித் திறனுடையவைகளாய் இல்லா விட்டால், காரணியின் உள்ளிடுகைகளையும் விலைகளையும்மட்டும் கொண்டு பண்டங்களின் விலைகளை விளக்க இயலாது. அப்போது, உற்பத்திக் காரணியின் பண்புகள்போன்று ஏதாவதொன்றைப் புகுத்தியிருக்கவேண்டும். குறிப்பிட்டதொரு காரணித் தொகுப்பு எப்பொழுதும் ஒரே உற்பத்தி அளவை விளைவிக்காவிட்டால், விளைச்சல் (அதோடு உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் விலையும் செலவும்) காரணி உள்ளிடுகையின் அளவாலும் செலவாலும் மட்டுமன்றி, அவற்றின் இயல்புகளாலும் நிர்ணயிக்கப்படுவதா யிருக்கும்.

உற்பத்திக் காரணிகளை நிலம், உழைப்பு, மூலதனம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளாகக்கொண்டு விளக்கினோம். ஆனால்,

உண்மையில் இக் காரணிகளில் ஒன்றில்கூட எல்லா அலகுகளும் ஒரே தன்மையுடையன அல்ல என்பது வெளிப்படை. உதாரணமாக, எல்லா நிலங்களும் ஒரே மாதிரி வளத்தையுடையன அல்ல; அவற்றில் விளையும் பயிர் வகைகளும் ஏராளம். கைதேர்ந்த தொழிலாளி எளிதாகச் செய்யக்கூடிய வேலையைக் கூட அதில் பயிற்சி பெறாத் தொழிலாளியால் செய்ய இயலாது. அதேபோல் தேர்ச்சி பெற்ற மருத்துவ நிபுணருக்கு, வேறு தொழிலில் எவ்வளவுதான் கைதேர்ந்தவராக ஒருவர் இருந்தாலும் அவர் ஈடாக முடியாது.

எனவே, உற்பத்திக் காரணிகளின் தன்மையிலுள்ள வேறுபாட்டையும் நாம் கணக்கிடவேண்டும். அவ்வாறாயின், ஒவ்வொரு காரணியிலும் சேர்க்கப்படும் அலகுகள் ஒரே உற்பத்தித் திறன் கொண்டவையாயிருக்கும் வகையில் காரணிகளின் தன்மைக்கேற்பப் பல இனங்களில் அவற்றைப் பாகுபடுத்துவதுதான் சிறந்தது. ஆனால், வாதப் பொருத்தத்திற்காக அவ்வாறு செய்யும் போது, பொதுமையான முடிவு கொண்ட விளக்கம் தடைப்பட்டு விடுகிறது. உற்பத்தித் திறனும் வளமும் ஒரே மாதிரியாக இருக்கின்ற அடிப்படையில் நிலத்தைப் பாகுபடுத்தினால் நிலம் பல்வேறு உப காரணிகளாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கும். அதேபோல் உழைப்பின் தன்மையையும் உற்பத்தித் திறனையும் கொண்டு உழைப்பைப் பல்வேறு காரணிகளாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பாகுபடுத்தினால் உற்பத்திக் காரணிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் பெருகிவிடும். ஆனால், உற்பத்தி சார் பலன் ஒவ்வொன்றும் உண்மையிலேயே பயன்படுத்தப்பட்ட காரணிகளைமட்டும்தான் உள்ளடக்குகிறது. அவ்வாறின்றி, சிறிதளவு வித்தியாசமுள்ள காரணிகளைப் பல்வேறு வகையில் தொகுத்து உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களைப் பொறுத்தவரை பன்றாட்டுச் சிறப்புத் தேர்ச்சிபற்றிய விளக்கம் பாதிக்கப்பட்டு விடுகிறது. அப்போது குறிப்பிட்டதொரு சிறப்புத் தேர்ச்சி, குறிப்பிட்டதோர் உற்பத்திசார் பலனைமட்டும் விளக்குவதாக ஆகிவிடும். காரணிகளைத் தனிச் சிறப்பானதொரு வகையில் தொகுக்க வேண்டியிருக்கும் பண்டங்களைப் பொறுத்தவரை, அவற்றிற்குத் தேவையான காரணிகளைக் குறிப்பாக நாம் புலப்படுத்த வேண்டியுள்ளது.[1] இருந்தபோதிலும், ஒரு கோட்பாடு பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால், சில பொதுவான அம்சங்களைப் பொறுத்தவரை அவற்றைக்கொண்டு நாம்

[1] கனிப்பொருள்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை, நாம் அவ்வாறு செய்வது அவசியம். உதாரணமாக, கனிப்பொருளான நிக்கலை உற்பத்திசெய்யவேண்டுமானால், நிக்கல் கலந்த தாதுப்பொருள் படிவங்கள் இருக்கவேண்டும்.

பொதுமைப்படுத்திக் கூறவேண்டும். வாதப் பொருத்தத்தையே நாம் வலியுறுத்தினால் காரணிகளை வரையறை செய்ய இயலாது; அப்போது பயனுள்ள பொதுமைகள் அல்லது கோட்பாடுகள் இருக்கவும் முடியாது. எனவே, நடைமுறைக்கேற்ற ஏதாவதொரு முடிவை இதில் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

குறிப்பிட்ட காரணி வேறுபாட்டிற்குப் பொருத்தமான பல்வேறு பொதுமை நிலைகளைக்கொண்டு விளக்குவதும் சாத்திய மாகலாம். உதாரணமாக, ஒரு நாடு பிற நாடுகளைக்காட்டிலும் கொண்டுள்ள சாதகமான நிலையை, ரூர் பகுதிகள் நிலக்கரி, எஃகு, கனரகத் தொழில் பண்டங்கள் ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சி செய்வதுபோன்று பண்டங்களைமட்டும் கொண்டு விளக்கு வதாகவோ, அல்லது ஆஸ்திரேலியா கோதுமையில் சிறப்புத் தேர்ச்சி செய்வதற்கு ஆதாரமான காரணிப் பேற்றிலும் காரணி விலையிலுமுள்ள மிகப்பெரும் வேறுபாட்டைமட்டும் கொண்டு விளக்குவதாகவோ வைத்துக்கொண்டால், நிலம், உழைப்பு, மூலதனம் என்ற முப்பிரிவு கொண்ட காரணிகளைக்கொண்டே நாம் திருப்திகரமாக விளக்க முடியும். மாறாக, குறிப்பிட்ட பண்டங்களை அல்லது ஒரேவகைக் காரணிப் பேற்றினைக் கொண்ட நாடுகளை வைத்துக்கொண்டு நாம் விளக்குவதானால், காரணிகளின் தன்மைகளிலுள்ள வேறுபாடுகளை நாம் ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப அவற்றைப் பல்வேறு இனங்களாகப் பாகு படுத்தவேண்டும்.

எனினும், பல சமயங்களில் காரணிகளைப் பல்வேறு உப காரணி இனங்களாகப் பாகுபடுத்தாமல், ஒருசில இனங்களாகவே கொண்டு அறிவுக்குகந்த வகையில் சரியான முடிவுகளையே நாம் மேற்கொள்ள வேண்டியதாயுள்ளது. இப்போது நிலத்தை எண்ணிப் பார்ப்போம்.

நிலம் அல்லது இயற்கை வள சாதனங்கள்

நிலம் என்று நாம் கூறும்போது, இயற்கை வளங்கள் உற்பத்தியில் கொண்டுள்ள பங்கினைக் குறிப்பிடுகிறோம். எனவே, இயற்கை வளங்கள் பல வகையுண்டு என்பது வெளிப்படை. இயற்கை வளத்தினைக் குறிப்பாகப் புலப்படுத்த வேண்டுமானால், கனிப் பொருள்கள் அல்லது தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்களை உதாரணமாகக் கொள்ளலாம். எந்த வகைக் கனிப் பொருளை உற்பத்தி செய்யவேண்டுமானாலும், அதற்கு அக் கனிப் பொருளுள்ள படுகைகள் அவசியம். மூலதனமும் உழைப்பும் உற்பத்தி செய்வதற்கு அவசியமான காரணிகள்தாம். எனினும்,

நிக்கல், செம்பு ஆகிய கனிப் பொருள் இல்லாத இடங்களில் அவற்றை உழைப்பையும் மூலதனத்தையும்கொண்டு உற்பத்தி செய்ய இயலாது.

கனிப் பொருள்கள் எல்லா நாடுகளிலும் கிடைப்பதில்லை; அவ்வாறு கிடைத்தாலும், ஒரே அளவில் அல்லது தன்மையில் கிடைப்பதில்லை. உலகிற்குத் தேவையான நிக்கலின் பெரும் பகுதி ஒன்டாரியோவிலும், நியூ காலிடோனியாவிலும்தான் கிடைக்கிறது. நியூகாலிடோனியாவிலும் பின்லாந்தின் வட பகுதிகளிலும் ஓரளவு நிக்கல் கிடைப்பது உண்மையே. செம்புக் கனிப் பொருள் பெரும்பாலும் ஒன்டாரியோ, பெல்ஜியன் காங்கோ ஆகிய இடங்களிலும் அமெரிக்காவிலும்தான் கிடைக்கிறது. இரும்புக் கனிப்பொருள் பொதுவாக எல்லா நாடுகளிலுமே கிடைக்கிறதெனினும், சோவியத் ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் தான் அது ஏராளமாய் உள்ளது. ஆனால், அமெரிக்காவின் இரும்புச் சுரங்கங்கள் இப்போது வெறுமையாகிக்கொண்டே வருவதால், இரும்புக் கனிப்பொருளைத் தென் அமெரிக்காவிலிருந்தும் கனடாவிலிருந்தும் அது இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

இயற்கை வளங்களில் காடுகளும் முக்கியமானவையாகும். எல்லா நாடுகளிலும் இவை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. உதாரணமாக, பல்வேறு தொழில்களுக்குத் தேவையான ஃபிர் (fir), ஸ்புருஸ் (spruce) போன்ற மென்மையான மரங்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் கொலம்பியா, அமெரிக்காவின் வட மேற்குப் பகுதி ஆகிய இடங்களில்தான் ஏராளமாக உள்ளன; மேலும், அலாஸ்காவிலும் சைபீரியாவிலும் இவை கேட்பாரற்று மலிந்து கிடக்கின்றன. காகிதம் செய்வதற்கேற்ற பிளைவுட் மரங்கள் கனடா, ஸ்கான்டிநேவியாவின் வட பகுதியிலுள்ள நாடுகள், அமெரிக்காவின் தென் மாநிலப் பகுதிகள் ஆகிய இடங்களில் ஏராளமாக உற்பத்தியாகின்றன. (காகிதத்திற்கு இப்போது கிராக்கி வளர்ந்துகொண்டே இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.) தொழில் துறைகளுக்கு அவ்வளவாகப் பயன்படாத உறுதியான மரங்கள் மத்திய அமெரிக்கா, அமேசான் நதிப் பள்ளத்தாக்கு, மத்திய ஆப்பிரிக்கா, மலேயா ஆகிய இடங்களில் ஏராளமாக உள்ளன.

மற்றும் ஓர் இயற்கை சாதனம் மீன்வளம்—இது பொதுவாக எல்லா நாடுகளிலுமே உள்ளது. எனினும், வட கடலின் டாக்கர் திட்டு, நியூ ஃபவுன்ட்லாந்தின் திட்டு, பசிபிக் கடலின் வட மேற்குத்

திட்டிலுள்ள சால்மோன் மீன் பிடிப்புத் திட்டு ஆகியவைதாம் மீன் பிடிப்புத் தொழிலில் மிகப் பிரபலியமான இடங்கள். ஜப்பான் நாட்டவரின் உணவுத் தேவை அந் நாட்டைச் சூழ்ந்துள்ள கடல் பகுதியிலிருந்து கிடைக்கும் மீன்களால் பல்லாண்டுகளாகவே ஓரளவு நிறைவு செய்யப்பட்டு வந்துள்ளது. தற்போது இக் கடல் பகுதி அந் நாட்டவரின் ஏற்றுமதிக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

இயற்கைச் சாதனங்களில் நீர் வளமும் முக்கியமானது. இது சோவியத் ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, கனடா, சீனு ஆகிய நாடுகளில் பெருமளவில் உள்ளது. நீர்வளம் அதிகமாக இருந்தபோதிலும், அதைப் பயன்கொள்ள முடியாத நிலை ஏற்படுவதும் உண்டு. பெரும்பாலும் நீர் வளமிகுந்த பகுதிகள் மக்கள் வாழும் இடங்களிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால் அவற்ருல் பயனில்லாது போய்விடுகிறது. இவ்வாறு பயன்படுத்த இயலாத நீர் வளமிக்க பகுதிகள் தென் அமெரிக் காவில் ஏராளமாக உள்ளன.

இயற்கைச் சாதனங்களிலெல்லாம் பெருமளவில் உள்ளதும் எல்லா நாடுகளிலும் காணப்படுவதுமான சாதனம் நிலம். இருப் பினும், உலகின் மொத்த நிலப்பரப்பில் மிகச் சிறிய பகுதிதான் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகிறது. அதாவது, உலகின் மொத்த நிலப்பரப்பளவான 52 மில்லியன் ஏக்கரில் 3.7 மில்லியன் ஏக்கர் நிலத்தில்தான் இன்று சாகுபடி நடைபெறுகிறது. அல்லது மொத்தத்தில் சுமார் 7 சதவீத நிலம்தான் விவசாயத்திற்குப் பயன் படுகிறது. எஞ்சிய பகுதியில் 4.2 மில்லியன் ஏக்கர், நீர் வசதியற்ற தாகவோ அல்லது நீர் எப்போதும் தேங்கிக் கிடக்கும் சதுப்பு நிலமாகவோ உள்ளது. இந் நிலப்பகுதியில் சாகுபடி செய்ய வேண்டுமானுல், நீர்ப்பாசன வசதிக்கென்றும், நீரைக் கழிக்கும் வடிகால்கள் அமைப்பதற்கென்றும் ஏராளமான பணம் செலவிட வேண்டும். மேலும், எஞ்சியுள்ள பகுதியில் 2·1 மில்லியன் ஏக்கர் மேய்ச்சல் நிலமாகும். இப் பகுதிகளெல்லாம் சாகுபடிக்கேற்ற பகுதிகள் என்று கணக்கிட்டால்கூட, மொத்தத்தில் 20 சதவீத நிலப்பகுதிதான் விவசாயப் பகுதியாகிறது. எஞ்சிய நிலப்பகுதி களெல்லாம் மலைப் பகுதியாகவும், பாலைவனமாகவும், சதுப்பு நிலமாகவும், கடுங்குளிர்ப் பகுதிகளாகவும் உள்ளன. இவற்றில் ஒரு சிறு பகுதிமட்டும்தான் மரங்கள் வளர்ப்பதற்கும் கால்நடை மேய்ச்சலுக்கும் உகந்ததாகும்.

பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியின் ஆய்வில் நிலத்தைச் 'சாகுபடி நிலம்' என்று பொதுவாகப் பாகுபடுத்தினுல்மட்டும்

போதாது. நிலவளத்திலும் தன்மையிலும்மட்டுமன்றி, நிலத்திற்குக் கிடைக்கும் மழை, சூரிய ஒளி, ஈரக் காற்று ஆகிய மூன்றையும் உள்ளடக்கும் சீதோஷ்ண நிலையிலும் வேறுபாடுகள் உள்ளன. இவை அனைத்தும் எல்லாச் சாகுபடி நிலங்களிலும் ஒரே விதமாக இருப்பதில்லை. இவற்றில் சாகுபடி செய்யும் பயிருக்கேற்பப் பல்வேறு பொருத்தமான நிலைகள் இருக்கவேண்டும். எனவே, நமது ஆய்வின் குறிக்கோளுக்கேற்பச் சாகுபடி நிலத்தை மேலும் பல உபகாரணிகளாகப் பிரிக்க இயலும். அவ்வாறு எளிதாகப் பாகுபடுத்திய விவரம் வருமாறு :

1. நீர் வளமும் நில வளமும் மிகுந்த மிதவெப்ப மண்டலம்—இம் மண்டலத்தில்தான் உலகின் தானிய உற்பத்தியில் முக்கிய இடம் பெற்றுள்ள பகுதிகள் அமைந்துள்ளன.

2. மத்தியதரைக் கடல் பகுதி—இப் பகுதி மிகுந்த வெப்பமும் குறைந்த மழையும்கொண்டு மிகுதியான சூரிய ஒளியுடன் விளங்குகிறது. இது வளமிக்க பகுதி. திராட்சைபோன்ற ரச வகைப் பழங்களும் ஆலிவும் இங்கு விளையும்.

3. அயன மண்டலத் தாழ் நிலங்கள்—கரும்பு, வாழை, அன்னசி, கொக்கோ, தென்னை ஆகியவை இப் பகுதியில் முக்கியமாகப் பயிர் செய்யப்படும்.

4. அயன மண்டலத்தின் மித உயரப் பகுதிகள்—ஆண்டு தோறும் பரவலான மழையுடன் வெதுவெதுப்பான காலநிலையைப் பெற்ற இப் பகுதிகள் காப்பி, தேயிலை முதலிய பயிர்களுக்கு ஏற்றவை.

நமது ஆய்விற்கு வேண்டிய பொதுமைகளைப் புணர்வதற்கு இந் நான்கு விதச் சாகுபடி நிலங்களோடு, மேய்ச்சல் நிலம், புல்வெளி ஆகியவற்றையும் சேர்த்துக்கொண்டால் போதும். ஆனல், குறிப்பிட்டதொரு பயிரை விளைவிப்பதில் நாட்டிற்கு நாடு ஏற்படும் தராதரச் செலவை நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமானல், மேற்கூறியதொரு வகை நிலத்தின் தன்மைகளிலுள்ள வித்தியாசத்தையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, நமது ஆய்வின் நோக்கத்திற்கேற்ப ஒன்று, இந் நான்கு வகை உபகாரணிகளுக்குள் நிலத்தைப் பாகுபடுத்திக் கொள்ள வேண்டும்; அல்லது, ஒரு வகை நிலத்திற்குள் இருக்கக்கூடிய தன்மை வேறுபாடுகளையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். பொதுமைகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமானல், உபகாரணிகளுக்குள் இருக்கக்கூடிய வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிடும் வகையில், காரணி விகிதாசார விளக்கத்தை

அமைத்துக் கொள்ளும் முறையில், இவ் இரண்டில் முதல் வழியை மேற்கொள்வதே சிறந்தது.

உழைப்பு

உழைப்பைக் குறைந்தபட்சம் நான்கு வகை உபகாரணிகளாகப் பாகுபடுத்தக்கூடும்.

1. தொழில் நுட்ப, நிர்வாக உழைப்பு—இவ்வகை உழைப்பிற்குத் தரமான அறிவுமட்டுமன்றி, நீண்ட காலப் பயிற்சியோ அல்லது அனுபவமோ தேவை. பொதுவாக, பொறியாளர்கள், பெரிய ஊழியப் பணியாளர், கட்டடச் சிற்பிகள், விஞ்ஞானிகள், உற்பத்தித் தளவாட மேற்பார்வையாளர், தொழில் நிர்வாகிகள், கணக்கர்கள் (accountants) ஆகிய பல்வேறு தொழில் நுட்பப் பணியாளர்களை இவ் வகையில் சேர்க்கலாம்.

2. திறம்பெற்ற உழைப்பு—இவ் வகை உழைப்பிற்குக் கூர்மையான அறிவு, கைத்திறன், வேலைப்பாட்டு நுட்பம், இன்னும் இதுபோன்ற தரமான பண்புகள் பொருந்தியிருக்கவேண்டும். அதோடு, சிறிது காலத் தொழில் பயிற்சியும் அவசியம். அச்சகர்கள், நீர்க் குழாய் சரிப்படுத்துவோர், மின் தொழில் செய்வோர், நெசவுத் தறிகள் பொருத்துவோர், வரைவாளர் (draftsmen), வாணிபத் திறம் கொண்டோர் ஆகியோர் இவ் வகை உழைப்பினராவர்.

3. குறை திறன் உழைப்பு (Semi-skilled labour)—இவ் வகை உழைப்பிற்கும் முந்திய திறம் பெற்ற உழைப்பிற்கும் பெரிய வேறுபாடு கிடையாது. எனினும், அறிவுக் கூர்மையும் அதோடு கூடிய இதர பண்புகளும் அவ்வளவாகத் தேவைப்படாத பணிகளை மேற்கொள்வோரை இவ் வகை உழைப்பு குறிப்பிடுகிறது. பலவகை எந்திரங்களை இயக்குவோர், கார்-லாரி ஓட்டுவோர், டிராக்டர் இயக்குவோர், தறி இயக்குவோர், மரம் அறுப்போர் ஆகியவர்கள் இவ் வகை உழைப்பினைக் கொண்டவராவர்.

4. பயிற்சியற்ற உழைப்பு—இவ் வகை உழைப்பிற்குத் தனிப் பயிற்சியே தேவை இல்லை. சாதாரணக் கூலியாட்கள், தெரு சுத்தி செய்வோர், விநியோகஸ்தர் (delivery men) ஆகியோர் இவ் வகை உழைப்பாளர் ஆவர்.

இப் பாகுபாட்டின்படி பிந்திய வகை உழைப்பாளிகள் முந்திய வகை உழைப்பாளிகளோடு போட்டியிட முடியாத நிலையில் இருப்ப

தோடு, அவர்களைவிட அதிக எண்ணிக்கையில் இருப்பர். முந்திய வகை உழைப்பிற்கு வேண்டிய பண்புகள் எல்லோரிடமும் இராது; அதோடு, அதற்கு வேண்டிய நீண்டகாலப் பயிற்சியைப் பெறுவதற்குத் தேவையான பண வசதியும் சிலரிடம்தானிருக்கும். ஆகவே, பயிற்சிக்கும் திறனுக்குமேற்ப ஊதியமும் உயர்வாயிருக்கும். இதற்கெல்லாம் விதிவிலக்குகளும் உண்டு. இவ்வாறு பாகுபடுத்திய உழைப்பு வகைகள் எல்லா நாடுகளிலும் உண்டு. இவற்றில் ஒருவகை உழைப்பாளிகள் பிறிதொருவகை உழைப்பிற்குச் செல்வது எளிதன்று; அவ்வாறு செல்வதாயின் படிப்படியாகவும் சிறிது காலம் கழித்தும்தான் செல்ல முடியும். எனவே தான், இவர்கள் போட்டியில்லா வகையினராகக் கருதப்படுகின்றனர்.

மூலதனம்

தொழிற்சாலைபோன்ற உற்பத்தித் துறைகளில் இயற்கைச் சாதனங்கள், உழைப்பு ஆகியவற்றோடு மூலதனமும் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறு மூலதனத்தைச் சேர்த்துப் பயன்படுத்தும்போது, மேற்கூறிய நான்குவகை உழைப்பாளிகளுமே அத் தொழிலுக்குத் தேவைப்படலாம். எந்த விகிதாசாரத்தில் இவ் வகைத் தொழிலாளிகள் வேலைக்கமர்த்தப்படுவர் என்பது, அத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருளின் தன்மையைப் பொறுத்தது. உழைப்பாளி மூலதனத்தைக்கொண்டு வேலை செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு தொழிலுக்குத் தேவைப்படும் மூலதனம் உழைப்பைப்போன்றே பலவகைப்படும். மூலதனம் என்னும் சொல், கட்டடங்கள், எந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றை மட்டுமன்றி, தட்டெழுத்து எந்திரங்களையும், அலுவலக சாதனங்களையும், ஏன் ஒரு வேளை வியாபாரப் பொருள்களையும்கூட உள்ளடக்கும். வேறுவிதமாகக் கூறின், மூலதனம் என்பது கண்ணுக்குப் புலனான எண்ணிலடங்கா உற்பத்தியாளர் பொருள்களின் வடிவில் உள்ளது. ஒவ்வொரு முதற்கருவிப் பொருளும் குறிப்பிட்டதோர் உற்பத்திப் பணியைச் செய்வதற்கேற்றதாய் அமைக்கப்படுகிறது. ஒருவேளை துணைச் சாதனங்கள்கூட அவ்வாறே குறிப்பிட்டதொரு தொழிலக வேலைக்கென்று தனித் தன்மையுடன் உருவாக்கப்படுவதாகக் கூறலாம். ஒரே தொழிலிலுள்ள இரண்டு ஆலைகள் பயன்கொள்ளும் குறிப்பிட்டதொரு முதற்கருவிப் பொருளை எடுத்துக்கொண்டால், அதன் அலகுகளனைத்தும்(சிறப்பானதொரு காரியத்திற்காகச் செய்யப்பட்டவை தவிர) ஒரே மாதிரியாகவோ அல்லது பெரும்பாலும் ஒத்த தன்மையுடையனவாகவோ இருக்கும் எனக் கூறலாம்.

'நான்கு வகை' இயற்கைச் சாதனங்களுக்கும் உழைப்புக்கு மேற்ப முதற்கருவிப் பொருள்களும் வேறுபடுவதாயின், உற்பத்தி செய்ய உதவும் வகையில் அவை அடைந்துள்ள எண்ணற்ற சிறப்புத் தேர்ச்சியினைக்கொண்டு பார்க்குமிடத்து, நாம் தடுமாற்றம் அடையக்கூடிய நிலைக்கு அவற்றைக் கணக்கிலடங்கா உப காரணிகளாக நாம் பாகுபடுத்த வேண்டியதிருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக, கடைசல் பொறிகளில் பலவகை இருப்பது போல், ஒரே மாதிரியான வேலைக்குப் பயன்படும் பல்வேறு துணைச் சாதனங்களை எண்ணிப் பார்த்தால் இவ் உண்மை விளங்கும். அவ்வாறுயின், உழைப்பின் வகைகளில் உள்ளதைப்போல் முதற் கருவிப் பொருள்களின் வகைகளிலும் போட்டியிட முடியாத தன்மையில் பற்பல இனங்கள் இருப்பது தோன்றும். உழைப்பில் நான்கு வகை இருப்பதாகமட்டும் கொண்டோம். ஆனால், முதற் கருவிப் பொருள்களின் வகைகள் இதைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையுடையன. ஒவ்வொரு வகை முதற்கருவிப் பொருளின் அளிப்பு அளவும் அதற்குப் போட்டியாகவும், அதை ஒத்ததாயுமிருக்கின்ற ஏனைய வகை முதற்கருவிப் பொருளின் போட்டியைப் பொறுத்ததாகும். குறிப்பிட்டதொரு வகை முதற் கருவிப் பொருளை எடுத்துக்கொண்டால், அதன் இறுதிநிலை உற்பத்தி ஆக்கத்தைக்கொண்டு அதனுடைய விலை நிர்ணயிக்கப் படுகிறது எனலாம்.

மூலதனம் என்பது உற்பத்தி செய்யப்பட்ட சாதனம் என்ற முறையில் உழைப்பு, இயற்கைச் சாதனங்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுகிறது. ஓர் எந்திரத்தையோ அல்லது துணைச் சாதனத் தையோ உற்பத்தி செய்வதற்கென்று ரொக்கப் பணத்தை அல்லது பண மூலதனத்தைச் (money capital) செலவிட்டு, ஏற்கெனவே தோன்றியுள்ள முதற் கருவிப் பொருள்களோடு உழைப் பையும் இயற்கைச் சாதனங்களையும் தொகுப்பதன் வழியாக, புதிய முதற் கருவிப் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. முதற்கருவிப் பொருள்களை விரைவாக உருவாக்க முடியும். உதாரணமாக, ஒரு பெரிய தொழிலகக் கட்டடத்தையோ, அல்லது பெட்ரோல் சுத்தி செய்யும் தொழிற்சாலையையோ இரண்டு மூன்று வருடங் களில் அமைத்துவிடக்கூடும். புலனாதொருவகை முதலீட்டி லிருந்து கிடைக்கும் இலாபத்தை, அம் முதலீட்டிற்கான செலவினை வைத்து இத்தனை சதவீதம் என்று கணிக்கலாம். நிறைவுப் போட்டி நிலையை அனுமானித்துக்கொண்டால், குறிப்பிட்ட தொருவகை முதலீட்டிலிருந்து கிடைக்கும் இலாப வீதம் பிறிதொரு வகை முதலீட்டிலிருந்து கிடைக்கும் இலாப வீதத்திற்குச் சரிசமமா

யிருக்கும்.[2] புலனுன எல்லாவகை முதலீடுகளின் இலாப வீதமும் சரிசமமாயிருப்பதற்குரிய, அல்லது மூலதனத்திற்கான அளிப்பு விலே ஒரேமாதிரி இருப்பதற்குரிய வலிமையான சக்தி உண்டு.

இந்த அளிப்பு விலே எதற்காகக் கொடுக்கப்படுகிறது? இந்த வினுவிற்கு விடையளிக்க வேண்டுமாயின், முதலில் இயற்கைச் சாதனங்களின் (அல்லது உழைப்பின்) அளிப்பு விலேயை ஆய்வோம். இக் காரணிகள் ஒவ்வொன்றும் 'மூலமான' (original) அதாவது தொடக்கத்திலிருந்தே இருக்கின்ற காரணிகளாகும். இவை தாஞகவே இருக்கின்றபடியால் இவற்றை யாரும் உற்பத்தி செய்யவேண்டியதில்லே.[3] எனவே, தாஞகவே தோன்றியுள்ளவொன்றைத் திரட்டுவதைப்போலன்றி, உற்பத்தியில் பயன்படுத்துவதற்கென்று உற்பத்தி செய்யப்படும் பொருளே—முதற் கருவிப் பொருளே—பெறவேண்டுமாயின், அதற்கு விலே செலுத்துவது அவசியமாகிறது. ஏனைய காரணிகளேப் போலன்றி, குறிப்பிட்டதொரு வகை முதற்கருவிப் பொருளே உற்பத்தி செய்ய வேண்டுமாஞல் அதற்கென்று முதலீடு அத்தியாவசியமாகிறது. நீண்ட காலத்தை எடுத்துக்கொண்டால், யாராவது நுகர்ச்சியைக் கைவிட்டு, அதன்மூலம் சேமித்து, அச் சேமிப்பை முதலீட்டிற்கென்று கொடுத்தால்தான் முதலீடு நடைபெற முடியும்.

சேமிப்பு என்பது, தொடக்கத்தில் பணத்தின் வடிவில் அல்லது எவ்வகை முதலீடு வேண்டுமாஞலும் செய்வதற்குரிய நிதி வடிவில்

[2] குறிப்பிட்டதொரு வகை முதற்கருவிப் பொருளின் அளிப்பை அதிகரிப்பதற் கேற்படும் காலத்தைப் பொறுத்து, அதன் வருமானம் இயல்பான அளவைக்காட்டி லும் அதிகரிக்கலாம். இது மாருத அளிப்பில் தேவை அதிகரிப்பால் நிர்ணயிக்கப் படும் நிலத்தின் வாரத்தைப் போன்றது. மாருக இருக்கின்றதொரு வகை முதற் கருவிப் பொருளுக்கேற்படும் தேவை சுருக்கமடைந்தால், அப் பொருள் மறைந்து விடும்வரை அதனின்று கிடைக்கும் வருமானம் இயல்பான வருமானத்தைக்காட்டி லும் கீழே சரிந்துகொண்டே போகும். ஒரு நகரத்தில் எந்தவொரு பகுதி சிதை வுற்று வருமோ அப் பகுதியிலுள்ள வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் வாடகை கீழே சரிந்துகொண்டே செல்வதை இதற்குச் சான்ருகக் கொள்ளலாம். இக் காரணங் களால்தான் நிலேயான முதற் கருவிப் பொருள்களின் வருமானம் தற்காலிக வாரத்தின் (quasi-rent) தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது.

[3] இயற்கைச் சாதனங்கள் பயனளிக்க வேண்டுமாஞல், அவற்றில் முதலீடு செய் வது அவசியம் என்பதையோ, அல்லது உழைப்பின் உற்பத்தித் திறனே அதிகரிப்பதற் கென்று உழைப்பாளிகளில் முதலீடு செய்யமுடியும் என்பதையோ இது மறுப்பதாகாது. சுரங்கப் பொறிகளின்றி பூமிக்கடியிலுள்ள கனிப்பொருளே நாம் பயன்கொள்ள முடியாது; அதேபோல் கல்விக்கென்றும் பயிற்சிக்கென்றும் முதலீடு செய்வதன் வழியாகத்தான் தொழிலாளிகள் திறம் பெறுகின்றனர். எனினும், 'மூலமான' உற்பத்திக் காரணிகளின் அளிப்பிற்கும் முதற்கருவிப் பொருள்களின் அளிப்பிற்கும் அடிப்படையான வித்தியாசம் உண்டு. இயற்கைச் சாதனங்களின் அளிப்பு இயற்கை யால் வரையறை பெற்றவை; இவற்றை நாம் உற்பத்தி செய்வதில்லே. அதே சமயம் உழைப்பின் அளிப்பு மக்கள் தொகையால் வரையறை பெறுவதோடு, குறிப்பிட்ட தொரு வகை உழைப்பை எடுத்துக்கொண்டால் அதன் அளிப்பு, குறிப்பிட்ட திறனே அல்லது தொழில் நுட்பத் தகுதியைப் பெறுவதற்கு எவ்வளவுபேர் வசதியும் விருப்ப மும் உடையவர்கள் என்பதால் வரையறுக்கப்படுகிறது.

அளிக்கப்படுகிறது. பின்னர், இப் பணம் அல்லது நிதி (ஏற்கெனவேயுள்ள சாதனங்களைக்கொண்டு பயன்படுத்துவதன் வழியாக) கண்கூடான பலவகை முதற்கருவிப் பொருள்களின் வடிவில் உருப்பெற்றுவிடுகிறது. இம் முதலீட்டு நிதியை அளிக்கும் பணியைச் செய்வோர் ‘இலவசமாக’ இதைச் செய்ய விரும்புவதில்லை; மாறாக, இப் பணிக்கு அவர்கள் குறிப்பிட்டதொரு கட்டணத்தை எதிர்பார்க்கின்றனர். கடனாக அளிக்கப்படும் நிதியில் இக் கட்டணம் எத்தனை சதவிதம் என்று கணக்கிடும்போது, நாம் அறிந்துள்ளதுபோல், வட்டிவீதம் புலனாகிறது. மூலதனமின்றி நேரடியாகச் செய்யும் உற்பத்தி முறைகளைக்காட்டிலும் உழைப்பிற்குத் தேவையான முதற்கருவிப் பொருள்களைக்கொண்டு சுற்றுவழி முறையில் உற்பத்தி செய்தால் அதிக அளவு உற்பத்தி கிடைக்கிறது. எனவே, மூலதனத்திற்கு வட்டி செலுத்துவதும் சாத்தியமாகிறது. மேலும், சேமிப்போர் தமது வருமானத்தை முழுவதும் செலவிடாமல் அதில் ஒரு பகுதியை முதற்கருவிப் பொருள்களின் உற்பத்திக்காக ஒதுக்குவதற்கு மனம் கொள்ளுமாறு செய்யத் தூண்டுதல் அவசியம்.[4]

வட்டி வீதம்—சுற்றுவழி உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெறுவதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம்—மூலதனத்தின் அங்காடியில் நிர்ணயிக்கப்பெறுகிறது. தொடக்கத்தில் சரிசமமான வாங்குந் திறனுடைய அலகுகளைக்கொண்ட இந் நிதிகள் ஒன்றுக்கொன்று சமமாகவே இருக்கின்றன. சிக்கலான நிலை ஏதுமில்லாதிருந்தால் இவை அனைத்தும் ஒரே வட்டி வீதத்தைத்தான் பெறும். ஆனால், கடன் ஈவோர் பலவகை நட்ட ஆபத்தை மேற்கொள்கின்றனர். இந்த நட்ட ஆபத்தின் நிலைமை, கடன் பெறுவோரின் நாணயத்தையும், அக் கடன் தொகையைக்கொண்டு முதலீடு செய்யப்படும் தொழில்களில் ஏற்படக்கூடிய நட்ட ஆபத்துகளையும் பொறுத்து மாறுபடும்.

[4] ஒருவேளை வட்டி வீதம் சூனியமாக இருந்தால்கூடச் சிலர் சேமிக்கலாம். ஆனால், அவ்வாறு (சூன்ய வட்டி வீதத்தில்) சேமிக்கப்படும் தொகை முதற்கருவிப் பொருள்களில் உருப்பெற இருக்கும் மூலதனத்தின் தேவைக்குப் போதுமானதாயிராது. எனவே, கணிசமான வட்டி கொடுத்தால்தான் அதிகப்படியான சேமிப்பைத் தூண்டமுடியும்.

குறுகிய காலப் பகுதியை எடுத்துக்கொண்டால், வட்டி வீதம் சிக்கனத்தோடு தொடர்புடையதல்ல என்றும், அது கிடைக்கின்ற ரொக்க மூலதனத்தின் அளிப்பால் நிர்ணயிக்கப்படுகிறதென்றும் தெரியும். பல்வேறு செயல்களுக்குக் கிடைக்கக்கூடிய பணத்தின் அளவும், அது பெறக்கூடிய விலை அல்லது வட்டி வீதமும் பணத்தை மிச்சம் செய்து முடக்கிவைத்துள்ள சேமிப்பாளர்களின் மனப்பான்மையைச் (நீர்மை விருப்பத்தை) சார்ந்ததாகும். எனினும், இம் மனப்பான்மை ‘இயல்பான’ வட்டி வீதம் என்று அவர்கள் உணர்கின்ற வீதத்தால் பெரிதும் நெகிழக்கூடியது. இவ் இயல்பான வீதம், ஒருபுறம் நீண்டகாலத்திய உற்பத்தி ஆக்கத்தின் சக்திகளுக்கும் மறுபுறம் சேமிப்பதற்குள்ள தயக்கத்திற்கும் உட்பட்டு நிர்ணயமாவதாகும்.

அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்வது முதல் துணிகரமான ஊகவணிகத்தில் முதலீடு செய்வதுவரை இந்த நட்ட ஆபத்துகள் படிப்படியாக அதிகமாவதால் அவை வெவ்வேறு நிலைமைகளை உடையதாகின்றன. பலதரப்பட்ட நட்ட ஆபத்துகளைக் கொண்ட முதலீடுகளுக்கு அளிக்கப்படும் தராதர நிதி, எல்லா நாடுகளிலும் ஒரே அளவாகவே இருக்கும் என்று நாம் அனுமானித்துக்கொள்வதாக இருந்தால், இவ் அனுமானத்திற்கு நேர் மாறான சான்றுகள் இல்லாதிருக்குமாயின், உண்மை நிலையிலிருந்து பெரிதும் பிறழ்ந்துவிடமாட்டோம். அவ்வாறாயின், மூலதனம் அனைத்தும் ஒரே தன்மையுடையன என்றுகொண்டு, வெவ்வேறு நாடுகளிலுள்ள மூலதனத்தை அளவிடுவதற்கு அந்தந்த நாட்டில் நிலவும் 'சுத்த' வட்டி வீதத்தை (pure rate of interest) நாம் அளவுகோலாகக் கொள்ளலாம். குறிப்பிட்டதொரு நாட்டில் எல்லா முதலீடுகளுமே நட்ட ஆபத்துடையதாக இருக்குமாயின், ஒரேவிதமான நட்ட ஆபத்தைக்கொண்ட முதலீடுகளிலிருந்து கிடைக்கும் இலாபத்தை ஒப்பிடுவது இன்றியமையாததாகிறது.

நட்ட ஆபத்தையுடைய முதலீடுகளுக்கு ஏராளமான மூலதனமோ அல்லது மிகச் சிறிதளவு மூலதனமோ இருப்பது விதிவிலக்கு. அவ்வாறு இருப்பதற்குரிய உண்மையான சான்றுகள் கிடைக்குமாயின், அதன் காரணங்களைத் தனியாக எடுத்து ஆய வேண்டும். அவ்வாறு ஆய்ந்து முடிவு காணவேண்டுமானல், கவனமிக்க தீர்வு அவசியம். ஏனெனில், நட்ட ஆபத்தில்லாத முதலீடுகளுக்குச் சாதகமாக, ஆபத்துள்ள முதலீடுகளிலிருந்து மூலதனம் இடம்பெயருமாயின், அம் முதலீடுகள் பேராபத்துகள் நிறைந்தன என்பது பிரதிபலிக்கப்படுகிறது (வளர்ச்சி குன்றிய சில நாடுகளில் இவ்விதப் போக்கு இருப்பதாகத் தோன்றுகிறது). கடன் கொடுப்போர், தமது சொந்த நாட்டுத் தொழில்களில் இருப்பதைப்போன்றே நட்ட ஆபத்துடைய அயல்நாட்டுத் தொழில்களுக்கு நிதி அளிக்க முன்வரலாம். எனினும், அரசியல் சூழ்நிலைகள் மாறுவதாக இருந்தாலோ, அல்லது அவ்வாறு முதலீடு செய்வதற்கு வேண்டிய அடிப்படையான முதலீடான போக்குவரத்து வசதி, சக்தி வசதிபோன்ற சமுதாய வசதிகள் அந்நாட்டில் இல்லாதிருந்தாலோ, அங்குள்ள பொறிசெய் தொழில் போன்ற தொழில்களில் முதலீடு செய்வது ஆபத்தானதென்று அவர்கள் விட்டுவிடலாம்.

நீண்ட காலத்தில் (நட்ட ஆபத்துக் கழிவான) வட்டி வீதம், முக்கியமாய்ச் சேமிப்பின் மூலகாரணியான வருமான நிலை,

மக்களின் சேமிப்புப் பழக்கம் ஆகியவற்றையும் சுற்றுவழி உற்பத்தி முறையின் ஆக்க சக்தியால் நிர்ணயிக்கப்படும் முதலீட்டு நிதிக்குள்ள தேவையையும் சார்ந்ததாகும்.[5] சேமிப்பு, பணவடிவில் செய்யப்படுவதால், பாங்குக் கொள்கை (banking policy) மூலமாக, அதாவது, பாங்குச் செலாவணியை விரிவாக்குவதன் வழியாக பண மூலதனத்தின் அளிப்பை அதிகரிக்கக்கூடும். என்றாலும், இவ் வழி குறுங்காலத்திற்கு மட்டுமே ஏற்றதாகும்; நீண்ட காலத்தில் ஆக்க சக்தியும் சிக்கனமும்தான் சிறந்த உபாயங்கள்.

மூலதனத்தை ஒரே தன்மையுடையதாக நாம் கருதமுடியுமென்றால், அதைப் பல்வேறு உபகாரணிகளாகப் பாகுபடுத்த வேண்டியதில்லை. உழைப்பையோ அல்லது இயற்கைச் சாதனங்களையோ போலன்றி, மூலதனம் பாகுபடுத்தப்படாத ஒரே காரணியாக நாம் கருதலாம். இதர காரணிகளைப்போன்று மூலதனத்தின் அளவில் அல்லது அளிப்பில் நாட்டிற்கு நாடு வித்தியாசம் உண்டு. உயர்ந்த தலா வருமானமும் அதிகச் சேமிப்பு நாட்டமும் (propensity to save) உள்ள நாடுகளில் மூலதனம் பெருமளவிலும் மலிவாயுமிருக்கும்; மாறாக, தாழ்ந்த தலா வருமானமும் குறைந்த சேமிப்பு நாட்டமும் இருக்கும் நாடுகளில் அது மிகக் குறைந்த அளவிலும் கிராக்கியாயும் இருக்கும்.

நீண்டகால மூலதனத்திலிருந்து குறுங்கால மூலதனத்தைப் பாகுபடுத்தி, அதைத் தனி ஒரு காரணியாக நாம் கருதவேண்டும் என்று தூண்டப்படலாம். பொதுவாகக் கூறின், குறுங்கால மூலதனத்திற்குக் குறைந்த வட்டிதான் கிடைக்கிறது. மேலும், குறுங்கால, நெடுங்கால மூலதனத்திற்கான அங்காடிகளில் ஒன்றிலிருந்து நிதி பிறிதொன்றுக்குச் சதா புரண்டுகொண்டே இருப்பதால், இவ் அங்காடிகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகி, இவ்விரண்டு வகை மூலதனத்திற்குமுள்ள வட்டி வீத வித்தியாசம் நிலைத்துவிட முற்படுகிறது. இதனால் எந்தெந்த நாடுகளில் ஒரு வகை மூலதனம் தாராளமாய்க் கிடைக்குமோ, அங்கெல்லாம் பிறிதொரு வகை மூலதனமும் ஏராளமாய் இருக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை என்றாகிறது. அவ்வாறாயின், பல நாடுகளின் மூலதனத்தினை ஒப்பிட்டு அறிவதற்கு நீண்டகால, குறுங்கால மூலதனம் என்ற பாகுபாடு முக்கியமன்று.

[5] நடப்பிலுள்ள வருமான நிலைக்கு இன்றுள்ள முதற்கருவிப் பொருள்களே காரணமாயும், இம் முதற்கருவிப் பொருள்களின் இருப்பிற்குக் கடந்த காலச் சேமிப்பு காரணமாயும் இருப்பதால், ஒருவிதச் சுழற்சித் தன்மை இங்கு புலனாகிறது. அதோடு, மேலும் வளரக்கூடிய மூலதனத்தின் உற்பத்தி ஆக்க சக்தி இன்று இருக்கின்ற மூலதனத்தின் அளவைச் சார்ந்தது. எனினும், குறிப்பிட்டதொரு காலத்தில் மூலதனத்தின் இருப்பு குறிப்பிட்டதோர் அளவுதான் இருக்கும்.

மேலும் ஒரு விவரம், எண்ணிலடங்கா உருப்பெற்றுள்ள முதற் கருவிப் பொருள்கள் தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவுகளே. தொழில் நுட்பம் விரைவாக வளர்ச்சி அடைவதால் குறுங்காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய முதற்கருவிப் பொருள்கள் இருப்பின் இனத் தொகுப்பும் மாறிவிடுகிறது. மூலதன அளிப்பிற்கும் (அல்லது அதைப் பயன்கொள்ள வட்டி செலுத்தவேண்டிய நியதிக்கும்) முதற்கருவிப் பொருள்களில் பல்வேறு தன்மைக்கும் தொடர்பு கிடையாது. இவ் வேறுபாட்டுத் தன்மை தொழில் நுட்பத்தைப் பற்றிய ஆய்வுடன் தொடர்புடையதொரு காரியமாகும்.

உற்பத்திக் காரணிகளின் தன்மை வேறுபாடுகள்

பன்னாட்டு வாணிபத்தின் தொன்மைக் கோட்பாடு, உழைப்பு என்னும் தனியொரு காரணியின் தராதரத் திறனைக்கொண்டு வரையப்பட்டது என்பது ஞாபகமிருக்கலாம். இக் கோட்பாட்டை நாம் மறுப்பதற்குரிய காரணங்களில் ஒன்று இதுதான்: ஒரு நாட்டிலுள்ள உழைப்பு பிறிதொரு நாட்டிலுள்ளதைக்காட்டிலும் மேலான நிர்வாகத்தோடோ அல்லது பெருமளவு மூலதனத்தோடோ அல்லது உயர்தரமான இயற்கைச் சாதனங்களோடோ தொகுக்கப்படுகின்ற காரணத்தால் அது அதிகத் திறனுள்ளதாக இருக்கக்கூடும். இந்த உற்பத்திக் காரணிகளை எல்லாம் நேரடியாக ஆயாமல்—இவற்றிற்கு ஏதோ ஒரு வகை முக்கியத்துவத்தை மட்டும் அளித்துவிட்டு—தனியொரு காரணிக்குமட்டும் அதற்கில்லாத அளவு முக்கியத்துவம் அளித்தது. ஆனால், தராதர உற்பத்திக் காரணி அளிப்பைக்கொண்டு ஆயுமிடத்து, உழைப்பிற்குத் துணையான இதர காரணிகளுக்கெல்லாம் ஒரே தகுநிலையை அளிப்பதன்மூலம் இத் தவற்றை அது நீக்கிவிடுவதாகவே எனக்குத் தோன்றுகிறது. பின்னர், பல்வேறு பண்டங்களுக்கேற்பக் காரணித் தொகுப்புகளும் மாறுபடுகின்றனவென்றும், உற்பத்திக் காரணிகளின் பேறு எல்லா நாடுகளுக்கும் ஒரேமாதிரியாக இருப்பதில்லையென்றும் வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டு, சரியானதொரு முடிவை அது உணர்த்துகிறது; அதாவது, குறிப்பிட்டதொரு நாட்டில் குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதிலுள்ள தராதரச் செலவு அனுகூல விளக்கத்திற்கு, சில சூழ்நிலைகளில் ஒரு காரணி முக்கியமானதாயும், இதர சூழ்நிலைகளில் பிறிதொரு காரணி முக்கியமானதாயுமிருக்கலாம்.

உழைப்பு என்ற தனியொரு காரணியின் தன்மைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், இப்போது உற்பத்திக்

காரணிகள் அனைத்தின் அளவிற்கும் கொடுக்கப்படுகின்றன. முன்னர்போல் உழைப்பின் தராதரப் பண்புகளைக்கொண்டு விளக்காமல், உற்பத்தியில் பங்குகொள்ளும் காரணிகளின் அளவைக் கொண்டு கூறுவதன்மூலம் ஒரு படி முன்னேறிவிடுகிறது.

இருப்பினும், நாம் பாகுபடுத்தியுள்ள காரணிகளுக்குள்ளோ அல்லது உபகாரணிகளிடையேயோ சிலவற்றிலாவது தன்மை வேறுபாடுகள் இருக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. உதாரணமாக, மத்தியதரைக் கடல் பகுதியில் இடம்பெறும் சிலியையும் கிரீஸ் நாட்டையும் எடுத்துக்கொள்வோம். சிலியின் செழிப்பான மையப் பள்ளத்தாக்கிலுள்ள ஓர் ஏக்கர் நிலத்தில் கிரீஸிலுள்ள வளமற்ற, கல் மண் கலந்ததோர் ஏக்கர் நிலத்தைவிட அதிக அளவு விளைச்சல் ஏற்படுகிறது. அல்லது, கோதுமை உற்பத்தி செய்யும் இரண்டு பகுதிகளை எடுத்துக்கொண்டால், செழிப்பான கான்சாஸ் (kansas) நிலப் பகுதி செழிப்பற்ற மன்டானு (Montana) நிலப் பகுதியைவிட எவ்வளவோ சிறந்தது.

இவ்வாறு இயற்கை வளங்களில்மட்டுமன்றி, இதர சாதனங்களின் தன்மைகளிலும் வித்தியாசம் உள்ளது. இந்த வித்தியாசத்தால் அவற்றின் உற்பத்தித் திறன் வேறுபடுவது வெளிப்படையாயிருப்பதால், அவற்றை நாம் நேரடியாக ஆய்வதே சிறந்த வழியாக இருக்கக்கூடும். உதாரணமாக, ஒரே அளவு காரணிகளின் தொகுப்போடு பயன்படுத்தப்படும் சாதனத்தின் அளவு அப்படியே இருக்க, அதன் உற்பத்தித் திறன் வேறுபடுமாயின், இவ் வேறுபாட்டை அளவிடுவதற்கு அதிக உற்பத்தித் திறன்கொண்ட சாதனத்தை அதன் கெழுவால் (coefficient) பெருக்கவேண்டும். சிலியின் மையப் பள்ளத்தாக்கு நிலத்திலும் கிரீஸ் நாட்டின் நிலத்திலும் ஒரே அளவு மூலதனத்தையும் உழைப்பையும் பயன்படுத்தியபோதிலும், சிலியின் நிலத்தில் கிரீஸ் நாட்டு நிலத்தைவிட மூன்று மடங்கு விளைச்சல் கிடைத்தால், அப்போது சிலியின் நிலப் பகுதியை 3-ன் கெழுவால் பெருக்க வேண்டும். அதாவது, ஒரே அளவு உற்பத்தித் திறனில் கூறுவதாயின், சிலியிலுள்ள நிலப் பகுதி உண்மையில் இருக்கும் பரப்பைக்காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும்.

உழைப்பிலுள்ள தர வேற்றுமைகள் அதிகச் சிக்கல்கொண்ட பிரச்சினைகளாகும். குறிப்பிட்டதோர் இயற்கை வளத்தின் உற்பத்தித் திறனிலுள்ள வேறுபாடுகளை, அவ் வளம் கொண்டுள்ள இயல்பான தன்மை வேறுபாடுகளைக்கொண்டு விளக்கிவிடலாம். ஆனால், உழைப்பைப் பொறுத்தவரை, அவ்வாறு கூறுவதற்கில்லை. பல்வேறு நாட்டு மக்களிடையே நிறம், தலைமயிர் வாகு, எலும்பு

அமைப்பு ஆகியவைபோன்றவற்றில் வேண்டுமானால் மேலெழுந்த வாரியாக வேறுபாடுகள் இருக்கலாம்; இவை அனைத்தும் ஆக்க சக்தியோடு தொடர்பில்லாதவை. ஆனால், புத்தி கூர்மை, கைத் திறன், முயற்சி, உடல்வலிமை போன்ற சிறப்பான அம்சங்கள் தான் பொருளாதார முக்கியத்துவம் கொண்டவை. இக் குணங் கள்கூட ஏறக்குறைய எல்லா நாட்டு இனத்தவர்களிடமும் ஒரே மாதிரியாகத்தான் இயல்பாகவே உள்ளன. எனவே, உற்பத்தித் திறன் மக்களினத்தவரிடையே வேறுபடுமாயின், அதற்கு, இச் சிறப்பு அம்சங்களிலுள்ள வேறுபாடு காரணமாயிருக்கலாம்; அல்லது அவற்றை வளர்ப்பதிலுள்ள நிலை வேறுபாடு காரண மாகலாம்.

ஆள்சார் முதலில் முதலீடு (Investment in Human Capital)

கடந்த முப்பது ஆண்டுகளில் அமெரிக்காவின் தேசிய மொத்த உற்பத்தி ஆக்கம் பெருமளவில் உயர்ந்துள்ளது. இவ்வாறு அதிகரித்துள்ள ஆக்கத்தில் ஒரு பகுதி (சுமார் மூன்றில் இரண்டு) மட்டுமே உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலோ அல்லது அவர்கள் பயன்கொள்ளும் முதற்கருவிப் பொருள்கள் பெருகியுள்ளதாலோ ஏற்பட்டதாகும் என்று சமீபகால ஆய்வு புலப்படுத்துகிறது.[6] எஞ்சியதில் ஐந்தில் இரண்டு பகுதி முதல் ஐந்தில் மூன்று பகுதிவரை உழைப்போரின் அறிவுக் கூர்மை, வேலைக்கேற்பத் தம்மைச் சரிப்படுத்திக்கொள்ளும் தன்மை, செய் திறன், கல்வி ஆகியவற்றை அதிகரித்துள்ள முதலீட்டின் விளைவாகும் என்றும் இவ் ஆய்வு குறிப்பிடுகிறது. மக்களில் செய்யப்படும் முதலீடு பெரும்பாலும் பொது அறிவு, தொழிலறிவு, தொழில் பயிற்சி, வேலை முன்னேற்றப் பயிற்சி, தனிநபர்களின் சொந்த முயற்சி ஆகியவற்றில் மட்டுமன்றி, உயர்ந்த வேலைக்குச் செல்லுவதற்கான இடப் பெயர்ச்சி வசதிகளிலும் அமைந்துள்ளது. அதோடு, மக்களின் வலிமையும் வசதிகளும் அதிகரிக்கும் வகையில் உணவிற்கென்றும், உடல் நலத்திற்கென்றும் ஓரளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்களில் செய்யப்படும் முதலீடு நாட்டிற்கு நாடு பெரிதும் வேறுபடுகிறது. அமெரிக்காவைப்போன்று உயர்ந்த தலா வருமானத்தில் கணிசமான விகிதாசாரத்தினைக்கொண்டு இவ் வகை முதலீடு செய்துள்ள நாடுகளிலெல்லாம் குறைந்த விகிதாசாரத்தில் இம் முதலீடு செய்திருக்கும் நாடுகளைக்

[6] American Economic Review (செப்டம்பர், 1962) வெளியீட்டில் Moses Abramovitz அவர்கள் வரைந்துள்ள 'Economic Growth in the United States' என்ற கட்டுரையில் 766ஆம் பக்கம், 2ஆம் அட்டவணை.

காட்டிலும் மக்களின் சராசரி உற்பத்தி ஆக்கம் வெகுவாய் உயர்ந்துள்ளது என்பதில் ஐயமில்லை. இந் நாடுகளிலெல்லாம் உழைப்பாளிகள் அதிக ஆக்க சக்தியும் உயர்ந்த தரமும்கொண்டு விளங்குவதற்கு முக்கிய காரணம், அவர்கள்மீது செய்யப்பட்டுள்ள முதலீடேயாகும். எனவே, ஐரோப்பிய உழைப்பாளியைக் காட்டிலும் அமெரிக்க உழைப்பாளி தரத்தில் உயர்ந்தவன் என்று சொல்லுவதைக்காட்டிலும் அவன் அதிகமான மூலதனத்தால் (ஆள்சார் முதலில் செய்யப்படும் முதலீட்டின் வடிவில்) நிறைவு பெற்றுள்ளான் என்று கூறுவதே பொருத்தமானது. இவ்வாறாக உழைப்பின் தன்மை, அதன் வேறுபாட்டிலன்றி, மூலதனப் பணியின் தராதர வித்தியாசத்தில்தான் இங்கு பேசப்படுகிறது. ஒரு நாடு நன்கு கற்ற அல்லது பயிற்சிபெற்ற தொழிலாளர்களைக் கொண்டிருப்பதன்மூலம் அது பிற நாடுகளைக்காட்டிலும் சிறப்புப் பெற்றிருக்குமாயின், அச் சிறப்பிற்கு அது கொண்டுள்ள அதிக மூலதனம்தான் காரணமாகும் என்று கொள்ளவேண்டும்.

ஆள்சார் முதலில் ஒரு நாடு செய்துள்ள முதலீடு பெரிய அளவில் இருந்தாலும் சரி, அல்லது சிறிய அளவிலிருந்தாலும் சரி, அம் முதலீட்டின் கணிசமானதொரு பகுதியைக் குறிப்பிட்ட சில வழிகளுக்கென்று செய்யக்கூடும். இதற்கு எடுத்துக்காட்டாக ஜெர்மனி நாட்டைக் கருதலாம். முதல் உலகப் போருக்கு முன்னர், அந் நாடு எண்ணிலடங்கா விஞ்ஞானிகளுக்கு (குறிப்பாக ரசாயன அறிஞர்களுக்கும் ரசாயனப் பொறியியல் வல்லுநர்களுக்கும்) முக்கியப் பயிற்சி அளித்தது. ஏனைய நாடுகளைவிட அங்கிருந்த விஞ்ஞானிகள் சிறந்த பயிற்சியைப் பெற்றிருந்திருக்கலாம்; அல்லது, ஒரு வேளை அவ்வாறு சிறந்த பயிற்சியை உண்மையிலேயே பெற்றிருந்திருக்கக்கூடும். இதன் விளைவாக, ஏனைய நாடுகளைவிட ஜெர்மனியில்தான் ரசாயனத் தொழிலாளிகள் அதிகமாகவும் மலிவாகவும் இருந்தனர் என்பது இங்கு முக்கியமானதாகும். எனவே, பிற நாடுகளைக்காட்டிலும், ஜெர்மனிதான் ரசாயனத் தொழிலில் சிறப்புற்று விளங்கியது. இவ்வாறாக, குறிப்பிட்டதொரு தொழிலாளர் வகுப்பின் பயிற்சிக்கென்று பெருமளவில் முதலீடு செய்வதனால் அத்தகைய தொழிலாளிகள் பிறநாடுகளைக் காட்டிலும் அதிக ஆக்கத் திறன் பெறுகின்றனர் என்பது முக்கியமன்று; ஆனால், இக் குறிப்பிட்ட உபகாரணியின் பேற்றினை அந் நாடு அதிகரிப்பதுதான் முக்கியமான விளைவாகும்.

உற்பத்தியைப் பாதிக்கும் சமுதாய நிலைமைகள்

நாடுகளுக்கிடையே காணப்படும் முக்கியமான வித்தியாசங்களில் சமூகப் பழக்கவழக்கங்கள், சமூக நிறுவனங்கள், மக்களின்

மனப்பான்மைகள் ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகள் குறிப்பிடத் தக்கவை. ஒரு நாட்டிற்குள் இருக்கும் பல பகுதிகளில் இவ் வேறுபாடுகள் அவ்வளவாகத் தெரிவதில்லை. மானிட இயல் அறிஞர்கள் 'கலாச்சாரம்' என்னும் தலைப்பில் உள்ளடக்கும் இந்த அம்சங்கள் பல கூறுகள் கொண்டவை. இவற்றில் தவருன சாதி, இன வேற்றுமை, பொதுவாக எல்லாத் தொழில்களைப்பற்றியும், குறிப்பாகச் சில தொழில்களைப்பற்றியும் மக்கள் கொண்டுள்ள மனப்பான்மை, நில உரிமைச் சட்டங்கள், குடும்ப விவகாரங்களின் இயல்புகள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இச் சமூகச் சூழ்நிலைகள் அல்லது உற்பத்தியின் சமுதாய நிலைமைகள் நாடுகளுக்கிடையே உள்ள உழைப்பாளிகளின் தராதர வித்தியாசத்திற்கு மற்ருேர் அடிப்படையாகும். அதோடு, பல்வேறு தொழில்களுக்கு வேண்டிய உழைப்பாளிகளின் தராதர அளிப்பையும் இவை பாதிக்கக்கூடியவை.

இன வேற்றுமைகள்

இந்தியாவிலுள்ள சாதி முறை இந்து சமுதாயத்தினரை ஆயிரக்கணக்கான தொழிலினங்களாகப் பாகுபடுத்தியுள்ளதோடு மட்டுமன்றி, ஒவ்வொரு தொழிலிலும் வேலை செய்யும் முறையைப் பரம்பரைப் பழக்கவழக்கத்தால் நிர்ணயிக்கவும் செய்துவிட்டது.[7] இதனுல், ஒரு தொழிலிலிருந்து பிறிதொன்றுக்குத் தொழிலாளர் இடம் பெயர்வது மிகக் குறைவுதான்; எனவே, குறிப்பிட்டதொரு தொழிலுக்கு வேண்டிய உழைப்பாளிகளின் தராதர எண்ணிக்கை மிக மெதுவாகவே மாற நேரிடுகிறது. உதாரணமாக, உயர்ந்த சாதியினராகக் கருதப்படும் பிராமணர்கள் பொருள்சார் உற்பத்தித் துறையிலோ அல்லது இலாபம் தரும் பணியிலோ ஈடுபடுவது பரம்பரைக்கே இழுக்கு என்ற எண்ணம், தொழில் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாத தொழில்நுட்பப் பணியாளரும் நிர்வாகப் பணியாளரும் பெருகுவதற்கும், தொழிலதிபர்கள் வளர்வதற்கும் கடந்த காலத்தில் மட்டுமன்றி, இன்றும்கூடத் தடங்கலாகவே உள்ளது. இவ்விதச் சாதி, இன வேற்றுமைகள் திடமாகக் காணப்படும் இடங்களில் குறிப்பிட்டதோர் இனத்தவர், தாம் விரும்பும் பிற தொழில்களுக்குச் செல்வதில் தடைகள் இருக்கக் கூடும். உதாரணமாக, தென் ஆப்பிரிக்காவில் திறம்பெற்ற

[7] அரசாங்கத்தின் நடவடிக்கைகளாலும் நவீனத் தொழில் தேவைகளாலும் இந்தியாவிலுள்ள சாதி முறை விரைவாக மறைந்து வருகிறது. இருந்தபோதிலும், விவசாயத்தின் அமைப்பையும் தொழில்களின் அமைப்பையும்மட்டுமன்றி, அவற்றின் நடைமுறைச் செயல்களையும் பெரிதும் பாதிக்கக்கூடிய வழியில் இன்றும்கூடச் சாதி வேற்றுமை இருக்கிறது.

தொழிலாளரின் எண்ணிக்கை மிகக் குறைவெனினும், அவ் வகைத் தொழில்களெல்லாம் வெள்ளையர்களுக்கே உரிமையானதாக இருந்துவருகிறது. நீக்ரோ இனத்தவர் வீட்டுப் பணிகள், பயிர்த் தொழில், பயிற்சி தேவையற்ற இதர தொழில்களில்தான் அமர்த்தப்படுகின்றனர். இவ்வித இனவேற்றுமை அமெரிக்காவில் அவ்வளவாக இல்லையெனினும், பயிலாத் தொழில்களிலும் திறமை வேண்டாத் தொழில்களிலும் நீக்ரோ மக்கள் விகிதப் பொருத்த மற்ற எண்ணிக்கையில் பெருகியிருக்கக்கூடிய அளவிற்கு இவ் வேற்றுமை உணர்ச்சி இன்றும் இருந்துவருகிறது. அவ்வாறு கீழ்த்தரமான தொழில்களுக்கு நிறைய ஆட்கள் பெருகுவதால், அத் தொழில்களில் நிலவும் கூலி மந்தமாகிவிடுவதோடுமட்டு மன்றி, உயர் தொழில்களில் நிலவும் கூலி, தொழிலாளி இடப் பெயர்ச்சி தடையின்றி ஏற்பட்டிருந்தால் இருக்கக்கூடியதைவிட உயர்ந்த மட்டத்திற்கு உயர்ந்துவிடுகிறது.

நில உரிமை முறை

நில உரிமை முறை அல்லது நில உடைமைபற்றிய சட்ட வழக்கமோ, சட்டமோ ஒரு நாட்டின் விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியது. லத்தீன் அமெரிக்காவிலும் பெரும்பாலான அண்மைக் கிழக்கு நாடுகளிலும் உள்ளதைப்போன்று (மூத்த மகனுக்குமட்டும் நில உரிமை அளிக்கும்) தலை மூப்புரிமைச் சட்டம் (primogeniture) உள்ள நாடுகளில் பெரும் பண்ணைகளைப் பெறவும், அவற்றை அப்படியே பேணவும், பேரளவு விவசாயத்திற்கேற்ற பயிர் வகைகளைச் சாகுபடி செய்யவும் ஊக்கமளிக்கப்படுகிறது. பெரும் பண்ணையாட்சி (latifundia) உடைய சிலியில் கோதுமை பேரளவில் பயிராவதோடு கால்நடைகளும் ஏராளமாக வளர்க்கப் படுகின்றன. அதுபோன்றே பிரேஸிலில் பருத்தியும் காப்பியும் பேரளவில் பயிராகின்றன. ஈரானிலும் கால்நடை வளர்ப்பும் கோதுமைச் சாகுபடியும் பேரளவில் நடைபெறுகின்றன. ஒரு நாட்டில் சிறுசிறு பண்ணைகள்மட்டும் இருக்குமாயின், அங்கு உள்நாட்டுத் தேவைக்கென்றுமட்டும் காய்கறி, பழவகைகள் போன்ற சாகுபடியும் இதர தானியங்களும் விளைவிக்கப்படும். பயிர்த் தொழிலில் என்ன பயிர், எப்படி சாகுபடி செய்யப்படுகிறது என்பதும் முக்கியம். பெரும் பண்ணைகளில் திறமையற்ற முறையில் சாகுபடி செய்தால்கூட அதிலிருந்து போதுமான வருமானம் கிடைக்கும். ஆனால், அப் பண்ணை வீணாக முற்படும். சிறந்த முறையைக் கையாளவும் பல்வேறு பயிர் வகைகளைச் சாகுபடி செய்யவும் ஊக்கம் இராது. இதற்கு நேர்மாறாக, இந்தியா, சிலோன், மெக்ஸிகோ ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் உள்ளதைப் போன்று, பண்ணைகள் சிறுசிறு துண்டுகளாக இருக்கு

மாயின், அங்கும் திறமையற்ற முறையில் பிழைப்பிற்கான பயிர் வகைகளைமட்டும்தான் சாகுபடி செய்ய முடியும்; அதோடு, அப் பண்ணைகளின்மூலம் போதிய வருமானமும் கிடைக்காது.

அரசியல் அம்சங்கள்

நிலையற்றதாயும் ஊழல் நிறைந்ததாயுமுள்ள அரசாங்கம், குறிப்பாக, நிலையற்ற தன்மையோடு மக்களின் ஒழுங்கீனமும் சேர்ந்துகொண்டாலோ, அல்லது அதன் கொள்கை அடிக்கடி மாறுவதாயும் முன்கூட்டியே அறிய முடியாததாயுமிருப்பின், முதலீட்டின் தன்மையும் போக்கும் வெகுவாகப் பாதிக்கப்படும். அவ்வாறாயின், பல ஆண்டுகளுக்குப்பின் இலாபம் தரக்கூடிய முதலீட்டை யாருமே விரும்பாமல் அதற்குப் பதிலாக விரைவில் இலாபம் பெறக்கூடிய முதலீட்டையே விரும்புவர்; பொதுவாக, நட்ட ஆபத்துக்குரிய முதலீட்டை விரும்பமாட்டார்; பேரளவுத் தொழில்களுக்குப் பதிலாகச் சிற்றளவுத் தொழிலைத்தான் விருப்புவர். இவ்வித அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக ஏற்படும் விளைவுகளுக்குக் கிழக்கு நாட்டுமக்கள் தம் சேமிப்பை விலையுயர்ந்த நகை நட்டுகளில் முடக்குவதையும், பெரும்பாலும் தம் சேமிப்பை லத்தீன் அமெரிக்க நாட்டு மக்கள் நிலத்திலோ அல்லது சரக்கு களிலோ அல்லது நிலையான வெளிநாட்டு அரசாங்கப் பத்திரங் களிலோ முதலீடு செய்வதையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் செய்வதால் உற்பத்தித் தொழில்களுக்கும், இன்னும் இதர உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் வேண்டிய மூலதனம் பாதிக்கப்படுவதோடுமட்டுமன்றி, செயல் முறையில் மூலதன நிதி போதாததாகவும் ஆகிவிடுகிறது.

குறிப்பிட்ட சில தொழில்களுக்குப் பாதகமாக, குறிப்பாக, அயல் நாட்டுத் தொழில்களைப் பாதிக்கின்ற முறையில் தொழில் களுக்குள் பேதங்காட்டும் தனிச் சட்டங்களுள், வரிச் சட்டங்கள் தொழில்களின் பங்குகளில் பெரும்பான்மையான பங்குரிமையை உள்நாட்டவர்களே அடையுமாறு செய்யும் சட்டங்கள், அல்லது குறிப்பிட்ட தொழிலில் உள்நாட்டவரே பெரும்பான்மையாக வேலைக்கமர்த்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தும் சட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

'உற்பத்தித் திறன் சூழ்நிலை' (Climate of Productivity)

'உற்பத்தித் திறன் சூழ்நிலை' என்பது ஒரு நாட்டிலுள்ள அரசியல் அம்சங்களின் இயல்பிற்கு ஒத்ததாகும் எனலாம். இச் சொற்றொடர், உற்பத்தியைப்பற்றி மக்கள் கொண்டுள்ள மனப்

பான்மையைப் புலப்படுத்துகிறது. இம் மனப்பான்மை சிக்கல் நிறைந்த நுட்பமும் சக்திகளும் பின்னிய கூட்டு விளைவாகும். வட ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டனிலிருந்து வெளியேறிய மக்கள் குடியேறி முன்னேற்றப் பட்ட பிரிட்டிஷ் டொமினியன் ஆகிய நாடுகளில் இச் சூழ்நிலை சாதகமாக இருப்பதாகத் தெரிகிறது. இந் நாடுகள்தான் ஆய்வு எழுச்சியை, தனி மனிதனின் உயர்வையும் சுதந்திர உணர்ச்சி யையும் கிளறி, வேலை, சிக்கனம் ஆகிய நற்பண்புகளை வலி யுறுத்திய மறுமலர்ச்சியாலும் சமயச் சீர்திருத்தத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ் உற்பத்தித் திறன் சூழ்நிலையின் விளைவாக புத்தாக்க ஆவல், உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யும் ஆர்வம், பொருளாதாரச் சாதனை களுக்கு மக்கள் காட்டும் மதிப்பு, (பொருளாதாரச் சக்தி என்னும் பொருளில்) போட்டியின் தீவிரம் ஆகியவை இந் நாடுகளில்தான் தெளிவாகப் புலப்படுகின்றன.[8] 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜப்பான் அரசாங்கம் 'உற்பத்தித் திறன் சூழ்நிலை' புலனுக்கும் மனப்பான்மையை ஊக்குவிப்பதற்கென்று மேற்கொண்ட முயற்சி களின் விளைவாக அந் நாடு இச் சூழ்நிலையின் நற்பலன்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளது.

வறுமை

ஒரு நாடு முழுவதும் பரந்துள்ள வறுமை அந் நாட்டின் கலாச்சார அம்சமாக இல்லாதிருக்கலாம்; எனினும், உற்பத்தி சாதனங்கள் பயன்படுவதைப் பாதிக்கின்ற முறையில் அது அக் கலாச்சாரத்தின் விளைவாகும் என்று கூறலாம். வறுமை என்னும் பிணி உற்பத்திக் காரணிகளின் அளிப்பைமட்டுமன்றி, அவற்றின் திறனையும் பாதிக்கக்கூடியவை என்பது தெளிவு. ஒரு சமுதா யத்தின் வருமானத்திலிருந்துதான் சேமிப்பு தோன்றுகிறது. பொதுவாக வருமானம் தாழ்ந்திருப்பின், வாழ்க்கைக்கு இன்றி யமையாத தேவைகளுக்குமேல் மிகக் குறைந்த அளவே மிச்சம் பண்ணமுடியும். அப்போது சேமிப்பு குறைவாயும், மூலதனம் போதாததாயும் கிராக்கியாயும் இருக்கும். மேலும், தொழில் நுட்ப, நிர்வாகப் பயிற்சியையும் கல்வியையும் உழைப்பாளிகள் பெறுவதற்கு நீண்ட காலமும் வசதியும் தேவைப்படுவதால் வறுமை நிறைந்த நாட்டில் வெகு சிலரே அப் பயிற்சியையும் கல்வியையும் பெற இயலும். அவ்வாறாயின், இவ் வகைத்

[8] அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சிறப்பாகப் பொருந்தும் 'உற்பத்தித் திறன் சூழ்நிலை' என்பதன் சீரிய வாதத்திற்கு Graham Hutton எழுதியுள்ள **We Too Can Prosper** என்னும் நூலில் 'Climate of Productivity' என்ற அதிகாரத்தைப் பார்க்கவும். இந் நூல் 1953-ல் George Allen & Unwin Ltd., London வெளியீட் டாரால் பதிப்பிக்கப்பட்டது.

தொழிலாளர் மிகக் குறைவாகத்தான் அந் நாட்டில் இருப்பர்; எனவே, அவர்களுக்கு மற்றத் தொழிலாளர்களைக்காட்டிலும் அதிக ஊதியம் கொடுக்கவேண்டியதேற்படும். அதோடு, குழந்தைகளைச் சிறுவயதிலேயே வேலைக்கு அனுப்பவேண்டிய அவசியமிருப்பதால், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடப் பலரால் முடியாதிருக்கலாம். அவ்வாருயின், பயிற்சி தேவையற்ற தொழில்களில் மிதமிஞ்சிய ஆட்கள் இருக்க நேரிடும்; எனவே, அவர்களின் ஊதியம் மிகத் தாழ்வாகவே இருக்க முற்படும்.

அதோடுமட்டுமல்ல, வறுமை என்ருல் நெருக்கடியான, சுகாதாரமற்ற, போதிய உணவில்லாத வாழ்க்கை நிலைமை என்று பொருள். இதன் விளைவாகத் தொற்றுநோய் பரவும். சிறு பணியைக்கூட அதிக நேரம் செய்து, களைத்துப்போய் வலுவின்றி இருக்கும் தொழிலாளியின் உற்பத்தித் திறன் மிகக் குறைவாயிருக்கும். அறியாமையும் கல்வியின்மையும் வறுமையைத் தொடர்வதால், இவைகளும் உழைப்பாளியின் உற்பத்தித் திறனைப் பாதிக்கும்.

தனிப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு வறுமை தடையாயிருந்தால், அதை வெல்லுவதற்குப் பரந்த கல்வி வாய்ப்புத் துணை செய்யும். கல்விக்கு உயர்ந்த மதிப்புத் தரும் நாடுகள் பொதுக் கல்வியையும் தொழில் கல்வியையும் மலிவாகவும் எளிதாகவும் செய்து முன்னேற்றத் தடங்கல்களைக் குறைக்கக்கூடும். அமெரிக்காவின் திறன்பெற்ற தொழிலாளிகளும், நிர்வாகப் பணியாளரும், தொழில் வல்லுநர்களும் ஏனைய பல நாடுகளைவிட அதிக எண்ணிக்கையில் இருப்பதற்குக் காரணம், அங்கு கிடைக்கும் தாராளக் கல்வி வாய்ப்புதான். ஜெர்மனியிலும் இவ்வாறுதான் உள்ளது.


போக்குவரத்துச் செலவுகள்

இதுவரை போக்குவரத்துச் செலவைப்பற்றி ஒன்றுமே நாம் கூறவில்லை. ஆனுல், அவ் வகைச் செலவுகள் இருப்பதால் அவற்றை நாம் ஆயவேண்டியுள்ளது. நமது ஆய்வில் அவற்றைப் புகுத்தும்போது சில மாறுதல்கள் அவசியமாகின்றன. இம் மாறுதல்களில் ஒன்று பன்னுட்டு வாணிப விலைகளைப்பற்றியது; பிறிதொன்று தொழிலிடச் செறிவைப்பற்றியது.

வாணிபத்திலும் விலைகளிலும் ஏற்படும் பொது விளைவுகள்

போக்குவரத்துச் செலவுகள் இருக்கின்ற காரணத்தால் பன்னுட்டு வாணிபப் பொருள்களின் விலைகள் பாதிக்கப்படுகின்றன. அவை இல்லாதிருக்கும்போது, பன்னுட்டு வாணிபம்

ஏற்படுத்தியிருக்கக்கூடிய விலைச் சமன்பாடு இப் போக்குவரத்துச் செலவால் தடுக்கப்படுகிறது. அவ்வாருயின், உள்நாட்டில் நுகரப் படும் பணிகளை அந் நாட்டிலேயே செய்யவேண்டியிருப்பதால், அப் பணிகள்மட்டுமே உள்நாட்டிற்கென்று செய்யப்படும். ஏனைய எப்பொருளும் உள்நாட்டு நுகர்விற்காகமட்டும் உற்பத்தி செய்யப்படமாட்டாது. வளர்ந்துசெல் செலவுத் தொழிலில் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படாத பண்டம் உற்பத்தி செய்யப்படுவதற்குரிய நியதி இருக்கும். ஏனெனில், அப் பண்டத்தை ஏற்றுமதி செய்யும் நாட்டிலும் வளர்ந்துசெல் செலவு ஏற்படுமாதலால், ஓரளவிற்கு இறக்குமதி செய்யும் நாடு, தானே அப் பண்டத்தை உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்டுவிடும். இந் நிலையை 7·1 வரைபடம் காட்டுகிறது.




வரைபடம் 7·1 சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும் : போக்குவரத்துச் செலவு இல்லை

இப் படத்தில் இரண்டு நாடுகளுக்கும் பொதுவான, O-யிலிருந்து தொடங்கும் செங்குத்துக் கோட்டில் விலை காட்டப்படுகிறது. இறக்குமதி செய்யும் (M) நாட்டின் தேவை, அளிப்புக் கோடுகள் படத்தின் வலக்கைப் பக்கம் காட்டப்பட்டுள்ளன. அதன் அளவினை அறிவதற்கு O-ல் தொடங்கி வலப்புறமாகப் பார்க்கவும். ஏற்றுமதி செய்யும் (X) நாட்டின் (இடக்கைப் பக்கம்) அளவு O-யிலிருந்து இடப்புறமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நாடு களும் வாணிபமின்றித் தனித்து வாழ்வதாயிருந்தால், ஒவ்வொரு நாடும் எந்த விலையில், எவ்வளவு உற்பத்தி செய்யும் என்பதை அதனதன் தேவை, அளிப்புக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டும் இடத்திலிருந்து அறியலாம். இப்போது, இரண்டு நாடுகளும்

தமக்குள் வாணிபம் செய்வதாகவும், இவ் வாணிபத்தில் போக்குவரத்துச் செலவே இல்லாமலிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்போது செலவு-விலையினைக் காட்டும் செங்குத்து அச்சில் M என்னும் நாட்டின் அளிப்புக் கோட்டைவிட X நாட்டின் அளிப்புக் கோடு சிறிது கீழே தொடங்குவதோடு, ஒவ்வோர் அளவு உற்பத்தியிலும் அது மற்றதைவிடத் தாழ்வாகவே இருப்பதால், அந் நாடு இறக்குமதி நாட்டிற்குக் கோதுமை ஏற்றுமதி செய்யும். (இரண்டு அங்காடிகளுக்கும் பொதுவான) OP விலையில் ஏற்றுமதியும் (X_1X_2) இறக்குமதியும் (M_1M_2) சமமாகின்றன ; எனவே, இவ் விலையில்தான் சமநிலை ஏற்படுகிறது. X நாட்டில் வாணிபம் இல்லாதிருந்த நிலைமையில் நிலவிய விலையைக்காட்டிலும் இப்போதுள்ள விலை உயர்வாயுள்ளது. இறக்குமதி செய்யும் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வளர்ந்துசெல் செலவு நிலையில் அந் நாடு உற்பத்தியைப் பெருக்க வேண்டியுள்ளது தான் இதற்குக் காரணமாகும். ஆனால், M நாட்டில் இப்போது விலை தாழ்ந்துவிடுகிறது.

இப்போது போக்குவரத்துச் செலவைப் புகுத்துவோம். கோதுமையின் உற்பத்திச் செலவோடு ஒவ்வொரு புஷெல் கோதுமைக்கும் ஒரே அளவான கடத்தல் கட்டணம், இன்சூரன்ஸ் கட்டணம், சரக்கை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் செலுத்தும் கட்டணம் ஆகியவற்றையெல்லாம் கூட்டுவதன்மூலம் ஏற்றுமதிச் செலவு சேர்க்கப்படுகிறது. இதை வரைபடத்தின் வாயிலாகக்



வரைபடம் 7.2 போக்குவரத்துச் செலவுள்ள சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும்.

காட்டுவதற்கு, எந்த அளவு போக்குவரத்துச் செலவு ஏற்படு கிறதோ, அந்த அளவிற்கு 7·1 படத்திலுள்ள ஏற்றுமதி நாட்டின் சரி பாதிப் படத்தை உயர்த்திச் சரிப்படுத்தவேண்டும்.

7.2 வரைபடத்தில் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இப் படத்தின் இடபாதி OO′ அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. OO′ அளவு இறக்குமதி செய்யும் நாட்டிற்கேற்படும் போக்குவரத்துச் செலவாகும். இப்போது M நாட்டில் கோதுமை விலை (OP′) போக்குவரத்துச் செலவின் அளவால் (OO′) உயர்ந்துவிட்டது. இவ் விலை X நாட்டிலுள்ள விலையைவிட (O′P′) உயர்வாயுள்ளது.

இருந்தபோதிலும், போக்குவரத்துச் செலவின் அளவிற்கு விலை M நாட்டில் உயரவேண்டுமென்று பொருளல்ல. ஏனெனில், M நாட்டில் விலை உயரும்போது, தேவை சுருங்குவதால் அது வாங்கும் மொத்தக் கோதுமை அளவு (OM_2) முன்பைவிடக் குறைந்துவிடுகிறது. இவ்வாறு வாங்கும் அளவு குறைவதால் X நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதன் அளிப்புக் கோடான S_X-ன் வழியாக உற்பத்தி சுருங்கிக்கொண்டே வந்து முன்பைவிடத் தாழ்வான புள்ளிக்கு வந்துவிடுகிறது. இப் புள்ளியில் இறுதிநிலைச் செலவு (O′P′) முன்னர் இருந்ததைவிட (7.1 படத்தில் OP) குறைந்து உள்ளது. முன்பைவிடத் தாழ்வான ஏற்றுமதி விலையோடு இப்போது போக்குவரத்துச் செலவு சேர்க்கப் படுவதால், M நாட்டின் விலை போக்குவரத்துச் செலவின் அளவிற்கு உயராமல் அதைவிடக் குறைவான அளவிற்குத்தான் உயருகிறது.

X நாட்டில் குறைந்த விலையில் இப்போது உள்நாட்டு நுகர்வு ($O'X_1$) அதிகரிக்கிறது. அதேசமயம் M நாட்டில் உயர்ந்த விலையில் உள்நாட்டிலேயே செய்யப்படும் உற்பத்தி அளவு அதிகரிக்கிறது (அதாவது, 7.2 படத்தில் OM_1 அளவு 7.1 படத்தி லுள்ள OM_1 அளவைவிட அதிகம்). M நாட்டில் கோதுமை வாங்கும் மொத்த அளவு குறைந்துள்ள அதேசமயம், உள்நாட்டு உற்பத்தி அளவு அதிகரிப்பதால், இறக்குமதி அளவு முன்பைவிடக் குறைவாயுள்ளது. M_1-க்கும் M_2-க்கும் இடையே இப்போதுள்ள இடைவெளி (M நாட்டின் இறக்குமதி X_1X_2 X நாட்டின் ஏற்று மதிக்குச் சமம்) M_1-க்கும் M_2-க்கும் முன்பிருந்த இடைவெளியைக் காட்டிலும் குறைவாயுள்ளது.

இவ்வாறாக, போக்குவரத்துச் செலவு பன்னாட்டு வாணிப விலைச் சமன்பாட்டின் விளைவுகளை ஓரளவிற்குப் பயனற்றவை

யாக்குகிறது. போக்குவரத்துச் செலவின் அளவிற்கு இறக்குமதி நாட்டின் விலைகள், ஏற்றுமதி நாட்டின் விலைகளைக்காட்டிலும் உயர்வாகின்றன. வாணிப அளவுகூட முன்பைவிடக் குறைவாய் உள்ளது. எனவே, உள்நாட்டில் ஓரளவு உற்பத்தியாகும் விலையைக்காட்டிலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படும் பொருளின் விலையும் போக்குவரத்துச் செலவும் சேர்ந்து மலிவாக இருக்குமாயின் அப் பொருள் இறக்குமதி செய்யப்படும். ஏனைய பொருள்களனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப் படும். இவ்வாருக, பன்னுட்டுச் சிறப்புத் தேர்ச்சி கணிசமான அளவு குறைக்கப்படுகிறது. போக்குவரத்துச் செலவால் ஏற்படும் 'இயல்பான பாதுகாப்பு', பலவகைப் பொருள்களை ஓரளவிற்கோ அல்லது முழு அளவிற்கோ உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வாய்ப்பைக் கொடுக்கிறது.

போக்குவரத்துச் செலவின் தராதர விளைவுகள்

பொருள்களின் பருமனுக்கு அல்லது எடைக்கு அல்லது கொண்டு செல்லவேண்டிய தூரத்திற்கேற்பப் போக்குவரத்துச் செலவு இருக்குமாயின், அதைப்பற்றிய ஆய்வு மிக எளிமையாக இருக்கும். அவ்வாறிருந்தால்தான் இலேசான பொருள்களும் அதிக இடத்தை அடைக்காத பொருள்களும் வெகு தூரத்திற்குச் செல்லவும், பளுவான பொருள்களும் அதிக இடத்தை அடைக்கக் கூடிய பொருள்களும் சொற்ப தூரத்திற்குச் செல்லவும் ஏற்றதா யிருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்படும் போக்குவரத்துச் செலவு, ஏனைய பொருள்களுக்கேற்படும் செலவோடு தொடர் பில்லாதிருந்தால் மேற்கூறியவாறுதான் இருக்கும். ஆனால், உண்மையில் அவ்வாறு இல்லாததால் போக்குவரத்துச் செலவு பற்றிய ஆய்வு சிக்கலுடையதாகிறது. எவ்வகைப் பண்டங்களை ஏற்றிச் செல்வதாயிருந்தாலும், அதே சாதனங்கள்(உதாரணமாக, இருப்புப்பாதை, உருள்கலங்கள், இருப்புப்பாதை முடியும் இட வசதிகள்) ஏககாலத்தில் பயன்படுத்தப்படுவதால் போக்கு வரத்துப் பணிகள் இணைப்புப் பண்டங்களாகின்றன (joint products); இதனுல் அதன் செலவுகளும் பெரும்பாலும் இணைந்த செலவாகின்றன. குறிப்பிட்டதொரு பண்டத்தை ஏற்றிச் செல்வதற்குப் போக்குவரத்துப் பொதுச் செலவில் இந்தப் பகுதி செலவாகிறதென்ருே அல்லது அதன் நடைமுறைச் செலவில் இத்தனை விகிதம் அப் பண்டத்திற்குச் செலவாகிறதென்ருே கூற இயலாது.

இணைப்பாகச் செய்யப்படும் போக்குவரத்துச் செலவுகள் பெரும்பாலும், இந்தப் பண்டத்திற்கு இவ்வளவு கட்டணம் என்று

நிர்ணயிப்பதைப் பொறுத்தவரை, தன் விருப்பமுறைப்படி நிர்ணயிக்க வாய்ப்புக் கொடுக்கின்றன. பளுவான பண்டங்களுக்கும் இடத்தை அடைக்கக்கூடிய பண்டங்களுக்கும் பெருமளவு இடம் தேவைப்படுவதோடுமட்டுமன்றி, அவற்றை ஏற்றிச் செல்ல அதிக எரி பொருள்கள் செலவாவதால் அவற்றிற்கான கட்டணங்களும், அவற்றின் எடைக்கேற்ப அல்லது அவை கொள்ளும் இடத்திற்கேற்ப இருக்கவேண்டும் என்பது வாதப் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஆனல், இவ்விதக் கட்டணக் கொள்கையை மேற்கொண்டால், அதன் விளைவாக இரயில்வேக்கள், கப்பல்கள், தெப்பங்கள் (barge lines) ஆகியவை பெரும்பாலும் வேலையின்றி சும்மா இருக்க நேரிடும். போதுமான அளவு வருமானம் தரக்கூடிய சரக்குகளைப் பெறவேண்டுமாயின், பளுவான அல்லது இடத்தை அடைக்கக்கூடிய பண்டங்களுக்கான கட்டணம் குறைவாயிருக்கவேண்டும். அவ்வாருயின், இலேசான பண்டங்கள், இடத்தை அடைக்காத பொருள்கள், குறிப்பாக உயர்ந்த மதிப்புடைய பொருள்களுக்கு உயர்ந்த கட்டணத்தை (இணைப்புச் செலவின் விகிதப் பொருத்தமற்ற பங்கு) விதிக்கவேண்டியுள்ளது. இவ்வாறு கட்டணம் செலுத்தும் சக்திக்கேற்பச் சரக்குகளுக்குக் கட்டணம் நிர்ணயம் செய்யும் தத்துவத்தைத்தான், கப்பல் கம்பெனிகளும் அவற்றின் பதிலாட்களும் பொதுவாக மேற்கொள்கின்றனர். அவ்வாறு மேற்கொள்ளும்போது, கப்பல் கம்பெனிகளுக்குள் இருக்கும் போட்டியினையும், நியாயமானதுதாஞ என்ற மன நிறைவையும் மனத்தில் கொண்டு கட்டணங்களைச் சீராகவே வசூலிப்பர். எனவே, அதிக மதிப்பில்லாததும் பருமஞன அல்லது பளுவான பொருள்களான நிலக்கரி, இரும்புக் கனி, உணவு தானியம், குப்பைகூளம், சுத்தி செய்யப்படாத எண்ணெய் ஆகியவற்றிற்குச் சராசரி மைல் ஒன்றுக்கு ஓர் அலகிற்குக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். மாருக, புகைப்படக் கருவிகள், நகைநட்டுகள், கடிகாரங்கள்போன்ற உயர்ந்த மதிப்புடைய பண்டங்களுக்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும்.

திரும்பும் பயணத்திற்குக் குறைந்த கட்டணம் இருப்பதற்கும் இணைப்புச் செலவுகள்தான் காரணமாகின்றன. பெரிய துறைமுக நகரங்களிலிருந்து எல்லா திசைகளுக்கும் இரயில், கப்பல், விமானம், லாரி முதலிய போக்குவரத்து சாதனங்கள் சென்றுகொண்டிருக்கும். எந்தப் போக்குவரத்து சாதனமாயிருந்தாலும், அதற்குச் செல்லும் பயணம் என்றும், திரும்பும் பயணம் என்றும் இரண்டு பயணங்கள் உள்ளன. செல்லும் பயணத்திற்கும் திரும்பும் பயணத்திற்கும் வேண்டிய அளவு சரக்குக் கிடைக்குமாயின், இரண்டிற்கும் ஏறக்குறைய ஒரே அளவு கட்டணம்தான் இருக்கும்.

ஆனால், பெரும்பாலும் குறிப்பிட்டதொரு மார்க்கத்தில் ஒரு பயணத்திற்கு மறு பயணத்தைக்காட்டிலும் அதிகச் சரக்குக் கிடைக்கிறது. அவ்வாருயின், குறைந்த கட்டணம் என்பதுபோன்ற தூண்டுதல் இல்லாதிருப்பின், இரயிலோ, கப்பலோ வேண்டிய அளவு பாரமின்றியோ அல்லது சிறிதுகூடப் பாரமின்றியோ திரும்ப வேண்டியதிருக்கும். அப்போது அப் பயணத்திற்குக் கட்டணம் குறைக்கப்பட்டால் ஓரளவு சரக்கு அதிகரிக்கக்கூடும். எனவேதான், கிளிவ்லேண்ட் (Cleveland) அல்லது எரியிலிருந்து (Erie) டுலூத்திற்குச் (Duluth) செல்லும் நிலக்கரிக்குக் குறைந்த கப்பல் கட்டணமும், டுலூத்திலிருந்து கிளிவ்லேண்டிற்கோ அல்லது எரிக்கோ செல்லும் இரும்புக் கனிப்பொருளுக்கு உயர்ந்த கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

லண்டனிலிருந்து அயல்நாடுகளுக்குக் கப்பல் மூலம்அனுப்பப்பட்ட கெட்டியான சரக்குகள் சுவையான மற்ருேர் எடுத்துக்காட்டாக உள்ளது. 1930ஆம் ஆண்டிற்கு முன்னர் லண்டனிலிருந்து வெளியேறிய கப்பல் சரக்குகள், வெளிநாடுகளிலிருந்து லண்டனுக்கு வந்த சரக்குகளைக்காட்டிலும் அதிகமாயிருந்தது; எனவே, இரண்டுக்கும் ஏற்பட்ட பொதுச் செலவுகளில் பெரும் பகுதி லண்டனிலிருந்து வெளியேறிய சரக்குகளின்மீது சுமத்தப்பட்டது. அவ்வாறு உயர்ந்த கட்டணம் கட்டி வெளியேறிய சரக்குகளில் ஐந்தில் நான்கு பாகம் நிலக்கரி. பிரிட்டிஷ் வாணிப அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களின் குவிந்த விளைவுகள் அப்போதுதான் உணரப்பட்டன. பிரிட்டனின் நிலக்கரிச் சுரங்கங்கள் காலியாகிக்கொண்டே வந்ததாலும், அதனல் நிலக்கரி உற்பத்தித் தொழிலில் வளர்ந்துசெல் செலவு ஏற்பட்டதாலும், ஐரோப்பாவைத் தவிர இதர அங்காடிகளில் ஏனைய எரிவகைப் பொருள்களோடு பிரிட்டிஷ் தொழில் போட்டியிட முடியாமல் போய்விட்டது. அதோடு, 1913ஆம் ஆண்டிற்குப்பின் தொழிற்சாலை சக்திக்கெனத் தேவைப்பட்ட நிலக்கரி குறைந்துகொண்டே சென்றது. 1929-க்கும் 1931-க்குமிடையே வெளிநாடுகளிலிருந்து லண்டனுக்கு வந்த கெட்டியான சரக்கு 8 சதவீதம்மட்டும் குறைந்த அதேசமயம், லண்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கப்பல் சரக்கு (பெரும்பாலும் நிலக்கரி) 31 சதவீதம் குறைந்துவிட்டது. எனவே, கப்பல் போக்குவரத்துச் செலவின் பெரும் பகுதி லண்டனுக்கு வந்த சரக்குகளின்மீது சுமத்தப்பட்டது. அதாவது, ஏற்றுமதிக்கான கப்பல் கட்டணம் மிகத் தாழ்ந்து இறக்குமதிக்கான கட்டணம் உயர்ந்தது.[9]

[9] 1931ஆம் ஆண்டு மே மாதம் தென் அமெரிக்காவிற்கு ஏற்றுமதியான கப்பல் சரக்கின் கட்டணம் முந்திய ஆண்டைவிட 38 சதவீதமும், இந்தியாவிற்கு ஏற்றுமதி

இவ்வாறு பாகுபாடுடைய கட்டண வீதங்களின் அம்சங்களில் பல முக்கியமானவை. அவற்றில் ஓரிரண்டைமட்டும் இங்கு பார்ப்போம். பொதுவாக, கிட்டப் பயணத்தைக்காட்டிலும் எட்டப் பயணத்திற்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும் வழக்கம் உண்டு. ஏன் இவ் வேறுபாடு என்று கேட்டால், எட்டப் பிரயாணத்திற்கு அதிகப் பிரயாணிகளையோ அல்லது சரக்குகளையோ கவருவதற்காக இருக்கலாம்; அல்லது (அமெரிக்காவில் அட்லான்டிக் கடற்கரை நகரங்களுக்கும் பசிபிக் கடற்கரை நகரங்களுக்குமிடையே இரயில் போக்குவரத்திற்கும் கப்பல் போக்குவரத்திற்குமுள்ள போட்டியைப்போல்) போட்டியின் காரணமாக இருக்கலாம்; அல்லது போக்குவரத்தில் ஏற்படும் பொதுச் செலவுகள் நீண்ட பயணத்தில் குறைந்துவிடுவதால் இருக்கலாம். நீண்ட தூரப் பயணத்திற்கு ஏற்படும் பயணச் செலவைப் பொறுத்தவரை, இரயில் அல்லது மோட்டார் வாகனத்தைவிடக் கால்வாயில் அல்லது ஆற்றில் செல்லும் தெப்பப் பயணத்திற்கு ஏற்படும் செலவு மிகக் குறைவு. காரணம், தெப்பப் போக்குவரத்துச் சாதனத்திற்கேற்படும் பொதுச் செலவு மற்றவைகளுக்கேற்படுவதைக்காட்டிலும் மிகக் குறைவு. ஆனால், தெப்பங்களில் சரக்குகளை ஏற்றிய பின்னர், அவற்றை வெகு தூரத்திற்கு அனுப்பும் செலவு, குறைந்த தூரத்திற்கேற்படுவதைவிட அதிகமாயிருக்கும். லாரியிலோ இதற்கு நேர்மாறாக, சமீப தூரத்திற்கு அதிகச் செலவும் வெகு தூரத்திற்குக் குறைந்த செலவும் ஏற்படும். இரயில் பயணத்தில் இவ்விரண்டு நிலைமைகளுக்கும் இடைப்பட்ட நிலைமை இருக்கும்.

போக்குவரத்துச் செலவும் தொழிலிடச் செறிவும்

எல்லாப் பொருள்களுக்கும் ஓரேமாதிரியான போக்குவரத்துச் செலவு என்று இருக்குமானால், விநியோகிக்கப்படும் பொருள்களின் விலை ஏறி, அதனால் வாணிப அளவு குறைந்துவிடும். ஆனால், தொழிலிடச் செறிவைப் பொறுத்தவரை, பன்னாடுகளுக்கிடையே நிலவும் விலை வித்தியாசத்தைக்காட்டிலும் போக்குவரத்துச் செலவு அதிகமாயிருந்தால்மட்டுமே தொழிலிடச் செறிவு பாதிக்கப்படும். எனினும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் போக்குவரத்துச் செலவு பண்டத்திற்குப் பண்டம் வேறுபடுவதோடு மட்டு

யான சரக்குக் கட்டணம் 20 சதவீதமும் குறைந்தது. மாறாக, இந் நாடுகளிலிருந்து லண்டனுக்கு வந்த சரக்குகளின் கட்டணம் முறையே 75சதவீதமும் 34சதவீதமும் உயர்ந்தது. இந்த எடுத்துக்காட்டின் புள்ளிவிவரங்களனைத்தும் Carl Major Wright என்பாரின் 'Convertibility and Triangular Trade as Safeguards Against Economic Depression' என்ற சுவையான கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை. இக் கட்டுரையைச் செப்டம்பர் 1955–ல் வெளிவந்த **Economic Journal LXV**–ல் காணலாம்.

மன்றி, பயண தூரத்திற்கேற்ற விகிதாசாரத்தில் எப்போதும் இருப்பதில்லை. எந்தப் பண்டமாயிருந்தாலும், அதை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள்கள் தேவைப்படுவதால், மூலப் பொருள்களுக்கான கட்டணம், முடிவுப் பொருள்களின் கட்ட ணத்தைவிட மலிவாயிருக்கும் என்ற உண்மை இங்கு முக்கிய மாகக் குறிப்பிடத்தக்கது. மேலும், உற்பத்தியிலுள்ள செய் முறைகளை ஆயுமிடத்து, அவை பயன்படுத்தும் மூலப்பொருள் களின் எடை குறையும் இயல்புடையனவாக இருக்கலாம்; அல்லது மாருக, கடைசி உற்பத்தி நிலையில் அம் மூலப்பொருள்களின் அல்லது முடிவுப் பொருள்களின் எடை அதிகப்படுவதா யிருக்கலாம்.

இவ்விதச் சிக்கல்கள் இருப்பதால் உற்பத்தித் தொழிலை நிறுவு வதற்குச் சிறந்த இடம் எது என்பதை நிர்ணயம் செய்வது மேலும் கடினமாகிவிடுகிறது; அதுபற்றிய பொதுமைகளை எளிதாகப் புணர முடியாது போய்விடுகிறது. எனினும், எளிய விரிவான விதியைப் புனைவது கடினம் என்ருலும்கூட, எப் பண்டங்கள் எந்த இடங்களில் உற்பத்தி செய்யப்பட நேரிடும் என்பதை அடிப்படை யாகக்கொண்டு பண்டங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, மூலப்பொருள்கள் தொடர்பிணைவுடைய பண்டங்கள் (material oriented commodities), அங்காடித் தொடர் பிணைவுடைய பண்டங்கள் (market-oriented commodities), இவ்விரு தொடர்பிணைவிற்கும் இடையிலுள்ள (neutral) பண்டங்கள் எனப்படும்.[10]

மூலப் பொருள்கள் தொடர்பிணைவுடைய பண்டங்கள்

மூலப் பொருளை (அல்லது எரிபொருளை) அதன் அங்காடிக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவு, அதன் முடிவுப் பொருளை அங்காடிக்கனுப்புவதற்கேற்படும் செலவைக் காட்டிலும் அதிகமாயிருந்தால், அப் பண்டத்தின் செய்தொழில் அல்லது முடிவான உற்பத்தித் தொழில் மூலப்பொருள் கிடைக்கும் இடத்திற்கருகாமையில் அமைய முற்படும். செய்முறையின்போது மூலப்பொருளில் அதிகக் கழிவு ஏற்படுமாயின், பொதுவாக அத் தொழில் முலப்பொருள் கிடைக்குமிடத்தில்தான் நடைபெறும். ஏனெனில், கழிக்கப்படவேண்டிய பொருளையெல்லாம் சேர்த்து கப்பலில் ஏற்றுவது அறியாமை. உதாரணமாக, மரக்கட்டைகள் வெட்டும் தொழில் மரம் அடர்ந்த காடுகளில்தான் சாதாரணமாக

[10] 'மூலப் பொருள்கள்' என்பது செய்முறைக்கு வேண்டிய முக்கியமான கச்சாப் பொருளை அல்லது எரிபொருளைக் குறிக்கும். கச்சாப் பொருள் உற்பத்தி (ஆதாரமான செய்தொழில்) அதன் இயற்கை வளமுள்ள இடங்களில்தான் நடைபெறும்.

நடைபெறுகிறது. எனவே, மரப்பட்டை, மரத்தூள், இன்னும் இதர கழிவுப் பொருள்களை அவ் இடத்திலேயே கழித்துவிட்டு, மரக்கட்டைகள்மட்டுமே அங்காடிக்கு அனுப்பப்படுகின்றன. மர அறுவைத் தொழிலுக்குப் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள வான்குவர் (Vancouver) என்ற இடம் மிகப் பிரபலியமானதாகும். இவ் இடத்திற்கு வடக்கில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள காடுகளில் ஊசியிலை வகை மரங்களை வெட்டிச் சாய்த்து, அவற்றைக் கட்டு மரங்களாகக் கட்டி ஆற்றின் வழியாக (மலிவாக) வான்குவர் நகரத்திற்கு அனுப்புகிறார்கள். இந் நகரத்தில் போதுமான தொழிலாளிகளும், தொழில் மயமானதொரு நகரத்தில் கிடைக்கக்கூடிய புறச் சிக்கனங்களும் இருப்பதால், மர அறுவைக்கு அது சிறந்த இடமாக விளங்குகிறது. இங்கு, அறுத்துச் செம்மையாக்கப்பட்ட மரக்கட்டைகள் எல்லா நாடுகளுக்கும் கப்பல்மூலம் அனுப்பப்படுகின்றன.

பருத்தியிலிருந்து விதைகளைப் பிரித்தெடுத்து மூட்டையில் செலுத்தல் (நூல் நூற்பும் துணி நெய்தலும் அல்ல), கரும்பு, பீட்ரூட், குங்கிலியம், கற்பூரம் ஆகியவற்றிலிருந்து சாறு பிழிதல், காய்கறிகளை டப்பாக்களில் வைத்து அடைத்தல்,மண் பாண்டங்கள் செய்தல், ஆகிய தொழில்களும் மூலப்பொருள் தொடர்பிணைவுடைய செய்முறைக்கு எடுத்துக்காட்டாகும். அலுமினியம் சுத்தி செய்யும் தொழிலை எடுத்துக்கொண்டால், இதற்குப் பெருமளவில் மின்சக்தி வேண்டியுள்ளது. எனவேதான், இதன் மூலப்பொருள் (பாக்சைட்) கிடைக்கும் ஜமெய்கா, பிரிட்டிஷ் கயானா ஆகிய இடங்களில் இத் தொழில் நிறுவப்படாமல், வாஷிங்டனிலுள்ள கிராண்ட் கௌலி டாமிலும் (Grand Coulee Dam) பிரிட்டிஷ் கொலம்பியாவிலும் நிறுவப்பட்டுள்ளது.

இரும்பு எஃகு தொழிலிலும், இன்னும் இதர பொறிவழியாக்கத் தொழில்களிலும் நிலக்கரிதான் பெருமளவில் பயன்படுத்தப்படும் எரிபொருளாக உள்ளது.[11] மேற்கு ஐரோப்பாவிலுள்ள

[11] இரும்பு உருக்கும் தொழிலில் (அதாவது, ஊதுலைகளில் தேனிரும்பு உற்பத்தி செய்வதில்) இரும்புக் கனிப் பொருளைவிட நிலக்கரிதான் இடச்செறிவுக்குப் பொருத்தமான ஆதாரமாக அமைகிறது. ஏனெனில்,சுட்ட நிலக்கரியின் பளு, இரும்புத் தாதுப் பொருளைக்காட்டிலும் அதிகமானது. அதோடு, அதைப் பயன்படுத்தும்போது அதன் எடை குறைந்துவிடுகிறது. (முன்பெல்லாம் ஒரு டன் இரும்புத் தாதுப் பொருளுக்குப் பல டன் நிலக்கரி தேவைப்பட்டது. பல்வேறு தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக நிலக்கரிக்கும் இரும்புக் கனிப் பொளுக்கும் உள்ள விகிதம் 2 : 1–க்கு குறைக்கப்பட்டுவிட்டது.) எண்ணெய், மின்சாரம், அணுசக்திபோன்ற இதர எரிபொருள்கள் இருப்பினும் அவற்றை நிலக்கரிக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியாது. ஏனெனில், இரும்புக் கனியை உருக்குவதற்குக் கோக் (சுட்ட நிலக்கரி) எரிபொருள் மட்டுமல்ல. அது பிராணவாயுவை வெளியேற்றுகிறது. அதோடு, இரும்புக் கனியில் காணப்படும் ஆக்ஸிஜனுடன் சேர்ந்து கார்பன்டை ஆக்ஸைடாகவும் கார்பன் மொனோக்ஸைடாகவும் மாறி வெளியேறுவதன்மூலம் இரும்பைச் சுத்தம் செய்கிறது.

பெரிய தொழிற்சாலைகள் தாதுப் பொருளான நிலக்கரி கிடைக்கும் ரூர் (Ruhr) என்ற இடத்தில்தான் அமைந்தன. இரும்பு, எஃகு தொழிற்சாலைகள்தாம் முதலில் தோன்றின. இத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்புக் கனி லொரேய்ன் (Lorraine) என்ற இடத்திலும், பின்னர் வட ஸ்வீடனிலும் (northern Sweeden) கிடைத்தது. இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் ஏற்பட்ட பின்னர், நிலக்கரியை எரிபொருளாகவும், பளுவான எஃகு பாளங்கள், தகடுகள் முதலியனவற்றைச் காச்சாப் பொருள்களாகவும் பயன்படுத்தும் கன இரும்பு, எஃகு கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தோன்றின.

பிட்ஸ்பர்க் (Pittsburgh) மாவட்டத்திலுள்ள எஃகு தொழிற்சாலைகள் 1790-ல் அப் பகுதியில் இரும்புக் கனிப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தோன்றின. 1860ஆம் ஆண்டின்போது இச் சுரங்கங்கள் வெறுமையாகியபின், மிச்சிகனின் மேல் பகுதியிலும் மின்னெசொடா (Minnesota) என்னும் இடத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட உயர்ந்த ரக இரும்புக் கனி பயன்படுத்தப்பட்டது. நிலக்கரி கடத்தும்போது பளுவில் குறைகின்ற பண்புடையது. எனவேதான் நிலக்கரி கிடைக்கும் பிட்ஸ்பர்க் மாவட்டத்திலேயே எஃகு தொழிற்சாலைகள் நிலைத்துவிட்டன. அத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்புக் கனி டுலூத்திலிருந்தும் சுப்பீரியரிலிருந்தும் (Superior) படகின்மூலம் கிளிவ்லாந்திற்கும் எரிக்கும் கொண்டுவரப்பட்டு, பின்னர் அங்கிருந்து பிட்ஸ்பர்க்கிற்கு இரயில் மூலம் அனுப்பப்படுகிறது. இவ்வாறு இரும்புக் கனிப் பொருளைப் பிட்ஸ்பர்க்கிற்குக் கொண்டு செல்லும் இரயில்கள் திரும்பி வரும்போது பாரமின்றிக் காலியாக வருவதற்குப் பதிலாக, நிலக்கரிச் சுமையை ஏற்றி வரட்டும் என்பதற்காக ரயில்வே கம்பெனிகள் திரும்பு பயணத்திற்கான கட்டணங்களைக் குறைத்தன. இவ்வாறு, வழியிலுள்ள ஆற்றங்கரை நகர்களின் வழியாக இரும்புக் கனிப் பொருளும் நிலக்கரியும் கடந்து சென்றதால் கேரி (Gary), கிளீவ்லாந்து, எரி, டொலெடோ (Toledo), டெட்ராயிட் போன்ற இடைவழி நகரங்களிலும் எஃகு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது போன்ற காரணங்களால்தான் பெத்லஹெம் எஃகு கார்பரேஷன் (Bethlehem Steel Corporation) தொழிற்சாலை, மேரிலாந்திலுள்ள (Maryland) ஸ்பேரோஸ் பாயின்ட் (Sparrow's Point) என்னும் இடத்திலும், யு. எஸ். எஃகு கம்பெனியைச் (U. S. steel plant) சார்ந்த நிறுவனம் ஃபிலடெல்ஃபியா (Philadelphia) நகரத்திலும் அமைந்தன. இத் தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே கிடைத்த நார்ஃபோக் கோக்கும், சிலி, வெனெசுவெலாவிலிருந்து குறைந்த கட்டணத்தில் இறக்குமதியாகும்

இரும்புக் கனியும், அருகிலேயே இருக்கும் பெரிய கிழக்கிந்தியச் சந்தைகளுமே இதற்குக் காரணங்களாகும்.

அங்காடித் தொடர்பிணைவுடைய பண்டங்கள்

நிலக்கரியைப்போன்று பளு இழக்கக்கூடிய தன்மையுடைய மூலப்பொருள்களோ அல்லது எரிபொருள்களோ அவை கிடைக்கின்ற இடங்களிலேயே கூடுமானவரை பயன்படுத்தப்படு கின்றன; இதற்கு மாறாக, பளு அதிகரிக்கும் பொருள்கள், அல்லது பக்குவப்படுத்தும்போது மேலும் பருமனாகிவிடும் பொருள்கள் அங்காடியுள்ள இடங்களுக்கே பெரும்பாலும் அனுப்பப்படு கின்றன.[12] மோட்டார் கார் உறுப்புகளைப் பொருத்தும் தொழில் (automobile assembly) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மோட்டார் கார் உறுப்புகள் பெரும்பாலும் டெட்ராய்ட் நகரிலும் ஃபிளின்ட் (Flint) நகரிலும்தான் செய்யப்படுகின்றன. இவ்விடங் களில் இத் தொழில் ஆரம்பித்ததற்குக் காரணம், இங்கு இருந்த மூலதனமும் தொழில் துணிவுடையோரும்தான். அடுத்து, மூலப் பொருள்களும் எரிபொருள்களும் அண்மையில் கிடைத்ததால், அது அங்கேயே நிலைத்துவிட்டது. அருகிலுள்ள அங்காடிகளுக் கென்றுதான் இங்கு மோட்டார் கார்கள் பொருத்தப்படுகின்றன. வெகு தொலைவிலுள்ள அங்காடிகளுக்கெல்லாம் (உள்நாட்டு, வெளிநாட்டு அங்காடிகளுக்கு) குறைந்த இடம் கொள்வதற்கேற்ற பொருத்தப்படாத பாகங்களைத்தான் ஆங்காங்கேயுள்ள நிறுவனங் களுக்கு அனுப்புகின்றனர். கொகா—கோலா (coca-cola) பானத்தையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இது பெரும்பாலும் அட்லாந்தாவில்தான் (Atlanta) உற்பத்தியாகிறது. உலகிலுள்ள பல நாடுகளுக்கும் இது அப்படியே அனுப்பப்படு கின்றது. அங்கு இத்துடன் சோடாவைச் சேர்த்துப் பானமாகச் செய்கின்றனர். போதை தராத பண்டங்களைப்போன்று பீர் என்ற பானமும் மையும் பளுவை அதிகரிக்கச் செய்யும் பண்டங் களாகும். எனவே, இவையும் அங்காடிக்கருகில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ரொட்டி, வேக வைத்த உணவுப் பண்டங்கள், பூக்கள், ஐஸ், பால்போன்ற விரைவில் அழியும் பண்டங்களும் அங்காடித் தொடர்பிணைவு கொண்டவையாகும். பச்சைக் காய்கறிகளை

[12] பக்குவப்படுத்தும்போது பளு அதிகரிக்காமல் பருமன் அதிகரித்தாலும், பளு அதிகரிப்பதாகத்தான் கொள்ளவேண்டும். ஏனெனில், பருமன் குறைந்த பண்டத்தை விடப் பருமன் அதிகமுள்ள பண்டம், கப்பலில் அதிக இடம் கொள்வதால் அதற்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கப்பலில் ஏற்றிச் செல்லும்போது உடைந்து விடக்கூடிய பண்டங்களுக்கும் இது பொருந்தும். உறுதியான பண்டங்களைவிட உடைந்துபோகக்கூடிய பண்டங்களுக்குக் கப்பலில் அதிக இடம் தேவை.

எடுத்துக்கொண்டால், வெகு தொலேவிலிருந்து குளிர்ச்சியாக்கப் பெற்ற உணவுப் பண்டங்களின் போட்டி அதிகரித்துக்கொண்டிருந்த போதிலும், அவையும் இவ் வகையைச் சேர்ந்தவையே.

நுகர்வோருக்கு நேரடியாகச் செய்யவேண்டிய பணிகள் அந்தந்த அங்காடிகளிலேயே செய்யப்பட வேண்டியவை. இதற்கு உதாரணமாக, சலவைத் தொழில், சினிமாக் கொட்டகைகள், ஆவி நிரப்பும் தொழில் ஆகிய ஸ்தாபனங்களைக் கொள்ளலாம்.

இரு தொடர்பிணைவுமற்ற பண்டங்கள்

சில பண்டங்கள் அல்லது குறிப்பாகக் கூறவேண்டுமாயின், உற்பத்தியிலுள்ள சில செய்முறைகள் மூலப்பொருள்களின் கிடைப்பாலோ அல்லது அங்காடிக்குள்ள தூரத்தாலோ கவரப்படாதவையாயுள்ளன. அதாவது, அத் தொழில்கள் மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்தில் அமைக்கப்படலாம்; அல்லது அங்காடிக்கருகில் நிறுவப்படலாம் (அல்லது ஒருவேளை இரண்டிற்கும் இடையேயுள்ள இடங்களில் ஆரம்பிக்கப்படலாம்). உற்பத்திச் செலவினை வைத்துப் பார்க்குமிடத்து, போக்குவரத்துச் செலவுகள் அவ்வளவு முக்கியமல்ல என்று இருக்கும் தொழில்கள், அல்லது செய்முறையின்போது எடை கூடாமலும் குறையாமலும் இருக்கும் தொழில்கள் இதற்குச் சான்றுகளாகும். இவ் இரு வகைகளில் தீப்பெட்டி, பிளாஸ்டிக், புகைப்படக் கருவிகள், சிகரெட் லைட்டர், சின்னஞ்சிறு உலோகப் பண்டங்கள் ஆகியவை செய்யும் தொழில் முதல் வகையையும், நெசவுத் தொழில், சிமென்ட், செருப்பு, தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியன இரண்டாவது வகையையும் சேர்ந்தவைகளாகும்.

போக்குவரத்துச் செலவுகள் அவ்வளவு முக்கியமல்ல என்பதாலோ, அல்லது அங்காடிக்கருகில் இருந்தாலும் மூலப் பொருள் கிடைக்கும் இடத்தருகில் இருந்தாலும் ஒன்றுதான் என்பதாலோ போக்குவரத்துச் செலவின் கணிப்பு முக்கியமல்லாத தொழில்களின் இடச் செறிவை இதர சக்திகள் நிர்ணயிக்கும். அதாவது, உணவு தானியத் தொழில், மரம் அறுக்கும் தொழில், மீன் பிடித்தல்போன்ற தொழில்களில் உள்ளதைப்போல் காரணிகளின் தராதரப் பேறும், அவற்றின் விலேகளும் தொழிலிடத்தை நிர்ணயிக்கும் சக்திகளாக இருக்கும்.

ஒரு தொழில் ஏதோ தற்செயலாகக் குறிப்பிட்டதோர் இடத்தில் அமைந்துவிட்டதாக இருந்தால், அதை நம் ஆய்வி

லிருந்து புறக்கணித்துவிடக்கூடாது. ஏனெனில், தனித் திறன் பெற்ற தொழிலாளிகள் தேவைப்படும் தொழில்கள் பல உள்ளன. எனவே, அவ் வகைத் தொழில்கள் எவ்வளவு சீக்கிரம் வளர்ச்சி பெற்று விரிவடைய முடியும் என்பது அத் தொழில்களுக்குக் கிடைக்கக்கூடிய தனித் திறன் பெற்ற தொழிலாளரைப் பொறுத்த தாகிறது. அவ்வாறுயின், ஆரம்ப காலத்தில் இவ்வகைத் திறன் பெற்ற தொழிலாளிகள் எவ்வாறு அங்கு இருந்திருக்க முடியும்? எங்கிருந்து அவர்கள் வந்திருக்கக்கூடும்? மக்கள் தொகை அதிக மாயிருக்கும் ஒரு நகரில் படிப்படியாக வளர்ச்சி பெற்ற சிறப்புத் தேர்ச்சியின் காரணமாக அத் தொழிலாளிகள் அவ்வகைத் திறனைப் பெற்றிருக்கக்கூடும். அப்போது இன்னும் பல தொழிலாளி களைக் கவருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். அல்லது அவ் வகைத் தொழிலாளிகள் பொருளாதாரக் காரணங்களின்றி, வேறு ஏதோ காரணத்திற்காக அல்லது எவ்விதக் காரணமுமின்றி வேறு இடங்களிலிருந்து அங்கு வந்து குடியேறியிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஜெர்மனியிலிருந்து வெளியேறிய சில கண்ணுடிக் கடைசல் வேலை செய்வோர் (lens grinders) தற்செயலாகத்தான் ராசெஸ்டரில் (Rochester) வந்து குடியேறினர். உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, தொலைநோக்கிக் கண்ணுடிகளுக்கும் பைனுக்குலர் களுக்கும் ஏராளமான ஆர்டர்கள் கிடைத்தன. இதனுல் இத் தொழிலில் மேலும் பலர் தேர்ச்சி பெற்றனர். சில ஆண்டுகளுக்குள் ராசெஸ்டர் நகரம் இத் தொழிலால் பெருமையும் செழிப்பு மடைந்தது. யுத்தம்முடிந்த பின், புகைப்படத் தொழிற்சாலைகள் இந் நகரில் தோன்றியதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அல்லது, தொழிலைத் தொடங்குவதற்கு நினைக்கும் ஒருவரோ அல்லது சிலரோ குறிப்பிட்ட நகரில் வாழ நேர்ந்ததால் அந் நகரிலேயே அத் தொழிலைத் தொடங்கியிருக்கலாம். சொந்த ஊர் என்ற இயல்பான பற்றுதலால் அவ் ஊரை விட்டு வெளியேற மனமின்றி, தம் தொழிலை அங்கேயே தொடங்கியிருக்கக்கூடும். அவ்வாறு தொடங்கியபின், தொழிலுக்கு மேலும் வேண்டிய மூலதனத்தை அந் நகரிலேயே பெற்றிருக்கக்கூடும். டெட்ராயிட் நகரிலுள்ள அமெரிக்க மோட்டார் கார் தொழிற்சாலை இக் காரணத்திற்காகவே அங்கு தொடங்கப் பெற்றதாய்த் தெரிகிறது. ஏனெனில், அத் தொழிலை அங்கு ஆரம்பித்த சமயம் வேறுபல நகரங்கள் பல விதங்களில் அத் தொழிலுக்குச் சாதகமாயிருந்தன.

முடிவு

போக்குவரத்துச் செலவுகள், ஒரு பகுதியில் அல்லது நாட்டில் ஏற்படும் இயல்பான சிறப்புத் தேர்ச்சியின் சக்திகளை மாற்றிவிடுகிறதேயன்றி, அச் சக்திகளே இல்லாமல் செய்துவிடுவதில்லை என்பது வெளிப்படை. சுரங்கத் தொழில்களைப் பொறுத்தவரை, அவற்றின் இடச் செறிவு இயற்கை வளத்தால்தான் நிர்ணயிக்கப் படுகின்றன என்று சொல்லத் தேவை இல்லை. இயற்கை வளச் சாதனங்களாலோ அல்லது போக்குவரத்துச் செலவாலோ தூண்டப் பெறாத தொழில்கள் பல உள்ளன. அவை பெரும்பாலும் எங்குக் காரணிப் பேறுகள் சாதகமாக உள்ளனவோ அங்கு நிறுவப்பட முற்படும்.

அங்காடித் தொடர்பிணைவுடைய உற்பத்திப் பண்டங்களைப் பொறுத்தவரை, ஒன்று குறிப்பிடத்தக்கது. அதாவது, பெரிய அங்காடியுள்ள இடங்களிலெல்லாம் மிக முக்கியமான உற்பத்திக் காரணிகளான மூலதனமும் உழைப்பும் தாமாகவே பெருகிவிடுகின்றன. தொழிலிடச் செறிவைப்பற்றிய உண்மையைப் பொதுமையாகக் கூறின், போக்குவரத்துச் செலவின் தூண்டுதலும் இயற்கை வள அமைப்புத் தூண்டுகோலும் ஒரே போக்கில்தான் அமைகின்றன. ஆனல், முடிவான உற்பத்தி நிலையில் பொருள்களின் பளு அல்லது பருமன் அதிகரிப்பதாக இருந்தால், இயற்கை வளச் சாதனத் தூண்டுதலைவிட போக்குவரத்துச் செலவு தூண்டுதல்தான் தொழிலிடச் செறிவை நிர்ணயிப்பதில் வலுவானதாக இருக்கும். எனவேதான், செய்முறையின் கடைசி நிலை தல அங்காடிகளுக்கருகில் மேற்கொள்ளப்படுகிறது.

தொழிலிடச் செறிவில் கனிப் பொருளைத் தோண்டி எடுக்கும் வேலையைத் தவிர, ஏனைய உற்பத்தி நிலையிலுள்ள வேலைகளில் போக்குவரத்துச் செலவின் பங்குதான் அதிகமாயிருக்கும். மாறாக, செம்பு உருக்குதல், சக்தி உற்பத்தி செய்தல், மரம் அறுத்தல் போன்ற தொழில்களில் மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலேயே தொழிற்சாலைகள் அமைய நேரிடுவதால், காரணிப் பேறு முக்கியமானதாகிவிடுகிறது. இருந்தபோதிலும், மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலேயே அடிப்படையான உற்பத்தி நிலையை மேற்கொள்வதால் கிடைக்கும் போக்குவரத்துச் செலவு மிச்சம், மூலதனம், நிர்வாகிகள், உழைப்பாளிகளைக்கூட அவ் இடத்திற்கு இடம் பெயரத் தூண்டும் அளவிற்குப் பெருமளவினதாயிருக்கலாம்.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்

Anstey, Vera, 'The Economic Development of India'. London: Longmans, Green & Co., 1952-ல் பதிப்பித்தது. சாதி முறையும் சமூக அமைப்பும் உற்பத்தியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதற்குப் பல சான்றுகள் தருகிறது. (குறிப்பாக 46-64 பக்கங்களைப் பார்க்க).

Caves, Richard E., 'Trade and Economic Structure.' Cambridge, Mass.: Harvard University Press, 1960-ல் பதிப்பித்தது. காரணி அளிப்புபற்றி 4ஆம் அதிகாரம் விவாதிக்கிறது.

Losch, August, 'The Economics of Location'. New Haven, Conn.: Yale University Press, 1954-ல் பதிப்பித்தது. இட அமைப்பின் பொதுச் சமநிலைக் கோட்பாட்டைப் புணருவதற்கு முயல்கிறது.

Isard, Walter, 'Location and Space-Economy'. New York: The Technology Press & John Wiley & Sons, 1956-ல் பதிப்பித்தது. தொழிலிடச் செறிவுக் கோட்பாட்டிற்கு நவீன விளக்கத்தைத் தருகிறது.

Hoover, Edgar M., 'The Location of Economic Activity'. New York: McGraw-Hill Book Co., 1948-ல் பதிப்பித்தது. தொழிலிடச் செறிவைப் பாதிக்கும் பிற வாய்ப்புச் செலவினையும் இதர காரணிகளையும் முழுமையாக ஆய்கிறது.

Ohlin, Bertil, 'Interregional and International Trade'. Cambridge, Mass.: Harvard University Press, 1933-ல் பதிப்பித்தது. 10ஆம் அதிகாரம் போக்குவரத்துச் செலவுகளையும் தொழிலிடச் செறிவுபற்றிய பிரச்சினைகளையும் பல சான்றுகளுடன் விளக்கமாக ஆய்கிறது.

Zinkin, Maurice, 'Economic Development for Free Asia'. Oxford: Blackwell, 1956-ல் பதிப்பித்தது. தென்கிழக்கு ஆசிய நாடுகளைப்போன்ற நாடுகளில் சமூகச் சூழ்நிலையால் உற்பத்தி எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்பதற்கு முதலிலுள்ள சில அதிகாரங்கள் பல எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன.

8. அளவுச் சிக்கனங்கள், புறச் சிக்கனங்கள், சர்வாதீனம்

நமது ஆய்வின் 'மாதிரியை' (model) எளிமையாக்குவதற் கென்று, உற்பத்திசார் பலன்கள் எங்கும் ஒரேமாதிரியாய் இருப்ப தாயும், நேர்க்கோடுகள்போல் அமைவதாயும் இருக்கக்கூடிய தோர் எடுகோளைப் பயன்படுத்தினேம். வெளிப்படையாகக் கூறுவ தாயின், எல்லாத் தொழில்களுமே சிற்றளவுடையவை என்றும், காரணிகளின் உள்ளிடுகை அதிகரிக்கப்படும் விகிதாசாரத்தில் உற்பத்தி அளவும் அதிகரிக்கிறதென்றும் அனுமானித்தோம். இதையே வேறுவிதமாகக் கூறின், ஒரு நிறுவனத்தின் உற்பத்தி அளவை அதிகரிக்கும்போது, அதனுல் எவ்விதச் சிக்கனமும் தோன்றுவதில்லை என்று வைத்துக்கொண்டோம். ஆனுல், உண்மையில் சில நிறுவனங்களின் அளவை அதிகரிக்கும்போது உற்பத்தி அளவு அதைக்காட்டிலும் அதிகரித்து, ஒவ்வோர் அலகிற்கும் ஏற்படும் உற்பத்திச் செலவு குறைகிறது.

அளவுச் சிக்கனங்கள்
(Economies of Scale)

அளவுச் சிக்கனங்கள் தோன்றுவதற்கு, பகுக்க முடியாத (indivisible) சில முதற் கருவிப் பொருள்களின் செயல்நுட்பச் சிறப்பு ஒரு முக்கிய காரணமாகும். ஏராளமான முதலீடு தேவைப் படும் ஒரு பெரிய எந்திரத்தையோ அல்லது சாதனத்தையோ நாம் பயன்படுத்துவதால் வேலை நேரம் அதிக அளவு மிச்சமாகலாம். உதாரணமாக, நீராவியால் மின் உற்பத்தி செய்யும் ஓர் எந்திரத்தி னுடைய தண்டின் மாறுநிலை வேகத்தைக் கணக்கிட வேண்டிய தொழில்நுட்பப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய ஒரு கம்பெனியை எடுத்துக்கொள்வோம். சாதாரண அலுவலகக் கணக்கு எந்திரங் களைக்கொண்டு இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்று ஆள்—மாத உழைப்பு தேவைப்பட்டது. கணக்கு எந்திரங்களுக்குப்

பதிலாக அட்டையில் புள்ளிபோடும் எந்திரங்களைப் பயன்படுத்திய போது 40 மணி நேரத்தில் இந்த வேலையைச் செய்ய முடிந்தது. இதே வேலையைத் தானே இயங்கும் மூன்றுவகை நவீன எலக்டிரானிக் கணக்கு எந்திரங்களைப் பயன்படுத்திச் செய்ததில், வேலை நேரம் முறையே 1 மணி, 15 நிமிடங்கள், 15 விநாடிகளாகக் குறைந்தது.[1]

நவீன தொழில்களில் பயன்படுத்தப்படும் பகுக்க முடியாததும் செலவுமிக்கதுமான சாதனங்களின் உயர்ந்த உற்பத்தித் திறனைக் காட்ட ஏராளமான உதாரணங்களைக் கொடுக்க முடியும். கான்கிரிட் சாலை போடுவதற்கு ஈருருளைகொண்ட இரண்டு நவீன எந்திரங்களை எடுத்துக்கொள்வோம். அவை இரண்டும் சேர்ந்து 8 அங்குலக் கனமுள்ள 1 மைல் நீளச் சாலையை 10 மணி நேரத்தில் போட்டுவிடும். இந்த வேகம் சாதாரண உடல் உழைப்பின் வேகத்தைக்காட்டிலும் 20 மடங்கு அதிகமாகிறது. நவீன மோட்டார் கார் தொழிற்சாலைகளிலுள்ள அழுத்தப் பொறி, எஃகு தகடுகளிலிருந்து மணிக்குச் சுமார் 20 கார் ஃபெண்டர்களை (fenders) உற்பத்தி செய்யமுடியும். ஒரு நவீன துளையிடும் பொறி அரை அங்குலக் கனமுள்ள எஃகில் நிமிடத்திற்குச் சுமார் 30 துவாரங்களைப் போட முடியும்; அரைக்கால் அங்குல கனமுள்ள எஃகில் நிமிடத்திற்கு 120 துளைகள்கூடப் போடக்கூடும்.

இவ் வகையான பொறிகள் பகுக்கப்பட முடியாதவையாகும். அதாவது, பெரிய பொறிகளுக்குப் பதிலாக, குறைந்த செலவில் சிறிய பொறிகளைச் செய்து பெரியனவற்றின் நுட்பத்திறனைப் பெற இயலாது. எனவேதான், துளைபோடும் பொறிகள் பெரியனவாக உற்பத்தி செய்யப்படுகின்றன; சிறியதொரு பொறிக்குத் துளை போடுவதற்கு வேண்டிய அழுத்த சக்தி இருக்காது. சிறிய தொழில்களில் இவற்றிற்குப் பதிலாக மின்சார டிரில் பயன்படுத்தப் படுகின்றது.

எனினும், பேரளவுச் சிக்கனங்கள் செலவுமிக்கதும் பகுக்க முடியாததுமான சாதனங்களால்மட்டும் ஏற்படுவதில்லை. உற்பத்தி அளவை அதிகரிக்கும்போது, சிறப்புத் தேர்ச்சிபெற்ற உழைப்பாளிகளாலும், சிறப்புப் பயன்கொண்ட எந்திரங்களாலும் சிக்கனங்கள் ஏற்படுகின்றன. தேவை அளவிலும் உற்பத்தி அளவிலும் எதிர்பாராத மாறுதல்கள் ஏற்படுவதால், முடிவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் சிறிதளவு இருப்பாக வைத்துக்கொள்ள

[1] **Robert H. Gregory and Richard L. Van Horn** அவர்கள் எழுதிய **'Automatic Data Processing Systems'** என்ற நூலிலிருந்து இவ் உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. **Published 1963 by Wadsworth Publishing Co., Belmont, Calif.**

வேண்டியுள்ளது; அவ்வாறு வைத்திருக்கவேண்டிய இருப்புகளின் அளவு, உற்பத்தி அளவின் விகிதாசாரத்திற்கேற்ப இருக்க வேண்டியதில்லை; அதன் வர்க்கமூலத்திற்கேற்ப (square root) இருந்தால் போதும். சரக்கு இருப்பினைக் குறைந்த விகிதத்தில் வைத்திருந்தால் போதுமானதாகையாலும், பெரிய நிறுவனங்கள் பெருமளவில் சரக்குகளை ஏற்றி அனுப்ப முடியுமாதலாலும், உற்பத்தி அளவு அதிகரிக்கும்போது சரக்குகளைக் கிடங்கில் வைப்பது, கையாள்வது, கப்பலில் ஏற்றுவது ஆகியவற்றிற்கான செலவுகள் குறைகின்றன. ஆராய்ச்சி, திட்டம், பொதுமக்கள் தொடர்புபோன்ற பிற்காலத்திற்குப் பயன்தரக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால், அவற்றிற்காகும் செலவு, பலனை விடப் பன்மடங்காக உள்ளது.

பெருமளவில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் சிக்கனங்கள் என்றால், அவ் உற்பத்திப் பொருள்களைச் செலவைக்காட்டிலும் அதிக விலையில் விற்கமுடியும் என்று பொருள். ஆனால், அங்காடி சிறியதாக இருந்தால் இது சாத்தியமாகாது. எனவே, ஏழ்மையான சிறியதொரு நாட்டைக்காட்டிலும் தலா வருமானம் உயர்ந்துள்ள பெரியதொரு நாட்டில், சிறிய அளவுத் தொழிற்சாலைகளுக்குப் பதிலாகப் பெரிய அளவுத் தொழிற்சாலைகளை நிறுவுவது பயனுள்ளது. எனவே, அமெரிக்காவில் பெருவாரியான தொழில்கள் பிரபலியமாக இருப்பதிலோ, அல்லது ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (European Common Market) செல்வமும் வருமானமும் அதிகரித்து, அதன் அங்கத்தினராக உள்ள நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபத்திலிருந்த தடைகளைக் குறைத்த பின்னர், அங்குப் பெருமளவுத் தொழிற்சாலைகள் பெருகிவருவதிலோ அல்லது விரிவடைவதிலோ ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

ஆனால், இந்த அளவுச் சிக்கனங்களெல்லாம் சிறிய நாடுகளில் இல்லை என்று கூறுவதற்கில்லை. சில தொழில்களைப் பொறுத்தவரை, பல சிறிய நாடுகளில் குறைந்தபட்சம் ஒரு நிறுவனத்தையாவது பெருமளவில் நிறுவி, பலன் பெறக்கூடிய அளவு அங்காடி விஸ்தாரமாக உள்ளது. எனினும், இவ்வாறு திறமையும் இலாபகரமுமான நிறுவனங்கள் ஒருசிலமட்டும் இருந்தால் அவை சர்வாதீன வலிமையை அடைந்துவிடக்கூடும் என்ற பயம் ஏற்பட்டுவிடுகிறது.

புறச் சிக்கனங்கள்

தனியொரு நிறுவனத்திற்குமட்டும் ஏற்படக்கூடிய அளவுச் சிக்கனங்கள் தவிர, புறச் சிக்கனங்களும் உண்டு. அளவுச்

சிக்கனங்களோடு நெருங்கிய தொடர்புடையனவெனினும் அவற்றி னின்று இவை வேறுபடும். ஒரு தொழில் வளர்ச்சி அடையும் போது, அல்லது இதர இடங்களுக்குப் பரவும்போது இச் சிக்க னங்கள் தோன்றுகின்றன. இவற்றில் ஒருசிலமட்டுமே தொழில் நுட்பம் சார்ந்தவையாகும். மற்ற நிறுவனங்களின் அல்லது தொழில் களின் உற்பத்தி அதிகரிப்பதால், குறிப்பிட்டதொரு நிறுவனத்தின் அல்லது தொழிலின் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது. உதாரண மாக, ஒரு தொழிலிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அத் தொழிலுக்கு வேண்டிய பயிற்சிபெற்ற தொழிலாளர் தோன்றுகின்றனர். அப்போது தனியொரு நிறுவனம் திறனற்ற பயிலாத் தொழிலாளிகளை அமர்த்துவதற்குப் பதிலாகப் பயிற்சிபெற்ற இத் தொழிலாளிகளை அமர்த்த முடியும். அவ்வாறு அமர்த்தும்போது அந்த நிறுவனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்பது நிச்சயம். தொழில் வளர்ச்சிக்குத் தேவை யான நிர்வாகத் திறமை வளர்ச்சி பெறுவதையும் இப் புறச் சிக்க னங்களோடு சேர்க்கலாம்.

ஒரு குறிப்பிட்ட தொழிலோ அல்லது பொருளாதார அமைப்பு முழுவதுமோ வளர்ச்சியடையும்போது, இருக்கின்ற தொழில் நுட்ப அறிவு பரவுவதற்குமட்டுமின்றி, அதைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய முன்னேற்றத்திற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால், உற்பத்திமுறை மேலும் திறன்கொண்டதாய் வளரவும் முன்னேற்றமடையவும் கூடும்.[2]

ஆனால், பெரும்பாலான புறச் சிக்கனங்கள் பொருள்வகை சார்ந்தவையேயன்றி, தொழில் நுட்பம் சார்ந்தவையன்று. அவை ஒரு நிறுவனத்தின் சாதனங்களின் திறமையைப் பாதிப்பதில்லை, அவற்றின் விலைகளையே பாதிக்கின்றன. எனினும், இவ் இரு வகைச் சிக்கனங்களுமே அவற்றால் பலன் அடைவோரின் உற்பத்தி செலவினைக் குறைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும், பொருள்வகை சார்ந்த புறச் சிக்கனங்கள் விரிவடையும் தொழிலில் பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகள் நடை பெறக்கூடிய சாத்தியத்தையோ அல்லது அத் தொழிலுக்குச் சாதனங்களை விநியோகம் செய்வோர் அளவுச் சிக்கனங்களை மேற் கொள்ளக்கூடிய வாய்ப்பையோ ஏற்படுத்துவதாகவேதான் அமை கின்றன. உதாரணமாக, குறிப்பிட்டதொரு தொழிலின் உற்பத்தி

[2] **Bela Balassa** அவர்களின் **'The Theory of Economic Integration'** என்னும் நூலில், 46ஆம் பக்கம். **Published** *1961* **by Richard D. Irwin, Inc., Homewood, Ill.**

அளவு அதிகரிக்கும்போது, அத் தொழிலுக்கு சாதனங்களை அளிப்போர், தமது தொழில் நடவடிக்கைகளை அதிகரிப்பதால் இலாபம் பெறுவர். இதுவரை இல்லாத கடன் வசதிகள் இப்போது விரிவாகி, அதனால் குறைந்த வட்டிக்கு முன்பைவிட அதிக அளவுத் தொகையைக் கடன் கொடுக்கலாம். சாதாரணமாக, கடன் வசதி செய்து தருவதற்கென்று வட்டிக் கடைக்காரர்கள், வணிக பாங்குகள், சேமிப்பு பாங்குகள், கடன் நிதிக் கார்ப்பரேஷன்கள், கடைசியாக அடைமான பாங்குகள், முதலீட்டு பாங்குகள் என்று பல ஸ்தாபனங்கள் உள்ளன. மோட்டார் கார் தொழிலை எடுத்துக்கொண்டால், கார்பரேட்டர்கள், வேகமானிகள், ஜெனரேட்டர்கள்போன்ற பல பாகங்களைப் பெரிய தொழிற் சாலைகள் சிக்கனமாக உற்பத்தி செய்வதால் அத் தொழிலுக்குப் பெரும் பலன் ஏற்பட்டுள்ளது.

புற, அகச் சிக்கனங்களும் பன்னாட்டு வாணிபமும்

அகச் சிக்கனங்கள் பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டில் புதியதோர் அம்சத்தைப் புகுத்துகிறது. அதாவது, பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்குக் காரணிப் பேற்றிலுள்ள வித்தியாசம் அடிப்படையாக இருப்பதைப்போன்று, அகச் சிக்கனமும் மற்றோர் அடிப்படையாக இருக்கிறது. உதாரணமாக, கொஞ்சம்கூட வித்தியாசமின்றி ஒரே மாதிரியான காரணிப்பேற்றை உடைய இரு நாடுகள் இருப்பதாக ஊகித்துக்கொள்வோம். அப்படியானால் இவ் இரண்டு நாடுகளிலுமே சிறப்புத் தேர்ச்சியும் அயல்நாட்டு வாணிபமும் நடைபெறாது. இருப்பினும், இந் நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு சில மாவட்டங்களில் அளவுச் சிக்கனங்களை ஏற்படுத்துவதற்குரிய விஸ்தாரமான அங்காடி இருந்தால், அப்போது ஒவ்வொரு நாட்டிலுமே ஓரிரு தொழில்களில் பெருமளவு நிறுவனங்களை அமைப்பதன்மூலம் சிறப்புத் தேர்ச்சியும் வாணிபமும் நடைபெற வழி உண்டாகும் (இதற்குப் பேரளவில் நிறுவப்படும் தொழில்கள் வெவ்வேறாக இருக்கவேண்டும்).

இவற்றில் ஒரு நாடு எந்தப் பொருளைப் பெருமளவில் உற்பத்தி செய்ய முற்படும் என்பது அப் பொருளுக்குள்ள அங்காடி விரிவைப் பொறுத்தது. ஆனால், பெருமளவில் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டு, அதனால் ஏற்படும் சிக்கனங்களைப் பெறத் தொடங்கி விட்டால், அந் நாடு அவ் வழியில் முன்னணியில் இருக்கும். அப்போது பேரளவுத் தொழிலை முதன் முதலாகத் தொடங்கியதனால் மற்ற நாடுகளைக்காட்டிலும் அனுகூலமான நிலையை அது அடைகிறது. மேலும், அத் தொழில் விரிவடையும்போது புறச் சிக்கனங்களைப் பெறுவதன்மூலம் அதன் அனுகூலமான நிலை

மேலும் உறுதிப்பட்டுவிடுகிறது. ஒரு வேளை மேற்கு ஐரோப்பிய நாடுகள் தொழிற்சாலைப் பொருள்களில் நடத்தும் வாணிபம் ஓரளவு இந்த அடிப்படையைக் கொண்டதாக இருக்கலாம். பெல்ஜியத்தின் பலகைக் கண்ணுடிகள், டென்மார்க் நாட்டின் கப்பல் பொறிகள், பிரிட்டனின் மின்சார சாதனங்கள் ஆகிய வற்றில் நடக்கும் விரிவான வாணிபம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். ஜெர்மனி நாட்டின் ரசாயனத் தொழிலுக்கு வேண்டிய பயிற்சிபெற்ற தொழிலாளிகள் அந் நாட்டில் இருந்த தால், இத் தொழிலில் அந் நாடு சிறப்பு நிலை எய்தியது; எனினும், பெருமளவு உற்பத்தி செய்யும் முறையை அது புகுத்தியதனுல் தான் அச் சிறப்பு நிலை மேலும் ஸ்திரமாகிவிட்டது.

ஒரு நாட்டிற்குப் புறச் சிக்கனங்கள் ஏற்படும்போது, அதனுல் முன்பு இல்லாததொரு தராதரச் சிறப்பினை அந் நாடு பெறலாம். உதாரணமாக, ஏற்றுமதியோ, இறக்குமதியோ செய்யாத ஒரு நாடு உள்நாட்டுத் தேவைக்கென்று ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்வோம். அந் நிலையில் அந்த நாட்டின் மக்கள் தொகையும் செல்வமும் பெருகிவந்தால், அப் பண்டத்தின் தேவையும் விரிவடைகிறது. அப்போது ஏதாவதொரு சமயம் (தொழில் நுட்பமான அல்லது பொருள் அளவு சார்ந்த) புறச் சிக்கனங்களை அது பெறக்கூடும். அவ்வாறு பெற்றுல் அப் பண்டத்தின் உற்பத்திச் செலவு குறைகிறது. இதனுல், அயல் நாட்டு இறக்குமதியின்றி, உள்நாட்டுத் தேவை அளவிற்குமட்டும் உற்பத்தி செய்து வந்த இந் நாடு, இப்போது ஏற்றுமதி செய்யும் நாடாக முன்னேறிவிடுகிறது. இதற்கு அமெரிக்கா ஒரு சிறந்த உதாரணம். அதன் தலா வருமானம் உயர்ந்ததற்கும் பல ஏற்று மதித் தொழில்கள் அங்கு வளர்ந்ததற்கும் அந் நாட்டின் உள் நாட்டுத் தேவை 19ஆம் நூற்ருண்டிலும் 20ஆம் நூற்ருண்டிலும் விரைவாக விரிவடைந்ததுதான் முக்கிய காரணம் என்பதற்கு ஆதாரமுண்டு. இதில் அகச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் ஒன்ருெடொன்று நெருங்கிய தொடர்புடையன என்பது வெளிப் படை. எவ்வாறெனில், ஒரு தொழிலுக்கு வேண்டிய சாதனங்களை அளிக்கும் பிற தொழில்கள் திறன்மிக்க பெருமளவு உற்பத்தி முறையைப் புகுத்துவதனுல்தான் பெரும்பாலும் அத் தொழிலில் புறச் சிக்கனங்கள் தோன்றுகின்றன.

தொழில்முயல்வோரின் பணிகள்

தொழில்முயல்வோரைப்பற்றியோ அல்லது தொழில் உற்பத்தியில் அவர்கள் புரியும் பணிகளைப்பற்றியோ நாம்

இதுவரை ஒன்றுமே கூறவில்லை. இருப்பினும், மூலதனம், உழைப்பாளிகள், உற்பத்தி சாதனங்கள் ஆகிய அனைத்தையும் சேர்த்து அவற்றை ஓர் உற்பத்தி இயக்கமாகச் செய்து, நிச்சயமில்லாத இப் பொருளாதார உலகில் ஏற்படக்கூடிய நட்ட பயத்தை மேற்கொள்ளும் நபராக (அல்லது சில நபர்களைக் கொண்டதொரு வகுப்பினராக) உற்பத்தியில் முக்கிய இடம் வகிப்பவர் இவர். நமது 'எடுத்துக்காட்டு' ஆய்வுநிறைபோட்டியுடையதாக இருக்கும்வரை, இதை நாம் புறக்கணித்ததால் ஒன்றும் பாதகமில்லை. ஏனெனில், நிறைபோட்டியில் இருக்கவேண்டியதைப் போல், எல்லா நிறுவனங்களும் சிறிய அளவினதாக இருக்கும் பொருளாதார அமைப்பில், தொழில் துணிவுத் திறமை சமமாக எல்லா நாடுகளிடையேயும் பிரிக்கப்பட்டுவிடுவதாக அனுமானிக்கப்படுகிறது. இவ் அனுமானமே அவ் ஆய்வின் முதல் அனுமானமாக இடம்பெறுகிறது.

ஒரே விதமான சமூகச் சூழ்நிலைகளைக்கொண்ட பல நாடுகளைப் பொறுத்தவரை, இந்த அனுமானம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுதான். எனினும் சமூகப் பண்புகளில் நாட்டிற்கு நாடு அதிக வேறுபாடு இருக்குமானல், இது சிறிதுகூட ஒவ்வாத அனுமானமாகிவிடுகிறது. மேற்கு ஐரோப்பிய வரலாற்று வளர்ச்சிதான், திறமையான தொழில் துணிவிற்கு வேண்டிய அம்சங்கள் அங்கு வளர்ச்சி பெறுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. அதே சமயம் தென்கிழக்கு ஆசியா, அண்மைக் கிழக்கு நாடுகள், ஆஃப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இருந்த சமூகச் சூழ்நிலைமைகள்தாம் இவ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தன. நிலப் பிரபுத்துவ முறையில் அமைந்த சமுதாயங்கள், நில உரிமைக்கும் அதன் நிருவாகத் திறனுக்கும்தான் உயர்ந்த மதிப்பு கொடுத்தனவேயன்றி, இதர தொழில் நடவடிக்கைகளுக்கு அவை எவ்வித மதிப்பும் தரவில்லை. ஆசியாவை எடுத்துக்கொண்டால், அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று வலியுறுத்திவந்த பரம்பரைச் சமுதாயங்கள் அங்கு இருந்ததால் அவை புத்தமைப்புகளுக்கு முட்டுக்கட்டை போட்டன; குடும்பங்களில் பரஸ்பர உரிமைகளும் கடமைகளும் வெகுவாகப் பேணி வளர்க்கப்பட்டதால், பொருள்சார் முன்னேற்றத்திற்கு வேண்டிய தனிநபர் முயற்சி தழைக்க முடியாதிருந்தது. இச் சூழ்நிலைகளால் ஐரோப்பாவையும், ஐரோப்பியர் குடியேறிய நாடுகளையும் தவிர, இதர நாடுகளிலெல்லாம் தொழில் முயற்சி குன்றியிருந்ததில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. பெருவாரி உற்பத்தி முறைகள் முக்கியத்துவம் அடையாத காலத்தில்கூட, தொழில் துணிவு வேண்டிய உற்பத்தித் தொழில்களால் தொழில்

முயற்சி பெற்றிருந்த ஐரோப்பிய நாடுகள் பெரும் நன்மை அடைந்தன.

இதோடு பேரளவுத் தொழில் வளர்ச்சியின் முக்கியத்துவமும் சேர்ந்ததும் இந்த அனுகூலம் மேலும் விரிவானது. உற்பத்தி அளவு அதிகரித்தபோது, சிக்கல்களும் கூடவே அதிகரித்ததுதான் இதற்குக் காரணமாகும். முன்பெல்லாம், சிற்றளவு நிறுவனங்களின் பணிகள் அனைத்தையும் ஏதோ ஓரளவு திறன் பெற்றவர்கள் செய்து வந்தனர். ஆனால், இப்போது அப் பணிகளைச் செய்வதற்கு உற்பத்திப் பொறியாளர்கள் (production engineers), கணக்கர்கள் (accountants), விளம்பர நிபுணர்கள், விற்பனை வல்லுநர்கள், ஆராய்ச்சியிலும் தொழில் முன்னேற்றத்திலும் பாண்டித்யம் பெற்றோர் ஆகியோர் செய்யவேண்டியுள்ளது. வெவ்வேறு இயல்புடைய இப் பணிகளையெல்லாம் முறையானதோர் அமைப்பிற்குக் கொண்டுவந்து ஒருங்கிணைக்கும் பணி எல்லாவற்றையும்விட முக்கியமானது.

'பெருமளவில் தொழில் வளர்ச்சியடைவதற்கு வேண்டியனவற்றில் தொழிலமைப்பை உருவாக்கும் திறன்தான் மிக முக்கியமானதாகும். தொழிலமைப்பை மேற்கொள்வோர் இதர அமைப்புகளிலுள்ள பலவகைப் புத்தமைப்புகளின் புதுமுறைகளைப் பயன்படுத்தவேண்டியுள்ளது. அதேசமயம், சரியான வழியில் தொழிலாளரை நடத்தத் தெரிந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை இன்னும் அதிக எண்ணிக்கையில் பெருக்கவேண்டியுள்ளது. அதோடு, தொழிலமைப்பின் குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அவர் ஊட்டவேண்டும்.......தொழிலமைப்பைப் பெறுவது என்பது, குறிப்பிட்ட திறன் கொண்ட தனிநபர்களைப் பெறுவது மட்டுமல்ல; அல்லது, நிருவாகப் பணியாளர்கள் எத்தனை பேர் என்று உணர்த்துவது மட்டுமல்ல; வெவ்வேறு பணிகளைத் தொகுத்து, அப் பணிகளை ஆற்றுவோரையும் அவர்களது பணிகளையும் இணைத்து, எல்லோருக்கும் பொதுவான தொழிலில் அவர்களை மட்டுமன்றி, அவர்களின் பணிகளையும் ஒன்று திரட்டுவதுதான் தொழிலமைப்பு' என்பதை இது குறிப்பிடுகிறது.[8]

ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள பெரிய தொழில்களின் வெற்றிக்கு, தொழில் நிருவாகத் திறன் அல்லது தொழில்

[8] (ஆகஸ்டு 1956-ன்) 'Quarterly Journal of Economics' என்னும் வெளியீட்டில் Frederick Harbison எழுதிய 'Entrepreneurial Development' என்னும் கட்டுரையில் பக்கம் 367.

அமைப்பை உருவாக்கும் ஆற்றல் இன்றியமையாதது என்பது நிச்சயம். அதோடு மட்டுமன்றி, புதிய நிறுவனங்கள் பெருமளவில் தோன்றுவதற்கும் விரிவடைவதற்குங்கூட அது மிக முக்கியமாக உளது. ஒரு பெரிய நிறுவனத்திற்கு அளவுச் சிக்கனங்களும், அவற்றைப் பெறுவதற்கான எந்திர தளவாடங்களை நிறுவு வதற்குத் தேவையான மூலதனமும் எவ்வளவு அதிகமாக இருந்த போதிலும், அதனுடைய பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கா விட்டால் அதற்கு நட்டம் ஏற்பட்டுவிடும். இவ்வித நட்டத்தால் அவதியுற்ற பங்குதாரர்கள் ஏராளமாக உள்ளனர்.

அமெரிக்க நாடு, தொடக்கத்தில் பெருமளவுத் தொழிலில் கொண்டிருந்த செல்வாக்கிற்கு, அவ் வுற்பத்தி முறையை மேற் கொள்வதற்குச் சாதகமாயிருந்த விஸ்தாரமான அங்காடி ஓரளவு காரணமாகும்; எனினும், தொழிலில் ஒருங்கிணைப்பிற்குத் தேவையான நிருவாகப் பயிற்சியும் அனுபவமும் அது பெற்றிருந் ததுதான் முக்கிய காரணமாகும். ஏனைய பல நாடுகளில் பெருமளவு உற்பத்தி முறை மேற்கொள்ளப்படு முன்னரே, நிருவாகத் திறன் பெற்ற பலர் அமெரிக்காவில் இருந்தனர். தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக உலக அங்காடிகள் பெருகியிருப்பதோடு, அகச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் பரவலாக எங்கு பார்த்தாலும் வளர்ந்து வரும் சமயம், இதர நாடுகளும்—குறிப்பாக ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள், பிரிட்டன், ஜப்பான்—தொழில் நிருவாகத் திறமையில் விரைவாக முன்னேறி வருகின்றன.

சிக்கனங்கள், நிருவாகம், பன்னாட்டு வாணிபம்

அகச் சிக்கனங்கள், புறச் சிக்கனங்கள், நிருவாகம் ஆகிய அம்சங்களனைத்தும் பன்னாட்டு வாணிபத்தில் எவ்வாறு முக்கியத் துவம் பெறுகின்றன? ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் உயர்ந்த அளவில் ஒரு நிறுவனத்தையாவது நிறுவுவதற்குப் போதுமான அளவு தேவை இருந்தால்தான் அப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்குப் பெருமளவு உற்பத்தி முறைகளை மேற் கொண்டு அளவுச் சிக்கனங்களைப் பெறமுடியும் என்று சுருக்கமாக மேலே பார்த்தோம். அப்போதுதான் அச் சிக்கனங்களைப் பெறக் கூடிய அளவு விரிவாகியுள்ள தொழில், தனக்குப் போட்டியாக உள்ள பிற தொழில்களைவிடச் சிக்கனமாகச் செயல்பட முடியும். தனியொரு தொழிலும் அல்லது பொதுவாகத் தொழில் முழுவதும் விரிவாகும்போது ஏற்படக்கூடிய புறச் சிக்கனங்களும் சேர்ந்து கொள்ளும்போது, பெருமளவுத் தொழிலுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாச் சிக்கனங்களும் கிடைப்பதனல், இச் சிக்கன அனுகூலம்

நீடித்து நிலைபெறும். இருப்புப் பாதை, பெருஞ்சாலை இணைப்பு, சக்தி உற்பத்தி நிலையம், தொழில்நுட்ப வசதிகளையும் தொழில் பயிற்சியையும் உடைய கல்விமுறை ஆகிய சமூகப் பணிகளை அபிவிருத்தி செய்வதன்வழியாகவும் புறச் சிக்கனங்களை ஏற்படுத் தக்கூடும்.

செல்வமிக்கதாயும் பெரியதாயும் இருக்கும் நாடு பேரளவுத் தொழிலைக் கவரக்கூடிய காந்தம்போல் இருக்கிறது. அளவுச் சிக்கனங்களைக் கொடுக்கும் பல பெரிய அங்காடிகள் அங்கு இருக் கின்றன. எனவே, பலவகை நிறுவனங்களைப் பெருமளவில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்றது. இவ்வாறு பலவகைத் தொழில்கள் பெருமளவில் ஏராளமாய் அங்கு அமையும்போது, மேலும் மேலும் செலவைக் குறைக்கக்கூடிய புறச் சிக்கனங்கள் தோன்றக்கூடும். அதோடு, ஒரு நாடு இவ்வாறு இருக்கும்போது, மற்றொரு வழியில் புறச் சிக்கனங்களைத் தோற்றுவிக்கக்கூடிய பொது வசதிப் பணிகள் அங்குப் பெருவாரியாக ஏற்படும் என்ப தற்குச் சந்தேகமில்லை.

பெருமளவுத் தொழில்கள் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டு மானால், உயர்ந்த நிருவாகத் திறன் இன்றியமையாதது என்பதை ஏற்கெனவே நாம் சுட்டிக் காட்டினோம். எந்த நாட்டில் பேரளவுத் தொழில்கள் ஏராளமாயிருக்குமோ, அங்கு அத் தொழில்களில் பயிற்சியும் அனுபவமும் பெற்ற நிருவாகிகளும் பெரும் எண்ணிக் கையில் இருப்பர். இதுவே, உண்மையானதொரு புறச் சிக்கன மாகும். மேலும், திறன்மிக்க நிருவாகிகள் பெரும் எண்ணிக் கையில் இருக்கும்போது, பேரளவுத் தொழில்கள் விரிவடைவ தற்கும் உழைப்பாளிகளின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். நிருவாகிகள் அங்கொருவரும் இங்கொரு வருமாக இல்லாமல் நிறைய இருக்கும்போது, பல்வேறு தொழில் களிலும் ஈடுபட்டு, சிறந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் அவர்களுக்கு நல்ல பயிற்சியும் ஊக்கமும் தரவும், உரிய கருவி களையும் சாதனங்களையும் அவர்களுக்குக் கொடுக்கவும் முடியும்.[4]

[4] 'உடல் உழைப்பாளிகள், ஏன் குமாஸ்தாக்கள்கூட பெரும்பாலும் வேலைக் கமர்ந்த பின்னர்தான் தேர்ச்சிபெறுகின்றனர் என்பது உண்மையெனினும், உழைப் பாளிகளிடையே சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களைப் பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்கச் செய்வது இன்றியமையாததொரு நிருவாகப் பணியாகும். வேலைக்கேற்ற ஊக்கமளிப்பது பிரிதொரு நிருவாகப் பணி. இவை தவிர, உழைப்பாளிகளின் உற்பத்தித் திறனை நேரடியாக அதிகரிக்கச் செய்யக் கூடிய பணிகள் இன்னும் பல உள்ளன. அவற்றில் தகுந்த எந்திரத் தளவாடங்களை நிறுவி, சிறந்த உற்பத்தி முறைகளை மேற்கொள்ளல், தொழில் ஆய்வு, சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் சிக்கனத்தைப் பெறுவதற்காக வேலையைப் பாகு படுத்தல், பாதுகாப்புத் திட்டங்கள், தொழிலாளரின் திறனைக் கண்டுபிடிப்பதற்காக

அளவுச் சிக்கனங்களை அடைவதற்குரிய வாய்ப்பு ஒரு நாட்டிற்குத் தராதரச் சிறப்பை அளிக்கலாம் என்பதை நாம் கண்டோம். இவ் வகைச் சிறப்பு ஒரு நாட்டின் தராதரக் காரணிப் பேற்றால் கிடைக்கும் சிறப்போடு சேர்ந்ததேயன்றி, அதனின்று வேறுபட்டதன்று. ஏனெனில், அளவுச் சிக்கனங்களை அடைய வேண்டுமானால், உழைப்பாளிகள் இன்னும் அதிக முதற் கருவிப் பொருள்களைப் பயன் கொள்வதற்கென்று அதிக முதலீடு செய்ய வேண்டும். எங்கு மூலதனம் போதாததாயும் அதிகக் கிராக்கியுள்ளதாயுமிருக்குமோ, அங்குப் பேரளவு உற்பத்திமுறைக்கேற்படும் செலவு அதன் பலன்களை மிஞ்சிவிடலாம். எனினும், இதை அவ்வளவு நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. காரணம், சில தொழில்களில் பேரளவு உற்பத்தி முறையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இலாபம் அதற்கேற்படும் செலவையும் குறைந்தபட்ச நிருவாகத் திறமையையும்விட அதிகமாயிருப்பதைக் காண்கின்றோம்.[5]

புறச் சிக்கனங்களால் உறுதி செய்யப்படும் அளவுச் சிக்கனங்களின் பலன்கள் எவ்வளவு காலம் நீடிக்கும்? இதற்கு விடை இதுதான். முதன்முதலில் பேரளவு உற்பத்தி முறையை மேற்கொண்ட தொழிலைப்பொறுத்தவரை, அது முன்னாலேயே ஆரம்பிக்கப்பட்டதால் கிடைக்கும் அனுகூலத்தாலும், அது பின்னர் பெற்றிருக்கக்கூடிய அனுபவம், அறிவு ஆகியவற்றாலும் அதன் அனுகூலங்கள் நிலைபெற முற்படும். தொழில் நிருவாகம் துணிகரமானதாயும், எப்போதும் விழிப்புணர்ச்சியுடனுமிருந்தால், குறிப்பாகத் தொழில்நுட்ப மாறுதல்களுக்கேற்ப ஆராய்ச்சிக்கென்றும் முன்னேற்றத்திற்கென்றும் போதுமான அக்கறை காட்டுவதாயிருந்தால், அதன் நிறுவனம் அல்லது தொழில் இச் சிறப்புகளை நிலைபேணச் செய்யலாம். எனினும், உள்நாட்டு

[5] இம் முடிவு தற்காலிகமானதே. மூலதனமும் நிருவாகத் திறமையும் போதுமான அளவு இல்லாத நாடுகளில்கூட மூலதனம் அதிகம் தேவைப்படும் தொழில்களும் பேரளவுத் தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றில் பல—ஒருவேளை எல்லாமுமே—நிறுவனங்கள் பெருமளவும் பாதுகாக்கப்படுவதால்தான் செயல்படக்கூடியவையாயுள்ளன.

அவர்கள் தம் சாதனைகளைக் காட்டச்செய்தல், இன்னும் இதுபோன்ற இதர பணிகளும் சேரும். இருந்தபோதிலும், இவ் வுயர்ந்த நிருவாக முறைகளை மேற்கொள்ள அதிகப் பணம் தேவை. இச் செயல்முறைகளை மேற்கொள்ள சிறப்புத் தேர்ச்சிபெற்ற அலுவலர்களை வேலைக்கமர்த்த வேண்டியுள்ளது; அதோடு நிருவாகத்தின் வரிசை அமைப்பிலுள்ளவர்கள் செலவிடும் நேரமும் அதிகம். எல்லாவற்றையும்விட, அவ் வரிசை அமைப்பிலுள்ளோர் மிக உயர்ந்த கல்வி, பயிற்சி, அனுபவம் பெற்றவர்களாயும் இருக்கவேண்டும்.' (Harbison, மேற்கூறிய நூல், பக்கம் 372) 'மாறுத தொழில் நுட்பத்தைக்கொண்ட உழைப்பாளிகளின் உற்பத்தித் திறனை நிர்ணயிப்பதில் தொழிலாளிகளைக்கொண்ட தொழில் அமைப்புதான் முக்கியமான—முதன்மையான காரணியாகும்' என்ற தன் வாதத்திற்கு Harbison அவர்கள் சான்று தருகிறார்.

வாணிபமாக இருந்து வெளிநாட்டு வாணிபமாக வளரும்போது, பாதுகாப்பின் வழியாகவோ அல்லது இயல்பான போக்குவரத்துச் செலவு அனுகூலத்தின்மூலமாகவோ தோன்றும் புதிய நிறுவனங் களோடு தமது அங்காடியைப் பகிர்ந்துகொள்ள நேரிடலாம்.

போட்டியின் பல நிலைகள்

அளவுச் சிக்கனங்களையும் பேரளவு உற்பத்தியையும் புகுத்தி யதன் வழியாக நாம் கொண்ட நிறைவுப் போட்டியின் அனுமானத்திலிருந்து பிரிந்து சென்றுவிட்டோம். நிறைவுப் போட்டியில் உற்பத்தியாளர்கள் ஏராளமாய் இருப்பதால், அவர் களில் எவருமே தனது உற்பத்தி அளவைக் குறைப்பதன்மூலமோ அல்லது அதிகரிப்பதன்மூலமோ விலையைப் பாதிக்க முடியாது. தனி நிறுவனம் ஒவ்வொன்றும் அங்காடியில் நிலவும் விலையில் தன்னால் கூடுமானவரை உற்பத்தி செய்து விற்கக்கூடும். அதாவது, ஒவ்வொரு நிறுவனத்தின் பொருளுக்கும் உள்ள தேவை நெகிழ்ச்சி அளவிலியாக இருக்கும். ஒவ்வோர் அலகு விற்பனையிலிருந்தும் கிடைக்கும் சராசரி வருவாய் (average revenue) அல்லது அதன் விலை, மாறுமல் அப்படியே இருக்கும். எனவே, இது இறுதிநிலை வருவாய்க்கு (marginal revenue) அல்லது இறுதிநிலை அலகின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய்க்குச் சமமாக இருக்கும். இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் (marginal cost) ஒன்றுக்கொன்று சரிசமமாகின்ற சமநிலைவரை, ஒவ்வொரு நிறுவனமும் தனது உற்பத்தி அளவைப் பெருக்கிக் கொண்டே இருக்கும். அச் சமநிலைக்கும் அதிகமாக உற்பத்தி செய்தால், இறுதிநிலை வருவாயைக் காட்டிலும் இறுதிநிலைச் செலவு அதிகமாகிவிடுமாதலால், உற்பத்தியை அந் நிறுவனம் அதிகரிக்காது. குறுங் காலத்தில் (short run) இறுதிநிலைச் செலவு சராசரிச் செலவைக் காட்டிலும் அதிகமாயிருக்க முடியுமெனினும், நெடுங் காலத்தில் (long run) ஏற்படக்கூடிய போட்டி நிலை ஒவ்வொரு நிறுவனமும் உத்தமமான உற்பத்தி நிலையை அடையுமாறு செய்துவிடுமாதலால், அந் நிலையில் அதனதன் இறுதிநிலைச் செலவும் குறைந்தபட்ச சராசரி அலகுச் செலவும் ஒன்றுக்கொன்று சமமாகிவிடும். தொழிலுக்கு வேண்டிய எல்லாக் காரணிகளும் வரம்பின்றி வேண்டிய அளவு கிடைக்குமாயின், இக் குறைந்தபட்ச சராசரிச் செலவு மாறு நிலையிலிருக்கும். ஆனால், ஏதாவதொரு காரணி (இயற்கைச் சாதனமோ அல்லது தொழில் துணிவோ) போதிய அளவு கிடைக்காமலிருந்தால், அக் காரணியை மேலும் மேலும் பயன்படுத்தும்போது அதனால் குறைந்துசெல் விளைவு (diminishing return) ஏற்படுவது மட்டு மன்றி, சராசரிச் செலவும் உயரும்.

அளவுச் சிக்கனங்களைப் பெறவேண்டுமாயின், தொழிலில் பேரளவு நிறுவனங்களை நிறுவவேண்டுமெனப் பார்த்தோம். ஆனால், ஒவ்வொரு நிறுவனத்தின் உற்பத்தி அளவும், அதன் அங்காடித் தேவையை நோக்க அதிகமாயிருக்குமானால், அதன் உற்பத்தி அளவில் மாறுதல்கள் ஏற்படுவதன்மூலம் விலைகள் பாதிக்கப்படும்; அப்போது அத் தொழில் போட்டியின் அம்சத்தை இழந்துவிடக்கூடும். இவ்விதத் தொழிலில் ஒருசில பெரிய நிறுவனங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்த முற்படும். மேலும், ஒரு நிறுவனத்தின் உற்பத்தி அளவை அதிகரிக்கும்போதெல்லாம் அகச் சிக்கனங்கள் தோன்றுவதாக இருந்தால், அத் தொழில் முழுவதும் கூடிய விரைவில் மாபெரும் நிறுவனம் ஒன்றின் கைக்கு வந்துவிடும்.

எந்த ஒரு தொழிலுக்கும், அது பெறக்கூடிய அளவுச் சிக்கனங்களுக்கு ஒரு வரம்பு இருக்கும் எனத் தோன்றுவதால், உற்பத்தி அனைத்தும் ஒருசில நிறுவனங்களின் கைக்கு வந்து சேருவதற்கு முடியாதென நினைக்கலாம். எனினும், சிறியதொரு நாட்டில் (நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல்) அங்காடி சிறியதாயிருக்குமாதலால், ஓர் உற்பத்தியாளர் மட்டும் அத் தொழிலில் இருக்கவேண்டுமென்பது நியாயமாக இருக்கலாம். இத்தகைய தலச் சர்வாதீனம் எல்லா இடங்களிலும், குறிப்பாக வளர்ச்சி குன்றிய நாடுகளில் இருப்பது சர்வசாதாரணம். இருந்த போதிலும், பெரிய அங்காடிகளில் முழுச் சக்தியுடைய சர்வாதீனம் இருப்பது அரிது; அவ்வாறே இருந்தாலும் அதற்கு நெருங்கிய பதிலீட்டுப் பொருள்களின் போட்டி இருக்கும்.[6] உதாரணமாக, இரண்டாம் உலகப் போருக்கு முன் அமெரிக்க நாட்டில் அமெரிக்க அலுமினிய கம்பெனி ஒன்றுதான் அலுமினியம் உற்பத்தி செய்து வந்தது. பன்றுட்டுத் துறையை எடுத்துக்கொண்டால், டி பீர்ஸ் வைர சிண்டிகேட் (de Beers' Diamond Syndicate) இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும்.

நிறைவுப் போட்டி இதற்கு விதிவிலக்கானது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பயிர்த் தொழிலின் உற்பத்தியைக் கொள்ளலாம். கோதுமை, உணவுதானியம், ஆட்டு உரோமம், பருத்தி, இன்னும் பலவகைப் பயிர்கள் அரசாங்கத் தலையீடில்லாமலிருந்தால் தேவையான அளவு கிடைக்கும். இவற்றில் ஏராளமான உற்பத்தியாளர் உளர். அதோடு, விவசாயப் பொருள் (ஏதாவதொரு ரகப் பொருள்) ஒரே தன்மையுடையது. மாறுக,

[6] இரயில்வே, இன்னும் இதரப் பொதுவசதிப் பணிகள் (public utilities) போன்ற 'இயல்பான' சர்வாதீனம் இதற்கு விதிவிலக்காகும். இருந்தாலும் இவை சர்வாதீனங்களாகவே கருதப்பட்டு அரசாங்கக் கட்டுப்பாடுகளால் நடைபெறும்.


ஆலைத் தொழிலை எடுத்துக்கொண்டால், பெரும்பாலும் நிறுவனங்கள் அனைத்தும் முழுச் சர்வாதீனத்திற்கும் நிறைவுப் போட்டிக்குமிடையேயுள்ள நிறை குறைந்த போட்டியில்தான் (imperfect competition) இயங்குகின்றன.

நாடுகளின் தராதரக் காரணிப் பேறுதான் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படையான காரணியாகும் என்பதை முந்தைய அதிகாரங்களில் பார்த்தோம். இக் காரணிப் பேற்றிலுள்ள வேறுபாடுதான் போட்டி நிலையில் விலை இயக்கத்தின் வழியாகப் பண்டங்களின் தராதர விலையில் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால், போட்டியற்ற நிலையில் சர்வாதீனத் தொழிலாகவோ அல்லது நிறை குன்றிய போட்டித் தொழிலாகவோ இருக்குமானால், காரணிப் பேற்றிலுள்ள வேறுபாடு, நிறைவுப் போட்டியில் உள்ளதைப் போன்று, பண்டங்களின் விலைகளில் பிரதிபலிக்காது. பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சி அப்போது வேறுவிதமாக இருக்கலாம். இவ்வாறான பல்வேறு மாற்றுவழி நிலைமைகளில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதென்பதை நாம் சுருக்கமாகவாகிலும் ஆயவேண்டியுள்ளது.

சர்வாதீனம்

நிறை போட்டிக்கு நேர் எதிராக உள்ளது முழுச் சர்வாதீனம். இதில் ஒரே தன்மையுடைய பண்டத்தை ஒரு நிறுவனம் மட்டுமே உற்பத்தி செய்கிறது. எனவே, முழுச் சர்வாதீனத்தில் தொழிலும் நிறுவனமும் ஒன்றென ஆகிவிடுகிறது. இதனால், நிறுவனத்தின் தேவைக் கோடும், தொழிலின் தேவைக் கோடும் ஒன்றாகி விடுகிறது. சர்வாதீன நிறுவனம், பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களோடு போட்டியிட வேண்டிய நிலையில் இருப்பினும், (உதாரணமாக, தொழில்களில் பயன்படுத்தப்படும் அலுமினியம், இன்னும் இதர இலேசான உலோகங்களோடு மட்டுமன்றி, பிளாஸ்டிக், மரம், செயற்கை நார் அட்டைகள் போன்ற பொருள்களோடு எஃகு போட்டியிட வேண்டியதைப்போல்) அப் பொருள்களெல்லாம் அவ்வளவு நெருங்கிய பதிலீட்டுப் பொருள்களாகா. மாதிரிகையாக அமையும் ஒரு சர்வாதீன நிலையை 8·1 வரைபடம் விளக்குகிறது. இறுதிநிலைச் செலவுக் கோடும் சராசரிச் செலவுக் கோடும் போட்டி நிறுவனத்திலுள்ளதைப்போன்றே உள்ளன; அதாவது, உத்தமமான நிலையை நிறுவனம் அடையும்வரை சராசரிச் செலவுக் கோடு குறைந்துகொண்டே செல்கிறது; அதே சமயம், இறுதி நிலைச் செலவுக் கோடு சராசரிச் செலவுக் கோட்டின் மிகத் தாழ்ந்த புள்ளியில் ஊடுருவிச் செல்கிறது

போட்டி நிலையிலுள்ள நிறுவனத்திற்கும் இதற்குமுள்ள வேறுபாடுகளைச் சராசரி வருவாய்க் கோடும் இறுதிநிலை வருவாய்க் கோடும் காட்டுகின்றன. இந் நிறுவனத்தின் உற்பத்திப் பண்டத்திற்கான தேவைக் கோடு, அல்லது சராசரி வருவாய்க் கோடு போட்டி நிறுவனத்தின் கோட்டைப்போல் படுகிடையாய் இருப்பதில்லை; மாறாக, அப் பண்டத்தை நுகர்வோரின் பற்றுதல்களால்



வரைபடம் 8.1 சர்வாதீன விலை

நிர்ணயிக்கப்படும் நெகிழ்ச்சியுடைய எதிர்க்கணியமான சரிவைக் கொண்டதாயுள்ளது. சர்வாதீன உற்பத்தியாளர் ஒருவர் மட்டுமே இத் தொழிலில் இருப்பதால், தனது உற்பத்தி அளவினை மாற்றுவதன்மூலம் விலையை அவர் பாதிக்கக்கூடும். முன்பைவிட அதிக அளவு உற்பத்தி செய்வதற்காக விலையைத் தாழ்த்தும்போது (=*ar*), விற்பனை செய்யப்பட்ட ஒவ்வோர் அலகின் சராசரி வருவாயும் குறைவதுமட்டுமன்றி, விற்பனை செய்யும் இறுதிநிலை அலகினின்று கிடைக்கும் வருவாய் (*mr*) அதைவிடக் குறைந்து விடுகிறது. முன்பு விற்பனை செய்ததைக் காட்டிலும் அதிக அளவு விற்பனை செய்ய விரும்பும்போது, அதிகப்படியாக எவ்வளவு விற்க வேண்டுமோ அவற்றின் விலைகளைமட்டும் குறைத்தால் போதாது; ஏற்கெனவே விற்பனை செய்துவந்த பொருள்களின் விலையையும் குறைக்கவேண்டியுள்ளது. எனவே, எல்லா நிலைகளிலுமே இறுதிநிலை வருவாய்க் கோடு சராசரி வருவாய்க் கோட்டைக் காட்டிலும் தாழ்வாக இருக்கிறது.

தனது இலாபத்தை உச்சமாக்க வேண்டுமென்று சர்வாதீன நிறுவனம் விரும்பினால், போட்டி நிலையிலுள்ளதொரு நிறுவனத்தைப்போன்றே தனக்கு உச்சமான இலாபம் எந்த உற்பத்தி அளவில் கிடைக்குமென்று நிர்ணயிக்கவேண்டியுள்ளது. இறுதி நிலைச் செலவு, இறுதிநிலை வருவாய்க்குச் சமமாகின்ற அளவிற்கு அது உற்பத்தி செய்யும். உற்பத்தி *OM* அளவு இருக்கும்போதுதான் இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் ஒன்றுக்கொன்று *MN*-க்குச் சமமாகின்றன. இந்த உற்பத்தியை *OP* (=*MQ*) விலையில் விற்க முடியும்; சர்வாதீன இலாபத்தை *PQST* பரப்பு காட்டுகிறது. இந்த அளவைவிட உற்பத்தி குறைவாக இருந்தால், இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாயைக் காட்டிலும் தாழ்வாக இருக்கும்; எனவே, உற்பத்தி அளவை அதிகரிப்பதன் வழியாகச் செலவைக் காட்டிலும் வருவாயை அதிகரிக்க முடியும். *OM* அளவிற்குமேல் உற்பத்தியை விரிவாக்கினால், வருவாய் அதிகரிக்கும் அளவைவிடச் செலவு அதிகரிக்கும்.

நிறைகுறைப் போட்டி

நடைமுறையிலுள்ள தொழில்கள் போட்டியின் அம்சங்களையும் சர்வாதீன அம்சங்களையும் கொண்ட பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. சில தொழில்களில் பெரும் எண்ணிக்கையில் நிறுவனங்கள் இருப்பதையும், அவற்றின் எந்த நிறுவனத்திற்குமே விலையைப் பாதிக்கக்கூடிய சக்தி இல்லாதிருப்பதையும் காண்கின்றோம்; அதே சமயம் வேறு சில தொழில்களில் விலையை மாற்றக்கூடிய அளவிற்குச் சக்தி வாய்ந்த ஒருசில நிறுவனங்கள் மட்டும் இருப்பதையும் பார்க்கின்றோம்.[7] எனினும், பெரும்பாலான தொழில்கள் இவ்விரண்டு நிலைகளுக்குமிடைப்பட்ட நிலையில்தான் உள்ளன.

[7] ஒரு தொழில் என்பதற்கு மிக உன்னிப்பான இலக்கணம் தருவதாயின், ஓர் அங்காடிப் பகுதியில் மட்டும் விற்பனை செய்யும் ஒருசில நிறுவனங்களையே அது குறிப்பிடும் என்பதும், அவற்றுள் நிறைபோட்டி இருக்குமாயின் ஒரே விலைதான் நிலவும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது பூமி அமைப்பின் அடிப்படையில் குறிப்பிட்டதொரு பகுதியிலுள்ள 'தொழிலை'மட்டுமே குறிக்கும். எனவே, இந்த அங்காடியிலிருந்து வெகு தொலைவிலுள்ளனவும் போக்குவரத்துச் செலவிற்குட்பட்டனவுமான நிறுவனங்கள் இதில் சேரா. ஆனால், இது உண்மைக்குப் புறம்பானதோர் அனுமானம். ஏனெனில், எல்லா நிறுவனங்களுக்குமே போக்குவரத்துச் செலவு உண்டு. ஒரே நகரில் உற்பத்தியாகி விற்பனை செய்யப்படும் பொருள்களுக்குக்கூடப் போக்குவரத்துச் செலவு ஏற்படுகிறது. எனவே, குறிப்பிட்டதொரு பண்டத்தை விற்பனை செய்வதற்காக ஒரு பகுதியில் போட்டியிடுகின்ற எல்லா நிறுவனங்களையும் சேர்த்தே நாம் தொழிலாகக் கருதுவோம். அப்போது தொழிலுக்குத் தொழில் நிறுவனங்களின் அளவில் மாறுதல் ஏற்படும்.

உதாரணமாக, விரிவான அங்காடியுடைய அமெரிக்காவிலும் ஏனைய சில நாடுகளிலும் நெசவுப் பொருள்கள், பெண்மணிகள் ஆடை, பிளாஸ்டிக் பொருள்கள், அச்சடித்தல், பழங்களையும் காய்கறிகளையும் டப்பாக்களில் அடைத்தல் ஆகிய தொழில்களெல்லாம் தீவிரமான போட்டியுடையவை. அடுத்து, ஆண்களின் ஆடைகள், செருப்பு, காகிதம், சிமெண்ட், எந்திரக் கருவிகள் ஆகிய தொழில்களில் அவ்வளவு தீவிரமான போட்டி கிடையாது. இறுதியாக, அலுமினியம், எஃகு, கார், ஆலைத் தொழிலுக்கு வேண்டிய ரசாயனப் பொருள்கள், மருந்துவகை, எண்ணெய் சுத்தி செய்தல், பெரிய மின்சாதனங்கள், வாழைப்பழ இறக்குமதி ஆகிய தொழில்களில் 'ஒருசிலரைக்கொண்ட போட்டிதான்' உள்ளது. உற்பத்தியாளர்களின் எண்ணிக்கைதான் தெளிவற்ற இப் பாகுபாட்டிற்கு ஆதாரமாகும். நிறுவனங்களின் எண்ணிக்கை குறையக்குறைய, பொறிகளிலும் எந்திரத் தளவாடங்களிலும் செய்யப்படும் முதலீட்டின் அளவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் 'சர்வாதீனப் போட்டியில்' (monopolistic competition) புதிய நிறுவனங்கள் புகுவதற்குத் தடை அதிகரித்து விடுகிறது.

நிறைகுறைந்த போட்டியில் தனி நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள் வேற்றுமைப்படுத்தப்படாமலிருக்குமானால், போட்டி விலையைக் காட்டிலும் அதிக விலையை நிலைபேணவும், சர்வாதீன இலாபத்தைப் பெறவும் இயலாது. நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்தாலோ அல்லது கணிசமான எண்ணிக்கையில் இருந்தாலோ இது மிகக் கடினம். ஏனெனில், பண்டங்களனைத்தும் ஒரே தன்மையுடையனவாயிருக்க, நுகர்வோர் ஒரு நிறுவனத்திலிருந்து வாங்குவதற்குப் பதிலாகப் பிறிதொரு நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கு எக் காரணமும் இராது. எல்லா நிறுவனங்களும் ஒரே விலையில்தான் விற்கும்; விலைதானே நுகர்வோருக்கு முக்கியம்.[8] விற்பனை செய்யும் நிறுவனங்கள் ஒருசில மட்டும் இருந்தால்கூட, அவைகளுக்குள் வெளிப்படையான ஒப்பந்தமோ அல்லது இரகசியமான ஒப்பந்த ஏற்பாடோ இல்லாதிருக்குமானால், சர்வாதீன விலை மட்டத்திற்கு விலையை நிர்ணயிப்பது கடினம்—ஏனெனில், விலை நிர்ணயம் செய்வதில் அவைகளுக்குள் சதா போட்டி இருந்துகொண்டேயிருக்கும். ஒரு தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் ஒரே தன்மையுடையனவாயிருக்கும்போது, 'ஒருசிலரை மட்டும் கொண்ட

[8] அத் தொழிலில் புதிய நிறுவனங்கள் தோன்ற முடியுமானால், சில வேளை போட்டி நிலையிலுள்ளதைக் காட்டிலும் உயர்ந்த விலை இருக்கக்கூடும். எனினும், எல்லா நிறுவனங்களும் ஒரே விலையின்தான் தம் பண்டங்களை விற்கும்.

போட்டி நிலை' நீடித்திருக்க முடியாது. விலைகளைப் போட்டி போட்டுக் குறைக்கும் காலமும் மிக அதிக விலையில் விற்கும் காலமும் மாறிமாறி அத் தொழிலில் ஏற்படும்.

இவ் வகைக் காரணங்களால்தான் ஒவ்வொரு தொழிலிலும், தனக்கு அதிக இலாபம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, ஒவ்வோர் உற்பத்தியாளரும் தம் பண்டங்களை வேற்றுமைப்படுத்த (product differentiation) முயல்வதை நாம் காண்கின்றோம். அவ்வாறு பண்ட வேற்றுமைப்படுத்துவதில் இரண்டு உபாயங்கள் உள்ளன. முதலாவது, எளிப்பு நிலையிலிருந்து இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைவது; அதாவது, உற்பத்தியாளர் ஏனைய போட்டியாளர்களைக் காட்டிலும் தனது உற்பத்திச் செலவைக் குறைக்க முயலக்கூடும். ஆனால், அத் தொழில் ஏற்கெனவே உகந்த அளவு திறன்பெற்றதாயிருந்தால், அவ்வாறு செய்வது கடினம். அவ்வாறே ஒருவர் செய்ய முடிந்தாலும், மற்றவர்களும் அவரைப் பின்பற்றித் தத்தம் செலவைக் குறைக்கக்கூடும். எனவே, இறுதியில் அத் தொழிலின் செலவு தாழ்ந்த நிலையில்தானிருக்கும். அப்போது விலையும் தாழ்வாக இருந்து, சாதாரணப் போட்டி நிலையில் கிடைக்கும் இலாபத்தைக் காட்டிலும் அதிக இலாபம் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இரண்டாவதாக, நுகர்வோர் மனதிற்கிசைந்தபடி, நிறுவனங்கள் தம் பண்டங்களை வேற்றுமைப்படுத்த முயலக்கூடும். இம் முயற்சியில் எந்த அளவு வெற்றி கிடைக்குமோ, அந்த அளவிற்கு வேற்றுமைப்படுத்தப்பட்ட பண்டத்திற்கு இதர பண்டங்கள் சரியான பதிலீட்டுப் பண்டங்களாக இருக்க முடியாது. வேறுவிதமாகக் கூறின், இது போட்டி நிலையிலிருந்து தமது அங்காடியை ஓரளவிற்குப் பிரித்துவிடுகிறது. அதனால், அப் பண்டத்தின் தேவைக் கோடு படுகிடையாயில்லாமல் தாழ்ந்து செல்லும் சரிவைக் கொண்டதாய் ஆகிவிடுகிறது. (சாதாரணச் சொற்களில் இதைக் கூறுவதாயின், தனது முழு விற்பனையையும் இழந்துவிடாமல் அந்த நிறுவனம் உயர்ந்த விலை நிர்ணயிக்க முடியும் என்பதை இது புலனாக்குகிறது.)


ஒரு நிறுவனம், தனது பண்டத்தை வேற்றுமைப்படுத்துவதற்குள்ள இரண்டு உபாயங்களில் ஏதாவதொன்றையோ அல்லது இரண்டையுமோ மேற்கொள்ளலாம். (1) தனது பண்டத்தின் தரத்தை உயர்த்தலாம்; அல்லது இது கடினமென்றால், அவ்வாறு தரத்தை உயர்த்தியதுபோல் காட்டுவதற்குத் தன் பண்டத்தின் உருவத்தையோ, தோற்றத்தையோ, அல்லது அதைக் கட்டும்

முறையையோ (packaging) மாற்றி அமைக்கலாம். ஆனால், இவற்றில் எந்த முறையைக் கடைப்பிடித்தாலும், இதர போட்டி நிறுவனங்களும் அவ்வாறு செய்ய முற்படுவதால் அதனால் அவ்வளவு பலனிராது. (2) விற்பனை உபாயத்தை மேற்கொள்வதுதான் சாதாரண வழி. அதாவது, வாங்குவோர் தனது பண்டம்தான் உண்மையில் அல்லது கற்பனையில் உயர்ந்தது என்று வாங்குவோர் நம்பும்படியாக ஒரு நிறுவனம் விற்பனைத் திறன் கொண்டோரை வேலைக்கமர்த்தலாம்; அல்லது விளம்பரப் பகுதியில் விளம்பரம் செய்யலாம். இவ்வாறு விற்பனையை அதிகரிப்பதற்கென்று மேற்கொள்ளும் உபாயங்களால் செலவு அதிகமாகிறது. எனவே, அந்த நிறுவனத்தின் செலவுக் கோட்டை அது நிச்சயமாக உயர்த்திவிடும். எனினும், செலவுக் கோட்டைக் காட்டிலும் தேவைக் கோட்டை இது உயர்த்துமாயின், அதனால் நிச்சயம் இலாபம் கிடைக்கும்.

மேலும், அவ்வாறு இலாபம் கிடைத்தால், மற்றோரும் அவ்வுபாயத்தை மேற்கொள்வர். ஏனெனில், இவ் வுபாயத்தை மேற்கொள்வதால் ஒரு நிறுவனம் தனது போட்டி நிறுவனங்களைப் பாதிக்கும் வகையில் தனது விற்பனையை அதிகரிக்க முடிந்தால், மற்றவைகளும் அவ்வாறே செய்ய முற்படும் என்பது உறுதி. ஒரு தொழிலிலுள்ள எல்லா நிறுவனங்களுமே இவ்வாறு போட்டி விளம்பரத்தையும் விற்பனையையும் மேற்கொண்டால், ஒவ்வொரு நிறுவனத்தின் முயற்சியும் மற்றவைகளின் முயற்சியால் பாதிக்கப்படும். அப்போது நிறுவனத்தின் தேவைக் கோடு கீழ்நோக்கிச் செல்லும். புதிய நிறுவனங்கள் எளிதாக அத் தொழிலில் புக முடிந்தால், அதன் முடிவு இறுதியில் நிறைவுப் போட்டியினதைப் போன்றுதான் ஆகிவிடும். பண்டங்களின் தரத்திலும் விற்பனையிலும் ஏற்படும் போட்டியின் காரணமாக, தனியொரு நிறுவனத்தின் தேவைக் கோடு, அதன் சராசரிச் செலவுக் கோட்டிற்குத் தொடுகோடாகவோ அல்லது தொடக்கூடியதாகவோ ஆகும்வரை அது கீழே இறங்கிவிடும். அப்போது அப் பண்டத்தின் விலை, சராசரிச் செலவிற்குச் சமமாகக்கூடியதாக அமைந்துவிடும். சராசரிச் செலவுக் கோட்டின் அடித்தளத்திற்குச் சிறிது உயர்வாக அது இருக்க முடிந்தாலும், (சராசரி வருவாய்க் கோடு கீழ்நோக்கிச் செல்வதால்) இலாபம் போட்டி நிலையில் இருக்கக்கூடியதைக் காட்டிலும் அதிகம் கிடைக்காது. (இதற்கு 8.2 வரைபடத்தைப் பார்க்கவும்.)

அளவுச் சிக்கனங்களின் காரணமாக, குறிப்பாக அளவுச் சிக்கனங்களை அடைவதற்கு அவசியமான பெருமளவு முதலீட்டின்

காரணமாகப் போட்டி நிறுவனங்கள் மிகச் சொற்ப எண்ணிக்கையில் இருந்தால், அவை இலாபகரமான முறையில் பண்டத்தை வேற்றுவைப்படுத்தவும், அதன் விளைவாகப் போட்டி நிலையிலுள்ளதைக் காட்டிலும் அதிக விலை வசூலிக்கவும்கூடும். ஒவ்வொரு



வரைபடம் 8.2 பண்டத்தின் தரத்திலும் விற்பனையிலும் போட்டியுடைய சர்வாதீனப் போட்டி.

நிறுவனமும் தனது இலாபத்தை உச்சமாக்குவதையே குறிக்கோளாகக் கொள்ளும்போது, விலை உயர்வாகத்தானிருக்கும்.

எனினும், இவ்வகைத் தொழிலின் நிறுவனங்கள் தம் நீண்டகாலப் பயனைக் கருதி, போட்டி நிலையிலுள்ளதைக் காட்டிலும் உயர்ந்த விலை வசூலிக்காமல், சீரானதொரு விலைக் கொள்கையை மேற்கொள்ளலாம். அப்போது இலாபம் சாத்தியமானதெனினும் மிதமிஞ்சி இராது. உயர்ந்த விலையில் அதிக இலாபம் கிடைப்பதாயின் புதிய நிறுவனங்கள் அத் தொழிலில் புகுந்துவிடலாம் என்ற பயமோ, அல்லது அவ்வாறு மிக உயர்ந்த விலை வசூலிக்கும் போது அரசாங்கம் தலையிடலாம் என்ற அச்சமோ அவர்களிடம் இருக்கக்கூடும். மேலும், பொருளாதாரத் துறையில் பொதுவாக ஏற்படும் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக மிக நெருங்கிய பதிலீட்டுப் பொருள்கள் தோன்ற வழி ஏற்படுவதால், சீரான விலைக் கொள்கையை மேற்கொள்வதே சிறந்ததென அவர்கள் நினைக்கலாம்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் மற்றோர் அம்சத்தையும் நாம் இங்கு கவனிக்கவேண்டும். போட்டியிலிருந்து ஓரளவு பாதுகாக்கப்

பட்ட அங்காடியும், அதில் கிடைக்கும் அதிக இலாபமும் ஒரு நிறுவனம் மும்முரமாக ஆராய்ச்சி செய்து, தன் உற்பத்திப் பொருளை அபிவிருத்தி செய்வதன்மூலம் அதன் அடக்கச் செலவைக் குறைப்பதற்கு அடிப்படையான நிதிப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருகிறது. அவ்வாறுயின், நீண்ட காலத்தில் மேலும் நன்கு போட்டியிடுவதற்குத் தொடக்கத்தில் ஓர் அளவு சர்வாதீனம் இருப்பது அவசியமாகிறது. இது முன்னுக்குப்பின் முரணுகத் தோன்றலாம். இது உண்மையாயின், எந்த ஒரு சமயத்திலும் விற்பனைப் போட்டி குறைவாக இருப்பதால், பண்ட வேற்றுமைப் படுத்தலின் வெற்றி காரணமாகப் போட்டி நிலையிலுள்ளதைக் காட்டிலும் உயர்ந்த விலை இருந்தால்கூட, நீண்ட காலத்திய தீவிரமான போட்டி அத் தொழிலில் இருந்தால் இருக்கக்கூடிய விலையைவிடக் குறைந்த விலைக்கே அப் பண்டம் விற்பனை செய்யப்படும்.

கூட்டு ஒப்பந்தம் செய்வதற்குத் தூண்டுகோல்

நிறைகுறைப் போட்டியிலுள்ள விலையும் இலாபமும் நிறை போட்டியிலிருப்பதைக் காட்டிலும் அதிக வித்தியாசமின்றி இருக்கக் கூடும் என்று எண்ணுவதற்குக் காரணங்கள் இருந்தபோதிலும், அத்தகைய இனிமையான முடிவு நிச்சயமாக ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. ஒருசிலரை மட்டும் கொண்ட நிறைகுறைந்த போட்டியில், அவர்கள் தம் வேற்றுமைப்படுத்தப்பட்ட பண்டங்களை விற்கும்போது, தம் சர்வாதீன வலிமையைப் பிரயோகிப்பதில் தடை ஏதுமில்லாமலிருக்கலாம்—அரசாங்கம், சர்வாதீனத்திற்கு மாறுன கொள்கையைக் கொண்டதாக இல்லாமலிருக்கலாம்; அல்லது, அத் தொழிலில் புதிய நிறுவனங்கள் தோன்றுவதற்கு ஏற்படும் பெருமளவுச் செலவின் காரணமாக அத் தொழிலில் புதிதாய் யாரும் புக முடியாமலிருக்கலாம். அப்போது, இருக்கின்ற ஒருசில நிறுவனங்கள் தமக்குள் ஒரு வரம்பை மீறிப் போட்டியிடுவதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

உலோகத் தகடுகள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான ரசாயனப் பொருள்கள், அல்லது கச்சாப் பொருள்கள் போன்ற, இயல்பான குண வேறுபாடுகளின்றி ஒரே தன்மையுடைய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில்தான் இத்தகைய ஒப்பந்தம் செய்வதற்கு அதிக அளவு தூண்டுகோல் இருக்கிறது. அத்தகைய தொழிலில் அடிக்கடி விலைப் போட்டிகள் ஏற்படாமலும்,

அதனால் அத் தொழிலே சீரழிந்துவிடாமலும் இருப்பதற்கு ஒரே வழி போட்டியின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதே.

எல்லா நிறுவனங்களும் நல்ல இலாபத்தைப் பெறவேண்டுமானால், அதற்கு நிச்சயமான வழி (போட்டியைத் தவிர்க்கும் வழியில்) ஒப்பந்தம் செய்துகொள்வதுதான். எனவே, ஒரு நாட்டு அங்காடி அளவிலும், பன்னாட்டு அங்காடி அளவிலும் இத்தகைய ஒப்பந்தங்கள் பல இருப்பதில் ஆச்சரியமில்லை. நிறை குறைந்த போட்டிபற்றிய நமது ஆய்வில் இத்தகைய ஒப்பந்தங்கள் செய்வதற்குரிய முக்கியமான வழிவகைகள் சிலவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

கார்ட்டெல்கள்
(Cartels)

போட்டியின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, முறைப்படியான அல்லது முறைப்படியில்லாத வழிகளிலோ, எழுத்து முறையிலோ, அல்லது இரகசியமாகவோ செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் அனைத்தும் 'கார்ட்டெல்கள்' என்னும் பொதுவான தலைப்பில் அடங்கும். எழுத்து வாயிலாகச் செய்யப்படும் ஒப்பந்தங்கள், ஏனைய திட்டவட்டமற்ற ஒப்பந்தங்களைக் காட்டிலும் வரையறை பெற்றவையும் எளிதானவையுமாகையால், கார்ட்டெல் அங்கத்தினர்கள் பெரும்பாலும் தமக்கென்று ஒரு சங்கத்தை அமைத்துக்கொள்வர்.

ஒப்பந்தமில்லாத நிலையில் கிடைக்கக்கூடிய இலாபத்தைக் காட்டிலும் கார்ட்டெலின் அங்கத்தினர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கச் செய்வதுதான் இதன் குறிக்கோள்.[9] தமது போட்டி நிலையைக் கட்டுப்படுத்துவதற்கென்று ஏதாவதோர் உபாயத்தை அவர்கள் மேற்கொள்வர்.

கார்ட்டெல்களின் செயலாற்றல்

பன்னாட்டுக் கார்ட்டெல்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை, பல்வேறு அளவீடுகள் உள்ளன. அவற்றின்படி இரு உலகப் போருக்குமிடைப்பட்ட காலத்திய மொத்தப் பன்னாட்டு வாணிபத்தில், சுமார் $\frac{1}{3}$ முதல் $\frac{1}{2}$ பங்குவரை, கார்ட்டெல்

[9] சில சமயம் நிலையான இலாபத்தைப் பெறுவதுமட்டும்தான் தங்கள் குறிக்கோள் என்று கார்ட்டெல்களைப் பாதுகாக்க விரும்பும் அங்கத்தினர் வாதாடுவதுண்டு. எனினும், அவர்களுக்கு ஒப்பந்தமூலம் கிடைக்கும் இலாபங்கள் போட்டி நிலையிலுள்ள இலாபத்தைக் காட்டிலும் நிச்சயம் அதிகமாயிருக்குமெனக் கூறலாம்.

முறைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.[10] இவ்வாறு கார்ட்டெல்களின் கட்டுப்பாட்டில் இருந்த பொருள்களில் கச்சாப் பொருள்களான உலோகம், கனிப்பொருள்கள் ஆகியவையும், தொழிற்சாலைப் பொருள்களான சாயம் காய்ச்சும் பொருள்கள், மின்சார சாதனங்கள், மருந்து வகைகள் ஆகியவையும் முக்கிய இடம் பெற்றன.

கட்டுப்படுத்தும் வழிகள்

சில பொருள்களைப் பொறுத்தவரை, அங்கத்தினர்கள் அவற்றை எந்த விலைக்கு விற்கவேண்டுமென்று கார்ட்டெல்கள் நிர்ணயம் செய்தன; எனினும், உற்பத்தி அளவிற்கு வரையறை செய்வதன்வழியாகத்தான் பெரும்பாலும் விலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. எனவே, அங்காடிகளுக்கேற்ப (கீழே பார்க்கவும்) அல்லது நுகரும் பல்வேறு வகுப்பினருக்கேற்ப விலை பேதங் காட்டும் கொள்கையையும், நடைமுறையில் காணப்பட்ட விலைப் போட்டியையோ அல்லது அவ்விதப் போட்டி ஏற்படக்கூடும் என்ற பயத்தையோ அகற்றுவதற்குமான விலைக் கொள்கையையும்தாம் கார்ட்டெல்கள் கையாண்டன. உற்பத்தி அளவினைக் கட்டுப்படுத்துவதற்காகவெனவே மறைமுகமாகவும் நிச்சயமாகவும் விலையை உயர்த்துவதற்காகத்தான் பெரும்பாலும் கார்ட்டெல்கள் உபாயத்தைக் கையாண்டன. தம் அங்கத்தினர்கள் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டுமென்ற பங்களவை (quota) நிர்ணயிப்பதே அவ்வுபாயமாகும். அவ்வாறு நிர்ணயித்த பின்னர், பங்கு அளவைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்தோருக்குத் தண்டனைத் தொகை விதித்தும், குறைவாக உற்பத்தி செய்தோருக்குப் பண உதவி அளித்தும் பங்கு அளவு முறைத் திட்டத்தைச் செயல்படுத்தின. பேட்டன்டு உரிமை பெற்ற பொருள்களை, அவ்வுரிமை பெற்ற உற்பத்தியாளர்மட்டும் உற்பத்தி செய்வதற்கு அனுமதி இருப்பதால், அனுமதி வழங்குவதன்வாயிலாக உற்பத்தி அளவை நிர்ணயிக்கும் ஒப்பந்த முறைகளும் கையாளப்பட்டன.

கார்ட்டெல்கள் மேற்கொள்ளும் வழிவகைகளில் அங்காடிகளை அங்கத்தினர்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் வழியும் ஒன்று. இம்

[10] மாக்லுப் (Machlup) அவர்கள் குறைந்தபட்சம் இது 32 சதவீதமாவது இருக்குமெனக் கணக்கிட்டுள்ளார். மேசன் (Mason) அவர்களின் அளவீட்டின்படி, கார்ட்டெல்கள் அல்லது அதுபோன்ற சங்கங்கள், மாநாடுகள் ஆகியவற்றின் பங்கு குறைந்தபட்சம் 42 சதவீதம் எனத் தெரிகிறது. (Fritz Machlup, 'The Nature of the International Cartel Problem', in Corwin D. Edwards and others, 'A Cartel Policy for the United Nations, Columbia University Press,' New York, *1945*, P. *11*; Edward S. Mason, 'Controlling World Trade,' McGraw-Hill Book Co., New York, *1946* p. *26* n.). யுத்தத்திற்குப் பிந்திய அளவீடு எனக்குத் தெரிந்த வரை கிடையாது.


முறைப்படி, பன்னுட்டுக் கார்ட்டெல் ஒன்றின் அங்கத்தினர் ஒவ்வொருவரும், ஏனைய அங்கத்தினர்கள் செல்வாக்கடைந்துள்ள அங்காடிகளிலிருந்து விலகிக்கொள்வது என்று ஒப்புக்கொள்வர்.

இப்போதுள்ள கார்ட்டெல்களின் செயல்கள் போர்க்காலத்திற்கு முன்பிருந்ததைக்காட்டிலும் குறைவுதான். சர்வாதீனத்திற்கு எதிரான கொள்கை இங்கிலாந்து நாட்டில் கையாளப்பட்டதும், சர்வாதீனத்திற்கு மாருன கொள்கையுடைய ஐரோப்பிய பொதுச் சந்தை தோன்றியதும் இதற்குக் காரணமாகும். ஐரோப்பிய நாட்டு நிலக்கரியையும் எஃகு பொருள்களையும் உற்பத்தி செய்து, விற்பனை செய்துவந்த தனியார் துறைக்குப் பதிலாக இப்போதுள்ள பொதுத்துறைக் கட்டுப்பாட்டை இங்கு குறிப்பிடல் நல்லது. இக் கட்டுப்பாட்டிற்கென்று ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (European Coal and Steel Community) 1950-ல் தொடங்கப்பெற்றது (27ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்). அமெரிக்க ஐக்கிய நாட்டில் சர்வாதீனத்திற்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்த பல வழக்குகளின் விளைவாக, ஒப்பந்தம் செய்துகொள்ளும் மனப்பான்மை அங்கு சோர்வடைந்துவிட்டது. ஜப்பானில்மட்டும்தான் இவ்வித சர்வாதீனச் சக்திகள் மீண்டும் தோன்றியுள்ளன. சர்வாதீன நடவடிக்கைகளை ஜப்பானிய அரசாங்கம் ஆதரிப்பதோடுமட்டுமன்றி அவற்றிற்கு ஊக்கமும் கொடுத்துவருகிறது.

விலை பேதங்காட்டல்

சர்வாதீன வலிமையுடையதொரு நிறுவனம், தனது பண்டத்தை உள்நாட்டு அங்காடியில் ஒரு விலைக்கும் வெளிநாட்டு அங்காடியில் மற்ருெரு விலைக்கும் விற்க முடியும். இதற்குக் காரணம், போக்குவரத்துச் செலவினுல் இவ் அங்காடிகள் பிரிக்கப்பட்டிருப்பதுதான். அதோடு, சுங்கவரிக் கொள்கையோ அல்லது மக்களின் பற்றுதல், பழக்கவழக்கம், தொழில் செய்யும் விதம் முதலியவற்றின் வேறுபாடுகளோ ஓரளவு காரணமாயிருக்கக் கூடும். வெளிநாட்டு அங்காடியில் மலிவாக விற்கப்படும் பண்டம், மறுபடியும் உள்நாட்டிற்கே வருவதாயிருந்தால் போக்குவரத்துச் செலவு ஏற்படுகிறது. இச் செலவு உள்நாட்டு விலைக்கும் வெளிநாட்டு விலைக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கும்போது, அப் பண்டத்தை வெளிநாட்டிலிருந்து உள்நாட்டிற்குத் திரும்ப விற்பனை செய்து இலாபம் பெற இயலாது. மாருக, உள்நாட்டு அங்காடியில் அப் பண்டம் மலிவாக இருந்தால், அதை வெளிநாட்டு அங்காடிக்கு யாரும் ஏற்றுமதி செய்துவிடாதபடி உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்தும் வலிமை சர்வாதீனத்திற்கு உண்டு.

இரண்டு அங்காடிகளிலுமுள்ள தேவை நெகிழ்ச்சி வெவ்வேருக இருந்தால்தான், விலே பேதங்காட்டல் இலாபகரமானதாயிருக்கும். எவ்வாறெனில், ஒரே விலேயில் இரண்டு அங்காடிகளிலும் விற்ருல், தேவை நெகிழ்ச்சியற்ற அங்காடியிலிருந்து கிடைக்கும் இறுதிநிலே வருவாய், தேவை நெகிழ்ச்சியுடைய அங்காடியின் இறுதிநிலே வருவாயைக் காட்டிலும் குறைவாயிருக்கும்; அப்போது இறுதிநிலே வருவாய் குறைவாயுள்ள அங்காடியில் விற்கப்படும் பொருளின் ஒரு பகுதியை இறுதிநிலே வருவாய் அதிகம் கிடைக்கும் அங்காடியில் விற்ருல் சர்வாதீனத்திற்குக் கிடைக்கும் மொத்த வருவாய் அதிகரிக்கும். எனவே, இரண்டு அங்காடிகளிலிருந்தும் கிடைக்கும் இறுதிநிலே வருவாய் ஒன்றுக்கொன்று சமமாகும்வரை விற்பனேயை ஓர் அங்காடியிலிருந்து பிறிதொன்றுக்கு மாற்றுவது இலாபகரமானதாகிறது. உச்சமான இலாபமுடைய இச் சமநிலேயில், இறுதிநிலே வருவாய் உற்பத்தியின் இறுதிநிலேச் செலவிற்குச் சமம் என்ருகும்.



வரைபடம் 8.3 விலே பேதங்காட்டும் இரு அங்காடிகள்

இவ் வாதத்தை வரைபடம் 8.3-ன் வழியாக விளக்கலாம். இப் படத்தில் A, B என்று இரண்டு அங்காடிகள் உள்ளன. இவ்விரண்டிற்கும் பொதுவானதொரு செங்குத்து அச்சும் (சராசரி, இறுதிநிலே வருவாய்), தனித்தனியான படுகிடை அச்சுகளும்

(அளவு) உள்ளன. B என்னும் அங்காடியில் விற்கப்படும் அளவு O-விலிருந்து வலப்புறமாக உள்ள கிடை அச்சிலும், A அங்காடியின் அளவு இடப்புற அச்சிலும் அளவிடப்பட்டுள்ளன.

இரண்டு அங்காடிகளிலும் P மட்டத்தில் ஒரே விலை நிலவுமானால், தேவை நெகிழ்ச்சி குறைவாயுள்ள A நாட்டின் இறுதிநிலை வருவாய், தேவை நெகிழ்ச்சி அதிகமுள்ள B நாட்டின் இறுதிநிலை வருவாயைக் காட்டிலும் தாழ்வாக இருக்கிறது. A-யில் விற்கப் படும் பண்டத்தின் ஒரு பகுதியை (அதாவது, M_b M'_b -க்குச் சமமான M_a M'_a அளவு) B அங்காடிக்கு மாற்றும்போது A-யில் கிடைக்கும் இறுதிநிலை வருவாய் R-லிருந்து S-க்கு உயர்கிறது; அதே சமயம் விலையும் P-யிலிருந்து P_a -க்கு உயர்கிறது. B-யில் இறுதிநிலை வருவாய் T-யிலிருந்து U-க்குத் தாழும் அதே சமயம், விலையும் P-யிலிருந்து P_b -க்குச் சரிகிறது.

A, B ஆகிய இவ்விரண்டு நாடுகளில் ஏதாவதொன்று உள் நாட்டு அங்காடியாகவும், பிறிதொன்று வெளிநாட்டு அங்காடியாகவும் இருக்க முடியும். A உள்நாட்டு அங்காடியாக இருந்தால், அங்கு விற்பனையாளர் அடிப்படையான சர்வாதீன வலிமை கொண்டிருப்பதால், வெளிநாட்டு அங்காடியில் (B நாட்டின் படத்திலுள்ளதைப்போல்) தேவை அதிக நெகிழ்ச்சியுடையதாக இருக்கலாம்; காரணம், வாங்குவோரின் பற்றுதல் வேறு மாதிரி இருக்கலாம் அல்லது வேற்றுமைப்படுத்தப்பட்ட பண்டமாயிருந் தாலும், ஓரளவு போட்டி அங்கு இருக்கலாம். (வெளிநாட்டு அங்காடி நிறை போட்டியுடையதாக இருந்தால், நமது விற்பனை யாளர் அங்கு போட்டி விலையிலும், உள்நாட்டில் சர்வாதீன விலையிலும் விற்பார்.) மாறாக, B உள்நாட்டு (சர்வாதீன) அங்காடியாக இருக்குமானால், வெளிநாட்டு அங்காடியில் (A) தேவை நெகிழ்ச்சி குறைவாயிருப்பதற்கு, அங்குள்ள நுகர்வோரின் பற்றுதல் வேறுவிதமாக இருப்பது காரணமாகலாம்; அல்லது பதிலீட்டுப் பொருள்களால் ஏற்படும் போட்டி அங்கு வலிமை நலிந்ததாய் இருப்பது காரணமாயிருக்கலாம்.

சர்வாதீனச் செயல்களின் விளைவுகள்

ஒப்பந்தத்தின் விளைவாகவோ, அல்லது தமக்குப் போட்டி யாளர் அதிகமில்லை, புதிதாகவும் போட்டிக்கு யாரும் வரமுடியாது என்பதாலோ உற்பத்தியாளர்கள் தமது சர்வாதீன வலிமையை வேண்டுமென்றே பயன்படுத்தும்போது, போட்டி நிலையிலிருப் பதைக் காட்டிலும் விலை உயர்வாகவும் உற்பத்தி அளவு குறை வாகவுமே இருக்கும். எனவே, போட்டி நிலையிலிருக்கும் சாதனப்

பங்கீட்டிற்கும் இதன் பங்கீட்டிற்கும் வேறுபாடு இருக்கும். சமூகம் இதனை அவ்வளவாக விரும்புவதில்லை.

நிறைபோட்டி அங்காடியில் ஒரு பண்டத்தின் விலை அதன் செலவிற்கு மட்டுமன்றி, இறுதிநிலை வருவாய்க்கும் சராசரிச் செலவுக்கும் சமமாயிருக்கும். ஓர் அலகு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு காரணிகளின் விலைகள்தாம் உற்பத்திச் செலவில் அடங்கும். அதே சமயம் எந்தத் துறையில் பயன்படுத்தப்பட்டாலும் காரணிகளுக்கு ஒரே விலைதான் இருக்கும்.

சாதனப் பங்கீடு

எனவே, சாதனங்கள் மிகச் சிறந்த வழியில் பயன்படுத்தப் படும்.[11] ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் சாத னங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டால், அதன் உற்பத்திச் செலவு அதிகமாகின்ற அதே சமயத்தில் விலை குறைந்துவிடும். அப்போது நுகர்வோர், ஏனைய பண்டங்களில் அக் காரணிகள் பெற்றிருக்கக்கூடிய விலையைக் காட்டிலும் குறைந்த விலைதான் இப் பண்டத்திற்குச் செலுத்துவர். மாறாக, குறைந்த அளவு சாதனங்கள் பயன்கொள்ளப்பட்டால், இறுதிநிலைச் செலவு குறையும்; அதே சமயம் விலை ஏறிவிடும்; அப்போது காரணிப் பணிகளின் விலையைவிட அதிக விலையை நுகர்வோர் இப் பண்டத் திற்குச் செலுத்துவர்.

நிறைவுப் போட்டியில்தான் மிக உச்சமான நன்மைகள் ஏற்படுகின்றன. காரணம், நிறைவுப் போட்டியின் விலை உற்பத்தி யாளரின் இறுதிநிலைச் செலவிற்கும் இறுதிநிலை வருவாய்க்கும் சமமாயிருப்பதுதான். உற்பத்தியாளர், தம் இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும், எனவே, விலையும் எந்த அளவு உற்பத்தியில் சமமாயிருக்குமோ, அந்த அளவு உற்பத்தி செய்து உயர்ந்தபட்ச இலாபத்தைப் பெறுவர். உற்பத்திக் காரணிகள் இடம் பெயர்வதற்கு எவ்விதத் தடையுமில்லாதிருப்பதால், ஒவ்வோர் உற்பத்திக் காரணிக்கும் ஒரே விலைதான் எங்கும் நிலவும். இவ் விலை அதன் இறுதிநிலை உற்பத்தி ஆக்க மதிப்பிற்குச் சமமானதாயிருக்கும்.

[11] இதற்கு, நெடுங்காலத்தில் தனியொரு சர்வாதீன நிறுவனமோ அல்லது சர்வாதீன வலிமை பெற்ற ஒருசில நிறுவனங்களோ ‘நன்னடத்தையோடு’ செயல்படுவது ஒரு விதிவிலக்காகும். தம் நிதி வலிமை நன்றாக இருப்பதால் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, தம் உற்பத்திப் பொருளை அபிவிருத்தி செய்து, அவற்றின் உற்பத்திச் செலவை இச் சர்வாதீனம் குறைக்கலாம்.

உற்பத்தியாளர் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதாலோ, அல்லது தமக்குள் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதாலோ, அல்லது தமது பண்டங்களை வேறுபடுத்திக் காட்டுவதாலோ, ஓர் அளவு சர்வாதீன வலிமையுள்ளவர்களாக இருக்கும்போது, அவர்களின் விலை இறுதிநிலைச் செலவைக் காட்டிலும் அதிகமானதாயிருக்கும். குறிப்பாக, அவர்கள் தம் இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாகும் அளவில் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன்மூலம் தமது சர்வாதீன வலிமையைப் பயன்படுத்தினால் விலை இவ்வாறுதான் அமையும். ஏனெனில், சர்வாதீன நிலையில் நிறுவனத்தின் சராசரி வருவாய் அல்லது தேவைக் கோடு எல்லையற்ற நெகிழ்ச்சியுடையதாயிராமல் கீழ்நோக்கிச் சரிவதால், சராசரிச் செலவு இறுதிநிலைச் செலவைக் காட்டிலும் அதிகமாகிறது.

ஆனால், இறுதிநிலைச் செலவைக் காட்டிலும் விலை அதிகமாயிருந்தால், உற்பத்திக் காரணிகள் சிக்கனமாகச் செலவிடப்படவில்லை என்பது புலனாகிறது. ஏனெனில், இறுதிநிலைச் செலவு காரணிப் பணிகளுக்காகச் செலுத்தப்படும் விலைக்குச் சமமாக இருந்தால், அப்போது உற்பத்திக்குப் பயன்படும் சாதனங்களின் விலையைக் காட்டிலும் சர்வாதீன வலிமைபெற்ற நிறுவனம் நுகர்வோரிடமிருந்து அதிக விலையை வசூலிக்கும். இச் சர்வாதீனப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு இன்னும் அதிக அளவு சாதனங்களைப் பயன்படுத்தினால், உற்பத்தியின் குறிக்கோளான நுகர்வோரின் திருப்தி அதிகரிக்கக்கூடும். மேலும், சர்வாதீன நிறுவனம் தனது உற்பத்தி அளவை வேண்டுமென்றே குறைக்கும் போது, சராசரி உற்பத்திச் செலவு அதன் குறைந்தபட்ச நிலையைக் காட்டிலும் உயர்வாகிவிடுகிறது. இது, உற்பத்தி சாதனங்கள் அவற்றின் முழுச் சக்திக்கும் பயன்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே, உற்பத்தி அளவை இந்த நிறுவனம் அதிகரித்தால் நுகர்வோர் அதிக திருப்தி அடையக்கூடும்; அதோடு, சராசரி உற்பத்திச் செலவு குறையும்; சாதனங்களும் இன்னும் அதிக அளவு சக்திக்குப் பயன் படுத்தப்படும்.

தமக்குள் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன்மூலம் உற்பத்தியாளர்கள் சர்வாதீன நிலையை ஏற்படுத்திக்கொண்டால், உற்பத்தி சாதனங்கள் தம் குறைந்த சக்திக்குதான் பயன்படுத்தப்படும். ஒப்பந்தம் வலிமையுடனிருப்பதற்கு அதிகச் செலவுடையதும் திறமையற்றதுமான பல நிறுவனங்களை இந்த ஒப்பந்தத்தில் சேர்ப்பதுதான் இதற்குக் காரணம். அந்த நிறுவனங்கள் செய்யும்

உற்பத்தி தேவையற்றது. அவற்றிற்குப் பதிலாகத் திறன்மிக்க நிறுவனங்கள் மட்டும் உற்பத்தி செய்வதாயிருந்தால், அவற்றின் சாதனங்கள் இன்னும் அதிகப் பயனுள்ள வேறு துறைகளில் பயன் படுத்தப்படக்கூடும். எனினும், ஒப்பந்தத்தில் அவற்றின் சம்மதத் தையும் பெறவேண்டுமாயின், அவற்றிற்கும் ஒரு பங்கு ஒதுக்க வேண்டியது அவசியமாகிறது.

விலை பேதங்காட்டல்

தனது உற்பத்தியில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்யும்போது, சர்வாதீன நிறுவனம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெவ்வேறு விலையை நிர்ணயம் செய்து விலைப் பேதம் காட்டும் பழக்கத்தை மேற்கொள்ளலாம். வெளி நாட்டுத் தேவை உள் நாட்டுத் தேவையைக் காட்டிலும் அதிக நெகிழ்ச்சியுடையதாக இருந்தால், வெளிநாட்டு விலை தாழ்வாக இருக்கும். அவ்வாறு நெகிழ்ச்சி குறைவாயிருப்பதற்கு நுகர்வோரின் பற்றுதல் வேறு மாதிரி இருப்பது காரணமாயிருக்கலாம்; அல்லது வெளிநாட்டில் இச் சர்வாதீன நிறுவனத்திற்குப் போட்டி இருப்பது காரணமாகலாம். மாருக, உள் நாட்டுத் தேவை அதிக நெகிழ்ச்சியுடையதாக இருந்தால் உள் நாட்டு விலை தாழ்வாக இருக்கும். இவ்வாறு இரண்டு அங்காடிகளிலும் வெவ்வேறு விலை நிலவினுலும் சரி, அல்லது ஒரே விலை இருந்தாலும் சரி, பயன்படுத்தப்படும் சாதனங் களின் அளவு ஒன்றுதான். எனவே, காரணிகளைப் பொறுத்த வரை விலை பேதங் காட்டுவதால் ஒன்றும் நஷ்டமும் இல்லை; இலாபமும் இல்லை. அதிக விலை கொடுக்கவேண்டிய நுகர்வோர் எரிச்சல்படலாம். உள் நாட்டு வாடிக்கையாளரைப் போலவே வெளிநாட்டு வாடிக்கையாளரையும் நாம் முக்கியமாகக் கருதினுல் கூட, வெவ்வேறு விலைகளுக்குப் பதிலாக ஒரே விலையில்தான் விற்கவேண்டும் என்ற நியதி கிடையாது.

வாணிப விளைவுகள்

ஒரு சர்வாதீனம், தனது வலிமையை உள்நாட்டில் மட்டும் காட்டினுல்கூட, அதனுல் பன்னுட்டு வாணிப அளவு குறைந்து விடுகிறது. எவ்வாறெனில், சர்வாதீனம் வேலை வாய்ப்பினைக் குறைப்பதன்வழியாகக் காரணிகள் மற்றத் துறைகளில் மிதமிஞ்சி இருக்கும்படி செய்து, அவற்றின் உரிமையாளரின் வருமானத்தைக் குறைத்துவிடுகிறது. அவர்கள், தம் குறைந்த வருமானத்தைக் கொண்டு இறக்குமதிப் பொருள்கள் உட்பட நிறைய பொருள்களை வாங்க இயலாதுபோய்விடுகிறது.

ஒரு சர்வாதீன நிறுவனம் உள்நாட்டு விலையைக் காட்டிலும் அதிக விலையில் வெளிநாட்டில் விற்கும்போதும் வாணிப அளவு குறைந்துவிடுகிறது. இதற்கு மாருக, உள் நாட்டில் அதிக விலையிலும் வெளிநாட்டில் மலிவாகவும் விற்ருல், அதன் ஏற்றுமதி அளவு நிறை போட்டியிலிருப்பதைக் காட்டிலும் அதிகமானதா யிருக்கும்.

அதேபோல் பன்னாட்டுக் கார்ட்டெலும் பல அங்காடிகளைக் கட்டுப்படுத்தி, அவற்றைத் தம் அங்கத்தினர்களுக்குள் பகிர்ந்து கொள்ளும்போது, பன்னாட்டு வாணிப அளவு குறைந்துவிடுவது மிகத் தெளிவாகப் புலனுகும். அப்போது உகந்த பன்னாட்டு வாணிபம், அதன் ஆரம்ப இடத்திலேயே நின்றுவிடுகிறது.

மாறுதலுக்கேற்ற இணக்கம்

போட்டி நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சர்வாதீனம் தனது விலைக் கொள்கையை விடாப்பிடியாக இறுக்கி வைத்துக் கொள்ளவும், உற்பத்திக் காரணிகளின் இடப் பெயர்ச்சியைக் குறைக்கவும் முற்படும் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். குறுங்காலத்தை எடுத்துக்கொண்டால்கூட, சூழ்நிலை ஒருவேளை மாறிலுைம் உற்பத்திச் செலவு அவ்வளவாக மாறுதல் அடையாது. ஒரு சர்வாதீன நிறுவனம் (அல்லது சர்வாதீனமாகச் செயல்படும் சில நிறுவனங்கள்) தன் நெடுங்காலப் பயனைக் கருதி, உற்பத்தி முறையை அபிவிருத்தி செய்வதன்மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்தாலன்றி, நெடுங்காலத்திலும் அதன் உற்பத்திச் செலவு குறையாமல் அப்படியேதானிருக்கும். அவ்வாருயின், பன்னாட்டு வாணிப நிலை மாறி, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஏற்று மதியை விரிவாக்கவும் வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், இதன் விளைவு விபரீதமாகிவிடும்.

சர்வாதீனத்தைப்பற்றிய அரசாங்கக் கொள்கை

உள் நாட்டுச் சர்வாதீனமாயிருந்தாலும் சரி, அல்லது பன்னாட்டுச் சர்வாதீனமாயிருந்தாலும் சரி, அரசாங்கத்தின் கொள்கை மூன்று வழிகளில் அமையலாம்—அதில் தலையிடாமல் இருப்பது, அல்லது சர்வாதீனத்தை ஒழித்துக்கட்ட முயல்வது, அல்லது அதை ஒழுங்குபடுத்துவது.

இவற்றில் ஒவ்வொரு கொள்கையின் சிறப்பைப்பற்றியும் சிறிது கூறலாம். பன்னாட்டுக் கார்ட்டெல்களின் ஆதரவாளர்கள், கார்ட்டெல்கள் விலையை நிலைப்படுத்துகின்றன, அழிவை

ஏற்படுத்தக்கூடிய தீவிரமான போட்டியைத் தடுக்கின்றன; தகவல்களையும் பேட்டன்டு உரிமைகளையும் அங்கத்தினர் களுக்குள் பரிமாறிக்கொள்வதன்வழியாகத் தொழில்நுட்ப வளர்ச் சியைத் தூண்டுகின்றன என்றெல்லாம் வாதிப்பர். இதுமட்டும் உண்மையாக இருந்தால் தலையிடாக் கொள்கையே சிறந்ததெனக் கூறலாம்.

ஆனால், இவ்விதப் போக்கு மிக இலட்சியமானதேயன்றி, நடைமுறையில் கார்ட்டெல்கள் அவ்வாறு செயல்படுவதில்லை. பொதுவாக, குறைந்தபட்சத் திறன்கொண்ட நிறுவனங்கள்கூட உற்பத்தி செய்யக்கூடிய வகையில் கார்ட்டெல்கள் தம் விலையை உயர்த்திவிடுகின்றன. எனினும், இவ்வாறு செய்வது கார்ட் டெலில் இடம்பெருத நிறுவனங்களுக்குள் போட்டியைத் தூண்டி விடுவதோடு, கார்ட்டெலிலுள்ள திறன்மிக்க நிறுவனங்கள் அதிகமாக உற்பத்தி செய்யவும் தூண்டப்படுவதால், அவற்றின் வரலாற்றில் உயர்ந்த விலை எப்போதும் நிலையாயிருந்ததில்லை; விலை தாழ்ந்த காலமும் இருந்திருக்கிறது. எனவே, நடைமுறையில் அளவுக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் தீவிரமான போட்டியைத் தவிர்ப்பதற்குப் பதிலாக, போட்டி நிலைக்கு உற்சாகம் காட்டி யுள்ளன ; அல்லது குறைந்தபட்சம் போட்டி ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளன. மேலும், தீவிரமான போட்டியை மட்டுப்படுத்துவதற்காக அன்றி, போட்டியையே தவிர்க்கவேண்டு மென்ற குறிக்கோளுடன்தான் கார்ட்டெல்கள் உருப்பெறுகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், பேட்டன்டு உரிமைகளின் பயனைக் கட்டுப்படுத்தும் வழியில்தான் அவை பரிமாறிக்கொள்ளப்படுகின்றன ; அதோடு, புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவித்து, அவற்றைப் பயன்கொள்வதற்குப் பதிலாக, அவற்றைக் கார்ட்டெல்கள் நசுக்கிவிடுகின்றன என்று குறை கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

சர்வாதீனத்தை அறவே ஒழித்துக்கட்டவேண்டும் என்று சிலர் கூறுவர். இது வெறும் மனக்கோட்டையேயன்றி, நியாய மற்ற சிபாரிசன்று. அளவுச் சிக்கனங்களை ஆதாரமாகக்கொண்ட சர்வாதீனத்திற்கும் (அல்லது மேலும் கச்சிதமாகக் கூறின் ஒரு சில நிறுவனங்களை மட்டும்கொண்ட சர்வாதீனத் தொழிலுக்கும்) வேண்டுமென்றே செய்யப்படும் ஒப்பந்தங்களை ஆதாரமாகக் கொண்ட சர்வாதீனத்திற்குமுள்ள வித்தியாசத்தை நாம் உணர வேண்டும். ஒருசில நிறுவனங்களைமட்டும் கொண்டதனுல்

ஏற்படும் சர்வாதீனத்தை ஒழித்துக்கட்டுவதாயின், உதாரணமாக, ஒவ்வொரு நிறுவனமும் மொத்த உற்பத்தியில் மிகக் குறைந்த சதவீத உற்பத்திதான் செய்யவேண்டுமென்று வரையறை செய்வதானால், மிக முக்கியமான அளவுச் சிக்கனங்களையெல்லாம் இழந்துவிட நேரிடலாம். இது உண்மையாயிருக்கும்வரை, ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற கொள்கை தன்னழிவுகொண்ட கொள்கைதானேயன்றி வேறல்ல. ஏனெனில், அவ்வாறு ஒழித்துக் கட்டிவிட்டால் சாதனங்கள் சிக்கனமற்ற வழியில் மறுபடியும் பகிரப்பட்டு தாறுமாறான செலவை ஏற்படுத்தலாம். அவ்வாறு ஏற்படுமாயின், எந்த சர்வாதீன அம்சத்திற்கு முறைப்படியான எதிர்ப்பு ஏற்பட்டதோ அந்த அம்சம் இப்போது தோன்றி விடலாம்.

நாம் முன்னரே பார்த்ததுபோல, போட்டி நிலையிலிருப்பதை விட உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்தவும் விலையை உயர்த்தவும் கூடிய உபாயம், ஒப்பந்தம் செய்துகொள்வதுதான். எனவே, சர்வாதீனத்தை அல்லது ஒருசில நிறுவனங்களை மட்டும்கொண்ட சர்வாதீன வலிமையைத் தடை செய்வதற்குப் பதிலாக ஒப்பந்தம் செய்வதைக் கட்டுப்படுத்துவதுதான் சிறந்த கொள்கையாகத் தெரிகிறது. ஆனால், இக் கொள்கையைக் கடைப்பிடித்தால் உற்பத்திப் பங்களவு முறை அல்லது விற்பனைப் பங்களவு முறை, விலை நிர்ணயம் செய்தல், அங்காடியைப் பகிர்ந்துகொள்ளல், பேட்டன்டு உரிமை பயன்படுவதைக் கட்டுப்படுத்தல் ஆகிய சர்வாதீன உபாயங்களையெல்லாம் தடுக்கவேண்டும். ஆனால், இவ்விதத் திட்டத்திற்கு எல்லா நாடுகளும் ஒப்புக்கொள்ளுமா என்பதுதான் பிரச்சினை. சர்வாதீனத்தைப்பற்றிய மனப்பான்மை நாட்டிற்கு நாடு வெகுவாய் மாறியுள்ளது. எல்லா நாடுகளும் ஏதாவதொரு முடிவிற்கு வரவேண்டுமென்று கடந்தகாலத்தில் செய்த முயற்சிகளில், இவ் வேறுபட்ட மனப்பான்மை மிகத் தீவிரமாக வெளிப்பட்டது. மேற்கூறிய சர்வாதீன உபாயங்களை அகற்ற வேண்டுமென்பதிலுள்ள ஒன்றுபட்ட மனப்பான்மை, பன்னாட்டு வாணிப அமைப்பை (20ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்—International Trade Organization) ஏற்படுத்துவது என்றதொரு திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டதெனினும், அத் திட்டத்தைச் செயல்படுத்தும் வேலையை அந்தந்த நாட்டிற்கே விட்டுவிட வேண்டியதாயுள்ளது. அவ்வாறாயின், சர்வாதீனத்தைப்பற்றி நாட்டிற்கு நாடு காணப்படும் கருத்து வேற்றுமை நீங்குவதற்குப் பதிலாக எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கும்.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்

Edwards, Corwin D., 'Economic and Political Aspects of International Cartels.' Washington, D. C.: Committee Print No. 1, Senate Subcommittee on War Mobilization of the Committee on Military Affairs, 78th Congress, 2nd Session, *1944*. கார்ட்டெல் நடவடிக்கைகளுக்கு மிகப் பல எடுத்துக்காட்டுகளை இவ் வாய்வு கொண்டுள்ளது.

Hexner, Ervin, 'International Cartels.' Chapel Hill, N. C.; University of North Carolina Press, *1945*-ல் பதிப்பித்தது. கார்ட்டெல் பிரச்சினைகளைப்பற்றி முழு ஆய்விற்குச் சிறந்த நூல்.

Linder, Staffan Burestam, 'An Essay on Trade and Transformation.' New York : John Wiley & Sons ; Stockholm : Almquist & Wiksell, *1961*-ல் பதிப்பித்தது. இந் நூலை நான் பிந்தித்தான் பார்க்க முடிந்தது. எனவே, அதன் வாதங்களை இந்த அதிகாரத்தில் சேர்க்க முடியவில்லை. அளவுச் சிக்கனங்கள்பற்றிய வாதத்தை இந் நூல் தெளிவாகப் பூர்த்தி செய்கிறது. ஏறக்குறைய ஒரேமாதிரியான காரணிப் பேற்றினைக்கொண்ட தொழில்மயமான நாடுகளில் குறிப்பிட்ட சில தொழில்கள் தோன்றுவதற்கு ஒரே வகையான தேவை எவ்வாறு காரணமாகிறது என்பதைக் கொண்டு சிறப்புத் தேர்ச்சியை விளக்க முற்படுகிறது.

Machlup, Fritz, 'The Political Economy of Monopoly. Baltimore: The Johns Hopkins Press, 1952-ல் பதிப்பித்தது. சர்வாதீனத்தைப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் தொழில் நடவடிக்கைகளை விவரமாகவும் விளக்கமாகவும் 4, 5 அதிகாரங்கள் ஆய்கின்றன.

Marsh, Donald B., 'World Trade and Investment'. New York : Harcourt, Brace & Co., *1951*-ல் பதிப்பித்தது. பன்னாட்டு வாணிபத்தில் சர்வாதீனமும் நிறைகுறைந்த போட்டியும் தரக்கூடிய விளைவுகளை ஆயும் 21ஆம் அதிகாரம் ஒப்பற்றதாகும்.

Mason, Edward S., 'Controlling World Trade'. New York : McGraw-Hill Book Co. *1946*-ல் பதிப்பித்தது. 1ஆம் அதிகாரம் கார்ட்டெல்களால் ஏற்படும் பிரச்சினைகளைச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் ஆய்கிறது. பல்வேறு அரசாங்கங்கள், பண்ட ஒப்பந்தங்களின் வழியாக எவ்வாறு வாணிபத்தை ஒழுங்குபடுத்த முயல்கின்றன என்பதை 2ஆம் பாகம் விளக்குகிறது.

Samuelson, Paul A., 'Economics' ஐந்தாம் பதிப்பு. New York : McGraw-Hill Book Co., *1961*-ல் பதிப்பித்தது. 25ஆம் அதிகாரம் நிறைகுறைந்த போட்டியைப்பற்றிய சுருக்கமான விமரிசனத்தைத் தருகிறது.

Schumpeter, Joseph A., 'Capitalism, Socialism, and Democracy' New York : Harper & Bros., *1950*-ல் பதிப்பித்த மூன்றும் பதிப்பு. போட்டியின் தீவிரத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான சர்வாதீன நடவடிக்கைகளேயும், அந் நடவடிக் கைகள், அழிவை ஏற்படுத்தும் முறைகளேத் தோற்றுவிப்பதன் மூலம் பொருளாதார அமைப்பில் சதா புரட்சிகரமான மாறுதல்களே எவ்வாறு ஏற்படுத்துகின்றன என்பதையும் விவரிக்கின்ற 7, 8ஆம் அதிகாரங்கள் மிகச் சுவையானவையாகும்.

Stocking, George W. and Myron W. Watkins, 'Cartels or Competition?' New York : Twentieth Century Fund, *1948*. கார்ட்டெல் பிரச்சினைகளேப்பற்றிய முழு ஆய்விற்குப் பிறிதொரு நூல் இது.

9. பன்னாட்டு வாணிபத்தின் மாறும் இயல்புடைய அம்சங்கள்

இயக்கமற்ற எடுகோள்களைக் கொண்டு பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டை இதுவரை ஆராய்ந்தோம். குறிப்பாக, பல்வேறு நாடுகளின் காரணிப் பேற்றினைப் பொறுத்தவரை, நமது ஆய்வு அவ் எடுகோள்களில்தான் அமைந்தது. பலவகைக் காரணிப் பேற்றில் நாட்டிற்கு நாடு வேறுபாடு இருப்பதாகக் கொண்டால், ஒரு நாட்டில் எந்தக் காரணி மற்றவைகளைக் காட்டிலும் தாராள மாகக் கிடைக்குமோ, அக் காரணி அதிகம் தேவைப்படும் பொருளை உற்பத்தி செய்வதில் அந் நாடு சிறப்பாக ஈடுபடும் என்று விளக்கினோம்.

இச் சிறப்புத் தேர்ச்சிக்கு, உழைப்பு, மூலதனம், தொழில் துணிவு ஆகிய காரணிகள் ஒரு நாட்டிற்குள் இடம் பெயர்வதைப் போல் நாட்டிற்கு நாடு இடம் பெயர்வதில்லை என்ற பிறிதோர் எடுகோளும் அவசியமானது என்பது ஞாபகமிருக்கலாம். அவ்வாறு இல்லையென்றால், தொழிலிடச் செறிவுக்கும் தேசிய எல்லைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்றாகிவிடும். இடம் பெயரக்கூடிய காரணிகள் அனைத்தும் மிகச் செழிப்பான பண்ணை களிலும் கனிப்பொருள்கள் செறிந்துள்ள இடங்களிலும் குவிந்து விடும். அப்போது உற்பத்திவளமற்ற ஏனைய பகுதிகளில் யாருமே வாழமாட்டார்கள். மேலும், எல்லா வகைச் செய் பொருள் தொழில்களும் மிகச் செழிப்பமான விவசாயப் பண்ணைப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படுவதன்மூலம் பெருமளவில் சுய நிறைவுடைய விவசாய—தொழில் இடங்கள் பல தோன்றிவிடும். அப்போது, இன்றியமையாத கனிப்பொருள்கள் ஏராளமாயுள்ள இடங்களில் மட்டுமே மூலப்பொருள்கள் அவசியமான தொழில் களனைத்தும் தோன்றுமாதலால், கனிப்பொருள் கிடைப்பதிலுள்ள

தராதர வேறுபாடு ஒன்று மட்டும்தான் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் அடிப்படையாக இருக்கும்.

ஒரு நாடு கொண்டுள்ள காரணிப்பேறு நிரந்தரமாக வரையறை பெற்றவைதானா, அல்லது அந் நாட்டின் குறிப்பிட்ட பொருளாதார அமைப்புக் காரணங்களாலோ அல்லது நாட்டிற்கு நாடு கணிசமான அளவு காரணிகள் இடம் பெயர்வதன் விளைவாகவோ அதிகரிக்கவோ குறையவோ கூடியவையா என்பதை இப்போது பார்ப்போம். ஒரு நாட்டின் உற்பத்திக் காரணிகளின் அளிப்பைப் பாதிக்கும் உள்நாட்டு சக்திகளை முதலில் ஆய்வோம்.

மாறக்கூடிய காரணிப் பேறு: உள்நாட்டுக் காரணங்கள்

ஒரு நாடு கொண்டுள்ள உற்பத்திக் காரணிகள் மாறாமல் நிரந்தரமாக வரையறை செய்யப்பட்டுள்ளன என்று கூறுவதற்கில்லை. மக்கள்தொகை வளரும்போது, அந் நாட்டின் உழைப்பாளிகள் அதிகரிக்கக்கூடும். வளர்ச்சி குன்றிய பல நாடுகளில் பொது உடல்நலப்பணி அபிவிருத்தியின் விளைவாக சமீப காலத்தில் ஏற்பட்டுள்ளதைப் போன்று, ஒரு நாட்டின் இயல்பான மக்கள் இனப்பெருக்க வீதம் திடீரென்று அதிகரிக்குமானால், அந் நாட்டு மக்கள்தொகையில் குழந்தைகளும் சிறுவர்களும்தான் அதிக விகிதாசாரத்தில் இருப்பர். சில காலம் கழித்து, இவர்களெல்லாம் பெரியவர்களான பின்னர்தான் உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஒரு நாட்டின் மூலதனத்தை எடுத்துக்கொண்டால், அது சேமிப்பு வழியாகவும் முதல் திரட்சியின் மூலமாகவும் அதிகமாகலாம். மூலதன வளர்ச்சி வீதம், மக்களின் சிக்கனப் பழக்க வழக்கத்தையும் தேசிய வருமான அதிகரிப்பையும் பொறுத்து அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம். முன்பைவிட சேமிப்பு கவர்ச்சியானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும் வகையில் பொருளாதார அமைப்பில் மாறுதல்கள் ஏற்பட்டால், அல்லது போருக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ளதைப்போன்று தேசிய உற்பத்தி ஆக்கமும் தேசிய வருமானமும் பெருமளவில் அதிகரித்தால் சேமிப்பு உயரலாம். அதே போல உயர்ந்த இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (high marginal propensity to save) கொண்ட மக்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் வகையில் நாட்டின் வருமானம் பகிரப்படுவதற்குரிய மாறுதல்கள் ஏற்பட்டால் சேமிப்பு அதிகரிக்கலாம்.

இயற்கை வளங்கள் உள்ள இடங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதன்மூலமாக ஒரு நாட்டின் இயற்கை வளத்தினை அதிகரிக்கக்கூடும் ; அல்லது, இருக்கின்ற இயற்கை வளத்தையே மேலும் மேலும் பயன்படுத்தி அதை வெறுமையாக்கவும் முடியும். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெனிசுவெலாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதையும், அமெரிக்காவில் உயர்ந்த ரக இரும்புச் சுரங்கங்கள் வெறுமையாக்கப்பட்டதையும் மட்டும் இதற்குச் சான்றாகக் காட்டினால் போதும். வெனிசுவெலாவின் எண்ணெய்க் கண்டுபிடிப்பு, அந் நாட்டின் பெரியதோர் ஏற்றுமதித் தொழிலுக்கு அஸ்திவாரக்கல் நாட்டிவிட்டது. மாறாக, உயர்ந்த ரக இரும்புக் கனிப் பொருளனைத்தையும் பயன்படுத்திவிட்டதால், அதில் சுய நிறைவு கொண்டிருந்த அமெரிக்கா இன்று இறக்குமதியையே பெருமளவில் எதிர்பார்த்திருக்க வேண்டியதாகி விட்டது.

பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியையும் வாணிபத்தையும் பொறுத்தவரை, பல்வேறு நாடுகள் பெற்றுள்ள காரணிப் பேறு அதிகரிக்கக்கூடும் அல்லது குறையக்கூடும் என்ற மறுக்க முடியாத உண்மை முக்கியமன்று. ஏனெனில், பல்வேறு நாடுகளின் காரணிகளின் தராதர அளிப்புகள் மாறாமல் இருந்தால், காரணிகளின் மொத்த அளிப்பு அதிகரித்தாலும் குறைந்தாலும் பாதகமில்லை. நாடுகளிலுள்ள தராதரக் காரணிப் பேறு மாறலாம் என்பதுதான் முக்கியம்.

இது நடைமுறையில் சாத்தியமானதுதான் என்பதற்குப் பல நாடுகள் பெற்றுள்ள அனுபவமே போதுமானது. அவற்றில் சில எடுத்துக்காட்டுகளை அடுத்த அதிகாரத்தில் கொடுப்போம். இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடலாம். 19ஆம் நூற்றாண்டில் நிலம் ஏராளமாயும், மூலதனமும் உழைப்பாளிகளும் போதாத அளவுமிருந்த அமெரிக்கா இன்று ஏராளமான மூலதனம் கொண்ட நாடாக மாறிவிட்டது. (இம் மாறுதல்களெல்லாம் உள்நாட்டு சக்திகளால் ஏற்பட்டவை அல்ல. பெருமளவு மூலதனமும் பெருவாரியான உழைப்பாளிகளும் பிற நாடுகளிலிருந்தே அங்கு வந்து சேர்ந்தன. இப் பிரச்சினையைப்பற்றி அடுத்த பிரிவில் பார்ப்போம்.)

ஒரு நாடு கொண்டுள்ள காரணிப்பேற்றில் இவ் வகை மாறுதல்களால் ஏற்படும் விளைவுகள் தெளிவானவை. அந் நாட்டின் சிறப்புத் தேர்ச்சிக்கும் வாணிப இயல்பிற்கும் அமைந்த அடிப்படையே மாறிவிடுகிறது. விவசாயப் பண்டங்களை மட்டும்

உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்துவந்த நாடு, தொழிற்சாலைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக அமைந்துவிடுகிறது. அல்லது, முன்பு ஏற்றுமதி செய்துவந்த அதே பண்டங்களை அந் நாடு ஏற்றுமதி செய்வதாயிருந்தால்கூட, அவற்றின் முக்கியத்துவம் குறைந்துவிடலாம், அல்லது மறைந்துவிடலாம்.

இதைப் படத்தின்வாயிலாக விளக்கும்போது அந் நாட்டின் உற்பத்தி சாத்தியக் கோட்டின் உருவம் மாறுவதைக் காணலாம். வரைபடத்தின் கிடை, செங்குத்து அச்சுகளில் முறையே விவசாயப் பண்டங்களும் தொழிற்சாலைப் பொருள்களும் அளவிடப் படுவதாயின், அக் கோடு முதலில் விவசாயப் பண்டங்கள் அளவிடப்பட்டுள்ள அச்சினை நோக்கிச் சாயும்; தொழிற்சாலைப் பொருள்களைக் காட்டிலும் விவசாயப் பண்டங்களின் உற்பத்தி அளவு அதிகமாயிருப்பதே இதற்குக் காரணம். பயன்படுத்தப் படும் காரணிகளின் விகிதாசார மாறுதலுக்கேற்ப, இக் கோட்டின் உருவமும் மாறுகிறது. பின்னர், விவசாயப் பண்டங்களைவிடத் தொழிற்சாலைப் பொருள்களின் உற்பத்தி அளவு அதிகரிக்க அதிகரிக்க, இக் கோடு தொழிற்சாலைப் பொருள்கள் அளவிடப் பட்டுள்ள அச்சினை நோக்கிச் சரியும்.

நாம் இதுவரை விவரித்தது, பொருளாதார வளர்ச்சியின் ஓர் அம்சமாகும். இதை அடையும் குறிக்கோளுக்காகத்தான் வளர்ச்சி குன்றிய நாடுகள் மூலதனத்தைச் சேர்ப்பதும், தொழில் வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதும் அடங்கிய முயற்சிகளில் ஆர்வத்துடன் இறங்கியுள்ளன. தொழில் அமைப்புசார்ந்த இப் பிரச்சினையை 27ஆம் அதிகாரத்தில் விரிவாகப் பார்ப்போம்.

காரணி இடப்பெயர்ச்சியும் காரணிப்பேறும்

பன்னாட்டு இடப்பெயர்ச்சியின்மையின் எடுகோள்

உற்பத்திக் காரணிகள் ஒரு நாட்டிற்குள் இடம்பெயர்வதைப் போல், நாடு விட்டு நாடு இடம் பெயர்வதில்லை என்பது பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டின் அடிப்படையானதோர் எடுகோளாக அமைகிறது என்பதை இவ் வதிகாரத்தின் தொடக்கத்திலேயே நாம் குறிப்பிட்டோம். இவ் வெடுகோள் எந்த அளவிற்கு உண்மையானது என்பதையும், அதன் முக்கியத்துவத்தையும் இப்போது நாம் பார்க்கவேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே பேராசிரியர் ஜான் H. வில்லியம்ஸ் (John H. Williams), பிரபலியமான தமது கட்டுரை

ஒன்றில் காரணிகளின் இடப்பெயர்ச்சி இயல்புபற்றிய இவ் வெடுகோளைக் கண்டித்தார்.[1] உற்பத்திக் காரணிகள் பன்னாடுகளுக்கிடையே இவ்வளவுதான் இடம் பெயர்ந்துள்ளன என்று பொதுவாக அனுமானிக்கப்படுவதைக்காட்டிலும் அதிக அளவு இடம் பெயர்ந்துள்ளன என்றும், சில சமயம் ஒரு நாட்டிற்குள் ஏற்பட்ட இடப்பெயர்ச்சியைக்காட்டிலும் பல நாடுகளுக்கிடையே நடைபெற்ற இடப்பெயர்ச்சிதான் அதிகமாய் இருந்துள்ளது என்றும் அவர் வாதாடினர். இவ்வாறு காரணிகள் நாடுவிட்டு நாடு இடம் மாறுவதை உகந்த முறையில் ஆய்ந்தோமானல், அதுவே பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் உரிய ஆதாரமாக அமையும் என்ருர். குறிப்பாக, வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதாரப் பிற்போக்கான நிலை காரணமாக மூலதனமும் உழைப்பும் உள்நாட்டிற்குள் இடம் பெயர்வதுகூடக் குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். வளர்ச்சி மிகுந்த நாடுகளிலிருந்து வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு இடம் பெயர்ந்த உற்பத்திக் காரணிகள்தான், குறிப்பாக மூலதனம்தான் வளர்ச்சி குன்றிய நாட்டிற்குள் இடம் பெயர்ந்ததைவிட அதிகம் என்றும் கூறினர்.

'சில நாடுகளில் கடற்கரையில் பல இனத்தவரும் வாழும் பெரிய நகரங்கள் தோன்றியுள்ளன. அவை அனைத்தும் அயல் நாட்டாரின் வியாபாரக் கேந்திரங்கள். பொருளாதாரத் தொடர்புகளையும் கலாசாரத் தொடர்புகளையும் எடுத்துக்கொண்டால், அந் நாடுகளின் உட்பகுதிகளைக்காட்டிலும் இப் பகுதிகள்தான் ஐரோப்பியக் கலாசாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் நெருங்கிய தொடர்புடையதாயுள்ளன. அங்கு, நிதி வசதிகள், போக்குவரத்து, தொழில் நிர்வாகம் ஆகியவை ஐரோப்பியரின் கையில் இருக்கின்றன. முக்கியமாக, இயற்கை வளத்தினை அடிப்படையாகக்கொண்ட தொழில்களிலும் பிற தொழில்களிலும் அயல் நாட்டார் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர். குடியேற்றம், குடியிறக்கம்பற்றிய பிரச்சினைகள் அங்கு உள்ளன. ஐரோப்பாவுடன் ஒப்பிடும்போது வளர்ச்சியற்ற, பேஜெட்டின் (Bagehot) சொற்களில், 'பொருளாதாரத்திற்கு முந்திய' ('Pre-economic') நிலையிலுள்ள அந் நாடுகளில் அல்லது கண்டங்களில் அத்தகைய சூழ்நிலை இருப்பதற்கு, உள்நாட்டில் ஏற்படும் காரணி இடப்பெயர்ச்சியைக்காட்டிலும் பன்னாட்டு இடப் பெயர்ச்சி அதிகமாக இருப்பது ஒரு காரணம்.'[2]

[1] Economic Journal, XXLIX (1929) வெளியீட்டில் ஜான் H. வில்லியம்ஸ் அவர்கள் 'The Theory of International Trade Reconsidered' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டது. இக் கட்டுரை 1949-ல் The Blakiston Co. வெளியிட்ட 'Readings in the Theory of International Trade' என்ற நூலில் மறுபடியும் அச்சிடப்பட்டது.

[2] அதே நூல், பக்கம் 261.

பன்னாட்டு வாணிபக் கோட்பாடுபற்றிப் பேராசிரியர் வில்லியம்ஸ் அவர்களின் திறனாய்வு முக்கியமானதாகும். அண்மையில் 'ஏற்றுமதிப் பொருளாதார' (export economics) வளர்ச்சிக்கான வாதத்தில் அவருடைய ஆய்வைப் பொருத்தி ஆய்ந்தது இதற்கு ஒரு சான்றாகும்.[3] ஏற்றுமதிப் பொருளாதாரம் என்பது, மூலப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் தொழில்களை உடைய நாடுகளைக் குறிக்கிறது. இத் தொழில்கள் காரணிப் பேற்றின் சிறப்பால் கவரப்பட்டுத் தோன்றியவை அல்ல. அவை தோன்றுவதற்கு முன், மூலப் பொருள்களை இப்போது ஏற்றுமதி செய்யும் நாடுகள் பரம்பரைப் பழக்கவழக்கத்தைக் கொண்டதோடு, எளிமையான பொருளாதார வாழ்க்கை உடையனவாய், பிற நாடுகளோடு தொடர்பின்றி இருக்கின்றதைக்கொண்டு திருப்தி அடையும் மனப்பான்மை கொண்டவையாயில்லாதிருந்த போதிலும், மாற்றங்களில் வெறுப்புக்கொண்டவையாய் இருந்தன. இந் நாடுகள் தாமாகப் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடவில்லை. மாறாக, இத் தொழில்களுக்கு வேண்டிய மூலதனம், நிர்வாகத் திறன், தொழில் நுட்ப உழைப்பு, ஏன் (லெவின் அவர்களின் கருத்துப்படி) முன்னேற்ற வாய்ப்பைக்கொண்ட இந்த மூலப் பொருள் தொழில்களுக்கு வேண்டிய பெரும்பாலான சாதாரணத் தொழிலாளிகள்கூட இங்கு வலுக்கட்டாயமாக வந்து சேர்ந்ததால் தான் அவற்றால் இன்று பன்னாட்டு வாணிபம் செய்ய முடிகிறது. இத் தொழில்களுக்கு வேண்டிய காரணிகளில் இயற்கை வளம் ஒன்றுதான் (கனிப்பொருள் பெருமளவில் கிடைக்கும் இடம் அல்லது உஷ்ண மண்டலத்தின் செழிப்பான நிலம்) இங்கு இருந்தது. மற்றவை அனைத்தும் வெளி நாடுகளிலிருந்துதான் இங்கு வந்தன.[4]

பெரு (Peru) நாட்டின் கடற்கரைக்கப்பாலுள்ள சின்சா தீவுகளிலுள்ள (Chincha islands) வளமான குவானோ (Guano) படிவுகளைப் பயன்படுத்துவதன்மூலம் மிகுந்த இலாபம் பெறக்கூடுமென எண்ணியே 1840-50ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் நாட்டினர் பெரும் முதலீடு செய்து, ஆர்வத்தோடு தொழிலில் இறங்கினர் என்பதை லெவின் குறிப்பிடுகிறார். பண உதவிகள் செய்வதற்கு வெளிநாட்டினர் முன்வந்தபோதிலும்கூட, அதனால் பெரு நாட்டின் சுதேசி இந்தியர்களைக் கவர முடியவில்லை.

[3] Jonathan V. Levin அவர்கள் எழுதிய 'The Export Economies, Their Pattern of Development in Historical Perspective' என்ற நூலில். Published 1960 by Harvard University Press, Cambridge, Mass.

[4] அதே நூல், பக்கங்கள் 4-5.

ஆகவே, தொழில் நிர்வாகக் குழுவினரின் ஒப்பந்தத்தின்பேரில் சீனக் கூலியாட்களை அவர்கள் வரவழைத்தனர்.[5] உலகப் போருக்கு முன்னர் பர்மாவின் நெல் சாகுபடியை எடுத்துக் கொண்டால், அதுவும் இதேபோன்றுதான் பருவக்காலத்தில் குடி பெயர்ந்த இந்தியக் கூலியாட்களையும், கடன் கொடுக்கும் செட்டி யார்களையும், பிரிட்டிஷ் அரிசி மில் முதலாளிகளையும் பெருமளவு சார்ந்திருந்தது.[6] உள்நாட்டு இயற்கை வளத்தினைப் பயன் கொள்வதற்கு வெளிநாட்டுத் தொழில் துணிவும் மூலதனமும் அன்றி, அயல்நாடுகளிலிருந்து வந்திறங்கிய கூலியாட்களைக் கொண்டு சீராக நடைபெற்றுவந்த தொழில்களுக்கு மேற்கூறிய இரண்டு தவிர, வேறு சில நாட்டுத் தொழில்களையும் லெவின் எடுத்துக்காட்டுகின்றார். இவற்றில் குவீன்ஸ்லாந்தின் (Queensland) சர்க்கரைத் தொழில், மத்திய அமெரிக்காவின் வாழைப் பயிர்த் தொழில், இலங்கையின் தேயிலைத் தொழில், மலேயாவின் ரப்பர் தொழில், மற்றும் தென்ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு ஆப்பிரிக்கா, தென் கடல் தீவுகள் (South Sea Islands) ஆகிய வற்றில் நடைபெற்றுவரும் பல விவசாய உற்பத்தித் தொழில் ஆகியவை அடங்கும். இவற்றுடன் மத்தியக் கிழக்கு நாடுகள், சுமத்திரா, வெனிசுவெலா ஆகியவற்றில் நடைபெறும் பெட்ரோ லியம் எடுக்கும் தொழில், சிலி நாட்டின் செம்பு, நைட்ரேட் உரங்கள் ஆகியவை வெட்டிஎடுக்கும் தொழில், மெக்ஸிகோவின் தாதுப்பொருள் தொழில் ஆகியவற்றையும் அயல்நாட்டு மூலதனம், தொழில் துணிவு, தொழில் நுட்பமும் திறனும்கொண்ட உழைப் பாளிகள் ஆகியவற்றைச் சார்ந்தனவாகக் குறிப்பிடக்கூடும். இவ்வாறாக, தமது சொந்த உற்பத்திக் காரணிகளன்றி, வெளி நாட்டிலிருந்து வந்த மூலதனம், நிர்வாகிகள், ஓரளவிற்கு உழைப் பாளிகளையும்கொண்டு முன்னேறிய ஏற்றுமதித் தொழில்களை உடைய நாடுகள் இன்னும் பல உள்ளன.

வாணிபத்திற்குமுன், ஒரு நாடு கொண்டுள்ள தராதரக் காரணிப் பேற்றின் அடிப்படையில்தான் அது சிறப்புத் தேர்ச்சி செய்கிறது என்ற கோட்பாட்டிற்கு இவ் வாணிபமனைத்தும் முக்கிய மான விதிவிலக்காக இருக்குமோ என்று எண்ணத் தோன்று கிறது. எவ்வாறிருப்பினும், இத் தொழில்களனைத்தும் அந்தந்த நாடுகளின் இயற்கைக் காரணிப் பேற்றினால் தோன்றாமல், அயல் நாடுகளிலிருந்து வந்த காரணிகளைத்தான் வெகுவாகச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பெருமளவில் கனிப்பொருள் கிடைக்கு

[5] அதே நூல், அதிகாரம் 11.

[6] அதே நூல், பக்கங்கள் 206–12.

மிடமோ அல்லது செழிப்பும் வெப்பமும் உடைய நிலமோ கொடுக்கப்பட்டதாயிருக்க, இச் சாதனத்தைப் பயன்கொண்டு நிறைய வருமானம் பெறுவதற்காக, அதற்கு வேண்டிய இதர சாதனங்களைப் பெற்று, அவற்றையெல்லாம் கொண்டு ஒரு தொழிலாக அமைப்பதற்குத் தொழில் துணிவுடையோருக்கு இது வழிகாட்டுகிறது. எனவே, பல மூலப்பொருள் ஏற்றுமதித் தொழில்கள் உருவானதன் அடிப்படையே இதுதான் என்பது இவர்களது வாதம்.

பேராசிரியர் வில்லியம்ஸ் இதை இன்னும் விரிவாக வருமாறு குறிப்பிடுகிறார் :

'நாட்டு எல்லைகளைப் பொருட்படுத்தாமல், அபிவிருத்தி அடைந்து மேலும் மேலும் வளர்ந்துவரும் மூலத் தொழில்கள் ஏராளமாக உள்ளன. அவற்றில் சில ஒரு நாடு, தான் கொண்டுள்ள தொழிலறிவு, உற்பத்தி முறை, மற்றும் மூலதனம் ஆகியவற்றை உள்நாட்டிலேயே ஏதாவதொரு தொழிலில் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மற்றொரு நாட்டில் பயன்படுத்துவதற்கும், தன் அங்காடித் தலமாக அந் நாட்டை வைத்துக்கொள்வதற்கும் சான்றுகளாக உள்ளன. வேறு சில தொழில்கள், பல்வேறு நாடுகளில் தழைத்துவரும் பன்னாட்டு நிறுவனங்களில் பன்னாட்டு மூலதனமும் நிர்வாகத் திறனும் சேர்ந்துள்ளதற்கு எடுத்துக்காட்டுகளாகும். (இவற்றில் சில இறக்குமதி வரிகள் அல்லது பேட்டன்ட் உரிமைச் சட்டங்களால் வளர்ந்த தொழில்களுக்கும், பொருள்கள் நாடுவிட்டு நாடு இடம் பெயர்வதைத் தடுத்து, உற்பத்திக் காரணிகளின் இடப்பெயர்ச்சிக்கு வழி வகுக்கிறது என்பதற்கும் உதாரணங்களாக அமைகின்றன.) பன்னாட்டு வாணிபம், உற்பத்திக் காரணிகளின் இடப்பெயர்ச்சி, போக்குவரத்து, அங்காடி அமைப்பு ஆகியவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவென்பதைச் சுட்டிக்காட்டுகிறது'.[7]

இயக்கநிலை, தேக்கநிலை மறு பிணக்கம் (Dynamics Versus Statics Again)

வாணிபம் செய்வதற்குமுன், பல்வேறு நாடுகள் பெற்றுள்ள காரணிப்பேற்றின் அடிப்படையில்தான் அவை சாதகமாயுள்ள பொருள்களில் சிறப்புத் தேர்ச்சி செய்து, பின்னர் வாணிபம் செய்கின்றன என்று காரணி விகிதாசாரக் கோட்பாடு விளக்கு

[7] Williams அவர்கள் எழுதிய முன்பு குறிப்பிட்ட நூல், பக்கம் 263. இதில் அடைப்புக்குள் இருக்கும் வாக்கியம் அவருடைய மூல நூலில் உள்ள அடிக்குறிப்பாகும்.

கிறது. இது ஒருவகைத் தேக்குநிலை ஆய்வாகும். ஒரு நாட்டின் காரணிப்பேறு, அந் நாட்டிற்குள்ளேயே ஏற்படும் பல சக்திகளால் பெரிதும் மாறக்கூடுமென்றும், அதற்கேற்ப அந் நாட்டுத் தொழில்களின் தன்மைமட்டுமின்றி, அதன் அயல் நாட்டு வாணிபத் தன்மையும் மாறும் என்பதைச் சான்றுகளுடன் விளக்கினோம். அதோடு, ஒரு நாட்டின் காரணிப்பேறு, அயல் நாட்டு சக்திகளாலும் மாறக்கூடும் என்பதை சற்றுமுன் காட்டிய உதாரணங்கள் நிரூபிக்கின்றன. அதாவது, ஒரு நாட்டின் செழிப்பானதோர் இயற்கை வளம்மட்டும் இருந்தால் போதும், அதைப் பயன்படுத்தி இலாபம் பெறுவதற்கென்று இதர காரணிகளெல்லாம் தாமாகவே அங்கு வந்து சேரும். எனவே, ஒரு நாட்டின் காரணிப்பேறு மாரு இயல்புடையது என்று எண்ணுமல், மாறும் தன்மை கொண்டது என்று கருதினுல் கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் ஓர் இணக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

எனினும், உற்பத்திக் காரணிகள் நாடுவிட்டு நாடு இடம் பெயர்வதைக்கொண்டு சில பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிகளை விளக்குவதில் முக்கியமானதோர் இடர்ப்பாடு உண்டு. இவ்வளவு தூரம் காரணிகள் நாடுவிட்டு நாடு இடம்பெயர முடியுமானுல், காரணிகளின் பன்னாட்டு இடப்பெயர்ச்சியின்மை என்ற எடுகோளை நாம் புறக்கணிக்க வேண்டியிருக்கும். அப்போது, இந்த எடுகோளும் நாம் சற்றுமுன் விவரித்த காரணி இடப்பெயர்ச்சியும் ஒன்ருேடொன்று நேரடிப் பிணக்கம் உடையவையாகிவிடும்.

காரணிகளின் பன்னாட்டு இடப்பெயர்ச்சியின் மறு ஆய்வு

இப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாயின், இந்த எதிர்வாதங்களை ஓரளவு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப எடுகோளை மாற்றி அமைப்பதுதான் சிறந்த வழி என்று எனக்குத் தோன்றுகிறது. பன்னாட்டுக் காரணி இடப்பெயர்ச்சிக் கோட்பாடு அனுமானிப்பதைக்காட்டிலும் இடப்பெயர்ச்சி அதிகம்தான். எனினும், அவ்வாறு பெருமளவில் இடப்பெயர்ச்சி நடைபெறவேண்டுமானுல், உள்நாட்டிலேயே அக் காரணிகளைப் பயன்படுத்திப் பெறக்கூடிய வருவாயைக்காட்டிலும், வெளிநாட்டில் அவற்றைப் பயன்படுத்திப் பெறும் வருவாய் ஓரளவாகிலும் அதிகமாயிருக்க வேண்டுமெனக் காரணி உரிமையாளர் எதிர்பார்ப்பர் என்று பொதுவாகக் கூறலாம். அவ்வாறு உயர்ந்த வருவாய் கிடைப்பதாக நாம் வைத்துக்கொண்டால் (பெட்ரோலியம் எடுக்கும் தொழிலில் கிடைப்பதைப்போன்று) மூலதனம், தொழில் துணிவு, தொழில் நுட்பம் கொண்ட உழைப்பு, திறன்மிக்க உழைப்பு ஆகிய

அனைத்துமே வெளிநாடுகளால் கவரப்படக்கூடும்.[8] இவை காரணி இடப்பெயர்ச்சியின் எடுகோளைத் திருத்தி அமைக்க வேண்டிய அளவிற்கு அதிகமாக உள்ளன. அவ்வாறு இவ் எடுகோளைத் திருத்தத்துடன் கூறுவதாயின், பன்னாடுகளுக்கிடையே காரணிகள் இடம் பெயர்வதில் தடைகள் இருப்பதால், ஒரே அளவு வருமானம் கிடைக்குமாயின், அவை உள்நாட்டிற்குள்ளேயே பயன்படுத்தப்பட முற்படும் என்றும், மூலதனம், உழைப்பு அல்லது தொழில் துணிவு ஆகியவற்றிற்கு வெளிநாடுகளில் கிடைக்கக் கூடிய வருவாய் போதுமான அளவு உயர்ந்ததாயிருப்பின், அக் காரணிகளில் ஓரிரண்டோ அல்லது அனைத்துமோ வெளி நாடுகளுக்கு இடம்பெயர முற்படும் என்றும் கூறலாம்.

இதைவிட இன்னும் அதிகமாகவும் கூறமுடியும். பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியை விளக்குவதே பன்னாட்டு வாணிபக் கோட்பாடாகும். உற்பத்தியாகும் பல பண்டங்களைப் பொறுத்தவரை, காரணி விகிதாசாரக் கோட்பாட்டின் விளக்கமே போதுமானது. எனினும், பன்னாட்டு வாணிபம் என்பது, பொருள்களைமட்டுமின்றிப் பணிகளையும் உள்ளடக்குகிறது. எனவே, இக் கோட்பாடு பன்னாட்டுப் பணிகளின் சிறப்புத் தேர்ச்சியையும் விளக்க வேண்டும்.

கடந்த இருநூறு ஆண்டுகளில் சில முக்கியமான பணிகளில்—சிறப்பாக, கப்பல் போக்குவரத்து, அங்காடி, விளம்பரம், இன்ஷூரன்ஸ், நிருவாகம், பாங்கு ஆகிய துறைகளின் பணிகளில்—அரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றி 11ஆம் அதிகாரத்தில் நாம் விரிவாகப் பார்ப்போம். இங்கு லண்டன் மாநகரின் வணிகர்கள் செய்யும் பணியைமட்டும் குறிப்பிடுவோம். பன்னாட்டு வாணிபமும் உள்நாட்டு வாணிபமும் வளர வளர, லண்டனின் வர்த்தக சமுதாயத்தினர் பண்டங்களைத் தரப்படுத்துவதிலும், பாகுபடுத்துவதிலும்மட்டுமின்றி, அங்காடி நிலவரத்தை மதிப்பிடுவது, பற்றுவழியில் பண்டங்களை வாங்கும் வாடிக்கையாளரின் நாணயத்தை அறிந்துகொள்வது, நட்ட ஆபத்தைக் கணக்கிடுவது ஆகிய துறைகளிலும், இன்னும், பொருள்களை விற்றல்,

[8] வளர்ச்சியுடைய நாடுகளிலிருந்து வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு அவ்வாறு மூலதனமும் நிருவாகத் திறனும் தடையின்றி இடம் பெயர்ந்ததற்குச் சான்றாக, 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டனிலிருந்து ஹாங்ஹாங், ஷான்காய், சிங்கப்பூர், இன்னும் பல்வேறு இனத்தவர் வாழும் இதர இடங்களுக்கு அவை இடம் பெயர்ந்ததைக் குறிப்பாகக் கொள்ளலாம். ஆனால், இந் நாடுகளெல்லாம் பிரிட்டிஷ் சட்ட திட்டங்களுக்கும் நிருவாகத்திற்கும் உட்பட்ட பிரிட்டிஷ் பேரரசின் காலனிகள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, பிரிட்டனிலிருந்து இந் நாடுகளுக்குப் பெயர்ந்த இடப்பெயர்ச்சியைப் பன்னாடுகளுக்கிடையே ஏற்பட்டதாகக் கொள்வதைவிட உள்நாட்டிற்குள் ஏற்பட்டதாகவே கொள்வது நன்று.

வாங்கல், அனுப்பல் சம்பந்தமான பல்வேறு பரிவர்த்தனைப் பணிகளிலும், இப் பரிவர்த்தனைகளில் முதலீடு செய்தல் ஆகிய பணிகளிலும் வியக்கத்தக்கவிதமாய்த் தேர்ச்சி பெற்றுள்ளனர். வாணிபத்தின் அளவு பெருகியுள்ளதற்கேற்ப, இப் பணிகளைப் புரிவதில் பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகள் வளர்ந்துள்ளன. அது போன்றே, விஷயமறிந்து செயலாற்றுவதற்கு வேண்டிய அறிவும் அங்கு அதிகமாயிற்று. இவ் அறிவும் திறமையும்தான் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கப்பல் போக்குவரத்து, அங்காடி, இன்ஷூரன்ஸ், பாங்குத் தொழில் ஆகிய பணிகளைப் புரிவதில் லண்டன் சிறந்த நிலை பெற்றதற்குக் காரணமாகும்.

பாங்குப் பணிகளை எடுத்துக்கொண்டால், பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் வேண்டிய குறுங்காலக் கடனை (short-term credit) அளிப்பதுமட்டுமே பாங்குகளின் பணியாக ஆரம்பத்தில் இருந்தது. எனினும், அறிவு, அனுபவம், நற்பெயர் எல்லாம் பெற்ற சில லண்டன் நிறுவனங்கள், பெருமளவிலும் சிறுமளவிலும் சேமிப்புத் தொகையைக் கவர முடிந்தது; இதனால், அவை வெளிநாடுகளில் முதலீடு செய்யும் பாங்குகளை (investment banks) ஆரம்பிக்க முடிந்தது. மூலதனத்தைக் கவர்ச்சி செய்வதில் தாம் கொண்டிருந்த நற்பெயரை வைத்துக்கொண்டு பன்னாடுகளுக்கிடையே மூலதனம் இடம் பெயர்வதில் இருந்த தடைகளையெல்லாம் தம் திறமையாலும் அறிவாலும் வென்றன. அயல்நாட்டு முதலீட்டின் வழியாக எங்கு பெரும் இலாபம் கிடைக்குமென்பதைக் கண்டறிந்து, அவ் வாய்ப்பைப் பயன்கொள்வதற்காகப் பெருமளவில் அங்கு மூலதனம் செல்ல வழி வகுத்தனர்.

பின்னர், லண்டனைப்போலவே நியூயார்க் நகரமும் பாங்குத் துறையில் வளர்ச்சிபெற்றது. முதல் உலகப் போர் முடியும்வரை, உள்நாட்டு வாணிபத்திற்கும் நிதிக்கும்மட்டுமே நியூயார்க் தலைசிறந்து விளங்கியது. அதன் பின்னர், உலக விவகாரங்களில் அமெரிக்காவின் செல்வாக்கு உயர்ந்தபோது, பன்னாட்டு வாணிபத்திலும் நிதியிலும் லண்டனுக்குப் போட்டியாக நியூயார்க் நகரம் வளர்ந்தது. மேலும், முதல் உலகப் போர் முடிந்த பின்னர், இவ் இரு நகரங்களும் பன்னாட்டு அங்காடிக்கும் நிதிக்கும் சிறந்து விளங்கிய நகரங்களாகப் பல பெரிய கார்ப்பரேஷன்களின் தலைமைக் காரியாலயங்களைக் கவர்ந்தன. இதனால், நிர்வாகத்திறன் பெற்றவர் ஏராளமாக வாழும் நகரங்களாக இவை விளங்கத் தொடங்கின. கப்பல் போக்குவரத்து, இன்ஷூரன்ஸ், வாணிபம், பாங்கு ஆகிய பணிகளைமட்டுமின்றி, நிர்வாகப் பணிகளையும் இந்

நகரங்களிலுள்ள நிறுவனங்கள் செய்துவருகின்றன. ஆலோசனை அளிப்பதன்வழியாகவோ அல்லது வெளிநாட்டிலுள்ள கிளை ஸ்தாபனங்களுக்கும், துணை நிறுவனங்களுக்கும் அல்லது தாம் ஒப்பந்தம் செய்து நிருவாகம் செய்துவரும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் நிருவாகத் திறன் பெற்றவர்களை நேரடியாக அனுப்புவதன்மூலமாகவோ இப் பணிகளைச் செய்துவருகின்றன.

பரம்பரையாகக் கையாளப்பட்டுவரும் பாகுபாட்டைக் கொண்டு பார்க்குமிடத்து, பொருள்களை உற்பத்தி செய்யும் இயல்பிற்கும் பணிபுரியும் தன்மைக்கும் நடைமுறையில் அவ்வளவு வேறுபாடு இல்லை எனலாம். ஏனெனில், குறிப்பிட்டதொரு பண்டத்தில் ஒரு பிரதேசமோ அல்லது நாடோ சிறப்புத் தேர்ச்சி செய்கிறது என்று கூறும்போது, அப் பண்டம் முடிவுப் பொருளாக ஆகும் வரையுள்ள செய்முறைகள் அனைத்தையும் அது செய்ய வேண்டுமென்பதில்லை. மாருக, அவற்றில் ஏதாவதொரு செய்முறையில் சிறப்புச் தேர்ச்சி செய்தாலே போதும். உதாரணமாக, கனிப்பொருள்களைத் தோண்டி எடுப்பதில்மட்டும் சில பிரதேசங்கள் சிறப்புத் தேர்ச்சி செய்கின்றன; ஒருவேளை ஏதாவதொரு செய்முறையையும் அவை மேற்கொள்ளலாம். வேறு சில பிரதேசங்கள், இக் கனிப்பொருளை அல்லது முதல் செய்முறை முடிவுற்ற பொருளைக்கொண்டு அடுத்த படிமுறையிலுள்ள செய்முறையில் சிறப்புத் தேர்ச்சி செய்து, இன்னும் முடிவு பெருத பொருளாகவே அதை ஏற்றுமதி செய்யலாம். இதற்குப் பருத்தி நூல், கம்பளி நூல், ரயான் நூல் ஆகியவற்றைமட்டும் சில பிரதேசங்கள் சிறப்பாக உற்பத்தி செய்வதை உதாரணமாகக் கொள்ளலாம். அதேபோல் இந் நூலைக்கொண்டு நெய்தல் வேலையைமட்டும் செய்தல், தேனிரும்புமட்டும் செய்தல், முடிவு பெரு எஃகு பொருளை உற்பத்தி செய்தல் அல்லது காகிதம் செய்வதற்கேற்ற மரக்கட்டை, மரக்கூழ் ஆகியவற்றைமட்டும் உற்பத்தி செய்தலையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். வேறு சில பிரதேசங்கள் முடிவு பெருத பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றை முடிவுப் பொருள்களாகச் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி செய்யலாம். அதாவது, நூலை இறக்குமதி செய்து துணி நெய்யலாம் ; துணியை இறக்குமதி செய்து ஆடைகள், சட்டைகள், மேலங்கிகள் செய்யலாம் ; அல்லது எஃகு கச்சாப் பொருள்களை வாங்கி கார்களோ, எந்திரக் கருவிகளோ, இன்னும் இதர எஃகு சாமான்களோ செய்யலாம்; இறக்குமதி செய்த மரப்பாளங்களிலிருந்து மேஜை, நாற்காலிகள் செய்யலாம் ; மரக்கூழை இறக்குமதி செய்து காகிதங்களும் இதர காகிதப் பண்டங்களும் செய்யலாம்.

இவ்வாறாக, ஒரு பொருளை உற்பத்தி செய்வதிலுள்ள ஏதாவதொரு செய்முறையைமட்டும்—உதாரணமாகக் கனிப் பொருளை வெட்டி எடுத்தல் அல்லது அதைப் பக்குவப்படுத்தல் அல்லது அதைக்கொண்டு முடிவுப் பொருளாக உற்பத்தி செய்தல்—மேற்கொள்வதைப்போன்றுதான் பலவகைப் பணிகளில் ஏதாவதொரு பணியில்மட்டும் சிறப்புத் தேர்ச்சி செய்வதும் அமைகிறது. ஒரு பொருளை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்திற் கேற்றபடி காரணிகளைத் தொகுப்பதுபோல், இன்ஷூரன்ஸ், அங்காடி அல்லது பாங்குப் பணி ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒருவகை உழைப்பு அதிக விகிதாசாரத்தில் இருக்கும்; மூலதனம் அல்லது இயற்கைச் சாதனங்களின் விகிதாசாரம் குறைவாக இருக்கும். பொருளை உற்பத்தி செய்வதில் கண்ணுக்குப் புலனாகக் கூடிய விதத்தில் மூலப் பொருள்கள் உருமாறுகின்றன; ஆனால், பணி புரிவதில் அவ்வாறு புலனாவதில்லை. இருந்தாலும், இவ் இரண்டு பொருளாதாரச் செயல்களும் பயனுள்ளவையாய், மதிப்புடையவையாய் இருக்கின்றன.

பொருள்களை உற்பத்தி செய்யும் பணிக்கும், புலனாகாத ஆள்சார் பணிக்கும் உண்மையானதொரு வேறுபாடு உண்டு. அதாவது, ஆள்சார் பணி, காரணியின் இடப்பெயர்ச்சியை உள்ளடக்குகிறது. உதாரணமாக, ஓரிடத்தில் பாங்குப் பணிபுரிய வேண்டுமானால் அவ் இடத்திற்கு மூலதனத்தை அனுப்பவேண்டியுள்ளதைப்போல, நிருவாகப் பணிபுரிவதற்கு அங்கு நிர்வாகிகளை அனுப்பவேண்டியுள்ளது. இவ் வகைப் பணிகளைச் செய்வோரும் காரணிகளை ஒரு நாட்டிலிருந்து பிறிதொன்றுக்கு அனுப்புவோரும், தம் பணிகள் சம்பந்தப்பட்ட நுட்பமான வேலைகளில், உதாரணமாக நாடுவிட்டு நாடு காரணிகள் இடம் பெயர்வதிலுள்ள இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதில் அல்லது அவற்றை மேற்கொள்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர். பன்னாட்டு வாணிபக் கோட்பாடு முழுமையானதாக இருக்கவேண்டுமாயின், இவ் வகைப் பணிகளுக்கும் அது உகந்த இடம் அளிக்கவேண்டும்.

காரணி நிலைமாற்றம்
(Factor Reversal)

பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டில் உற்பத்திக் காரணி விகிதாசாரத் தத்துவத்திற்கு எதிரான மற்றொரு வாதத்தையும் இப்போது சமாளிக்கவேண்டியுள்ளது. இந்த எதிர் வாதமும் மாறுதல்கள் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது.


காரணி விகிதாசாரக் கோட்பாடு, தனி ஓர் உற்பத்திசார் பலனை எடுகோளாகக் கொண்டால்மட்டுமே சரியானதாயிருக்க முடியும் என்று பல ஆசிரியர்கள் அண்மையில் அதைக் குறைகூறி இருக்கின்றனர்.[9] அவர்கள் கூறும் குறையின் விவரம் வருமாறு: காரணிப் பேற்றினை ஆதாரமாகக்கொண்டு சிறப்புத் தேர்ச்சி நடைபெறவேண்டுமானால், இரண்டு காரணிகளில், உதாரணமாக மூலதனம், உழைப்பு ஆகியவற்றில் ஏதாவதொரு காரணியின் சார்பாக உற்பத்திசார் பலன் கோடு அமையவேண்டியுள்ளது. வரைபட வாயிலாக விளக்குவதாயின், அதன் சம அளவுக் கோடு மூலதன, உழைப்பு அச்சுகளை நோக்கி (9.1 (a) வரைபடம் காட்டுவதைப்போல) சரிச்சீரமைவற்ற (asymmetrical) உருவம் கொண்டதாயிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால்தான் ஒரு நாட்டில் காரணி விலைகள் கொடுக்கப்பட்டனவாயிருக்க, ஒரு பண்டம் எப்போதும் அதிக மூலதனம் பயன்படுத்தும் பண்டமாக இருக்கும்; மற்றொன்று அதிக உழைப்புத் தேவைப்படும் பண்டமாக இருக்கும். உதாரணமாக 9.1 (a) வரைபடத்தை எடுத்துக்கொள்வோம். இதில் காரணிகளின் தராதர விலை நிலவரம் $k_1 l_1$, $k_1' l_1'$ ஆகிய இரு விலைக் கோடுகளும் காட்டுவதைப்போல் இருக்குமாயின், 2-வது பண்டத்திற்கான b என்ற உற்பத்திப் புள்ளியைக்காட்டிலும் 1-வது பண்டத்தின் a என்ற உற்பத்திப் புள்ளி அதிக மூலதனம் கொண்டதாயிருக்கும். அதே போல் காரணி விலைகள் $k_2 l_2$, $k_2' l_2'$ என்ற தொடர்ச்சியற்ற விலைக் கோடுகள் காட்டுவதைப்போல் வேறுவிதமாக இருந்தால்கூட, 2-வது பண்டத்தில் b′ உற்பத்திப் புள்ளியைக்காட்டிலும் a′ உற்பத்திப் புள்ளி அதிக மூலதனம் பயன்படுத்துவதாயுள்ளது.

ஆனால் உற்பத்திசார் பலன் கோடுகள் இவ்வாறு தீர்மானமான வளைவைக் கொண்ட சரிச்சீரமைவற்றதாய்மட்டும் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. அவை 9.1 (b) படத்திலுள்ளதைப்போல் சம அளவு விளைவைக் காட்டும் சரிச்சீரமைவு

[9] ஏனைய ஆசிரியர்களுள் பின் வருவோரின் வாதங்களைப் பார்க்க: Quarterly Journal of Economics, LXX (May-August, 1956) என்ற வெளியீட்டில் Ramsey Robinson அவர்கள் எழுதிய கட்டுரையான 'Factor Proportions and Comparative Advantage.': Review of Economic Studies, XXIV (1956-57) வெளியீட்டில் Ronald Jones அவர்கள் எழுதிய 'Factor Proportions and the Heckscher—Ohlin Theorem' என்ற கட்டுரை; Economica, 24, (1957) வெளியீட்டில் K. Lancaster எழுதிய 'The Heckscher—Ohlin Trade Model' என்னும் கட்டுரை; Journal of Political Economy (April, 1962) வெளியீட்டில் B. S. Minhas வரைந்த 'The Homohyphallagic and the Heckscher-Ohlin Theorem' என்ற கட்டுரை.

(symmetrical) கொண்டதாயுமிருக்கக்கூடும்.[10] வெவ்வேறான இரண்டு பண்டங்களுக்கான சம அளவுக் கோடுகள் T என்ற புள்ளி காட்டுவதுபோல் ஒரே புள்ளியில் சந்திக்கக்கூடியதாயும் இருக்கக்கூடும்.

ஆனால் இது எதைக் குறிப்பிடுகிறதென்பதைக் கவனிக்க, $k_1 l_1$, $k_1' l_1'$ ஆகிய இரு விலைக் கோடுகளும் காட்டுவதைப்போல் காரணிகளின் தராதர விலைகளில் ஒரு நாடு (A) இரண்டு பண்டங்களையுமே உற்பத்தி செய்ய முற்படுமாயின், (b-யில்) 2-வது பண்டத்தைக்காட்டிலும் (a-இல்) 1-வது பண்டம் அதிக மூலதனத்தைப் பயன்படுத்தும் உற்பத்தி முறையில் உற்பத்தி செய்யப்படும். இவ் இரண்டு சம அளவுக் கோடுகளுக்கும் தொடு கோடாயும், T என்ற உற்பத்திப் புள்ளிக்கு இடப் புறமாயும் அமையக்கூடிய எந்த வகைக் காரணி விலைக் கோடுகளுக்கும் இது பொருந்தும். ஆனால், T என்ற உற்பத்திப் புள்ளிக்குக் கீழ், சரிச்சீரமைவு கொண்ட உற்பத்திசார் பலன்கள் இருப்பினும்,



வரைபடம் 9.1 சரிச்சீரமைவற்ற, சரிச்சீரமைவுகொண்ட உற்பத்திசார் பலன்கள்

காரணி நிலை மாற்றம் என்னும் ஒரு நிகழ்ச்சி ஏற்படுகிறது. அதாவது, $k_2 l_2$, $k'_2 l'_2$ ஆகிய விலைக் கோடுகள் காண்பிப்பதுபோல் காரணி விலைகள் கொண்ட B என்ற பிறிதொரு நாட்டில் 2-வது பண்டம்தான் அதிக மூலதனத்தைப் பயன்படுத்தும் உற்பத்தி முறையில் செய்யப்படுமேயன்றி, 1-வது பண்டமல்ல.

10 சரிச் சீரமைவுகொண்டு சம அளவு விளைச்சலைத் தரக்கூடிய உற்பத்திசார் பலன்கள்மட்டும் நாம் ஆய்ந்துகொண்டிருக்கும் முடிவைத் தருவதில்லை. எனினும், நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை எடுத்துக்காட்ட அவை போதுமானவை (மின்ஹாஸ் அவர்களின் மேற்குறிப்பிட்ட கட்டுரையைப் பார்க்க).

இவ்வாறாக, காரணி விலைகள் எப்படி இருந்தாலும், இப் பண்டங்களில் எதுவுமே எப்போதும் அதிக மூலதனம் தேவைப் படும் பண்டமாக இருப்பதில்லை என்பது புலனாகிறது. காரணி விலை நிலவரம், T என்ற புள்ளியைக்காட்டிலும் உயர்வான உற்பத்திப் புள்ளியை அமைப்பதாயின், 1-வது பண்டம் அதிக மூலதனச் செறிவுள்ளதாயும் 2-வது பண்டம் அதிக உழைப்புச் செறிந்ததாயும் இருக்கும். மாறாக, T என்ற புள்ளிக்குக் கீழ் உற்பத்திப் புள்ளிகளை அமைக்குமாறு காரணி விலைகள் இருக்கு மாயின், இவை தலைகீழாக மாறி, 1-வது பண்டம் உழைப்புச் செறிவுடையதாயும் 2-வது பண்டம் மூலதனம் செறிவுடையதாயும் ஆகிவிடுகின்றன. எனவே, ஏராளமான மூலதனம் கொண்ட நாடு (A), அதன் காரணி விலைகளில் மூலதனம் அதிகம் தேவைப்படும் பண்டத்தை (1) உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். ஆனால், ஏராளமான உழைப்பாளிகளைக் கொண்ட நாடு (B), அதன் காரணி விலைகளில் மூலதனம் அதிகம் தேவைப் படும் பண்டத்தைக்கூட (2) ஏற்றுமதி செய்யக்கூடும். அல்லது இதற்கு நேர்மாறான நிலைகளும் உண்மையாயிருக்க முடியும். இவ் இரண்டில் எது நிகழ்ந்தாலும் ஒரு நாடு ஏராளமான காரணியைக் கொண்டு அப் பொருளை ஏற்றுமதி செய்யும் அதே சமயத்தில், மற்றொன்று பற்றாக் குறையாக உள்ள காரணியைக் கொண்டு அதே பொருளை ஏற்றுமதி செய்யக்கூடும். எனவே, காரணி நிலை மாற்றத்தைக் காட்டக்கூடிய எந்த இரண்டு பண்டங்களை எடுத்துக்கொண்டாலும், எந்தப் பண்டத்தில் ஒரு நாடு சிறப்புத் தேர்ச்சி செய்யவேண்டும் என்பதை அந் நாட்டின் காரணிப் பேறு நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு காரணிகளின் நிலை மாற்றம் ஏற்படாமலிருக்கும்போதுகூட, காரணி விகிதாசாரக் கோட்பாட்டின் முடிவுகள் ஐயுறவு கொண்டவைகளாய் இருக்கக்கூடும்.

காரணிகளின் நிலை மாற்றத்தை ஏற்படுத்துகின்ற இவ்வகை யானதோர் உற்பத்திசார் பலனால் ஏற்படும் மற்றொரு விளைவையும் குறிப்பிடவேண்டும். இது இரண்டு அச்சுகளுக்கும் சரிச் சீரமைவு கொண்ட சம விளைவை விளைவிக்குமாயின் (சூன்யத்தில் தொடங்கும் செவ்வக உருவம் கொண்ட அதிபர வளைவுகள்—rectangular hyperbolas) நாட்டிற்கு நாடு உற்பத்திக் காரணிப் பேற்றிலுள்ள வேறுபாடு பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கு அடிப் படையாக அமையாது.[11] காரணிப் பேற்றில் பெரும் வேறுபாடு

[11] சம அளவுக் கோடுகள், இரண்டு அச்சுகளுக்கும் பொருத்தமில்லாதிருப் பினும், சரிச்சீரமைவு கொண்டவையாய் இருக்க முடியும். (உதாரணமாக, சூன்யப் புள்ளிக்கு வலப் புறத்தில் அல்லது அதற்கு மேலே தொடங்கும் செவ்வக உருவ முடைய அதிபர வளைவுகள்). இவை நாம் ஆயும் விளைவுகளைக் கொண்டவை அல்ல.

கொண்ட நாடுகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்டதொரு பண்டத்தை அதே செலவில் உற்பத்தி செய்யக்கூடும்.

உதாரணமாக, மூலதனம் ஏராளமாயும் மலிவாயும் கொண்டுள்ள அதே சமயம் உழைப்புப் போதாததாயும் கிராக்கி யாயுமுள்ளதொரு நாட்டில், மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் உள்ள தராதர விலையையும், இவ் இரு காரணிகளுக்காக அந் நாடு செலவிடும் மொத்தச் செலவையும் வரைபடம் 9.1 (b)-ன் k_1 l_1 விலைக் கோடு காட்டுவதாக வைத்துக்கொள்வோம். இந் நாடு (A), 1-வது பண்டத்தை உற்பத்தி செய்வதில் a என்ற புள்ளி காட்டுவதுபோல் மூலதனம் அதிகம் பயன்படும் உற்பத்தி முறையை மேற்கொள்ளும். அடுத்து, மூலதனம் கிராக்கியாயும் உழைப்பு மலிவாயுமுள்ள B நாட்டில் இக் காரணிகளின் தராதர விலையையும், k_1 l_1 கோடு காட்டும் அதே மொத்தச் செலவையும் k_2 l_2 விலைக் கோடு காட்டுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது a' உற்பத்திப் புள்ளி காட்டுவதுபோல் உழைப்பு அதிகம் தேவைப்படும் உற்பத்தி முறையில் A நாட்டைப்போன்றே B நாடும் அதே செலவில் 1-வது பண்டத்தை உற்பத்தி செய்யக் கூடும். மேலும், A, B ஆகிய நாடுகள் பெற்றுள்ள காரணிப் பேறுகளைப்போலல்லாமல், அவற்றிற்கு இடைப்பட்ட நிலைகளில் காரணிப்பேறு கொண்டுள்ள இதர நாடுகள்கூட, a, a' புள்ளிகள் காட்டும் உற்பத்தி முறைகளைப்போலன்றி, அவற்றிற்கு இடைப் பட்ட முறைகளைப் பின்பற்றி, அதே செலவில் இப் பண்டத்தை உற்பத்தி செய்ய முடியும்.

மூலதனச் செறிவும் உழைப்புச் செறிவும் கொண்ட உற்பத்தி சார் பலன்கள் இருக்கும் அதேசமயம், சம அளவு விளைவைத் தரக்கூடிய இவ் வகையான உற்பத்திசார் பலன்களும் இருக்க முடியும்; ஒரு வேளை அவ்வாறு இருக்கவும் செய்யலாம். எனவே, குறிப்பிட்டதொரு பண்டத்தை உலக அங்காடிகளில் விற்பனை செய்யும் நாடுகளுக்குப் போட்டியாக, அதே செலவில் அப் பண்டத்தை வேறு உற்பத்தி முறைகளில் உற்பத்தி செய்யக் கூடிய மற்ற நாடுகளும் உள்ளன என்பதை நாம் அறிய வருகிறோம். இதற்கு அரிசி உற்பத்தியே சிறந்த சான்றாகும். இன்னும் இது போல் பல பண்டங்களைச் சான்றாகக் காட்டலாம். சைக்கிளை எடுத்துக்கொண்டால், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அதிக மூலதனத்தைக் கொண்ட உற்பத்தி முறையில் செய்யப்படும் சைக்கிள்களுக்கும், இந்தியாவில் அதிக உழைப்பையும் சிறிதளவு மூலதனத்தையும் பயன்படுத்தி செய்யப்படும் சைக்கிள்களுக்கும் போட்டி உள்ளது; அதேபோல் இந்தியா, ஜப்பான் நாடுகளில்

செய்யப்படும் தையல் மிஷின்களுக்கும், (அதிக மூலதனத்தையும் குறைந்த அளவு உழைப்பையும் கொண்டு) அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் செய்யப்படும் தையல் மிஷின்களுக்கும் போட்டி இருப்பதைக் காண்கின்றோம். ஜப்பான் நாட்டு பொம்மை களுக்கும் அமெரிக்காவில் செய்யப்பட்ட பொம்மைகளுக்கும் போட்டி, ஹாங்ஹாங்கில் உற்பத்தியாகும் செருப்புகளுக்கும் அமெரிக்காவில் செய்யப்படும் செருப்புகளுக்கும் போட்டி, என்று பல உற்பத்தி முறைகளில் செய்யப்படும் பண்டங்களில் போட்டி நிலவுவதை அறிவோம்.

அவ்வாறுயின், இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு, நாடுகள் பெற்றுள்ள காரணிப் பேற்றிற்கும் வாணிபத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை என்றோ அல்லது காரணி விகிதாசாரக் கோட்பாடு பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கு உகந்த விளக்கமாக இதுவரை அமைந்ததுமில்லை, இப்போது அமைவதுமில்லை என்றோ கூற முடியுமா? கடந்த இருநூறு ஆண்டுகளாக உற்பத்திசார் பலன்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்த்தால்தான் இவ் வினாவிற்குரிய விடையை நாம் தெளிவாகக் காணமுடியும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் உற்பத்திசார் பலன்கள்


இப்போது நாம் தொழிற்சாலைப் பொருள்களெனக் கருதும் பொருள்களெல்லாம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை கைத் தொழில் பொருள்களாகவோ அல்லது அதிக உழைப்பைப் பயன் படுத்தும் பொருள்களாகவோ தான் எல்லா இடங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டுவந்தன. தொழில் நுட்பக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்குமிடத்து, தொழில் புரட்சிதான் ஆலைத் தொழில், போக்கு வரத்துத்துறை ஆகியவற்றின் உற்பத்திசார் பலன்களில் அடிப் படையானதொரு மாறுதலை ஏற்படுத்தியது. இதுவரை கையினால் செய்துவந்த பொருள்களை உற்பத்தி செய்வதில் அதிக மூலதனம் கொண்ட புதிய உற்பத்தி முறைகள் - இங்கிலாந்திலும் மேற்கு ஐரோப்பாவிலும் நிலவிய காரணி விலைகளில்—புகுத்தப்பட்டன. இதனால், தொழிற்சாலைப் பொருள்கள் மிக மலிவாக உற்பத்தி யாயின. இவ் ஆலைத் தொழில்கள் முதலில் மேற்கு ஐரோப்பாவி லிருந்த் பலவகைக் கைத்தொழில்களை நாசம் செய்தன. 19ஆம் நூற்றாண்டில் (எளிதான உதாரணம் தருவதாயின்) பிரிட்டிஷ் நெசவாலைப் பொருள்கள் கிழக்கத்திய நாடுகளில் புகுந்து, அங்கிருந்த கைத்தறி நெசவுத் தொழிலை நசுக்கின. மேலும்,

மலிவாக உற்பத்தி செய்யப்பட்ட ஆலைப் பொருள்கள், தட்டெழுத்துக் கருவி, மண்ணெண்ணெய் விளக்கு, டார்ச்சு விளக்கு ஆகியவை போன்ற நவீனப் பொருள்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்து குவிந்ததால் பூட்டு செய்வோர், எழுத்தர்கள், மெழுகுவத்தி செய்வோர் தம் வேலையை இழந்தனர். இன்னும், மலிவான உலோகப் பாண்டங்களும் தட்டுகளும் இறக்குமதியானதால் கன்னார், குயவர் போன்ற கைவினைஞர்கள் தமது வேலைப்பாடு கொண்ட பொருள்களுக்குக் கிராக்கியுள்ள இடங்களில் மட்டுமே தமது தொழிலை நடத்தவேண்டியதாயிற்று. எந்திர உற்பத்தி முறையைக்கொண்ட ஆலைத் தொழில்களே உலகெங்கும் பிரபலியமடைந்தன.

உற்பத்திசார் பலன்களைக்கொண்டு இதை விளக்குவதாயின், அதிக உழைப்பைக்கொண்ட தொழில்கள், அதிக மூலதனம் கொண்ட தொழில்களாக மாறின. இதை 9.2 (a) வரைபடத்தில் காட்ட முடியும். HH' என்ற குறியுடைய செவ்வக உருக்கொண்ட மாறுத விகிதாசார சம அளவுக்கோடு, கைவினையால் செய்த குறிப்பிட்டதொரு பண்டத்தின் (உதாரணமாக, கைத்தறித் துணியின்) உற்பத்தி அளவைக் குறிக்கிறது. இந்த அளவுத் துணியை, உதாரணமாக இந்தியாவில் நிலவும் காரணி விலைகளில் உற்பத்தி செய்வதற்கேற்படும் செலவை $k_1 l_1$ கோடு காட்டுகிறது (இதன் சரிவு, இந்தியாவில் நிலவும் காரணிகளின் தராதர விலையைப் பிரதிபலிக்கிறது). ஏனைய உற்பத்தி முறைகள் தோன்றும்வரை இருந்துவந்த உற்பத்திசார் பலன்களை அதிக உழைப்பைக்கொண்ட சம அளவுக்கோடு பிரதிபலிக்கிறது.

எனினும், தொழிற் புரட்சி ஏற்பட்டபின், அதிக மூலதனம் கொண்ட உற்பத்திமுறை சாத்தியமாயிற்று. இம் முறையை MM' குறியிட்ட செவ்வக உருக்கொண்ட சம அளவுக்கோடு காட்டுகிறது. (இது HH' காட்டும் அதே அளவு உற்பத்தியைக் கொண்டது). இங்கிலாந்து நாட்டில் நிலவும் காரணிகளின் தராதர விலையில் KL செலவில் அதே அளவுத் துணியை உற்பத்தி செய்யக்கூடும். இச் செலவு $k_1 l_1$ காட்டும் செலவில் பாதிதான் என்று அனுமானித்துக்கொண்டால் (அதாவது, இது $k_2 l_2$-க்குச் சமமாயும் $k_1 l_1$ செலவில் பெறக்கூடிய மூலதனம் அல்லது உழைப்பில் பாதி அளவைப் பிரதிபலிக்கின்றதாயும் ஆகும்), MM' உற்பத்தி முறையில் ஓர் அலகு துணியை உற்பத்தி செய்ய ஏற்படும் செலவு HH' முறையில் ஏற்படும் செலவில் பாதிதான் இருக்கும். எனவே, கைத்தறி உற்பத்திமுறை விரைவில் கைவிடப்படவேண்டியிருக்கும். துணி நெசவில் உள்ள எல்லா

உற்பத்தி முறைகளையும் கொண்ட உற்பத்திசார் பலன்கள் அனைத்தையும் இப்போது Mab H′ என்ற தொடர்பற்ற கோட்டால் காட்டலாம். எனினும், நடப்பிலுள்ள காரணிகளின் தராதர விலைகளில் தொழிற்சாலைமுறையில்தான் MM′ உண்மையில் உற்பத்தி நடைபெறும்.



வரைபடம் 9.2 உற்பத்திசார் பலன்களில் மாறுதல்கள் : புதுமுறைகளைப் புகுத்தல்

நெசவுத் தொழிலின் வரலாற்றில் இன்னும் ஒருபடி மேலே சென்று ஆய்வோம். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜப்பான் நாடு (ஜப்பானில் அச் சமயம் இங்கிலாந்தையும் மேற்கு ஐரோப்பாவையும்விட மூலதனம் கிராக்கியாயிருந்தது; அதே சமயம் உழைப்பு மலிவாகவும் இன்றி, கிராக்கியாகவும் இன்றி, இடை

நிலையில் இருந்தது) தான் கொண்டிருந்த காரணிப் பேற்றினோடு அதிக மூலதனம்கொண்ட உற்பத்திமுறையை, அதாவது, 9.2 (b) படத்தில் JJ' காட்டும் முறையை உற்பத்திசார் பலன்களில் புகுத்தியது. இம் முறை மேற்கத்திய நாடுகளைவிட அதிக உழைப்பையும் குறைந்த மூலதனத்தையும் கொண்டது. ஜப்பானில் காரணிகளின் தராதர விலைகளைக் காட்டும் சரிவுடைய rw கோடு KL கோட்டைப்போன்று அதே செலவைக் குறிப்பிடுவதாயின், ஜப்பான் நாடு மேற்கத்திய நாடுகளோடு இப்போது போட்டியிடக்கூடும். தொடர்ச்சியற்ற சம அளவுக்கோடான Macb H' என்ற கோடு எல்லா உற்பத்திசார் பலன்களையும் காட்டுகிறது. எனினும், MM', JJ' முறைகளில்தான் உண்மையில் உற்பத்தி நடைபெறுகிறது.

கடந்த நூறாண்டுகளாகப் பல தொழில்களிலும் நவீனத் தொழில்நுட்பம் பரவியுள்ளதன் விளைவாக, தொழிற்சாலைப் பொருள்கள் அனைத்திலும் வெகுவாகக் காணப்படும் எந்திரமயமான உற்பத்திமுறைதான் (அதாவது, அதிக மூலதனம் கொண்டமுறை) செல்வாக்குப் பெற்றுள்ளது. எனவே, தொழில் உற்பத்திசார் பலன்கள் இப்போது அதிக மூலதனத்தைப் பயன் கொள்பவை. இருக்கின்ற காரணிகளின் தராதர விலைகளில் அதிக மூலதனம் பயன்கொள்ளும் இந்த உற்பத்திமுறைகள்தாம் சிக்கனமானவை, அதிகத் திறன் கொண்டவை. கைத்தறி உற்பத்திமுறையில் குறிப்பிட்டதோர் அளவு உற்பத்தி செய்யப் பெருமளவில் உழைப்பு வேண்டியிருப்பதால் [9.1 (a) வரைபடத்தில் HH' காட்டுவதுபோல்], உழைப்பு மிக மலிவாக இருப்பினும், அம் முறையைக்கொண்டு போட்டியிட முடியாது (எடுத்துக்காட்டாக, இந்தியாவின் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக அந் நாட்டு அரசாங்கம் செய்துவரும் தாராள பண உதவித் திட்டத்தை எண்ணிப்பாருங்கள்).

மிக அண்மைக்காலம்வரை, விவசாயத் தொழிலிலும், கச்சாப் பொருள் உற்பத்தித் தொழில்களிலும், தொழிற்சாலை உற்பத்தியிலுள்ள முறைகளுக்கு நேர்மாறான உற்பத்திமுறைதான் இருந்து வந்தது. சர்க்கரை, தேயிலை, காப்பி, அரிசி, ரப்பர், பருத்தி ஆகியவை போன்ற பல முக்கிய உணவுப் பண்டங்களும் கச்சாப் பொருள்களும் அதிக உழைப்பைப் பயன்கொள்ளும்முறையில் தான் உற்பத்தி செய்யப்பட்டன. எனவே, ஏராளமான உழைப்பாளிகளையும் குறைந்த அளவு மூலதனத்தையும் கொண்டிருந்த நாடுகளிலெல்லாம் (வேண்டிய அளவு நிலம் கொடுக்கப்பட்டதாயிருக்க) இவை பெருமளவு பயிர் செய்யப்பட்டன. இந் நாடுகள்

தமக்கு வேண்டிய தொழிற்சாலைப் பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றிற்கு ஈடாகச் செலுத்துவதற்குத் தம் மூலப் பொருள்களின் ஏற்றுமதியையே சார்ந்திருந்தன.

ஆனால், இப்போது நிலைமை அதிகமாக மாறிவிட்டது. உதாரணமாக, அரிசி உற்பத்தியில் அதிக மூலதனத்தைக் கொண்ட உற்பத்திமுறையை அமெரிக்கா மேற்கொண்டுள்ளதால், இன்றைய உலக அங்காடியில் பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு வந்துவிட்டது. மிதவெப்பமான பிரதேசங்களில் விளையும் கோதுமை, தானியம், சோயா பீன்ஸ் போன்ற பயிர்வகைகளின் உற்பத்தியில் முன்னேற்றமான (எந்திரங்களைப் பயன்படுத்துவதும், உரங்களையும் பூச்சி மருந்தையும் அதிக அளவு பயன்கொள்வதுமான) உற்பத்திமுறையைப் புகுத்தியதால், உற்பத்தி அளவு எதிர்பாரா அளவிற்குப் பெருகியுள்ளது; எவ்வளவு தூரம் பெருகியுள்ளதென்றால், இப் பண்டங்களின் விலைகள் குறைந்துவிடக்கூடா என்பதற்காக, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியனவாயுள்ளன. இல்லையேல் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிக மூலதனத்தைக்கொண்டு பயிர்த் தொழில் செய்யும் விவசாயிகளில் ஒருசிலரைக்கொண்டே உலக அங்காடிக்குப் பெருமளவில் உற்பத்தி செய்து அளிக்கக்கூடும். மேலும், ரப்பரை எடுத்துக் கொண்டால், இயற்கையான ரப்பர் இன்றும் அதிக உழைப்பைக் கொண்ட உற்பத்திமுறையில்தான் விளைவிக்கப்படுகிறது. அதே சமயம் இயற்கை ரப்பரைப்போன்ற செயற்கை ரப்பரும் அதிக மூலதனம் கொண்ட உற்பத்திமுறையில் அதே செலவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

அதிக மூலதனத்தைக்கொண்ட திறன் மிக்க உற்பத்தி முறைகளையுடைய உற்பத்திசார் பலன்கள் தொழிற்சாலைப் பொருள்களில் ஏற்பட்டுள்ள அளவிற்கு உணவுப் பண்டங்களிலும் மூலப் பொருள்களிலும் ஏற்படவில்லை. எனினும், அயல்நாட்டுச் செலாவணியைப் (foreign exchange) பெறுவதற்கென்று உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் பெருமளவில் ஏற்றுமதி செய்துவரும் நாடுகளுக்கு இதனால் பெரும் ஆபத்து ஏற்படுகிறது. இவ்வகைப் பொருள்களுக்குச் செயற்கைமுறையில் பதிலீட்டுப் பொருள்களைக் கண்டுபிடிப்பது, உணவுப் பண்டங்களின் திறன் மிக்க உற்பத்திமுறையைப் புகுத்துவதுபோன்ற முன்னேற்றம் ஒவ்வொன்றும் இந் நாடுகள் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடுகிறது. கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட இவ்வகை மாற்றத்தின் விளைவாக, இந்

நாடுகள் தமது உற்பத்திப் பொருள்களின் விலைகளைப் பேணவும், அவற்றை விற்பதற்கென்று பல வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்யவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்டது. அதே சமயம், தமது இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களை வளர்க்கவேண்டு மென்ற வலிமையான உணர்ச்சியும் இந் நாடுகளில் எழுந்துள்ளது. இவ் உணர்ச்சி இயல்பாகவே மிதமிஞ்சி இருப்பதால், இதற்கு வெளிநாட்டு ஆதரவு நிச்சயம் தேவை இல்லை.[12]

எனவே, தமது ஏற்றுமதிப் பொருள்களுக்குத் தீவிரமான போட்டியை ஏற்படுத்தியுள்ள, பெருமளவு மூலதனத்தைக் கொண்ட உற்பத்திமுறைகளுக்கு எதிராக மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகள், இப் போட்டியைச் சமாளிப்பதற்காக, தம்மிடமுள்ள உற்பத்திக் காரணிகளின் விகிதாசாரத்திற் கேற்ற உற்பத்திமுறைகளை மேலும் அபிவிருத்தி செய்ய முயல்வது இயற்கையே. அவ்வாருயின், ஆராய்ச்சிமூலம் உழைப்பு அதிகம் தேவைப்படும் உற்பத்திமுறைகளின் திறனை அதிகமாக்க வேண்டும். அதேபோல, தாம் இறக்குமதி செய்யும் தொழிற்சாலைப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமாயின், தொழில் வளர்ச்சியுற்ற நாடுகள் மேற்கொள்ளும் மூலதனச் செறிவுள்ள உற்பத்திமுறைகளை அப்படியே பின்பற்றுவதற்குப் பதிலாக, மேற்கூறியவாறு உழைப்பை அதிகமாகப் பயன்படுத்தும் உற்பத்திமுறைகளின் திறனை அதிகரிக்க முயலவேண்டும்.

இம் முயற்சிகளை மேற்கொண்டால், உலகின் உற்பத்தி முறைகளையும் வாணிப அமைப்பையும் பார்க்க விநோதமாக இருக்கும். மூலதனமும் உழைப்பும் எவ்வாறு ஒன்றுக்கொன்று பதிலீட்டுப் பொருள்களாகும் என்பதை சம அளவுக்கோட்டினைக் கொண்டு ஆய்ந்த கோட்பாட்டின் ஆய்விற்கேற்ற நிலை பல பண்டங்களுக்கு ஏற்பட்டுவிடும். அவ்வாருயின், இப் பண்டங்களைப் பொறுத்தவரை, தராதரச் செலவு வித்தியாசத்தின் தன்மையோ அல்லது தராதரச் சிறப்பின் அடிப்படையோ இல்லாமல் போய்விடும். ஒரே செலவில் பலவகை உற்பத்தி முறைகளை மேற்கொண்டு, இப் பண்டங்களை எல்லா நாடுகளுமே உற்பத்தி செய்யக்கூடும். உலகின் எல்லா இடங்களிலுமே தொழிற்செறிவு ஒரேமாதிரியாக இருக்கும். அப்போது சிறப்புத் தேர்ச்சியோ, வாணிபமோ அவ்வளவாக இராது.

[12] இவற்றைப்பற்றியும் இன்னும் இவை சம்பந்தப்பட்ட இதர விஷயங்களைப் பற்றியும் விவரமாக 27ஆம் அதிகாரத்தில் ஆய்வோம்.

ஒரேமாதிரியான பண்டத்தை வெவ்வேறு முறைகளில் உற்பத்தி செய்வது ஒரு விதியாக அமையவில்லை; அது ஒரு விதி விலக்காகவேதான் இன்றும் உள்ளது. ஆனால், இவ் விதி விலக்குகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. மூலதனம் அல்லது திறன் பெற்ற, தொழில்நுட்ப உழைப்பு, அல்லது குறிப்பிட்டதொரு வகை நிலம் ஆகியவை போன்ற ஏதாவதொரு காரணியை அதிகமாகப் பயன்கொண்டு, பல பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் திறமை மிக்க முறை இன்றும் உள்ளது. இவ்வாறு இருக்கும்வரை, பன்னாட்டு வாணிப விளக்கத்திற்குக் காரணி விகிதாசாரக் கோட்பாடு பயனுள்ளதாயும் ஏற்றதாயும் இருக்கும்.

எளிய மாதிரிகளும் உண்மை நிலையும்

காரணி நிலை மாற்றமடையும் நிகழ்ச்சிகளையும், அவை சம்பந்தப்பட்ட பிற காரியங்களையும் இரண்டு காரணிகளைமட்டும் மாதிரியாக வைத்துக்கொண்டு இதுவரை ஆய்ந்தோம். ஆனால், நடைமுறையிலுள்ள பொருளாதார உலகம் இவ்வளவு எளிமையானதன்று. அது பலவகைச் சிக்கல்களை உடையது. பொதுவாக ஆயவேண்டியபோதுகூட நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்று காரணிகளையும் நாம் கொள்ளவேண்டியுள்ளது. எவ்வளவிற்கெவ்வளவு நமது ஆய்வு விவரமாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டுமோ, அவ்வளவிற்கவ்வளவு தனிப்பயன் காரணிகளின் எண்ணிக்கையும் பெருகிவிடுகிறது.

இரண்டு காரணிகளுக்குமேல் புகுத்தும்போது, காரணி நிலைமாற்ற நிகழ்ச்சியின் முக்கியத்துவம் குறைந்துவிடுகிறது. பல்வேறு உற்பத்திக் காரணிகள் இருக்கும்போது, மூன்று வகைக் காரணிகளைமட்டும் கொண்டு ஆய்ந்தால், அதன் முடிவு உண்மையாயிருக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக, இரண்டிற்கு மேற்பட்ட உற்பத்திமுறைகளைக்கொண்டு ஒரே உற்பத்திச் செலவில் பொருள்களை உற்பத்தி செய்ய முடியுமா என்ற வினாவிற்கு, மிகப் பல காரணிகளை எடுத்துக்கொண்டோமானால், இரு வழிகளிலும் விடை பகரலாம். ஒருபுறம், ஒரே அளவு உற்பத்திச் செலவைக் கொண்ட காரணிகளின் தொகுப்பு எண்ணிக்கையில் அதிகரித்து விடுகிறது; மறுபுறம், காரணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, காரணி விலைகளிலுள்ள வித்தியாசத்தை பாதிக்கக் கூடிய அல்லது வித்தியாசமே இல்லாமல் செய்யக்கூடிய சூழ்நிலையும் விரிவாகிவிடுகிறது.

அவ்வாறிருந்தால்கூட, காரணி விகிதாசாரக் கோட்பாடு தான் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கு ஆதாரமாக அமைகிறது. ஏனெனில், எந்த உற்பத்திமுறையாயிருந்தாலும், அதன் உற்பத்திச் செலவு, அது பயன்படுத்தும் காரணிகளுக்குச் செலுத்தப்படும் விலையைக்கொண்டுதான் கணிக்கப்படுகிறது. குறிப்பிட்ட காரணிகள் அதிகமாகப் பயன்படும் உற்பத்திசார் பலன்கள் கொடுக்கப்பட்டனவாயிருக்க, தான் ஏராளமாயும் மலிவாயும் கொண்டுள்ள காரணிகளைப் பயன்படுத்தக்கூடிய பொருள்களில்தான் ஒரு நாடு சிறப்புத் தேர்ச்சி செய்யும். சில வேளைகளில், வேறுவிதமான காரணிப் பேற்றினைக்கொண்ட நாடுகள், வேறு உற்பத்திமுறைகளைப் பயன்படுத்தி, அப் பண்டங்களை உற்பத்தி செய்து போட்டியிடலாம்; அல்லது அங்காடிக்கருகிலோ, மூலப்பொருள் கிடைக்குமிடத்திலோ தொழில்களை ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்படும்போது, மலிவாக உள்ள காரணிகளால் ஏற்படும் சாதகமான நிலை பாதிக்கப் படலாம். ஒரேவிதமான காரணிப்பேற்றினைக் கொண்டுள்ள நாடுகளை எடுத்துக்கொண்டால், அளவுச் சிக்கனங்களை அடைவதற்கான சூழ்நிலை சிறப்புத் தேர்ச்சிக்கு ஆதாரமாக அமையலாம். அப்போது புறச் சிக்கனங்கள் ஏற்படுமாயின், இச் சிறப்புத் தேர்ச்சி வலுப்பெறும். எனினும், இந்த நாடுகளில்கூட ஏராளமாக உள்ள காரணிகள்தாம், குறிப்பாக விழிப்பும் துணிச்சலும்கொண்ட தொழில் துணிவுதான், சிறப்புத் தேர்ச்சிக்கு முக்கியமான அடிப் படையாக அமைகின்றன. எனவே, காரணி விகிதாசாரக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை நாம் குறைத்துவிடக்கூடாது.

உற்பத்திசார் பலன்கள் எங்கும் ஒரேமாதிரி உள்ளனவா?

பன்னாட்டு வாணிப ஆய்வில் நாம் கொண்ட எடுகோள்களில் குறிப்பிட்டதோர் உற்பத்திசார் பலன் எங்கும் ஒரேமாதிரியாகவே தான் உள்ளது என்ற எடுகோளும் ஒன்றாகும். ஏதாவதோர் உற்பத்திசார் பலனைக்கொண்ட உற்பத்திமுறைகள் பல இருப் பதையும், அவற்றில் தான் கொண்டுள்ள காரணிப்பேற்றின் சிறப்பிற்கேற்ப ஒரு நாடு எந்த முறையையும் மேற்கொள்ளக் கூடும் என்பதையும் இவ் வெடுகோள் குறிப்பிடுகிறது.

உற்பத்தித் தொழில் நுட்ப நிலைமைகள் மாறாமல் அப்படியே இருக்கின்ற ‘இயக்கமற்றதொரு மாதிரியை’ நாம் எடுத்துக் கொண்டால், இது உண்மைதான். அவ்வாறு இருந்தால், இரகசிய மாக வைத்துக்கொண்டுள்ள தொழில்நுட்ப முறைகளையும்,

பேட்டன்டு உரிமைகொண்ட உற்பத்தி முறைகளையும் தவிர, காரணி விகிதாசாரமும் காரண விலைகளும் ஏற்றவையாயிருக்குமானால் எந்த உற்பத்தி முறையையும் ஒரு நாடு பயன்கொள்ளக் கூடும். அதோடு, நீண்டகாலத்தை எடுத்துக்கொண்டால், தொழில் இரகசியங்களோ, பேட்டன்டு உரிமைகளோ இருக்க முடியாது.

ஆனால், மாறும் இயல்புடைய உலகில், குறிப்பாகத் தொழில் நுட்பம் சதா மாறிக்கொண்டே இருக்கும்போது, ஒரு நாடுமட்டும் ஒரு தொழிலிலோ அல்லது சில தொழில்களிலோ புதியதோர் உற்பத்திமுறையைக்கொண்டு, அதில் பிற நாடுகளைக்காட்டிலும் தலைசிறந்த நிலைமையில் இருக்கலாம். அவ்வாறு தலைசிறந்து விளங்கும் நாடு, மேலும் மேலும் புதுப்புது முறைகளைக் கண்டு பிடித்து, அத் தொழிலில் முன்னேறித் தலைசிறந்த நாடாக இருந்து கொண்டே இருக்கலாம். அல்லது இத் தொழிலில் முதன்முதலில் கண்டுபிடித்த உற்பத்திமுறையில் மற்றொரு நாடு புதுப்புது முறைகளைப் புகுத்தி, கைதேர்ந்த நாடாக வளர்ந்து, தலைசிறந்த நாடாக ஆகிவிடக்கூடும்.

இவ்வாறாக, ரசாயனத் தொழிலில் அனிலின் சாயப் பொருளைக் கொண்டு பெருமளவு மூலதனத்தைப் பயன்படுத்தும் நவீன உற்பத்திமுறையை ஜெர்மனிதான் முதன்முதலில் புகுத்தியது. பின்னர், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இத் தொழிலில் வளர்ச்சியடைந்து, முதல் உலகப் போர் முடியும்வரை இத் தொழிலில் தலைசிறந்த நாடாக ஜெர்மனி விளங்கியது. யுத்தத்தின்போது ரசாயனப் பொருள்களுக்கேற்பட்ட தேவை விரிவடையவே, அமெரிக்காவிலும் பிரிட்டனிலுமிருந்த ரசாயனத் தொழில்கள் ஊக்கத்துடன் வளர்ச்சி பெற்றன. மேலும், ஜெர்மன் பேட்டன்டுகளைக் கைப்பற்றியதன் விளைவாகவும், தொழில் பாதுகாப்புக் கொள்கையை மேற்கொண்டதன் காரணத்தாலும் சாயப்பொருள் போன்ற வேறு சில ரசாயனத் தொழில்கள் 1920ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் தோன்றின. ரசாயன ஆராய்ச்சிக்கும், ரசாயன நிபுணர்களுக்கும், பொறியியலாருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கும் பெருமளவில் முதலீடு செய்ததன் விளைவாக அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இத் தொழில் விரைவாக முன்னேறியது. 1920ஆம் ஆண்டுகளின் இறுதிக்குள் ஜெர்மனியின் பிரபலியமான ஐ. ஜி. ஃபார்பென் (I. G. Farben) ரசாயனக் கம்பெனிக்குக் கடுமையான போட்டியாக, அமெரிக்காவின் டு பான்ட் (Du Pont) கம்பெனியும் பிரிட்டனின் இம்பீரியல் ரசாயனத் தொழிற்சாலைகளும் முன்னேறிவிட்டன.

இவ் அதிகாரத்தின் கடைசிப் பிரிவில் நாம் குறிப்பிட்டது போல், அதிக மூலதனம்கொண்ட உற்பத்திமுறை வளர்ச்சிக்கும் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதெனத் தெரிகிறது. ஆனால், முக்கியமான புது உற்பத்தி முறைகள் தோன்றும் தொழில் அடிக்கடி மாறுவதாயும் உள்ளது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் புத்தாக்கம் ஏற்பட்டு, பெருமளவு மூலதனத்தைக்கொண்டு தொடக்கத்தில் தலைசிறந்து விளங்கும் தொழில்கள், சிறிது காலம் கழித்து, இன்னும் பல புதிய தொழில்நுட்ப முறைகள் தோன்றும்போது பழையனவாகி விடுகின்றன. இவ்வாறு பழைமையாகிவிட்ட தொழில்களைப் புதிய நாடுகள் மேற்கொள்கின்றன. இந் நாடுகளில் அவ்வகைத் தொழில்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவும் மூலதனமும் கிடைக்கும்போது, அவற்றைத் தொடங்குவதற்கு இந் நாடுகள் தயாராக இருக்கின்றன.

இம்மாதிரியான வளர்ச்சிதான் துணி நெசவுத் தொழிலில் ஏற்பட்டுவருகிறது. முதன் முதலில் இங்கிலாந்தில் தோன்றிய தொழிற்சாலை உற்பத்திமுறை 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிற்கும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியதெனினும், இங்கிலாந்துதான் இத் தொழிலில் தலைசிறந்து விளங்கியது. ஆனால், முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜப்பான் இத் தொழிலில் தலைசிறந்த நாடாக ஆகிவிட்டது. எனினும், நீடித்துழைக்கும் நவீன நுகர்வுப் பொருள்களான கார், ரயான், ரேடியோ ஆகிய தொழில்களை நோக்க, இத் தொழில் இன்றும் அதிக உழைப்பைக்கொண்டதாகத்தான் ஜப்பானில் இருந்துவருகிறது. பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் நிலவும் குறைந்த கூலியின் காரணமாக ஏற்படும் அனுகூலத்தைக் கொண்டு இந்தியா, எகிப்து போன்ற பல நாடுகளும் நெசவாலைத் தொழிலில் முக்கிய இடம் பெற்றுள்ளன. கிண்டில்பெர்கர் (Kindleberger) கூறுவதுபோல், பொருளாதார வளர்ச்சி பெறும் நாடுகள் முதலில் இத் தொழிலில்தான் வளர்ச்சியடைகின்றன. இந் நாடுகளிலெல்லாம் இத் தொழில் வளர்ச்சிக்கேற்ற காரணிகள் இருப்பதுதான் இதற்கு முக்கிய காரணம். புதுத் தொழில் ஏற்பட்டுவிட்டதாலோ பழையது உருமாறி விட்டதாலோ, ஆரம்பத்தில் அதிக மூலதனம் பயன்படுத்துவதில் சிறந்து விளங்கிய சில தொழில்கள், இப்போது அந்தஸ்தானத்தை இழந்துவிட்டன. அவ்வாறுள்ள தொழில்களில் சைக்கிள், பிளாஸ்டிக், டயர், டார்ச்சு விளக்கு, பீங்கான் சாமான் ஆகிய தொழில்கள் இடம் பெறுகின்றன.

சுருக்கமாகக் கூறின், இங்கு விவரிக்கப்பட்ட சக்திகள் மறுபடியும் மறுபடியும், அல்லது இன்னும் திருத்தமாகச் சொல்வ

தானால், இடைவிடாமல் இயக்கமற்ற சமநிலையை உலைத்து விடுகின்றன. தொழில் நுட்பப் புத்தமைப்புகள் பொதுவாக அதிக மூலதனம் தேவைப்படும் புதுப்புது உற்பத்தி முறைகளை உற்பத்திசார் பலன்களில் தோற்றுவிக்கின்றன. இப் புதிய முறைகள் ஏனைய நாடுகளைக்காட்டிலும் அதிக மூலதனம்கொண்ட நாடுகளில் தொடங்கப்பெறுகின்றன. இதனால், அந் நாடுகள் பொருள்களை மலிவாக உற்பத்தி செய்ய முடிகிறது. தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக அந் நாடுகளில் ஏற்படும் இச் சாதக மான சூழ்நிலை தொடர்ந்து அந் நாடுகளில் இருந்துகொண்டே இருக்கலாம்; அல்லது ஏனைய நாடுகள் அந் நிலையைப் பெற்று விடலாம். காலம் செல்லச்செல்ல, தொழில் நுட்ப வளர்ச்சியில் தேக்கம் கொண்டுள்ள நாடுகள், ஏனைய நாடுகளில் அது வளர்ச்சி பெறுவதனால் மூலதனச் செறிவுகொண்ட தமது அந்தஸ்தை இழந்துவிட நேரிடலாம். அப்போது வளர்ச்சி பெற்ற நாடுகளில் அத் தொழில்கள் தம் முக்கியத்துவத்தை இழந்துவிட, வேறு சில தொழில்கள் சிறப்பிடம் பெற்றுவிடுகின்றன. இப் பழைய தொழில் களைப் புதிதாக வளர்ச்சிபெற்றுவரும் நாடுகள் மேற்கொள்கின்றன. இவை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு இன்றியமையாத சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகள் அந் நாடுகளில் அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

மேலும் படிப்பதற்குரிய சில நூல்கள்

Caves, Richard E., 'Trade and Economic Structure.' Cambridge, Mass : Harvard University Press 1960-ல் பதிப் பித்தது. பன்னாட்டு வாணிபம்பற்றிய நவீனக் கோட்பாட் டினையும், அக் கோட்பாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட சிக்கல்களையும் விவரமாகவும் தெளிவாகவும் ஆய்கிறது.

Haberler, G., 'A Survey of International Trade Theory' Princeton, N. J. : International Finance Section, Princeton University 1961-ல் பதிப்பித்தது. அண்மையில் ஏற்பட்ட கோட் பாட்டு வளர்ச்சியை 3ஆம் அதிகாரம் ஆய்கிறது.

Johnson, Harry, G., 'International Trade and Economic Growth' London : George Allen Unwin Ltd. 1958-ல் பதிப் பித்தது. 'காரணிப் பேறு பன்னாட்டு வாணிபம், காரணி விலைகள்' என்னும் முதல் அதிகாரம், காரணி நிலைமாற்றத்தையும், அது சம்பந்தமான இதர காரியங்களையும்பற்றிய பிரச்சினைகளை ஒப்பற்ற முறையில் விளக்குகிறது.

Kindleberger, Charles P., 'International Economics,' Homewood, Ill : Richard D. Irwin, Inc., *1963*-ல் பதிப்பித்த மூன்றும் பதிப்பு. வாணிபத்தின் மாறும் அடிப்படைபற்றிய 7ஆம் அதிகாரம் பற்றுதல்கள், தொழில்நுட்பம், காரணிப்பேறு ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களை விளக்குகிறது. இவ் விளக்கம் இவ்வதிகாரத்தில் நாம் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்து ஓரளவு மாறுபட்டதாகும்.

Levin, Jonathan V., 'The Export Economics, Their Pattern of Development in Historical Perspective.' Cambridge, Mass. : Harvard University Press *1960*-ல் பதிப்பித்தது.

Williams, John H., எழுதிய 'The Theory of International Trade Reconsidered' என்னும் கட்டுரை. *1929*-ல் வெளியான 'Economic Journal' என்னும் வெளியீட்டில் எழுதப்பட்டது. 'Readings in the Theory of International Trade' என்னும் நூலில் இக் கட்டுரை அச்சிடப்பட்டுள்ளது. பன்னாட்டு வாணிபம்பற்றிய ஆய்வில் சிறந்ததோர் இடம் வகிக்கிறது இக் கட்டுரை; அவசியம் படிக்கவேண்டியது.

10. வாணிபத்தின் சில விளைவுகள்

முன் சுருக்கம்

பன்னாட்டு வாணிபமும் சிறப்புத் தேர்ச்சியும் எந்த அடிப்படைகளில் அமைகின்றன என்பதைப் பார்ப்பதற்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சி இதனுடன் முடிவடைகிறது. நாட்டிற்கு நாடு ஏற்படும் காரணிப் பேற்றின் வித்தியாசமும், குறிப்பிட்ட காலத்திலுள்ள பலவகை உற்பத்திமுறைகளுக்கேற்ப இக் காரணிகளைத் தொகுப்பதுந்தான் மிக முக்கியமான அடிப்படை என்பதை நாம் பார்த்தோம். இவ் விரண்டு அம்சங்களைமட்டும் கொண்டு பார்க்குமிடத்து, ஒவ்வொரு நாடும், தான் எந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கேற்ற காரணிப் பேற்றினைப் பெற்றுள்ளதோ, அவற்றில் சிறப்புத் தேர்ச்சி செய்யும் என்று கூறலாம். அதாவது, தான் ஏராளமாயும் மலிவாயும் கொண்டுள்ள காரணிகளை அதிகமாயும், போதாததாயுள்ள காரணிகளைக் குறைவாயும் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களில் அது சிறப்புத் தேர்ச்சி செய்யும். குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் இருக்கின்ற பல்வேறு செய்முறைகளில், அதாவது கனிப் பொருளை வெட்டி எடுப்பது முதற்கொண்டு முடிவுப் பொருளாகத் தயாரிக்கும்வரையுள்ள பல நிலைகளில், எல்லா செய்முறைகளையுமோ, அல்லது அவற்றில் ஏதாவது ஓரிரண்டைமட்டுமோ அந் நாட்டின் ஏற்றுமதித் தொழில்கள் மேற்கொள்ளலாம். எந்த உற்பத்திப் பணிகளை (productive services) ஒரு நாடு மிகச் சிக்கனமாக மேற்கொள்ளக்கூடும் என்பதை நிர்ணயிக்கவேண்டுமாயின், அந் நாடு கொண்டுள்ள காரணிகளின் தரத்தையும் நாம் கவனிக்கவேண்டும். காரணிகளின் உயர்ந்த ரகம், மட்டமான ரகமென்று இருக்கும்போது, அது அந் நாடு கொண்டுள்ள காரணிகளின் விலையை பாதிக்கக்கூடும். உற்பத்தி நடைபெறும் சமூகச் சூழ்நிலைகளைக்கொண்டு இதை விளக்க முடியும் என்று பார்த்தோம்.

ஒரு நாடு ஏற்றுமதி செய்யும் பொருள்களில் அந் நாட்டைப் போன்று காரணிப் பேற்றினைக்கொண்ட பிற நாடுகளோ, அல்லது அப் பொருள்களை வேறு முறைகளில் உற்பத்தி செய்வதற் கேற்ற காரணிகளைக்கொண்டுள்ள நாடுகளோ இந் நாட்டுடன் பெரும்பாலும் போட்டியிடலாம். எனவே, தனது காரணிப் பேற்றிற்கும் அவற்றின் விலை நிலவரங்களுக்கும் ஏற்ற உற்பத்திப் பணிகளை மேற்கொண்டு, மலிவாக உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைத்தான் அந் நாடு ஏற்றுமதி செய்யும். தல அங்காடி களுக்குத் தேவைப்படும் பண்டங்கள், விரைவில் அழிந்துபோகக் கூடிய பண்டங்கள், ஆள்சார் பணிகள், இன்னும் இது போன்றவை மட்டும்தான் இதற்கு விதிவிலக்காகும். ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் வளர்ந்துசெல் செலவு ஏற்படு மாயின், அப் பொருளை ஓரளவு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடும்; பிற பொருள்களனைத்தும் இறக்குமதி செய்யப் படும்.

முக்கியமான சில பொருள்களைப் பொறுத்தவரை, போக்கு வரத்துச் செலவுகளால் இவ் ஆய்வு பாதிக்கப்படுகிறது. ஒரு நாடு ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விலைகளை இச் செலவு பாதிப் பதன்மூலம் அவற்றின் விற்பனை குறைந்துவிடுகிறது. அதனோடு, இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைக்கும், அப் பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கேற்படும் செலவிற்கும் உள்ள வித்தியாசத் தொகையைக் காட்டிலும் போக்குவரத்துச் செலவு அதிகமாயிருந்தால், அப் பொருள்களில் வாணிபமே நடைபெற முடியாதபடி செய்துவிடுகிறது. மேலும், மூலப் பொருளை உற்பத்தி செய்யும் தொழில்களோ அல்லது உணவுப் பண்டங்களைப் பக்குவப்படுத்தும் தொழில்களோ, தமக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்குமிடத்தில் அமைய வேண்டுமா அல்லது அப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் அங்காடிக்கருகில் அமையவேண்டுமா என்பதையும் இச் செலவு நிர்ணயிக்கலாம். முடிவுப் பொருள்களை அங்காடிக்கனுப்புவதற்கு ஏற்படும் செலவைக்காட்டிலும், அங்காடிக்கு மூலப் பொருள்களைக் கொண்டு வரும் செலவு அதிகமாயிருந்தால், அத் தொழில் மூலப் பொருள் கிடைக்குமிடத்தில் அமையும். இதற்கு நேர்மாறான நிலை இருந்தால் அது அங்காடிக்கருகில் அமையும்.

ஓரளவு சர்வாதீன வலிமையுள்ள பொருள்களின் விலைகள் போட்டி நிலையிலிருப்பதைவிட அதிகமாக உயர்த்தப்படும். போக்குவரத்துச் செலவு போன்று விலையை உயர்த்தும் வேறு எந்தக் காரணியைப் போலவே, இதுவும் வாணிபத்தின் அளவைக்

குறைக்க முற்படும். சர்வாதீனத்தின் வருமான விளைவுகளும் (income effects) இதே வழியில்தான் இயங்கும். வருமான விளைவுகள் விரிவானதாக இருக்கும்போது, வாணிப அளவு குறையும் என்பது உறுதி. அதேபோல, ஒரு பன்னாட்டுக் கார்ட்டெல் தனது அங்கத்தினர்களுக்குள் அங்காடிகளைப் பகிர்ந்து கொள்ளும்போது வாணிப அளவு நேரடியாகக் குறையலாம். எனினும், போட்டியின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்கென்று செய்யப்படும் ஒப்பந்தங்களைக் கொண்ட நிறைகுறைப் போட்டி நிலையை, பன்னாட்டு வாணிபத்தின் முக்கியத் தடையாகக் கருத வேண்டுமா என்பது கருத்து வேறுபாடு கொண்டது.[1]

ஒரு நாட்டின் ஏற்றுமதியில் என்னென்ன பொருள்கள் அடங்கியுள்ளன, உலக வாணிபம் இவ்வாறு அமைந்துள்ளதற்குக் காரணங்கள் யாவை, ஒரு தொழில் ஏன் அது இருக்கின்ற இடத்தில் இருக்கிறது, குறிப்பிட்டதொரு தொழிலால் ஒரு நாட்டிற்கு இலாபம் ஏற்படுமா என்பதையெல்லாம் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இத் தத்துவங்கள் நமக்கு உதவவேண்டும். இத் தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு அமைக்கப்படும் 'மாதிரியான'தொரு பன்னாட்டு வாணிபத்தில் அரசாங்கப் பண உதவி, இறக்குமதி வரி, வரிச் சலுகைகள், இன்னும் இதுபோன்ற காரியங்களுக்கு இடம் கிடையாது. எனினும், பொதுவானதும் விளக்கமானதுமான ஆய்வில் இவையனைத்தும் இடம்பெறுவதால், இவற்றையும் நாம் முழுமையாக ஆயவேண்டியுள்ளது.

பன்னாட்டு வாணிபத்தின் அடிப்படையான சக்திகளையும், அவ் வாணிபத்தின் இயல்பினைப்பற்றியும் இதுவரை நாம் கவனித்தோம். சிறப்புத் தேர்ச்சி பெற்ற சாதனங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பரிவர்த்தனை செய்வதுதான் இவ் வாணிபத்தின் முக்கியமான அம்சம் என்பதையும் நாம் பார்த்தோம். இப்போது இவ் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள மக்களை இது எவ்வாறு பாதிக்கிறது; இதனால் அவர்களுக்கு என்ன இலாபம் ஏற்படுகிறது; எப்படி ஏற்படுகிறது; பல்வேறு வருவாய் நிலையிலுள்ள மக்கள் இதனால் எவ்வாறு பலனடைகின்றனர்; இவ் வாணிபம் நடைபெறும் நாடுகளுக்கிடையே எவ்வகையான உறவுகள் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் ஆய்வோம். முதலாவது வாணிபத்தில் ஏற்படும் இலாபங்களைக் கவனிப்போம்.

[1] 'அமெரிக்காவின் உள்நாட்டுப் போட்டியிலும் அயல்நாட்டு வாணிபத்திலும் கார்ட்டெல்களைக் காட்டிலும் இறக்குமதி வரிதான் பன்மடங்கு தீங்குகளை விளைவித்துள்ளது' என்று மேசன் (Mason) கூறுகிறார். Edward S. Mason, 'Controlling World Trade,' பக்கம் 28. Published 1946 by McGraw-Hill Book Co., New York.

வாணிபத்தில் கிடைக்கும் இலாபம்

சிறப்புத் தேர்ச்சி என்றால் இன்னும் அதிக வருமானம் என்று பொருள்

வாணிபத்திலுள்ள இன்றியமையாத கூறுகளைக்கொண்டு பார்க்குமிடத்து, வாணிபம் மிக எளிமையானதென்பது புலனாகும். ஒரு பொருளை மற்றொரு பொருளுக்காகப் பரிவர்த்தனை செய்வது தான் வாணிபம். எனினும், தனக்கு வேண்டிய அனைத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்ளவேண்டிய அவசியமில்லாமல் செய்துள்ள சமூகக் கண்டுபிடிப்புகளில் இது முக்கியமான தொன்று. இவற்றையெல்லாம் வாணிபத்தின் வாயிலாகப் பெற முடியும் என்ற உறுதியுடன், ஒவ்வொருவரும் சிறப்புத் தேர்ச்சி செய்யவும், அதனால் தமது சமுதாயத்தின் மொத்த வருமானத்தை அதிகரிக்கவும் செய்கிறது.

இச் சிறப்புத் தேர்ச்சி பல்வேறு நிலைமைகளில் நடைபெறக் கூடும். இடைக்காலத்திலிருந்ததைப்போன்று பரம்பரைப் பழக்க வழக்கத்தால் அது ஒழுங்குபடுத்தப்படலாம்; மெர்க்கன்டலிஸ்டு களின் காலத்தில் இருந்ததைப்போன்று அரசால் கட்டுப்படுத்தப் படலாம்; அல்லது தனி நபர்களின் விருப்பத்திற்கேற்ப இயல் பாகவே வளர்வதாயிருக்கலாம். விலைவாசிகள் கட்டுப்படுத்தப் படாதமுறை இருப்பின், அதாவது உழைப்பாளிகளும் மூலதனமும் தங்குதடையின்றி இடம் பெயரவும், உற்பத்தியாளர்கள் ஆற்றல் மிக்க போட்டி நிலையிலுள்ளவர்களாகவும் இருக்கும் அமைப்பில், இது மிகச் சிறந்த பொருளாதாரப் பலன்களைக் கொடுக்கும் என்று நிரூபிக்க முடியும்.[2] இவ் அமைப்பில்தான் போட்டி நிறுவனங்கள்

[2] நிறை போட்டியும் இடப் பெயர்ச்சியும் கொண்ட எடுகோள், பண்டங்களை மட்டுமன்றி உற்பத்திக் காரணிகளையும் வாங்குவோரும் விற்போரும் தத்தமக்குள்ள பல்வேறு மாற்று வழிகளை முழுமையாக அறிந்திருப்பர் என்பதையும், விலை ஏற்றத் தாழ்வுகளுக்கேற்ப உடனடியாகவும் சீராகவும் இணக்கம் ஏற்படும் என்பதையும் குறிப்பிடுகிறது. இவை மிகத் தீவிரமான எடுகோள்களாகும். இவ் எடுகோள்கள் முற்றிலும் உண்மையாக இருக்கமுடியாதாகையால், நடைமுறைக்கேற்ப இவற்றின் முடிவுகளைத் திருத்தி அமைக்கவேண்டியுள்ளது என்பது தெளிவு; இருந்தபோதிலும், கருத்தியலாக இவ்வெடுகோள்களைக் கொள்வதால் பயனேற்படலாம். நடைமுறையி லுள்ள செயல்முறைகள் இவற்றிற்கு ஏறத்தாழ ஒத்ததாயிருக்க முற்படும்.

ஆனால், சோசலிச முறை திறனற்ற முறை என்று இவை சுட்டிக்காட்டுவதில்லை. அம் முறை திறன் மிக்கதாய் செயல்படவேண்டுமாயின், அதன் நிருவாகிகள் நிறை போட்டியிலுள்ள போட்டியாளர்களைப்போல் செயலாற்றவேண்டும்—அதாவது, ஒவ்வொரு காரணியின் இறுதிநிலை ஆக்கத்தின் மதிப்பும் அந்தந்த காரணியின் விலைக்குச் சமமாயிருக்கவேண்டுமென்ற விதியை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டும். உற்பத்தி அளவினை உச்சநிலைப்படுத்தவும், உற்பத்திச் செலவைக் குறைந்தபட்சமாக்க வும் வேண்டுமானால் இது அவசியம். இவ் விஷயத்திற்கு Oskar Lange & Fred M. Taylor அவர்கள் எழுதிய 'On The Economic Theory of Socialism' என்ற நூலைப் பார்க்க. (Edited by Bejamin E. Lippincott), University of Minnesota Press, 1938. அதனோடு, Abba P. Lerner அவர்களின் 'The Economics of Control' என்ற நூலையும் பார்க்க. Published 1944 by Macmillan, New York.

குறைந்தபட்ச விலையைப்பெறும் அதே சமயம் தம் தொழிலைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்கும்; அதனோடு, ஒவ்வொரு பண்டத்திற்கும் ஒரு விலைதான் எங்கும் நிலவும். மிகக் குறைந்த விலையில் பொருள்களை வாங்க முடிவதால், நுகர்வோர், தாம் செலவிடும் ஒவ்வொரு டாலர் பணத்திற்கும் அதே அளவு திருப்தியை அடையக்கூடிய வழியில் தம் வருமானத்தைச் செல விடுவர்; அப்போது ஒன்றில் செலவிடும் பணத்தைப் பிறிதொன் றுக்கு மாற்றிச் செலவு செய்தால் பயனேதுமிருக்காதாகையால், அவர்களுக்கு உயர்ந்தபட்ச திருப்தி ஏற்படும். பல்வேறு துறை களில் பயன்படுத்தப்பட்டபோதிலும், ஒவ்வொரு காரணியின் விலையும் எல்லாத் துறைகளிலுமே ஒரேமாதிரி இருக்குமாதலால், காரணிகளின் உற்பத்தி ஆக்கம் உச்சமாக இருக்கும். உதாரண மாக, தொழிலாளிகள் ஒரு தொழிலைக் காட்டிலும் பிறிதொன்றில் உயர்ந்த ஊதியம் பெறுவதாயிருந்தால், குறைந்த ஊதியம் தரும் தொழிலிலிருந்து உயர்ந்த ஊதியம் அளிக்கும் தொழிலுக்குச் செல்வர்; அப்போது உயர்ந்த ஊதியமளித்த தொழிலில் கூலி குறையவும், குறைந்த கூலி கொடுத்த தொழிலில் அது உயரவும் முற்படுமாதலால், தொழிலாளர்களின் பொதுவான ஊதிய நிலை உயர்ந்ததாயிருக்கும். மேலும், நுகர்வோரின் தேர்ந்து வாங்கும் உரிமையைக்கொண்டு பார்க்குமிடத்து, ஒவ்வொரு காரணியின் ஆக்கத்தையும் சமப்படுத்துவது என்பது, அக் காரணி ஒவ் வொன்றும் மிகச் சிறந்தமுறையில் பயன்படுத்தப்படும் என்பதைக் குறிப்பிடுகிறது. சுருக்கமாகக் கூறுவதாயின், கட்டுப்பாடில்லாத விலைவாசி முறை, ஒரு சமுதாயத்தின் சாதனங்களை மிகச் சிறந்த வழியில் பயன்படுத்த—அதாவது, உயர்ந்தபட்ச வருமானத்தைப் பெற—வழி செய்கிறது.

பன்னாட்டு வாணிபம் சிறப்புத் தேர்ச்சியை விரிவாக்குகிறது

நாட்டு எல்லைகளுக்கப்பால் வாணிபத்தை விரிவடையச் செய்வதுதான் பன்னாட்டு வாணிபம் எனப்படுவது. இதனால் சிறப்புத் தேர்ச்சியின் அளவும், அதிலிருந்து பெறக்கூடிய இலாபமும் விரிவடைகிறது. உள்நாட்டு வாணிபம் எவ்வாறு தனி நபர்களின் திறச்சார்பைப் (aptitude) பயன்கொண்டு நன்மை பெறச் செய்கிறதோ, அதேபோன்றுதான் பன்னாட்டு வாணிபம் பிற நாடுகளின் தனிச் சிறப்பை ஒரு நாடு பயன்கொள்ளவும் தனது சொந்த உற்பத்திச் சாதனங்களை முன்பைவிடச் சிக்கன மாயும் திறனுடனும் பயன்படுத்தவும் வழி செய்கிறது. ஒரு நாடு நிலவளமற்றதாய் இருக்கும் காரணத்தால் நிலத்தில் விளையும் பண்டங்கள் கிராக்கியாயும் போதிய அளவு இல்லாததாயும் இருக்கும்போது, தான் கொண்டுள்ள உழைப்பாளிகள் வேலை

செய்வதற்கென்று நிலத்தை இறக்குமதி செய்ய முடியாதெனினும், நிலவளமிக்க நாடுகளிலிருந்து அப் பண்டங்களை இறக்குமதி செய்ய முடிகிறது; அதே சமயம், நிலவள மிக்க நாட்டில் போதிய அளவு மூலதனமும் உழைப்பாளிகளும் இல்லாத காரணத்தால், அவற்றைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் பண்டங்களைத் தனது பண்டங்களுக்குப் பரிவர்த்தனையாகப் பெருமளவில் பெறமுடிகிறது. இவ்வாறு, ஒவ்வொரு நாடும் தான் அதிகச் செலவில் உற்பத்தி செய்திருக்கக்கூடிய பண்டங்களை மலிவாகப் பெறுவதற்கு வாணிபம் வழி செய்வதால், ஒவ்வொரு நாட்டிற்கும் இதனால் இலாபம் ஏற்படுகிறது.

நுகர்வோராயும், உற்பத்திக் காரணிகளின் சொந்தக்காரர் களாயுமுள்ள உலக மக்களின் பொதுக் கண்ணோட்டத்திலும், குறிப்பிட்டதொரு நாட்டு மக்களின் கண்ணோட்டத்திலுமிருந்து பார்க்குமிடத்து, பன்னாட்டு வாணிபம் முன்பைவிடச் சிறந்த முறையில் சாதனங்கள் பயன்படுமாறு செய்கிறது என்று விளங்கும். சில நாடுகள் வெப்பமண்டல விவசாயப் பண்டங்களைக் குறைந்த செலவில் விளைவிப்பதற்கேற்ற காரணிப்பேற்றைப் பெற்றுள்ளன; வேறு சில நாடுகளோ இறைச்சியையும் உணவுத் தானியங் களையும் மலிவாக உற்பத்தி செய்யக்கூடிய சிறப்பு நிலையைக் கொண்டுள்ளன; இன்னும் சில நாடுகள் சிலவகை ஆலைப் பொருள்களைச் சிக்கனமாக உற்பத்தி செய்யக்கூடிய வசதிகளை அடைந்துள்ளன. எனவே, பன்னாட்டு வாணிபமும் சிறப்புத் தேர்ச்சியும் இருப்பதால் ஒவ்வொரு நாடும் பல்வேறு பொருள்களை மலிவாகப் பெற முடிகிறது. இதனால் நுகர்வோர் தம் வருமானத் தைக்கொண்டு முன்பைவிட அதிகமாக வாங்க முடிவதால், அவர் களின் திருப்தி முன்பைவிட அதிகரிப்பதற்குச் சாத்தியமாகிறது.

தம் சொந்தத் தேவைக்காகப் பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதில் சிக்கனமற்ற வழியில் பயன்படுத்தப்பட இருந்த காரணிகளை அவற்றின் இறுதிநிலை உற்பத்தி ஆக்கம் முன்பைவிட அதிகமாயிருக்கக்கூடிய திறன்மிக்க வேறு வழிகளில் இப்போது பயன்படுத்த முடிகிறது. உதாரணமாக, பிரிட்டன் தன்னிடமுள்ள சிறிதளவு நிலத்தில் உழைப்பாளிகளைப் பெருவாரி யாகப் பயன்படுத்தி, அதிகச் செலவில் கோதுமை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, முதற்கருவிப் பொருள்களோடு அவர்களைப் பயன்கொண்டு, தொழிற்சாலைப் பொருள்களை மலிவாக உற்பத்தி செய்ய முடிகிறது. கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள சமவெளிகள் தரிசாகக் கிடப்பதற்குப் பதிலாக, பிரிட்டனுக்குத்

தேவையான கோதுமையைப் பயிர் செய்யப் பயன்படுத்தப் பெறுகின்றன.

இவ்வாருக, கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலுமுள்ள விஸ்தாரமான நிலப் பகுதியை பிரிட்டன் மறைமுகமாகப் பயன் கொள்ளும் அதே சமயம், பிரிட்டனிலுள்ள ஏராளமான மூலதனத்தையும் உழைப்பாளிகளையும் கனடாவும் ஆஸ்திரேலியாவும் மறைமுகமாகப் பயன்கொள்வது குறிப்பிடத்தக்கது. அதே போல, அதிக மூலதனம் தேவைப்படும் பண்டங்களை உற்பத்தி செய்யப் போதுமான மூலதனம் இல்லாத இந்தியாவும் இதர நாடுகளும், அப் பண்டங்களை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதன் வழியாக அந் நாட்டிலுள்ள ஏராளமான மூலதனத்தைப் பயன்படுத்துகின்றன; அதே சமயம் அமெரிக்கா, போதிய அளவு உழைப்பாளிகள் இல்லாததன் குறையை, உழைப்பு அதிகம் தேவைப்படும் உற்பத்திப் பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதன்மூலமாக நிறைவு செய்துகொள்கிறது.

இலாபத்தை அளவிடல்

பன்னாட்டு வாணிபத்தால் ஒரு நாடு பெறும் புலனுன இலாபத்தைக் கீழ்வருமாறு விளக்கலாம்: அதிக சாதனச் செலவில், சிக்கனமற்ற வழியில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்திருக்கவேண்டிய பொருள்களை இறக்குமதியின்மூலம் பிற நாடுகளிலிருந்து மலிவாகப் பெற முடிகிறது. குறிப்பிட்டதோர் அளவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்வதாயிருந்தால், எவ்வளவு சாதனங்களைப் பயன்படுத்துவோமோ, அதைவிடக் குறைந்த அளவு சாதனங்களைக்கொண்டு ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்து, அவற்றிற்கு ஈடாக அதே அளவுப் பொருள்களை இறக்குமதி செய்து பெற முடியும். அல்லது இறக்குமதியாகும் பொருள்களை நாமே உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்த வேண்டிய சாதனங்களை ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தினுல், அதிக அளவு இறக்குமதிப் பொருள்களைப் பெற முடியும்.

வெளி நாட்டிலிருந்து மலிவான விலையில் இறக்குமதி செய்யாமல், தானே அவற்றை உற்பத்தி செய்வதற்கு ஒரு நாட்டிற்கு என்ன செலவாகியிருக்கும் என்பதை துல்லியமாக அளவிட முடிந்தாலுங்கூட, வாணிபத்தினுல் அந் நாட்டிற்குக் கிடைக்கும் இலாபத்தைக் கணக்கிட மிகவும் கஷ்டப்பட வேண்டும்.

வாணிப மாற்று வீதம்

குறிப்பிட்டதொரு காலத்தில் வாணிபத்தால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் மொத்த இலாபத்தைக் கணக்கிடாமல், அந் நாட்டின் வாணிபப் போக்கினை அளவிடுவதற்குப் பொதுவாகக் கையாளப் படும் வழி, அந் நாட்டின் பண்டமாற்று வீதத்தில் ஏற்படும் மாறுதல்களை அளவிடுவதாகும். ஒரு நாடு தனது ஏற்றுமதிப் பொருள்களுக்குப் பெறும் விலைகளுக்கும், அது இறக்குமதி செய்யும் பொருள்களுக்குச் செலுத்தும் விலைகளுக்கும் உள்ள தொடர்பினை இவை அளவிடுகின்றன. குறிப்பிட்டதோர் ஆதார ஆண்டில் (base year) நிலவிய விலைகளோடு ஒப்பிடும்போது அதன் ஏற்றுமதி விலைகள் உயர்ந்தாலோ அல்லது இறக்குமதி விலைகள் தாழ்ந்தாலோ, அதன் வாணிப வீதம் அபிவிருத்தி அடைகின்றது என்று சொல்வர். மாறாக, ஏற்றுமதி விலைகள் தாழ்ந்தாலோ அல்லது இறக்குமதி விலைகள் உயர்ந்தாலோ அதன் வாணிப வீதம் நலிந்துவிடுகிறது என்பர்.

இவ்வாறு ஒப்பிடுவதற்குக் குறியீட்டெண்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. மொத்த வாணிபத்தில் ஒவ்வொரு பண்டமும் எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ, அதற்கேற்றவாறு எடை (weight) அளித்து, ஏற்றுமதி விலைகளின் சராசரியை ஆதார ஆண்டிற்குக் கணக்கிடவேண்டும். பின்னர் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய ஆண்டிற்கு இதே மாதிரி ஒரு சராசரி கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்தால், ஏற்றுமதி விலைகளின் சராசரி மாறுதல் தெரியும். இதேபோல, இறக்குமதிகளுக்கும் சராசரி விலைகள் கணக்கிடப்படுகின்றன. ஏற்றுமதி விலை மாறுதலை இறக்குமதி விலை மாறுதலால் வகுத்து வரும் வீதத்தைக்கொண்டு அந் நாட்டின் வாணிப வீதம் அளவிடப்படுகிறது.

$$T_c = \frac{P_{x1}}{P_{x0}} \bigg/ \frac{P_{m1}}{P_{m0}}$$

இதில் T_c வாணிபப் பண்டமாற்று வீதத்தைக் குறிக்கும்; கீழ் எழுத்துகளில் x ஏற்றுமதியையும், m இறக்குமதியையும், 1 நாம் அளவிட விரும்பும் ஆண்டையும், 0 ஆதார ஆண்டையும் குறிப்பிடுகின்றன.

உதாரணமாக, 1937ஐ ஆதார ஆண்டாகக்கொண்டு, அவ் ஆண்டில் பிரிட்டனின் ஏற்றுமதி இறக்குமதி விலைகள் 100 என்று வைத்துக்கொள்வோம். 1956-ல் அதன் ஏற்றுமதி விலைகளின் குறியீட்டெண் 339-க்கும், இறக்குமதி விலைகளின்

குறியீட்டெண் 385-க்கும் உயர்ந்துவிட்டதாகக் கொண்டால், அதன் வாணிப மாற்று வீதம் பின்வருமாறு மாறிவிட்ட தெனலாம்.

$$T_c = \frac{339}{100} \Big/ \frac{385}{100} = 88$$

பிரிட்டனின் ஏற்றுமதி விலைகளைக் காட்டிலும், அதன் இறக்குமதி விலைகள் உயர்ந்துவிட்டதால் அதன் வாணிப வீதம், 1937ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது 12 சதவீதம் மோசமாகி விட்டது. இதன் பொருளை இரண்டு வழிகளில் கூறலாம்: ஒன்று, குறிப்பிட்டதோர் அளவு ஏற்றுமதிக்குப் பரிவர்த்தனையாக, பிரிட்டன் 12 சதவீதம் குறைவாகத்தான் இறக்குமதி செய்ய முடியும். அல்லது குறிப்பிட்டதோர் அளவு இறக்குமதியைப் பெறுவதற்கு பிரிட்டன் 13.6 சதவீதம் அதிகமாக ஏற்றுமதி செய்யவேண்டும்.

வாணிப வீதத்தின் மாறுதல்களைக்கொண்டு வாணிபத்தி லிருந்து கிடைக்கும் இலாபம் எப்படி மாறுகிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், கூடவே ஏற்படும் இதர வகை மாறுதல்களைப் பார்த்து, அதற்கேற்றவாறு நமது முடிவைத் திருத்தி அமைக்கவேண்டும். வாணிப வீதத்தைத் திருத்தும் அம்சங்கள் மூன்று உள்ளன. அவை: புள்ளி விவரங்களின் இயல்பில் ஏற்படும் மாறுதல்கள், வாணிப அளவில் ஏற்படும் மாறுதல்கள், உற்பத்தித் திறனில் ஏற்படும் மாறுதல்கள்.

1. ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் குறியீட்டெண்கள், வாணிபம் செய்யும் பொருள்களின் தரத்தில் ஏற்படும் வேறுபாடு களையோ, அல்லது வாணிபம் செய்யப்படும் பொருள்களில் ஏற்படும் மாறுதல்களைப்பற்றியோ ஒன்றும் குறிப்பிடுவதில்லை. இதற்கான திருத்தத்தைச் செய்தாலொழிய, நாம் கணக்கிட்ட வாணிப வீதக் குறியீட்டெண், குறிப்பிட்டதோர் ஆதார ஆண்டில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் தராதர விலைகளை மட்டுமே குறிப்பிடுவதாகிறது. உண்மையில் பொருள் களின் தரத்தில் பெரு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன; பல பொருள்கள் தொடர்ச்சியாக வாணிபத்தில் புதியன புதியனவாகச் சேருகின்றன.

நாம் முன்பு ஆய்ந்ததுபோல், மூலப்பொருள் உற்பத்தி நாடுகளின் வாணிப வீத ஆய்வைப் பொறுத்தவரை, இது மிக முக்கியமான காரியமாகும். உதாரணமாக, ஐக்கிய நாடுகளின்

வெளியீடொன்று காட்டுவதுபோல், இவ்வித விலைக் குறியீட்டெண்களின்படி 1876-80-ல் இருந்து 1936-38 வரை மூலப் பொருள்களுக்கும் முடிவுப் பொருள்களுக்குமான வாணிப வீதம் கணிசமான அளவு (100-ல் இருந்து 64-க்கு) மோசமாகிவிட்டது. இதன்படி குறிப்பிட்ட அளவு மூலப் பொருள்களைக்கொண்டு 1876-80-ல் வாங்கிய முடிவுப் பொருள் அளவைக் காட்டிலும் 1936-38-ல் 64 சதவீதம் அதிகமாக வாங்க முடியும் என்று கூறப்படுகிறது.[3]

வேறு எந்தக் குறைகளையும் ஆராயாமல் இப் புள்ளி விவர முடிவுகளிலுள்ள குறைகளை மட்டும் ஆய்வதாக இருந்தால், 1875-ல் ஏற்றுமதி செய்த அதே மூலப்பொருள்கள்தாம் 1938-லும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது உண்மை என்றாலுங்கூட, இறக்குமதியான தொழிற்சாலைப் பொருள்களின் தரம் வெகுவாக உயர்ந்துள்ளது என்பதை இவை புறக்கணித்துவிடுகின்றன.[4] இன்றுள்ள நைலான் காலுறைகளுக்கும் 1875ஆம் ஆண்டிலிருந்த பருத்தித் துணி காலுறைகளுக்கும், அல்லது இன்றுள்ள மெர்க்குரி விளக்கிற்கும் அன்றிருந்த எண்ணெய் விளக்கிற்கும் எவ்வளவு வித்தியாசம் எனச் சிந்தித்துப் பாருங்கள். அதனோடு, இன்றுள்ள கார்கள், டெலிவிஷன் பெட்டி, ரேடியோ போன்ற பல பண்டங்கள் 1875-ல் கிடையாதே. எனவே, இவ்வளவு நீண்ட கால இடைவெளியில் இப் பண்டங்களுக்கெல்லாம் எடைபோட இயலாமல் போய்விடுகிறது.

ஏற்றுமதி, இறக்குமதியில் அடங்கியுள்ள பொருள்களும், அப் பொருள்களின் தரமும் இடைவிடாமல் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனவே, பண்ட வாணிப மாற்றுவீதத்தின் குறியீட்டெண்கள் மாறுவதைக்கொண்டு எடுக்கப்படும் முடிவுகள் குறுகிய காலத்திற்கே ஏற்றவையாக இருக்கவேண்டும். நீண்ட காலத்தில்—உதாரணமாக, பத்தாண்டுகளுக்குமேல்—வாணிப மாற்று வீத மாறுதல்களைப்பற்றிய முடிவுகளை நாம் பெரும்பாலும் திருத்தி அமைக்கவேண்டியதிருக்கும்.

[3] 'United Nations' Economic Commission for Latin America, 'The Economic Development of Latin America and Its Principal Problems' (E/CN. 12/89/Rev. 1. 1950), Table I.

[4] இதற்கு ஆதாரமான ஆய்விற்குப் பார்க்கவேண்டிய நூல்கள் வருமாறு: J. Viner, 'International Trade and Economic Development,' பக்கங்கள் 143–144, Published 1952 by the Free Press, Glencoe, Ill; P. T. Ellsworth, 'The Terms of Trade Between Primary Producing and Industrial Countries,' Inter-American Economic Affairs, X (Summer, 1956); Theodore Morgan, 'The Long-Run Terms of Trade Between Agriculture and Manufacturing', Economic Development and Cultural Change (October, 1959).

2. மேற்கூறிய திருத்தத்திற்குட்பட்டதாகக்கொண்டு, வாணிப வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியை ஆய்ந்தால், அது குறிப்பிட்டதோர் அளவு ஏற்றுமதியைக்கொண்டு முன்பைக் காட்டிலும் குறைந்த அளவே இறக்குமதி செய்ய முடியும் என்பதைக் குறிப்பிடும். ஆனால், அதே சமயத்தில் ஏற்றுமதிப் பொருள்களின் விலை தாழ்ந்துவிட்ட காரணத்தால் ஏற்றுமதியின் அளவு அதிகரித்துவிட்டதாகக் கொள்வோம். அப்போது ஏற்றுமதிப் பொருள்களில் மோசமான வாணிப நிலை இருந்தாலும் கூட, ஏற்றுமதி நாட்டின் 'இறக்குமதித் திறன்' மாறாமல் அப்படியே இருக்கலாம் அல்லது விருத்தியும் அடையலாம்.

வாணிபத்தின் அளவில் இத்தகைய மாறுதல்களை ஒரு வாணிப வருமான மாற்று வீதத்தின் (income terms of trade) குறியீட்டெண்ணால் அளக்கலாம். ஏற்றுமதி அளவில் ஏற்படும் மாறுதலின் குறியீட்டெண்ணால் வாணிப மாற்று வீதத்தைப் பெருக்கினால், இந்தக் குறியீட்டெண் கிடைக்கும்: $T_y = T_c (Q_{x_1}/Q_{xo})$. உதாரணமாக, 1950-க்கும் 1960-க்குமிடையே கொலம்பியாவின் வாணிபப் பண்டமாற்று வீதம் 100-ல் இருந்து 91-க்குக் குறைந்தது. ஆனால், அதன் ஏற்றுமதி அளவு 100-ல் இருந்து 128-க்கு உயர்ந்தது. அதன் ஏற்றுமதி அளவு மாறாமல் 1950-ல் இருந்த அதே அளவு இருந்திருக்குமானால், அவற்றைக்கொண்டு 1950-ல் செய்த இறக்குமதியைக் காட்டிலும் 9 சதவீதம் குறைவாகத்தான் இறக்குமதி செய்திருக்க முடியும். மாறாக, ஏற்றுமதி அளவு அதிகரித்ததன் விளைவாக அந் நாடு 1950-ல் இறக்குமதி செய்த அளவைக்காட்டிலும் 17 சதவீதம் அதிகமாக இறக்குமதி செய்ய முடிந்தது ($91 \times 128/100 = 117$). ஏற்றுமதி செய்த ஒவ்வோர் அலகிற்கும் முன்பைவிடக் குறைந்த அளவுதான் இறக்குமதி செய்யக்கூடும் என்று இருந்தபோதிலும், அந் நாட்டின் இறக்குமதித் திறன் அதிகரித்ததே இதற்குக் காரணம். வாணிப வருமான மாற்றுவீதம், வாணிபத்திலிருந்து இலாபம் கிடைத்ததா அல்லது நஷ்டம் ஏற்பட்டதா என்று ஒன்றும் உணர்த்துவதில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும், ஒரு நாடு தனது ஏற்றுமதியின்மூலம் இறக்குமதித் திறனை அதிகரிக்கின்றதா அல்லது குறைக்கின்றதா என்பதை அது புலப்படுத்துகிறது. இதுவும் மிக முக்கியமானதாக இருக்கலாம்.

3. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் திறனில் ஏற்படும் மாறுதல் வாணிப வீதத்தை ஓரளவோ அல்லது முழுவதுமோ மாற்றிவிடக்கூடும். உதாரணமாக, ஒரு நாட்டின் இறக்குமதி வரிகளின் சராசரி அளவு மாறாமல் அப்படியே இருப்ப

தாகவும், அதே சமயம் அதன் உற்பத்தித் திறன் அதிகரித்துவிட்ட காரணத்தால் அதன் ஏற்றுமதிச் செலவும் விலையும் 10 சதவீதம் தாழ்ந்துவிடுவதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்வாறுயின், வாணிப மாற்றுவீதக் குறியீட்டெண், செலவில் குறைந்துள்ள வீதத்தளவு அந் நாட்டிற்கு மோசமாகிவிட்டதாகக் குறிப்பிடும். ஆனல், உண்மையில் அந் நாட்டின் வாணிப நிலை மோசமாக இருக்காது. எவ்வாறெனில், குறிப்பிட்ட அளவு ஏற்றுமதியைக் கொண்டு, அந் நாடு 10 சதவீதம் குறைந்த அளவே இறக்குமதி செய்ய முடியுமெனினும், இறக்குமதி செய்வதற்கு வேண்டிய ஏற்றுமதிப் பொருளை, அதற்கு ஈடான குறைந்த அளவு சாதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்ய முடிகிறது. இறக்குமதியின் உண்மைச் செலவு, அது பயன்படுத்திய சாதனங்களைக் கொண்டு அளவிடும்போது, மாருமல் அப்படியே இருக்கிறது.

தனிக் காரணி வாணிப மாற்று வீதத்தின் (single factoral terms of trade) குறியீட்டெண்ணைக் கொண்டு, உற்பத்தித் திறனில் ஏற்படும் இவ்வகை மாறுதல்களை அளவிடக்கூடும். இதற்கு, ஏற்றுமதித் தொழில்களின் உற்பத்தித் திறனில் ஏற்படும் புலனுன மாறுதலின் குறியீட்டெண்ணுல் வாணிப வீதத்தைப் பெருக்கினுல் போதும்: $T = T_c (R_1/R_2)$. ஆனல், உற்பத்தித் திறனின் குறியீட்டெண்ணைப் புனைவதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைப் பெறுவது கடினமாகையால், வாணிப மாற்று வீதத்தில் ஏற்படும் மாறுதல்களை அறிய இவ்வளவீட்டு முறையைப் பயன்படுத்துவது வரையறுக்கப்படுகிறது. இதற்கு ஏறக்குறைய உண்மைக்குப் பொருத்தமான அளவீடுகளைத்தான் பயன்படுத்த முடியும். அவை வெறும் 'யூக மதிப்பீடுகளேயன்றி' (guesstimates) உண்மை விவரங்கள் அல்ல. இருந்தாலும், இந்த உண்மை முக்கியமான தாகையால் அதை நாம் புறக்கணிக்கக்கூடாது.[5]

வெவ்வேறு உற்பத்திச் செலவுகள்

பண்டங்களை உற்பத்தி செய்து அளிப்பதில், வளர்ந்துசெல் செலவு, குறைந்துசெல் செலவு, அல்லது மாருச் செலவு நிலைமைகள் ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். வாணிபத்தில் கிடைக்கும் இலாபம், எவ் வழியிலாவது இந் நிலைமைகளில் ஏதாவ

[5] வாணிப வீதம்பற்றிய முழு ஆய்விற்கும், அதில் ஏற்படும் மாறுதல்களை அளவிடுவதற்குரிய இதர வழிவகைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளக் கீழ்வரும் நூல்கள் துணை செய்யும். J. Viner, 'Studies in the Theory of International Trade,' பக்கங்கள் 558–70. Published 1937 by Harper & Brothers, New York; Gerald M. Meier, 'International Trade and Development,' அதிகாரம் 3. Published 1963 by Harper & Row, New York.

தொன்றைச் சார்ந்துள்ளதா? இறக்குமதிப் பொருள்கள் மாறுச் செலவிலோ அல்லது குறைந்துசெல் செலவிலோ உற்பத்தி செய்யப்படுமானால், இறக்குமதி நாட்டில் இவற்றின் உற்பத்தி நின்றுவிடும். ஆனல், வளர்ந்துசெல் செலவு நிலைமை இருந்தால், உள் நாட்டிலே ஒரு பகுதி உற்பத்தி செய்யப்படலாம். அப்போது எந்த அளவில் இறக்குமதியின் இறுதிநிலைச் செலவு, உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய இறுதிநிலைச் செலவிற்குச் சமமாகிறதோ, அந்த அளவிற்கு இறக்குமதி கட்டுப்படுத்தப்படும். இவ்விரு இறுதிநிலைச் செலவு எல்லைகளுக்கும் இடையில் இலாபம் இருந்துகொண்டே இருக்கும்.

உதாரணமாக, ஹாலந்து நாடு, தனக்குத் தேவையான கோதுமையில் ஒரு பகுதியைத் தானே உற்பத்தி செய்தபோதிலும், பிறிதொரு பகுதியை இறக்குமதி செய்கிறது. கோதுமை, ரை, இன்னும் இதர உணவுத் தானியங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாத நிலையில் அந் நாடு இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது இவற்றின் இறக்குமதியை ஈடு செய்வதற்கென்று உற்பத்தி செய்யப்படும் இறக்குமதிப் பொருள்களில் பயன்படுத்தப்படும் சாதனங்களைப் பெயர்த்தெடுத்து, மிகக் குறைவாயுள்ள சாகுபடி நிலத்தில் அவற்றைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இதனல், இறுதிநிலைச் செலவு வெகுவாக உயரும்; அதனேடு, முன்பைவிட அதிகமாக உற்பத்தி செய்யப் படக்கூடிய உணவுத் தானிய அளவு, இப்போது அந் நாடு இறக்குமதி செய்யும் அளவைவிடக் குறைவாகத்தானிருக்கும்.

அவ்வாருனல், ஏற்றுமதி செய்யும் பொருள்களையும் வளர்ந்து செல் செலவில் உற்பத்தி செய்தால் என்ன? அவ்வாறு பன்னாட்டு வாணிபம் செய்யாது நின்றுவிட்டால், இப் பொருள்களை உள் நாட்டிற்குத் தேவையான அளவிற்குமட்டும் உற்பத்தி செய்ய வேண்டியிருந்தாலும், அதன் இறுதிநிலைச் செலவு பெருமளவு குறைந்துவிடும். உயர்ந்த விலையுள்ள ஏற்றுமதிப் பொருள்களினல் ஏற்படும் நஷ்டம், குறைந்த விலையுள்ள இறக்குமதிப் பொருளி லிருந்து கிடைக்கும் இலாபத்தை பாதிக்கலாமன்ருே ?

'பாதிக்காது' என்பதுதான் இதற்குரிய விடை. ஏனெனில், ஒரு நாடு எக் காரணியைப் பெருமளவில் பெற்றுள்ளதோ, அக் காரணியை அதிகமாகக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைத்தான் ஏற்றுமதி செய்கின்றது என்பதையும்,

போதாத அளவுள்ள காரணி அதிகம் பயன்படுத்தப்படும் பொருள்களைத்தான் இறக்குமதி செய்கிறதென்பதையும் நினைவில் கொள்ளவும். இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதென்றால், பற்றாக்குறையாக உள்ள காரணிக்குத்தான் தேவை அதிகரிக்கும்; அப்போது அதன் செலவு மிக உயர்வாகிவிடும். இறக்குமதி செய்வதற்கென்று ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்வது, ஏராளமாயுள்ள காரணிகளின் தேவையைத்தான் அதிகரிக்கும்; எனவே, உற்பத்திச் செலவு அவ்வளவாக உயராது. இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதைக்காட்டிலும், ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்வதில்தான் சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும்.

காரணி விலைகளின்மீது வாணிப விளைவுகள்

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள வணிகர்கள், நிறுவனங்கள், விவசாயிகள் தம் மூலதனத்திற்கும் சக்திக்கும் ஏற்ப, இலாபகரமான தொழிலைக் கண்டுபிடிப்பதன் வழியாகப் பலவகைப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியை மேற்கொள்கின்றனர். இவற்றில் நல்ல தீர்மானமான முடிவிற்கு வருமுன், தம் தொழிலில் எவ்விதமான போட்டியைச் சமாளிக்கவேண்டியிருக்கும், தம் தொழிலுக்குவேண்டிய சாதனங்களின் செலவு என்ன ஆகும்; தம் தொழிலுக்குத் தேவையான உழைப்பாளிகள் கிடைப்பரா, அவர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கவேண்டியிருக்கும், போதுமான அளவு மூலதனம் கிடைக்குமா? அதற்கு என்ன செலவாகும், தொழிலுக்கு உகந்த நிலம் இருக்கிறதா, அதற்கென்ன செலவு செய்யவேண்டியிருக்கும் என்பதையெல்லாம் தீர்க்கமாக அவர்கள் ஆய்ந்து பார்க்கின்றனர். இவ்வாறாக, ஒரு பொருளை உற்பத்திசெய்வதா வேண்டாவா என்ற அடிப்படையான முடிவைப் பல்வேறு பொருளாதார அமைப்புகளிலுள்ள தேவை நிலை, காரணிகளின் தராதர அளிப்பு நிலை, இருக்கின்ற பலவகை மாற்றுவழி உற்பத்தி முறைகள், அளவுச் சிக்கனங்கள், போக்குவரத்துச் செலவுகள் ஆகிய சக்திகள் நிர்ணயிக்கின்றன. இவ்வாறு, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தனி நபர்கள் இவ்வித சக்திகளை ஆதாரமாகக்கொண்டு, தொழில் நடத்த எடுக்கும் முடிவுதான் பல்வேறு தொழில்கள் தோன்றக் காரணமாகின்றது. இவர்களில் சிலர் இறக்குமதித் தீர்வையால் பாதுகாக்கப்பட்ட உள்நாட்டு அங்காடிக்கென்று உற்பத்தி செய்வர்; ஏனையோர், எல்லா நாடுகளிலும் விற்பனை செய்வதற்காக உற்பத்தி செய்வர்.

வாணிபப் பொருள்களின் விலைகள்

பன்னாட்டு வாணிபத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் எல்லா இடங்களிலும் ஒரே விலையில்தான் விற்பனையாகின்றன. எனவே, அங்காடிகளுக்கேற்ப, சர்வாதீனம் விலை பேதங் காட்டலாமெனினும், போக்குவரத்துச் செலவுகளையும், சுங்கவரி போன்ற இன்னும் இதர செலவுகளையும் இவ் விலை உள்ளடக்கும். வேறுவிதமாகக் கூறின், விலைகளைச் சமப்படுத்துவதுதான் பன்னாட்டு வாணிபத்தின் விளைவு. இவ் வாணிபம் இல்லாவிட்டால் அவ் விலை நாட்டிற்கு நாடு கணிசமான அளவு மாறுபடும் என்பது மறுக்க முடியாததோர் உண்மை.

காரணி விலைச் சமன்பாடு

பன்னாட்டு வாணிபம், வாணிபம் செய்யப்படும் பொருள்களின் விலைகளைமட்டும் சமப்படுத்த முற்படுவதில்லை; அப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குவேண்டிய காரணி விலைகளையும் ஓரளவு சமப்படுத்தும் சக்திகொண்டது. எவ்வாறெனில், ஒரு நாடு மலிவான காரணியைக்கொண்டு செய்யப்படும் பொருள்களில் சிறப்புத் தேர்ச்சி செய்கிறதென்றால், அந் நாட்டில் ஏராளமாயுள்ள அக் காரணியில் மட்டுமன்றி, இன்னும் இதர நாடுகளிலுமுள்ள அக் காரணியின் பயனிலும் உலகத்தின் தேவை குவிகிறது என்று பொருள். அதேபோல், தன்னிடம் போதுமான அளவின்றி, கிராக்கியாயிருக்கும் காரணியில் இந் நாடு கொண்டுள்ள தேவை, அக் காரணி ஏராளமாயும் மலிவாயுமுள்ள இதர நாடுகளில் வெளிக்காட்டப்படுகிறது. இவ்வாறு தேவை ஒரு நாட்டிலிருந்து பிறிதொன்றுக்கு மாறுவதன் விளைவாக, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மலிவான காரணியின் விலை உயரவும், அதே சமயம் பற்றுக் குறையாக உள்ள காரணியின் விலை இறங்கவும் முற்படுகிறது. எனவே, காரணி விலைகள் எல்லா நாடுகளிலும் முன்பிருந்ததை விட ஒரே மட்டத்தில் நிலவ முற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, கனடாவில் கோதுமை விளைச்சலுக்கேற்ற நிலம் ஏராளமாயும் மலிவாயும் உள்ளது. இதனால், அந் நாட்டின் கோதுமை உற்பத்திச் செலவு குறைவதன்மூலம் பெருமளவில் கோதுமை ஏற்றுமதி செய்யவும் முடிகிறது. நிலத்தை அதிக மாகப் பயன்கொள்ளும் பொருளுக்காக அதிக மக்கள்தொகை கொண்டுள்ள நாடுகளின் தேவை கனடாவிலுள்ள நிலப் பயன் பாட்டில் (ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா, அமெரிக்காவிலுள்ள பிரெய்ரி பிரதேசங்கள் ஆகியவற்றின் நிலப் பயன்பாட்டிலும்) பிரதிபலிக்கிறது. இதன் விளைவாக, பிரிட்டனும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளும் மிகக் குறைந்த அளவில் தம்மிடமுள்ள

நிலத்திலேயே தமக்குத் தேவையான கோதுமை அனைத்தையும் உற்பத்தி செய்துகொள்ள வேண்டியிருந்தால் இருக்கக்கூடியதை விட, இப்போது நிலக் குத்தகை கனடாவில் உயர்கிறது; அதே சமயம் இந் நாடுகளில் குறைகிறது.

காரணி இடப்பெயர்ச்சியின் அவசியம்

காரணிகள் எவ்விதத் தடையுமின்றி நாடுவிட்டு நாடு இடம் பெயர்வதாய் இருந்தால்தான், உலகெங்கும் உள்ள காரணிகளின் விலைகள் சமமாக இருக்கும்; காரணிகளும் மிகச் சிறந்த உபயோகத்தில் பயன்படும். ஆனால், இயற்கை வளங்கள் இவ்வாறு இடம் பெயர்ந்து இவ் விளைவை உண்டுபண்ண முடியாது; எனினும், உழைப்பாளிகளையும் மூலதனத்தையும் தடையின்றி மறுபகிர்வு (redistribution) செய்வதன்வழியாக இவ் விளைவை ஒருவாறு ஏற்படுத்தலாம். அவ்வாறாயின், உலகிலுள்ள வளமற்ற பிரதேசங்கள் தரிசாகவே இருக்கும்; வளமிக்க பிரதேசங்களில் மட்டுமே உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும். அதோடு, பெரும்பாலும் எல்லாத் தொழில்களும் இப் பிரதேசங்களில்தான் காணப்படும்; மக்களும் இங்குதான் பெரும்பாலும் வசிப்பர். இவ்வாறு அமைந்த பிரதேசங்கள் பெருமளவில் சுயநிறைவுள்ளவையாக இருக்கும். தமக்குத் தேவையான கனிப் பொருள்கள், மரங்கள், மீன் போன்ற பண்டங்களை மட்டுமே, அவை உற்பத்தி செய்யப்படும் மிகக் குறைந்த பொருளாதார நடவடிக்கைகள்கொண்ட பிரதேசங்களிலிருந்து இறக்குமதி செய்யும். இவ்வாறு இருக்க முடியுமானால் சீனா, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களிலெல்லாம் ஏறக்குறைய ஒரேமாதிரியான திறன்கொண்ட உழைப்பாளிகளுக்கு ஒரேவிதமான ஊதியம்தான் இருக்கும்; வட்டிகூட உலகெங்கும் ஒரே வீதத்தில்தான் நிலவும்.

காரணி விலைச் சமன்பாட்டிலுள்ள தடைகள்

காரணிகளின் பன்னாட்டு இடப்பெயர்ச்சியும் பன்னாட்டு வாணிபமும் ஒரே வழியில்தான் இயங்குகின்றன. இரண்டும் காரணி விலைகளை எல்லா இடங்களிலும் சமப்படுத்த முற்படுகின்றன. ஆனால், இடப்பெயர்ச்சி செய்யக்கூடிய அளவிற்குப் பன்னாட்டு வாணிபம் காரணி விலைகளைச் சமப்படுத்த முடியாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, பண்டங்களின் விலைகள் சமமாவதை வாணிபத்தில் ஏற்படும் போக்குவரத்துச் செலவும் இதர செலவுகளும் தடைசெய்கின்றன. அவ்வாறு பண்டங்களின் விலைகள் சமமில்லாதபோது காரணி விலைகள்மட்டும் எவ்வாறு சமமாகக்கூடும்?

இரண்டாவது, காரணிப்பேற்றில் நாட்டிற்கு நாடு பெரிதும் வித்தியாசம் உள்ளது. இதனால், குறிப்பிட்ட வகைக் காரணிகள் ஏராளமாயுள்ள பிரதேசங்களில் அவற்றிற்கான வெளிநாட்டுத் தேவை சக்தி அதிகமாயில்லாததால், காரணிப்பேற்றின் வேறு பாட்டால் ஏற்படும் விளைவைச் சரிப்படுத்த முடிவதில்லை. உதாரணமாக, அதிக உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருள்களை ஏனைய நாடுகளனைத்தும் இந்தியாவிலும் சீனாவிலுமிருந்து வாங்குவதாகவே வைத்துக்கொண்டால்கூட, உழைப்பாளிகளின் ஊதியம் சமமாகக்கூடிய அளவிற்கு இந்தியாவிலும் சீனாவிலும் கூலி உயரவும், ஏனைய நாடுகளில் தாழவும் செய்யாது. ஏனெனில், போதிய அளவு உழைப்பாளிகள் இல்லாத நாடுகள், உழைப்பாளிகளுக்குக் கொண்டுள்ள தேவையில் ஓர் அளவை மட்டும்தான் ஏராளமான உழைப்பாளிகளுள்ள நாட்டிற்கு மாற்றும். காரணிகளுக்குள்ள தேவை ஓர் இணைப்புத் தேவையாக இருப்பதே இதற்குக் காரணம். இந் நாடுகள் தம்மிடமுள்ள மூலதனத்தையும் இயற்கை வளங்களையும் பயன்படுத்த வேண்டுமானால் அதற்கு உழைப்பாளிகள் அவசியம்.

மூன்றாவதாக, பொருள்களை உற்பத்தி செய்வதில் பல மாற்று வழி முறைகளைப் பயன்படுத்த முடியுமாதலால், ஒரு நாட்டில் ஏராளமாயுள்ள காரணிகளுக்கேற்படும் வெளிநாட்டுத் தேவை குறைகிறது. இதனால் காரணிகளின் விலைகள் சமமாவதற்குரிய வாய்ப்புக் குன்றிவிடுகிறது. உதாரணமாக, அதிக மூலதனத்தைப் பயன்படுத்தி நெல் சாகுபடி செய்யும்முறை தோன்றியவுடன், இதுவரை பர்மாவிலும் தாய்லாந்திலுமுள்ள உழைப்பாளிகளுக்கிருந்த தேவை குறைந்து, அமெரிக்க நாட்டு மூலதனத்திற்கிருந்த தேவை அதிகரித்துவிட்டது.[6]

[6] ஒரு நாடு ஒரு பண்டத்தைமட்டும் உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்வோம். கோட்பாட்டளவில் காரணிகளின் விலைச் சமன்பாட்டைத் தடுப்பதற்கு இதுவே போதும். ஏனெனில், பண்டமாற்று வீதம், காரணி வருமான வீதம் ஆகியவற்றின் தொடர்பை இது முறித்துவிடுகிறது. ஏனெனில், இரண்டே இரண்டு நாடுகளும், இரண்டே இரண்டு பொருள்கள் மட்டுமே இருப்பதாகவும், அவற்றுள் ஒரு நாடோ அல்லது இரு நாடுகளுமோ அதன் சாதனங்களையெல்லாம் சிறப்பாக ஒரு பொருளைமட்டும் உற்பத்தி செய்யப் பயன்படுத்துகிறதென்றும் எடுத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் இந்த முடிவு செய்யப்படுகிறது. உண்மையில் ஒரு நாடு பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். ஒரு நாடு ஒரே ஒரு பொருளை மட்டும் அல்லது மிகச் சில பொருள்களைமட்டும்தான் சிறப்பாக உற்பத்தி செய்கிறதென்பதைச் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாது.

காரணி நிலைமாற்றத்தின் விளைவை ஒருபுறம் ஒதுக்கிவிடுவோம். ஏனெனில், பல காரணிகள் உள்ளதொரு சூழ்நிலையில் அதன் விளைவு சந்தேகமானது. இரு காரணி சூழ்நிலையில் காரணி நிலைமாற்றம் ஏற்பட்டால் ஏதாவது நாடுகள் தம்மிடம் ஏராளமாக இல்லாத காரணிகளின் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யுமானால், காரணி விலை வித்தியாசம் அதிகமாகும்.

பற்றுக்குறையான காரணிக்குத் தீங்கு

காரணி விலைகள் சமன்படுவதில் இவ்விதத் தடைகள் இருந்த போதிலும், இச் சமன்பாட்டை ஏற்படுத்தும் வழியில்தான் பன்னாட்டு வாணிபம் இயங்குகிறது என்பதில் சந்தேகமில்லை. ஒரு நாட்டில் ஏராளமாயுள்ள காரணி, வாணிபம் இல்லாதபோது பெறக்கூடியதைவிட அதிக விலையும், போதாத அளவுள்ள காரணி குறைந்த விலையும் பெறுகின்றன. உலகிலுள்ள எல்லாக் காரணி களின் மொத்த அளிப்பைக்கொண்டு பார்க்குமிடத்து, ஒவ்வொரு காரணியின் சராசரி விலையும் உயர்த்தப்படுகிறது. இருப்பினும், தேசியக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, ஒரு நாட்டில் போதாத அளவுள்ள காரணிக்குத் தீங்கு ஏற்படுகிறது.

உழைப்பாளிகள் மிகக் குறைவாயுள்ள நாட்டில் பன்னாட்டு வாணிபத்தால் ஏற்படும் இவ் விளைவு சமுதாய முக்கியத்துவம் கொண்டது; அதோடு உகந்த வருமானப் பகிர்வைக்கொண்டு கூறுவதாயின், உழைப்பை அதிகமாகப் பயன்படுத்தும் தொழில்களை அந் நாடு பாதுகாப்பது நியாயமானதாகவே தோன்றுகிறது.[7] எனினும், நடைமுறையில் இதன் முக்கியத்துவம் அவ்வளவு நிச்சயமானதன்று. ஏனெனில், இவ் வாதம் அனைத்தும் காரணி அளிப்பு மாறாமல் அப்படியே உள்ளன என்ற எடுகோளை அடிப்படையாகக்கொண்டது. ஆனால், நடைமுறை உலகில் இவ் வெடுகோள் பொருத்தமற்றது. காரணி அளிப்பு மாறக்கூடும்; மாறவும் செய்கின்றது. அந் நாட்டில் மூலதனம் பெருமளவில் இருக்குமானால், வாணிபத்தின் வளர்ச்சியினால் அதன் வருமானம் உயருகிறது. மேலும், நாம் ஏற்கெனவே அறிந்ததுபோல், வாணிபம் நடைபெறுவதால் குறிப்பிட்டதொரு காரணியின் உண்மை வருமானம் குறைவதாயிருந்தாலும்கூட, சமுதாயத்தின் மொத்த வருமானம் உயரக்கூடும். முன்பைவிட அதிக வருமானமும், மூலதனத்திற்கு உயர்ந்த விலையும் கிடைக்கும்போது சேமிப்பு உயரக்கூடும். சில ஆண்டுகள் கழித்து, இன்றுள்ளதைக் காட்டிலும் அதிக முதற்கருவிப் பொருள்களைக்கொண்டு உழைப் பாளிகள் வேலை செய்யும்போது அவர்களுடைய ஊதியம் உயரலாம். அல்லது மூலதனம் அதிகரிப்பதால், வட்டி வீதம் இறங்கி, மூலதனம் அதிகம் வேண்டிய தொழில்கள் வளர்ச்சி பெற ஊக்குவிக்கப்படவும், தொழில்நுட்ப உற்பத்தி முறை மேலும் சிறந்ததாகி, அந் நாட்டின் உழைப்பாளிகளுக்கும் சமுதாயத் திற்கும் நன்மை பயக்கவும்கூடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

[7] இவ்வகைத் தொழில் பாதுகாப்பிற்கான கோட்பாட்டு ஆதாரம்பற்றிய விளக்கத்திற்கு அதிகாரம் 13 பார்க்க.

இதில் ஒன்றுமே ஏற்படவில்லை என்றால்கூட, ஆய்ந்தறிந்து மேற்கொள்ளப்படும் அரசாங்கக் கொள்கையால் அந் நாட்டு உழைப்பாளிகள் நன்மை பெறக்கூடும். வாணிபத்தால் இலாபம் பெறுவோர்மீது வரி விதித்து, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை உழைப்பாளிகளுக்கு நேரடியாகவோ, அல்லது அவர்களின் ஊதியம் குறைந்துள்ளதை ஈடு செய்யும் வகையிலோ பகிர்ந்தளிக்கலாம்; அல்லது எல்லோருக்கும் விருப்பமான வகையில் சமூகப் பாதுகாப்பு (social security) வழி முறைகளிலும் கேளிக்கை வசதிகளை அளிப்பதிலும் அரசாங்கம் செலவிடுவதன் வழியாகவோ, அல்லது சாதாரண அரசாங்கப் பணிகளை அதிகரிப்பதன் மூலமாகவோ அவர்களின் நலனை அதிகரிக்கலாம்.

காரணிப்பேறும் வாணிபத்தின் பாணியும்

இவ் அதிகாரத்தின் தொடக்கத்தில் நாம் சுருக்கமாகக் கூறிய 'மாதிரியான' பன்னாட்டு வாணிபம் உண்மையில் செயற்படுவதாயிருந்தால், அதன் தத்துவங்களின்படிதான் நடைமுறையில் வாணிபம் நடைபெறுகிறதென நாம் கூறுவதாயிருக்கவேண்டும். அப்போது வாணிப விவகாரங்களில் ஏதாவதோர் அமைப்பு இருக்கவேண்டும். நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளின் பேற்றில் நாட்டிற்கு நாடு உள்ள பெரு வித்தியாசத்தை ஆதாரமாகக்கொண்டு, பொருள்கள் வாணிபம் செய்யப்படவேண்டும். நிலவள மிக்க நாடுகள் பெருமளவில் விவசாயப் பண்டங்களை ஏற்றுமதி செய்து, அவற்றிற்கு ஈடாக மூலதனமோ உழைப்பாளிகளோ மலிந்துள்ள நாடுகளிலிருந்து தொழிற்சாலைப் பொருள்கள், கைத்தொழிற் பொருள்கள், இன்னும் இதர வகைப் பொருள்களை இறக்குமதி செய்வதை நாம் காணவேண்டும். இருந்தாலும், இவ் விரிவான திட்டத்தைச் சிதைக்கக்கூடிய பல தடைகள் நிச்சயமாக இருக்கும். ஏனெனில், உற்பத்திக் காரணிகளை மூன்று பெரும் பிரிவுகளாகமட்டும் பாகுபடுத்துவது பொதுமையளவில் பொருத்தமானதாயிருக்கலாம். ஆனால், மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் நாம் ஆயும்போது உழைப்பாளிகளில் குறைந்தது மூன்று நான்கு வகை இருப்பதையும், சாகுபடி நிலம் பலதரப்பட்டதாயிருப்பதையும், இயற்கை வளங்களில் கனிப் பொருள் போன்று குறிப்பிட்ட பலவகை சாதனங்கள் இருப்பதையும் நாம் கணக்கிடவேண்டியுள்ளது.

காரணிப் பேறும் சிறப்புத் தேர்ச்சியும்: 1870-1890

இப் பிரச்சினையில் விரிவானதொரு கண்ணோட்டத்தைப் பெறுவதற்காக, *1870*ஆம் ஆண்டுகளிலும் *1880*ஆம் ஆண்டு

களிலும் இருந்த மிக எளிமையான உலகத்தை எண்ணிப் பார்ப்போம். அக் காலத்தில்தான் இருப்புப் பாதைகள் விரிவடைந்து, உணவுதானியம் உற்பத்தி செய்யும் முக்கியப் பிரதேசங்களை அல்லது பெருஞ் சமவெளிப் பிரதேசங்களை (great plains regions: அர்ஜென்டைனு, ஆஸ்திரேலியா, கனடா, ரஷ்யா, அமெரிக்கா) வெளி நாடுகளோடு தொடர்புகொள்ள வழி வகுத்தது. உற்பத்திக் காரணியின் தராதரப் பேற்றினை ஆதாரமாகக் கொண்டு, அக் காலத்திய வாணிபத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த நாடுகளை நான்கு முக்கியப் பிரதேசங்களாகப் பாகுபடுத்தலாம். உஷ்ண மண்டலப் பிரதேசத்தில் (இந்தியா, சிலோன், டச்சு கிழக்கிந்தியத் தீவுகளைக்கொண்டது) ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும், மக்கள் தொகை நெருக்கமாயும், மூலதனம் மிகக் குறைவாயும், நிலம் சுமாரான அளவிற்கும் இருந்தன. தொழில் புரட்சியின் விளைவாக உலகிற்கே தலைசிறந்த தொழில்மய நாடாக விளங்கிய பிரிட்டனில், ஏனைய இடங்களைக் காட்டிலும் பெருமளவில் மூலதனமும், மிகக் குறைந்த அளவு நிலமும், சுமாரான அளவிற்கு உழைப்பாளிகளும் இருந்தனர். பிற ஐரோப்பியப் பிரதேசத்தில் மக்கள் தொகை நெருக்கமாயிருந்த அதேசமயம், மூலதனமும் தொழில் வளர்ச்சியும் பிரிட்டனைக் காட்டிலும் குறைவாயும், நிலம் பிரிட்டனைப்போல் சிறிதளவுமே இருந்தது. இறுதியாக, பெருஞ் சமவெளிப் பிரதேசங்களில் நிலம் ஏராளமாயும், உழைப்பாளிகள் கணிசமான அளவிலும், மூலதனம் மிகக் குறைவாயும் இருந்தன. இவ்வாறாக, இப் பெரு வாணிபப் பிரதேசங்களின் தராதரக் காரணிப்பேறு பின்வருமாறு அமைந்திருந்தது :

தராதரக் காரணிப்பேறு	உஷ்ண மண்டலம்	பெருஞ் சம வெளிப் பிரதேசம்	இதர ஐரோப்பிய நாடுகள்	பிரிட்டன்
ஏராளம்	உழைப் பாளிகள்	நிலம்	உழைப் பாளிகள்	மூலதனம்
சுமாரான அளவு	நிலம்	உழைப் பாளிகள்	மூலதனம்	உழைப் பாளிகள்
குறைந்த அளவு	மூலதனம்	மூலதனம்	நிலம்	நிலம்

அக் காலத்தில் நடைபெற்ற வாணிபத்தின் முக்கிய அம்சங்களை இப்போது பார்ப்போம். நாம் அறிந்துள்ள விவரங்களி

லிருந்து இப் பிரதேசங்களுக்கிடையே என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது; எனினும், இவ் விவரங்களைக்கொண்டு எந்தெந்தப் பிரதேசங்களில் எப்படி எப்படி ஏற்றுமதி, இறக்குமதி நிலுவைகள் (net-export, import balance) இருந்தனவென்று துல்லியமாக ஒன்றும் கூற இயலாது. பிரிட்டன், தனது ஆலைப் பொருள்களை ஏனைய நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யும் நாடாக விளங்கியது; பருத்தி, கம்பளத் துணிகள், பாத்திரங்கள், கலைநுட்பம் வாய்ந்த மலிவான சிறு பொருள்கள் (notion), கத்தி போன்ற இரும்புச் சாமான்கள் ஆகிய இலகுவான நுகர்வுப் பொருள்கள் முதற்கொண்டு, ரெயில் தண்டவாளங்கள், ரெயில் இஞ்சின்கள், பெட்டிகள், நிலை எந்திரங்கள் (stationary engines), பம்புகள், சுரங்க எந்திரங்கள் ஆகிய கன ரக முதற்கருவிப் பொருள்கள் (heavy capital goods) வரை பல்வேறு தொழிற்சாலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தது.

பெருஞ் சமவெளிப் பிரதேசங்கள் பிரிட்டனுக்கும், இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் தேவையான கோதுமை, இறைச்சி, ஆட்டு உரோமம், பருத்தி முதலிய பொருள்களைத்தான் முக்கியமாக ஏற்றுமதி செய்தன. இவற்றில் அமெரிக்கா மட்டும் தான் பருத்தியை ஏற்றுமதி செய்தது. அமெரிக்காவைத் தவிர, ஏனைய நாடுகளிலெல்லாம் அந்தந்த இடங்களுக்குத் தேவையான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்குக் கூடத் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. அமெரிக்கா குறிப்பிட்ட சில ஆலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தபோதிலும், அதன் மொத்த ஏற்றுமதி அளவில் அப் பொருள்கள் சுமார் பத்தில் ஒரு பங்குதான் இருந்தது.

உஷ்ணமண்டலப் பிரதேசங்களில் ஏராளமான உழைப்பாளிகள் இருந்ததால், உழைப்பு அதிகம் தேவைப்படும் விவசாயப் பண்டங்களான அரிசி, கச்சாப்பட்டு, தேயிலை, கொக்கோ, காப்பி, வாசனைப் பொருள்கள், கைவேலைப்பாடுகொண்ட உயர்ந்த ரகத் துணிவகைகள், பட்டுத் துணி, அரக்குப் பொருள்கள் முதலியவற்றை இந் நாடுகள் ஏற்றுமதி செய்தன.

இதர ஐரோப்பிய நாடுகளனைத்தும் விவசாய நாடுகளாக இல்லாமலும் தொழில் வளமிக்க நாடுகளாக இல்லாமலும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டவையாய் இருந்தன. பெரும் சமவெளிப் பிரதேசங்களால் ஏற்பட்ட போட்டியின் காரணமாக, ரஷ்யாவைத் தவிர இதர ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் கோதுமை உற்பத்தி

குறைந்தது. இதனல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேலும் உழைப்பு அதிகம் வேண்டிய இதர விவசாயப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டனர். அவற்றில் வெண்ணெய், பாலடைக்கட்டி, முட்டை, பன்றி இறைச்சி, வாசனைத் தைலங்கள், மிதவெப்ப மண்டலத்தில் விளையக்கூடிய பழ வகைகள் முக்கியம். மர ஏற்றுமதியும் அதிகமாக நடைபெற்றது. அதோடு, திறன் பெற்ற உழைப்பாளிகளால் செய்யப்படும் கைத்தொழில் பொருள்களான கடிகாரங்கள், நகைநட்டு, உயர்ந்தரகத் தோல் பொருள்கள் முதலியவற்றின் ஏற்றுமதியும் விரிவாக நடந்தது.

இவ் விளைவுகளையெல்லாம் அட்டவணை வாயிலாகப் பின் வருமாறு காட்டலாம்:

உற்பத்திப் பொருள் வகை	உஷ்ண மண்டலப் பிரதேசம்	பெரும் சம வெளிப் பிரதேசம்	இதர ஐரோப்பிய நாடுகள்	பிரிட்டன்
உழைப்புச் செறிந்த பொருள்கள்	உஷ்ண மண்டலத்தில் விளையும் விவசாயப் பண்டங்கள், கைத் தொழிற் பொருள்கள்	—	பால் பண்டங்கள், திறன் மிக்க தொழிலாளரின் கைத் தொழிற் பொருள்கள்	—
நிலம் செறிந்த பொருள்கள்	—	உணவுத் தானியம், இறைச்சி, ஆட்டு உரோமம், பருத்தி	—	—
மூலதனம் செறிந்த பொருள்கள்	—	—	—	இலகுவான, கனரகத் தொழிற் சாலைப் பொருள்கள்

தராதரக் காரணப்பேற்றில் மாறுதல்கள்

1870ஆம் ஆண்டுகளிலும், 1880ஆம் ஆண்டுகளிலும் இன்றுள்ளதைக் காட்டிலும் எளிமையாக அமைந்திருந்த காரணி-அளிப்பின் அமைப்பு (factor-supply structure) 1890-ல் இருந்து 1920ஆம் ஆண்டிற்குள் கணிசமாக மாறிவிட்டது. பல நாடுகளுக்கிடையே மூலதனம் மட்டுமன்றித் தொழிலாளிகளும் இடம் பெயர்ந்தனர். மேலும், மூலதன வளர்ச்சியாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் உள் நாடுகளில்கூடக் கணிசமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

இதற்குச் சிறந்த சான்ருக உள்ளது அமெரிக்கா நாடுதான். 1880-க்கும் 1914-க்குமிடையே உலகில் சுமார் 40 மில்லியன் மக்கள்வரை நாடுவிட்டு நாடு குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்தோரில் பெரும்பான்மையோர் ஐரோப்பியர்கள். அந்த 40 மில்லியன் மக்களில் பாதிக்குமேல் அமெரிக்காவில் வந்து குடியேறினர். அதன் விளைவாக அமெரிக்காவில் விரிவடைந்து வந்த தொழில்களுக்கும் பண்ணைகளுக்கும் வேண்டிய அளவில் ஆட்கள் கிடைத்தனர். அப்படியிருந்தும்கூட, உழைப்போரின் எண்ணிக்கை அங்குப் போதாத அளிவில்தான் இருந்தது. வட அமெரிக்காவில் இயற்கை வளத்தினைப் பயன்படுத்தியதன் விளைவாக ஏற்கெனவே உயர்ந்திருந்த உற்பத்தித் திறன் இன்னும் அதிகமாயிற்று. இதனுல் தொழில் முயல்வோருக்குப் பெருமளவில் இலாபம் கிடைத்தது. இன்றுள்ளதைப்போன்று வருமான வரிகள் வளர்வீதத்தில் இல்லாமலிருந்ததால் (progressive income tax) மூலதனம் விரைவாக வளர்ச்சியுற்றது. 1920ஆம் ஆண்டுகளில் குறைந்தபட்சம் வடகிழக்குப் பகுதியிலாகிலும் நிலத்தைக் காட்டிலும் மூலதனம் ஏராளம் என்ருகிவிட்டது.

இதுபோன்றுதான் பெருஞ் சமவெளிப் பிரதேசங்களிலும் ஐரோப்பாவிலிருந்து வந்த மக்கள் குடியேறியதன் காரணத்தால் மக்கள் தொகை வளர்ச்சியுற்றது. அதோடு, உள் நாட்டின் மூலதன வளர்ச்சியாலும் வெளிநாடுகளிலிருந்து—சிறப்பாக, பிரிட்டனிலிருந்து—வந்த மூலதனத்தின் காரணமாகவும் பெரும் பலன் ஏற்பட்டது. நிலம் முன்பிருந்ததைப்போன்றே மலிவான காரணியாக இருந்தது. ஆனுல், அதே சமயம், மூலதனம் மக்கள் தொகையைக்காட்டிலும் விரைவாகப் பெருகியதால், சுமாரான அளவிலிருந்த உழைப்பாளிகளுக்குப் பதிலாகப் பெருமளவில் மூலதனத்தைப் பயன்படுத்த முடிந்தது.

வெப்பமண்டலப் பிரதேசங்களிலோ, மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாக வாணிபத்தால் அதிகப் பயனில்லாமல் போய்விட்டது. ஐரோப்பியர் தம் நிதியிலிருந்து கணிசமான அளவு இப் பகுதிகளில் முதலீடு செய்தபோதிலும், அந் நாடுகளி லிருந்த வறுமையின் காரணமாக மூலதனம் எப்போதும்போல் சிறிதளவே இருக்க நேரிட்டது.

ஐரோப்பாவிலிருந்து பெரு எண்ணிக்கையில் மக்கள் குடியேறியதன் விளைவாக அங்கிருந்த மக்கள்தொகை குறைந்தது. அதேசமயம், தொழில் வளர்ச்சியும் நகர வளர்ச்சியும் விரைவாக நடைபெற்றதால், வளர்ச்சி பெற்ற நாடுகளில் பிறப்பு வீதம் குறைந்தது. இதனால் பிறப்புவீதம் முன்பைவிடக் குறைந்ததாகிவிட்டது. மேலும் இந் நாடுகளில், குறிப்பாக ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஸ்வீடன் ஆகியவற்றில் விரிவடைந்துவந்த தொழில்களினால் ஏற்பட்ட பெரு இலாபத்தை மறுபடியும் தொழில் முன்னேற்றத்திற்கே பயன்படுத்தினர். இவ்வாறு வளர்ச்சிபெற்றதால், போதாத அளவிலிருந்த மூலதனம் குறைந்தபட்சம் சுமாரான அளவிற்கு அதிகரித்துவிட்டது.

1920ஆம் ஆண்டுகளின்போது, வாணிபத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த இப் பிரதேசங்களின் தராதரக் காரணி அளிப்பு நிலவரம் பின்வருமாறு மாறி அமைந்ததெனலாம் :

தராதரக் காரணி அளிப்பு	வெப்ப மண்டலம்	அமெரிக்கா	பெருஞ் சமவெளிப் பிரதேசங்கள்	இதர ஐரோப்பிய நாடுகள்	பிரிட்டன்
ஏராளம்	உழைப்பாளிகள்	மூலதனம்	நிலம்	உழைப்பாளிகள்	மூலதனம்
சுமாரான அளவு	நிலம்	நிலம்	மூலதனம்	மூலதனம்	உழைப்பாளிகள்
மிகச்சிறிதளவு	மூலதனம்	உழைப்பாளிகள்	உழைப்பாளிகள்	நிலம்	நிலம்

காரணிப்பேறுகள், இரண்டாம் உலகப் போருக்குமுன்

இம் முடிவிற்கு ஆதரவாக இன்னும் பல புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அவற்றில் இப் பிரதேசங்களின் சாகுபடி நிலம், உழைப்பாளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கான நம்பகரமான புள்ளிவிவரங்களும், உருள்கலங்களின் (rolling stock) மதிப்புப்

பற்றிய குத்துமதிப்பான அளவீடுகளும் உள்ளடங்கும். இப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலுமிருந்த சாகுபடி நிலம், மூலதனம் ஆகியவற்றின் இலக்குகளை அதனதன் உழைப்பாளிகளின் எண்ணிக்கையால் வகுத்தால், தலா ஒவ்வோர் உழைப்பாளிக்கும் எவ்வளவு நிலம், எவ்வளவு மூலதனம் இருந்தது என்ற விவரம் கிடைக்கும். இவ் விவரம் 10.1 அட்டவணையில் 1ஆம் பத்தியிலும் 3ஆம் பத்தியிலும் கொடுக்கப்பட்டுள்ளது. நிலம், மூலதனம் ஆகிய வற்றின் இலக்குகள் அந்தந்தப் பிரதேசங்களுக்கு உரியவை யாதலால், உழைக்கும் மக்கள் தொகைக்கு (2ஆவது பத்தியில்) 1 மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10.1

முக்கியப் பிரதேசங்களின் மூலதனம், உழைப்பு, நிலம் ஆகியவற்றின் தராதர அளிப்பு விவரம், 1935—38

பிரதேசங்கள்	(1) தலா ஒவ்வோர் உழைப்பாளிக் கும் மூலதனம்	(2) உழைக்கும் மக்கள் தொகை	(3) தலா ஒவ்வோர் உழைப்பாளிக் குமுள்ள நிலம்
பிரிட்டன்	5,024	1	0.94
மேற்கு ஐரோப்பா	2,500	1	1.08
அமெரிக்கா	4,365	1	9.0
பெருஞ் சமவெளிப் பிரதேசம்	4,290	1	43.9
வெப்பமண்டலம்	510	1	4.57

குறிப்பு: மூலதனத்திற்கான புள்ளிவிவரம், காளின் கிளார்க் (Colin Clark) அவர்களின் 'The Economics of 1960' (London : Macmillan, 1942) என்னும் நூலின் 80ஆம் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. 'பன்னாடுகளுக்கேற்ற அலகுகளில்' இவை அளவிடப்பட்டுள்ளன. அமெரிக்காவில் 1925—34ஆம் ஆண்டு களில் சராசரியாக 1 டாலரைக்கொண்டு எவ்வளவு பொருள்களும் பணிகளும் வாங்க முடியுமோ, அதுவே பன்னாடுகளுக்கேற்ற


அளவு என்று பொருள்கொள்ளப்படுகிறது. உழைக்கும் மக்கள் தொகைக்கான புள்ளிவிவரமும் அதே நூலிலிருந்துதான் எடுக்கப் பட்டுள்ளது. சாகுபடி நிலத்திற்கான புள்ளிவிவரம், ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய சங்கத்தின் உணவு, விவசாயப் புள்ளிவிவரங்களைக்கொண்ட 1952ஆண்டு நூலின் 6ஆம் பாகத் தில், முதல் பிரிவிலுள்ள (ரோம், இத்தாலி) 3—7ஆம் பக்கங் களில் காணப்படும் விவரங்களைக்கொண்டு கணக்கிடப்பட் டுள்ளது. (materials in Food and Agriculture Organization of the United Nations' Year book of Food and Agricultural Statistics, Vol. VI, Part 1 (Rome, Italy), pp 3—7). சாகுபடி நிலத்தில் விளைச்சல் நிலமும் மேய்ச்சல் நிலமும் சேர்க்கப்பட் டுள்ளது. 2.471 ஏக்கர் பரப்பளவுகொண்டது 1 அலகு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மூலதனத்திற்கான புள்ளிவிவரமும், உழைக்கும் மக்கள் தொகை விவரமும் 1935-38ஆம் ஆண்டுகளுக்குரிய விவரங்க ளாகும். நிலத்தின் புள்ளிவிவரம் 1951ஆம் ஆண்டிற்குரியது. 1937-க்கும் 1951-க்குமிடையே நிலப்பரப்பளவில் கணிசமான அளவு வேறுபாடு இருக்க முடியாதாகையால், ஏனைய புள்ளி விவரங்களோடு இதனை ஒப்பிடக்கூடும். இம் மூன்று காரணி களின் புள்ளிவிவரத்தை அளவிடும்போது, முதலில் எந்தெந்த நாடுகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் சேர்க்கப்பட்டனவோ, அதே நாடுகள்தாம் இப்போதும் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கு ஐரோப் பாவில் ஜெர்மனி—ஆஸ்திரியா, பிரான்ஸ், பெல்ஜியம்—லக்ஸம் பர்க், இத்தாலி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், செக்கோஸ்லவாகியா முதலிய நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. பெருஞ் சமவெளிப் பிரதேசங்களில் அர்ஜென்டைனு, உராக்வே, ஆஸ்திரேலியா, கனடா, நியூஸி லாந்து ஆகிய நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. வெப்பமண்டலப் பிரதேசத்தில் இந்தியா, பாகிஸ்தான், தென் ஆசியா, ஆப்பிரிக்கா முதலியனவும், நியூஸிலாந்தும் ஆஸ்திரேலியாவும் நீங்கலாக ஓஷியானியா (Oceania) நாடுகளும் அடங்கும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் எந்தக் காரணி அதிக அளவிலும், எது குறைந்த அளவிலும் உள்ளது என்பதை அறிவதற்கு, அதனதன் காரணி அளவின் இலக்குகளை ஏனைய பிரதேசத்திற் கான காரணி அளவு இலக்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு ஒப்பிடும்போது பிரிட்டனின் மூலதனம் ஏனைய பிரதேசங்களைக்காட்டிலும் அதிக மதிப்புடையது என்பதையும், நிலம் தாழ்ந்த மதிப்புடையது என்பதையும் அறிவ

துடன், மூலதனம் அங்கு ஏராளமாயும், நிலம் மிகக் குறைந்த அளவிலும் உள்ளன என்பதையும், உழைப்பாளிகள் அதிக அளவிலுமின்றிக் குறைந்த அளவிலுமின்றி இருக்கின்றனர் என்பதையும் தெளிவாகக் காண்கின்றோம். பெருஞ் சமவெளிப் பிரதேசங்களும் அதேபோல் சிறந்து விளங்குகின்றன. ஏனைய பிரதேசங்களையெல்லாம்விட இங்குதான் நிலம் அதிக அளவிலும், மூலதனம் சுமாரான அளவிலும், உழைப்பாளிகள் ஏனைய காரணிகளை நோக்கக் குறைந்த அளவிலும் உள்ளன.

அமெரிக்காவில்தான் மூலதனம், நிலம் ஆகிய இரண்டுமே ஏனைய பிரதேசங்களைவிட ஓரளவு அதிகம். எல்லாப் பிரதேசங்களுக்குமான சராசரி மூலதன அளவைக்காட்டிலும் (3,336) இங்குதான் அதிகம்; பெருஞ் சமவெளிப் பிரதேசத்திற்கு அடுத்து இங்குதான் நிலம் அதிகமென்றாலும், சராசரி நிலப்பரப்புடன் (11.9) ஒப்பிடும்போது குறைவுதான். இங்கு மூலதனம் ஏராளமாயும், உழைப்பாளிகள் சிறிதளவாயும், நிலம் சுமாரான அளவாயும் உள்ளன.



10.1 பன்முக வாணிபமுறை

மேற்கு ஐரோப்பாவில் சராசரி அளவைக்காட்டிலும் மூலதனமும் நிலமும் குறைவு. இதில் நிலம்தான் சராசரி அளவை விட மிகக் குறைவு. எனவே, மிகக் குறைந்த அளவுள்ள காரணி நிலம்தான். மூலதனம் சுமாரான அளவில் உள்ளது. அது கொண்டுள்ள காரணிகளிலெல்லாம் அதிக அளவில் இருப்பது உழைப்பாளிகள். இதேபோல் வெப்பமண்டலப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், அங்கு உழைப்பாளிகள் ஏராளமாயும், மூலதனம் மிகக் குறைவாயும், நிலம் சுமாரான அளவிலும் உள்ளன.

இரண்டு உலகப் போர்க்குமிடைப்பட்ட காலத்தில் நடந்த உலக வாணிபம்

இப் பிரதேசங்களுக்கிடையே நடந்த வாணிபத்தை இப்போது பார்ப்போம். 1928-ல் முன் பக்கத்தில் உள்ள படத்தில் காட்டியுள்ளதுபோல் வாணிபம் பன்முகமான அமைப்பைப் (multilateral pattern) பெற்றிருந்தது என்பதை அனுபவ வாயிலாக அறிந்த விவரங்கள் காட்டுகின்றன.[8] இப் பிரதேசங்கள் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ததில் ஏற்பட்ட நிகர ஏற்றுமதி நிலுவையை (net export balance) அம்புக்குறி காட்டுகிறது. அந் நிலுவையின் மதிப்பு, சிறு வட்டங்களில் மில்லியன் டாலர்களில் கொடுக்கப்பட்டுள்ளது. 1928-ல் இருந்த உலகின் மொத்த வாணிபத்தில் பத்தில் ஒன்பது பங்கு இப் படத்திலுள்ள நாடுகளால் செய்யப்பட்டதாகும்.[9]

[8] இதன் மூல ஆய்வு The Network of World Trade (League of Nations, 1942) என்னும் நூலில் உள்ளது. இவ் விவரமான ஆய்வின் புள்ளிவிவரங்களைவைத்து Folke Hilgerdt ஆய்ந்து, 'The case for Multilateral Trade' என்னும் கட்டுரையை American Economic Review, XXXIII, No. 1, Pt. 2 Supplement (March, 1943). வெளியீட்டில் எழுதியுள்ளார். இங்கு வரைந்துள்ள படம் Karl-Erik Hansson அவர்களால் சிறிது திருத்தி அமைக்கப்பட்டதாகும். இது American Economic Review, XLII, No. 1 (March, 1952) வெளியீட்டில் Karl-Erik Hansson அவர்கள் எழுதியுள்ள "A General Theory of the System of Multilateral Trade" என்னும் கட்டுரையில் உள்ளது. தராதரக் காரணி அமைப்பை Hansson அவர்கள் எளிமையாகக் கூறிய முறையையே நான் பயன்படுத்தியுள்ளேன்.

[9] பெருஞ் சமவெளிப் பிரதேசத்தில் 10.1 அட்டவணையிலுள்ள நான்கு நாடுகளுடன் தென் ஆப்பிரிக்காவும் பார்க்குவேயும் சேரும். ஐரோப்பிய கண்டப் பகுதியில் ரஷ்யாவைத் தவிர ஐரோப்பிய கண்டப் பகுதியிலுள்ள இதர நாடுகளைத் தும் சேரும். எனவே, இது அட்டவணையிலுள்ள மேற்கு ஐரோப்பாவில் அடங்கியுள்ள நாடுகளைக்காட்டிலும் அதிக நாடுகளைக்கொண்டது. கண்டப்பகுதியிலில்லாத ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன், அயர்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளும் இன்னும் சில சிறிய தீவுகளும் அடங்கும். வெப்பமண்டலப் பிரதேசத்தில் உண்மையில் உஷ்ணமான நாடுகள்மட்டுமே சேரும். எனவே, 10.1 அட்டவணையைவிட வெப்ப மண்டலங்களே சிறந்த அடையாள மாதிரிகளாக இங்கு விளங்குகின்றன. ஆனால், 10.1 அட்டவணையில் இம் மண்டலங்களில் அமையாத பல நாடுகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவோடு செய்த வாணிபத்தில் வெப்பமண்டலப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி நிலுவைப் பெருமளவில் கிடைத்தது. இது, இப் பிரதேசங்களிலிருந்து காப்பி, தேயிலை, ரப்பர், பழங்கள், தாவர எண்ணெய் முதலிய வெப்பமண்டலப் பொருள்களையும், பெட்ரோலியம், செம்பு, மாங்கனிஸ் போன்ற தாதுப் பொருள் களையும் அமெரிக்கா பெருமளவில் இறக்குமதி செய்ததைப் பிரதி பலிக்கிறது. இப் பிரதேசங்களில் ஏராளமான உழைப்பாளிகளும், வெப்ப சீதோஷ்ண நிலைகொண்ட நிலமும் (சிலவகைத் தாதுப் பொருள் சுரங்கங்களும்) இருந்ததால், அமெரிக்க நாட்டுத் தொழில்களுக்குத் தேவைப்பட்ட மூலப்பொருள்களில் பெரும் பகுதியை இவை ஏற்றுமதி செய்ய முடிந்தது. அதோடு, அமெரிக்காவிற்குத் தேவையான சில நுகர்வுப் பண்டங்களும் பெருமளவில் இங்கிருந்து ஏற்றுமதியாயின.

அடுத்து, நிலவளமிக்க பெருஞ் சமவெளிப் பிரதேசங்களுக்கு மூலதனம் மிகுந்த அமெரிக்க நாடு டிராக்டர்கள், இதர விவசாயக் கருவிகள், கார்கள், தொழிற்சாலைப் பொருள்கள் முதலிய வற்றைப் பெருமளவில் ஏற்றுமதி செய்தது. இந்த ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு, தான் இறக்குமதி செய்த ஆட்டு உரோமம், தோல், இறைச்சி, கனிப்பொருள்கள் ஆகியவற்றின் மதிப்பைக் காட்டிலும் 640 மில்லியன் டாலர் அதிகமாயிருந்தது.

பெருஞ் சமவெளிப் பிரதேசங்கள் ஆட்டு உரோமம், உணவுத் தானியம், இறைச்சி முதலிய தமது விவசாயப் பண்டங்களை ஐரோப்பிய கண்டப் பகுதியிலுள்ள நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்ததால், அவற்றிற்குக் கிடைத்த நிகர நிலுவை பெரு அளவாகியது. ஐரோப்பிய கண்டப் பகுதியிலுள்ள நாடுகளின் காரணி அமைப்பு ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போல் (குறிப்பாக, பிரிட்டனைப்போல்) இருந்தபோதிலும், கண்டப் பகுதியிலில்லாத ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த தொழிற்சாலைப் பொருள்களைவிட அதிகமாக ஏற்றுமதி செய்தன. அதோடு, பால் பண்டங்கள், மாட்டிறைச்சி, முட்டை, மதுபான வகைகள், வட ஐரோப்பிய பகுதியிலுள்ள காடுகளிலிருந்து கிடைத்த மரம், மரக்கூழ் போன்ற உழைப்பு அதிகம் தேவைப் படும் பொருள்களை ஏற்றுமதி செய்தன.

ஐரோப்பிய கண்டப் பகுதியில் இல்லாத ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவைப் போன்றே கச்சாப் பொருள்களையும் நுகர்வுப் பொருள்களையும் வெப்பமண்டலப் பிரதேசங்களிலிருந்து

இறக்குமதி செய்தன; ஆனால், இவ் விறக்குமதியைக் காட்டிலும் அதிக மதிப்புடைய தொழிற்சாலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தன.

இவ் வட்டத்தைச் சுற்றி வாணிப நிலுவைகள் ஒன்றுக் கொன்று சமமாக இருந்தால், ஒவ்வொரு பிரதேசமும், அதற்கு முந்திய பிரதேசத்துடன் கொண்ட இறக்குமதி நிலுவையை அதன் பிந்திய பிரதேசத்துடன் உள்ள ஏற்றுமதி நிலுவையால் தீர்த்துவிடும். வட்டத்தைச் சுற்றி ஒரே திசையில் செல்லும் வாணிப நிலுவைகளைத் தவிர, பெருமளவு நிகர நிலுவைகள் அமெரிக்காவிலிருந்து இரண்டு ஐரோப்பிய பிரதேசங்களுக்கும், வெப்பமண்டலப் பிரதேசத்திலிருந்து ஐரோப்பிய கண்டப் பகுதிக்கும் செல்லுகின்றன. இந்த நிலுவைகளும் கண்டப் பகுதிக்கு வெளியிலுள்ள ஐரோப்பிய பகுதியிலிருந்து வெப்ப மண்டலப் பிரதேசங்களுக்கும் செல்லும் சிறிய ஏற்றுமதி நிலுவையால், வட்டமான ஓட்டத்தில் விழும் துண்டும் (gap), அதற்கு எதிர்த் திசையில் பணி வசதி இனங்கள் செல்லுவதால் தீர்க்கப்படுகின்றன. கப்பல் கட்டணங்கள், இன்சூரன்ஸ், வட்டி, இலாப ஈவுகள் போன்ற இந்த இனங்களுக்காக அமெரிக்காவும் வெப்பமண்டலப் பிரதேசங்களும் ஐரோப்பாவிற்குப் பணம் தர வேண்டியிருந்தது. (இந்தச் சமயத்தில் அமெரிக்கக் கடன்கள்—குறிப்பாக ஜெர்மனிக்குக் கொடுத்த கடன்—முக்கியமானவையாக இருந்தன.)

இந்தப் படம் காட்டும் வாணிப அமைப்பையும் அட்டவணை காட்டும் காரணி—அளிப்பு அமைப்பையும் சேர்த்துப் பார்த்தால், பின்னதன் அடிப்படையில்தான் கோட்பாட்டளவில் எதிர்பார்த்த வாணிபம் உண்மையில் நடைபெற்றது என்பதைக் காண் கின்றோம். உலகின் முக்கியமான வாணிபப் பிரதேசங்களில் ஒன்றில் குறைவாக இருந்த காரணிகளைப் பிற பிரதேசங்கள் நிறைவு செய்தன. பொதுவாக, காரணிகளின் மூன்று பெரும் பிரிவுகளுக்கேற்ப அவற்றின் வாணிபம் இருந்தது. இன்னும் விவரமாக இதைப் பார்க்கவேண்டுமானால், காரணிப்பாகு பாட்டை மேலும் அதிகமாக்குவதோடு, வாணிபத்தை நிர்ண யிக்கும் பிற சக்திகளான போக்குவரத்துச் செலவு, அளவுச் சிக்கனங்கள், சர்வாதீனக் கட்டுப்பாடுகள், இறக்குமதி வரி, பண உதவி போன்றவைபற்றிய அரசாங்கக் கொள்கைகள்பற்றியும் கணக்கில் கொள்ளவேண்டும்.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள்

Hansson, Karl-Erik அவர்கள் 1952-ல் வெளியான American Economic Review, XLII வெளியீட்டில் எழுதியுள்ள 'A General Theory of the System of Multilateral Trade' என்னும் கட்டுரை. பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டை உலக வாணிப முறையோடு பொருத்தி, மேலும் விளக்கமாக ஆய்வதற்கு இக் கட்டுரையை வாசிப்பது அவசியம்.

Hilgerdt, Folke அவர்கள் 1943-ல் வெளியான American Economic Review, XXXIII, Supplement வெளியீட்டில் எழுதியுள்ள 'The Case for Multilateral Trade' என்னும் கட்டுரை. வாதப் பொருத்தமும் ஆழ்ந்த ஆய்வும் கொண்டது இது.

Kindleberger, Charles P., 'International Economics' Homewood, Ill.: Richard D. Irwin Inc. 1963-ல் வெளியிட்ட மூன்றும் பதிப்பு. 'The Case for Free Multilateral Trade' என்னும் 16ஆம் அதிகாரம், திறமை, பொதுநலம் ஆகியவற்றிற்கும் விலை முறைக்கும் உள்ள தொடர்பை மிகச் சிறந்த முறையில் சுருக்கமாக ஆய்கிறது.

Leontief, W. W. அவர்கள் எழுதிய 'The Use of Indifference Curves in the Analysis of Foreign Trade' என்னும் கட்டுரை. இது American Economic Association தொகுத்த 'Readings in the Theory of International Trade' என்னும் நூலில் 10ஆம் அதிகாரமாக அச்சிடப்பட்டுள்ளது. Philadelphia: The Blakiston Co. 1949-ல் வெளியிட்டது. பன்னாட்டு வாணிபத்தில் சமநோக்குக் கோடுகளை எவ்வாறு புகுத்தி ஆய்வது என்பதையும், குறிப்பாக, வாணிபத்தால் ஏற்படும் இலாபத்தை இம் முறையைப் பயன் படுத்தி எப்படிக் காட்டுவது என்பதையும் விளக்குகிறது.

Meade, James E., 'Problems of Economic Union' London: Geo. Allen & Unwin Ltd., 1953-ல் பதிப்பித்தது. இந் நூலில் 56-72 பக்கங்கள், காரணி விலைச் சமன்பாட்டு வாதத்தையும், அச் சமன்பாடு ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள முக்கியமான தடைகளையும் சுருக்கமாகக் கூறுகிறது. Samuelson அவர்களின் விளக்கத்தைக் காட்டிலும் எளிமையானது.

Samuelson, Paul A. அவர்கள் எழுதிய 'The Gains from International Trade' என்னும் கட்டுரை. American Economic Association, 'Readings in the Theory of International Trade'

என்னும் நூலில் வெளியிடப்பட்டுள்ளது. Philadelphia: The Blakiston Co. 1949–ல் பதிப்பித்த இந் நூலில் 2ஆம் அதிகாரம் பொதுச் சமநிலைக் கோட்பாட்டின் வடிவில் கணக்கியலைக் கொண்டு வாணிபத்தினுல் ஏற்படும் இலாபத்தைத் துல்லியமாகவும் நிச்சயமாகவும் எண்பிக்கிறது.

'International Trade and the Equalisation of Factor Prices', Economic Journal, LVIII (1948); LIX (1949). இக் கட்டுரைகள் இரண்டும் காரணி விலைகள் சமமாக முற்படுவதை முழுமையாக ஆய்கின்றன.

Scitovsky, Tibor, 'A Reconsideration of the Theory of Tariffs,' 'Readings in the Theory of International Trade', Chapter 16. வாணிபத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தையும், ஒரு நாடு உச்சமான பலனை அடைவதற்காக எவ்வாறு இறக்குமதி வரியைப் பயன்படுத்தக்கூடும் என்ற சாத்தியத்தையும் கணக்கியலைப் பயன் படுத்தாமலே மேலும் உயர்ந்த நிலையில் விளக்குகிறது.

Viner, Jacob, Studies in the Theory of International Trade, New York: Harper & Brothers, 1937-ல் பதிப்பித்தது. உண்மைச் செலவைக்கொண்டு பன்னுட்டு வாணிபக் கோட்பாட்டை ஆயும் முறையை ஆதாரமாகக்கொண்ட 8, 9ஆம் அதிகாரங்கள், வாணிபத்திலிருந்து கிடைக்கும் இலாபங்களையும் அதனுல் ஏற்படும் பிரச்சினைகளையும் முழுமையாக ஆய்கின்றன.

மடல் III

சர்வதேசக் கொள்கையும் அதற்கு மாறுன தேசியப் பற்றும்

11. ஓர் உலகப் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி

நாம் இப்போது ஆய்ந்து முடித்துள்ள கோட்பாட்டின் தொகுதி, பன்னுட்டு வாணிபம் எந்த அடிப்படைகளில் அமைகிறது என்பதையும், வாணிபத்தினுல் சாத்தியமாகின்ற சிறப்புத் தேர்ச்சியைக்கொண்டு நாடுகள் எவ்வாறு பலனடைய முடியும் என்பதையும் விளக்குகிறது. இப் பலன்களைச் சுட்டிக்காட்டும் கோட்பாட்டின் கொள்கை வழியினை எல்லோரும் ஒப்புக்கொள்ளாத போதிலும், பெரும்பாலானோர் அதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும், உண்மையைப் புலனுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக உள்ள இது கொண்டுள்ள எடுகோள்கள், நடைமுறைக்கு ஒத்திருந்தால்தான் இதன் வழி உகந்ததாக இருக்க முடியும்.

அவ் எடுகோள்களில், ஒரு நாட்டிற்குள் எளிதாக இடம் பெயரக்கூடிய உழைப்பாளிகளும் மூலதனமும் நாடு விட்டு நாடு அவ்வாறு இடம் பெயர முடிவதில்லை என்ற எடுகோள் மிக முக்கியமானது; அதோடு, பொருள்களின் உற்பத்தியும் வாணிபமும் வலுவான போட்டியுடையனவாக உள்ளன என்ற எடுகோளும் முக்கியமானது. ஆனுல், போட்டி நிறைவுள்ளதாயிருக்க வேண்டுமானுல், வாங்குவோரும் விற்போரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்புகொண்டிருத்தல் அவசியம். அவ்வாருயின், வாணிபம் தடையிலாததாக, குறிப்பாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளின்றி இருக்கவேண்டும். அதோடு செலாவணிகள் ஒன்றுக்கொன்று ஓரளவிற்காகிலும் மாற்றுரிமை பெற்றவையாயிருக்க

வேண்டும். ஏனெனில், செலாவணிகளை ஒன்றுக்கொன்று மாற்ற முடியாவிட்டால் தேசிய அங்காடிகளுக்கிடையே தொடர்பு இருக்காது.

1815-ல் ஐரோப்பா

19ஆம் நூற்றாண்டில் இருந்த உலக நிலைமைகள், கோட்பாட்டின் 'மாதிரிகை' கொண்ட அனுமானங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தன. இதர நாடுகளைக்காட்டிலும் பிரிட்டனிலும் ஹாலந்திலும் மட்டும்தான் குறைந்த வருமானம் தரும் தொழில்களிலிருந்து அல்லது வேலைகளிலிருந்து உயர்ந்த வருமானம் தந்த தொழில்களுக்கும் வேலைகளுக்கும் மூலதனமும் உழைப்பாளிகளும் இடம் பெயர முடிந்தது. காரணம், இந் நாடுகள்தாம் முழுமையான தேசிய ஒருமைப்பாட்டைப் பெற்றிருந்தன. நிலமானிய முறை, பழங்கால முறையாகிவிட்டது. ஹாலந்து நாட்டின் கால்வாய் முறையும் இங்கிலாந்து நாட்டில் இருந்த கால்வாய், கடற்கரைக் கப்பல் போக்குவரத்து, அண்மையில் அபிவிருத்தியான சாலைப் போக்குவரத்து ஆகியவையும், பொருள்களும் மக்களும் இடம்விட்டு இடம் பெயர்வதைத் துரிதமாக்கின. நெதர்லாந்து நாட்டில் அரசியல், பொருளாதாரத் துறைகளில் வணிகப் பிரமுகர்கள்தாம் நெடுங்காலமாகவே செல்வாக்குப்பெற்று விளங்கினர். பிரிட்டனில் தொழில் துணிவும் விடாமுயற்சியும் கொண்ட தொழிலதிபர்கள் இரும்பு, பருத்தித் துணி நெசவு ஆகிய தொழில்களின் உற்பத்தி முறையில் ஏற்கெனவே புரட்சியை ஏற்படுத்தியிருந்தனர். அதோடு, மேலும் மேலும் பலவகைத் தொழில்களில் புதிய உற்பத்தி முறைகளைப் புகுத்தியவண்ணமாயிருந்தனர். பாராளுமன்றத்தில் நிலப்பிரபுக்கள்தாம் செல்வாக்குப் பெற்றிருந்தனரெனினும், தொழிலதிபர்களின் அரசியல் செல்வாக்குப் படிப்படியாக வளர்ந்துகொண்டே இருந்தது. பிரிட்டனின் பயிர்த் தொழில் முறையில்கூட, புரட்சிகரமான பல மாறுதல்கள் ஏற்பட்டமையின் விளைவாக அதன் விவசாயம், உற்பத்தித் திறனும் செழிப்பும் பெற்று, இதர நாடுகளுக்கு ஒரு மாதிரிகையாக விளங்கியது.

இதற்கு மாறாக, இதர ஐரோப்பிய நாடுகளில் இருந்த தலவரிகளும் (local tariffs), கட்டணங்களும் (dues), வழிச் சுங்கங்களும் (tolls) வாணிப வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாயிருந்தன. ஃபிரான்ஸ் நாட்டைப்போல் ஒரே நாடாக இருந்த நாடுகளில்கூட இதே நிலைமைதான் இருந்தது. ஜெர்மனியும் இத்தாலியும், தேசிய ஒன்றிப்பின்றிப் பல சிற்றரசுகளாகவும் குட்டி நாடுக

ளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன ('ஜெர்மனி' என்பது சுமார் 300 சுதந்திரப் பகுதிகளைக்கொண்டிருந்தது; இவற்றில் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனிச் சுங்கமும் செலாவணி முறையும் இருந்த தோடு, குழப்பமான பலவகை எடைகளும் அளவுகோல்களும் வியாபாரத்தில் பயன்பட்டு வந்தன). குடியானவர்கள் விவசாயப் பண்ணைகளைவிட்டு வெளியேறவிடாமல் தடுத்தும், சலுகைகள் பெற்ற ஒரு சிலருக்கே நில உரிமை அளித்தும் வந்த நிலமானிய முறை சற்று முன்புதான் பிரான்ஸ் நாட்டில் வேரோடு அழிக்கப் பட்டது. இதர ஐரோப்பிய நாடுகளில்கூட அதன் செல்வாக்கு நடுக்கம் கண்டிருந்தது. அங்கெல்லாம் மூலதனம் குறைவாக இருந்ததோடு, அதைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய தொழில் களும் அபூர்வமாகவே இருந்தன.

பன்னாட்டு வாணிபத்தை எடுத்துக்கொண்டால், சிக்கல்கள் நிறைந்த மெர்க்கன்டலிஸ சுங்க முறை, தடைகள், பண மான்யம், கப்பல் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் அனைத்தும் எவ்விதத் தடங்கலுமின்றிச் செயற்பட்டு வந்தன. பிரிட்டனில்கூட நாவாய்ச் சட்டங்கள் ரத்து செய்யப்படாதிருந்தன. 1776 ஆம் ஆண்டில் ஆதம் சிமித் கூறிய வாக்கினை 1815-ல் கூட அப்படியே கூறும் நிலைமைதான் இருந்தது.

ஆனால், 19 ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்குள் இவை அனைத்தும் மாறிவிட்டன. வடமேற்கு ஐரோப்பியப் பகுதி தொழில்மயமாகியதோடு, அதன் பயிர்த் தொழிலும் அபிவிருத்தி அடைந்தது. மெர்க்கன்டலிசக் கட்டுப்பாட்டு முறைகள் கைவிடப்பட்டன. சுமார் 1860 முதல், முதலாவது உலகப் போர் வரை இருந்த உலக வாணிபச் சூழ்நிலை, கோட்பாட்டு 'மாதிரி கைக்கு'ப் பெரிதும் ஒத்திருந்தது என்று சொல்லும்படி இருந்தது. அவ்வாறு ஏற்பட்ட முக்கிய மாறுதல்களின் வழி வகைகளை அறிவதும், அவை பன்னாட்டுப் பொருளாதார அமைப்பில் புகுத்திய முக்கியமான அம்சங்களைக் கூறுவதும்தான் இவ் அதிகாரத்தின் நோக்கம்.

19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இம் மாறுதல்கள் முக்கியமான அம்சங்களைக்கொண்டவை. இம் மாறுதல்களில் பொருளாதார, அரசியல் விவகாரங்களில் பிரிட்டன் தலைசிறந்த நாடாக வளர்ந் ததும், அதோடுகூட உலகப் பொருளாதார நடவடிக்கைகளுக்கே லண்டன் ஒரு கேந்திரமாகத் தோன்றியதும் ஒன்று. இரண் டாவது, மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ஐரோப்பியர் குடியேறிய இதரப் பிராந்தியங்களும் விரைவான பொருளாதார வளர்ச்சி

பெற்றதாகும். இறுதியாக, மெர்க்கன்டலிசக் கொள்கைகளில் அன்றும் அமலில் இருந்த வாணிபக் கட்டுப்பாடுகள் ஒழித்துக் கட்டப்பட்டன. வரலாற்றில் ஏற்பட்ட இந் நிகழ்ச்சிகளெல்லாம் ஒன்றோடொன்று பின்னப்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை. ஆய்வின் குறிக்கோளுக்காக மட்டுமே அவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக்கூற இயலும். அவை அனைத்தும் சேர்ந்து, உண்மையில் உலகப் பொருளாதார அமைப்பு ஒன்றை உருவாக்கிய சக்திகளையும் நிறுவனங்களையும் தோற்றுவித்தன.

பிரிட்டனின் எழுச்சி

1815-க்கும் 1875-க்கும் இடையான 65 ஆண்டுகளில் பெரும் பாலும் விவசாய நாடாகவே இருந்த பிரிட்டன், தொழிற் புரட்சியின் விளைவாக உலகிற்கே ஒரு தொழில் கேந்திரமாக மாறிவிட்டது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை கைத்தறி முறையைக் கொண்டிருந்த பருத்தி நெசவுத் தொழிலில் படிப் படியாக எந்திர முறை ஏற்பட்டு, 1875-ல் கைத்தறியே இல்லாமல் ஆகிவிட்டது. பின்னர் ஒருசில ஆண்டுகளுக்குள் கம்பள நெசவுத் தொழிலும் எந்திரமயமாயிற்று. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக உற்பத்திச் செலவு குறைந்தது. இதர ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் நெசவாலைப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தபோதிலும், பிரிட்டிஷ் நெசவுப் பொருள்கள் தாம் ஷாங்காய் (Shanghai) முதற்கொண்டு புயெனேஸ் ஏய்ரிஸ் (Buenos Aires) வரை உலக அங்காடியில் செல்வாக்குப் பெற்றன. மரக்கரியைக்கொண்டு இரும்பை உருக்கும் நிலை மறைந்து, பிரிட்டனில் ஏராளமாயிருந்த நிலக்கரிச் சுரங்கங்களின்மூலம் கிடைத்த கோக்கைப் பயன்படுத்தி இரும்பை உருக்கும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு கோக்கைப் பயன்படுத்தியதால், இன்னும் தெளிவான பொறிகளை உருவாக்க முடிந்தது. எனவே, மேலும் மேலும் பல தொழில்களில் எந்திர உற்பத்தி முறை புகுத்தப்பட்டது. 1800-ல் கால் மில்லியன் டன் தேனிரும்புகூட உற்பத்தி செய்ய முடியாதிருந்த பிரிட்டன், 75 ஆண்டுகளுக்குள் ஆண்டொன்றுக்கு அதைப்போல் 50 மடங்கு தேனிரும்பை உற்பத்தி செய்யக் கூடிய அளவிற்கு வலுப்பெற்றுவிட்டது. பெருத்த ஓசையோடு இயங்கிய தொழிற்சாலைகள் எழுப்பிய கரியும் புகையும் பரவிக் கிடந்த சேரிகளும் நிறைந்த தொழிற்சாலை முறை, பருத்தி, கம்பளம், கண்ணாடி, பாண்டங்கள், தோற் பொருள்கள் ஆகியவற்றையும், அவற்றைச் செய்வதற்கு வேண்டிய எந்திர தளவாடங்களையும் பெருமளவில் உற்பத்தி செய்து குவித்தது. அத் தொழிற்சாலை முறை, பண்ணைகளிலும் நிலங்களிலும் வேலை செய்துவந்த

மக்களைக் கவர்ந்தது. 1801-ல் மொத்த மக்கள்தொகையில் 31 சதவீதம் பேரே நகரங்களில் வாழ்ந்தனர். ஆனால், 1871-ல் நகர மக்கள்தொகை 61 சதவீதமாக உயர்ந்துவிட்டது. பிரிட்டனுக்குப் போட்டியாகப் பல நாடுகள் தோன்றியபோதிலும், பிரிட்டனுக்கு நிகராக எந் நாடும் வளரவில்லை. உலகிற்கே பிரிட்டன்தான் தொழில் வளமிக்க நாடாகத் திகழ்ந்தது.

ஒவ்வொரு தொழிலிலும் கையால் செய்த வேலைகளை எந்திரத்தால் செய்யும் முறை ஏற்பட்டதால், அக் காலத்தில் மிக முக்கியமான மூலப் பொருள்களாயிருந்த இரும்பும் நிலக்கரியும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. 19 ஆம் நூற்றுண்டில், எந்திரங்களை உற்பத்தி செய்வதற்குத்தான் நிலக்கரியும் இரும்பும் பெருமளவில் பயன்பட்டன. ரெயில்களும் நீராவிக் கப்பல்களும் போக்குவரத்தில் பிரபலியமானவையாயிருந்ததால், அவைகள்தாம் இக் கனிப்பொருள்களைப் பெருமளவில் பயன்கொண்டன. 19 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ரெயில் இஞ்சின்களையும் நீராவிக் கப்பல்களையும்[1] செய்வதற்கு இரும்பும் எஃகும் தேவைப்பட்டன. அதோடு அவற்றை இயக்குவதற்கு நிலக்கரி அவசியமாயிற்று. ரெயில் தண்டவாளங்கள், சக்கரங்கள், ரெயில் பெட்டிகள், இன்னும் இதர சாதனங்களைச் செய்வதற்கும், 1850-க்குப் பின்னர், கப்பல் கட்டுவதற்கும் ஏராளமான இரும்பும் எஃகும் தேவைப்பட்டன.

போக்குவரத்து

இருப்புப் பாதைகளும் நீராவிக் கப்பல்களும் சேர்ந்து இரும்பு எஃகு தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தன என்பது முக்கியந்தான். ஆனால், அதைக்காட்டிலும் முக்கியமானது, பொருள்களையும் பிரயாணிகளையும் அவை துரிதமாயும் மலிவாயும் ஏற்றிச் செல்லும் போக்குவரத்து சாதனங்களாக அமைந்தமைதான். 1825-ல்தான் சிறியதோர் ரெயில்பாதை முதன்முதலில் போடப்பட்டது. பின்னர் 25 ஆண்டுகளுக்குள் பிரிட்டனிலிருந்த முக்கியமான நகரங்களெல்லாம் ரெயில் பாதையால் இணைக்கப்பட்டுவிட்டன. போட்டியே இல்லாமல் இதுவரை இருந்துவந்த தள்ளு வண்டிகள், குதிரை வண்டிகள், ஆற்றுப் படகுகள் ஆகிய போக்குவரத்து சாதனங்களெல்லாம், இப்போது ரெயில் போக்குவரத்திற்

[1] பல மாதிரிக் கப்பல்கள் முந்தைய ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டனவெனினும், 1807-ல் ராபர்ட் ஃபுல்டன் அவர்கள் கண்டுபிடித்த கிளர்மான்ட் கப்பல்தான் **(Robert Fulton's Clermont)** வெற்றிகரமான முதல் நீராவிக் கப்பல். அதுபோல, ரெயில் இஞ்சின்களில் வெற்றிகரமான முதல் இஞ்சின் (1825) ஜார்ஜ் ஸ்டீபன்சனின் ராக்கெட் என்ற இஞ்சின்தான் **(George Stephenson's Rocket)**.

குத் துணை சாதனங்களாக மாறின. இவ்வகை சாதனங்களின் முக்கியத்துவம் மறைந்துகொண்டே சென்றது. 1880-ல் பிரிட்டனில் சுமார் 18 ஆயிரம் மைல் நீளமுள்ள ரெயில்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

இப் புதிய போக்குவரத்து சாதனங்களில் ரெயிலைக்காட்டிலும் நீராவிக் கப்பல்தான் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப் பட்டது. எனினும், நீராவிக் கப்பலில் இருந்த சில தொழில் நுட்பச் சிக்கல்களின் காரணத்தால், 1865 வரை அவை பெருமளவில் பயன்படுத்தப்பெறவில்லை. ஆனால், ரெயில்கள் அதற்கு முன்பே பிரபலியமாகிவிட்டன. எனவே, 1865-ல் கிடைத்த மொத்தச் சரக்கில் 15 சதவீதம்தான் கப்பல் போக்குவரத்திற்குக் கிடைத்தது. அதேசமயம், பாய்மரக் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்ததன்மூலம் பெருகிவந்த உலக வியாபாரத்திற்கு அவை பெரிதும் பயன்பட்டன. பிரிட்டனின் கப்பல்களும் மாலுமிகளும் உலகிற்கு வழிகாட்டக்கூடிய வகையில் தலைசிறந்து விளங்கினர். 1850-ல் உலகின் மொத்தக் கப்பல் சரக்குகளில் சுமார் 60 சதவீதம் பிரிட்டிஷ் கப்பல்களுக்குக் கிடைத்தது. 19 ஆம் நூற்றுண்டின் இறுதியில் பாய்மரக் கப்பல்களைக் காட்டிலும் நீராவிக் கப்பல்கள் தாம் அதிக அளவுச் சரக்கினை ஏற்றிச் சென்றன. உலகிலிருந்த வாணிபக் கப்பல்களில் பிரிட்டன்தான் அதிகமாய்க் (73 சதவீதம்) கொண்டிருந்தது.

வாணிபம்

தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும், துறைமுகப் பட்டணங்களுக்குக் கொண்டு செல்லவேண்டிய முடிவுப் பொருள்களையும் ரெயில்கள் மலிவாகவும் துரிதமாகவும் ஏற்றிச்சென்றன. அதேசமயம், ஆலைப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றிச் செல்வதற்கும், அங்கிருந்து தனக்கு வேண்டிய உணவுப் பண்டங்களையும் கச்சாப் பொருள்களையும் ஏற்றிவருவதற்கும் பிரிட்டனிடம் ஏராளமான கப்பல்கள் இருந்தமையால், அதன் வாணிபம் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்தது. அதன் ஏற்றுமதி அளவு 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதிக்குள்மூன்று மடங்கு பெருகி, பின்னர், பிற்பகுதியில் மேலும் மூன்று மடங்கு அதிகரித்தது. இறக்குமதியோ இதைக் காட்டிலும் அதிகமாகப் பெருகியது. தனக்கு வேண்டிய உணவுப் பண்டங்களுக்கும் கச்சாப் பொருள்களுக்கும் பிரிட்டன் வெளிநாடுகளையே பெருமளவிற்குச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது என்பதையே இது பிரதிபலிக்கிறது. அதன் இறக்குமதி அளவு 1850-ல் மூன்று மடங்கு அதிகரித்தது; பின்னர் 1890-ல் மேலும் மூன்று மடங்கு

பெருகியது. அதன் ஏற்றுமதியை எடுத்துக்கொண்டால், ஏனைய எல்லாப் பொருள்களைக் காட்டிலும் துணிமணிகள்தாம் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1880-ல் ஏற்றுமதி செய்யப் பட்ட பொருள்களில் பாதிக்குமேல் துணிமணிகள்தாம்; மற்று மொரு கால்பகுதி நிலக்கரி, இரும்பு எஃகு பொருள்கள்; எஞ்சிய பகுதி பலவகை ஆலைப் பொருள்கள்.

நகரப்புறங்களில் வாழ்ந்த மக்கள்தொகை பெருகியதாலும், மேலும் மேலும் தொழிற்சாலைப் பொருள்களிலேயே சிறப்புத் தேர்ச்சி செய்ததாலும், தனக்கு வேண்டிய உணவுப் பண்டங் களுக்கும் கச்சாப் பொருள்களுக்கும் பிரிட்டன் அயல்நாடுகளையே பெரிதும் எதிர்பார்க்க வேண்டியதாயிற்று; நெப்போலியனோடு நடத்திய போர் முடியும் சமயம், முன்பிருந்ததைக் காட்டிலும் உணவுப் பண்டங்களில் ஓரளவு சுயநிறைவு பெற்றது. அதேபோல் தன் தொழில்களுக்கு வேண்டிய கச்சாப் பொருள்களில் ஆட்டு உரோமத்தையும் இரும்புக் கனியையும் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லாத அளவிற்குத் தானே அவற்றை உற்பத்தி செய்தது. ஆனால், பருத்தியும் மரமும் பிற நாடுகளி லிருந்தே வரவேண்டியதாயிருந்தது. எனினும், ஏற்றுமதி அபிவிருத்தி அடைந்த அதே சமயம், 1800-ல் 15 மில்லியனாக இருந்த மக்கள்தொகை 1900-ல் 44 மில்லியனுக்கு அதிகரித்ததால், பிரிட்டன் தான் கொண்டிருந்த சுயநிறைவை இழக்க வேண்டிய தாயிற்று. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டனில் நுகரப் பட்ட கோதுமை, கோதுமை மாவு ஆகியவற்றில் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். 1870 ஆம் ஆண்டுகளில் இறைச்சியையும் இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று. 1876ஆம் ஆண்டிற்குப் பின்னர் குளிர்சாதனங்களைப் பயன்கொண்டதன் விளைவாக, அர்ஜென்டைனாவிலிருந்து மாட்டிறைச்சியையும், ஆஸ்திரேலியாவிலிருந்து ஆட்டிறைச்சியையும் மலிவாகப் பெரு மளவில் இறக்குமதி செய்ததால், உள்நாட்டில் இருந்த இறைச்சிக் கொட்டில்களின் (slaughter-houses) எண்ணிக்கை குறைந்து கொண்டே சென்றது. மேலும், இதுவரை பெருமளவில் இறக்குமதி செய்துவந்த பருத்தி, மரம் ஆகிய மூலப் பொருள்களோடு ஆஸ்தி ரேலியாவிலிருந்து ஆட்டு உரோமத்தையும் இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. சிறிதுகாலம் கழித்து, ஆஸ்திரேலியாவி லிருந்து இறக்குமதி செய்த ஆட்டு உரோமமும் போதாமல் உருகுவே (Uruguay), தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலிருந்தும் பெரு மளவில் இறக்குமதி செய்ய நேரிட்டது. 1860-க்குப்பின், உள் நாட்டில் கிடைத்த இரும்புக் கனிப்பொருள் போதாததால், ஸ்பெயின் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று.

1885-ல் உள்நாட்டில் உற்பத்தியான இரும்புக் கனிப்பொருளில் சுமார் கால்பங்கு அளவிற்கு இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. முக்கியமான இம் மூலப் பொருள்களைத் தவிர, மேலும் பலவகைப் பொருள்களை—சணல், கற்றுழை நார், தகரம், செம்பு, ஈயம், நிக்கல், தேயிலே, காப்பி, கொக்கோ ஆகியவற்றை—இறக்குமதி செய்தது. இது, பிரிட்டன் நாடும், இவற்றை ஏற்றுமதி செய்த நாடுகளும் எந்த அளவிற்கு இவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தன என்பதைக் காட்டுகிறது.

தனிச் சிறப்படைந்த அங்காடி வசதிகள்

பெருமளவில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பொருள்களின் இறக்குமதி விரிவடைந்ததால் ஏற்பட்ட விளைவுகளில், பல தனிச் சிறப்புப்பெற்ற அங்காடிகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றியது மிக முக்கியமானதாகும். இவற்றில் வாசனைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவற்றின் அங்காடிகள் போன்ற சில அங்காடிகள் வெகு காலத்திற்கு முன்பே தோன்றியவையாகும். எலிஸபெத்தின் காலத்திலிருந்தே இவற்றை இறக்குமதி செய்து, மறுபடியும் ஏற்றுமதி செய்யும் வாணிபத்தில் பல வணிகர்களும் தரகர்களும் ஈடுபட்டிருந்தனர். தானியச் சட்டங்களை ரத்து செய்ததன் விளைவாக, 1846 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கோதுமை இறக்குமதி அதிகரித்துக்கொண்டே சென்றது. இதனுல், கோதுமையிலும், ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இதரவகை உணவுப் பண்டங்களிலும் தனிச் சிறப்பான வாணிபம் தொடங்கியது. இவ் வாணிபம் அனைத்தும் லண்டனில் வணிகர்கள் வழக்கமாகக் கூடும் இடமான பால்டிக் காப்பி நிலையத்தில்தான் (Baltic Coffee House) பெரும்பாலும் நடைபெற்றது. அதேசமயம் அமெரிக்காவி லிருந்து இறக்குமதியான உணவுத் தானிய வியாபாரத்தில் லிவர்பூல் 'சிறப்புப் பணியைத் தொடங்கியது. 1870-க்குப் பின்னர் அமெரிக்காவின் மேற்கு மாநிலங்களில் இருப்புப் பாதை போடப்பட்டதன் விளைவாக, மலிவான கோதுமை அமெரிக்காவிலிருந்து வந்து குவிந்தது. இதனுல் லண்டனைக் காட்டிலும் லிவர்பூல் அங்காடி முக்கியமானதாக ஆயிற்று. மேலும், பருத்தித் தொழிற்சாலை நகரங்களுக்கு அருகில் இருப்பதால், பருத்தி மார்க்கெட்டிற்கும் லிவர்பூல் புகழ் பெற்றதாயிற்று. இங்கு வெவ்வேறு தரமுடைய பருத்தியில் உடனடிப் பேரங்களும் ('Spot' transactions) முன்னேக்கிய பேரங்களும் ('future' transactions) ஒழுங்குமுறையோடு நடைபெற்ற பல அங்காடிகள் இருந்தன. அடுத்து, இங்கிலாந்தின் கம்பள வியாபாரத்தில் நெடுங்காலமாகவே லண்டன் ஒரு புகழ்பெற்ற வியாபாரக் கேந்திரமாக இருந்துவந்தது; உள்நாட்டு உற்பத்தி

யைக்காட்டிலும் இறக்குமதி அளவு அதிகமாகியதால், அதை உலகிற்கு விநியோகம் செய்யும் வர்த்தகத் தலமாகவும் லண்டன் பெயர் பெற்றது.

லண்டன் பண அங்காடி (The London Money Market)

வாணிபத் துறையிலும் தொழில் துறையிலும் பிரிட்டன் தலை சிறந்து விளங்கியபோது, தனிச் சிறப்புப்பெற்ற பலவகை அங்காடிகள் அங்குத் தோன்றின. அவற்றில் லண்டன் பண அங்காடிதான் அந் நாட்டின் தலைசிறந்த நிலைமைக்கு முக்கிய காரணம். லண்டனின் பாங்கு, நிதி வசதிகள் படிப்படியாக முழு நிறைவு பெற்றதன்மூலமாக, பவுன் உண்மையான உலகச் செலா வணியாக விளங்கியது மட்டுமன்றி, உலகம் முழுவதும் ஒரு ஸ்டெர்லிங் பிரதேசமாக விளங்கியதே இதற்குக் காரணமாகும்.

பல நூற்றுண்டுகளாகவே பிரிட்டிஷ் பேரரசின் வாணிப, நிதி விவகாரங்களில் லண்டன் தலைசிறந்த நகரமாக விளங்கி வந்தது. நெப்போலியனேடு நடந்த போர் முடிவடையும் சமயம், கம்பெனி யல்லாத 800 தனியார் பாங்குகள் பிரிட்டனில் பணிபுரிந்துவந்தன. அவற்றில் மிகப்பெரிய 60 பாங்குகள் லண்டன் நகரில் நிறுவப்பட் டிருந்தன. மற்றவை அனைத்தும் நாடெங்கிலும் பரவலாகப் பணியாற்றிவந்தன. லண்டனின் உபயோகத்திற்கென்றும், நாட்டின் இதரப் பகுதிகளுக்கு விநியோகம் செய்வதற்கென்றும் அல்லது ஏற்றுமதி செய்வதற்கென்றும் வந்துகொண்டே இருக்கும் பொருள்களுக்குப் பணம் செலுத்துவதற்காகப் பின் வரும் ஏற்பாடு செய்யப்பட்டது. மாநில வணிகர்களும் (Provincial traders) தொழிற்சாலை உரிமையாளர்களும், அவர்களிடமிருந்து பண்டங்களை வாங்கிய லண்டன் வாடிக்கையாளர்மீது உண்டியல்களை எழுதி, அந்தத் தொகையை ஏதாவதொரு நகர பாங்கில் (city bank) கட்டச்சொல்லி அவர்களுக்கு ஆணை யிடுகிருர்கள். இந்த உண்டியல்களைத் தம் ஊரிலுள்ள பாங்கில் கழிவு செய்து (discount), பாங்கு கழிவுபோக மீதமுள்ள தொகை யைப் பெறுவார்கள். நாட்டுப்புற பாங்கு (country bank) இவ் உண்டியல்களைத் தாம் விரும்பும் லண்டன் பாங்கிற்கு அனுப்பும். அது 30 அல்லது 60 நாட்கள் கழித்து, அவ் உண்டியல்களுக்குப் பணம் வரும்வரை அவற்றை வைத்திருக்கும்; அல்லது அதை உடனடியாக மறு கழிவு செய்து (rediscount), பணம் பெற்றுக் கொள்ளும்; அல்லது முதலீட்டிற்கென்று பணம் வைத்துள்ள வேருெரு பாங்கிற்கு விற்கும். இவ்வாறு உடனடியாகவோ, அல்லது சில நாட்கள் கழித்தோ, தன் ஊரிலுள்ள வாடிக்கையாளர்

களுக்குப் பணம் செலுத்தியதற்கு ஈடாக நாட்டுப்புற பாங்கு லண்டனில் வைப்புகளைப் (deposits) பெறுகிறது.

அதேசமயம், லண்டனிலிருந்தும் பொருள்கள் மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருந்தன. இவற்றை வாங்கும் மாநில வாடிக்கையாளர்கள், இவற்றிற்கு லண்டனில் பணம் செலுத்த வேண்டியிருந்தது. அதற்காக அவர்கள் ஊரிலுள்ள பாங்கு, அதனுடன் தொடர்புகொண்ட லண்டன் பாங்கின்மீது வரையப்பட்ட உண்டியல்களை வாங்கி, அவற்றை லண்டனுக்கு அனுப்பினர். இந்த உண்டியல்கள் அந்த லண்டன் தொடர்பு பாங்கை சரக்கு அனுப்பிய லண்டன் வணிகர்களுக்குக் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்குமாறு ஆணையிட்டன. இவ்வாறு, ஏற்கெனவே மாநில பாங்குகள் லண்டனில் சேர்த்துவைத்திருந்த வைப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. மாநிலங்களிலிருந்து சரக்கு வாங்கியவர்கள், தாம் செலுத்தவேண்டிய தொகைகளை உள்ளூர் பாங்குகளில் செலுத்தினர்; லண்டனிலிருந்த விற்பனையாளர்கள் லண்டனிலேயே பணத்தைப் பெற்றனர். மாநிலங்களிலிருந்து பொருள்களை வாங்கின லண்டன் வாசிகள் லண்டனில் பணத்தைச் செலுத்தினர்; மாநிலங்களிலுள்ள விற்பனையாளர்கள், தம் உள்ளூர் பாங்குகளிடமிருந்து பணத்தைப் பெற்றனர். எனவே, பொன்னோ, பணமோ எந்தத் திசையிலும் செல்லவேண்டிய அவசியமில்லை. பெரும்பாலான நடவடிக்கைகள் ஒன்றுக்கு ஈடாக மற்றொன்று தீர்க்கப்படுகின்றன.

உண்டியல் தரகர்களும் உண்டியல் வணிகர்களும் (Bill Brokers and Dealers)

இச் செயல் முறை வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானால், இடைவிடாமல் எழுதப்பட்டுவரும் எண்ணற்ற நாட்டுப்புற உண்டியல்களைக் கழிவுசெய்து பணம் தருவதற்கு யாராவது முன்வரவேண்டும். இந்த உண்டியல்களுக்குச் சாதாரணமாக உடனடியாகப் பணம் கிடைக்காது; சில நாட்கள் கழித்துத் தான் கிடைக்கும். இந்த உண்டியல் கழிவு நடவடிக்கைகளுக்குப் பணம் கொடுக்கவும், அல்லது பணம் கொடுப்பாருக்கு ஏற்பாடு செய்யவும் சிறப்புத் தேர்ச்சிபெற்ற விரிவான நிறுவனங்கள் தோன்றின. இத்தகைய நிறுவனங்களில் முதலில் தோன்றியது உண்டியல் தரகர் நிறுவனமாகும். நெப்போலியனுடன் நடந்த போர் முடியும் தருவாயில் உண்டியல் தரகர்கள் முதன் முறையாகச் செயலாற்றத் தொடங்கினர். சிலகாலம் வரை, தரகர் என்ற பெயர் பொருள் தருவதுபோல், இவர்கள் நிதித் துறையில் வாங்குவோருக்கும் விற்போருக்கும் தொடர்பு

ஏற்படுத்திவிடுபவர்களாகவே இருந்தனர். அதாவது, நாட்டுப்புற வணிகர்கள், பாங்கர்கள் ஆகியோரின் உண்டியல்களைத் தேடிச் செல்வதும், உபரித் தொகை வைத்துள்ள பாங்குகளைக் கண்டு பிடித்து, அவற்றைத் தம்வசமுள்ள உண்டியல்களை வாங்கச் செய்வதும் இவர்களுடைய பணியாக இருந்தது. அவர்கள் பட்ட கஷ்டத்திற்கும் சேவைக்கும் ஊதியமாக ஒரு சிறு கமிஷன் தொகையைப் பெற்றனர்.

50 ஆண்டுகளுக்குப்பின், உண்டியல் தரகர்கள் செய்த பணியை உண்டியல் வணிகர்கள் மேற்கொள்ளத் தொடங்கினர். உண்டியல் வணிகர்கள் வெறும் பதிலாட்கள் (agents) அல்ல; அவர்களே முதலாளிகள். தமது சொந்தப் பணத்தையும் பெரிய லண்டன் பாங்குகளிலிருந்து குறுகிய காலத்திற்கென வாங்கிய கடன் தொகையையும் பயன்படுத்தி, தமது சொந்தக் கணக்கில் அவர்கள் உண்டியல்களை வாங்கினர். உண்டியல் வணிகர் களுக்குப்பின், உண்டியல் கழிவகங்கள் (discount house) தோன்றின. உண்டியல் கழிவகம் என்பது ஒரு பெரிய அளவு உண்டியல் வணிக நிறுவனமே. அதனுடைய சொந்த மூலதனம் அதிகம். அதோடு, பொதுமக்களிடமிருந்து அது வைப்புகளைப் பெற்று, அவற்றிற்கு வட்டி கொடுத்தது. அது செய்த வியா பாரத்தின் அளவும் அதிகம்.

ஒப்பு அகங்கள் (Acceptance Houses)

உண்டியலை ஒப்பும் பணி, மற்றொருவகைச் சிறப்புத்தேர்ச்சி பெற்ற பணியாகும். 18 ஆம் நூற்றுண்டின் இறுதியிலோ, அல்லது 19 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலோ இப் பணியை லண்டனிலிருந்த பெரிய நிறுவனங்கள் செய்யத் தொடங்கின. அவை பலருடன் வியாபாரம் செய்ததனுல், எண்ணற்ற வியா பாரிகள், உற்பத்தியாளர்கள் ஆகியோருடைய நாணயத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தன. எனவே, தம்மைப்போல் சிறந்து விளங்காத நம்பிக்கையுள்ள பல தனி நபர்கள், நிறுவனங்கள் ஆகியோரின் உண்டியல்களுக்கு அவர்களால் பொறுப்பு ஏற்க (underwrite) முடிந்தது. உண்டியலின்மீது தம் கையெழுத்துடன் 'ஒப்புக்கொள்கிறேன்' (accepted) என்று எழுதி, இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்கிருர்கள். இது உண்டியலுக்கு உத்தரவாதம் தருவதாகிறது. இதற்காக அவர்களுக்கு ஒரு சிறு கமிஷன் கிடைக்கிறது. இதன் விளைவு வருமாறு :

'தெளிவாகக் கூறின், இரண்டாந்தர நாணயமுடைய ஒரு மனிதன், முதல்தர நாணயமுடைய ஒரு மனிதனுக்குக் கமிஷன்

கொடுத்து, அவன் செய்யும் உதவிக்காகக் கொடுத்த இச் சிறு தொகையைக்காட்டிலும் அதிக அளவிற்கு உண்டியல் கழிவு வீதத்தில் இலாபம் அடைகிறான்.'[2]

இவற்றில் நடைபெற்ற வணிகத்தின் அளவு அதிகமாக அதிகமாக, அதேசமயம் இங்கிலாந்து நாட்டின் செல்வம் பெருகி, வெளிநாட்டு அரசாங்கங்களின் பத்திரங்களிலும் இருப்புப் பாதைகளிலும் முதலீடு செய்யத் தொடங்கியதும், இந்த வணிக நிறுவனங்களில் முக்கியமான சில நிறுவனங்கள், தம் வாணிப நடவடிக்கைகளைக் கைவிட்டு, ஒப்புதல் பணியையும் பத்திர வெளியீட்டையும் (security issues) சிறப்பாக மேற்கொண்டன. அவர்களுடைய வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகமாக இருந்தமையாலும், பிரிட்டனின் அயல்நாட்டு வாணிபம் பெரிய அளவில் வளர்ந்ததாலும், இந் நிறுவனங்களின் ஒப்புதல் வியாபாரம், பெரும்பாலும் பன்னாட்டு விவகாரங்களைச் சார்ந்தே இருந்தது. 1850 வரை இந்தப் பெரிய ஒப்புதல், பத்திர வெளியீட்டகங்கள், ஏறக்குறைய நாணய மாற்றுத் தொழிலிலும் (Foreign exchange business) சர்வாதீனம் பெற்றிருந்தது. அதாவது, வெளிநாட்டுச் செலாவணிகளில் எழுதப்பட்டிருந்த உண்டியல்களை வாங்குவதிலும் விற்பதிலும் அவை பெருமளவிற்குச் சர்வாதீனம் பெற்றிருந்தன. பின்னர், தம் நடவடிக்கைகளில் இந்தப் பகுதியைப் புதிதாக ஏற்பட்ட ஒருவகை நிதி நிறுவனங்கள் செய்யட்டும் என விட்டுவிட்டன. இப் புது நிறுவனங்கள் ஃபிரான்ஸ்—பிரஸ்ஸியப் போருக்குப்பின் லண்டனில் நிறுவப்பட்ட அயல்நாட்டு பாங்குகளின் கிளைகள் ஆகும்.

இந்த முக்கியமான வணிக நிறுவனங்களில் சில, மேன்மேலும் பத்திர வெளியீட்டில் மட்டும் ஈடுபட்டுவந்த சமயத்தில் பிற நிறுவனங்கள், புதிதாக இத் துறையில் தோன்றியவை முதலியன உண்டியல் ஒப்புதல் வியாபாரத்திலேயே சிறப்பாக ஈடுபட்டன. எனவே, 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உண்டியல்களை ஒப்பும் பணியும் கழிவு செய்யும் பணியும் பெரும்பாலும் விசேஷத் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள், கம்பெனிகள் ஆகியவற்றால் செய்யப்பட்டு வந்தன. இரண்டுவகைப் பணிகளிலும் ஒரு பகுதியை வணிக பாங்குகள் (Commercial banks) செய்தன. இவ் வணிகப் பாங்குகளில் முக்கியமானவை 1870-க்குப்பின் லண்டனில் நிறுவப்பட்ட வெளிநாடுகளையும் காலனிகளையும் சேர்ந்த பாங்குகளின் கிளைகள் ஆகும்.

[2] Ellis T. Powell அவர்கள் வரைந்த 'The Evolution of the Money Market' என்ற நூலில் 374ஆம் பக்கம். Copyright 1915 by the Financial News, London.

இங்கிலாந்து பாங்கு (Bank of England)

பாங்கு அமைப்பில் மையமான நிலையில் இருப்பது இங்கிலாந்து பாங்கு. முதலில் அது தனியார் துறையில் இருந்தது. எனவே, அதன் நிருவாகிகள் தனியார் துறையிலுள்ள இதர பாங்கிற்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்று கருதினார்கள். இருந்தபோதிலும், 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஒரு மத்திய பாங்கு சிறப்பாகச் செய்யும் சில பணிகளை இது செய்தது. (1) அரசாங்கத்தின் பாங்கு விவகாரங்கள் எல்லாவற்றையும் அது மேற்கொண்டது. நெப்போலியனுடன் நடந்த போர்களின்போது நிதித் துறையில் அரசாங்கத்தின் வலக்கரமாக அது விளங்கியது. (2) பிரிட்டிஷ் பேரரசில் முக்கியமானதொரு பொன் சேமநிதியை (gold reserve) இதுமட்டுமே கொண்டிருந்தது. (3) லண்டன் பாங்குகள் அனைத்தின் சேமநிதியின் பெரும்பகுதியை அவற்றின் வைப்புகளாக அது வைத்திருந்தது.

சிலவகை வணிக உண்டியல்களை மறு கழிவு செய்வதன் மூலம் வணிக பாங்குகளுக்கு அவசியம் ஏற்படும்போது, நிதி உதவி செய்ய மத்திய பாங்கு கடமைப்பட்டுள்ளது என்று பொதுவாக இப்போது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், இந்தக் கடமையைத் தயக்கத்துடனும் விருப்பமின்றியும்தான் இங்கிலாந்து பாங்கு ஏற்றது. முதன்முதலில் பலமுறை நெருக்கடிகள் ஏற்பட்டபோது, பொன்னுக்கும் செலாவணிக்கும் அசாதாரணமான தேவை ஏற்பட்டதால், வணிக பாங்குகள் தம் சேமநிதி அனைத்தையும் பயன்படுத்தியபின், இங்கிலாந்து பாங்கு உற்றுழி உதவுவோனாக (lender of last resort) பணிபுரிய மறுத்துவிட்டதால், அரசாங்கம் இவ் விஷயத்தில் தலையிட வேண்டியிருந்தது. இதற்காக (1793-லும் 1811-லும்) பொருள்களின் அடமானத்தின்மீது வணிகர்களுக்குக் கருவூல உண்டியல்களைக் (Exchequer bills) கொடுத்துதவியது; அல்லது (1847-லும் 1857-லும் செய்ததுபோல்) சட்டம் நிர்ணயம் செய்திருந்த வரம்பிற்கும் அதிகமாகத் தாராளமாய் நோட்டுகளை வெளியிடுவதால் இங்கிலாந்து பாங்கிற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கு உத்தரவாதம் அளிக்கச் சட்டம் இயற்றுவதாக அரசாங்கம் வாக்களித்தது.

இறுதியாக, 1860-ல் இங்கிலாந்து பாங்கு தானாகவே முன் வந்து, கடனுக்கேற்பட்ட தேவையைப் பூர்த்திசெய்து, அதுபற்றிய விவரத்தை நிதி மந்திரிக்கு (Chancellor of the Exchequer) கடிதம் வழியாகத் தெரிவித்தது. அதற்கு அவர் அளித்த பதிலில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்குத் தாராளமாகக் கடன் கொடுக்கலாம் என்று அதற்கு அதிகாரம் அளித்தார். இதைத் தொடர்ந்து

'உற்றுழி உதவுவோனாக' செயலாற்றும் கடமையை இங்கிலாந்து பாங்கு ஒப்புக்கொண்டது சரிதானா என்ற தீவிரமான விவாதம் நடந்தது. இந்த விவாதம் பேஜெட் (Bagehot) அவர்களின் 'லாம்பர்ட் ஸ்டிரீட்' (Lombard Street) என்னும் நூல் வெளியானதும் முடிவடைந்துவிட்டது. இந் நூலில் கண்ட 'தெளிவான பொது அறிவே விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதன் பிறகு இங்கிலாந்து பாங்கின் பாங்குத்துறை (banking department) உற்றுழி உதவும் கடமையை அவசியம் ஏற்கவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.'[3]

சுருக்கம்

இப்போது லண்டன் பண அங்காடியை முழுமையாகக் காணவும், அதன் நடவடிக்கைகளை ஆயவும்கூடிய நிலைக்கு வந்து விட்டோம். தொழிலுக்கும் வாணிபத்திற்கும் வேண்டிய குறுங் காலக் கடனை முக்கியமாய் லண்டனிலிருந்த அயல்நாட்டு பாங்கின் கிளைகள், காலனி நாடுகளின் பாங்குக் கிளைகள் உட்பட எல்லா பாங்குகளுமே தம் நிதியிலிருந்து அளித்தன. இதை நிறைவுபடுத்தும் வழியில் உண்டியல் வணிகர்கள், கழிவு அகங்கள் ஆகியவற்றின் மூலதனமும், கழிவகங்களில் பொதுமக்கள் வைத் திருந்த வைப்புகளின் பணமும் ஓரளவிற்குப் பயன்படுத்தப் பட்டது. லண்டனிலும், பிரிட்டனின் இதர பகுதிகளிலும் வாழ்ந்த வணிகர்களும் உற்பத்தியாளர்களும் மட்டுமன்றி, 19 ஆம் நூற் றுண்டின் முடிவிலிருந்து உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த வணிகர்களும் உற்பத்தியாளர்களும் இக் கடனைப் பெற முடிந்தது. பிரிட்டனின் வணிகர்களும் உற்பத்தியாளர்களும் தமது நடப்பு மூலதனத்திற்கு (Working Capital) வேண்டிய குறுங்காலக் கடனின் ஒரு பகுதியை லண்டனில் அல்லது மாநிலங்களில் இருந்த பாங்குகளிடமிருந்து நேரடியாகப் பெற்றனர். எஞ்சிய பகுதியைத் தம்மிடமிருந்த உண்டியல்களைக் கழிவு அங்காடியில் கொடுத்துக் கழிவு செய்ததன்மூலம் அடைந்தனர். அயல் நாட்டவர்களுக்குத் தேவைப்பட்ட கடன் அனைத்தும் இந்தக் கழிவு அங்காடியின்மூலம் தான் கொடுக்கப்பட்டது. உண்டியல் கழிவு அங்காடிக்கு வரும் உண்டியல்கள் நெடுநாட்களாக இருந்துவரும் பெயர்பெற்ற நிறுவனங்களிடமிருந்து வந்தால், அவை உள்நாட்டு உண்டியல் களாயிருந்தாலும் சரி, அல்லது வெளிநாட்டு உண்டியல்களாய் இருந்தாலும் சரி, ஒன்று நேரடியாக ஓர் உண்டியல் வணிக ராலோ அல்லது கழிவகத்தாலோ கழிவு செய்யப்படும்; அல்லது

[3] R. G. Hawtrey அவர்களின் 'The Art of Central Banking' என்ற நூலில் 126 ஆம் பக்கம். Copyright 1932 by Longmans, Green & Co., London.

உண்டியல் தரகர்களின் வழியாகப் பாங்குகளிடையே பங்கிடப்படும். பணம் தரவேண்டிய நிறுவனம் பெயர்பெற்றதாக இல்லாவிட்டால், அதனுடைய உண்டியல் சிறப்புத் தேர்ச்சிபெற்ற ஒப்புதல் அகங்களின் கையெழுத்தோடு உண்டியல் அங்காடிக்கு வரும்.

சாதாரண காலங்களில் பாங்குகள் தமது வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்த குறுங்காலக் கடன் நிதியும், அதனோடு கழிவு அங்காடியில் இருந்த நிதியும் பிரிட்டனின் உள்நாட்டு, அயல் நாட்டு வாணிபத்திற்கு மட்டுமன்றி, ஏனைய நாடுகளின் அயல் நாட்டு வாணிபத்திற்கும் போதுமானதாகவே இருந்தது. இக் கடன்களும் கழிவு செய்யப்படவேண்டியிருந்த உண்டியல்களும் மிகக் குறுங்காலத்தவையாகும். சாதாரணமாக 6 நாட்கள் முதல் 90 நாட்கள் வரைதான் இது கொடுக்கப்பட்டது. இவை அன்றாடம் வந்துகொண்டே இருந்ததால், பழைய கடன்கள் தீர்க்கப்படுவதும் புதிய கடன் கொடுப்பதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. எனவே, லண்டன் பண அங்காடியின் நிதி முழுவதும் இடைவிடாமல் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்ததால் அது ஒரு பெரும் சுழல் நிதியாக இருந்தது.

இந் நிதியிலிருந்து கடன் அளிக்கக்கூடிய தொகையை நோக்க, அதற்கேற்பட்ட தேவை காலத்திற்கேற்ப அதிகரித்துக் கொண்டும் குறைந்துகொண்டும் இருந்தது. இவ்வாறு தேவை விரிவடைந்தும் சுருங்கிக்கொண்டும் இருந்ததால், கழிவு வீதமும் (discount rates) உயர்ந்துகொண்டும் இறங்கிக்கொண்டுமிருந்தது. கடன்களின் தேவை மிகவும் அதிகமானாலும் சரி, வெளி நாட்டுக்குப் பொன் அனுப்பவேண்டியிருந்தாலும் சரி, உள்நாட்டில் கடன் தருவதற்கென்று லண்டன் பாங்குகள் தம் சேம நிதிகளைக் குறைத்துவிடுவதன்மூலம் அவை மேலும் கடன்தர முடியாமற் போனாலும் சரி, பண அங்காடி (money market) இங்கிலாந்து பாங்கை நாடவேண்டியிருந்தது. அப்போது கழிவகங்கள் (வணிக பாங்குகள் அல்ல) மத்திய பாங்கிடம் சென்று, மேலும் சேமநிதிகளைப் பெறும். அதனால் கடன் செலாவணி திடீரென்று சுருங்கி விடுவது தடுக்கப்பட்டது.

உண்மையில், அந்நியச் செலாவணி விவகாரங்கள், அதாவது பவுன் அல்லாத வெளிநாட்டுச் செலாவணிகளில் எழுதப்பட்ட உண்டியல்களை வாங்குவதும் விற்பதுமான நடவடிக்கைகள் வெளி நாட்டுப் பாங்குகளால் செய்யப்பட்டன என்பதை முன்னரே சுட்டிக்காட்டினோம். இவ்வாறான நடவடிக்கைகள் முதல் உலகப்

போருக்கு முன்னர் அவ்வளவு அதிகமாக இருந்ததே இல்லை. ஏனெனில், பிரிட்டனின் ஏற்றுமதிகள் எல்லா நாடுகளுக்கும் சென்றன; பவுன் செலாவணி பொன்னுக்குச் சமமாகக் கருதப் பட்டது. இதனால் பவுன்கள்மூலம் செலுத்துவது வசதியாக இருந்தது. எனவே, பிரிட்டிஷ் ஏற்றுமதியாளர்கள் பவுன் செலா வணியில் உண்டியல்களை வரைந்தனர்; பிரிட்டிஷ் இறக்குமதி யாளர்மீதும் பவுன் செலாவணியில்தான் உண்டியல்கள் வரையப் பட்டன. இதனால், பிரிட்டனின் ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு மட்டுமன்றிப் பிறநாடுகளின் ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதி களுக்கும்கூட பணம் செலுத்துவதற்கென்று பெரும்பாலும் ஸ்டெர்லிங் உண்டியல்கள்தாம் பயன்படுத்தப்பட்டன.

லண்டன் பண அங்காடிக்கு வந்துகொண்டே யிருந்த ஸ்டெர்லிங் உண்டியல்களின் அளவு மிகப் பெரிதாக இருந்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள், வெளிநாட்டு வாணிபம் ஆகிய இரண்டின் செலுத்தல் தேவைகளையும் இந்த உண்டியல்களே பூர்த்தி செய்தன. இவ்வகையான வெளிநாட்டு வாணிபத்தில் இங்கிலாந்தைத் தவிர, ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு அனுப்பப்பட்ட சரக்குகளுக்குக்கூட ஸ்டெர்லிங் உண்டியல்கள்தாம் பணம் செலுத்துவதற்குப் பயன் படுத்தப்பட்டன. பன்னாட்டுச் செலுத்தல் காரியங்களில், பிற எல்லாச் செலாவணிகளைக்காட்டிலும் பவுன் செலாவணியே எல்லோராலும் விரும்பப்பட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, பிரிட்டனின் தலைசிறந்த நிலை. தொழிற் சாலை உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியிலும் கச்சாப் பொருள்கள், உணவு தானியங்களின் இறக்குமதியிலும் பிரிட்டன் தான் தலைசிறந்து விளங்கியது. வெளிநாடுகளில் முதலீடு செய்வ திலும் பிரிட்டனுக்கு இணையாக எந்த நாடும் சிறப்புப் பெறவில்லை. இரண்டாவதாக, பவுனின் பொன் மதிப்பு மாறுமல் நிலையாக இருந்தது. 1821 முதல் 1914 வரை பொன் திட்டத்தைத் தீவிர மாகப் பின்பற்றியதே இதற்குக் காரணம். அடுத்து, பிரிட்டனின் உண்டியல் ஒப்பு அகங்கள் தம் நாணயத்திற்குப் பெற்றிருந்த நற்பெயரும் ஒரு முக்கியக் காரணமாகும். அவற்றின் கையெழுத்து இருந்த உண்டியல்கள்தாம் உலகிலேயே மிகக் குறைந்த வீதத்தில் லண்டன் உண்டியல் அங்காடியில் தயக்கமின்றிக் கழிவுசெய்து விற்கப்பட்டன. இதைப்பற்றிக் கூறும்போது பவல் (Powell) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இது நமக்கு எவ்வித நேரடியான தொடர்பும் இல்லாத பன்னாட்டு

வாணிபத்தின் ஒரு பெரும் பகுதியின்மூலம் நமக்கு இலாபம் கிடைக்கச் செய்துள்ளது. இதற்கென்று அந்த வாணிபத்திற்கு நிதி ஏற்பாடு செய்ய நமது ஒப்புதல்களை நாம் கடனாகக் கொடுக்கிறோம். இதன்மூலம் நியூயார்க் நகரத்திற்குப் பட்டு அனுப்பியதற்கென்று நியூயார்க் அல்லது பெர்லின்மீது வரையப்பட்ட உண்டியல் கான்டனில் (Canton) கைமாறுவதைக் கற்பனை செய்து பார்க்கக் கூடும்; எனினும், பட்டு ஏற்றுமதி செய்பவன் தனது உண்டியலுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டுமானால் அதை இலண்டன் மீதுதான் வரைவான்.'[4]

வலுவான இச் சக்திகள் செயல்பட்ட காரணத்தால் இலண்டன் உலகிற்கே தலைசிறந்த நிதிக் கேந்திரமாக ஆயிற்று. உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு மட்டுமன்றி, வெளிநாட்டு இறக்குமதியாளர்களுக்கும் அது குறுங்காலக் கடன் வசதி அளித்தது. அவ்வப்போது வெளிநாட்டு வரவுகளைக்காட்டிலும் வெளிநாட்டுப் பொறுப்புகள் அதிகமாக இருந்த நிலையைச் சமாளிப்பதற்குத் தேவையான நிதி வசதியையும் வெளிநாட்டவருக்குக் கடனாகக் கொடுத்தது. தவிர, பத்திர வெளியீட்டு அகங்களின் மூலதனச் சேர்க்கை நடவடிக்கைகளின்மூலம் வெளிநாடுகளின் நெடுங்கால முதலீட்டுத் தேவைகளுக்காக ஸ்டெர்லிங் கடன்களையும் லண்டன் தந்தது.

மேற்கு ஐரோப்பாவும் முன்னேறிவிடுகிறது

சில ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பாவும் பிரிட்டனைப்போன்றே வளர்ச்சி அடைந்தது. ஆனால், இவ் வளர்ச்சியில் பிரிட்டனுக்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் முக்கியமான சில வேறுபாடுகள் உண்டு.

விவசாயம்

இவ்வகை முன்னேற்றம் கணிசமான அளவு ஏற்படுவதற்கு நிலமானிய அமைப்பில் இருந்த நிலவுரிமை முறைகளை ஒழித்துக் கட்டுவது அவசியமாயிற்று. ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக, அந் நாட்டுக் குடியானவர்கள் முழு உரிமை பெற்றனர். எனினும், அக் குடியானவர்களிடம் தொன்றுதொட்டு இருந்துவந்த பழைமைப் பற்று அகலவில்லை. எனவே, புதிய பயிர்வகைகளையும் புதிய உற்பத்தி முறையையும் புகுத்துவதற்கு அரசாங்க நடவடிக்கைகள் இன்றியமையாதனவாயின. அதோடு, இருப்புப்பாதையால்

[4] ஏற்கெனவே குறிப்பிட்ட Powell அவர்களின் நூலில், பக்கம் 375.

ஏற்பட்ட போட்டியின் பிறகுதான் ஃபிரெஞ்சுக் குடியானவர்கள் விழிப்புக்கொண்டனர். 1806-ல் ஜீனுவில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக பிரஷ்ஷியாவிலிருந்த பெருநிலக்கிழார்கள் பயிர்த் தொழில் முன்னேற்றத்தின் அவசியத்தை உணர்ந்தனர். இதன் பின்னர், அடிமைகளை விடுவிப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதோடு, நிலத்தை வாங்குவதற்கும், விற்பதற்கும், இஷ்டப்பட்ட தொழிலை மேற்கொள்வதற்கும் உரிமை வழங்கப்பட்டது. இதனுல் முன்னேற்றத்திற்கு அவசியமான இடப்பெயர்ச்சி உருவாகியது. இவ்வகையான சீர்திருத்தங்கள் இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவின.

இதனுல் பயிர்த் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது. சில நாடுகளில், (குறிப்பாக பிரஷ்ஷியாவில்) இருந்த பெருநிலக்கிழார்கள் இங்கிலாந்து நாட்டில் வியாபாரப் பயிர் வகைகளைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் நவீனப் பண்ணை முறையை மாதிரியாகக்கொண்டு பின்பற்றியதன்மூலம் மற்றவர்களுக்கு வழிகாட்டினர். மக்கள்தொகை வளர்ச்சியுற்றதாலும் புதுப் புது நகரங்கள் தோன்றியதாலும், பலவகைப் பொருள்களுக்கு, குறிப்பாக உருளைக்கிழங்கு, பீட்ரூட், ஆலி விதை போன்ற புதிய விவசாயப் பண்டங்களுக்கு அங்காடியில் நல்ல கிராக்கி ஏற்பட்டது. அவற்றிலிருந்து நிறைய வருமானம் கிடைத்ததால், பழைய உற்பத்தி முறைகளைக் கைவிடவேண்டியதாயிற்று. ஃபிரான்ஸிலும் ஜெர்மனியிலும் இவ் வகைச் சீர்திருத்தத்திற்கு அரசாங்கம் பெரிதும் உதவி செய்தது. விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டன; புதிய உற்பத்தி முறைகளும் நவீன விவசாயக் கருவிகளும் மாதிரிகைக்காக மக்களுக்குப் பயன்படுத்திக் காட்டப்பட்டன. போட்டி முறையில் பயிர்த் தொழிலை ஊக்குவிப்பதற்காக விவசாயப் பொருட்காட்சிகள் அமைக்கப்பட்டன. 1840ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட இருப்புப்பாதை அபிவிருத்தியால் பழங்கால உற்பத்தி முறைகளையும் குறைந்த வருமானம்தரும் பயிர் வகைகளையும் தீவிரமாகக் கைவிட்டுவிடுவதற்குரிய ஊக்கம் பிறந்தது.

ஆலைத் தொழில்

1815 வரை ஐரோப்பியத் தொழில்கள் பெரும்பாலும் கைத்தொழில்களாகவேதான் இருந்தன. பின்னர், எல்லா நாடுகளிலும் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டதெனினும், அது ஒரே சீராக ஏற்படவில்லை. 19ஆம் நூற்றுண்டு முடியும்வரை, இத்தாலியிலும் ஸ்பெயினிலும் அவ்வளவாகத் தொழில்நிலை மாறவில்லை. ஃபிரான்ஸ் நாட்டிலோ பல காரணங்களால் 1860 வரை தொழில் முன்

னேற்றம் ஏற்படவில்லை. பெல்ஜியத்திலும் ஜெர்மனியிலும்தாம் விரைவான தொழில் முன்னேற்றம் ஏற்பட்டது.

ஜெர்மனியில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சிக்கும் பிரிட்டனில் நடைபெற்ற தொழிற் புரட்சிக்கும் முக்கியமான வேறுபாடு உண்டு. 15ஆம் நூற்றாண்டிற்கும் 19ஆம் நூற்றாண்டிற்குமிடையே இங்கிலாந்து நாட்டு மக்களின் எண்ணத்திலும் மனப்பான்மையிலும் புரட்சிகரமான மாறுதல் தோன்றியது. ஆனால், ஜெர்மனியில் அவ்வகை எண்ணப் புரட்சி ஏதும் ஏற்படவில்லை. ஜெர்மனியில் மிக முற்போக்கான மாநிலமான பிரஷ்ஷியாவில், அதிகாரத்திற்குப் பணியும் இடைக்காலத்திய மனப்பான்மையும் அரசின் வழியைப் பின்பற்றும் போக்கும் நவீன காலத்தில்கூட வலியுறுத்தப்பட்டன. எனவே, ஆரம்பத்திலிருந்தே அரசுதான் தொழில்களை முன்னேற்றுவதில் பெரும் பங்குகொண்டிருந்தது. தான் எந்தத் தொழிலை முன்னேற்றவேண்டுமென விரும்பியதோ அதையும் அவசியமான இன்னும் சில தொழில்களையும்தாம் அரசு வளர்த்துவந்தது.

பிரஷ்ஷிய அரசாங்கத்தின் வணிக, தொழில், பொதுத் துறையில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் 1816-ல் தொழிற் கல்வி நிலையம் ஒன்றை நிறுவினர். இது 1821-ல் பொறியியலாருக்கும் எந்திர அமைப்பாளருக்கும் பயிற்சி அளிக்கும் பணியைத் தொடங்கியது. மேலும், பிரஷ்ஷியாவும் ஜெர்மனியின் இதர மாநிலங்களும் தொழில்துறை உளவாளிகளை இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பின. இவர்கள் இங்கிலாந்திற்குச் சென்று, பிரிட்டனிலிருந்து எந்திரங்களையோ, அவற்றின் மாதிரிகைகளையோ, அல்லது அவற்றின் அமைப்புப் படங்களையோ வெளிநாடுகளுக்கு அனுப்புவதைக் கட்டுப்படுத்திவந்த (1842-ல் ரத்து செய்யப்பட்ட) பல பிரிட்டிஷ் சட்டங்களைப் பல்வகை உபாயங்களின்மூலம் மீறி நடந்தனர். அதனோடு, பிரஷ்ஷிய மாநிலம் கல்வியில், சிறப்பாக விஞ்ஞானக் கல்வி போதிப்பதில் கவனமும் அக்கறையும் காட்டியது.

ஐரோப்பியக் கண்டப் பகுதியில் ஆலைத் தொழில்களில் அக்கறை கொண்ட துணிச்சலான தொழிலதிபர்கள் அதிகமாக இல்லாததாலும் மூலதனம் போதிய அளவில் கிடைக்காததாலும், தொழில் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இக் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பிரஷ்ஷிய அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கென்று பலவகைப் பண உதவியைச் செய்தது. இறக்குமதி வரியின்றி எந்திரங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளித்தது ; பிரிட்டனிலிருந்து திறன்மிக்க பொறியாளர்களும்

உழைப்பாளிகளும் வந்து குடியிறங்குவதற்கு ஊக்கம் அளித்தது. இதன் விளைவாக ஜெர்மனி மாநிலங்களனைத்தும் ஒரேமாதிரியான சுங்கவரிக் கொள்கையைப் பின்பற்றும் வழியில் 1834-ல் ஜெர்மன் சுங்க ஐக்கியம் (Zollverein) அமைக்கப்பட்டது. இதன் பிறகு, புதிய தொழில்களெல்லாம் காப்புவரியின்மூலம் (protective duties) பாதுகாக்கப்பட்டன. மேலும், பிரஷ்ஷிய அரசாங்கம் இருப்புப் பாதைத் திட்டத்தை அமலாக்குவதில் அதிக அக்கறை காட்டியது. இவ்வாருக, 1860ஆம் ஆண்டிற்குப் பின்னர், அதாவது, சுமார் 7,000 மைல் நீளமுள்ள இருப்புப்பாதை அமைக்கப்பட்ட பின்னர், ஜெர்மனியின் தொழில்துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

ஐரோப்பியக் கண்டப் பகுதியில் தொழில் வளர்ச்சி ஆரம்பமாகிய சமயத்தில், பிரிட்டன் தனது மூலதனம், உழைப்பாளிகள், தொழில் துணிவு ஆகியவற்றின் வழியாக அவ் வளர்ச்சிக்கு உதவியதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வித உதவி ஏனைய நாடுகளைக் காட்டிலும் குறைவாகக் கிடைத்தபோதிலும், ஜெர்மனியின் பருத்தி, கம்பளம், சணல் ஆகிய தொழில்களும் எந்திர உற்பத்தித் தொழில், வாயு உற்பத்தி செய்தல், சுரங்கத் தொழில், இருப்புப்பாதை ஆகிய தொழில்களிலும் பிரிட்டிஷ் தொழிலாளிகளும் பொறியியலாரும்தாம் எந்திரங்களை அமைத்து, அவற்றை இயக்குவதெப்படி என்று கற்றுக்கொடுத்தனர். ஃபிரான்ஸ் நாட்டிலும் பெல்ஜியத்திலும் ஆரம்பத்தில் போடப்பட்ட இருப்புப்பாதைகள் பெரும்பாலும் பிரிட்டிஷ் மக்களாலும் பொறியியலாராலும்தாம் அமைக்கப்பட்டன. பிரிட்டிஷ் டிரைவர்கள் தாம் இரயில் என்ஜின்களை இயக்கினர். பிரிட்டிஷ் மூலதனமும் கூட ஓரளவு இதில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் மக்களின் அறிவாலும் மூலதனத்தாலும் தோன்றிய அல்லது நவீனமயமாக்கப்பட்ட பல தொழில் நிறுவனங்களை அங்குக் காணலாம்.

1870ஆம் ஆண்டிற்குப் பின்னர், மேற்கு ஐரோப்பாவின் முக்கியமான நாடுகளனைத்தும் தொழிற் புரட்சியின் தொடக்க நிலையைப் பெற்றுவிட்டன. நல்ல முறையில் அமைக்கப்பட்ட இரயில் போக்குவரத்து அங்கு வளர்ச்சியுற்றிருந்தது. நெசவாலைத் தொழில்களிலெல்லாம் நவீன உற்பத்தி முறை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், பிரிட்டனின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை வெகுதூரம் பின்னடைந்திருந்தன. தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மிக முக்கியமான மூலப்பொருளான தேனிரும்பின் உற்பத்தி அளவைக்கொண்டு பார்க்குமிடத்து, பிரிட்டனின் உற்பத்தி அளவு 6 மில்லியன் டன்னாக இருந்தபோது ஜெர்மனியின் உற்பத்தி இதில் கால்

பங்குகூட (1.4 மில்லியன்) இல்லை. ஃபிரான்ஸ் நாடோ 1.2 மில்லியன் டன்தான் உற்பத்தி செய்ய முடிந்தது. தொழிற்சாலைப் பொருள்களிலும்கூட பிரிட்டன் வெகுதூரம் முன்னேறியிருந்தது. மொத்த உற்பத்தியில் பிரிட்டன் மட்டும் மூன்றில் ஒரு பங்கு உற்பத்தி செய்திருந்தபோது, அமெரிக்கா ஐந்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்து முன்னேறிக்கொண்டிருந்தது. ஆனால், ஜெர்மனி 13 சதவிதமும் ஃபிரான்ஸ் 10 சதவிதமும்தாம் உற்பத்திசெய்ய முடிந்தது.

வெளிநாடுகளில் பொருளாதார முன்னேற்றம்

ஐரோப்பாவிற்கு வெளியே, அண்மையில் குடியேறிய பகுதிகளான அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. இதைப்பற்றிச் சுருக்கமாகக்கூட இங்கு ஆய இடமில்லை. அந் நாடுகளின் அரசாங்கக் கொள்கைகளால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றியும், அந் நாடுகள் பெற்றுள்ள பலவகை இயற்கை வளங்களின் முக்கியத்துவம்பற்றியும், அந் நாடுகளில் தரிசாகக் கிடந்த பகுதிகளிளெல்லாம் மக்கள் குடியேறி, எவ்வாறு நகரங்களை அமைத்து, முக்கியமான தொழில்களைத் தொடங்கி, அவற்றை முன்னேற்றினர் என்பதுபற்றியும் இங்கு நம்மால் விளக்க இயலாது. எனவே, இந் நாடுகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு பல்வேறு நாடுகள்—19ஆம் நூற்றாண்டில் பெருமளவில் குடிபெயர்ந்த மக்களின் வழியாகவும் இடம் பெயர்ந்த மூலதனத்தின்மூலமாகவும்—உதவியுள்ளன என்பதைப்பற்றியும் அவ் வளர்ச்சிக்கு ஆதாரமாயிருந்த சில சமூகச் சூழ்நிலைகளைப்பற்றியும் மட்டுமே இங்கு நாம் பார்ப்போம்.

அயல்நாட்டு முதலீடு

ஐரோப்பாவில் தொழிற் புரட்சி ஆரம்பமாவதற்குமட்டுமன்றிப் பிற அயல்நாடுகளில் பொருளாதார வளர்ச்சி தொடங்குவதற்கும் பிரிட்டனின் மூலதனம் பெருமளவில் பயன்பட்டுள்ளது. அந்த நாடுகள், தாமே அமைக்கமுடியாத சமூகப் பொது மூலதனம் (social overhead capital) என்றழைக்கப்படும் வசதிகளை ஏற்படுத்தியதுதான் அது செய்த முக்கியமான பணி. இருப்புப்பாதைகள், சாலைகள், துறைமுகங்கள், மின்விசை நிலையங்கள், தொலைபேசி, தந்தி அமைப்புகள் ஆகிய வசதிகள் இல்லாமல் எந்தத் தொழிலுமே நடைபெற இயலாது; பயிர்த் தொழில்கூட முன்னேறுவது கடினம். 1913-ன் அளவீட்டின்படி பிரிட்டன் வெளிநாடுகளில் செய்திருந்த முதலீடு 15 மில்லியன் டாலர் ஆகும்.

இதில் 40 சதவீதம் இருப்புப்பாதைகளிலும் 5 சதவீதம் இதர பொது வசதிப் பணிகளிலும் செய்யப்பட்டிருந்தது; 30 சதவீதம் அயல்நாட்டு அரசாங்கங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருந்தது; இதில் பெரும்பாலும் ஒவ்வொரு முதலீடும் ஏதாவதொரு சமூகப் பொது மூலதன முதலீடாகவேதான் இருந்தது. எஞ்சிய முதலீடனைத்தும் சுரங்கம், நிதி, ஆலைத்தொழில்கள், தோட்டப் பண்ணைகள் ஆகிய பல வழிகளில் செய்யப்பட்டதாகும். நிற்க, அயல் நாடுகளில் பிரிட்டன் செய்திருந்த மொத்த முதலீட்டில் மூன்றில் இரண்டு பங்கு புதிதாய்க் குடியேறிய நாடுகளில் செய்யப்பட்டதாக இருந்தது. பலவகைக் கலாசாரங்களையும் அதிக மக்கள்தொகையையும் கொண்டிருந்த வெப்ப மண்டலப் பிரதேசங்களில் அல்லது மிதவெப்ப மண்டல நாடுகளில் $\frac{1}{4}$ பாகம்தான் முதலீடு செய்திருந்தது. எஞ்சிய முதலீடனைத்தும் ஐரோப்பாவில், குறிப்பாக 1870ஆம் ஆண்டிற்குமுன்னர் செய்யப்பட்டதாகும்.

நெப்போலியனோடு நடந்த போர்கள் முடிவடைந்த பின்னர், கணிசமான அளவில் பிரிட்டிஷ் மூலதனம் வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கியது. அவ்வாறு வெளியேறிய மூலதனத்தின் அளவு 1850-ல் 200 மில்லியன் பவுன்களாக இருந்தது. இதில் பெரும் பகுதி அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் சென்றது. இம் மூலதனமனைத்தும் பெரும்பாலும் இருப்புப்பாதைகளில் முதலீடு செய்யப்பட்டது. பின்னர் 25 ஆண்டுகள் பிரிட்டனின் உபரி நிதி கூடாமலும் குறையாமலும் அப்படியே இருந்ததெனினும், நாடுவிட்டு வெளியேறிய மூலதனத்தின் வீதம் உயர்வாகியிருந்தது. 1875-க்கும் 1913-க்குமிடையே அமெரிக்காவும் லத்தீன் அமெரிக்காவும்தாம் கணிசமான தொகை பெற்றனவெனினும், கனடாவும் பிரிட்டிஷ் பேரரசு நாடுகளும் பெருமளவில் இம் மூலதனத்தை அடைந்தன. முதல் உலகப் போர் தொடங்குவதற்குமுன் சுமார் 9 பில்லியன் டாலர்கள் பிரிட்டிஷ் பேரரசு நாடுகளில் (முக்கியமாய்ப் பெரிய டொமினியன் பகுதிகளில்) முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதே சமயம் 7.5 பில்லியன் டாலர் அமெரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் ஏறக்குறைய சரி பாதியாக முதலீடு செய்யப்பட்டிருந்தது.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஃபிரான்சும் ஜெர்மனியும்கூட அயல் நாடுகளுக்குக் கடன் கொடுக்கத் தொடங்கிவிட்டன. தொடக்கத்தில், இரண்டு நாடுகளுமே ஐரோப்பிய நாடுகளில்தான் முக்கியமாய் முதலீடு செய்தன. எந்த நாடுகளுக்குக் கடன் கொடுப்பது என்பது, பெரும்பாலும் அரசியல் கண்ணோட்டத்தில்தான் முடிவு செய்யப்பட்டது. உதாரணமாக,

ரஷ்யாவுடன் நெருங்கிய வெல்திறத் தொடர்பு (diplomatic ties) கொண்டிருந்த ஃபிரான்ஸ், ரஷ்ய அரசாங்கத்திற்குத்தான் ஏராள மான கடன் உதவி செய்தது. மாருக, ரஷ்யாவின் ஆதிக்கம் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஜெர்மனி நாடு, தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே கடன் அளித்தது. பின்னர், இவ்விரு நாடுகளுமே அயல்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்காக முதலீடு செய்யத் தொடங்கின. ஃபிரான்ஸ் நாடு, லத்தீன் அமெரிக் காவிலும் ஃபிரெஞ்சுப் பேரரசுப் பகுதிகளிலும் பெருமளவில் முதலீடு செய்தது. அதே சமயம், ஜெர்மனி அமெரிக்காவிற்கும் லத்தீன் அமெரிக்காவிற்கும் தம் மூலதனத்தை அனுப்பியது. 1914-ல் ஃபிரெஞ்சு நாட்டின் மூலதனத்தில் 9 பில்லியன் டாலர்கள் அயல் நாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதில் 60 சதவீதம் ஐரோப்பாவிலேயே முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஜெர்மனியில் அயல்நாட்டு மூலதனம் 6 பில்லியன் டாலராக இருந்தது. இதில் பாதி ஐரோப்பிய நாடுகளுக்கும், $\frac{1}{6}$ பகுதி அமெரிக்காவிற்கும், மற்றொரு $\frac{1}{6}$ பகுதி லத்தீன் அமெரிக்காவிற்கும் கொடுத்திருந்தது.[5]

முதலீடுகளின் விளைவுகள்

இம் முதலீட்டிற்குத் தேவையான நிதி ஓரளவிற்கு அரசாங்க நிதியாக இருந்ததெனினும், பெரும்பாலும் அது தனியார் சேமிப்பு நிதி என்பது குறிப்பிடத்தக்கது. தனி நபர்கள், பாங்குகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவைதாம் இவ்வாறு அயல் நாடுகளில் முதலீடு செய்யவேண்டுமென முடிவுசெய்தன. இவ்வாறு அயல் நாடுகளில் முதலீடு செய்தால் ஏராளமான இலாபம் கிடைக்குமென எண்ணிப் பத்திரங்களை விற்கும் பாங்குகள் மிகைப்படுத்திக் கூறியதால்தான் பெரும்பாலும் இவ் வகை முதலீடுகள் செய்யப்பட்டன. பொதுவாக, இம் முதலீடனைத்தும் இலாபம் கருதியே செய்யப்பட்டன. இதற்கு ஒருசில விதிவிலக்கு களும் இருந்தன. தம் சொந்த நாட்டில் செய்யக்கூடிய முதலீட்டி லிருந்து கிடைக்கக்கூடிய இலாபத்தைக்காட்டிலும், வெளிநாடு களில் செய்யப்படும் முதலீட்டிலிருந்து அதிக இலாபம் கிடைக்கு மென அவர்கள் நம்பினர். பொதுவாக, சிலர் இதில் ஏமாற்ற மடைந்தனரெனினும், பெரும்பான்மையோருக்கு இதனால் பெரு மளவில் இலாபம் கிடைத்தது. பிரிட்டிஷ் மக்கள் செய்திருந்த உள்நாட்டு முதலீடுகளையும் வெளிநாட்டு முதலீடுகளையும் (உதாரணமாக, அரசாங்கப் பத்திரங்களிலும் ரயில்வே பத்திரங்

[5] இப் புள்ளி விவரங்கள் William Ashworth அவர்களின் 'A Short History of the International Economy 1850-1950' என்ற நூலில் 173ஆம் பக்கத்திலுள்ளவை. Copyright 1952 by Longmans, Green & Co., London.

களிலும் செய்த முதலீடுகள்) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வெளி நாட்டு முதலீடுகளிலிருந்துதான் அவர்களுக்கு அதிக இலாபம் கிடைத்தது.[6] ஃபிரெஞ்சு நாட்டவர்களோ இதனால் அவ்வளவாக இலாபம் பெறவில்லை. அயல்நாட்டு முதலீட்டிலிருந்து அவர்கள் பெற்ற இலாபம் மிகக் குறைவே. இதற்கு, ஃபிரெஞ்சு பாங்குகள் அவர்களுக்குச் சரியான வழி காட்டாமல் அவர்களைத் தவறான வழியில் நடத்தியது ஒரு காரணம். அதனோடு, அயல்நாடுகளில் முதலீடு செய்த ஃபிரெஞ்சுக்காரர்கள், எச்சரிக்கையாக இருக்கும் இயல்புடையவர்களாயிருந்தபோதிலும், யார் எதைச் சொன்னாலும் நம்பக்கூடியவர்களாயிருந்ததும் ஒரு காரணமாகும்.

அயல்நாடுகளில் முதலீடு செய்தவர்களுக்கு அதனால் இலாபம் கிடைத்ததா இல்லையா என்பது இங்கு முக்கியமன்று; மாறாக, உள்நாட்டு மக்களுக்கும் வெளிநாட்டு மக்களுக்கும் இம் முதலீட்டால் ஏற்பட்ட பலன்கள்தாம் மிக முக்கியமானது. கடன் கொடுத்த நாடுகளில் இருந்த ஏற்றுமதித் தொழில்கள் இன்னும் பெரிய அளவு அங்காடியைப் பயன்கொள்ள முடிந்ததால், முன்பைவிட அதிக அளவில் பொருள்களை உற்பத்தி செய்யவும் அவ்வாறு தொழில்கள் விரிவடைந்ததால் அளவுச் சிக்கனங்களைப் பெறவும் முடிந்தது. அயல்நாட்டுச் சுரங்கங்கள், தோட்டப் பண்ணைகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றில் செய்த முதலீட்டின் விளைவாக, தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகள், தமக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் பெற முடிந்ததுமட்டுமன்றி, இருப்புப்பாதைகளிலும் கப்பல் போக்குவரத்து சாதனங்களிலும் செய்த முதலீட்டின் விளைவாக அவற்றை மலிவாகவும் பெற முடிந்தது. கடன் பெற்ற நாடுகள் இவ்வகை முதலீட்டின் வழியாகத் தமது பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத சமூகப் பொது மூலதனத்தைப் பெற்றன. அதனோடு, இம் முதலீட்டால் புதிய நாடுகளில் தொழில் வளர்ச்சி ஏற்படவும் சாத்தியமாயிற்று. இதன் விளைவாக, இதுவரை பயன் படுத்தப்படாமலிருந்த இயற்கை வளத்தினை, வேண்டிய அளவு உழைப்பாளிகளைக்கொண்டு பயன்கொள்ளவும் முடிந்தது. அதே

[6] 1870–1880-க்குமிடையே செய்த பிரிட்டிஷ் முதலீட்டில் சுமார் 1/10 பங்கு அரசாங்கப் பத்திரங்களில் செய்யப்பட்டது. இதிலிருந்து கிடைத்த வட்டியைக் காட்டிலும் கடனாகக் கொடுத்த தொகையில் ஏற்பட்ட நஷ்டம் அதிகமாயிருந்தது. இது நீங்கலாக, ஏனைய அயல்நாட்டு அரசாங்கக் கடன் பத்திரங்களில் கிடைத்த இலாபம், பிரிட்டிஷ் கான்சல் பத்திரங்களிலிருந்து (Bonds on British Consols) கிடைத்த இலாபத்தைவிட 0.7 சதவீதத்திலிருந்து 10.7 சதவீதம்வரை அதிகமாக இருந்தது. இதுபோன்ற இலாப வித்தியாசங்கள் ரயில்வே பங்குகளிலும் கடன் பத்திரங்களிலுங்கூட இருந்தன. இப் புள்ளிவிவரம் A. K. Cairncross அவர்களின் 'Home and Foreign Investment 1870-1913' என்ற நூலில் 22-930ஆம் பக்கங்களில் உள்ளது. Published in 1953 by Cambridge University Press, New York.

சமயம், உழைப்பாளிகள் வேலை செய்வதற்கு வேண்டிய விவசாயக் கருவிகள், எந்திரங்கள், தொழிற்சாலைத் தளவாடங்கள், இன்னும் இதர உற்பத்தியாளர் பொருள்களை (producers' goods) அடைவதற்கு உள்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்த முடிந்தது. இப் பொருள்களெல்லாம் வளர்ச்சிபெறும் நாட்டிற்கு முக்கியமாகத் தேவைப்படும் பொருள்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் குடிபெயர்தல்

19ஆம் நூற்றாண்டில் அயல்நாட்டு முதலீட்டிற்கென வெளியேறிய மூலதனத்தோடு, அதற்குத் தொடர்புடைய உழைப்பாளிகளும் பெருமளவில் குடிபெயர்ந்தது மிக முக்கியமான அம்சமாகும். 1820-க்கும் 1930-க்குமிடையே மொத்தம் 63 மில்லியன் பேர் நாடுவிட்டு நாடு குடிபெயர்ந்தனர். இதில் நான்கில் மூன்று பகுதியினர் முதல் உலகப் போருக்கு முந்திய 50 ஆண்டுகளில் குடிபெயர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பியர்களே. 1890 வரை அயர்லாந்து, ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா ஆகிய நாடுகளிலிருந்துதான் பெரும்பாலானோர் வெளியேறினர். அதன் பின்னர், தென்கிழக்கு ஐரோப்பியப் பகுதியிலிருந்து, குறிப்பாக இத்தாலியிலிருந்து ஏராளமான பேர் வெளியேறினர். குடிபெயர்ந்தோரில் பெரும்பாலானோரை அமெரிக்கா கவர்ந்தது. 3/5 பகுதியினருக்குமேல் அங்குதான் குடியிறங்கினர். பிறிதொரு 1/5 பகுதியினர் கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆஃப்ரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏறக்குறைய சம எண்ணிக்கையில் சென்றனர். மீதிப் பேர் பெரும்பாலும் அர்ஜென்டைனாவிற்கும் பிரேஸிலுக்கும் சென்றனர்.

ஆரம்பத்தில் குடிபெயர்ந்தவர்கள், தமது சொந்த நாடுகளில் பிழைப்பிற்கு வழியில்லாத பண்ணைகளில் வேலை செய்தவர்கள். அவர்கள் பெரும்பாலும் புதிய நாடுகளில் அதிக வருமானம் தரக்கூடிய பண்ணைகளுக்கும், அங்கு ஆரம்பிக்கப்பட்ட சுரங்கத் தொழில்களுக்கும், இருப்புப்பாதைத் தொழில்களுக்கும் சென்றனர். பின்னர், குடியேறியவர்களெல்லாம் பெரும்பாலும் தொழிற்சாலைகளுக்குச் சென்றனர். அமெரிக்காவிலிருந்த எஃகு தொழிற்சாலைகள், பெண்மணிகளின் ஆடைகள் தயாரிக்கும் தொழிலகங்கள், கட்டடத் தொழில்கள் முதலியன ஏராளமான பேருக்கு வேலை அளித்தன.

பொதுவாக, உற்பத்திக் காரணிகள்—உழைப்பாளிகளும் மூலதனமும்—ஏராளமாயும் மலிவாயுமிருந்த பகுதிகளிலிருந்து போதாத அளவிலும் கிராக்கியாயுமிருந்த பகுதிகளுக்குத்தான்

சென்றனர். (காரணி இடப்பெயர்ச்சிக்குப் பதிலீடாகக் கருதப் பெறக்கூடிய பொருள்களின் இடப்பெயர்ச்சியும் இவ்வாறுதான் நடைபெறும் என்பது இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.) 19ஆம் நூற்றுண்டில்கூடப் போதிய அளவில் இல்லாத இடங்களுக்குத் தான் மூலதனமும் உழைப்பும் இடம்பெயர்ந்தன. பொதுவாக, இரண்டும் சேர்ந்தே புதிய நாடுகளில் புகுந்தன. இவ்வாறு புகுந்ததனுல் அந் நாடுகளில் இதுவரை பயன்படுத்தப்படாதிருந்த செழிப்பான நிலங்களில் பொருத்தமான விகிதாசாரத்தில் அவை பயன்படலாயின. அவ்வாறு இடம்பெயர்ந்திராவிட்டால், தமது சொந்த நாடுகளிலோ அல்லது புதிய நாடுகளிலோ இக் காரணிகள் இவ்வளவு பொருத்தமான விகிதாசாரத்தில் பயன்பட்டிருக்க முடியாது. இவ்வித இடப்பெயர்ச்சியின் விளைவாக, இதுவரை நடைபெற்ற பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் விரைவான வளர்ச்சி ஏற்பட்டது. குடியிறக்க நாடுகளில் புதிய பலவகைத் தொழில்கள் தோன்றின ; முன்பைவிட மேன்மையான போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டன ; இதுவரை தரிசாகக் கிடந்த சமவெளிகளில் இப்போது மக்கள் குடியேறினர் ; இதனுல் புதிய பல நகரங்கள் எழுந்தன. இவை அனைத்தின் விளைவாக மக்களின் தலா வருமானம் (per capita income) உயர்ந்தது.

முன்னேற்றத்திற்குச் சாதகமான சூழ்நிலைகள்

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், வெளிநாடுகளில் புதிதாய்க் குடியேறிய பிரதேசங்களில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றத்தில் நமது கவனத்தைக் கவரக்கூடிய சிறப்பானதோர் அம்சம் உண்டு. இம் முன்னேற்றம் ஏற்பட்ட சமயம் அங்கிருந்த சமூகச் சூழ்நிலையே அவ் அம்சம். 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மாறுதல்களுக்கு முன்போ அல்லது அவை ஏற்பட்ட சமயத்திலோ நிலமானிய முறை அறவே ஒழிக்கப்பட்டது. நிலமானிய முறையிலிருந்த கெடுபிடியான சமுதாய உறவுகளெல்லாம் நீங்கிய பின்னர், சமுதாயத்தின் வகுப்பினரின் அமைப்பு மாறும் இயல்புடையதாயிற்று. இதனுல் புதிய தொழில்மயமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு வேண்டிய மக்கள் இடப்பெயர்ச்சிமட்டுமன்றி, இயற்கைச் சாதனங்களைப் பயன் கொள்வதற்கு அவசியமான உரிமையும் சாத்தியமாயிற்று. (நிலமானிய முறையிலிருந்த நில உரிமை முறையையும் சமூக அமைப்பையும் விட்டுவிடாமல், தம்முடன் அவற்றையும், குடியிறக்கிய லத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதத்தையும், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியையும் ஒப்பிடும் போது புலனுகும் வேறுபாடே இதற்குச் சான்ருகும்.)

இன்னும் சிறப்பான எடுத்துக்காட்டு வேண்டுமாயின், மேற்கு ஐரோப்பாவிலும் இன்னும் இதர பகுதிகளிலும் 19ஆம் நூற்றாண்டில் குடியிறங்கியோரில் பெரும்பாலானோர் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத சில இயல்புகளைக்கொண்டவர்கள் என்பதை அறிதல் நன்று. அவர்கள் பெற்றிருந்த சிறப்பான இயல்புகளில் சுமுகமான அரசாங்கத்திலும் அதனால் ஏற்படும் நற்பலன்களிலும் அவர்கள் பெற்றிருந்த மரபுவழி மனப் பான்மையை முதலில் குறிப்பிடல்வேண்டும். சட்டத்தின் ஆதிக் கத்தை மதித்து நடக்கத் தெரிந்தவர்களாயும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு இசைந்து நடக்க மனமுள்ளோராயும் அவர்கள் இருந்தனர். அதனோடு, ஒரு கட்சியிடமிருந்து பிறிதொரு கட்சிக்கு அரசியல் அதிகாரம் மாறுவதில் திட்டவட்டமான ஒழுங்கு முறைகளை மதிப்போராகவும் போதிய திறமையும் நேர்மையும் கொண்ட அரசாங்க அதிகாரிகளுக்கு மதிப்புத் தருவோராயும் அவர்கள் விளங்கினர். இந்தப் பரம்பரைப் பண்புகள் அவர்க ளிடம் இருந்ததால், அரசாங்க அதிகாரம் சுமுகமாகக் கைமாற முடிந்தது; அரசாங்கம் தன் கடமைகளை இடையூறின்றித் திடமாகச் செயலாற்ற முடிந்தது. அரசாங்கத்தோடு கொண் டிருந்த தொடர்புகளனைத்தும் அறிவுக்குகந்தனவாயும் நியாயமான வையாயும் இருக்கவேண்டுமென அவர்கள் விரும்பினர்.

மேற்கு ஐரோப்பாவும்கூடத் தனி நபரின் கடமைகளுக்கும் பரிசோதனைமூலம் நடக்கும் ஆய்விற்கும் முயற்சிக்குமேற்ற பொருள்சார் நலன்களுக்கும் அதிக மதிப்புக் கொடுக்கும் தன்மை யைப் பெற்றிருந்தது. (இதற்குப் பல காரணங்கள் உண்டு. மறுமலர்ச்சி ஏற்பட்டதன் வழியாக விஞ்ஞான அறிவியல் பற்று தலும் இவ் உலகம் சார்ந்த பற்றுதல்களும் தூண்டப்பட்டிருந்தன; சமயச் சீர்திருத்தம் தோன்றியதன்மூலமாகத் தனிநபரின் முக்கியத் துவம் வலுவாக்கப்பட்டது; ஒளிர்வுசால் காலமாகிய 18ஆம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதார, தத்துவப் பிணக்கங்கள் ஏற்பட்டிருந்தன.) தனியார் முயற்சிப் பொருளாதார அமைப்பு **(private enterprise system)** நல்ல முறையில் இயங்குவதற்கு இப் பண்புகளெல்லாம் முக்கியம் என்பது தெளிவு.

இறுதியாக, அயல் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு இன்றியமையாத நிதி வசதியினை அளிப்பதற்கு இங்கிலாந்தில் ஏற்கெனவே திரட்டப்பட்டிருந்த மூலதனமும், ஐரோப்பிய நாட்டவர்கள் கடன் பெறுவதற்கு வசதி செய்துதந்த பன்னாட்டு மூலதன அங்காடி லண்டன் மாநகரில் தோன்றியதும், பின்னர் மேற்கு ஐரோப்பிய நாட்டவரும் அதிலிருந்து

பலனடையும் வகையில் அது விரிவடைந்ததும் முக்கியமானவை யாகும். அயல்நாடுகளுக்குக் குடியேறச் சென்றவர்கள் தம்முடன் கொண்டுசென்ற ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கும் மரபுப் பண்பும் உறுதியும் இம் மூலதன வசதிகளை அவர்கள் பெறுவதற்கு உத்தரவாதம் அளித்தன.

வாணிபத் தடைகள் நீக்கப்பட்டன

19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பெருமாறுதல்களில் வாணி பத்தின்மீதிருந்த மெர்க்கன்டலிசக் கட்டுப்பாடுகளை ஒழித்துக் கட்டியது மூன்றுவது பெருமாறுதலாகும். இம் மாறுதல் ஏற்பட் டிராவிட்டால், பன்னுட்டுப் பொருளாதார அமைப்பு சீராக நடைபெற்றிராது. தொழில் வளர்ச்சியிலும், பொருள்களுக்கும் மூலதனத்திற்குமிருந்த பன்னுட்டு அங்காடியை உருவாக்கியதிலும் பிரிட்டன் வழிகாட்டியதுபோன்றே, இதிலும் அது சிறப்புப் பெற்று ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாக விளங்கியது. இங்கிலாந்து நாட்டிலிருந்த உற்பத்தியாளர்கள், வணிகர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் செல்வாக்கும் பெருகியதையும் பொருளாதார உரிமைக்கு அவர்கள் கொண்டிருந்த பற்றுதல்களின் விளைவாக உள்நாட்டிலிருந்த மெர்க்கன்டலிசக் கட்டுப்பாடுகளெல்லாம் சிறிது சிறிதாக மறைந்து, இறுதியில் ஒன்றுமில்லாமல் போனதையும் நாம் அடிக்கடி நினைவுபடுத்திவந்துள்ளோம். நெப்போலியனேடு நடத்திய போர்கள் முடிவடைந்ததும், அயல் நாட்டு வாணிபத்தில் அதுவரை நீக்கப்படாதிருந்த தடைகளை ஒழித்துக்கட்டுவதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். அயல் நாட்டு வாணிபத்தில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையும் மனப் பான்மையும் அண்மையில் ஏற்பட்ட, அல்லது நடைமுறையில் அவர்கள் கண்ட முன்னேற்றத்தின் காரணமாக மாறிவிட்டது.

மேலும் விரிவான அங்காடி அவசியமாயிற்று

ஃபிரான்ஸ் நாட்டுடன் நடந்த நீண்டகாலப் போரின் விளைவாக வாணிபக் கட்டுப்பாடுகளெல்லாம் தளர்ச்சி பெறுவதற்குப் பதிலாக வலுவடைந்ததெனினும், அக் காலத்தில்தான் பருத்தி, இரும்பு, எஃகு, பொறி ஆகிய புதிய தொழில்கள் விரிவாக வளர்ச்சி பெற்றன. வாட்டர்லூ (Waterloo) போருக்குப் பின்னர், இத் தொழில்களோடு வேறு எந்த நாடுமே போட்டியிட முடியாதிருந்த போதிலும், இவற்றின் விற்பனை சரிந்துவிடும் ஆபத்தான நிலையில் இருந்தது. இங்கிலாந்தின் அரசாங்கம் படைக் கப்பல்கள், துப்பாக்கி வகைகள், பீரங்கிகள் ஆகியவற்றை வாங்குவதை நிறுத்திக்கொண்டது. படையினருக்கு வேண்டிய சீருடைகள்,

கம்பளிகள், கூடாரத் துணிகள் ஆகியவற்றின் தேவை குறைந்தது. நீண்ட காலமாகக் கங்கணம்கொண்டிருந்த படையினரால் தோற்கடிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளால் இன்னும் சிறிது காலத்திற்குப் பெருமளவில் பிரிட்டிஷ் பொருள்களை வாங்க இயலாத நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, தம் பொருள்கள் விற்பனையாக வேண்டுமென்ற அக்கறைகொண்ட வணிகர்களும் உற்பத்தியாளர்களும், வாணிபத்திலிருந்த தடைகள் மேலும் நீக்கப்பட வேண்டுமென்ற நடவடிக்கைகளுக்குச் சாதகமாக ஆயினர்.

கருத்து மாறுதல்

சரிந்துவிட்ட விற்பனைகளின் விளைவாக விரிவான அங்காடியில் அக்கறை ஏற்பட்ட அதேசமயம், வாணிபத் தடைகளுக்கு எதிராக வரப்போகும் வாதத்திற்குப் பக்கபலமான கருத்துக் கருவிகள் தீட்டிக் கூர்மையாக்கப்பட்டன. மெர்க்கன்டலிசக் கொள்கையின் முட்டாள்தனத்தையெல்லாம் அப்பட்டமாக்கியதன் வழியாகவும் வாணிபத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தைச் சுருக்கமாக எடுத்துக்காட்டியதன்மூலமாகவும் ஆதம் ஸ்மித் ஏற்கெனவே தம் வாதத்தை உறுதியான அஸ்திவாரத்தோடு தொடங்கிவைத்து விட்டார். பின்னர், தாமே ஒரு வணிகராகவும் வணிகர்களின் சார்பில் பேசுபவராகவும் விளங்கிய ரிக்கார்டோ, பிரபலியமான தமது தராதரச் செலவுக் கோட்பாட்டின்மூலம் வாணிபத் தடையை நீக்கவேண்டுமென்ற அவ் வாதத்தை வலுப்படுத்தினர். இங்கிலாந்திலும் ஃபிரான்ஸ் நாட்டிலும் இவர்களின் வழிவந்தோரும் இவர்களின் கருத்தினைப் பிரகடனப்படுத்தியோரும் அதைத் தெளிவுபடுத்தி, தடையிலா வாணிபத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வாதத்தை விளக்கலாயினர். இவ் வாதம்தான் தாராள மனப்பான்மையுள்ள அரசியல் வாதிகளின் தரமான சாதனமாயும் சீர்திருத்தவாதிகளின் குறிக்கோளாயும் அமைந்தது. இவ்வகை அரசியல்வாதிகளில் ஒருவரான ஹஸ்கிஸ்ஸன் (Huskisson), பிரிட்டனிலிருந்த தாறுமாறான மெர்க்கன்டலிசத் தீர்வைகளாலும் யுத்தகாலத் தீர்வையாலும் ஏற்பட்ட குழப்பமான நிலையை ஒழுங்குபடுத்தினர். அளவுக்கு மிஞ்சி இருந்த இறக்குமதி வரிகளை ரத்து செய்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் சீரான வரிகளைமட்டுமே புகுத்தி, பண உதவியையும் ரத்து செய்ததன் வழியாக ஒருவாறு ஒழுங்கு நிலை ஏற்பட்டது. ஆனால், பாராளுமன்ற இடங்களை நிலப்பிரபுக்களுக்குப் பகிர்ந்தளித்ததன் வழியாக, வரையறையற்ற அரசியல் பலத்தை அவர்களுக்குக் கொடுத்த அரசியல் முறை அமலில் இருந்தவரை, தொழிற் பாதுகாப்புக் கொள்கையின் உயிர் நாடியாக

விளங்கிய தானியச் சட்டங்கள் தவிர்க்க முடியாதவைகளாகவே இருந்தன.

1932ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம், மிகப்பெரு நிலப் பிரபுக்கள் பலர் பாராளுமன்ற உறுப்பினரை நியமித்துவந்த சில நசித்துப்போன பரோக்களை அல்லது பிரபுக்களுக்குச் சொந்தமான பரோக்களை ஒரே அடியில் அடித்துவிட்ட அதேசமயம், நடுத்தர வகுப்பினரில் பாதிப்பேருக்கு வாக்குரிமையும் அளித்தது. இவ்வாருக, பாராளுமன்றம் முழுப் பிரதிநிதித்துவம் பெரு விட்டாலுங்கூட, குடிமக்களின் கருத்தை அப்படியே பிரதிபலிக்கக் கூடியதாயிற்று. இப் பாராளுமன்றச் சீர்திருத்தம் தானியச் சட்டத்தை வீழ்த்துவதற்கு ஆற்றல்மிக்க கருவியாக அமைந்தது.

தானியச் சட்டத்தை ரத்து செய்தல்

தடையிலா வாணிப இயக்கத்தில் பாராளுமன்றப் பெருந் தலைவராக வந்த ராபர்ட் பீல் (Robert Peel), வருமான வரியை மேற்கொள்வதன் வழியாகத் தொழிற் பாதுகாப்பை ரத்துசெய்யத் தொடங்கினர். இவ் வருமானவரி, இதுவரை தொழிற்சாலைப் பொருள்களின்மீதிருந்த ஏற்றுமதி வரியாலும் கச்சாப் பொருள் களின் மீதிருந்த இறக்குமதி வரியாலும் கிடைத்த வருமானத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்தது. அதேசமயம், இவ் வரிகளை ரத்து செய்வதற்கு அல்லது பெருமளவில் குறைப்பதற்கு உற்பத்தியாளர் களின் ஆதரவும் இருந்தது. விவசாயத் தொழிற் பாதுகாப்புப் பிரச்சினையைப் பொறுத்தவரை, முதலில் தனது கட்சியாளர் களுக்கு இணக்கமாக இருந்தார். ஆனல், பாராளுமன்றத்திற்கு வெளியே தானியச் சட்டங்களுக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது; அதனேடு, தடையிலா வாணிபத்தில் அக்கறைகொண் டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் திருத்தமாக வாதம் செய்து தடையிலா வாணிபம் வேண்டுமென வற்புறுத் தினர். எனவே, இறுதியில் தம் கட்சியினரின் கொள்கையை அவர் கைவிட்டுவிட்டார்.

மேலும், 1839-ல் தொழிற்சாலைப் பொருள் உற்பத்தியாளர் களால் அமைக்கப்பட்ட தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் (Anti-Corn Law League) இச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் போராடியது. பண்ணைத் தொழிலாளிகளும் ஆலைத் தொழிலாளி களும், தமக்கு மலிவான உணவு கிடைக்குமென இச் சங்கத்தை ஆதரித்தனர். அதேசமயம், அக் காலத்தில் நிலவிய ரிக்கார் டோவின் கோட்பாட்டின்படி, மலிவான உணவு கிடைத்தால் கூலியைக் குறைத்து, உயர்ந்த இலாபத்தைப் பெறலாமென்ற

நோக்கத்தில் தொழிற்சாலைப் பொருள் உற்பத்தியாளர்களும் உணவு மலிவாக இருப்பதையே விரும்பினர். நிறைய பணமும் திறமையும் கொண்டு, ரிச்சார்ட் காப்டன் (Richard Cobden), ஜான் பிரைட் (John Bright) ஆகியோரின் நாவன்மை பெற்ற தாயும் விளங்கிய இச் சங்கம்,

'முதலாளிகளையும் தொழிலாளிகளையும் ஒன்றுபடுத்திய மாபெரும் அற்புதத்தைச் செய்துவிட்டது. உணர்ச்சியையும் வாதத்தையும் அது இணைத்து, காப்டன் தொடங்கிவைக்க, பிரைட் முடித்த பொதுக்கூட்டங்களில் அவ்விரண்டையும் முழு நிறைவாக்கியது. மனிதனின் சொந்த நன்மைக்கும் சமுதாயத்தின் பொது நன்மைக்கும் அது சம இசைவுடையதாயிற்று. அரசியல் நூல்கள் குறைந்த எண்ணிக்கையிலும் தரக்குறைவாயும் இருந்த அக் காலத்தில், 1843-ல் மட்டும் இச் சங்கம், 800 ஊழியர்களைக் கொண்டு வாதப்பொருத்தமுடைய ஒன்பது மில்லியன் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டது. பொதுக்கூட்டங்கள் அபூர்வமாயும் நிதி, அரசாங்கம் ஆகியவைபற்றிய கருத்துகள் அரசியல் குடும்பத்தாருக்கும் உயர்குடிப் பிறந்த அரசாங்கப் பணியாளர் களுக்கும் மட்டுமே புரியும் என்றும் கருதப்பட்ட அக் காலத்தில், இச் சங்கத்தின் பேச்சாளர்கள் பொதுக்கூட்டங்களின் வழியாக வியாபாரிகளுக்கும், எழுத்தர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் மண் வெட்டுவோருக்கும், விவசாயிகளுக்கும், பண்ணைத் தொழிலாளிகளுக்கும் அரசியல் பொருளாதாரத்தை எடுத்துக்கூறினர். அதனோடு, அவ் ஆண்டின் அரசாங்க வரவுசெலவுக் கணக்கினைத் திறனாய்வும் செய்தனர்.' [7]

பாராளுமன்றத்தில் நடத்திய காப்டனின் தெளிவான பொருளாதார வாதமும் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொந்தமாகவே ஆய்வு செய்த பீல் அவர்களின் ஆய்வும் சேர்ந்து, தடையிலா வாணிபத்திற்குப் பிரதம மந்திரியைக் கடைசியில் இசைய வைத்தன. 1845-ல் ஐரிஸ் நாட்டு உருளைக்கிழங்கு விளைச்சல் நோயால் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தானியச் சட்டங்களைப் பிரதம மந்திரி தாற்காலிகமாக ரத்து செய்தார். அச் சட்டங்களை மறுபடியும் அமல் நடத்துவதற்குப் பொதுமக்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததால், 1846-ல் அதை முழுவதுமாக ரத்துசெய்யவேண்டியதாயிற்று.

[7] G. M. Trevelyan அவர்களின் 'British History in the Nineteenth Century' என்னும் நூலில், பக்கம் 270. Copyright 1922 by Longmans, Green & Co., London.

மேலும் தடையிலா வாணிபம் பரவல்

1846 ஆம் ஆண்டிற்குப் பின்னர், தடையிலா வாணிப இயக்கம் பிரிட்டனில் முடிவடைந்து, இதர நாடுகளுக்குப் பரவலாயிற்று. 1860-ல் தீர்வைப் பட்டியலில் இருந்த 400 பண்டங்களில் 60 பண்டங்களைத் தவிர ஏனைய அனைத்தையும் பிரிட்டன் ரத்து செய்துவிட்டது; பின்னர், சிறிது சிறிதாக இப் பண்டங்கள் கூடப் புறக்கணிக்கப்பட்டன. இதனால் 1914 ஆம் ஆண்டுவரை பிரிட்டனின் அங்காடி தடையிலா இறக்குமதி உடையதாக இருந்தது. 1860-ல் காப்டன் செவாலியர் ஒப்பந்தம் (Cobden-Chevalier Treaty of 1860) தொடங்கியதிலிருந்து வரிசையாக ஏற்பட்ட பல பன்னாட்டு ஒப்பந்தங்களின் விளைவாக, ஃபிரான்ஸ் நாட்டில் தாராள மனப்பான்மைகொண்ட அரசரான மூன்றாம் நெப்போலியன், உயர்ந்த வீதப் பாதுகாப்பு இறக்குமதி வரிகளை ரத்து செய்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாகச் சீரான இறக்குமதி வரிகளை அமலாக்கினார். 1850-க்குப்பின் ஹாலந்தும் பெல்ஜியமும் அவ்வாறே தாராளமான இறக்குமதி வரிக் கொள்கையைக் கடைப்பிடித்தன. 1816 ஆம் ஆண்டிலிருந்து தொழில் காப்புவரிக் கொள்கையைப் பின்பற்றி வந்த அமெரிக்காகூட, 1857-ல் இறக்குமதி வரிகளைக் கணிசமான அளவு குறைத்துவிட்டது. ஜெர்மனியில் 1860ஆம் ஆண்டுகளில் 1834ஆம் ஆண்டு முதன் முதலாகக் கொண்டுவந்த குறைந்தவீத இறக்குமதி வரியைப் பின்னர் அதிகமாக்கிய ஜெர்மன் சுங்கச் சங்கம், தடையிலா வாணிபத்திற்கிருந்த வற்புறுத்தலுக்கிணங்கி, காப்புவரி மட்டத்திலிருந்து வருவாய் பெறும் மட்டத்திற்கு இறக்குமதி வரிகளைக் குறைத்தது.

19ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதி முதல், 1914ஆம் ஆண்டு வரை இந் நாடுகளில் நீடித்து இருந்த தாராளமான இறக்குமதி வரிக் கொள்கையோடு, வேறு இரண்டு அம்சங்களையும் இங்குக் குறிப்பிடல் நன்று. அதாவது, (1) இக் கொள்கை நீடித்திருந்தது, (2) அது பொதுவானதாக அமைந்தது. 1870ஆம் ஆண்டிற்குப்பின் மறுபடியும் இறக்குமதி வரி வீதம் உயர்வாக முற்பட்டதெனினும், பொதுவாக ஒரு பத்தாண்டுகள் நீடித்திருந்த பின்னரே அது மெதுவாக உயர்வாகியது. வாணிபத்திலிருந்த நட்ட ஆபத்துகளைக் குறைத்து, அந் நட்ட ஆபத்தை முன்கூட்டியே அளவிடும் திறன் அதிகரித்ததன் வழியாக, இது வாணிபத்தை விரிவடையச் செய்துவிட்டது. மேலும், இப்போது பிரபலியமாக உள்ள நேச நாடுகளின் ஷரத்தை வாணிப ஒப்பந்தங்களில் புகுத்தியதன் மூலம் உலக முழுவதும் இறக்குமதி வரிக் குறைப்பின் நன்மைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வோர் ஒப்பந்தத்திலும்

ஒப்பந்தம் செய்யும் நாடுகள் ஒன்றுக்கொன்று சலுகைகள் அளிப்பதன்மூலம் இச் சரத்து அதிகரித்துக்கொண்டே இருந்தது என்பது உண்மை.

தடைகளிலிருந்து மீண்ட பன்னாட்டு வாணிபம், துரிதமாக வளர ஊக்குவிக்கப்பட்டது. இதுபற்றிய அளவீடுகள் ஏறத்தாழ உண்மையாயிருக்கக்கூடியவைகள்தாம். இந்த அளவீட்டின்படி 1830-க்கும் 1850-க்குமிடையே வாணிப அளவு இரட்டிப்பானதாகத் தோன்றுகிறது. அடுத்த முப்பது ஆண்டுகளில் பன்னாட்டு வாணிப அளவு மூன்று மடங்காகியது; ஒருவேளை சுமார் நான்கு மடங்குகூட அதிகரித்திருக்கலாம். பன்னாட்டு வாணிபம் அவ்வளவு முக்கியமாக இன்றி, உள்நாட்டு வாணிபத்திற்குத் துணை செய்வதாகவே இருந்த நாடுகளில்கூட இப்போது அது விரிவானது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அர்ஜென்டைனா, உருகுவே ஆகிய நாடுகள், கோதுமை, ஆட்டு உரோமம், இறைச்சி ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் சிறப்புப்பெற்ற நாடுகளாயின. இப்பொருள்களுக்கு முக்கிய அங்காடியாக விளங்கும் பிரிட்டன், தனது விவசாயத் தொழிலை ஓரளவு சுருக்கமடைய விட்டுவிட்டு, தொழிற்சாலைப் பொருள்களைச் சிறப்புடன் உற்பத்தி செய்வதில் முழுக் கவனமும் செலுத்த முடிந்தது. மேற்கத்திய நாடுகள் கோதுமையை மலிவாக அளிக்க முன்வந்ததால், டென்மார்க் தனது பொருளாதாரத்தைச் சிறிது மாற்றி அமைத்துக்கொண்டது. உணவுத் தானியத்தை உற்பத்திசெய்து, ஏற்றுமதி செய்துவந்த நாடு, இப்போது அதை இறக்குமதி செய்துகொண்டு, அதற்குப் பதிலாகப் பன்றி இறைச்சி, உப்பிட்ட பன்றித் தொடை, முட்டை, பால் பண்டங்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறிவிட்டது. உலகெங்கும் வாணிப வளர்ச்சிக்குப் பொருத்தமான சிறப்புத் தேர்ச்சி நடைபெறலாயிற்று.

ஒரு பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு

1870 ஆம் ஆண்டுகளில் முக்கியமான பல ஐரோப்பிய நாடுகளும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் பொன் செலாவணித் திட்டத்தை மேற்கொண்டதன் வழியாக, நிலையான மாற்று வீதத்தில் செலாவணிகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாயும் ஒன்றுக்கொன்று முழு மாற்றுரிமை உடையதாயும் ஆயின.[8] தொழில் வளர்ச்சிபெற்றுவந்த நாடுகள், ஒருசில நாடுகளிலிருந்து

[8] 1861-க்குப்பின் காகிதச் செலாவணி அடிப்படையைக் கொண்டிருந்த அமெரிக்கா, 1873-ல் அதிகாரபூர்வமாகப் பொன் செலாவணித் திட்டத்தை ஏற்படுத்தியது. எனினும், பொன் நாணயம் செலுத்தல் 1879 வரை மேற்கொள்ளப்படவில்லை.

தமக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் உணவுப் பொருள் களையும் இறக்குமதிசெய்து, ஏனைய சில நாடுகளில் தம் முடிவுப் பொருள்களை விற்று, எஞ்சியுள்ள நிலுவையை லண்டனை மைய மாகக்கொண்ட பன்முகப் பண அங்காடியின் அமைப்புமூலம் தம் கணக்கைச் சரிக்கட்டின. லண்டனில் நன்கு வளர்ச்சியுற்று, திறம்பட நடந்த பண அங்காடிக்கு உலகெங்கிலுமிருந்து நிதிகள் வந்து சேர்ந்தன. அப் பணத்தைப் பெரிதளவு உலக வாணிபத்திற் கென்றும், சிறிதளவு வளர்ச்சிபெற்று வரும் நாடுகளின் மூலதனத் தேவைக்கென்றும் லண்டன் பயன்படுத்தி வந்தது.

இவ் அமைப்பில் பல உலைவுகளும், அவற்றால் பல திருத்தங்களும் ஏற்படத்தான் செய்தன. எனினும், அப்போது ஏற்பட்ட பொரு ளாதார வளர்ச்சி விரைவாக இருந்ததால், இந்த உலைவுகளினால் பெருஞ் சீர்கேடு எதுவும் ஏற்படவில்லை. தீவிரமான உலைவுகள் ஏற்பட்டால்கூட, பொன் நாணயத் திட்டத்தில் இருந்த திருத்த முறை அவற்றைத் தீர்த்துவைத்தன. அதனால், பணச் சுருக்கம் ஏற்பட்டபோதிலும், அச் சுருக்கத்தை அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டன. எனவே, அது தொடர்ந்து செயற்பட்டு வந்தது.

மேற்கத்திய நாடுகளிலெல்லாம் முதலாளித்துவ முறையும் ஜனநாயக அரசியல் கொள்கையும் இணைந்து இருந்தன. அப்போது உடோப்பிய (Utopia) சோசலிஸம், மார்க்ஸிய சோச லிஸம் ஆகிய இரண்டுவகைப் பொது உடைமைக் கொள்கை களையும் பலர் ஆதரித்தனரெனினும், அவர்களோ அல்லது வேறு எதிரிகளோ முதலாளித்துவ ஜனநாயக இணைப்பை எதிர்க்க வில்லை. உற்பத்தியும், கச்சாப் பொருள்கள், முடிவுப் பொருள்கள் ஆகியவையும் மூலதனமும் உழைப்புங்கூட பெரு மளவில் இடம் பெயர்வதையும், தேவைக்கேற்றவாறு விரிவு படுத்தவும் சுருக்கவும் அங்காடிச் சக்தியே போதுமானதாக இருந்தது; அவ்வாறே நம்பவும்பட்டது. ஒரு பன்னாட்டுப் பொருளாதாரத்தின் மாதிரி அமைப்பு, கோட்பாட்டளவில் எப்படி இருக்குமோ, ஏறக்குறைய அதேபோன்றதொரு பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தது.

[மேலும் படிப்பதற்குரிய நூல்களுக்கு 12ஆம் அதிகாரத்தின் முடிவில் பார்க்கவும்].

12. தேசியப் பற்று மீண்டும் தோன்றல்

20ஆம் நூற்றுண்டின் சாதகமான இக் காலத்துக் கண்ணேட்டத்திலிருந்து பார்க்குமிடத்து, 19ஆம் நூற்றுண்டு, அல்லது இன்னும் தெளிவாகக் குறிப்பிடுவதாயின், நெப்போலிய காலப் போருக்குப் பின்னும், முதல் உலகப் போருக்கு முன்னும் (1814-1914) இருந்த நூருண்டு காலம், பல வழிகளில் சிறப்புற்ற காலமாய் அமைந்தது. நமது பன்னுட்டு ஆய்வினைக்கொண்டு நோக்குமிடத்து, வாணிபத்தின்மீதிருந்த அரசாங்கக் கட்டுப்பாடுகளெல்லாம் நீங்கி, அவற்றிற்குப் பதிலாக அங்காடிச் சக்திகளே வாணிபத்தை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கு வழி ஏற்பட்ட நூற்றுண்டாக அது விளங்கியது. தத்தம் தராதரச் செலவினை ஆதாரமாகக் கொண்டுதான், எல்லா நாடுகளும் சிறப்புத் தேர்ச்சி செய்யவேண்டுமென விட்டுவிடப்பட்டது; உலக நாடுகள் அனைத்தும் அவ்வாறே செய்தன. பன்னுட்டு வாணிபம் வளர்ச்சியடைந்து விரிவாகியதோடு, உலகின் பல பிரதேசங்களையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகச் செய்து, ஒன்றுபடுத்தப்பட்டதோர் உலகப் பொருளாதார அமைப்பு, சுமுகமாக நடைபெறவும் வழி செய்தது. இவ்வாறு செய்வதற்கான வளர்ச்சி, 1815ஆம் ஆண்டின் முடிவில் ஆரம்பமாகி, 1850 முதல் 1869 வரை, படிப்படியாக வளர்ந்து, தடையிலா வாணிப இயக்கத்தை அடைந்தது.

1870ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் தாராள மனப்பான்மைச் சக்திகளெல்லாம் தம் குறிக்கோளின் உச்சநிலையை அடைந்தன. அன்று முதல் சிறிதுசிறிதாக வளர்ந்துவந்த தேசியக் கொள்கைக்கு எதிராக, அவை பின்னணியிலிருந்து வேலை செய்யவேண்டியவை ஆயின. அனுகூலமான நிலைமைகள் பெரும்பாலும் அப்படியே இருந்தபோதிலும், 19ஆம் நூற்றுண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள் எதிர்காலத்தை முன்னறிவிக்கும் போக்கினை வலியுறுத்தின. இவற்றில் உலகப் பொதுக் கொள்கைக்கு நேர்மாருகத் தோன்றிய தேசியக்

கொள்கையும், பொருளாதார அமைப்பின் சமநிலையில் ஏற்பட்ட கேடுகளும் உள்ளடங்கும். இவ்வகையான வளர்ச்சிகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் ஆய்வோம்.

பிரிட்டன் வகித்துவந்த தலைமைப் பதவிக்கு எதிர்ப்பு

ஜெர்மனியின் எழுச்சி

ஜெர்மனியின் பேரரசுக்குள் அரசியல் ஒன்றிப்பை ஏற்படுத்திய சமயம் (1871), உலகின் பொருளாதார வலிமைபெற்ற நாடுகளில் ஜெர்மனி மூன்றாவது இடம் வகித்தது. தொழிற்சாலை உற்பத்திப் பொருள் அளவிலும் சரி, இரும்பு எஃகுப் பொருள் உற்பத்தி அளவிலும் சரி, அல்லது வாணிப அளவிலும் சரி, வலிமை மிக்க நாடுகளில் அது மூன்றாவதாகவே திகழ்ந்தது. எனினும், பின்னர் வந்த 40 ஆண்டுகளுக்குள், அது பிரிட்டனையும் விஞ்சி, ஐரோப்பாவிலேயே வலிமைமிக்க நாட்டாக வளர்ந்து, உலகிலேயே தலைசிறந்த நாடாக ஆகவேண்டுமென முயன்றது.

ஜெர்மனியின் விறுவிறுப்பான இவ் வளர்ச்சி, ஃபிரான்சுக்கும் பிரஸ்ஸியாவுக்கும் நடந்த போர் முடிந்து, ஜெர்மனி ஒன்றித்த நாடாக அமைந்தபோது ஆரம்பமானது. வலிமையற்ற பல சிறிய குட்டி சமஸ்தானங்களுக்குப் பதிலாக, வலிமைமிக்கதொரு மத்திய அரசாங்கம் தோன்றியதால், இதுவரை தனித்தனியாக இருந்த, சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டிருந்த கொள்கைகளையெல்லாம் ஒருங்கிணைக்க முடிந்தது. அதோடு, ஃபிரான்ஸ் நாட்டிடமிருந்து இழப்பீட்டுத் தொகையாக ஒரு பில்லியன் டாலர் கிடைத்ததால், பொன் நாணயத் திட்டத்தை ஜெர்மனி அமலாக்கவும் சாத்தியமாயிற்று. நிற்க, நெசவுத் தொழில்களும் இரும்புச் சுரங்கங்களும் ஏராளமாயிருந்த அல்சாஸ்—லொரேன் பகுதிகள் ஜெர்மனிக்கு வந்துவிட்டதால், வளர்ச்சியடைவதற்கு வேண்டிய வசதிகள் மேலும் அதிகரித்தன. இதுவரை மெதுவாக அதிகரித்துவந்த நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் உற்பத்தி அளவு இப்போது விரைவாக அதிகரிக்க முடிந்தது. 1870-க்கும் 1900-க்குமிடையே இவ்விரு கனிப் பொருள்களின் உற்பத்தி அளவு ஐந்து மடங்கு அதிகரித்தது. 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரிட்டன் உற்பத்திசெய்த அளவைக் காட்டிலும் குறைவாக இருந்த தேனிரும்பும் நிலக்கரியும், பத்தாண்டுகளில் உலகிலேயே அதிக அளவாக உற்பத்தி செய்யப்பட்டதால் பிரிட்டன் நாட்டை ஜெர்மனி விஞ்சிவிட்டது.

இவ்வாறு உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வளர்ச்சிபெற்ற ஜெர்மனி, வெளிநாட்டு வாணிபத்திலும் வளர்ச்சிபெற்றது குறிப்பிடத்தக்கது. அதன் ஏற்றுமதி அளவும் பெருகிக்கொண்டே சென்றது. எனினும், 1900ஆம் ஆண்டுவரை அதன் ஏற்றுமதி அதிகரிப்பு விதம், உற்பத்தி அதிகரிப்பு வீதத்தைக் காட்டிலும் குறைவாகத்தான் இருந்தது. அதன் பின்னர், மிக விரைவாக அதிகரித்தது. 1872-ல் 500 மில்லியன் டாலராக இருந்த அதன் ஏற்றுமதி 1900-ல் 1,132 மில்லியன் டாலருக்கும், பின் 1913-ல் 2,494 மில்லியன் டாலருக்கும் அதிகரித்தது. உலோகப் பொருள்கள், ரசாயனப் பொருள்கள், பருத்தித் துணி, பீட்கிழங்கு ஆகியவையும் முக்கியமான கனிப்பொருள்களில் ஒன்ருகிய நிலக்கரியும் அதன் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக விளங்கின. அதன் இறக்குமதிப் பொருள்களில் உணவுத் தானியம், ஆட்டு உரோமம், பருத்தி, மரம் ஆகிய கச்சாப் பொருள்களும் உணவுப் பண்டங்களும் முக்கியமானவை.

பிரிட்டன் ஏற்றுமதி செய்த அதே வகைப் பொருள்களைத்தான் ஜெர்மனி ஏற்றுமதி செய்தது. எனவே, ஜெர்மனியின் ஏற்றுமதி அதிகரித்ததற்குக் காரணம், பிரிட்டனைக்காட்டிலும் அவற்றை மலிவாக உற்பத்தி செய்ததுதான். ஜெர்மனி நாட்டின் வளர்ச்சியினுல் பிரிட்டனுக்கு நேரடியான போட்டி ஏற்பட்டது என்பது தெளிவு. இருந்தபோதிலும், இவ் ஏற்றுமதிப் பொருள்களில் தீவிரமான போட்டி ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. ஏனெனில், இப் பொருள்களிலெல்லாம் கணிசமான அளவு சிறப்புத் தேர்ச்சி நடைபெற்றது. உதாரணமாக, ஜெர்மனி முரட்டுத் துணிகளில் சிறப்புத் தேர்ச்சிபெற்று உற்பத்திசெய்த அதேசமயம், பிரிட்டன் உயர்தரமான துணி வகையில் கவனம் செலுத்தியது. அதேபோல் ஜெர்மனி மலிவான கைக்கடிகாரங்களையும் மணி அடிக்கும் பெரிய கடிகாரங்களையும் சிறப்பாக உற்பத்தி செய்ய, பிரிட்டன் (பின்னர் சுவிட்சர்லாந்து) விலையுயர்ந்த வகைக் கடிகாரங்களைமட்டும் உற்பத்தி செய்தது. மேலும், ஜெர்மனி நாடு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்த பொருள்களில் சில போட்டியில்லாதவை. அவை இங்கிலாந்து நாட்டிற்குங்கூட ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ் வகையான பொருள்களில் ரசாயனப் பொருள்களும் மின்சாரப் பொருள்களும் முக்கியமானவை. நிற்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெர்மனி மட்டுந்தான் ஏற்றுமதிசெய்தது. பிரிட்டன் அந் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அந் நாடுகளுக்கு ஜெர்மனி அருகில் இருந்ததால், ஜெர்மனிக்குத்தான் அவ் ஏற்றுமதியால் அனுகூலம் ஏற்பட்டது. இவ்வாருக, இப் பகுதிகளுக்கெல்லாம் ஜெர்மனியின் ஏற்றுமதி

அளவு அதிகரித்ததால், உலக வாணிபத்தின் அளவுதான் அதிகரித்ததேயன்றி, இதனால் பிரிட்டனுக்கு எவ்வித நட்டமும் ஏற்படவில்லை.

1880 முதல் 1899 வரை முக்கியமாய் ஜெர்மனியாலும், ஓரளவிற்குப் ஃபிரான்ஸ், பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளாலும் பிரிட்டனுக்குப் போட்டி ஏற்பட்டது. இதனால், இதுவரை நீண்ட காலமாகப் போட்டியில்லாதிருந்ததால் பிரிட்டனுக்கு இருந்த சிறப்பு நிலை தளதளத்து, அதன் வாணிப நிலை அதிர்ச்சி அடைந்துவிட்டது. இதுவரை, பிரிட்டனின் பொருள்கள் தாம் தரமானவைகளாக இருந்துவந்தன; எனவே, அவற்றை விற்பதற்கென்று எவ்விதத் தூண்டுதலும் தேவை இல்லாமல் இருந்தது. அவை அயல்நாட்டவர்களுக்குத் திருப்திகரமாக இல்லாதிருந்தாலும், வேறு வழியில்லாததால், அவர்கள் இருப்பதைக்கொண்டு திருப்தி அடையும்படியான நிலை இருந்துவந்தது.

அயல்நாட்டு வாணிபத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த பிரிட்டனுடன் போட்டி போடுவதற்கு ஜெர்மானியர்கள் பல உபாயங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் வாணிபத்திலிருந்த குறைகளையெல்லாம் அவர்கள் எடுத்துக்கூறினர்; அயல்நாட்டு வாடிக்கையாளர்களின் விருப்பப்படி பொருள்களை உற்பத்தி செய்தனர்; தமது ஏற்றுமதிப் பொருள்களைக் கவர்ச்சிகரமான முறையில் அனுப்பிவைத்தனர்; சிறிய அளவில் ஆர்டர் வந்தால் கூட, பெருமளவில் பின்னர் ஆர்டர் வரலாமெனக் கருதி, அவற்றையும் அதிக அக்கறையோடு நிறைவு செய்தனர். பிரிட்டிஷ் வணிகர்களின் பதிலாட்களைவிட ஜெர்மானிய வணிகர்களின் பதிலாட்கள் வெளிநாடுகளில் அதிகமாயிருந்தனர். பிரிட்டிஷ் வணிகர்களைப்போலன்றி, ஜெர்மானிய வணிகர்கள் தாம் வாணிபம் செய்த அயல்நாட்டு மொழிகளைக் கற்றுக்கொண்டனர். அங்குள்ள பெண்களையே திருமணம் செய்துகொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியிருந்தனர். பிரிட்டிஷ் வணிகர்கள் ரொக்கத்திற்கு மட்டுமே பொருள்களை விற்றனர். அல்லது கடனுக்கு விற்பதென்றால், அதிகபட்சம் 60 முதல் 90 நாட்கள் வரைதான் தவணை கொடுத்தனர். மாறாக, புதுப் பணக்காரர்களான ஜெர்மன் நாட்டு வியாபாரிகளோ 6 மாதம், 9 மாதம், ஏன் வருடக் கணக்கில்கூட தவணை கொடுத்தனர்.

இவ் வகையான எரிச்சலூட்டும் புதிய வழிகளில் அவர்கள் விற்பனை செய்ததால், வியாபாரத்தில், சிறப்பாகக் கடுமையான மந்தம் ஏற்பட்டபோது (1885, 1895) பெரும் பீதி உண்டாகியது.

ஆனால், மந்தகாலம் முடிந்து, வியாபாரத்தில் மீட்சி (recovery) ஏற்பட்டதும், பிரிட்டிஷ் வணிகர்கள் தம் அங்காடிகளில் சிலவற்றை இழந்துவிட்டதுபோல் தோன்றிய போதிலும், பழைய வியாபாரத்தில் சில அதிகரித்ததாலும், புதிய சில வியாபாரம் தொடங்கியதாலும் இவ் விழப்பை ஈடுசெய்ய முடிந்தது. தம் ஏற்றுமதி அதிகரித்ததால், பிரிட்டனின் இறக்குமதியும் அதிகரிக்க நேரிட்டது. அதேசமயம் ஆசியாவில் மலிவான துணிமணிகளுக்கிருந்த பெருந் தேவையையும் பிரிட்டன் பயன்படுத்திக் கொண்டது. எனவே, சிலர் நினைப்பதுபோல் ஜெர்மனியின் புதிய போட்டியால் தன் தொழில் வளத்தைப் பிரிட்டன் இழந்துவிடவில்லை. எனினும், பிரிட்டிஷ் வணிகர்கள் முன்பைவிடத் தீவிரமாக உழைக்கவேண்டியிருந்தது. உற்பத்தியாளர்களோ, சிலவகை உற்பத்திப் பொருள்களைக் கைவிட்டுவிட்டு, தம் சாதனங்களையும் திறனையும்கொண்டு குறைந்த செலவில் உற்பத்திசெய்த ஜெர்மனியைப்போல் சில புதிய உற்பத்தித் துறையில் சிறப்புத் தேர்ச்சிபெற வேண்டியதாயிற்று.[1] இவ்வாறாக, வாணிபம் செய்த சிலவகைப் பொருள்களின் அளவு குறைந்த அதேசமயம், வேறு சிலவகைப் பொருள்களின் அளவு அதிகரித்தது. ஜெர்மனியும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளாகத் தோன்றியதும், வாணிபம் செய்யப்பட்ட தொழிற்சாலைப் பொருள்களில் பெரும்பாலானவற்றில் இந் நாடுகள் சிறப்புத் தேர்ச்சிசெய்து, அவற்றைத் தமக்குள் பரிவர்த்தனை செய்து கொண்டன. ஜெர்மன் நாட்டின் மின் பொறிகளும் சுரங்க எந்திரங்களும், இங்கிலாந்து நாட்டின் விவசாயக் கருவிகளுக்கும் நெசவு எந்திரங்களுக்கும் பரிவர்த்தனை செய்யப்பட்டன. அதே போல் முரட்டுத் துணி வகைகள் உயர்ந்த ரகத் துணிகளுக்கும், சாயம் காய்ச்சும் பொருள்கள் கனரகத் தொழிலுக்கு வேண்டிய ரசாயனப் பொருள்களுக்கும் பரிவர்த்தனையாயின.

அமெரிக்கா

அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, ஜெர்மனியைக் காட்டிலும் விரைவானதாகும். பெரும்பாலும் ஒரு விவசாய நாடாக இருந்த அமெரிக்கா, நவீன தொழில் மயமான நாடாக மாறியது இயல்புதான். ஏனெனில், அந் நாடு ஏராளமான நிலம், கனிப்பொருள், சக்தி, மரங்கள் ஆகியவற்றைக் கொண்டது;

[1] பிரிட்டனின் உள்நாட்டு அங்காடியிலேயே சர்க்கரைத் தொழில், ரசாயனத் தொழில், இரும்பு எஃகுத் தொழில், பருத்தி, கம்பள நெசவுத் தொழில் ஆகிய சில பிரிட்டிஷ் தொழில்களுக்கு ஜெர்மனியில் தீவிரமான போட்டி ஏற்பட்டது. இதனால் 1870-ல் 324 மில்லியன் கெஜ அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட கம்பளத் துணி 1903-13-ல் ஆண்டொன்றுக்கு 174 மில்லியன் கெஜமாகக் குறைந்துவிட்டது.

அதோடு, ஒரு கண்டத்தின் பரப்பளவும் கொண்டது. மேலும், பொருளாதாரத் துறையில் விரைவான முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பல வாய்ப்புகள் அங்கிருந்தன. இலாபம் பெறவேண்டுமென்ற தொழிலதிபர்களுக்கு அவ் வாய்ப்பை அளிக்கும் இயற்கை சாதனங்கள் அங்கு ஏராளம். இங்கிலாந்து நாட்டைப்போன்று, தனி யுரிமைத் தத்துவம் திடமாக உள்ள நாடு இது; மக்கள் தொகையும் விரைவாகப் பெருகிய நாடு. மக்கள் தொகையும் இயற்கை வளமும் ஒன்றுக்கொன்று பொருத்தமான வீதத்திலிருந்ததால் அவர்களின் வருமானமும் உயர்வாயிருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மக்களுக்கு வேண்டியிருந்ததைக் காட்டிலும், அதிக விகிதாசாரத்தில் இயற்கை வளம் இருந்தது. வேறுவிதமாகக் கூறின், இயற்கை வளத்தினை நோக்க, உழைப்பாளிகள் அங்குப் போதாத அளவில் இருந்தனர். ஆனால், அதே சமயம், மக்கள்தொகை விரைவாகப் பெருகியது. இவ் விரண்டும் சேர்ந்துதான் பொருளாதார வளர்ச்சியைத் துரிதமாக்கின. 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, ஏதோ கேட்டால் போதும், கிடைத்துவிடும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, வளமான நிலம் அங்கு ஏராளமாயிருந்தது. எனவே, பயிர்த் தொழிலில் ஈடுபட்டோருக்கு நிறைய வருமானம் கிடைத்ததோடு, தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களுக்கும் அந்நாடு சிறந்த அங்காடியாக விளங்கியது. 1870-க்கும் 1900-க்கு மிடையே இரட்டிப்பாகக் கூடிய அளவிற்கு மக்கள்தொகை பெருகியதால், பொருள்களுக்கிருந்த தேவை விரிவாகிக்கொண்டே இருந்தது.

அமெரிக்க நாட்டு விவசாயத்தின் உற்பத்தித்திறன் அதிகமாயிருந்ததால், அந் நாட்டு விவசாயிகளின் வருமானம் உயர்ந்ததோடு, இதர மாற்று வழித் தொழில்களான சுரங்கம் அல்லது தொழிற்சாலைகளில் வேலை செய்தோரின் வருமானமும் உயர்ந்தது. இதனால்தான் தொழிற்சாலைப் பொருள்களுக்கிருந்த தேவை விரிவாகியது. அடிப்படையான உரிமைகளில் அமெரிக்க மக்கள் திடமான நம்பிக்கைகொண்டிருந்ததால், தம் உயர்ந்த வருமானத்தைக்கொண்டு, அவர்கள் இஷ்டப்படி பெருமளவில் உற்பத்தியான பண்டங்களை வாங்க முடிந்தது. இவ்வித இயல்புடைய நுகர்வோர் அந்நாட்டில் ஏராளமாக இருந்ததால்தான், தரமான பண்டங்களை உற்பத்தி செய்தோர், அவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்யத் தூண்டப்பட்டனர்.[2]

[2] அமெரிக்க நாட்டிலிருந்த பெருமளவு உற்பத்தித் தொழில்கள் பிரபலியமானதற்குரிய காரணங்களை Erwin Rothbarth என்பார், 'Causes of the Superior Efficiency of U.S.A. Industry as compared with the British Industry' என்னும் ஆற்றல்வாய்ந்த கட்டுரையில் விவரிக்கிறார். இக்கட்டுரை Economic Journal XVI

ஒரு தொழிலில் ஒரே பண்டத்தை மட்டும் பெருமளவில் உற்பத்தி செய்யும்போது ஏற்படும் அளவுச் சிக்கனங்களும் அதன் தொழில் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். ஒரு வேளை போதிய அளவில் உழைப்பாளிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள உயர்ந்த ஊதியமும் காரணமாயிருக்கலாம். இதனால் உழைப்பை மிச்சம் பண்ணும் உபாயங்களை உற்பத்தியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வகை உபாயங்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலில் அமெரிக்கர்கள் கைதேர்ந்தவர்கள்.[8] இவ்வாறாக, தொழில்மயமான எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், சிறப்பான தொழில் நுட்பமுறைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம்தான் அவற்றை அபிவிருத்தி செய்யுமாறு வற்புறுத்தியுள்ளது என்று தெரிகிறது.

அங்காடி விரிவானதாயிருந்ததாலும், உழைப்பை மிச்சம் பண்ணும் எந்திரங்கள் இன்றியமையாதவைகளாயிருந்ததாலும் தொழில் வளர்ச்சி மிகத் துரிதமாக ஏற்பட்டது. 1850-க்கு முன் ஒரேமாதிரியான பாகங்களைக் கொண்டுதான் துப்பாக்கிகளும் கைத்துப்பாக்கிகளும் செய்யப்பட்டன. உள்நாட்டுப் போருக்குப் பின் இம் முறை, தையல் மிஷின்கள், கடிகாரங்கள், கைக்

(1946)-ல் 383ஆம் பக்கத்தில் உள்ளது. அமெரிக்கத் தொழிலுக்கும் பிரிட்டிஷ் தொழிலுக்குமுள்ள வித்தியாசத்தைப்பற்றி அவர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்: 'அங்குள்ள உயர் தரக் குடிமக்களின் கருத்துடைய நடுத்தர வகுப்பினரும் செல்வர்களும் பெருமளவில் மலிவாக உற்பத்தியாகும் பொருள்களை விரும்புவதில்லை; அதற்குப் பதிலாக தனித்தன்மை வாய்ந்த பொருள்களைத்தான் அவர்கள் விரும்புகின்றனர்' (386ஆம் பக்கம்).

Rothbarth அவர்கள் கூறிய காரணங்களோடு இன்னும் சில காரணங்களையும் நாம் கூறலாம். ஏராளமான நிலம் இருப்பதோடு, ஏனைய நாடுகளைவிட முற்போக்கான நில உரிமைக் கொள்கை நமது நாட்டில் இருப்பதும் காரணமாகும். 1862-ன் குடும்பப் புலன் சட்டத்திலுள்ள (**Homestead Act of 1862**) கொள்கை, யார் வேண்டுமானாலும் நிலத்தை வாங்கலாம் என்ற வாய்ப்பை அளிப்பதன் மூலம், 'தரமான பொருள்களைப் பெருமளவில் வாங்கக்கூடிய மக்களிடம் அதிகப் பணம் சேருமாறு செய்கிறது.' லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ளதைப்போல் பெருமளவு நிலம் கொண்ட ஒரு சிலர் மட்டும் இருந்தால் இங்கும் அங்குள்ளதைப்போல் வருமானப் பகிர்வில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருந்திருக்கும்.

[8] 1873ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற உலகப் பொருள்காட்சிபற்றி அக்காலத்திய பத்திரிகை நிருபர் ஒருவர் பின்வருமாறு எழுதினார்: 'அங்கு அமெரிக்கக் கண்காட்சிப் பகுதியில் இருந்த எந்திரங்கள்தாம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மிகச் சிறந்தனவாக இருந்தன. அதோடு, விசேஷமான வேலை வகைகளுக்குச் சிறப்பாகப் பயன்படக்கூடிய இவ்வகை எந்திரங்கள் வேறு எந்த நாட்டின் கண்காட்சிப் பகுதியிலும் இல்லை. பொதுவாக, இந்த எந்திரங்களெல்லாம் உழைப்பை மிச்சம் பண்ணும் எந்திரங்கள் என்று கூறப்படுகின்றனர்.' 1885-ல் ஆங்கிலப் பார்வையாளர் ஒருவர் பின்வருமாறு கூறினார்: 'நாம் அதிசயமென்று கருதும் கருவிகளும் செய்முறைகளும் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் சாதாரணமாகக் காணப்படுகின்றன. எந்திரங்களால் செய்யக்கூடிய எந்த வேலையையும் கையினால் செய்வதில்லை என்பது அத் தொழிற்சாலைகளின் பண்பாகும்.' **Samuel Rezneck, 'Mass Production since the War between States,' in The Growth of the American Economy (edited by Harold Williams), p. 502. Copyright 1944 by Prentice-Hall, Inc., Englewood Cliffs, N.J.**

கடிகாரங்கள், விவசாயக் கருவிகள், சைக்கிள்கள், தட்டெழுத்துப் பொறிகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலில் கிழக்கு மாநிலங்களில் தொடங்கப்பெற்று, பின்னர் ஓஹியோ (Ohio) மாநிலத்திற்குப் பரவின எந்திரக் கருவி உற்பத்தித் தொழில்தான், பொருத்தமான ஒரே தன்மையுடைய பாகங்களை, இழையும் பிசகாது உற்பத்திசெய்யும் நுட்பத்தின் அடிப்படையை ஏற்படுத்தியது.

பேரளவு உற்பத்திமுறை ஏற்கெனவே முன்னேற்றமடைந்திருந்தபோதிலும், அமெரிக்கத் தொழில்கள் 19ஆம் நூற்றாண்டு முடியும்வரை, பிரிட்டிஷ் தொழில்களைப்போல் அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை. இதற்குச் சான்றாகத் தேனிரும்பு உற்பத்தி அளவையும் தொழிற்சாலைப் பொருள்கள் உற்பத்தி அளவையும் காட்டும் புள்ளிவிவரங்களைக் கொடுக்கலாம் (12.1 அட்டவணையையும் 12.2 அட்டவணையையும் பார்க்கவும்). 1870-ல் அமெரிக்காவில் உற்பத்தியான இரும்பு, பிரிட்டனின் உற்பத்தி அளவைக்காட்டிலும் கால்பங்குதான் அதிகமாயிருந்தது. அவ் வாண்டில் பிரிட்டனில் உற்பத்தியான தொழிற்சாலைப் பொருள்களில் பாதி அளவிற்காகிலும் அமெரிக்காவில் உற்பத்தியாகியிருக்குமா என்பது சந்தேகம்.[4] 1900-ல் தேனிரும்பு, நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தியில் அமெரிக்கா முதலிடம் பெற்றது; தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களில்கூட முதலிடம் பெற்றதாகத் தெரிகிறது. 1913-ல் அதன் தலைசிறந்த நிலை ஊர்ச்சிதமாகிவிட்டது. பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட தேனிரும்பின் அளவைக்காட்டிலும் அமெரிக்கா அதிக அளவு உற்பத்தி செய்தது. அதேபோல், இம் மூன்று நாடுகளும் சேர்ந்து உற்பத்தி செய்த ஆலைப் பொருள்களைக் காட்டிலும் (35.1 சதவீதம்) அமெரிக்கா உற்பத்தி செய்த அளவு (35·8 சதவீதம்) சிறிதுதான் குறைவாக இருந்தது. இவற்றையெல்லாம் வேறுவிதமாகக் கூறின், முதல் உலகப் போருக்குமுன்பு, பிரிட்டனுக்குப் பதிலாக அமெரிக்காதான் உலகிலேயே தலைசிறந்த தொழில் வளமிக்க நாடாக ஆகியது.

[4] 12.2 அட்டவணையின்படி 1870ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தியில் அமெரிக்கா 23.3 சதவீதமும், பிரிட்டன் 31.8 சதவீதமும் உற்பத்தி செய்ததாகத் தெரிகிறது. ஆனால், அமெரிக்கா இவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்திருக்க முடியாது என்பது நிச்சயம். இது, கைவினைத் தொழில்களில் உற்பத்தியான பொருள்களில் பெரும் பகுதியையும் தொழிற்சாலைப் பொருள்களை ஒத்த இதர தொழில்களின் உற்பத்திப் பொருள்களையும் சேர்த்து அளவிடப்பட்டிருக்கிறது. மேலும், 1870-ல் விலைகள் மிகத் தாழ்வாக இருந்தன; இந்த உண்மை இவ் வளவீட்டில் இடம் பெற்றதா என்பதற்கு அறிகுறியொன்றும் இல்லை. 1900ஆம் ஆண்டில் அமெரிக்கா உற்பத்தி செய்த அளவுகளைக் குறிப்பிடும் இலக்குகள்கூட அதிகமானவையாயிருக்கலாம். ஏனெனில், மொத்த தொழிற்சாலைப் பொருள் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு கைவினைஞர்களால் செய்யப்பட்டது.

அட்டவணை 12.1 முக்கியமான நாடுகளில் தேனிரும்பு உற்பத்தி அளவு

(மில்லியன் மெட்ரிக் டன்களில்)

	பிரிட்டன்	அமெரிக்கா	ஜெர்மனி	பிரான்ஸ்	ரஷ்யா
1870	6.1	1.7	1.4	1.2	0.4
1900	9.1	14.0	7.6	2.7	2.9
1910	10.2	27.7	13.1	4.0	3.0
1920	8.2	37.5	6.4	3.3	0.1
1930	6.3	32.3	9.7	10.3	5.0
1940	8.4	43.0	21.0	4.6	15.5

ஆதாரம் : W. Nelson Peach and Walter Krause அவர்களின் Basic Data of the American Economy என்ற நூலில், பக்கம் 59. Copyright, 1948 by Richard D. Irwin Inc., Chicago. Reproduced from The Metal Industry During 1941 (G. A. Roush பதிப்பித்தது) Published by Mcgraw-Hill Book Co., New York.

அமெரிக்காவில் ஏற்பட்ட பெருவாரியான அபிவிருத்திதான், அதன் வாணிப வளர்ச்சிக்கு முக்கிய காரணம். உள்நாட்டுப் போர் முடிந்த சமயம், அமெரிக்காவின் ஏற்றுமதி மதிப்பு 300 மில்லியன் டாலர்தான் (1860–70ஆம் ஆண்டுகளின் சராசரி இது). முதல் உலகப்போர் தொடங்குவதற்கு முன்பு, இது 6 மடங்காகப் பெருகியது. அதாவது, 1,750 மில்லியன் டாலருக்கு அதிகரித்தது (1906–10ஆம் ஆண்டுகளின் சராசரி இது). இவ்வளவு விரைவாக அதன் ஏற்றுமதி அதிகரித்தபோதிலும், அதனால் பிரிட்டனுக்குப் போட்டி ஏற்படவில்லை; மாறாக, அதன் ஏற்றுமதியை நிறைவு செய்வதாகவே இருந்தது. 1910ஆம் ஆண்டின் ஏற்றுமதியை எடுத்துக்கொண்டால், அதில் நான்கில் மூன்று பங்கு உணவுப்பொருள்கள், சுத்தி செய்யப்படாத மூலப்பொருள்கள், முடிவுபெறாத உற்பத்திப் பொருள்கள், முடிவுப்பொருள்கள் (முக்கியமாக மாவு) ஆகியவைதாம். எஞ்சிய நான்கில் ஒரு பகுதிதான் (23.7 சதவீதம்) முடிவுபெற்ற ஆலைப் பொருள்களாக இருந்தன. மேலும், அமெரிக்காவின் மொத்த உற்பத்தி அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதன் ஏற்றுமதி மிகக் குறைந்த விகிதம்தான் என்பது புலனாகும். 1870-ல் அதன் ஏற்றுமதி, மொத்த உற்பத்தியில் 7 சதவீதமாகவும் 1913-ல் 8 சதவீதமாகவும்தான் இருந்தது.

அட்டவணை 12.2 சதவீத வாரியாகக் கணக்கிடப்பட்ட ஆலைப் பொருள்கள் உற்பத்தி

	அமெரிக்கா	ஜெர்மனி	பிரிட்டன்	பிரான்ஸ்	ரஷ்யா	இத்தாலி	பெல்ஜியம்	ஸ்வீடன்	ஜப்பான்
1870	2.3	13.2	31.8	10.3	3.7	2.4	2.9	0.4	—
1896/1900	30.1	16.6	19.5	7.1	5·0	2.7	2.2	1.1	0.6
1913	35.8	15.7	14.0	6.4	5.0	3.1	2.1	1.0	1.2
1926/29	42.2	11.6	9.4	6.6	4.3	3.3	1.9	1.0	2.5
1936/38	32.2	10.7	9.2	4.5	18.5	2.7	1.3	1.3	3.5

ஆதாரம்: League of Nations வெளியிட்ட Industrialization and Foreign Trade என்ற நூலில், பக்கம் 13.

நமது மாபெரு நாட்டை முன்னேற்றுவதிலும், தடையிலா வாணிபம் நடத்திய நாடுகளின் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் நாம் மிகுந்த அக்கறை காட்டியதால், ஏற்றுமதித் தொழில்களை அபிவிருத்தி செய்வது நமக்கு முக்கியமாகப் படவில்லை. நமது பண்ணைகள், காடுகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் அளவுக்கு மிஞ்சி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை எப்படியும் கழிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவற்றை நாம் ஏற்றுமதி செய்தோம். நமது ஆலைப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தபோதுகூட, நமது தேவைக்குப் போதுமானதாக அவை இருக்கவேண்டுமென்பதில்தான் நாம் அக்கறை கொண்டிருந்தோம். 1866–70-ல் 40 சதவீதமாக இருந்த முடிவுப் பொருள்களின் இறக்குமதி 1906–10-ல் 25 சதவீதத்திற்குக் கீழ்க் குறைந்துவிட்டதுகூட இதைத்தான் பிரதிபலிக்கிறது. தொழில்துறையில் சுய நிறைவு பெறும் வகையில்தான் நமது வாணிபம் நடைபெற்றது. இதற்காகத்தான் இறக்குமதி வரிகள்கூட உயர்த்தப்பட்டன. இருந்த போதிலும், நமது ஆய்விற்குரிய காலத்தில் நமது மொத்த இறக்குமதி அதிகரித்து—408 மில்லியன் டாலரிலிருந்து 1,345 மில்லியனுக்கு—முடிவுபெற்ற ஆலைப்பொருள்களின் இறக்குமதி மட்டும் இரண்டு மடங்காகியது. மேலும், ஐரோப்பாதான் நமக்குப் பெரிய அங்காடியாகவும், நமக்கு வேண்டிய இறக்குமதிப் பொருள்களை வழங்கும் முக்கிய இடமாகவும் இருந்தது. உதாரணமாக, 1870-ல் நமது ஏற்றுமதியில் 80 சதவீதம் (நமது முக்கிய வாடிக்கை நாடான பிரிட்டனும் உள்ளடங்க)ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் அனுப்பப்பட்டது. 1910-ல் கூட அந் நாடுகளின் இறக்குமதியில் 65 சதவீதம் நமது பொருள்கள்தாம். நம்முடைய இறக்குமதியை எடுத்துக்கொண்டால், 1870-ல் நாம் இறக்குமதி செய்த பொருள்களில் 55 சதவீதம் ஐரோப்பாவிலிருந்துதான் வந்தது; 1910-ல் அது 52 சதவீதத்திற்குத்தான் குறைந்தது.

1913-ல் பிரிட்டனின் நிலை

1914–18ஆம் ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகள் வெளிக்காட்ட இருந்ததுபோல், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, நாட்டிற்கு நாடு கொண்டிருந்த உறவுகளைப் புலப்படுத்தியதெனினும், அதனால் பிரிட்டிஷ் தீவுகளிலிருந்த சாதாரண மக்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதும் பிரிட்டனின் விலைவாசிகள் உயர்ந்தபோது, அதைக்காட்டிலும் பணக்கூலி உயர்வாகியதாலோ அல்லது விலைவாசிகள் தாழ்ந்தபோது அந்த அளவிற்குக் கூலி தாழ்வாகாததாலோ உண்மைக்கூலி படிப்படியாக

உயர்ந்துகொண்டேதானிருந்தது. ஆனால், 1901 முதல் 1914 வரை உண்மைக்கூலி உயர்வதற்குப் பதிலாகத் தாழ்ந்துகொண்டே சென்றது. அதாவது, சராசரி ஆண்டொன்றுக்கு 0.7 சதவீதம் அது குறைந்தது. மாறாக, விலைவாசிகள், குறிப்பாகக் கச்சாப் பொருள்களின் விலைகளும் உணவுப் பண்டங்களின் விலைகளும் மிக விரைவாக உயர முற்பட்டன. அப்படியிருந்தும், வேலை நேரம் அடுத்தடுத்துக் குறைக்கப்பட்டது. உழைப்பாளிகளின் நிலைமைக்குச் சாதகமான சமூகப் பணிகள் விரிவாக்கப்பட்டன. உழைப்பாளிகள் நிலைமையை மட்டுமன்றி, பொதுவாக ஊதியத்திற்காக வேலைசெய்த அனைவரின் நிலைமையையும் காட்டும் அளவீட்டொன்றின்படி, உண்மை வருமானம் 1913 வரை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகரித்த அளவு அதிகரிக்காவிட்டாலும்கூட ஓரளவு அதிகரித்ததாகத் தெரிகிறது.[5]

1870ஆம் ஆண்டு முதல் பிரிட்டனின் வாணிபச் செலுத்துநிலை மோசமாகாமலே இருந்தது. அதன் ஏற்றுமதியைக்காட்டிலும் இறக்குமதி அதிகமாயும் நிலையின்றி மாறிக்கொண்டும் இருந்ததெனினும், அயல்நாட்டு முதலீடு, கப்பல் கட்டணம், இன்சூரன்ஸ், பாங்குகள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து அவ் விறக்குமதிக்குப் பணம் செலுத்தியபின்னும், அவ் வருமானம் ஆண்டுதோறும் எச்சமாகவேதான் இருந்தது. அவ்வாறு மீதியிருந்த வருமானத்தைப் பிரிட்டன் அயல்நாடுகளிலேயே மேலும் மேலும் முதலீடு செய்தது. ஆனால், 1873 முதல் 1896 வரை அவ் வருமானத்தின் பெரும்பகுதி உள்நாட்டு அபிவிருத்திக்கென்று முதலீடு செய்யப்பட்டது. இதனால் வெளிநாடுகளுக்குக் கொடுத்த கடன் தொகை குறைந்தது. எனினும், 1900ஆம் ஆண்டிற்குப்பின், அயல்நாடுகளில் செய்த முதலீடு மறுபடியும் அதிகமானது. அயல்நாடுகளில் பிரிட்டன் செய்திருந்த முதலீட்டின் அளவு 1913-ல் 4,000 மில்லியன் பவுன்களாக இருந்தது. இம் முதலீட்டிலிருந்து ஆண்டுதோறும் கிடைத்த வருமானம் சுமார் 210 மில்லியன் பவுன்களாக இருந்தது. நாம்

[5] 1850 முதல் 1873 வரை விலைவாசிகளும் கூலி வீதமும் அதிகரித்தன. வேலையின்மையைச் சரிக்கட்டுவதற்கென்று ஓரளவு தள்ளுபடி செய்த பின்னர்கூட, உண்மை வருமானம் சராசரி ஆண்டொன்றுக்கு 1.3 சதவீதம் அதிகரித்தது. 1873 முதல் 1900 வரை சராசரி ஆண்டொன்றுக்கு உண்மை வருமானம் 1.85 சதவீதம் அதிகரித்தது (W. W. Rostow அவர்களின் **British Economy of the Nineteenth Century** என்ற நூல், 4ஆம் அதிகாரம்). 1900ஆம் ஆண்டிற்குப் பின், விலைகள் மாறாமல் இருந்தனவென அனுமானித்துக்கொண்ட அளவீட்டின்படி 1894-1903-ல் வேலையிலிருந்த மக்களின் தலா வருமானம் 175.8 பவுன்களிலிருந்து 1913-ல் 195.4 பவுன்களுக்கு உயர்ந்ததாகத் தெரிகிறது. அதாவது, இவ்வளவீட்டின்படி தலா வருமானம் 11 சதவீதம் அதிகரித்தது. (Colin Clark அவர்களின் **The Conditions of Economic Progress** என்ற நூல், பக்கம் 83. 1940ஆம் ஆண்டு மதிப்பு).

ஆய்ந்துகொண்டிருக்கும் காலத்தின் இறுதியில், அதன் செலுத்து நிலையிலிருந்த நிலுவை முன்பிருந்ததைக்காட்டிலும் அதிக மாகியது; இன்றும் அது அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது.

சுருங்கக்கூறின், முதல் உலகப்போர் தொடங்கும்வரை, பிரிட்டனின் வாணிபநிலை சுமுகமாகவே இருந்தது. பன்னாட்டுப் பொருளாதாரம் விரிவடைந்ததால், தனது அங்காடியைப் பல புதிய நாடுகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதெனினும், அவ்வாறு பன்னாட்டு வாணிபம் விரிவடைந்த தால் பிரிட்டன் சாதகமான நிலையை அடைந்ததேயன்றி, அதனால் பாதிக்கப்படவில்லை; தனக்குப் புதிதாய் ஏற்பட்டுள்ள போட்டி நிலைக்கேற்பச் சிறிதளவு தன் நிலைமையைச் சரிக்கட்ட வேண்டிய தாயிற்று. எனினும், பிரிட்டனின் வளர்ச்சிக்கு ஆதாரமாயிருந்த தொழில்கள் அனைத்தும் அப்போதுகூட விரிவடைந்துகொண்டு தான் இருந்தன. உலகிலேயே பெரிய ஏற்றுமதித் தொழில்களாக அவை அன்றும் விளங்கின. மேலும், இரு தலைமுறை காலமாக, மக்களின் உண்மைத் தலா வருமானம் உயர்ந்துகொண்டே சென்றது. பிரிட்டனின் தலா வருமானத்தைக் காட்டிலும் ஓரளவு அதிகமாயிருந்த நாடுகள் அமெரிக்காவும் கனடாவும்தான். அயல் நாடுகளில் செய்திருந்த பெருமளவு முதலீட்டிலிருந்து ஆண்டு தோறும் கணிசமான அளவு வருமானம் கிடைத்துக்கொண்டே இருந்தது. இதோடு, தான் அயல்நாடுகளுக்குச் செய்த பணி களின் மூலமும் வருமானம் கிடைத்ததால், தான் ஏற்றுமதி செய்ததைக்காட்டிலும் அதிகமாக இறக்குமதி செய்ய முடிந்தது. மேலும், வெளிநாடுகளில் பெருமளவில் முதலீடு செய்யவும் சாத்திய மானது.

தேசியப் பற்றும் தொழில் பாதுகாப்பும்

1880 முதல் 1899 வரை அங்காடிகளுக்காக ஏற்பட்ட போட்டி, இதர ஐரோப்பிய நாட்டுத் தொழில்கள் வளர்ந்து முதிர்ச்சி பெற்றதையும், அதன் விளைவாக பிரிட்டனின் வாணிப ஆதிக்கத்திலிருந்து அந் நாடுகள் மீட்சிபெற்றதையும் பிரதிபலிக் கின்றது. இத் தொழில் வளர்ச்சி இறக்குமதி வரிகள் குறைவாக இருந்த காலத்தில் ஏற்பட்டதால், வாணிபத்தில் தாராள மனப் பான்மைக் கொள்கைதான் நீடித்திருக்கக்கூடும் என்று எதிர் பார்ப்பது இயல்பு. உண்மையில் பிரிட்டனின் ஏற்றுமதிக்குப் போட்டி ஏற்பட்டுவிட்டதாலும், அதன் உள்நாட்டு அங்காடியில் அயல்நாட்டுப் பொருள்கள் புகுந்துவிட்டதாலும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற எழுச்சி அந் நாட்டில்

தோன்றியிருந்திருக்குமானுல், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை. ஆனுல், அவ்வித எழுச்சி மறுபடியும் தோன்றியபோதிலும், பிரிட்டன் திடமாக ஏற்றுக்கொண்ட தடையிலா வாணிபக் கொள்கையை மாற்றக்கூடிய அளவிற்கு அது வலுப்பெறவில்லை. மாருக, இதர ஐரோப்பிய கண்டப் பகுதிகளில்தான் தேசியப் பற்று வேரூன்றித் தழைத்தது. இதன் விளைவாகத் தொழிற் பாதுகாப்பு வேண்டுமென்ற எழுச்சி மறுபடியும் தோன்றியதால், இதுவரை குறைக்கப்பட்டுவந்த இறக்குமதி வரிகள் இப்போது அதிகரிக்கப் பட்டன.

போரினுல் ஏற்பட்ட விளைவுகளின் காரணமாகவும், தாராள மனப்பான்மைத் தத்துவத்தை வேண்டுமென்றே மீறவேண்டு மென்ற எண்ணத்தாலும் தேசியப்பற்று புத்துயிர் பெற்றதாகத் தோன்றுகிறது. 19ஆம் நூற்ருண்டின் அரசியலில் பிரபலமாக இருந்த தாராள மனப்பான்மைத் தத்துவம், தனிநபரின் ஆதிக்க நிலையை வலியுறுத்தியதோடு, தடையிலாப் போட்டியின் நிலைமையில் தனிநபரின் நலன்களும் சமுதாயத்தின் நலன்களும் பிணக்கமின்றி இணக்கம் பெறுகின்றன என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியது. எனவே, பொருளாதார, அரசியல் உரிமைகளுக்கு முட்டுக்கட்டையாயிருந்த தடைகளையெல்லாம் அகற்றவும், சுதந்திர சமுதாயம் தோன்றுவதற்கு இன்றி யமையாத அஸ்திவாரத்தை அமைக்கவும் கூடிய தேசிய அரசினை அனுமானித்துக்கொண்டனர். ஆனுல், தனிநபர்கள் சுதந்திரமாக வாழவேண்டுமானுல், மிதமிஞ்சிய அரசாங்கக் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருந்தால் மட்டும் போதாது; அயல்நாட்டவரின் ஆதிக்கமும் ஒழியவேண்டுமென அவர்கள் கருதினர். இத்தாராள மனப்பான்மைத் தத்துவம் செயல்படவேண்டுமாயின், ஒரு நாடு சுதந்திர நாடாக இருப்பது அவசியம் என்றும் அவர்கள் நம்பினர்.

மொழியிலும் கலாசாரத்திலும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள், தம்மைத் தாமே ஆண்டுகொள்ள வேண்டுமென்ற சுய நிர்ணயக் கோட்பாட்டை ஆங்காங்கே இருந்த தலைவர்கள் செயல் படுத்தியதன் விளைவாகப் பல புதிய நாடுகள் தோன்றின. 1829-ல் பிரிட்டனின் உதவியைக்கொண்டு துருக்கியர்களின் ஆட்சியி லிருந்து கிரீஸ் விடுதலை பெற்றது. 1830-ல் பெல்ஜியம் சுதந்திர நாடாகியது. 1850 முதல் 1859 வரை, ஆஸ்திரியக் கொடுங்கோ லாட்சியாளர்களுக்கு எதிராகக் கரிபால்டியின் தலைமையில் இத்தாலிய மக்கள் புரட்சிகொண்டெழுந்தனர். ஃபிரெஞ்சுப் படை யினரின் உதவியாலும், பிரிட்டிஷ் வெல்திறனின் துணையாலும் 1860-ல் இத்தாலி ஒரு தனி நாடாகியது. ஆனுல், ஜெர்மன்

பேரரசுமட்டும் இவ்வித சுதந்திர எழுச்சியால் தோன்றியதன்று. பெரும்பாலும் பிரஷ்ஷியாவின் படைபலத்தால் அது உருவானதாகும். எனினும், ஒரே மொழியையும் கலாசாரத்தையும் கொண்ட மக்கள் இதனால் தேசிய ஒற்றுமையைப் பெற்றனர்.

இவ்வாறு புதியதொரு நாடு தோன்றும்போது, அந் நாடு தன் தேசியத் தன்மையை உறுதிப்படுத்த முற்படுகிறது. அதிலும், அது சுதந்திரப் போரின் விளைவாகத் தோன்றிய பெரியதொரு நாடாகவும் வலிமை மிக்க நாடாகவும் இருந்தால், அவ்வாறு உறுதிப்படுத்துவது இயல்பே. தம் தேசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வழிகளில் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்கென்று இறக்குமதியின் மீது உயர்ந்த வரி விதிப்பதும் ஒன்று. 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் அவ்வாறு தொழிற் பாதுகாப்புக் கொள்கையை வலியுறுத்தும் வகையில்தான் தேசியப் பற்று புத்துயிர் பெற்றுத் தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிற் பாதுகாப்புக் கொள்கை, நாட்டிற்கு நாடு ஏற்படும் போட்டியினால் ஏற்படுவதாகவும் யுத்தகாலத்திற்கேற்ற கொள்கையாகவும் அமைகிறது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன. 1880 முதல் 1899 வரை பன்னாடுகளுக்கிடையே இவ்விதப் போட்டி இருந்தது என்பதை ஏற்கெனவே நாம் குறிப்பிட்டோம். யுத்தத்தை எடுத்துக்கொண்டால், கிரிமியப் போர், அமெரிக்காவின் உள்நாட்டுப் போர், ஃபிரான்ஸிற்கும் பிரஷ்ஷியாவிற்கும் நடந்த போர் ஆகியவை முக்கியமானவையாகும். வாணிபத்தில் இருந்த தாராள மனப்பான்மைக் கொள்கைக்கு மாறான கொள்கையை உருவாக்குவதற்கு இவ்வித சக்திகளே போதுமானவை.

இருந்தபோதிலும், நடைமுறையில் தோன்றிய தொழிற் பாதுகாப்பு இயக்கம், இத்தகைய பொதுவான அரசியற் காரணங்களால் ஏற்படவில்லை. மாறாக, 1870ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இரண்டு முக்கியமான பொருளாதார வளர்ச்சிகள்தாம் அது தோன்றுவதற்குக் காரணமாயின. ஒன்று, அமெரிக்காவிலும் ரஷ்யாவிலுமிருந்து உணவு தானியங்கள் ஐரோப்பிய நாடுகளில் வந்து குவிந்தன. இவ்வாறு குவிவதற்கு இரயில்பாதை அமைத்தோரின் விறுவிறுப்பான நடவடிக்கைகள் ஆதாரமாயிருந்தன. பிறிதொன்று, 1873-79-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தம். இதுவரை உலகம் கண்டிராத அளவு, இக் காலத்தில்தான் வாணிபத் தேக்க நிலை மிக மோசமாயும் நீண்டதாயுமிருந்தது. தொழிற்சாலை உற்பத்தியாளரும் குடியானவர்களும் இதனால் பெரும் அவதிப்

பட்டனர். அவர்கள் தம் அவலநிலையைப் போக்குவதற்காக எழுப்பிய குரலொலிதான் தொழிற் பாதுகாப்பிற்கு அஸ்திவாரமானது.

19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி முழுவதும் காணப்பட்ட பிறிதொரு சக்தியையும் இதற்குக் காரணமாகக் கூறலாம். அதாவது, கல்வி, இராணுவம், பொது உடல்நல வசதி, சமூகப் பாதுகாப்பு போன்றவற்றின் பொதுச் செலவு அதிகரித்துக் கொண்டே யிருந்ததால், வருமானமும் அதிகமாகத் தேவைப் பட்டது. 19ஆம் நூற்றுண்டில் அநேக நாடுகள் தம் தேசிய வருமானத்தில் கணிசமான அளவை இறக்குமதி வரிகளிலிருந்து பெற்றன. எனவே, அந் நாடுகள் இவ் வரிகளை அதிகமாக்க விரும்பின.

இவ்வாறு, தொழிற் பாதுகாப்பிற்கான எழுச்சி தோன்றிய போது, அதற்கு ஆதரவாக வலிமையான தேசியப் பற்றின் சக்திகளும் சேர்ந்துகொண்டதால், அது நிலைத்து நிற்க முற்பட்டது. தொழில்களின் சொந்த அக்கறை அரசியல் ஆதரவு பெற்று வளர வளர, இறக்குமதி வரிகளை அதிகரிக்கும் போக்கும் வளர்ந்து விடுகிறது. ஒருசில தொழில்களுக்குமட்டும் இவ் வகைப் பாதுகாப்புக் கொடுத்துவிட்டுப் பிற தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்க மறுப்பது கடினமாகையால், இறக்குமதி வரி விதிக்கப்படும் பண்டங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதை நாம் காண்கின்றோம். இச் சக்திகளெல்லாம் செயல்படும் விதத்திற்குச் சான்றாக, 1870 முதல் 1913 வரை இருந்த இறக்குமதி வரிக் கொள்கையை இப்போது ஆய்வோம்.

1913 வரை அமுலில் இருந்த இறக்குமதி வரிக் கொள்கை

ஜெர்மனியில் மிக இக்கட்டான பொருளாதார மந்தம் இருந்த போதிலும்கூட, 1870ஆம் ஆண்டுகளில் அந் நாடு இறக்குமதி வரிகளைக் குறைத்துக்கொண்டே யிருந்தது. 1865ஆம் ஆண்டில் உணவு தானியங்களின் மீதிருந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து, இரும்புக் கருவிகளின்மீதும் கப்பல் கட்டும் சாதனங்களின்மீதும் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வைகள் 1873-ல் ரத்து செய்யப்பட்டன. பின்னர் 1877-ல் இரும்பு உலோகப் பொருள்களின் வரிகளும் நீக்கப்பட்டன. இதனல் பாதிக்கப்பட்ட விவசாயிகளும் பீதியடைந்த தொழிலதிபர்களும் வற்புறுத்திக் கூறியபோதிலும்கூட, பிஸ்மார்க் சிறிதும் நெகிழவில்லை. பின்னர், குறிப்பிட்ட சமயம் வந்தபோது, இருப்பின் மீதிருந்த வரிகளும் ரத்து செய்யப்பட்டன. இருந்தபோதிலும்,

வருமானம் அதிகமாகத் தேவைப்பட்ட காரணத்தால், தன் விடாப்பிடியான கொள்கையை பிஸ்மார்க் கைவிட நேரிட்டது. 1880ஆம் ஆண்டில் பலவகை இரும்புப் பொருள்களின்மீது சீரான இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டதோடு, உணவு தானியங் களுக்கும் ஏனைய சில பொருள்களுக்கும் கணிசமான பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 1902-ல் இரும்பின்மீதும் உணவுப் பண்டங் களின்மீதும் இருந்த இறக்குமதி வரிகள் மேலும் உயர்த்தப்பட்டன. பல பன்னாட்டு ஒப்பந்தக் காலத் தவணைகள் முடிவடைந்ததும், இதர நாடுகளில் இதைக்காட்டிலும் உயர்ந்த வரிகள் இருந்ததுமே இதற்குக் காரணமாகும். அவ்வாறிருந்தபோதிலும், உணவுப் பண்டங்களின்மீது அதிக வரி இருந்த சமயம், தொழிற்சாலைப் பொருள்களின்மீது சராசரி 25 சதவீதமெனச் சீரான இறக்குமதி வரிகள்தாம் விதிக்கப்பட்டன.

ஃபிரான்ஸ் நாட்டில் 1860ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட வாணிப ஒப்பந்தங்களின்படி விதிக்கப்பட்டிருந்த மிகக் குறைந்த வீத வரிகள் சுமார் 20 ஆண்டுகள்வரை அப்படியேதானிருந்தன. தொழிற் பாதுகாப்பில் அக்கறைகொண்டிருந்த விவசாயிகளும் தொழிற்சாலை அதிபர்களும் ஒன்றுசேர இயலாமலிருந்ததே இதற்குக் காரணம். 1892 வரை இவ் இறக்குமதி வரிகள் மாற்றி அமைக்கப்படவில்லை. ஆனால், இவ் வரிகளால் பாதிக்கப்பட்ட வர்கள் 1892-ல் பாராளுமன்றத்தைத் தம் கைவசமாக்கியதும், இறக்குமதி வரிகள் அனைத்தும் வேண்டிய அளவிற்குத் திருத்தி அமைக்கப்பட்டன. தொழிற்சாலைப் பொருள்களின் மீதிருந்த வரிகள் சராசரி 34 சதவீதத்திற்கும் விவசாயப் பண்டங்களின் மீதிருந்த வரிகள் இன்னும் அதிக அளவிற்கும் உயர்த்தப்பட்டன. 1910-ல் இரசாயனப் பொருள்கள், மின்சாதனங்கள், ரப்பர் ஆகிய புதிய உற்பத்திப் பொருள்களின்மீது வரி விதிக்கப்பட்டபோது, ஏற்கெனவே வரிக்குட்பட்டிருந்த பொருள்களின் வரிகள் மேலும் உயர்த்தப்பட்டன.

அமெரிக்காவின் தொழிற் பாதுகாப்புக் கொள்கை, குடியரசுக் கட்சியோடுதான் எப்போதுமே தொடர்புடையது. இக்கொள்கை, உள்நாட்டுப் போருக்குச் சற்று முன்னர் தோன்றியது. இறக்குமதி வரிக் கொள்கையின் மூலம்தான் தொழிற் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தவேண்டும் என்ற கொள்கையை 1859-ல் நடந்த பொதுத் தேர்தலின்போது வலியுறுத்தியதனால் குடியரசுக் கட்சி வெற்றிபெற்றது. 1861ஆம் ஆண்டின் இறக்கு மதிக் கொள்கையின் தத்துவம் வருமாறு: 1857ஆம் ஆண்டில் அமலில் இருந்த மிகக் குறைந்த வரிகள் மறுபரிசீலனை செய்யப்

பட்டு உயர்த்தப்பட்டன. (1857-ல் பெரும்பாலான இறக்குமதிகளின்மீது சுமார் 24 சதவீத வரிவிதிப்பு இருந்தது. உயர்ந்த பட்ச வரி 30 சதவீதம்தான்). 1857ஆம் ஆண்டிலிருந்த வரிகளுக்குப் பதிலாக 1846-ல் இருந்த வரிகள் மறுபடியும் விதிக்கப்பட்டன. அதன்படி, வரி விதிக்கப்பட்டிருந்த பண்டங்களில் பெரும்பாலானவைமீது 30 சதவீதமும், சிலவற்றின்மீது 40 சதவீதமும், பிராந்தி, சாராயம் போன்ற மது வகைகளின்மீது உயர்ந்தபட்ச வரியாக 100 சதவீதமும் விதிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கு மேலும்மேலும் வருமானம் வேண்டியிருந்ததால், இவ் வரி வீதங்களை இன்னும் அதிகரிக்க நேரிட்டது. 1864-ல் சராசரி 47 சதவீதத்திற்கு வரிகள் உயர்த்தப்பட்டன. இதுவரை இவ்வளவு அதிகமான வரிகள் என்றுமே விதிக்கப்பட்டதில்லை. 1880ஆம் ஆண்டு அமலில் இருந்த வரிகளில் சராசரியாக 5 சதவீதம் குறைக்கப்பட்டது. அரசாங்க வரவுசெலவில் வருமானம் உபரியாக இருந்ததே இதற்குக் காரணம். ஆனால், 1890, 1897ஆம் ஆண்டுகளில் தொழிற் காப்பு வரிகள் அடுத்தடுத்து உயர்த்தப்பட்டன. (1890-ல் சராசரி 50 சதவீதம் என்றும், 1897-ல் சராசரி 57 சதவீதம் என்றும் இருந்தது.)[6]

அறிஞர்கள் மத்தியில் தொழிற் பாதுகாப்பு வரிபற்றி அக் காலத்தில் எழுந்த விவாதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவ் வாதத்தைத்தான் 1896-ல் குடியரசுக் கட்சியினர் எடுத்தாண்டனர். தொழிற் பாதுகாப்பு வரி அமெரிக்க நாட்டிற்கு இன்றியமையாததென்று கூறியதோடு, இவ் வரிக் கொள்கைக்குரிய பல தொன்மையான வாதங்களையும் இக் கட்சியினர் கையாண்டனர்.

'அமெரிக்காவின் தொழில் சுதந்திரத்திற்குக் கோட்டையாகவும், அந் நாட்டின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் அஸ்திவாரமாகவும் உள்ளபடி பாதுகாப்புக் கொள்கையில் நாம் கொண்டுள்ள பற்றைப் புதுப்பித்துக்கொள்வதுடன், அதை வலியுறுத்தவும் செய்கின்றோம். உண்மையான இந்த அமெரிக்கக் கொள்கை, அயல் நாட்டுப் பண்டங்களின்மீது வரிவிதிப்பதன் மூலம் உள்நாட்டுத் தொழில்களை ஊட்டி வளர்க்கிறது. இவ்வாறு கிடைக்கும் வருமானத்தின் பளு அயல் நாட்டுப் பொருள்

[6] வரிவிதிப்பிற்குட்பட்ட இறக்குமதிப் பொருள்களில் சிலவற்றின்மீது மிக உயர்ந்த வீதத்தில் வரி விதிக்கப்பட்டதால், அப் பொருள்களின் இறக்குமதியே நின்றுவிட்டது. இதனால், மொத்த இறக்குமதி வரிவீதத்தை அளவிடுதல் கடினமாகி விட்டது. எனவே, மேற்கூறிய வரி வீத இலக்குகள் ஏறக்குறைய நடைமுறையில் இருந்தவையே. இருந்தபோதிலும், வரிகள் உயர்த்தப்பட்ட நிலைமையை இவைகள் தெளிவாகப் புலப்படுத்துவதாகவே கொள்ளலாம்.

களின் மீதுதான் சுமத்தப்படுகிறது. அமெரிக்க நாட்டின் அங்காடி, அமெரிக்க உற்பத்தியாளருக்கே கிடைக்கச் செய் கிறது. அமெரிக்கத் தொழிலாளிகளுக்குக் கிடைக்கும் உயர்ந்த ஊதிய நிலை பேணப்படுகின்றது. அமெரிக்கத் தொழிற்சாலை களுக்கும் விவசாயத்திற்கும் நெருக்கமான உறவை ஏற்படுத்து வதன் மூலம், அமெரிக்க விவசாயி அயல்நாட்டுத் தேவை யையோ, விலையையோ சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லா மல் செய்கிறது. பொதுவாகச் சிக்கன மனப்பான்மையை எல்லோ ரிடத்திலும் படியச்செய்கிறது. ஒவ்வொருவரின் வலிமையைக் கொண்டு அனைவரின் வலிமை உருவாக்கப்பெறுகின்றது."[7]

இதன் பின்னர், 1913 வரை அமெரிக்காவின் இறக்குமதி வரிக் கொள்கையில் முக்கியமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. 1892-96-க்குப்பின், முதல் முறையாக ஜனநாயகக் கட்சி ஆட்சிக்கு வந்த 1913ஆம் ஆண்டில்தான் முழுவதும் திருத்தி அமைக்கப்பட்ட அன்டர்வுட் இறக்குமதி வரிக் கொள்கை (Under-wood tariff) அமலாக்கப்பட்டது. சர்க்கரை, ஆட்டு ரோமம் போன்று சுமார் 100 பண்டங்களின்மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஏறக்குறைய 1000 வகைப் பண் டங்களின் மீதிருந்த வரிகள் குறைக்கப்பட்டன. ஒருசில பண் டங்களின் வரிகள் மட்டுமே உயர்த்தப்பட்டன. இதனால் இறக்கு மதிப் பொருள்களின் மீதிருந்த வரி, சராசரி 16 சதவீதத்திற்குக் குறைந்தது. துரதிர்ஷ்டவசமாக, இக் கொள்கையின் விளைவு களை அறிந்துகொள்ள முடியாதபடி ஓரிரண்டு ஆண்டிற்குள் ஐரோப்பாவில் போர் மூண்டுவிட்டது.

பிரிட்டனையும் நெதர்லாந்தையும் தவிர, ஏனைய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும், தொழிற் பாதுகாப்புக் கொள்கையை அமலாக்குவதில் ஜெர்மனியையும் ஃபிரான்ஸ் நாட்டையும் பின் பற்றின. ரஷ்யா ஏற்கெனவே இக் கொள்கையை அமலாக்கி விட்டது. 1868 வரை ரஷ்யாவின் இறக்குமதி வரிகள் சீரான அளவே இருந்தன. வருமான நோக்கத்திற்காகவே அவை பெரும்பாலும் விதிக்கப்பட்டன. ஆனால், 1868-ல் பாதுகாப்பு வரிகள் புகுத்தப்பட்டன. அதுமுதல் 1914 வரை இவ் வரிகள் மேலும் மேலும் உயர்த்தப்பட்டதால், உலகிலேயே உச்சமான வரிகளைக்கொண்ட நாடாக ஆகாவிட்டாலும்கூட, உயர்ந்த பட்ச வரிகள்கொண்ட நாடுகளில் ரஷ்யாவும் ஒரு நாடானது.

[7] Asher Isaacs அவர்களின் 'International Trade' என்ற நூலில் Tariff and Commercial Policies என்னும் தலைப்பில் 207-208ஆம் பக்கங்களிலிருந்து இது எடுக்கப்பட்டது. Published by Richard D. Irwin, Homewood, Ill., 1948. இவ்வித வாதங்களின் ஆய்விற்கு இந் நூலின் 13ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்.

1860-ல் தனியொரு நாடாக இத்தாலி அமைந்தபோது சார்தினியாவின் (Sardinia) சீரான இறக்குமதி வரிக் கொள்கை தான் இப் புதிய அரசிற்குச் சட்டம்போல் அமைந்தது. 1878-ல் தொழிற் பாதுகாப்புக் கொள்கையைப் பாராளுமன்றம் அமலாக்கியது. அதோடு, மறு ஆண்டிலேயே விவசாயத் தொழிலுக்கும் இவ்வகைப் பாதுகாப்புத் திட்டத்தை விரிவாக்கியது. 1887-ல் வரிகள் உயர்ந்த விதத்திற்கு அதிகரிக்கப்பட்டன. முதல் உலகப் போர் முடியும்வரை, இவ் வரிகள் அப்படியேதான் இருந்தன. ஸ்விட்சர்லாந்து நாடு, 1891-ல் ஏதோ ஓரளவிற்கு மட்டும் பாதுகாப்பு வரிகளை விதித்தது. ஆனால், 15 ஆண்களுக்குப் பின்னர் அவ் வரிகளை உயர்த்திவிட்டது.

பிரிட்டனில் தோன்றிய அயல் நாட்டுப் போட்டி, அதன் தாராள வாணிபக் கொள்கைக்குக் கடும் எதிர்ப்பைத் தோற்றுவிக்கத் தூண்டியது. எனினும், அவ்வாறு தோன்றிய எதிர்ப்பால் கன்சர்வேடிவ் கட்சி பிளவுபடவும், தடையிலா வாணிப சக்திகள் ஒன்றுபடவும் முற்பட்டனவேயன்றி, வாணிபக் கொள்கை மாறவில்லை. 1960-ல் நடந்த தேர்தலில் லிபரல் கட்சியினர் அமோக வெற்றி பெற்றனர். எனவே, பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்ட 1930ஆம் ஆண்டுவரை, தடையிலா வாணிபக் கொள்கைக்குப் பதிலாக, பாதுகாப்புக் கொள்கையை அமலாக்கவேண்டுமென்று எவருமே சிந்தித்ததில்லை.

சாம்ராஜ்ஜிய விரிவு, 1880-1913

தாராள மனப்பான்மை நிலவிய காலத்தில் அரசாங்கங்கள் தொழிற் பாதுகாப்பிற்கு எதிராக இருந்ததுபோல், காலனிகளின் விஷயங்களிலும் அதிக அக்கறை காட்டவில்லை. அதாவது, காலனி மக்களைத் தம் ஆட்சிக்குட்படுத்தி, தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதில் தாயக நாடுகள் அக்கறை கொள்ளவில்லை. இவ்வாறாக, அரசாங்க நடவடிக்கைகளும் சுய நிர்ணயக் கோட்பாடும் ஒன்றோடொன்று சேர்ந்து அமைந்துவிட்டன. எனினும், இக் கொள்கையை விரும்பி மேற்கொண்டனரா என்பது சந்தேகம். பெரும்பாலும் உள்நாட்டு வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இருந்த பிரச்சினைகளிலும், காலனிகளில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் சார்ந்த பிரச்சினைகளிலும் அதிகக் கவனம் செலுத்தியதன் விளைவுதான் இது என்று கூறலாம். இதனால் காலனிகளில் தன் ஆதிக்கத்தைப் பரப்புவதால் நன்மை ஏதுமில்லை என்ற கருத்து பிரிட்டனில் நிலவியது. இக் கருத்து ஓரளவிற்கு அமெரிக்காவிலிருந்த பிரிட்டிஷ்

காலனிகளில் எழுந்த புரட்சியின் விளைவாக அமைந்ததாகும். மேலும், பிரிட்டன் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்குரிய அங்காடிகள் ஐரோப்பாவிலும் பிறநாடுகளிலும் இருந்தன என்பதும் காரணமாகும். 1776-ல் இங்கிலாந்திற்கு ஏற்பட்ட அனுபவத்தோடு, ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளுக்கேற்பட்ட அனுபவத்தையும் சேர்த்துக் கருதலாம். அவ்வாண்டில் கனடா, ஆஸ்திரலேசியா (Australasia) ஆகிய நாடுகள் சுய ஆட்சி வேண்டுமென்று கோரி அதை அடைந்ததுபோல், 1810-க்கும் 1825-க்குமிடையே ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகள் தமது பேரரசுகளின்கீழ் இருந்த பெரும் பகுதிகளை இழந்தன. காலனிகளால் ஏற்படும் நன்மைகளெல்லாம் வெறும் போலி நன்மைகள் தாம் என்ற கருத்தை 1868-ல் பிஸ்மார்க் தெரிவித்தார். எனவே, காலனிகள் பரம்பரையாக இருந்துவந்த பழம்பெருஞ் சுமைதான்[8] என்று எண்ணப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. ஃபிரான்ஸ் நாடுமட்டும்தான், வெளி நாடுகளில் காலனிகளை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி, 1830-ல் ஆல்ஜியெர்ஸ் (Algiers) என்ற இடத்தையும், 1862-ல் இந்தோசீனு, சோமாலிலாந்து ஆகியவற்றின் சில பகுதிகளையும் கைப்பற்றி அவற்றைத் தனக்கு உரியனவாக ஆக்கிக்கொண்டது.

மேற்கூறிய சூழ்நிலைகளெல்லாம் 1880ஆம் ஆண்டுகளில் திடீரென மாறின. காலனிகளைக் கைப்பற்றும் முயற்சிகள் அலைபோல் எழுந்து, 1914ஆம் ஆண்டில் முதல் உலகப்போர் தொடங்கும்வரை நீடித்தது. இம் முயற்சிகளால் ஏற்பட்ட விளைவுகளில், ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஆஃப்ரிக்கா பிரிக்கப்பட்டது. பர்மா, மலேயா ஆகியவற்றில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டது. இந்தோசீனுவில் ஃபிரான்ஸின் பேரரசு விரிந்தது (இப் பேரரசு ஃபிரான்ஸ் நாட்டின் பரப்பளவில் பாதி அளவிற்கு விரிந்தது), சீனுவில் (அரசியல் பிரிவினை இல்லாவிட்டாலும்) ஏற்பட்ட பொருளாதாரப் பிரிவினை ஆகியவற்றை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம். லூயிஸ் நெப்போலியன் மெக்ஸிகோவைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வி அடைந்ததை இங்குக் கருதாது இருப்பின், புது நாடு கைப்பற்றும் முயற்சிகள் வட, தென் அமெரிக்கக் கண்டங்களைமட்டும் பாதிக்கவில்லை என்று கூறலாம். மன்ரோக் கொள்கை அமலில் இருந்ததாலும், பிரிட்டிஷ் கப்பற்படை அமெரிக்காவில் இருந்ததாலும், அமெரிக்கா இராணுவ

[8] L. C. A. Knowles அவர்களின் 'The Industrial and Commercial Revolution in Great Britain during the Nineteenth Century' என்ற நூல், பக்கம் 321. Published 1922 by Routledge, London.

பலம் பொருந்தியதாக வளர்ச்சி பெற்றதாலும் இம் முயற்சிகள் அங்கு சாத்தியமாகவில்லை.

உலகப் பேரரசுகள், நாடு கைப்பற்றுவதற்கென மேற்கொண்ட முயற்சிகள் திடீரென்று தோன்றியது எவ்வாறு? 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாடுகளிடையே ஏற்பட்ட கடுமையான போட்டியை இது பிரதிபலிப்பதாக இருப்பினும், தேசியப் பற்றுதலைக்கொண்டோ அல்லது தொழிற் பாதுகாப்புக் கொள்கையைக்கொண்டோ இதை விளக்க இயலாது. தேசியப் பற்று என்பது, மக்களிடையே பரவி, அவர்களின் இரத்தத்தில் ஊறியுள்ளதோர் உணர்ச்சியாகும். இது சிலவகையான செயல்களைத் தூண்டுகின்றதேயொழிய, மாற்றத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் மிக்க சக்தியாக இயங்குவதில்லை ஆனால், மாற்றம் ஏற்படுவதற்குரிய சமூகச் சூழ்நிலையை அது தோற்றுவிக்கிறது.

தம் தேசியக் கொடிகளை வெளிநாடுகளில் நாட்டுவது, தாய் நாட்டுத் தொழில் வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையதாகத் தோன்றலாம். தாய்நாட்டுத் தொழில்கள் வளர்ச்சியடையத் தொடங்கியபோது, செம்பு, வெள்ளீயம், மாங்கனிஸ், சிசால் (sisal), சணல்நார், சணல், தந்தம், தேக்கு, மகோகனி மரம் போன்ற கச்சாப் பொருள்களுக்கு அபரிமிதமான தேவை ஏற்பட்டது. இவற்றிற்கும் இன்னும் பிற கச்சாப் பொருள்களுக்கும் இருந்த தேவை பெருமளவில் விரிவாகியது. முன்னர் அவற்றை அளித்துவந்த பிரதேசங்களால் அவற்றைப் போதிய அளவில் வழங்க முடியவில்லை. எனவே, அவற்றைப் பெறுவதற்குப் புதிய இடங்களை நாடவேண்டியதாயிற்று.[9] மூலப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடங்களில் இருந்த வியாபாரிகள் அவற்றின் விற்பனை மூலம் ஏராளமான இலாபத்தை அடைய முடிந்தது. பூர்விகக் குடிகளிடையே வியாபாரம் நடத்

[9] 1875-லிருந்து சுமார் 1900 வரை முடிவுபெற்ற ஆலைப் பொருள்களுக்கும், கச்சாப் பொருள்களுக்கும், உணவுப் பண்டங்களுக்கும் நிலவிய விலைகள் லண்டனில் சரியத் தொடங்கின. எனினும், உற்பத்தித்தளத்தில் அவை உயர்ந்தனவாகவோ, தாழ்ந்தனவாகவோ தெரியவில்லை. மாறாக, அவை நிலைத்திருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. லண்டனில் அவை ஏன் சரிவடைந்தன என்பதற்கு, அங்கு ஏற்பட்ட இருப்புப்பாதை அபிவிருத்தியினால் போக்குவரத்துச் செலவு குறைந்ததையும், பாய்மரக் கப்பல்களுக்குப் பதிலாக நீராவிக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டதையும், பண்டகசாலைகளிலும் சரக்குகளை ஏற்றி இறக்குவதில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் காரணமாகக் கொள்ளலாம். இதற்கு 'Inter American Economic Affairs,' 10, இதழ் 1 (கோடை 1956) என்னும் வெளியீட்டில் P. T. Ellsworth எழுதிய 'The Terms of Trade Between Primary Producing and Industrial Countries' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

திய அவர்கள், தம் அறிவாற்றலைப் பயன்படுத்தியதன் வழியாக இந்த இலாபத்தை மேலும் அதிகரித்தனர்.

ஆனால், தனக்கு இலாபத்தைத் தேடித்தந்த கச்சாப் பொருள்களைப் பெறுவதற்கும், பருத்தித் துணி, மது வகைகள், குமிழ் மணிகள், நகைகள் ஆகியவற்றைப் பூர்வீகக் குடிமக்களுக்கு விற்பதற்கும் வணிகர்களுக்கு வர்த்தகத் துறைமுகங்கள் அவசியமாயின. இத் துறைமுகங்களில் நிரந்தரமான உணவு வசதி, தனக்கும் தன் தொழிலாளிகளுக்கும் வேண்டிய பாதுகாப்பு, உள்நாட்டிற்கும் உள்நாட்டிலிருந்து பொருள்களை அனுப்புவதற்கும் வேண்டிய சுமுகமான போக்குவரத்து வசதிகள் ஆகியவையும் வேண்டியிருந்தன. மேலும், ரப்பர், கொக்கோ, தேயிலை, எண்ணெய், பனைபோன்றனவற்றைப் பெரும் பண்ணைகளில் பயிரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, அவற்றிற்கு ஏராளமான முதலீடு செய்யவேண்டியதாயிற்று.

இவையனைத்தும் நன்கு அமையவேண்டுமானால், அமைதியை நிலைநாட்டவும், சட்ட விரோதிகளைத் தண்டிக்கவும், சொத்துப் பறிமுதல் செய்வதைத் தடுக்கவும் சட்டங்களை இயற்றக்கூடிய நிலையான நல்ல அரசாங்கம் தேவை என்பது தெளிவு. ஆனால், போர்வெறிகொண்ட பழங்குடி மக்களால் இதை ஏற்படுத்த முடியவில்லை. எனவே, வணிகரே அதைச் செய்யவேண்டியதாயிற்று. இவ் வகையான பகுதியில் வேறொரு நாடு, பின்தங்கிய சமுதாயங்களிடையே தனியார் தொழில் துணிவில் முதலில் இறங்கி, படிப்படியாகத் தம் ஆதிக்கத்தைப் பரப்புவதை உடன் செயலாகக் கொண்டு, இறுதியில் தம் ஆட்சியை நிலைப்படுத்தியது. பின்னர், இதர நாட்டு வணிகர்கள் முதலில் புகுந்த வணிகர்களுக்குப் போட்டியாக வந்தபோது, பழைய வணிகர்கள் தம் அரசாங்கத்தினிடம் பாதுகாப்புக் கோரினர். இவ் வணிகர்களின் வியாபாரத்தால் வளர்ந்த தொழில்கள் அவர்களுக்கு ஆதரவு தந்தன. அதேசமயம் நாடுகளுக்கிடையே இருந்த கடுமையான போட்டி மனப்பான்மை அந்த ஆதரவை வலுக்கச் செய்ய முற்பட்டது. எனவே, அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்தது. இதனால், 'வெள்ளையரின் சுமை' ஏற்றுக் கொள்ளப்பட்டது; காலனிகளை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில், இதுவரை யாராலும் கைப்பற்றப்படாத இடங்களைத் தாம் கைப்பற்றி, அவற்றின் இயற்கை வளங்களையெல்லாம் பயன்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நாடுகளைத் தூண்டியது. இத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின்

ஒன்ருக உலகின் பல பகுதிகளில் ஏற்பட்டன. எனினும், ஆஃப்ரிக்காவில்தான் அவை பிரபலமாக ஏற்பட்டன.

ஆஃப்ரிக்காவின் பிரிவினை

ஆஃப்ரிக்கக் கண்டம், வெகுகாலமாகவே மக்கள் நடமாட்டம் குறைந்தும் பாதுகாப்பு இல்லாமலும் இருந்துவந்தது. இங்குதான் புதிய பேரரசுக் கொள்கை நிலைநாட்டப்பெறுவதற்குச் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது. 1875 வரை இக் கண்டத்தின் பெரும் பகுதி (ஏறக்குறைய பத்தில் ஒன்பது) கொடிய வன்நிலமாக இருந்தது. எகிப்து நாடு உட்பட மத்தியதரைக் கடற்கரை ஓரமாக இருந்த ஒரு பகுதியும், இதற்கு மேற்கில் அல்ஜீரியாவும் முறையே ஆட்டோமன் பேரரசிற்கும் (Ottoman Empire) ஃபிரெஞ்சு நாட்டவரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தன. இக் கண்டத்தின் தென் கோடியிலுள்ள கேப் காலனியிலும் (1806) நெடாலிலும் (1843) பிரிட்டன் ஆதிக்கம் பெற்றிருந்தது. ஐரோப்பிய நாட்டிற்கும் துருக்கி நாட்டிற்கும் உரிமையான மேற்கூறிய பகுதிகளையும், ஸ்பெயின், போர்ச்சுகல், ஃபிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளால் மேற்குக் கடற்கரை ஓரமாகவும், ஃபிரான்ஸ், போர்ச்சுகல் ஆகிய நாடுகளால் கிழக்குக் கடற்கரை ஓரமாகவும் வெகுகாலத்திற்கு முன்பே ஆங்காங்கே ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தக ஸ்தலங்களையும் தவிர, வேறு எங்கும் அந்நிய ஆதிக்கத்தின் அறிகுறிகளே இல்லாதிருந்தது.

புதிய பேரரசுக் கொள்கை ஒரு பன்னாட்டு முயற்சியாக அமைந்தது வியப்பிற்குரியது. 1878-ல் ஸ்டான்லி என்பார், மத்திய ஆஃப்ரிக்காவை ஆய்ந்துபார்த்து அது ஏராளமான வளமுடையது எனத் தெரிவித்த பின்னர், பெல்ஜிய நாட்டு மன்னரான இரண்டாம் லியோபோல்டு ஒரு பன்னாட்டு நிறுவனத்தை அமைத்தார். அந் நிறுவனம் ஸ்டான்லியை மறுபடியும் காங்கோவின் வடிநிலத்திற்கு அனுப்பிவைத்து, அங்கு வர்த்தக ஸ்தாபனங்களை நிறுவுமாறு பணித்தது. அந் நிறுவனம்தான் பின்னர் 1885-ல் சுதந்திர காங்கோவாக மாறியது. இதற்கு மன்னராகவும் வர்த்தக அலுவலராகவும் லியோபோல்டு விளங்கினர். பின்னர் ரப்பர், தந்தம், அடிமைகள் ஆகியவற்றில் நடந்த வர்த்தகங்களில் மூர்க்கத்தனமான முறைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இதன் விளைவாக 1908-ல் இதன் அரசுரிமையை பெல்ஜியமே ஏற்றுக்கொண்டது.

ஸ்டான்லி என்பார் வர்த்தக ஸ்தலங்களை அமைப்பதில் ஈடுபட்ட காலத்திலேயே, ஃபிரெஞ்சுக்காரர்களும் தம் ஆதிக்கத்தை

ஆங்குப் பரப்புவதில் தீவிரமாக இறங்கினர். டெ பிராஸா (De Brazza) என்பார் காபனில் (Gabon) கடற்கரையோரமாக இருந்த ஃபிரெஞ்சுக் குடியிருப்பு இடங்களிலிருந்து உள்நாடு நோக்கி முன்னேறி, ஸ்டான்லி வராத ஓர் இடத்தை அடைந்தார். அதுதான் இன்று பிராஸாவில் (Brazzaville) என அழைக்கப் படுகிறது. இவ்விடத்தைச் சுற்றி இருந்த பகுதியின்மீது பிராஸா உரிமை கொண்டாடினர். இதுவே, பின்னர் ஃபிரெஞ்சு பூமத்திய ரேகை ஆஃப்ரிக்காவாக (French Equatorial Africa) அமைந்தது.

பிராஸா, ஸ்டான்லி ஆகியோரின் தீரச் செயல்களைத் தொடர்ந்து, ஆஃப்ரிக்காவின் பிதுங்கிய மேற்குப் பகுதியின் தென் பாகத்திலுள்ள நைஜர் (Niger) ஆற்று வடிநிலத்திலும் அதைச் சூழ்ந்தும் ஃபிரெஞ்சு, ஆங்கிலேய, ஜெர்மானிய வர்த்தக நிறுவனங்களிடையே பகைமை ஏற்பட்டு வலுத்தது. பிஸ்மார்க்கின் ஆதரவு கொண்டு பேரரசுக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய ஜெர்மானியர்கள், மேற்குக் கரையின் தென்கோடியில் கேப் காலனியை அடுத்த பகுதியில் ஜெர்மானியத் தென்மேற்கு ஆஃப்ரிக்காவை உருவாக்குவதில் முற்பட்டனர். இவர்கள் கையாண்ட முறைகளே தனி. முதலில் சிறிய பகுதிகளை விலைக்கு வாங்கியோ, பூர்வீகக் குடிமக்களின் தலைவர்களோடு உடன் படிக்கை ஏற்படுத்தியோ (இவ் வுடன்படிக்கைகள் எவருக்குமே புரியாத முறையில் எழுதப்பட்டன; ஆனால், அத் தலைவர்களுக்குத் தகுந்த வெகுமதிகள் அளிக்கப்பட்டன) தொடங்கி, பின்னர் வர்த்தகத் தலங்களையும் சமயத் தலங்களையும் நிறுவினர். இதன் பின்னர், மேலும் பல உடன்படிக்கைகளாலோ, நேரடியாகக் கைப்பற்றிக்கொள்வதாலோ இப் பகுதிகள் விரிவாக்கப்பட்டு, அவற்றில் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. இவ்வாறாக இப் பகுதிகளில் நேரடியான ஆட்சி ஏற்பட்டது.

மேற்கு ஆஃப்ரிக்கப் பிரிவினை ஏற்பட்ட அதே சமயம், அதே முறையில் கிழக்கு ஆஃப்ரிக்கப் பிரிவினையும் நிகழ்ந்தது. சிஸில்ரோட்ஸ், ரொடீஸியாவிலும் பெச்சுவானலாந்திலும் ஒரு பேரரசை எழுப்பிய சமயத்தில், ஏனைய ஆங்கிலேயர்கள் பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்காவையும் பிரிட்டிஷ் சோமாலிலாந்தையும் உரிமையாக்கிக்கொள்வதில் முனைந்தனர். ஜெர்மனி நாடு டாங்கனீகாவைக் கைப்பற்றியது. ஃபிரான்ஸ், மடகாஸ்கரை ஆண்ட சுதேச அரசியை எதிர்த்து, இறுதியில் இப் பெருந் தீவைத் தனக்கு உடமையாக்கிக்கொண்டது. இத்தாலியர்களும் காலனிகளை ஏற்படுத்துவதில் ஈடுபட்டு, சோமாலிலாந்தில் ஒரு துண்டுப் பகுதியையும் எரீட்ரியாவையும் பெற்றனர்.

அதேசமயம், எகிப்தின் நிதியை ஃபிரான்சோடு சேர்ந்து மேற்பார்வையிட்டுவந்த பிரிட்டன், சிறிது காலத்திற்குள் அந் நாட்டில் தோன்றிய ஒரு தேசியப் புரட்சியை அடக்குவதில் ஈடு பட்டு, இறுதியில் (1882) அந் நாடு முழுவதையும் தனது கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டுவந்தது. சூடான்மீது எகிப்து நாடு கொண்டாடிய ஐயத்துக்குரிய உரிமைகளை நியாயமான ஆதார மாகக்கொண்டு, லார்டு கிச்சனர் (Lord Kitchener), நைல் நதிப் பள்ளத்தாக்கு வழியாக முன்னேறி, தாம் சென்ற இடங்களிலெல் லாம் இருந்த இஸ்லாமியத் துறவிகளை வெற்றிகொண்டு, 1898-ல் பஷோடாவை அடைந்தார். அவ்வாறு, அவர் ஃபிரெஞ்சு காங்கோவிலிருந்து அடர்ந்த காடுகளின் வழியாக இரண்டாண்டுக் கடும் பயணத்திற்குப்பின் பஷோடாவை அடைந்தபோது, அங்கு ஃபிரஞ்சுக் கொடியை ஏற்கெனவே பறக்க விட்டிருந்த காப்டன் மார்ச்செண்ட் (Captain Marchand) என்ப வரைச் சந்தித்தார். லண்டனிலும் பாரிஸிலும் இப் பகுதியின் உரிமைபற்றிய பிரச்சினையில் நடைபெற்ற அரசியல் வாதத்தில், பிரிட்டனுக்குச் சாதகமான முடிவு ஏற்பட்டது. சூடான் பெய ரளவில் ஆங்கில-எகிப்திய கூட்டரசாக அமைந்தது. இவ்வாறு கேப் முனையிலிருந்து கெய்ரோவரை பரவிக்கிடந்த நன்னிலம் முழுவதிலும் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டது. இங்ஙனம், இருப தாண்டுக் காலமாக நிலம் வாங்கல் அல்லது கைப்பற்றல், பொரு ளாதாரத் தன்வயமாதல் நடைபெற்ற பிறகு, அபிசீனியா, நீக்ரோ குடியரசான லைபீரியா ஆகிய இரண்டைத் தவிர, ஆஃப்ரிக்காவின் எஞ்சிய பகுதி முழுவதும் அந்நிய ஆட்சிக்குட் பட்டது.

தூரக்கிழக்கு நாடுகளில் அந்நியப் பேரரசு ஆதிக்கம்

ஆஃப்ரிக்காவில் ஃபிரெஞ்சுப் பேரரசு தன் ஆதிக்கத்தைப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகளுக்கு பஷோடா என்னுமிடத்தில் பிரிட்டன் முட்டுக்கட்டை இட்டதை முந்திய பத்தியில் குறிப் பிட்டோம். இவ்வாறு, ஆஃப்ரிக்காவில் வாய்ப்பு இல்லாது போகவே, ஃபிரான்ஸ் நாடு கிழக்கு நாடுகளில் மிகுந்த வாய்ப் பினைக் கண்டது. இந்தோசீன தீபகற்பத்தின் தென்முனையி லிருக்கும் கொச்சின் சீனவை 1862-ல் ஃபிரான்ஸ் கைப்பற்றியது. இதனால், ஃபிரெஞ்சுக்காரர்களின் நாடு கைப்பற்றும் பேராசை மேலும் அதிகரித்தது. ஃபிரெஞ்சு நாட்டைச் சேராத கிறித்த வர்கள் கொலைசெய்யப்பட்டதைப் பழிவாங்குவதற்காக வேண்டி சீனவோடு போர் தொடுத்து, ஃபிரெஞ்சுப் பேரரசுக் கொள்கை வலுத்திருந்த காலத்தில், இந்தோசீனவாக அமைந்த பகுதி

முழுவதிலும் தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டியது. ஃபிரான்ஸ் நாட்டிற்கு அளிக்கப்பட்டிருந்த வர்த்தக உரிமைகள் முழுவதையும் பறிக்கவேண்டுமென்று, பர்மா நாட்டு அரசருக்கு பிரிட்டன் ஓர் இறுதி எச்சரிக்கை விடுத்தது. பின்னர் பர்மாவுடன் போர் தொடுத்து, 1886-ல் பர்மா முழுவதையும் பிரிட்டிஷ் இந்தியா தன் ஆட்சிப் பகுதியோடு சேர்த்துக்கொண்டது.

பேரரசு ஆதிக்கத்தைப் பரப்புவதற்காகப் புது நாடு கைப் பற்றும் முயற்சிகள், 1880ஆம் ஆண்டுகளோடு முடிந்துவிட்டன. சீனாவைத் தவிர, வேறெங்கும் உலகின் வல்லரசுகள் ஆட்சிக் குட்பட்ட பகுதி எதுவுமே இல்லாமலிருந்தது. 1890ஆம் ஆண்டு களில் பேரரசுகளின் கவனத்தை சீனா கவர்ந்தது.

ஜப்பான், சீனா ஆகிய இரண்டும் 1840 முதல் 1880 வரை உலக வர்த்தகத்தில் வலுவந்தமாக ஈடுபட நேரிட்டது. மதுப் போரின் (1839-42) விளைவாக, பிரிட்டன் ஹாங்காங் தீவையும், தடையிலா வாணிபத்தை மேற்கொள்ள வழிபுரிந்த ஐந்து உடன் பாட்டுத் துறைமுகங்களையும் பெற்றிருந்ததெனினும், அவ்வுரி மைகள் பிரிட்டனுக்குமட்டும் சொந்தமாக இல்லை. பல நாடுகள் அவற்றை அனுபவித்தன. எந்த அந்நிய நாட்டிற்கும் தனி யுரிமையின்றி வாணிபம் தாராளமாகத் தழைத்தது.

மேற்கு நாடுகளைப்போல் தொழில்மயமாக்குவதில் ஈடுபட்ட ஜப்பான், சீனத் தலைநிலத்தைக் கைப்பற்றி, 1894-ல் அதைத் தானே ஆள முற்பட்டது. கொரிய நாட்டில் ஜப்பானியருக்கும் சீனருக்குமிடையே ஏற்பட்ட தீராப் பகை, சீன-ஜப்பானியப் போருக்குக் காரணமாயிற்று. இதன் விளைவாகக் கொரியா 'விடுதலை' பெற்றது. (இவ் விடுதலை பெயரளவில்மட்டும் ஏற்பட்ட தாகும். ஏனெனில், அதன்பின்னர்கூட அது ஜப்பானிய நாட்டுப் பாதுகாவலில்தான் இருந்தது.) ஃபார்மோஸா, இன்னும் இதர சிறிய தீவுகள் ஜப்பானுக்கு உரிமையாயின. ஜப்பானியப் பேரரசு கிழக்கு ஆசியாவில் வேரூன்றிவிடுமோ என்று அச்சம்கொண்ட ரஷ்யா, ஃபிரான்சோடும் ஜெர்மனியோடும் சேர்ந்துகொண்டு, தென்மஞ்சூரியாவை ஜப்பான் கைப்பற்ற முயன்றதைத் தடுத்தது. இம் மூன்று நாடுகளோடும் நட்புக்கொண்ட சீனா, அவற்றின் வேண்டுகோளுக்கிணங்கி, சில முக்கியமான சலுகைகளை அவற் றிற்கு அளித்தது. இதனை அடுத்து, அவ்வாறான சலுகைகள் பெறுவதில் கடும் போட்டி ஏற்பட்டது. சலுகைகள் அளிக்கப் பட்டதைத் தொடர்ந்து, அந்நியப் பேரரசுகள் சீனாவின் பொருளா தாரத்தையும் வர்த்தகத்தையும் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு

வர முயன்றன. இவ்வாருக, பொருளாதாரம், வர்த்தகம் ஆகிய வற்றின் மீது அந்நியப் பேரரசுகள் கொண்டிருந்த கட்டுப் பாட்டின் விளைவாக, சீனு பல பகுதிகளாகப் பிரிய நேரிட்டது.

1904ஆம் ஆண்டில் ரஷ்யத் துருப்புகள் மஞ்சூரியாவில் இருந்ததை ஜப்பான் எதிர்த்தபோது, மேற்கூறிய சூழ்நிலைதான் இருந்தது. ஜப்பான் சவால் விட்டதைத் தொடர்ந்து, ரஷ்யாவுக் கும் ஜப்பானுக்குமிடையே போர் மூண்டது. இராணுவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற ஜப்பானியத் துருப்புகளுக்கு எதிராகப் போரிட ரஷ்யத் துருப்புகளால் முடியாமல்போனது. இவ்வாறு ஜப்பான் வெற்றி அடையவே, போர்ட் ஆர்தர் (Port Arthur), டேய்ரன் (Dairen) ஆகியவற்றிலிருந்த படைத்தளங்களும் முன்னர் ரஷ்யா விற்குச் சொந்தமாயிருந்த முக்கியமான இருப்புப்பாதைகளும் சுரங்கங்களும் ஜப்பானுடையனவாக ஆகிவிட்டன.

ரஷ்ய-ஜப்பானியப் போருக்குப் பின்னர், உலக நாடுகள் துண்டாடப்படுவதற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. முதல் உலகப் போர் தொடங்கும்வரை இந் நிலை நீடித்தது. அதற்குப் பிறகுதான் பேரரசுக் கொள்கையின் விளைவாக வல்லரசுகளிடையே பொருமை ஏற்படத் தொடங்கியது.

டாலரின் ஏகாதிபத்தியம்

பேரரசு ஆதிக்கத்தைப் பரப்புவதில் அமெரிக்கா சிறிது தாமத மாகவே இறங்கியது. ஸ்பெயின் நாட்டோடு நடந்த போரில், அமெரிக்க இராணுவச் சூழ்ச்சியின்மூலம், ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமாயிருந்த பிலிப்பைன் தீவுகளை அமெரிக்கா கைப்பற்றியது. பிலிப்பைன் தீவுகள் ஜெர்மனியின் கைக்குப் போய்விடக்கூடு மென்ற பயம் இருந்துகொண்டே யிருந்ததாலும், அத் தீவுகள் பொருளாதார, இராணுவ முக்கியத்துவம் கொண்டவையாய் இருந்ததாலும், அத் தீவுகளைத் தானே வைத்துக்கொள்வதென்று அமெரிக்கா முடிவு செய்தது. அதே ஆண்டில் (1898) ஹவாய்த் தீவுகளிலிருந்து கரும்பு உற்பத்தியாளர்கள் ஒரு கலகத்தை விளைவித்ததன் காரணமாக, ஹவாய் குடியரசு நாடாகியது. இக் குடியரசை அமெரிக்க நாடு தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஏற்றுக்கொள்ளுமாறு செய்தது. எனவே, ஹவாய்த் தீவில் உற்பத்தியான சர்க்கரை அமெரிக்கப் பண்டமாக ஆயிற்று. இதனுல், ஹவாயிலிருந்து அமெரிக்க நாட்டிற்கு எவ்வித வரியு மின்றி சர்க்கரை அனுமதிக்கப்பட்டது.

வெளிநாட்டுப் பகுதியைத் தம் உரிமையாக்கிக்கொள்வதில் மேற்கூறிய இரண்டைத் தவிர, வேறு எவ்வித முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபடவில்லை. எனினும், அண்டை நாட்டு விவகாரங்களில் தலையிடுவதைமட்டும்—இதைத்தான் டாலரின் ஏகாதிபத்தியம் என்பர்—மேற்கொண்டது. அண்டை நாடுகளின் பொருளாதார, வர்த்தக விஷயங்களில் ஏற்கெனவே அக்கறை காட்டிவந்ததால் இது சாத்தியமானது. இவ்வாறாக, மெக்ஸிகோவில் பெட்ரோலியம் எடுக்கும் தொழிலைத் தனக்குரிமையாக்கிக் கொள்ளவேண்டுமென்று முயன்றபோது, ஆங்கிலக் கம்பெனிகளுக்கும் அமெரிக்கக் கம்பெனிகளுக்கும் பூசல் ஏற்பட்டது. இப் பூசலின் காரணமாகத் தத்தம் நாட்டுக் கம்பெனிகளுக்கு ஆதரவாக பிரிட்டிஷ் அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் இதில் தலையிட்டன. இதன் விளைவாக, மெக்ஸிகோவில் இருந்த இரண்டு அரசியல் கட்சிகளில் ஒன்றை அமெரிக்காவும் பிறிதொன்றை பிரிட்டனும் ஆதரித்தன. இதனால், இவ்விரு வல்லரசுகளில் எதற்குமே நன்மை ஏற்படவில்லை. ஏனெனில், 1917-ல் இயற்றப்பட்ட மெக்ஸிகோவின் அரசியல் சட்டம், மெக்ஸிகோவின் நிலவளமனைத்தும் மெக்ஸிகோ மக்களுக்கே உரியனவாகச் செய்துவிட்டது. அதோடு, மெக்ஸிகோவிலிருந்த அயல்நாட்டு எண்ணெய்க் கம்பெனிகளின் உரிமைகளை யெல்லாம் 1938-ல் பறித்துக்கொள்வதற்குரிய அஸ்திவாரத்தை அச் சட்டம் அமைத்தது. கோஸ்டா ரிகாவிலும் (Costa Rica) அமெரிக்க, ஆங்கிலேய எண்ணெய்க் கம்பெனிகளுக்கிடையே பெருந் தகராறு ஏற்பட்டது. இதன் விளைவாக அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் அங்கு ஒரு கலவரம் தோன்றியது. அதன் முடிவாக ஏற்பட்ட அரசு, கோஸ்டா ரிகாவில் இருந்த அமெரிக்கக் கம்பெனிகளுக்குமட்டும் சலுகைகள் அளித்துவிட்டு, பிரிட்டிஷ் கம்பெனிகள் அனுபவித்துவந்த சலுகைகளை ரத்து செய்துவிட்டது.

அமெரிக்கப் பங்குப் பத்திரங்களை வாங்கியிருந்த கரிபியன் குடியரசு மக்களுக்கு நட்டம் ஏற்பட்டுவிடுமென்ற பயம் ஏற்பட்டதால், அக் குடியரசில் அமெரிக்கா தலையிட நேரிட்டது. 1905ஆம் ஆண்டில் டொமினிக்கன் குடியரசின் சுங்க வரிகளை வசூலிப்பதற்கென்றும், அமெரிக்கப் பத்திர உரிமையாளர்களுக்கும் ஏனைய அயல்நாட்டுப் பத்திர உரிமையாளர்களுக்கும் வட்டி செலுத்துவதற்கென்றும், கரிபியன் குடியரசு ஓர் அமெரிக்கச் சுங்க வரி அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று அமெரிக்க அரசாங்கம் வற்புறுத்தியது. ஒருசில ஆண்டுகளுக்குப் பின்னர், இக் குடியரசு விவகாரங்களில் அமெரிக்க அரசாங்கம் தலையிட்டது. இறுதியில்

1916 ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவம் அங்குப் புகுந்து இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியது. இவ்வாட்சி 1924 வரை நீடித்தது. அதேபோல் ஹைடியிலும் (Haiti) அனுவசியமானதோர் ஒப்பந்தத்தை ஏற்படுத்த அமெரிக்கா பல வழிகளை மேற்கொண்டது. ஆனால், அவற்றால் ஒன்றும் பயனில்லாமல்போய்விட்டதால், 1915-ல் அந் நாட்டின் ஆட்சியையும் அமெரிக்க இராணுவம் கைப்பற்றியது.

1903-ல் பனமாவில் ஏற்பட்ட 'புரட்சியில்' அமெரிக்கா தலையிட்டது, இராணுவச் சூழ்ச்சியின் விளைவேயன்றி, வர்த்தக, பொருளாதார நோக்கங்களால் அன்று. இப் புரட்சியின் விளைவாக, கொலம்பியாவின் பிடியிலிருந்து பனமா விடுவிக்கப்பட்டது. அதன் பின்னர், பனமா கால்வாய்ப் பகுதியை அமெரிக்கா நிரந்தரமாகக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டது. அமெரிக்கா கொடுத்த கடனை ஆதாரமாகக் கொண்டும், அதன் இராணுவத் தலையீட்டின் அடிப்படையைக் கொண்டும் நிக்கராகுவாவில் (Nicaragua) 1909-ல் புரட்சி ஏற்பட்டது. இப் புரட்சிகூட அமெரிக்காவின் தூண்டுதலால் ஏற்பட்டதுதான். இதன் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் இப் பகுதியில் ஒரு கால்வாயையும் கப்பல் தளத்தையும் அமைப்பதற்கு அமெரிக்கா உரிமை பெற்றது. அதனோடு, நிக்கராகுவாவின் நிதி, பாங்கு, இருப்புப்பாதை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் உரிமையும் அமெரிக்க பாங்கர்களுக்குக் கிடைத்தது.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள்

Ashworth, William, 'A Short History of the International Economy.' London : Longmans Green & Co. 1952-ல் பதிப்பித்தது. சென்ற நூற்றாண்டில் தொழிற் புரட்சி எவ்வாறு பரவியது, பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு எப்படித் தோன்றியது, 1914-க்குப் பின் நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகள் எவ்வாறு இருந்துவருகின்றன என்பனவற்றைச் சிறப்பாக இந் நூல் ஆய்கிறது.

Bagehot, Walter, 'Lombard Street', 14 ஆம் பதிப்பு. London : Murray. 1955-ல் பதிப்பித்தது. மைய பாங்குக் கொள்கையை உருவாக்கியதில் பெரும் பங்கு கொண்ட 19ஆம் நூற்றாண்டு நூல்களில் சிறந்த நூல் இது.

Buchanan, Norman S., and Howard S. Ellis, 'Approaches to Economic Development.' New York: Twentieth Century

Fund. 1955-ல் பதிப்பித்தது. 7, 8ஆம் அதிகாரங்கள், மேற்கத்திய பொருளாதாரம் விரிவடைந்த வரலாற்றைச் சுருக்கமாகத் தருகின்றன.

Clapham, J. H., 'An Economic History of Modern Britain,' Vol. II. New York : Macmillan. 1932-ல் பதிப்பித்தது. இப்பொருள்பற்றிய சிறந்த நூல்களில் ஒன்று.

Feis, Herbert, 'Europe the World's Banker 1870–1914.' New Haven, Conn.: Yale University Press. 1930-ல் பதிப்பித்தது. இக்காலத்தில் நடைபெற்ற பன்னாட்டு முதலீட்டின் புள்ளிவிவரங்கள் அனைத்தையும் தரும் சிறந்த நூல்.

Henderson, W. O., 'Britain and Industrial Europe, 1750–1870.' Liverpool: Liverpool University Press, 1954-ல் பதிப்பித்தது. ஐரோப்பியத் தொழில் வளர்ச்சியில் பிரிட்டன் கொண்ட பங்கினைப் பல சான்றுகளுடன் தருகிறது.

Jones, G. P., and A. G. Pool, 'A Hundred Years of Economic Development in Great Britain,' London : Gerald Duckworth & Co., 1940-ல் பதிப்பித்தது. 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டன் அடைந்த பொருளாதார வளர்ச்சியைப் படிப்பதற்கு எளிமையான முறையில் சுவையாக விவரிக்கிறது.

Knowles, L. C. A., 'The Industrial and Commercial Revolutions in Great Britain in the 19th Century.' London : Routledge & Kegan Paul. 1922-ல் பதிப்பித்தது. பிரிட்டனின் அபிவிருத்தியில் போக்குவரத்து வசதிகள்கொண்ட பங்கினை முக்கியமாகக் கருதுகிறது இந் நூல்.

13. இறக்குமதி வரிப் பிரச்சினை

பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சியையும் வாணிபத்தையும் நிர்ணயிக்கும் சக்திகளைப்பற்றியும், அச் சக்திகளுக்கு விரிவான வாய்ப்பினை அளித்த ஒருமைப்பாடு கொண்டதொரு பன்னாட்டுப் பொருளாதாரம் தோன்றியதைப்பற்றியும் நாம் இதுவரை ஆய்ந்தோம். இப் பன்னாட்டுப் பொருளாதாரம் எந்தெந்த வழிகளில் பாதிக்கப்படலாம் என்பதையும், அவ்வாறு பாதிக்கப்படும்போது எவ்வாறு அது தானாகவே சரிப்படுத்திக்கொள்கிறது என்பதையும் இப்போது ஆய்வோம்.

இவ் வாய்வை நாம் தொடங்குமுன், எக் காரணங்களுக்காகத் தடையிலா வாணிபத்தை எதிர்க்கின்றனர் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தடையிலா வாணிபம் வெகு சொற்ப காலமே நடைபெற்றது என்பதையும், பின்னர் 1870 முதல் 1914 வரை தொழிற் பாதுகாப்பு இயக்கம் செயற்பட்டது என்பதையும் நாம் முன்னரே குறிப்பிட்டோம். இம் மாறுதல் தோன்றியதற்குக் காரணம், 1880 முதல் 1899 வரை ஐரோப்பாவில் உணவு நெருக்கடி ஏற்பட்டதால், பிற நாடுகளிலிருந்து இறக்குமதியான உணவுத் தானியம் அதிகரித்ததுதான். அதனோடு, தேசியப் பற்று வளர்ச்சி அடைந்ததால் அம் மாறுதல் இன்றியமையாததாகியது. ஆனால், தொழிற் பாதுகாப்பு வரிகளை ஒரு நாடு விரிவாக்க வேண்டுமானால், அது அந் நாட்டின் சட்டமன்றத்தின்மூலமே நடைபெற முடியும் என்பது தெளிவு. எனவே, இக் கொள்கையை ஆதரித்தோர், சட்டங்களில் இன்றியமையாத திருத்தங்களை ஏற்படுத்துவதற்கென்று அதற்குரிய காரணங்களை விளக்கிக்கூறி, சட்டமன்றங்களில் வாதாடவேண்டியிருந்தது.

முதலாவதாக, வருமானம் பெறுவதற்கென்று விதிக்கப்படும் இறக்குமதி வரிக்கும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்கென்று விதிக்கப்படும் இறக்குமதி வரிக்கும் என்ன வேறுபாடு

உண்டு என்பதைத் தெளிவாக்கிக்கொண்டு, அச் சுங்க வரியால் ஏற்படும் முக்கியமான விளைவுகளை நாம் குறிப்பிடல் அவசியம்.

இறக்குமதி வரியின் விளைவுகள்

தொழிற் பாதுகாப்பா அல்லது வருமானமா ?

இறக்குமதி வரி, வருமானம் பெறுவதற்கென்று விதிக்கப் படலாம்; அல்லது உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாப்பதற்கென்று விதிக்கப்படலாம்.[1] ஆனால், இறக்குமதியே நடைபெருமல் தடுக்கக்கூடிய அளவிற்குத் தொழிற் பாதுகாப்பு வரிகள் உயர்ந்த வீதத்தில் இல்லாவிட்டால், அவற்றிலிருந்து ஓரளவு வருமானம் கிடைக்கும் என்பது நிச்சயம்.


தொழிற் பாதுகாப்பிற்கென்று இல்லாமல், வருமானம் பெறுவ தற்குமட்டும் விதிக்கப்படும் இறக்குமதி வரி உண்டா ? சிறிதளவு கூட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பண்டம் இறக்குமதி யாகும்போது, அதன்மீது விதிக்கப்படும் வரி இதற்குச் சிறந்த தோர் உதாரணமாகும். இவ்வகை இறக்குமதி வரிகூட, வேறு பண்டங்களுக்குள்ள உள்நாட்டுத் தேவையை விரிவாக்குவதன் மூலம், ஓரளவு தொழிற் பாதுகாப்பிற்கு உதவுகிறதெனலாம். இவ்வாருக, வருமானத்திற்கென்று விதிக்கப்படும் இறக்குமதி வரிக்கும் தொழிற் பாதுகாப்பிற்கென்று விதிக்கப்படும் வரிக்கும் வித்தியாசம் காணமுடியாதபடிதான் இறக்குமதி வரிச் சட்டங்கள் அமைகின்றன என்று தோன்றுகிறது.

எனவே, இப் பிரச்சினையைக் கீழ்க்காணும் வழியில் விட்டு விடுவதுதான் சிறந்தது : சிறிதளவுகூட இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு ஒரு பண்டத்தின்மீது விதிக்கப்படும் உயர்ந்த வீத இறக்குமதி வரி மட்டும்தான் தொழிற் பாதுகாப்பு வரியாகும். எனினும், இறக்குமதி வரி விதிக்கப்படும் பண்டம் உள்நாட்டிலும்

[1] இவ்வதிகாரம் முழுவதிலும் நாம் இறக்குமதி வரியைப்பற்றி மட்டுமே ஆய் வோம். கடத்தல் வரிகள் (transit duties), ஏற்றுமதி வரிகள் என்று இன்னும் இதர வகைச் சுங்கமும் உள்ளன. சரக்குகள் அனுப்பும் இடத்திலிருந்து அனுப்பப்படும் இடத்திற்குச் செல்லும் வழியில் பிறிதொரு நாட்டின் வழியாகச் செல்வதாயிருந்தால், அந் நாடு அவற்றின்மீது விதிக்கும் வரி கடத்தல் வரி எனப்படும். 19ஆம் நூற்ருண்டின் முந்திய பகுதியில் இவ்வித வரிகள் முக்கியமானவையாயிருந்தன. எனினும், இப் போது அவை முக்கியமானவையல்ல. இவற்றைவிட இன்று ஏற்றுமதி வரிகள்தாம் பிரபலமாக உள்ளன. மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகள்தாம் இவ் வரிகளை முக்கியமாக விதிக்கின்றன. ஒன்றில் வருமானம் பெறுவதற்கென்ருே, அல்லது உள்நாட்டிலேயே இம் மூலப்பொருள்களை உற்பத்தித்துறையில் பயன் படுத்துவதற்குத் தூண்ட வேண்டுமென்ருே (அதாவது, உள்நாட்டுத் தொழிற் பாதுகாப்பு நடவடிக்கையாக) இவை விதிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆய்வதற்கு இந் நூலில் இடமில்லாமல் இருப்பதால் இவைபற்றி நாம் விளக்கப் போவதில்லை.

உற்பத்தி செய்யப்படலாம். அப்போது அப் பண்டத்தின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை (excise duty) அதன் இறக்குமதி வரி வீதத்தளவிற்கு உயர்வாயிருந்தால், அவ் விறக்குமதி வரியால் உள்நாட்டுத் தொழிலுக்கு எவ்விதப் பாதுகாப்பும் ஏற்படாது. இறக்குமதி வரிவிதத்தைக்காட்டிலும் ஆயத்தீர்வை குறைந்த வீதத்தில் இருக்கும்போது, இறக்குமதி நின்றுவிடாத அளவிற்குச் சீராக விதிக்கப்படும் வரிகள் அனைத்தும் வருமான நோக்கம் உடையனவாயும், தொழிற் பாதுகாப்புக் குறிக்கோள் கொண்டன வாயும் அமையும்.

இறக்குமதி வரியினால் ஏற்படும் விளைவுகளையும், அவ் விளைவு களின் ஆற்றல் பரவுவதையும் இங்கு ஆய்வோம்.[2] இதற்கு 13.1 வரைபடத்தை எடுத்துக்கொள்வோம். இதிலுள்ள SS என்னும் கோடு உள்நாட்டு உற்பத்தியாளர்களே உற்பத்தி செய்து அளிக்கும்



வரைபடம் 13.1 இறக்குமதி வரியின் விளைவுகள்

அளிப்புக் கோடாகும். (அதாவது, அவர்களின் நீண்ட கால சராசரி உற்பத்திச் செலவுக் கோடு ஆகும்.) DD என்ற கோடு அந் நாட்டின் தேவைக்கோடு. இறக்குமதி வரி இல்லாதபோது,

[2] இதைத் தொடர்ந்து வரும் விளக்கம் Kindleberger அவர்கள், தம் 'International Economics' என்னும் நூலில் (Homewood, Ill., Richard D. Irwin, Inc., 1963) ஆய்ந்துள்ளதிலிருந்து ஒருசில முறையில் வேறுபட்டதெனினும், பெரும்பாலும் அவரது ஆய்வைப்போன்றதே.

வெளிநாட்டுப் போட்டியின் விளைவாக P_1 என்ற புள்ளியில் விலை அமைகிறது. (ஒரு வெளிநாட்டிலோ, அல்லது பல நாடுகளிலோ இப் பண்டத்திற்கான உச்சநிலை உற்பத்திசார் பலன்களுக்கேற்பக் காரணி விலை உள்ளதாகவும், உள்நாட்டில் குறிப்பிட்டதோர் அளவிற்குமேல் இப் பண்டத்தை உற்பத்தி செய்யும்போது அதற் கேற்படும் உற்பத்திச் செலவு இறக்குமதிச் செலவைக்காட்டிலும் அதிகமாக இருப்பதாகவும் அனுமானிக்கப்படுகிறது.) அப்போது, உள்நாட்டு உற்பத்தி அளவு OM_1 ஆகவும், இறக்குமதி M_1M_4 அளவாகவும் இருக்கிறது.

இப் பண்டத்தின் இறக்குமதிமீது P_1P_2 மட்டத்திற்கு வரி விதிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். நமது வாதத்தை எளிமையானதாக ஆக்குவதற்கு வெளிநாட்டில் இப் பண்டத்திற் குள்ள விலை மாருமல் அப்படியே இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவ்வாருயின், உள்நாட்டு அங்காடியில் P_2 மட்டத் திற்கு விலை ஏறுகிறது. இவ் விலையில் உள்நாட்டு உற்பத்தி M_1 அளவிலிருந்து M_2 அளவிற்கு விரிவடைகிறது. அதேசமயம், நுகர்ச்சி M_4 அளவிலிருந்து M_3 அளவிற்குச் சுருங்கிவிடுகிறது. இறக்குமதி M_1M_4 அளவிலிருந்து M_2M_3 அளவிற்குக் குறைந்து விடுகிறது.

வருமான விளைவு

இப் பண்டத்தின் இறக்குமதி முழுவதும் தடை செய்யப்பட வில்லையாதலால் (அவ்வாறு தடைசெய்வதற்கு இறக்குமதிவரி P_1P_3 மட்டத்திற்கு இருக்கவேண்டும்), இவ் வரியின்மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கிறது. இவ் வருமானம், இறக்குமதி வரியையும் இறக்குமதி அளவையும் பொறுத்ததாகும். இது r என்ற நீண்ட சதுரத்தால் காட்டப்படுகிறது.

தொழிற் பாதுகாப்பு விளைவு

உள்நாட்டு உற்பத்தியைமட்டும் எடுத்துக்கொண்டால், இப் பாதுகாப்பு வரியினல் அது M_1-லிருந்து M_2-க்கு விரிவடைகிறது. இவ் வரியால் P_2 மட்டத்திற்கு விலை உயர்வதன்மூலம் உற்பத்தியை விரிவாக்குவதற்கேற்படும் வளர்ந்துசெல் இறுதிநிலைச் செலவை உற்பத்தியாளர்கள் சரிக்கட்ட முடிகிறது. எனவே, முன்பைவிட அதிகமாய் இப்போது உற்பத்தி செய்யவும் முடிகிறது. அவ்வாறு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய பணம், p என்ற முக்கோணப் பரப்பளவு காட்டுவதுபோல், உற்பத்தியாளருக்கு முன்பைவிட அதிகமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்து கிடைக்

கிறது. இவ் வரியால் விளையும் தொழிற் பாதுகாப்பினை p என்ற முக்கோணப் பரப்பு அளவிடுகிறது. M_1M_2 அளவு அதிகமாக உற்பத்தி செய்வதற்கென்று, மேலும் மேலும் திறன் குறைந்து கொண்டே செல்லும் காரணிகளைப் பயன்படுத்தவேண்டியுள்ளது. அக் காரணிக்காக, அதிகரித்துள்ள வருமானத்தில் எவ்வளவு பகுதி செலவிடவேண்டுமென்பதைத்தான் இது குறிக்கிறது.

கைமாறும் விளைவு

அதிகரித்துள்ள வருமானத்தின் எஞ்சிய பகுதி, உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் இறுதி அலகு தவிர, எஞ்சிய அலகுகளுக்கெல்லாம் ஏற்படும் செலவு போக மீதியுள்ள இலாபத்தைக் காட்டுகிறது. இது, அப் பண்டத்தை நுகர்வோரிடமிருந்து உற்பத்தியாளர்கள் பெற்ற ஒரு பொருளாதார வாரத்தையும் (economic rent), வருமானம் கைமாறுவதையும் குறிக்கிறது. வரியால் ஏற்படும் கைமாறும் விளைவாக இதை அழைக்கலாம். (கிண்டில்பெர்ஜர் அவர்கள் இதனை மறுபகிர்வு விளைவு என்று அழைக்கிறார்.)

வரி விதிப்பதற்கு முன்னர், சாதனங்கள் முழுவதும் பயன்படுத்தப்பட்டதாக அனுமானித்துக்கொள்வோமாயின், சிக்கனமற்ற முறையில் உற்பத்திக் காரணிகள் வேறுவிதமாக இப்போது பயன்படுத்தப்படுவதால், அந் நாட்டிற்கு ஏற்படும் நட்டத்தைத் தொழிற் பாதுகாப்பின் விளைவு அளவிடுகிறது. வரிவிதிப்பிற்கு முன்னர், இச் சாதனங்கள் வேறு துறைகளில் பயன்பட்டுவந்தன. அங்கு அவற்றிற்குக் கிடைத்த அதே வருமானம்தான், பாதுகாக்கப்படும் இத் தொழிலிலும் கிடைக்கிறது. எனவே, வரியால் அவைகளுக்கு எவ்வித இலாபமும் இல்லை. ஆனால், அதேசமயம், அவற்றை முன்பைவிடக் குறைந்த திறனில், எனவே, அதிகச் செலவில் பயன்படுத்துவதால் அந் நாட்டிற்கு நட்டம் ஏற்படுகிறது.[8]

நுகர்ச்சி விளைவு

பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள இப் பண்டத்தை நுகர்வோரின் கண்ணோட்டத்திலிருந்து இவ் வரிவிதிப்பின் விளைவுகளைப் பார்ப்

[8] எனினும், முன்னர் பயன்பட்டுவந்த தொழிலிலிருந்து பாதுகாக்கப்பட்ட இப் புதிய தொழிலுக்குச் சாதனங்களை (உதாரணமாக உழைப்பை) க் கவரவேண்டுமாயின் அதிக விலை கொடுக்கவேண்டியுள்ளது. அப்போது அவற்றிற்குச் செலுத்தும் விலைகள், உற்பத்தியாளருக்கேற்படும் செலவாகையால், இச் செலவின் அதிகரிப்பு முன்பைவிடச் செங்குத்தாக உயரும் செலவுக் கோட்டில் பிரதிபலிக்கும். உயர்ந்த செலவில் சமுதாயத்திற்கேற்படும் நட்டத்தை அவற்றிற்குச் செலுத்தப்படும் அதிக விலை ஓரளவிற்குச் சரியீடு செய்துவிடுகிறது.

போம். வரி விதிக்கப்படுமுன், நுகர்வோர் அடைந்த திருப்தியை, தேவைக்கோட்டிற்குக் கீழும், M_4n என்ற செங்குத்துக் கோட்டிற்கு இடப்புறமும் உள்ள பரப்பு அளவிடுகிறது. நுகர்ந்த அளவையும் விலையையும் கொண்டு, இத் திருப்தியைப் பெறுவதற்கு ஏற்பட்ட செலவை அளவிடலாம். அதாவது, OP_1nM_4 காட்டும் பரப்பளவு இச் செலவீட்டைக் குறிக்கிறது. இறுதிநிலை அலகைத் தவிர (n-ல்), அவர்கள் நுகர்ந்த ஏனைய அலகுகளிலிருந்து நுகர்வோர் எச்சம் (consumers' surplus) கிடைத்தது. இது P_1n-க்கும் தேவைக் கோட்டிற்கும் இடையேயுள்ள முக்கோணப் பரப்பால் காட்டப் படுகிறது.

வரி விதித்த பின்னர், நுகர்வோர் அடையும் மொத்தத் திருப்தியை, தேவைக் கோட்டிற்குக் கீழும் M_3m செங்குத்துக் கோட்டிற்கு இடப்புறமும் உள்ள பரப்பைக்கொண்டு அளவிடலாம். இத் திருப்தியை அடைவதற்கேற்பட்ட செலவு நுகர்வோர் செலவீடு (consumers' outlay) எனப்படும். இது OP_2mM_3 என்ற பரப்பளவால் காட்டப்படுகிறது. இப்போது கிடைக்கும் நுகர்வோர் எச்சத்தை P_2m-க்கும் தேவைக் கோட்டிற்கும் இடையேயுள்ள பரப்புக் காட்டுகிறது. இது முன்னர் கிடைத்த நுகர்வோர் எச்சத்தைக் காட்டிலும் (P_1P_2mn அளவு) குறைவாயுள்ளதால், தொழிற் பாதுகாப்பு வரியினால் நுகர்வோர் பெற்றுவந்த திருப்தி குறைந்து விடுகிறது என்பது தெளிவாகிறது.

நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ள இந் நட்டத்தை ஓரளவு ஈடு செய்யும் வகையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் (r) போக எஞ்சியுள்ள பகுதி (t) உற்பத்தியாளருக்குக் கிடைக்கிறது. இவ்வாறாக, கடைசியில் சமுதாயத்திற்கு ஏற்படும் நிகர நட்டம், p என்னும் முக்கோணம் காட்டும் பரப்பளவாலும் (முன்பைவிடக் குறைந்த திறனில் பயன்படும் சாதனங்கள்), c என்னும் முக்கோணம் குறிப்பிடும் பரப்பளவாலும் (சரியீடு செய்யப்படாத அல்லது வேறு எந்த வழியிலும் விளக்க முடியாத நுகர்வோர் அடையும் நட்டம்) அளவிடப்படுகிறது.

நுகர்வோரின் திருப்தியில் ஏற்படும் இவ்விழப்பை, இறக்குமதித் தீர்வை இருப்பதை அறியாத நுகர்வோர் மனமார உணராமலிருந்தபோதிலும், அந் நஷ்டம் நஷ்டம்தான். அது உண்மையானதேயன்றிக் கற்பனையான நஷ்டம் அன்று. உதாரணமாக, சுவிட்சர்லாந்தில் செய்யப்படும் கைக்கடிகாரங்களைக் குறைந்த விலையில் பெருமளவிற்குப் பயன்கொள்வதாயிருந்தால், நுகர்வோர் எவ்வளவு திருப்தி அடைவர் என்பதற்கும், உயர்ந்த

விலையில் குறைந்த அளவே வாங்கிப் பயன்பெறக்கூடிய திருப்திக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிடலாம்.

இறக்குமதி வரியும் விலைகளும்

இதுவரை, இறக்குமதி வரிவிதிப்பால் அப் பண்டத்தின் விலை ஏற்றுமதி செய்யும் நாட்டில் மாருமல் அப்படியே இருப்பதாகவும், தொழிற் பாதுகாப்பு வரியை விதிக்கும் நாட்டில் வரியின் அளவிற்கு விலை உயரும் என்றும் அனுமானமாகக்கொண்டு ஆய்ந்தோம். ஒருவேளை இவ் வனுமானத்தின்படியே இறக்குமதி நாட்டு விலை, வரி அளவிற்கு உயரலாம்; அல்லது உயராமலே இருக்கலாம்; அல்லது வரியின் அளவிற்கு உயராமல் சிறிது குறைவாகவே உயரலாம்.

வெளிநாட்டில் இப் பண்டம் மாருச் செலவில் உற்பத்தி செய்யப்பட்டால் மட்டும்தான், தொழிற் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ள நாட்டில் வரியின் முழு அளவிற்கு விலை உயரும். அவ்வாருயின், ஏற்றுமதி செய்யும் நாடு அதே விலையில் அப் பண்டத்தை ஏற்றுமதி செய்யும். உள்நாட்டில், அவ் விலையும் வரியும் சேர்ந்தால் என்ன விலை இருக்குமோ அவ் விலை நிலவும்.

வரி விதிக்கும் நாடே அப் பண்டத்தை ஏற்றுமதி செய்வதாக இருந்தால், அதன் விலையில் எவ்வித மாறுதலும் இராது. அப்போது உலக விலையில் போக்குவரத்துச் செலவு போக, மீதி எவ்வளவு இருக்குமோ (விலை பேதங் காட்டும் சர்வாதீனம் இல்லாதிருக்குமாளுல்) அவ்வளவிற்குத்தான் உள்நாட்டு விலை இருக்கும். வரி விதிப்பதன்மூலம் உள்நாட்டு விலை உயரவேண்டுமாளுல், உள்நாட்டு விலையும் வெளிநாட்டு விலையும் ஒன்றுக்கொன்று சமமாகும்வரை, இறக்குமதியைக் குறைத்து, உள்நாட்டு விற்பனையை அதிகரிக்கவேண்டியிருக்கும்.

வரி விதிக்கப்படும் பண்டம் வளர்ந்துசெல் செலவில் ஏற்றுமதி செய்யும் நாட்டில் உற்பத்தி செய்யப்படுமாளுல்—ஒருவேளை நீண்ட காலத்தில் இப்படித்தான் இருக்கும்—அயல்நாட்டு உற்பத்தியாளரின் விற்பனை குறைவதன்மூலம், உற்பத்தி சுருக்கமடைந்து, உற்பத்திச் செலவு குறைந்துவிடும். அவ்வாறு அப் பண்டத்தின் மலிவான விலையோடு வரியும் சேர்ந்து உள்நாட்டில் நிலவும் விலையாக அமையும். ஏற்றுமதி நாட்டின் உற்பத்திச் செலவு குறைந்துவிட்டதால், வரி விதித்துள்ள இறக்குமதி நாட்டின் விலை, அயல்நாட்டு விலையைக்காட்டிலும் வரி அளவிற்கு உயர்வா

யிருக்கும். எனினும், வரியே இல்லாதிருந்த பழைய விலையைக் காட்டிலும் இப்போது இந்த அளவிற்கு விலை உயராது.

தடையிலா வாணிபமும் தொழிற் பாதுகாப்பும்

தடையிலா வாணிபத்திற்குரிய வாதம் மிக எளிமையானது. அதாவது, தடையிலா வாணிபம் இருக்குமாயின், ஒரு நாடு சில பண்டங்களையும் பணிகளையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதைக் காட்டிலும் மலிவாக வெளிநாடுகளிலிருந்து அவற்றைப் பெறமுடியும். ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்து, அவற்றிற்குப் பதிலாக இறக்குமதிப் பொருள்களை வாங்கிக்கொள்ளும் போது, சாதனங்கள் மிச்சப்படுகின்றன. எவ்வாறெனில், இறக்குமதிப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தவேண்டிய சாதனங்களைக்காட்டிலும் குறைந்த அளவு சாதனங்களைக் கொண்டு ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடும். இது உண்மையன்று என்றால், எந்தப் பொருளையுமே ஒரு நாடு இறக்குமதி செய்யாது. அதற்குப் பதிலாக, தான் மலிவாக உற்பத்தி செய்யும் பொருள்களைப்போலவே இறக்குமதிப் பொருள்களையும் அது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்துவிடக்கூடும்.

வேறு விதமாகக் கூறின், புவி அமைப்பிலுள்ள மாறுதலால் ஏற்படும் சிறப்புத் தேர்ச்சி சாத்தியங்களைக்கொண்டு அடையக் கூடிய எல்லா அனுகூலங்களையும் பெறுவதற்குத் தடையிலா வாணிபம் வழிசெய்கிறது. சில நாடுகள், குறிப்பிட்ட சில பண்டங்களை மலிவாக உற்பத்தி செய்வதற்கேற்ற காரணிப் பேற்றினைப் பெற்றுள்ளன. வேறு சில நாடுகளோ, வேறு வகையான பண்டங்களை மலிவாக உற்பத்தி செய்வதற்கேற்ற காரணி வாய்ப்பினைப் பெற்றுள்ளன. எனவே, தடையிலா வாணிபம் இருக்கும் போது, ஒவ்வொரு நாடும் தான் எப் பண்டங்களைச் சிறப்பாக உற்பத்தி செய்ய முடியுமோ, அப் பண்டங்களில்மட்டும் சிறப்புத் தேர்ச்சி செய்து, அவற்றைக்கொண்டு ஏனைய நாட்டுச் சிறப்புத் தேர்ச்சிப் பண்டங்களை வாங்குவதன்மூலம் எல்லா நாடுகளுக்குமே நன்மை ஏற்படுகிறது.

தடையிலா வாணிபத்தால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் இலாபத்தை அதன் உண்மை வருமானம் உயர்வதைக்கொண்டும் விளக்கலாம். குறிப்பிட்ட அளவு சாதனங்களைக்கொண்டு இறக்குமதிப் பொருள்களையோ அல்லது அவற்றிற்குப் பதிலீட்டுப் பொருள்களையோ ஓரளவு உற்பத்தி செய்யக்கூடும். ஆனால், அதே அளவு சாதனங்களைக்கொண்டு ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்து, அவற்றிற்குப் பதிலாக இறக்குமதிப் பொருள்களை வாங்கினால்

மலிவாகவும் அதிகமாகவும் பெற முடியுமாதலால், தேசிய வருமானம் அதற்கேற்ப அதிகரிக்கின்றது.

• வாணிபத்தின் நன்மைகளையெல்லாம் தொழிற் பாதுகாப்பு அழித்துவிடுகிறது, அல்லது குறைக்கவாவது செய்கிறது. இக் கொள்கை முக்கியமான இரண்டு விளைவுகளை ஏற்படுத்துகிறது: (1) உயர்ந்த திறனில் பயன்பட்டுவந்த சாதனங்களைக் குறைந்த திறனில் பயன்படுமாறு செய்துவிடுகிறது; (2) பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகளை உயர்த்துவதன்மூலம், நுகர்வோர் தேர்ந்து வாங்கும் உரிமையை மட்டுப்படுத்துகிறது. அதாவது, தாம் விரும்பி வாங்கியிருக்கக்கூடிய பொருள்களைக் குறைந்த அளவு வாங்கும்படி நுகர்வோரை வற்புறுத்துகிறது.

தடையிலா வாணிபத்திற்கு எதிராக எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் இதுவரை யாருமே வாதம் செய்ததில்லை. அதுபோல, பொருளாதாரக் குறிக்கோள்களை ஆதாரமாகக்கொண்டு, நீண்ட காலம்வரை தொடர்ந்து விதிக்கப்படும் தொழிற் பாதுகாப்பு வரிகளுக்கு ஆதரவான வாதத்தையும் இதுவரை எவரும் கண்டுபிடித்ததில்லை. அறிவாற்றல் உடையவர்கள்கூட இதில் முயற்சி செய்து, இறுதியில் தோல்வியே கண்டுள்ளனர். அவ்வாறே, தொழிற் பாதுகாப்புக்குரிய வாதம் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமானால், அது குறுங்காலத்திற்குமட்டுமே ஏற்றதாயிருக்கும்; அல்லது அவ் வாதம் பொருளாதார அடிப்படையில் தோன்றியதாயிராது; இல்லையேல், ஏதாவதொரு தனிச் சிறப்புடைய சூழ்நிலைக்குமட்டுமே அது பொருத்தமானதாயிருக்கும். எனினும், தொழிற் பாதுகாப்பிற்குரிய வாதங்கள் பெரும்பாலும் எவ்வித நிபந்தனையுமின்றியே தரப்படுகின்றன; அல்லது அவை உறுதியாக வலியுறுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி, அவற்றை உண்மையென்று பலர் நம்பவும் செய்கின்றனர்.

இதுபற்றிப் பேராசிரியர் வைனர் (Viner) முடிவாகப் பின்வருமாறு கூறுகிறார்:

'அரசியல்வாதிகளின் உள்ளங்களில் தொழிற் பாதுகாப்புக் கொள்கைதான் வேரூன்றி உள்ளது. அதற்கு மாறாக, பொருளாதார அறிஞர்களோ இக் கொள்கையை அடியோடு மறுக்கின்றனர். தொழிற் பாதுகாப்பை ஆதரிக்கும் அரசியல்வாதியின் வாதம், நாட்டிற்கு நாடு தர வேறுபாடுடையது. எனது நாட்டை எடுத்துக் கொண்டால், தம் சொல்வன்மையால் இவ் வாதங்களை

அருமையாக எடுத்துக்கூறி, அதை மக்கள் நம்பும்படி செய்யக் கூடிய ஆற்றல் மிக்க அரசியல்வாதிகள் உளர். அறிஞர்கள் அவ் வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க, அவர்களின் பேச்சைக் கேட்டு, அவற்றை அப்படியே நம்புகின்ற மக்கள் ஏராளமாக உள்ளனர். ஒருவேளை அறிஞர்கள் அதை ஒப்புக்கொள்ளாததால் தான் அவர்கள் நம்புகின்றனர் போலும்......இவ் வாதங்களை யெல்லாம் எளிமையான பல பாடநூல்கள் தகர்த்தெறிந்துவிடு கின்றன. அப்படியிருந்தும், அவற்றை ஏன் பொதுமக்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்றால், அவர்கள் பொருளாதாரப் பாட நூல்களைப் படிப்பது கிடையாது.'[4]

தொழிற் பாதுகாப்பிற்கான சீரிய வாதங்கள்

இளந் தொழில்

ஏற்கெனவே நிறுவப்பட்டு வளர்ச்சி அடைந்துள்ள அயல் நாட்டுத் தொழிலின் போட்டியிலிருந்து பாதுகாக்கப்படாவிட்டால், உள்நாட்டில் நன்கு வளர்ச்சிபெறக்கூடிய தொழிலைக்கூடத் தொடங்க முடியாது என்ற நிலை இருக்குமாயின், இத் தொழில் வளர்ச்சிபெறுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பாதுகாப் பளிப்பது சிறந்ததொரு வழியாகும். அயல்நாட்டுத் தொழில் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டது என்பதைத்தவிர, ஏனைய காரி யங்களிலெல்லாம்—காரணி விதிகள், கச்சாப் பொருள் கிடைப்பு, அங்காடி வசதிகள்—அயல்நாட்டுத் தொழிலுக்கு இருக்கும் அனுகூலங்கள் இத் தொழிலுக்கும் உள்ளன. அதாவது, புதிதாக ஆரம்பிக்கப்படக்கூடிய இத் தொழிலுக்குக் கிடைக்காத புறச் சிக்கனங்களையும் அகச் சிக்கனங்களையும், முன்னரே ஆரம்பிக்கப் பட்டுவிட்ட ஒரே காரணத்தினால், அயல்நாட்டுத் தொழில்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றன. புதிதாய்த் தொடங்கப்பட இருக்கும் இத் தொழிலுக்குத் தாற்காலிகமாகப் பாதுகாப்பு அளிக்கப் படுமாயின், சிறிது காலம் கழிந்து, இத் தொழிலும் அச் சிக்கனங் களைப் பெறக்கூடும். ஒருவேளை, புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் இத் தொழில், அயல்நாட்டுத் தொழிலுக்கு வேறு எந்த வகையிலும் குறைந்ததன்று என்ற நிலை இருக்குமாயின், சிறிது காலம் கழிந்து அயல்நாட்டுத் தொழிலைக்காட்டிலும் திறன்மிக்கதாக வளரக்கூடும்.

உதாரணமாக, ஒரு நாட்டில் அயல்நாட்டு நிறுவனங்கள் ஏற்கெனவே விற்பனை செய்துகொண்டிருக்கும்போது சொந்த

[4] Jacob Viner எழுதிய 'International Economics' என்னும் நூலில், 'The Tariff Question and the Economist' என்ற தலைப்புடைய 6ஆம் அதிகாரத்தில் பக்கம் 109. Published 1951 by The Free Press, Glencoe, Ill.

நிறுவனங்களை அந் நாடு ஆரம்பிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது இப் புதிய தொழில் நிறுவனங்கள் சிறிய அளவிலும் சிக்கனமற்ற வழியிலும் தொடங்கப்படவேண்டியதிருக்கலாம். ஒருவேளை, தனக்குப் போட்டியாக உள்ள அயல்நாட்டு நிறுவனங் களைப்போல் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியாமலும் இருக்கக்கூடும். எனினும், இறக்குமதி வரியால் பாதுகாக்கப்படும் போது, அவை படிப்படியாக முன்னேறி, அயல்நாட்டுத் தொழிலுக்கு இணையாக வளர்ச்சிபெறக்கூடும். கலைச்சொற்களில் இதைக் கூறுவதாயின், தொடக்கநிலையில் அனுபவிக்க முடியா திருந்த சிக்கனங்களையெல்லாம் சிறிது காலம் சென்று பெறுவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடும்.

ஒரு தொழிலில் ஒரு நிறுவனம் மட்டுமன்றி, அத் தொழில் முழுவதுமே வளர்வதால் ஏற்படக்கூடிய புறச் சிக்கனங்களும் இப்போது கிடைக்கக்கூடும். இத் தொழிலில் மேலும் மேலும் உள்நாட்டு நிறுவனங்கள் தோன்றும்போது உழைப்பாளிகளின் எண்ணிக்கை உயர்வதால், சிறப்புத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் போதுமான அளவில் கிடைக்கக்கூடும். அதனோடு, இத் தொழி லுக்கு வேண்டிய பணிகளைப் புரிவதற்கென்றும், அதன் எந்திரத் தளவாடங்களைப் பழுதுபார்ப்பதற்கென்றும் புதிய ஸ்தாபனங்கள் தோன்றக்கூடும். இத் தொழிலுக்கென்று தனி ஆராய்ச்சி நிலையம்கூட ஏற்படலாம். இவ்வாறு ஏற்படும் வளர்ச்சியினால் இத் தொழிலின் உற்பத்திச் செலவு குறைவதுமட்டுமன்றி, இளம் பருவத்தில் இருந்த தொழில் முதிர்ச்சி அடைந்து, பாதுகாப் பின்றியே சுயமாக நடைபெறக்கூடும்.

சிறிது சிந்தித்துப்பார்த்தால், தத்தம் சிறப்பு நிலையை ஆதார மாகக்கொண்டு, நாடுகள் சிறப்புத் தேர்ச்சி செய்வதை உச்சமாக்க வேண்டும் என்ற தடையிலா வாணிபத்தின் குறிக்கோளுக்கு இவ் வாதம் முரண்பட்டதன்று என்பது புரியும். அரசாங்கத் தலையீ டின்றி இவ் விளைவு ஏற்பட முடியாதென்று இப் பாதுகாப்புக் கொள்கையை ஆதரிப்போர் நம்புவது சரியே. ஆழ்ந்து பார்க்கு மிடத்து, தடையிலா வாணிபம் நிறைபோட்டியை அனுமான மாகக் கொண்டிருப்பதால், அவ்விதப் போட்டி இல்லாமல் இருக்கும்போது அரசாங்கத் தலையீடு இன்றியமையாதது என்பது பொருத்தமான வாதமாகவே உள்ளது. நடைமுறையில் அகச் சிக்கனங்களையும் புறச்சிக்கனங்களையும் எல்லா நிறுவனங்களுமே சமமாகப் பெறமுடிவதில்லை. எனவே, போட்டியிடும் நிறுவனங்கள் அனைத்தும் ஒரே தகுதியைப் பெறவேண்டுமானால், தாற்காலிக மாக ஆகிலும் தொழிற் பாதுகாப்பு அவசியமாகிறது.

எனினும், இளந்தொழிற் பாதுகாப்பு வாதம், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே பொருத்தமானது என்பது குறிப்பிடத் தக்கது. ஒரு நாட்டிலுள்ள தொழில்கள் உகந்த காரணப்பேறு உடையனவாயும், அங்காடி வாய்ப்புடையனவாயும், போதுமான அளவு கச்சாப் பொருள்களைக் கொண்டனவாயும் இருப்பதோடு, சிறிது காலம் கழிந்து, பாதுகாப்பின்றி சுயமாகவே நடைபெறக் கூடியனவாயும் இருந்தால் மட்டுமே அவற்றிற்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். மேலும், குறிப்பிட்டதொரு காலத்திற்கு மட்டுமே இப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அத் தொழில்கள் விரைவாக முதிர்ச்சி பெறக்கூடிய வாய்ப்புடையன வாகவும் இருக்கவேண்டும்.

ஆனால், நடைமுறையில் இளந்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்போது, இவ் விஷயங்கள் பெரும்பாலும் கவனிக்கப்படுவ தில்லை. ஊட்டி வளர்க்கவேண்டிய இளந் தொழில்கள் நீண்டு வாழமுடியுமா என்று ஆயாமலே அவற்றைப் பெற்றோர்கள் தேர்ந் தெடுக்கின்றனர். தகுதியைப்பற்றியே சிந்திக்காமல் கண்ட தொழிலுக்கெல்லாம் பாதுகாப்பளிப்பதற்காக ‘இளந்தொழில்’ என்ற ஒரு காரணம் கூறப்படுகிறது. எவ்வித ஆய்வுமின்றித் தேர்ந் தெடுக்கப்பட்ட இளந் தொழில்கள், வளர்ந்து பக்குவமடைய முடியாதபோது, அவை ஆரோக்கியமின்றியே உயிர்வாழும் நிலைமையில், அவற்றை இயங்கவைக்கும் தொழிற் பாதுகாப்பு அகற்றப்படுவதே இல்லை. அவற்றின் இரத்த சோகைக்கு மேலும் புதுப் பாதுகாப்பு மருந்தே தரப்படுகிறது.

இத் தலைப்பை ஆய்ந்து முடிக்குமுன், ஒரேசமயத்தில் பல இளந்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமாயின், தகுந்த கவனம் செலுத்திய பின்னரே அத் தொழில்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன என்ற வாதம் வலுப்பெறுகிறது என்பதைக் குறிப்பிடல் நன்று. ஏனெனில், ஒரு நாட்டில் தனியொரு தொழில்மட்டும் வளரும்போது ஏற்படும் புறச் சிக்கனங்களோடு, அந் நாட்டிலுள்ள எல்லாத் தொழில்களுமே விரிவடையும்போது ஏற்படக்கூடிய இதர சிக்கனங்களும் அப்போது சேர்ந்துகொள்கின்றன. சாலைகள் விஸ்தரிக்கப்படுகின்றன; இருப்புப்பாதைகள் விரிவடை கின்றன; மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படுகின்றன; எல்லாத் தொழில்களுக்குமே வேண்டிய இதர வசதிகளான தொழில்நுட்ப அறிவும் பொறியியற் கல்வியும் அளிக்கப்படு கின்றன. ஆனால், ஓரளவிற்காகிலும் தொழில்கள் வளர்ச்சி பெறு வதற்குமுன் இவற்றையெல்லாம் நியாயமானவையாக நாம் ஏற்க முடியாது. 19ஆம் நூற்றாண்டின் முந்திய பகுதியில் வாழ்ந்த

ஜெர்மன் பொருளாதார நிபுணரான ஃபிரடரிக் லிஸ்ட் (Friederich List) இவற்றையெல்லாம் எண்ணித்தான் கீழ்வருமாறு எழுதினர் :

'நாட்டுச் சுதந்திரமும் அறிவு வளர்ச்சியும், கலைகளும் விஞ்ஞானமும், உள்நாட்டு வாணிபமும் வெளிநாட்டு வாணிபமும், கப்பல் துறைகளும் போக்குவரத்து அபிவிருத்திகளும், கலா சாரமும் அரசியல் அதிகாரமும் ஆகிய அனைத்துக்கும் தாயாகவும் குழந்தையாகவும் இருப்பது தொழிற்சாலைகளும் அவற்றின் உற்பத்திகளுமே. தொழிற்சாலைகளும் அவற்றின் உற்பத்திகளும் விவசாயத்தின்மீதுள்ள தளைகளை நீக்குகின்றன; விவசா யத்தை இலாபகரமான தொழிலாகச் செய்கின்றன. கச்சாப் பொருள்களின் இறக்குமதியைத் தடுப்பதால், ஒரு நாட்டின் இயற்கைச் சாதனங்கள் மட்டுமன்றி, அந் நாட்டின் அரசாங்க அதிகாரமும் பாதிக்கப்படுகின்றது. இதற்கு மாருக, தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களின் இறக்குமதியைத் தடைசெய்வதால் (ஏற்கெனவே விவசாயத்திலும் பண்பாட்டிலும் முன்னேறி, மக்கள் நிறைய வாழும் நாட்டில்) பல இயற்கைச் சக்திகளுக்கு உயிரூட்டி, அவற்றை அத் தடைகள் இயங்கவைக்கின்றன. உண்மையில் தொழிற்சாலை உற்பத்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவது, விவசாயத்தில்மட்டும் ஈடுபடும் ஒரு நாட்டில் எப்போதும் சோம்பிச் செத்துக்கிடக்கும் இயற்கைச் சக்திகளில் பெரும்பாலான வற்றை உயிரூட்டி இயங்கவைக்கிறது.'[5]

பல்வகைத் தொழில்களைப் பேணல்

தொழிற் பாதுகாப்பிற்கான வாதங்களில் பல்வேறு தொழில்களை முன்னேற்றவேண்டுமென்ற குறிக்கோளையுடைய வாதம் முக்கியமான தொன்ருகும். ஒருசில ஏற்றுமதிப் பொருள் களில்மட்டும் சிறப்புத் தேர்ச்சி செய்து, ஏனைய பல பொருள் களுக்கு அயல்நாடுகளைச் சார்ந்திருக்கும் நாடுகளைக்கொண்ட ஒருங்கிணைந்த உலகப் பொருளாதார அமைப்பு நீடித்து இருக்க முடியாது. ஏனெனில், எல்லா நாடுகளையும் பாதிக்கக்கூடிய பொருளாதார மந்தம் ஏற்பட்டாலும் சரி, அல்லது போர் மூண் டாலும் சரி, அல்லது தொழில்துறையில் முக்கியமான மாறுதல் ஏற்பட்டாலும் சரி, அந் நாடுகளின் பொருளாதார நிலை அதிர்ச்சி யுற்றுச் சீர்கேடு அடைந்துவிடும். எனவே, தொழிற் பாதுகாப்பின் மூலமாக ஓரளவு சமநிலையையும் சுய நிறைவையும் கொண்ட

[5] Friederich List அவர்களின் 'The National System of Political Economy' என்ற நூல், பக்கங்கள் 115, 175. Copyright 1922 by Longmans, Green & Co., London.

பொருளாதார அமைப்பை இந் நாடுகள் ஏற்படுத்திக்கொண்டால், இவ்விதச் சீர்கேடுகளைத் தடுக்கக்கூடும் அல்லது குறைக்கக்கூடும் என்று வாதிப்பர். இவ்வாறு பல்வேறு தொழில்களைப் பேணி வளர்ப்பதற்கு அதிகச் செலவு ஏற்படும் என்பது உண்மை. ஆனால், நீண்ட காலத்தை எடுத்துக்கொண்டால், இச் செலவால் ஏற்படும் நட்டத்தைவிடப் புறச் சூழ்நிலைகளால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக ஏற்படுத்திக்கொள்ளும் ஸ்திரமான நிலையால் தோன்றும் பலன் அதிகமாக உள்ளது.

இவ் வாதத்தைப் பெரும்பாலும் அனைவருமே ஏற்றுக்கொள்வர். சமநிலையைக் கெடுக்கக்கூடிய பொருளாதாரத்திற்குப் பதிலாக சமநிலையைக்கொண்ட பொருளாதார அமைப்பை யார் விரும்பாமல் இருக்கக்கூடும்? அபாயத்திற்குப் பதிலாகப் பாதுகாப்பை ஏற் படுத்துவதை யார் புறக்கணிக்கக்கூடும்? மேலும், ஒரு நாடு இதர நாடுகளைச் சார்ந்திராமல் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற் றிருக்கும்போது அந் நாட்டின் மதிப்பு அதிகமாயிருக்குமன்றோ? நிற்க, இரண்டு உலகப் போர்கள் நடைபெற்றபோது, பல நாடுகள், தாம் உற்பத்திசெய்த பொருள்களை அங்காடிக்கு ஏற்றுமதி செய்ய முடியாமலும், தமக்கு வேண்டிய கச்சாப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாமலும் கஷ்டப்பட்டதனால், அப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பன்னாட்டுப் பொருளாதார அமைப்பே சீர்குலைந்துவிட்டதை யார் மறுக்கமுடியும்? அவ்வாறு சீர்குலைந்த நாடுகளில் உணவுப்பொருள்களிலும் கச்சாப் பொருள்களிலும் சிறப்புத் தேர்ச்சிசெய்த ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா, சில்லி போன்ற நாடுகள்தான் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டன. எனவே, இந் நாடுகளில் பல்வேறு தொழில்களை வளர்க்கவேண்டு மென்ற வாதம் வலுவடைந்தது.

ஆனால், இவ் வாதத்தின் உண்மையான இயல்பை நாம் தெளிவாக்கிக்கொள்ளவேண்டும். இவ் வாதம், பெருமளவிற்குச் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள நாடுகளுக்குமட்டுமே பொருந்தும். அதாவது, நடைமுறையில் மிகச் சில பொருள்களைமட்டும் ஏற்றுமதி செய்து, அதேசமயம் தமக்கு வேண்டிய பல்வகை முடிவுப் பொருள்களுக்கு அயல்நாடுகளைச் சார்ந்துள்ள நாடு களுக்குமட்டுமே இது பொருத்தமான வாதமாகும். இந் நிலைமையில் பல்வேறு தொழில்களை அந் நாடுகள் வளர்க்கவேண்டு மானால், அதற்கு மிதமிஞ்சிய செலவு ஏற்படாமல் இருக்க வேண்டும். அதனோடு, பொருளாதார மந்தத்தினாலோ, யுத்தத்தி னாலோ பாதிக்கப்படாத நாடுகளாயும் அவை இருக்கவேண்டும்.

இந்த நிபந்தனையைக்கொண்டு பார்க்குமிடத்து, இவ் வாதம் அவ்வளவு பொருத்தமற்றதென்பது தெளிவாகிறது. அதிகச் சிறப்புத் தேர்ச்சிபெற்றுள்ள நாடுகள், தமது தேசிய மொத்த உற்பத்தியில் சுமார் நான்கில் ஒன்று அல்லது மூன்றில் ஒரு பாகம் வரை ஏற்றுமதி செய்வதோடு, இறக்குமதியையும் பெருமளவில் சார்ந்துள்ளன. பன்னாட்டுப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சியினால் இந் நாடுகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமானால், அவற்றின் ஏற்றுமதி இறக்குமதி அளவு அமெரிக்காவில் உள்ளதைப்போன்று, தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்திற்குக் குறைக்கப்படவேண்டியதிருக்கலாம். அவ்வாறு செய்ய வேண்டுமானால், சாதனங்களை வேறு வழிகளில் பயன்படுத்துவதற்கும், பன்னாட்டு வாணிபத்தினால் ஏற்படும் பெரும்பாலான அனுகூலங்களைப் புறக்கணிப்பதற்கும் மிதமிஞ்சிய செலவு ஏற்படும். எனவே, போரினாலும் பொருளாதார மந்தத்தினாலும் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டுமென்பதற்காக, பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கும், மேலும் தொழில்மயமாக ஒரு நாடு முன்னேறுவதற்கும், பல்வேறு தொழில்களை வளர்ப்பதற்குப் பதிலாக, உகந்தமுறையில் இளந் தொழில்களைப் பேணுவதற்காக மேற்கொள்ளும் கொள்கையே சிறந்ததெனத் தெரிகிறது. (உண்மையில் கடந்த போரின்போது மூலப்பொருள்களை உற்பத்தி செய்த நாடுகள்தாம் பெரிதும் பாதிக்கப்பட்டனவெனினும், அப் போர்க் காலத்தில்தான் இந் நாடுகள் அதிகச் செழுமையையும் பொருளாதார முன்னேற்றத்தையும் பெற முடிந்தது.)

வேலை வாய்ப்புக் குறையாமல் பார்த்துக்கொள்வது

1930ஆம் ஆண்டுகளைப் போன்று மிக மோசமான வேலையின்மை நிலவும் காலத்தில், தொழில் பாதுகாப்புக் கொள்கையின் மூலம் வேலை வாய்ப்பைப் பராமரிக்கவும், வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்கவும்கூடிய வாதமாக இவ் வாதம் பயன்படுத்தப்படுகிறது. இறக்குமதி வரியானது, இறக்குமதியைக் குறைப்பதன்மூலம் அவ் விறக்குமதித் தொழிலை வளர்க்கும் நாடுகளில் வேலைவாய்ப்பை உயர்த்துகிறது. அவ்வாறு வேலை வாய்ப்பிற்கு ஊக்கமளிக்கப்படும்போது, வேலை வாய்ப்பை உருவாக்கும் முயற்சிகள் பிற தொழில்களுக்கும் ஓரளவு பரவக்கூடும். அதே போல் இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென்று முதலீடு செய்யும்போது, வேலை வாய்ப்பை அதிகரிக்கக்கூடிய மற்றொரு சக்தியும் தோன்றுகிறது.

இவ் வாதத்தை அப்படியே எடுத்துக்கொண்டால், தனிப்பட்ட முறையில் இது உண்மையானதாகவே தெரியும். எனினும்,

வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு இதுதான் சிறந்த வழியா என்பது சந்தேகந்தான். முதலாவது, பெருமளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய திறனுள்ளதாக இது இல்லாமல் இருக்கலாம். புதிதாக இறக்குமதி வரி விதித்து, தன் இறக்குமதி அளவை ஒரு நாடு குறைத்துக்கொண்டால், அதன் ஏற்றுமதிப் பொருள்களை வாங்கும் நாடுகளும் அவ்வாறே தமது இறக்குமதி அளவைக் குறைத்துக்கொள்ளும். அப்போது, அயல்நாட்டில் வேலைக்குறைப்புத் தொடங்கிவிடுகிறது. அவ்வாறு அயல்நாட்டில் வேலைவாய்ப்பும் வருமானமும் குறையும்போது, அவை தம் இறக்குமதிச் செலவை, அதாவது நம்நாட்டின் ஏற்றுமதியைக் குறைத்துக் கொள்ளும். இவ்வாறு, இறக்குமதியை முதலில் கட்டுப்படுத்திய நமது நாட்டின் நடவடிக்கைக்கு எதிராக அயல்நாடுகள் தமது இறக்குமதியைக் குறைத்துக்கொள்வதில்லை என்று வைத்துக் கொண்டால்கூட, நமது இறக்குமதிக் குறைப்பைச் சரிக்கட்டுவதற்குப் போதுமான அளவில் அவை தமது இறக்குமதியைக் குறைத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பை அளிக்கிறது. இரண்டாவது, நமது இறக்குமதியை நாம் குறைக்கும்போது, இதைப் பழிவாங்கும் முறையில் நமது ஏற்றுமதியை வெளிநாடுகள் பெருமளவில் குறைத்துக்கொள்ளும் என்பது உறுதி. உண்மையில், உள்நாட்டில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கென்று இறக்குமதித் தீர்வை விதிக்கும் நாடு, தனது வேலையின்மையை ஏற்றுமதி செய்வதுபோலாகும். இவ்வாறு, ஏனைய நாடுகளைப் பாதிக்கும் கொள்கைக்கு ஏற்றவாறு பிற நாடுகளும் உடனடியாக தத்தம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இறுதியாக, இறக்குமதித் தீர்வையின்மூலம் வேலைவாய்ப்பை முன்னேற்றுவது என்பது, ஏதோ தாற்காலிகமாக இலாபம் பெறுவதற்காக, தம் சாதனங்களை வேறு வழிகளில் நிரந்தரமாகப் பயன்படுத்தவேண்டிய நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, இவ் வகை நிவாரணம் செலவுமிக்கதாகத் தோன்றுகிறது.

வேலையின்மை நிலையைப் போக்க விரும்பும் நாடு, தனது செலாவணிக் கொள்கையையும் (monetary policy) நிதிக் கொள்கையையும் (fiscal policy) கையாள்வது மற்றொரு வழியாகும். இக் கொள்கை வெற்றிகரமாகச் செயற்படுமாயின், அதனால் உயரக்கூடிய வருமானத்தைக்கொண்டு இறக்குமதியை அதிகரிக்கக் கூடும். அப்போது அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக் குறையும் அயல்நாட்டுச் சேமநிதி நட்டமும் ஏற்படும். இது, வேலையின்மை உள்நாட்டில் மட்டும் உள்ளதா அல்லது உலகெங்கும் உள்ளதா என்பதைப் பொறுத்தது. அந்த நாட்டில் மட்டும் வேலையின்மை இருந்தால், முன்னிருந்த அளவிற்கு வருமா

னத்தையும் வேலைவாய்ப்பையும் உயர்த்துவதனால்மட்டும் செலுத்து நிலை பற்றுக்குறை ஏற்பட்டுவிடாது. வேலையின்மை உலகெங்கிலும் இருக்குமாயின், பிற நாடுகளும் பண, நிதிக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதால், பல நாடுகளின் வருமானமும் இறக்குமதியும் ஒருங்கே உயரும். எனவே, எந்த நாட்டிற்குமே சேமநிதி நட்டம் ஏற்படவேண்டியதில்லை. அப்படி நம் நாடுமட்டும் நிலைமையைச் சமாளிக்க முற்பட்டால், உள்நாட்டில் பெருக்கக் கொள்கையோடு, இறக்குமதிகளின் அளவை நேரடியாகக் கட்டுப்படுத்துவதையும் சேர்த்துக் கையாள்வது நல்லது. அப்போதுதான் வருமானம் உயரும்போது, இறக்குமதிகளும் கூடவே உயரமுடியாதபடி கோட்டா முறைகள் தடுப்பதனால் இறக்குமதி அளவு மாறாம லிருக்கும். இதற்குப் பதிலாக, இறக்குமதி வரிகளை மட்டும் பயன் படுத்தியிருந்தால், அவை இறக்குமதிகளைக் குறைத்து, வெளி நாட்டுப் பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும். தவிர, செலுத்து நிலையைப் பாதுகாக்கும் தனிப்பட்ட குறிக் கோளுக்காக விசேஷமாகக் கோட்டாக்கள் பயன்படுத்தப்பட்டால், அவற்றைச் சிறிது காலம் கழித்து நீக்கிவிடலாம். ஆனால், இறக்குமதி வரிகளை ஒருமுறை விதித்துவிட்டால், அவற்றை அகற்றுவது கடினம்.

வாணிப வீதத்தைச் சாதகமாக்குவது

ஒரு நாடு தனக்கு ஏற்றுமதிசெய்யும் நாட்டுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்பதற்காக, அவற்றின்மீது இறக்குமதி வரியை விதிக்கக்கூடும் என்று சில பொருளாதார அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். அவ்வாறு நேர்ந்தால், இறக்கு மதித் தீர்வை விதிக்கும் நாடு முன்பைவிடச் சாதகமான விலையில் இறக்குமதி செய்வதன்மூலம் இலாபம் பெறுகிறது. அதாவது, குறிப்பிட்ட அளவு ஏற்றுமதியைக்கொண்டு முன்பைவிட அதிக அளவு இறக்குமதி செய்யக்கூடும்.

ஆனால், ஏற்கெனவே நாம் பார்த்ததுபோல், இறக்குமதிப் பொருள்கள் எந்த விலையில் அளிக்கப்படும் என்பது, அப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாட்டின் அளிப்பு நிலைமைகளைப் பொறுத்தது. அந் நாட்டில் இப் பொருள்களின் அளிப்பு அதிக நெகிழ்ச்சியுடையதாக இருந்தால் (அதாவது, ஏறத்தாழ எல்லையற்ற நெகிழ்ச்சியுடைதாகவோ அல்லது மாறாச் செலவுடைய தாகவோ இருந்தால்), அப் பொருள்களின் இறக்குமதியின்மீது தீர்வை விதிக்கும்போது அவற்றின் விலைகள் இறங்காமலிருக்கும்; அல்லது அவ்வாறு இறங்கினாலும் சிறிய அளவுதான் இறங்கும். அவற்றின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருந்தால் (அதாவது,

தீவிரமாக வளர்ந்துசெல்செலவுடையதாக இருந்தால்), அவற்றின் இறக்குமதியைக் குறைக்கும்போது அவற்றின் உற்பத்திச் செலவு குறையும்.[6]

மேலும், இவ்வாறு செய்வதால் இறுதியில் நிகர இலாபம் கிடைக்குமா என்பது சந்தேகந்தான். இறக்குமதித் தீர்வையால் ஏற்படும் இரண்டு பாதகமான விளைவுகளை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்: (1) சிக்கனமற்ற வேறு வழிகளில் சாதனங்களைப் பயன் படுத்த வேண்டியுள்ளது; (2) நுகர்வோரின் திருப்தியில் இதனால் நஷ்டம் ஏற்படுகிறது. மலிவான விலையில் இறக்குமதி செய்வதால் ஏற்படும் இலாபத்தோடு, இவ்வித நட்டத்தையும் நாம் கணக்கிட வேண்டும். இவ்வித நட்டம் இருக்கும்வரை, இறக்குமதித் தீர்வையால் ஒரு நாட்டிற்கு அவ்வளவாக நன்மை ஏற்படாது.

இறக்குமதி வரி விஷயங்களில் ஒரு நாடு மேற்கொள்ளும் கொள்கையால் பிற நாடுகள் பாதிக்கப்படுமாதலால், அந் நாடு இறக்குமதித் தீர்வையை விதிக்கும்போது, அதைச் சரிக்கட்டு வதற்கென்று பிற நாடுகளும் இறக்குமதித் தீர்வை விதிக்கக்கூடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவ்வாறு பிற நாடுகளும் இறக்குமதித் தீர்வை விதித்தால், நமது நாட்டின் ஏற்றுமதி குறைந்துவிடும்; அப்போது அதன் வாணிப வீதம் (அதன் ஏற்றுமதி விலைக்கும் இறக்குமதி விலைக்குமுள்ள வீதம்) பழைய நிலைக்கே திரும்பிவிடும். அவ்வாறாயின், மேலெழுந்தவாரியாகத் தோன்றும் இலாபம்கூட—நாம் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ள நட்டத்தைக் கணக்கிடாத இலாபம்—மறைந்துவிடும். இறுதியில் நுகர்வோர் முன்பைவிடக் குறைந்த அளவுத் திருப்தியை அடைவதும் சாதனங்கள் மோசமான வழியில் பயன்படுவதுந்தான் மிச்சம்.

பேரத்திற்காக இறக்குமதி வரிகள்

ஏற்கெனவே இறக்குமதி தீர்வை விதித்துள்ள நாடு, தான் ஏற்றுமதி செய்யும் பொருள்களின்மீது அயல் நாட்டவர் தம்மை விடக் குறைந்த தீர்வை விதிக்க வேண்டுமென்ற சாதகமான பேரத்திற்கு ஓர் உபாயமாக இறக்குமதிக் கொள்கையைக் கையாளக்கூடும். அமெரிக்காவின் வாணிப ஒப்பந்தத் திட்டங்கள், இவ்வாறு பேரம் பேசும் சக்தியுள்ளதொரு கருவியாகவே நடைமுறையில் இருந்து வருகின்றன. இறக்குமதித் தீர்வையைச்

[6] மேலும் இப் பொருள்களுக்குள்ள வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சியுடையதாக இருப்பின், மலிவான விலையில் அப்பொருள்களை வெளிநாடுகள் அதிகமாக வாங்கமுடியுமாதலால் அவற்றின் விலை குறையாது.

சமரசமான முறையில் குறைத்துக்கொள்ளும் அடிப்படையில்தான் அவை அமைந்துள்ளன.

தடையிலா வாணிபத்தை மேற்கொள்ளும் நாடோ, அல்லது வருமான நோக்கத்திற்கென்று குறைந்த தீர்வை விதித்துள்ள நாடோ, இவ்வகை வழியை மேற்கொள்ள இயலாது. எனவே, தொழில் பாதுகாப்பிற்கான இறக்குமதி வரிகளை விதிப்பது, ஒரு நாட்டின் பொருள்களுக்கு அயல் நாட்டு அங்காடிகளைத் திறந்து விடுவதற்கான திறவுகோலைப் போன்றது என்று சிலர் வாதிப்பர். இவ் வாதத்தில் ஓரளவு உண்மை இருக்கிறது. எனினும், தடையிலா வாணிபமோ அல்லது மிகக் குறைந்த இறக்குமதி வரியோ உள்ள நாட்டிற்குத்தான் இது ஓரளவு பொருத்தமானதாகும். ஆனால், இதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்களைக் கெடுத்துவிடக் கூடிய சக்திகளும் உள்ளன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எந்தக் குறிக்கோளுக்காக இறக்குமதி வரிகள் விதிக்கப்படுகின்றனவோ, அந்தக் குறிக்கோளுக்கு மாறான சுயநல அக்கறைகளைப் பேரத்திற்காக விதிக்கப்படும் வரிகள் ஏற்படுத்திவிடும் என்பது உறுதி. பேரத்திற்கான இக்கருவி, அயல் நாடுகளிலிருந்து சாதகமான வரிச் சலுகைகளைப் பெறுவதற்காக அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, அவ்வரசாங்கத்திடமிருந்து இன்னும் அதிகமான பாதுகாப்பைப் பெறுவதற்காக உள்நாட்டுத் தொழில்களால் அரசாங்கத்தின்மீதே பயன்படுத்தப்படலாம்.

அயல் நாடுகளில் மலிவாகப் பொருள்களைக் குவிப்பதற்கு எதிராக

அயல் நாடுகளில் மலிவாகப் பொருள்கள் குவிவதை (dumping) தடுப்பதற்கான வழியில் பல நாடுகளின் இறக்குமதி வரிக் கொள்கை அமைந்துள்ளது. இவ் வழியை மேற்கொள்ளும் பழக்கம், மலிவாகப் பொருள்கள் குவிக்கப்படும் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களின் எதிர்ப்பைக் கிளறிவிடும். இந்த எதிர்ப்பு, உண்மையானதாகவோ அல்லது கற்பனையானதாகவோ இருக்கலாம்.

உற்பத்திச் செலவைக் காட்டிலும் குறைந்த விலைகளில் அயல் நாடுகளில் விற்பதுதான் 'டம்பிங்' என்ற கருத்துப் பெரும்பாலும் நிலவி வருகிறது. ஆனால், உண்மையில், 'டம்பிங்' என்னும் சொல் ஏற்றுமதிச் செலவு, வரிகள், இன்னும் இதர செலவுகளெல்லாம் இருந்துங்கூட, உள் நாட்டில் விற்கும் விலையைக் காட்டிலும் தாழ்ந்த விலையில் அயல் நாடுகளில் விற்பதைத்தான் குறிப்பிடுகிறது. சுருங்கக் கூறின், உள்நாட்டு அங்காடிக்கும் வெளிநாட்டு அங்காடிக்கும் பேதங் காட்டுவதுதான் 'டம்பிங்' எனப்படும். எனவே, அயல் நாட்டு விலை, உள் நாட்டு விலையைக்

காட்டிலும் தாழ்வாக இருப்பதுதான் டம்பிங் எனப்படுமே தவிர, உற்பத்திச் செலவுக்கும் குறைவான விலையில் அயல் நாடுகளில் விற்பது ஆகாது.

டம்பிங் செய்வதில் பலவகை இருப்பதால், அது சிக்கல் நிறைந்த பிரச்சினை ஆகிறது. ஏற்றுமதி செய்வோர், பேதங்காட்டும் சர்வாதீன வலிமை பெற்றிருக்கும்போது (8ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்) டம்பிங் தொடர்ந்து நிரந்தரமானதாக இருக்கலாம். இரண்டு அங்காடிகளில் விற்பனை செய்யும்போது, உள்நாட்டு (சர்வாதீன) அங்காடியில் இருப்பதைவிட வெளிநாட்டு அங்காடியில் தேவை நெகிழ்ச்சி அதிகமாயிருக்குமானால், வெளிநாட்டு அங்காடியில் குறைந்த விலையில் விற்பதன்மூலம் இலாபம் கிடைக்கலாம். மாறாக, அயல் நாட்டுப் போட்டியைச் சிதைக்க வேண்டுமென்பதற்காக விலையைக் குறைப்பதன்மூலம் டம்பிங் செய்யும்போது, அது தொடர்ச்சியானதாக இல்லாமல் விட்டு விட்டுத் தோன்றுவதாக இருக்கும்.

டம்பிங் செய்யப்படும் நாட்டின் கண்ணோட்டத்தினின்று பார்க்குமிடத்து, இவ்வாறு விட்டு விட்டுச் செய்யப்படும் டம்பிங் தான் அந் நாட்டிலுள்ள நிறுவனங்களுக்குப் பெருங்கேடு விளைவிக்கக்கூடியதாயும், ஒருவேளை அந் நிறுவனங்களையே நசுக்கி விடக்கூடியதாயும் உள்ளது. நுகர்வோருக்குக் கிடைக்கும் பலன்கள் நிலையின்றி மறைந்துபோகக்கூடியதாகத்தானிருக்கும். அதே சமயம் தொழில்களின்மீது ஏற்படும் விளைவுகள் நிரந்தரமானவைகளாய் இருக்கும். டம்பிங் என்பதை உற்பத்திச் செலவிற்கும் குறைவாக விற்றல் என்ற பொருளில் கொள்ளாமல், திட்டவட்டமாக வரையறுப்பதற்குக் கவனம் செலுத்தப்படுமாயின், டம்பிங் செய்வதைத் தடுக்கும் வழியில் வரிகளை விதிப்பது நியாயமானதாகவே தோன்றும். இவ்வித வரிகள் அமெரிக்காவிலும் கனடாவிலும் நன்கு செயற்படுத்தப்பட்டதாகவே தோன்றுகிறது.

மாறாக, நிரந்தரமாக டம்பிங் செய்வதன் விளைவுகளைக் கொண்டு பார்க்குமிடத்து, அது அயல் நாட்டவர் மலிவாக உற்பத்தி செய்து விற்பனை செய்வதைப் போன்றதே என்பது புலனாகும். அப்போது டம்பிங் செய்யப்படும் பொருள்களை நுகர்வோர், எப்போதும் மலிவாகவே அவற்றைப் பெறுவர். அவ்வாறு டம்பிங் செய்யும் நாட்டிற்குப் போட்டியாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் இருந்தால், அவர்கள் நிரந்தரமானதொரு சூழ்நிலைக்குத் தம்மைச் சரிப்படுத்திக்கொள்ளக்கூடும். டம்பிங் செய்யப்படு

வதற்கும் தொழில் பாதுகாப்பிற்கும் தொடர்பினை ஏற்படுத்தக் கூடிய வாதம் ஒன்றும் கிடையாது. அவ்வாறு ஒரு வாதத்தை உருவாக்க முடிந்தால், அது ஏனைய ஆதாரங்களைக் கொண்ட தாகத்தான் இருக்கமுடியும்.

தேசியப் பாதுகாப்பு

சில தொழில்கள், தேசியப் பாதுகாப்பிற்கு அவசியமானவை என்று பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பிட்டதொரு தொழிலின் உற்பத்திப் பொருள்கள் இராணுவத்தின் வலிமைக்கு இன்றியமையா தவைகளாக இருக்க, பாதுகாப்பின்றி அத் தொழில் நடைபெற முடியாதாயின், அதை இறக்குமதி வரிகளால் பேணி வளர்க்க வேண்டும் என்பது திண்ணம். ஆனால், தேசியப் பாதுகாப்பிற் கென்று தொழில்களை முன்னேற்ற வேண்டுமென்ற விருப்பம், தேசம் வலிமையுடையதாயிருக்க வேண்டும், பாதுகாப்புடையதா யிருக்க வேண்டும், பிறநாடுகளால் அழிந்துவிடாமலிருக்க வேண் டும் என்ற குறிக்கோள்களையுடையது. இக் குறிக்கோள்கள் அனைத்தும் பொருளாதார வரம்பிற்கு அப்பாற்பட்டவையாகும்.

எனினும், நவீன காலத்தில் எழக்கூடிய போர் உலகிற்கே பொதுவானதாயிருப்பதால், ஒரு பொருளாதாரம் செயற்படுவதற்கு அவசியமான எந்தத் தொழிலும் தேசியப் பாதுகாப்பிற்கு இன்றி யமையாத தொழிலாகிவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, ஒரு நாடு எல்லாவற்றிலுமே சுய நிறைவைக் கொண் டிருந்தால்தான் இராணுவப் பாதுகாப்பு அமைய முடியும் என் பதையே இவ் வாதம் குறிப்பிடுகிறது. எல்லாவற்றிலும் சுய நிறைவு பெறவேண்டுமென்பது, எந்த நாடுமே அடைய முடியாத தொரு குறிக்கோளாகும். அமெரிக்காவும் சோவியத் யூனியனும் மட்டும்தான் ஓரளவிற்கு இக் குறிக்கோளை அடைய முடியும்.

மேலும், பெரும்பாலான நாடுகளைப் பொறுத்தவரை, ஓரளவு சுயநிறைவை அடைய வேண்டுமானால்கூட, தொழில் பாதுகாப்பு மிகப்பெருமளவில் வேண்டியதாயுள்ளது. ஆனால், பாதுகாப்பு என்றால் திறமைக் குறைவு என்று பொருள்; திறமைக் குறைவு ஒருகாலும் தேசியப் பாதுகாப்பிற்குத் துணை ஆகாது.

'இன்றியமையாத தொழில்கள்' என்பதை ராணுவத்திற்கு வேண்டிய ரடார் எந்திரக் கருவிகள், விமானங்கள், பார்க்கும் கருவிகள், வெடிமருந்துகள் போன்ற நுணுக்கமான பொருள்களை உற்பத்திசெய்யும் தொழில்களை மட்டும் குறிப்பிடுவதாகக் குறுகிய பொருளில் வரையறை செய்வோமாயின், இத் தொழில்களை

அவசியம் வாழவைப்பதற்குத் தொழில் பாதுகாப்பு வழிகளைக் காட்டிலும் சிக்கனமான வழிகள் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இவ்வகைத் தொழில்களைத் தேசியப் பாதுகாப்புத் திட்டத்தின் ஓர் அம்சமாக அரசாங்கமே ஏற்று நடத்தலாம்; அல்லது பொது நிதியிலிருந்து உதவிப் பணம் அளிப்பதன்மூலம் அவற்றைப் பராமரிக்கலாம். இவ் விரண்டில் முதலாவது வழியை மேற்கொண்டால், அரசாங்கத்திற்குத் தேவையான படைக் கருவிகளை அளிக்கும் இதர தொழில்களில் இவையும் உள் ளடங்கும். அப்போது பொதுமக்களுக்குத் தேவையான பார்க்கும் கருவிகள் போன்ற பொருள்கள் ஒன்றில் இறக்குமதி செய்யப்படும், அல்லது தொழில் பாதுகாப்பின்றியே அவை தனியார் துறையில் இயங்குமாயின், அத் தொழில்களால் உற்பத்தி செய்து அளிக்கப் படும். இரண்டாவது வழியின்படி, ராணுவத்திற்குமட்டும் போது மான அளவு உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்குப் பண உதவி அளிக்கப்படலாம்; அல்லது எல்லா மக்களுக்குமே தேவைப்படும் அளவிற்கு உற்பத்தி செய்யப் பண உதவி தாராளமாகத் தரப் படலாம்.

தொழில் பாதுகாப்புக் கொள்கையின்படி, பாதுகாப்புச் செலவை நுகர்வோர் மட்டுமே ஏற்கின்றனர். தேசியப் பாது காப்பிற்கு இன்றியமையாத தொழில்களால் அந் நாட்டு மக்கள் அனைவருமே பயன்பெறுவதால், பொது வரிப் பணத்திலிருந்துதான் அச் செலவினைச் செய்யவேண்டுமே தவிர, நுகர்வோர்மீது மட்டும் சுமத்தக்கூடாது. எனவே, நியாயத்தின் அடிப்படையிலும் சிக்கனத்தின் அடிப்படையிலும் பார்க்குமிடத்து, இன்றியமையாத தொழில்களை ஒன்று அரசாங்கமே நடத்தவேண்டும்; அல்லது அவற்றிற்குப் பண உதவி தர வேண்டும் என்பதே சிறந்த வழியாகும்.

தொழில் பாதுகாப்பிற்கான பொருளற்ற வாதங்கள்

இதுவரை நாம் ஆய்ந்த தொழில் பாதுகாப்பிற்கான வாதங்கள் அனைத்தும் ஓரளவு போலியான வாதங்களாகும். இவைகளில் ஏதாவதொரு வாதம் பொருத்தமானதாயிருக்க முடியு மானால், அது ஏதோ ஓரளவிற்குமட்டுமே உசிதமானதாக இருக்கும். அப்போதுகூட, எந்தச் சூழ்நிலைகளில் பாதுகாப்புத் தேவை என்று அது கூறுகிறதோ, அந்தச் சூழ்நிலைகளுக்கு அதை விடச் சிறந்த மாற்று வழிகள் உள்ளன. இவை அனைத்தும் போலி வாதங்களாதலால் (ஒரு வேளை நாட்டுப் பாதுகாப்பு வாதத்தைத்

தவிர) இவற்றில் எதையுமே மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இளந் தொழில் பாதுகாப்பு வாதம்கூட ஓரளவு மக்களது ஆதரவு பெற்ற தாகும். அது பொதுமக்களுடைய ஆதரவைப் பெற்றதினாலேயே அதன் மதிப்புக் கெட்டுவிட்டது. எந்த வாதத்திற்கு அரசியல் ஆதரவு அதிகமோ, அதில்தான் பொருளாதார உண்மை மிக்க குறைவு.

பொதுவாக, தொழில் பாதுகாப்பிற்கு ஆதரவாகக் கூறப்படும் வாதங்கள் அனைத்தும் சுயநலத்தையும் வெறுப்பையும் ஆதார மாகக் கொண்டவையே தவிர, பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டவையல்ல. புதிதாக இறக்குமதி வரிகளை விதிக்கும் சமயத்தைக்காட்டிலும், ஏற்கெனவேயுள்ள வரிகளை அதிகரிக் கவோ அல்லது அவற்றைக் குறைப்பதைத் தடுக்கவோ முற்படும் சமயத்தில்தான், இவ் வாதங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படு கின்றன. உதாரணமாக, இறக்குமதி வரிகளை ரத்து செய்து விட்டதாலோ, அல்லது போட்டி நிலைமை மோசமாகிவிட்டதாலோ திறன் குன்றிவிட்டதோர் உள்நாட்டுத் தொழில், முன்பைவிடத் தீவிரமான வெளிநாட்டுப் போட்டியால் பாதிக்கப்படும் போது பலருக்குத் தாற்காலிகமாகவாகிலும் கஷ்டம் நேரிடும். அப்பொழுது, அக் கஷ்டத்தை மிகைபடக் கூறுவதன்மூலம் பிற மக்களின் அனுதாபத்தைப் பெற முற்படுவர். இதனால், தனிப் பட்ட சிலரது நலம் முக்கியமானதாகக் கருதப்படுவதோடு, தேசிய நலன் புறக்கணிக்கப்பட்டுவிடுகிறது. இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு பின்வரும் வாதங்களைப் பார்ப்போம்.

‘ஏழை உழைப்பு வாதம்’ (Pauper Labour Argument)

நாட்டிற்கு நாடு கூலி வீதங்கள் மிகவும் ஏற்றத்தாழ்வுடை யனவாயுள்ளன என்பது அனைவருக்கும் தெரியும். அமெரிக்காவில் நிலவும் கூலியின் சராசரி அளவு, பிரிட்டனிலிருப்பதைவிட இரண்டு மடங்காகவும், இத்தாலியிலுள்ளதைக்காட்டிலும் சுமார் மூன்று, நான்கு மடங்காகவும், ஜப்பானில் நிலவுவதைவிட ஆறு ஏழு மடங்காகவும் உள்ளது. இந்த உண்மைகளை வைத்துக்கொண்டு, ஏழை உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், உயர்ந்த கூலி பெறும் ஊழியர்கள் செய்யும் உற்பத்திப் பொருள்களைவிடக் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்று முடிவு செய்வது இயல்பு. எனவே, இத்தகைய ‘ஏழை உழைப்பின் போட்டியிலிருந்து அமெரிக்கத் தொழிலாளரைப் பாதுகாக்க’ அல்லது ‘அமெரிக்க வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதற்கு’ இறக்குமதி வரிகள் அவசியம் என்று கூறப்படுகிறது.

உயர்ந்தகூலி நிலவும் நாடு, குறைந்தகூலி நிலவும் நாட்டுடன் போட்டியிட முடியாது என்பது அபத்தம். பன்னாட்டு வாணிபத்தின் கோட்பாடுகளையும் உண்மைகளையும்பற்றி ஒன்றுமே அறியாதவன்தான் இந்த வாதத்தைத் துணிந்து கூறுவான். உண்மையில் ஆண்டிற்காண்டு மேன்மேலும் உயர்ந்த ஊதியம் பெறும் அமெரிக்கத் தொழிலாளரின் உற்பத்திப் பொருள்கள் மலிவான உழைப்பால் செய்யப்படும் பொருள்களோடு போட்டியிட்டு விற்கத்தான் செய்கின்றன. கூலி உயர்வாக இருந்தாலும் கூட, உற்பத்திச் செலவு குறைவாக இருக்கக்கூடிய தொழில்கள் உள்ளன.

பன்னாட்டு வாணிபத்தின் அடிப்படையான கோட்பாடுகளைக் காட்டித்தான் இந்த உண்மையையும், ஏழை உழைப்பு வாதத்திலுள்ள தவற்றையும் விளக்க முடியும். உயர்ந்த ஊதியத்தைக் கொண்ட உழைப்பு, மலிவான உழைப்போடு எளிதாகப் போட்டியிட முடியும் என்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, உழைப்பு என்பது, உற்பத்திக்காரணிகளில் ஒன்றுதான். அதோடு மூலதனம், இயற்கைச் சாதனம் போன்ற பிற காரணிகள் சேர்க்கப்படும் விகிதம் பண்டத்திற்குப் பண்டம் வெகுவாய் மாறுபடுகிறது என்பதையும், காரணிகளின் விலை நாட்டிற்கு நாடு மாறுபடுகிறதென்பதையும் நாம் அறிவோம். எனவே, எந்த நாடுகளில் மலிவாக மூலதனம் கிடைக்கிறதோ, அந்த நாடுகளில் மூலதனத்தை அதிகம் பயன்படுத்தும் பண்டங்களை மலிவாக உற்பத்தி செய்யலாம். அதேபோல, நிலவளம் மிகுந்த நாடுகளில் நிலத்தை அதிகமாகப் பயன்படுத்தும் பண்டங்கள் மலிவாக இருக்கும்; கூலி குறைவாயுள்ள நாடுகளில் உழைப்பை அதிகம் பயன்படுத்தும் உற்பத்திப் பண்டங்களின் விலை குறைவாக இருக்கும்.

எந்தப் பொருள்களின் உற்பத்தியில் குறைந்த அளவு மூலதனத்தோடும் நிலத்தோடும் அதிக உழைப்புப் பயன்படுத்தப்படுகின்றதோ, அதாவது எவற்றின் உற்பத்திச் செலவில் பெரும்பகுதி கூலியாகச் செலுத்தப்படுமோ, அவற்றைமட்டுந்தான் கூலி மலிவாயுள்ள நாடு, அதிகக் கூலியுள்ள நாடுகளைவிட மலிவாக உற்பத்தி செய்யும். அத்தகைய பொருள்களை அதிகக் கூலியுள்ள நாடு உற்பத்தி செய்ய முயல்வது அறிவீனம். அதுபோல, ஏழை உழைப்பு வாதம் கூறுவதுபோல், அதிகமான கூலியுள்ள நாடு குறைந்த கூலியுள்ள நாட்டைக்காட்டிலும் எல்லாப் பொருள்களிலுமே பாதகமான நிலையில் உள்ளது என்று கூறுவதும் அறிவீனமாகும்.

இவ் வாதத்தில் மற்றொரு தவறும் உண்டு. உழைப்பு ஒன்றை மட்டுமே பயன்படுத்தி உற்பத்தி செய்தாலுங்கூட, அதிகக் கூலியுள்ள நாடு, குறைந்த கூலியுள்ள நாடு ஆகிய இவ்விரண்டின் கூலி விகிதங்களைக்காட்டிலும் அவற்றின் உற்பத்தித் திறன் விகிதம் அதிகமாயிருந்தால், அதிகக் கூலியுள்ள நாடு குறைந்த கூலியுள்ள நாட்டோடு போட்டியிடக்கூடும். இதற்கு ஓர் எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். A என்ற நாட்டின் கூலி B என்ற நாட்டின் கூலியைவிட மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாகக் கொள்வோம். அதேசமயம் A-யின் தொழிலாளர்கள் செருப்பை உற்பத்தி செய்வதில் B-யின் தொழிலாளர்களைக்காட்டிலும் மூன்றுமடங்கு அதிகத் திறமையுள்ளவர்களாக இருந்தால், இரு நாடுகளுமே அதே செலவில் செருப்பை உற்பத்திசெய்ய முடியும். அவ்வாறின்றி, B-யின் கூலிக்கும் A-யின் கூலிக்குமுள்ள விகிதத்தைக் காட்டிலும் அவற்றின் உற்பத்தித் திறனின் விகிதம் அதிகமாயிருந்தால், அதாவது ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து என்று இருந்தால், A-யின் உற்பத்திச் செலவு B-யின் செலவைக் காட்டிலும் குறைவாக இருக்கும்.

ஒரு நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அதிக உற்பத்தித்திறன் உடையவர்களாக இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அந் நாட்டின் தொழில் நிருவாகம் சிறந்ததாக இருக்கலாம்; தொழிலாளர்கள் நல்ல உணவு அருந்தலாம்; அல்லது அவர்கள் கல்வி பெற்றவர்களாயிருக்கலாம்; அல்லது அந் நாட்டில் அதிகத் தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாம்; உற்பத்தித்திறன் அதிகமாயிருப்பதற்கேற்ற சமூகச் சூழ்நிலை அங்கிருக்கலாம். இவ்வாறு, திறனை அதிகரிக்கக்கூடிய காரணிகள் உள்ளமையால் A-யின் சராசரிக் கூலி B-யைவிட அதிகமாக இருக்கக்கூடும். இந்தக் காரணிகள் எத் தொழில்களில் வலிமையுள்ளனவாக உள்ளனவோ, அவற்றில் A-யின் தொழிலாளிகள் பிற தொழில்களை விட அதிகத் திறன் பெற்றவராயிருப்பர். எனவே, அத் தொழில்களின் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும். எந்தத் தொழில்களில் B-யைவிட A-யின் தொழிலாளர்களின் திறமை மூன்று மடங்கிற்கும் குறைவாக உள்ளதோ, அவற்றில் B-யின் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும்.

காரணிச் சேர்க்கை மாறுதல்களையும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய காரணிகளையும் சேர்த்துப் பார்த்தால், அமெரிக்காவைப் போன்று அதிகக் கூலியுள்ள நாடு, குறைந்த கூலி நிலவும் நாட்டோடு போட்டியிடக்கூடிய திறன் பெற்றிருப்பதன் காரணம் விளங்கும்.

தம்முடைய தொழிலாளர்கள், தம் நாட்டின் கூலியைவிட அதிக விகிதத்தில் திறமையுடையவர்களாயிருந்தாலொழிய, காரணிச் சேர்க்கையால் உழைப்பு முக்கியமாக உள்ள தொழில்களில் அதிகக் கூலியுள்ள நாடுகள் போட்டியிட முடியாது. ஆனால், ஏழை உழைப்பு வாதத்தில் இவ்வித நிபந்தனை ஏதுமில்லை. எல்லாச் சூழ் நிலைகளுக்கும் பொதுவாக அது கூறப்படுகிறது. எனவே, அது தவறு.

ஒரு திருத்தம் : ஒரே ஒரு விஷயத்தில்தான் ஏழை உழைப்பு வாதத்தில் ஒரு சிறப்பு உள்ளது. அதாவது, இறக்குமதி வரிகள், ஒரு நாட்டில் நிலவும் கூலி குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளும் என்று அது கூறுகிறது. ஆனால், எந்த நாட்டில் தொழிலாளிகள் வேண்டிய அளவு இல்லையோ, அந்த நாட்டில்தான் இவ்வாறு நடைபெற முடியும். இதற்குக் காரணம், இந்த வாதத்தைத் திருத்திப் பார்த்தால் தெரியும். உண்மையில் ஏழை உழைப்பு வாதத்தை ஆரம்பித்தவர்கள் இந்தக் காரணத்தை அறியவே இல்லை.[7]

ஏராளமான மூலதனமும், போதாத அளவு உழைப்பாளிகளும் கொண்டுள்ளதொரு நாடு தடையிலா வாணிபக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது மூலதனம் அதிகம் தேவைப்படும் மோட்டார்காரைப் போன்ற பொருள்களை அந் நாடு சிறப்பாக உற்பத்தி செய்யும். இப்போது உழைப்பு அதிகம் தேவைப்படும் துணிமணிகள் போன்ற பொருள்களில் அந் நாடு இறக்குமதி வரி விதித்தால், மோட்டார்கார் தொழில் சுருங்கும் ; அதேசமயம் அதினின்று வெளியேறும் மூலதனமும் உழைப்பும் துணி நெசவுத் தொழிலை அடைந்து, அத் தொழிலை விரிவாக்கும்.

ஆனால், மோட்டார்கார் தொழிலிலிருந்து துணி நெசவுத் தொழிலுக்கு உழைப்பு இடம் பெயரும்போது, அதனுடன் நெசவுத் தொழிலில் தற்போது பயன்படுவதைக் காட்டிலும் அதிக அளவு மூலதனமும் இடம் பெயர்கிறது. இவ்வாறு வெளிவந்த மூலதனம் முழுவதையும் பயன்படுத்த வேண்டுமானால் அதன் வட்டி வீதம் குறையும். அப்போது, நெசவுத் தொழிலில் மேலும் தாராளமாக

[7] **W. F. Stolper, Paul A. Samuelson** ஆகிய இருவரும் தோற்றுவித்த இவ் வாதம், அவர்களுடைய பெருமைக்குரிய கட்டுரையான **'Protection and Real Wages'** என்பதில் காணப்படுகிறது. இக் கட்டுரை, **'Review of Economic Studies' IX (Nov. 1941)** என்னும் இதழில் வெளியாகி, பின்னர் **'Readings in the Theory of Distribution' (published 1949 by the Blakiston Co., Philadelphia)** என்னும் நூலில் அச்சிடப்பட்டுள்ளது.

மூலதனம் பயன்படுத்தப்படும். இதன் விளைவாகத் தொழிலாளரின் இறுதி நிலை உற்பத்தி ஆக்கமும் அவர்களின் உண்மைக் கூலியும் நெசவுத் தொழிலில் அதிகரிக்கும். மேலும், மூலதனத்தின் வட்டி குறைந்துவிட்டதால், சுருங்கிவிட்ட மோட்டார்கார் தொழிலிலும் கூட உழைப்புக்குப் பதிலாக மூலதனம் பயன்படுத்தப்படும். எனவே, இத் தொழிலிலும் முன்பைவிட அதிகமான அளவு மூலதனத்தோடு உழைப்பு இணைக்கப்படுவதால், தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி ஆக்கமும் உண்மைக் கூலியும் உயரும்.

எனவே, ஒரு நாட்டின் மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் மொத்த அளிப்பு மாருமலிருந்தால், தொழில் பாதுகாப்பினுல் கூலி வீதம் உயரும். இது பார்ப்பதற்கு முரண்பாடாகத் தோன்றலாம். காரணம், ஒரு நாட்டின் மொத்த மூலதனம், மொத்த உழைப்பு ஆகியவற்றின் அளவு மாருமலிருந்தாலும், ஒவ்வொரு தொழிலிலும் உழைப்போடு பயன்படுத்தப்படும் மூலதனத்தின் விகிதம் அதிகமாகிறது.

இந்த வாதம் ஓரளவிற்கு உண்மையாகவும் கவர்ச்சியாகவும் இருந்தபோதிலும், தொழிலாளிகள் போதுமான அளவு இல்லாத அமெரிக்கா போன்றதொரு நாட்டிற்குக்கூட இது பொருந்தாது. ஏனெனில், இது மாரு நிலைமையை ஆதாரமாகக் கொண்டது. நெடுங்காலத்தில் மூலதனத்திற்குக் கிடைக்கும் வருமானம் குறைவதால், அதன் சேர்க்கை, அளிப்பு, அது உழைப்புடன் தொகுக்கப்படும் விகிதாசாரம் ஆகியவை எப்படி மாறக்கூடும் என்ற வளர்ச்சி அம்சங்களை இந்த வாதம் கருத்தில் கொள்வதில்லை. குறுகிய காலத்தில் மூலதனத்தின் வருமானம் உயரும்போது, நிறைய மூலதனம் சேர்ந்துவிடுவதால், நெடுங்காலத்தில் கூலி வீதம் உயரக்கூடும். தவிர, சேமிப்பும் முதலீடும் உயர்வதால் தொழில் நுட்பப் புத்தமைப்புகள் பல தோன்றுவதன்மூலமும் தொழிலாளிகளின் ஊதியம் உயரக்கூடும்.

உள்நாட்டு விற்பனையைப் பாதுகாப்பது

ஆலைத் தொழில்கள் பாதுகாக்கப்பட்டால், தொழிற்சாலை ஊழியர்களின் வாங்கும் திறன் உயர்ந்து, அதனுல் விவசாயப் பண்டங்களின் விற்பனை பெருகும் என்றுகூட ஒருசிலர் வாதிப்பர்.

'வெளிநாட்டிலிருந்து உள்நாட்டு விவசாயப் பண்டங்களுக்குப் போட்டியாக இறக்குமதியாகும் விவசாயப் பண்டங்கள்மீது வரி விதிப்பதால் விவசாயம் நேரடியாகவே பெரு நன்மை பெறுகிறது. அதோடு ஆலைத் தொழில்களும் இதுபோன்று பாது

காக்கப்பட்டால், அவற்றில் வேலை செய்யும் ஊழியர்களின் வாங்கும் சக்தி உயர்வதன்மூலம் மறைமுகமாகவும் விவசாயத்திற்கு அதிக நன்மை ஏற்படும்.'[8]

விவசாயப் பண்டங்களின் நிகர விற்பனை பெருகும் என்பது தான் இதன் பொருள். ஆனால், தொழிற்சாலை ஊழியர்கள் அதிகமாக வேலைக்கமர்த்தப்படுவதால், அவர்களின் வாங்கும் திறன் உயருகின்ற அதே சமயம், இறக்குமதிகளின் இடத்தை உள்நாட்டுத் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் பறித்துக்கொள்வதன் வழியாக வெளிநாட்டு வாடிக்கையாளரின் வாங்கும் சக்தி குறைகிறது. அதாவது, உள்நாட்டில் விற்பனை அதிகமாகும் சமயத்தில் வெளிநாட்டில் விற்பனை குறைகிறது. இது எப்படி விவசாயிக்கு இலாபமாகும்? இதைத் தவிர, பாதுகாக்கப்பட்ட தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலை தரவேண்டியிருப்பதால், விவசாயிகளுக்கு நஷ்டம் உண்டாவது நிச்சயம்.

நம் பணத்தை நம் நாட்டிலேயே வைத்திருப்பது

அபத்தமான தொழில் பாதுகாப்பு வாதங்களில் ஆப்ரஹாம் லிங்கன் கூறியதாகத் தவருகக் கூறப்படும் வாதமும் ஒன்று உண்டு:

'இறக்குமதி வரிகளைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது; ஆனால், இதுமட்டும் தெரியும்; வெளிநாட்டிலிருந்து நாம் தொழிற்சாலைப் பொருள்களை வாங்கினால், நமக்குப் பொருள்கள் கிடைக்கின்றன; வெளிநாட்டாருக்குப் பணம் கிடைக்கிறது. அவ்வாறின்றி, நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்கினால் பொருள்கள், பணம் இரண்டுமே நமக்குக் கிடைக்கின்றன.'

இந்த வாதத்தை யாராவது எப்போதாகிலும் செய்கிறுர் என்பதைத்தவிர, இதில் உண்மை ஒன்றுமில்லை. இதைப்பற்றிய சிறந்த விமரிசனமாக பெவெரிஜ் (Beveridge) பின்வருமாறு கூறுகிறுர்: "இதில் ஒரு சிறப்பும் கிடையாது; 'இறக்குமதி வரிகளைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது' என்பதுதான் இவ் வாதத்தில் பொருளுடையதாகும்."[9] பணத்தை முக்கியமானதொரு செல்வமாக

[8] Asher Isaacs எழுதிய 'International Trade: Tariffs and Commercial Policies' என்னும் நூலில் 229ஆம் பக்கம். Copyright 1948 by Richard D. Irwin Inc., Homewood, Ill.

[9] Sir William Beveridge எழுதிய 'Tariffs: The Case Examined' என்ற நூலில், பக்கம் 27. Copyright 1931 by Longmans, Green & Co., London. இந் நூலிலும் மேற்கூறிய லிங்கனின் கூற்று மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

இவ் வாதம் குறிப்பிடுகிறது. இது அபத்தமானதொரு வகை மெர்க் கண்டலிச வாதமாகும். பன்னாட்டு வாணிபத்தில் பொருள்களுக்குப் பரிவர்த்தனையாகப் பொருள்கள்தாம் செலுத்தப்படுகின்றன. வாணிபத்தில் ஏற்படும் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு மட்டும்தான் பணம் (பொன்) செலுத்தப்படுகிறது என்று சொன்னாலே இவ் வாதம் முறிந்துவிடுகிறது. நமது நாட்டிலேயே அதைச் செலவழித்தாலன்றி, நமது பணம் (அதாவது, நமது நாட்டில் புழங்கும் பணம்) அயல் நாட்டாருக்கு உதவாது.

உற்பத்திச் செலவுகளைச் சமமாக்குதல்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உற்பத்திச் செலவுகளைச் சமமாக்கும் இறக்குமதி வரி முறைதான் அறிவுக்குகந்த முறை என்று பாதுகாப்பை ஆதரிப்போர் பலர் கூறுகின்றனர். உண்மையில், உற்பத்திச் செலவைச் சமமாக்குவது என்பது, பாதுகாப்புக்கான வாதத்தை மேலும் கவர்ச்சிகரமாகச் செய்யக்கூடியதோர் உபாயமேயன்றி, பாதுகாப்பை ஆதரிக்கும் வாதமாகாது.

‘இந்தக் கோட்பாட்டைப் பார்த்தால், மிகவும் நியாயமானதாகத் தோன்றுகிறது. யாருக்கும் சலுகையே காட்டக்கூடாது; அநியாயமான வரிகள் கூடா என்று சொல்வதுபோல இது தோன்றுகிறது. அமெரிக்க உற்பத்தியாளனுக்கு ஏற்படும் அதிக உற்பத்திச் செலவை ஈடுசெய்யவேண்டும். அவனுடைய குறைபாட்டைப் போக்கி, வெளிநாட்டு உற்பத்தியாளனோடு அவன் போட்டியிடுமாறு செய்யவேண்டும். எவன் கெட்டிக்காரனோ அவன் வெற்றி பெறட்டும். இருவருடைய நிலைமைகளும் சமமாக இருந்தால்தான் அவர்களுடைய போட்டியும் நியாயமானதாக இருக்கும். அப்போது, நியாயமாகக் கிடைக்கக்கூடிய இலாபம்தான் பாதுகாக்கப்பட்ட உற்பத்தியாளருக்குக் கிடைக்கும். அதே சமயம், அநியாயமாக அவர்கள் விலைகளை ஏற்றுதவாறு உள்நாட்டிலுள்ள நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்.’[10]

கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால், இந்தக் கோட்பாடு கூறும் நியாயம் வெறும் வெளிவேஷம் என்பது புலனாகும். இறக்குமதி வரிக் கொள்கை பேதங்காட்டித்தான் ஆகவேண்டும் என்று இது கூறுவதை உணர்ந்தாலே அவ் வேஷம் புலனாகிவிடும். ஒரு நாட்டிலுள்ள தொழில்களில் எவை திறன்குன்றி இருக்கின்றனவோ, அவற்றிற்கு மட்டுந்தான் இறக்குமதி வரியின்மூலம்

[10] இந்த வாதத்தை F. W. Taussig கண்டித்துக் குறிப்பிடுவதை அவர் எழுதிய ‘Free Trade, The Tariff and Reciprocity’ என்ற நூலில் 134ஆம் பக்கத்தில் காணலாம். Copyright 1920 by The Macmillan Co , New York.

பாதுகாப்புத் தரப்படுகிறது. இத் தொழில்கள் நன்மை பெறுவதற்கான செலவைப் பொதுமக்கள் ஏற்கவேண்டியுள்ளது. இறக்குமதிகளைத் தடுப்பதன் வழியாக நம் நாட்டிலுள்ள திறன்மிக்க ஏற்றுமதித் தொழில்கள், வெளிநாட்டில் தம் பொருள்களை விற்கமுடியாத நிலையை அடையுமாறும், அவற்றிற்கு அதனால் தீங்கு விளையுமாறும் இப் பாதுகாப்புக் கொள்கை செய்துவிடுகிறது. திறமையற்ற தொழில்களுக்குச் சாதகமாகவும், திறன்மிக்க தொழில்களுக்கும் நுகரும் பொதுமக்களுக்கும் பாதகமாகவும் அமையும் ஒரு சட்டத்தைப் பொது அறிவுக்கேற்றது என்றே சொல்ல முடியாத போது அறிவுக்குகந்தது என்று எவ்வாறு கூற முடியும்?

அறிவுக்குகந்த இறக்குமதி வரி என்று ஒன்று இருக்குமாகில், எந்தெந்தப் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும், ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் வழிவகைகளை அது திட்டவட்டமாகக் குறிப்பிடவேண்டும். உற்பத்திச் செலவுகளைச் சமமாக்கும் கோட்பாட்டில் இப் பண்புகளெல்லாம் கிடையா. மலிவாக உற்பத்தி செய்ய முடியாத ஒரு தொழிலுக்கு, வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்புத் தரவேண்டுமென்பதற்காக 100 சதவீதம் அல்லது 1000 சதவீதம் என்று வரிப் பாதுகாப்புத் தேவைப் பட்டால்கூட, அத்தகைய பாதுகாப்பைக் கொடுக்கத்தான் வேண்டுமா? இந்த அளவு பாதுகாப்பு மிகவும் அதிகமென்றால் வேறு எந்த அளவில் கொடுப்பது? அத் தொழிலில் உள்ள நிறுவனங்களில் திறமைமிக்க 10 சதவீத நிறுவனங்களின் உற்பத்திச் செலவு அயல்நாட்டாரின் உற்பத்திச் செலவுக்குச் சமமாகும் அளவிற்குப் பாதுகாப்புக் கொடுத்தால் போதுமா? அல்லது அதிலுள்ள 90 சதவீத நிறுவனங்களின் உற்பத்திச் செலவும் அயல்நாட்டாரின் உற்பத்திச் செலவிற்குச் சமமாகும் அளவிற்குப் பாதுகாப்பு வேண்டுமா? அல்லது மிகவும் மோசமான நிறுவனங்களையும் சேர்த்து, எல்லா நிறுவனங்களின் உற்பத்திச் செலவும் வெளிநாட்டு உற்பத்திச் செலவிற்குச் சமமாகும் அளவிற்குப் பாதுகாப்பு வேண்டுமா? எந்த அளவிற்குப் பாதுகாப்புக் கொடுப்பது? இதற்கு ஒரே ஒரு விடைதான் உண்டு. பாதுகாப்புச் சலுகைகள் பெறுவதற்கு அரசியல் செல்வாக்கு உடையவர்கள் இருக்கும் அளவிற்குப் பாதுகாப்புக் கொடுக்கலாம். செல்வாக்கு இல்லாதவர்களுக்கு இவ் வகைப் பாதுகாப்புக் கிடையாது.

அறிவுக்குகந்தது என்று கூறப்படும் இச் சுங்கவரி முறையைக் கூர்ந்து கவனித்தால், இது அறிவுக்கொவ்வாததாயும், வெளிநாட்டாரின் வெறுப்பைத் தூண்டுவதாயும் உள்ளது என்பது

புலனுகும். பார்ப்பதற்கு இது நியாயமானதாகத் தோன்றுவதும், பாதுகாப்பிற்கு வரம்பு ஏதேனும் குறிப்பிடாததும்தான் இதிலுள்ள மிக அபாயகரமான அம்சங்களாகும்.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள்

Beveridge, Sir William, 'Tariffs: The Case Examined', இரண்டாம் பதிப்பு. New York: Longmans, Green & Co., 1932-ல் பதிப்பித்தது. இறக்குமதி வரியைப்பற்றிய எல்லா அம்சங்களையும் பொதுவாக ஆயும் சிறந்த நூல்களில் ஒன்று.

Isaacs, Asher, 'International Trade: Tariffs and Commercial Policies.' Homewood, Ill.: Richard D. Irwin, Inc., 1948-ல் பதிப்பித்தது. இறக்குமதி வரியைப்பற்றி விரிவாக ஆயும் நூல், பயனுள்ள பல எடுத்துக்காட்டுகளைக் கொண்டது.

Kindleberger, Charles P., 'International Economics.' Homewood, Ill.: Richard D. Irwin, Inc., 1963-ல் பதிப்பித்தது. வாணிப வீதத்தை முன்னேற்றுவதற்கும், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும், இவ் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் பற்றுக்குறையாக உள்ள காரணிகளுக்குச் சாதகமாக வருமானத்தை மறுபகிர்வு செய்வதற்கும் விதிக்கப்படும் இறக்குமதி வரியை ஓரளவு முழுமையாக ஆய்கிறது 10ஆம் அதிகாரம்.

Lloyd, Lewis E., 'The Case for Protection.' New York: Devin-Adair Co., 1955-ல் பதிப்பித்தது. தேசிய முன்னேற்றத்திற்கு, தொழில் பாதுகாப்பின் அவசியத்தை ஒருதலைச் சார்பான முறையில் வெளிப்படையாகக் கூறும் நூல் இது.

Scitovsky, Tibor 'A Reconsideration of the Theory of Tariffs,' American Economic Association, 'Readings in the Theory of International Trade.' Philadelphia: The Blakiston Co., 1949-ல் பதிப்பித்தது; அதிகாரம் 16. வாணிபத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தை ஆய்வதுடன் (அதிகாரம் 9), வாணிப வீத வாதத்தையும் அதற்குப் போட்டியாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும் முழுமையாக இக் கட்டுரை விவாதிக்கிறது. இளந்தொழில் பாதுகாப்பு வாதத்திற்கும் சுவையான பல விமரிசனங்களைத் தருகிறது.

Stolper, Wolfgang F., and Paul A. Samuelson, 'Protection and Real Wages,' American Economic Association, 'Readings

in the Theory of International Trade'. Philadelphia: The Blakiston Co., 1949-ல் பதிப்பித்தது; 15ஆம் அதிகாரம். தொழில் பாதுகாப்பின்மூலம் ஒரு நாட்டில் பற்றுக்குறையாக உள்ள காரணியின் தனி வருவாயையும் தராதர வருவாயையும் உயர்த்த முடியும் என்பதைக் காட்டுகிறது.

Taussig, Frank W., 'Some Aspects of the Tariff Question', மூன்றும் பதிப்பு. Cambridge, Mass. : Harvard University Press, 1931-ல் பதிப்பித்தது. அமெரிக்காவில் சர்க்கரை, எஃகு, நெசவுத் தொழில்கள் பாதுகாப்பு வரியினுல் எவ்வாறு வளர்ச்சியுற்றன, இத் தொழில்கள் வளர்வதற்கு இறக்குமதி வரிகள் எவ்வாறு துணை செய்தன என்பதை ஆய்கிறது.

கலைச்சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Absolute advantage — தனிச் சிறப்பு
Acceptance houses — ஒப்பு அகங்கள்
Accumulation of capital — மூலதனக் குவிப்பு
Advertisement — விளம்பரம் செய்தல்
Agent — பதிலாள்
Allocation of resources — சாதனப் பங்கீடு
Atlernatives — மாற்று வழிகள்
Anti-corn Law League — தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்
Apprenticeship — தொழிற் பயிற்சி
Assumption — எடுகோள்
Asymmetrical — சரிச்சீரமைவற்ற
Automatic deflation — தன்னியக்கமான பணச்சுருக்கம்
Average cost — சராசரிச் செலவு
Avarage revenue — சராசரி வருவாய்
Axes — அச்சுகள்

B

Balance — நிலுவை
Balance of payments — செலுத்துநிலை
Balance of trade — வாணிபநிலை
Balance of trade, favourable — சாதகமான வாணிபநிலை
Bank deposit — பாங்கு வைப்பு
Bank notes — பாங்குச் செலாவணி
Banking policy — பாங்குக் கொள்கை
Banking services — பாங்குப் பணிகள்
Bank of England — இங்கிலாந்து பாங்கு

Base year — ஆதார ஆண்டு
Bill broker — உண்டியல் தரகர்
Bills of exchange — உண்டியல்கள்
Blast furnace — ஊதுலை

C

Capital — மூலதனம், முதல்
Capitalism — முதலாளித்துவம்
Capital consumption — முதல் நுகர்ச்சி
Capital goods — முதற்கருவிப் பொருள்கள்
Capital intensive commodities — மூலதனம் அதிகம் தேவைப்படும் பண்டங்கள்
Capitalistic method — முதலாளித்துவ முறை
Cartels — கார்ட்டெல்கள்
Classical economists — தொன்மைப் பொருளாதார அறிஞர்கள்
Classical theory — தொன்மைக் கோட்பாடு
'Climate' of production — உற்பத்திச் சூழ்நிலை
Coefficient — கெழு
Combination of factors — காரணித் தொகுப்பு
Commodity — பண்டம்
Comparative cost — தராதரச் செலவு
Constant cost — மாறுச் செலவு
Constant return — மாறு விளைவு
Consumers' goods — நுகர்வுப் பொருள்கள்
Consumption — நுகர்ச்சி
Control — கட்டுப்பாடு
Corn Laws — தானியச் சட்டங்கள்
Cost of production — உற்பத்திச் செலவு
Credit — கடன்
Cumulative effect — திரண்ட விளைவு

D

Defence — பாதுகாப்பு
Demand — தேவை
Demand curve — தேவைக் கோடு
Demand schedule — தேவைப் பட்டியல்
Depreciation — தேய்மானம்
Depreciation reserve — தேய்மான ஈட்டுநிதி
Dexterity — கைத்திறன்

Diminishing returns	—	குறைந்துசெல் விளைவு
Discount	—	கழிவு
Discount houses	—	கழிவகங்கள்
Discount rate	—	கழிவு வீதம்
Discriminating monopoly	—	விலைபேதங் காட்டும் சர்வாதீனம்
Disequilibrium	—	சமநிலைக்கேடு
Distribution	—	பகிர்வு
Division of labour	—	வேலைப் பாகுபாடு
Dues	—	கட்டணம்
Dumping	—	டம்பிங், வெளிநாட்டில் மலிவாகக் குவித்தல்

E

Economies	—	சிக்கனங்கள்
Economies of scale	—	அளவுச் சிக்கனங்கள்
Economic reconstruction	—	பொருளாதாரச் சீரமைப்பு
Economic transition	—	பொருளாதார நிலைமாற்றம்
Efficiency	—	திறன், திறமை
Emigration	—	குடியேற்றம்
Enclosure movement	—	நிலவடைப்பு இயக்கம்
Engineering industry	—	பொறியாண்மைத் தொழில்
Entrepreneur	—	தொழில்முயல்வோர்
Enterprise	—	தொழில்துணிவு
Equal product curves	—	சம உற்பத்தி அளவுக் கோடு
Equilibrium	—	சமநிலை
Equipment	—	துணைச்சாதனங்கள்
Establishment	—	ஸ்தாபனம்
Exchange	—	பரிவர்த்தனை, மாற்று
Exchange rate	—	மாற்று வீதம்
Excise duty	—	ஆயத்தீர்வை
Expenditure plan	—	செலவுத் திட்டம்
Export	—	ஏற்றுமதி
Export duty	—	ஏற்றுமதி வரி
Export economics	—	ஏற்றுமதிப் பொருளாதாரம்
Extent of the market	—	அங்காடி விரிவு

F

Factor combination	—	காரணித் தொகுப்பு
Factor endowment	—	காரணிப்பேறு
Factors of production	—	உற்பத்திக் காரணிகள்

Factor proportions theory — காரணி விகிதாசாரக் கோட்பாடு
Factor supply structure — காரணி அளிப்பு அமைப்பு
Factory system — தொழிற்சாலை முறை
Feudalism — நிலமானிய முறை
Firm — நிறுவனம்
Foreign currency — அயல்நாட்டுச் செலாவணி
Foreign exchange — நாணயமாற்று
Foreign investment — அயல்நாட்டு முதலீடு
Free trade — தடையிலா வாணிபம்

G

Generalizations — பொதுமைகள்
Gold Standard — பொன் நாணயத் திட்டம்
Goods — பொருள்கள்
Grading — தரப்படுத்தல்

H

Handicrafts — கைவினைத் தொழில்
Hoarding — முடக்கல்
Homogeneous — ஒரேதன்மையான
Horizontal — படுகிடை
Human capital — ஆள்சார் முதல்
Hyperbola — அதிபர வளைவு
Hypothesis — கருதுகோள்

I

Ideological split — கொள்கைப் பிணக்கம்
Immigration — குடியிறக்கம்
Imperfect competition — நிறைகுறைப் போட்டி
Import — இறக்குமதி
Import duty — இறக்குமதித் தீர்வை
Import restriction — இறக்குமதிக் கட்டுப்பாடு
Income — வருமானம், வருவாய்
Income effect — வருமான விளைவு
Income, inequality of — வருமான ஏற்றத்தாழ்வு
Income, money — பண வருமானம்
Income, real — உண்மை வருமானம்
Income tax — வருமான வரி
Income terms of trade — வாணிப வருமான மாற்றுவீதம்

Increasing cost — வளர்ந்துசெல் செலவு
Index numbers — குறியீட்டெண்கள்
Indivisibility — பகுபடாத் தன்மை
Industry — தொழில்
Industrial revolution — தொழிற் புரட்சி
Industrialization — தொழில்மயமாக்கல்
Inflation — பணவீக்கம்
Infinity — அளவிலி
Innovation — புத்தாக்கம்
Input — உள்ளிடுகை
Interest — வட்டி
Interest rate — வட்டி வீதம்
Internal economies — அகச்சிக்கனங்கள்
Internationalism — சர்வதேசக் கொள்கை
International economics — பன்னாட்டுப் பொருளாதாரம்
International investment — பன்னாட்டு முதலீடு
International mobility — பன்னாட்டு இடப்பெயர்ச்சி
International trade — பன்னாட்டு வாணிபம்
Investment — முதலீடு
Investible fund — முதலீட்டு நிதி
Investment banks — முதலீட்டு பாங்குகள்
Invisible items — புலனாக இனங்கள்
Isoquants — சம அளவுக் கோடுகள்

J

Joint-cost — இணைப்புச் செலவு
Joint-products — இணைப்புப் பண்டங்கள்
Joint-supply — இணைப்பு அளிப்பு
Justices of peace — அமைதி காக்கும் நீதிபதிகள்

L

Labour — உழைப்பு
Labour cost principle — உழைப்புச் செலவுத் தத்துவம்
Labour intensive commodity — அதிக உழைப்பு தேவைப்படும் பண்டம்
Labour saving devices — உழைப்பை மிச்சம் பண்ணும் வழிகள்
Labour theory of value — உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு
Laissez-faire — அரசாங்கத் தலையிடாக் கொள்கை

Land intensive commodity — அதிக நிலம் தேவைப்படும் பண்டம்
Land tenure system — நில உரிமை முறை
Large-scale production — பேரளவு உற்பத்தி
Lathes — கடைசல் பொறி
Lender of last resort — உற்றுழி உதவுவோன்
Liability — பொறுப்பு
Limited liability — வரையிட்ட பொறுப்பு
Liquidity preference — நீர்மை விருப்பம்
Local market — தல அங்காடி
Local monopoly — தல சர்வாதீனம்
Local tariffs — தல வரிகள்
Location of industry — தொழிலிடச் செறிவு
London money market — லண்டன் பண அங்காடி

M

Machinery — இயந்திரம்
Management — நிர்வாகம்
Managerial labour — நிர்வாக உழைப்பு
Manufactures — பொறிசெய் பொருள்கள், தொழிற்சாலைப் பொருள்கள்
Margin — இறுதிநிலை
Marginal productivity — இறுதிநிலை உற்பத்தி ஆக்கம்
Marginal unit — இறுதிநிலை அலகு
Market — அங்காடி
Market-oriented commodity — அங்காடித் தொடர்பிணைவு உடைய பண்டம்
Materials — மூலப்பொருள்கள், சாதனங்கள்
Materials-oriented commodity — மூலப்பொருள் தொடர்பிணைவு உடைய பண்டம்
Mercantilism — மெர்க்கன்டலிசம்
Mercantilists — மெர்க்கன்டலிஸ்டுகள்
Mercantilist thought — மெர்க்கன்டலிசக் கருத்து
Merchandizes — வாணிபச் சரக்குகள்
Methods of production — உற்பத்தி முறைகள்
Migration — குடிப்பெயர்ச்சி
Mobility of factors — காரணி இடப்பெயர்ச்சி
Model — மாதிரி
Monetary reform — பணச் சீர்திருத்தம்
Money cost — பணச் செலவு

Money income — பண வருவாய்
Money wage — பணக் கூலி
Monopoly — சர்வாதீனம்
Monopolistic competition — சர்வாதீனப் போட்டி
Monopoly price — சர்வாதீன விலை
Multilateral pattern — பன்முக அமைப்பு

N

National income — தேசிய வருமானம்
Natural resources — இயற்கை வளம், சாதனம்
Navigation Acts — கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள்
Non-capital using method — மூலதனம் பயன்படாத உற்பத்தி முறை
Non-homogeneous factors — ஒரேதன்மையற்ற காரணிகள்

O

Open-field system — திறந்த வயல் சாகுபடி முறை
Operating cost — நடைமுறைச் செலவு
Opportunity cost — பிற வாய்ப்புப் பெறுமானம்
Origin — தோற்றுவாய்
Original factors — மூலக்காரணிகள்
Output — உற்பத்தி, வெளிப்படுகை

P

Partnership — கூட்டு
Patent — பேட்டன்டு
Payment — செலுத்து
Pauper labour argument — ஏழை உழைப்பு வாதம்
Per capita income — தலா வருமானம்
Perfect competition — நிறைவுப் போட்டி
Pig-iron — தேனிரும்பு
Plants — தளவாடங்கள்
Population — மக்கள்தொகை
Price discrimination — விலைபேதங் காட்டல்
Price equalization — விலைச் சமன்பாடு
Price-specie-flow theory — விலை-பொன்-இடப்பெயர்ச்சிக் கோட்பாடு
Primary products — மூலப்பொருள்கள்
Private enterprise system — தனியார் முயற்சிப் பொருளாதாரம்

Process — செய்முறை, படி-முறை
Production — உற்பத்தி
Productivity — உற்பத்தித்திறன்
Product differentiation — பண்ட வேற்றுமைப்படுத்தல்
Production functions — உற்பத்திசார் பலன்கள்
Producers' goods — உற்பத்தியாளர் பொருள்கள்
Production possibility curve — உற்பத்தி சாத்தியக் கோடு
Productive services — உற்பத்திப் பணிகள்
Progressive tax — வளர்வீத வரி
Propensity to save — சேமிப்பு நாட்டம்
Protection — தொழில் பாதுகாப்பு
Protective tariff — தொழில் பாதுகாப்பு வரி
Purchasing power — வாங்கும் திறன்

Q

Quantitative restriction — அளவுக் கட்டுப்பாடு
Quantity theory of money — பண அளவுக் கோட்பாடு
Quasi-rent — தற்காலிக வாரம்
Quota — கோட்டா, பங்களவு
Quoting — விலைக்குறிப்பு

R

Range — வீச்சு
Rate — வீதம்
Ratio — விகிதம்
Raw materials — கச்சாப் பொருள்கள்
Real cost — உண்மைச் செலவு
Real income — உண்மை வருமானம்
Real wage — உண்மைக் கூலி
Reciprocal demand — பரஸ்பரத் தேவை
Recovery — மீட்சி
Rectangular hyperbola — செவ்வக அதிபர வளைவு
Redistribution — மறுபகிர்வு
Regulated trade — கட்டுப்படுத்தப்பட்ட வாணிபம்
Relative advantage — தராதரச் சிறப்பு
Relative price — தராதர விலை
Resources — சாதனங்கள்
Restriction — கட்டுப்பாடு
Returns — விளைவு
Rolling-stock — உருள்கலங்கள்
Roundabout method — சுற்றுவழி முறை

S

Saving	—	சேமிப்பு
Schedule	—	பட்டியல்
Self-sufficiency	—	சுயநிறைவு
Semi-skilled labour	—	குறைதிறத் தொழிலாளி
Services	—	பணிகள்
Short-term credit	—	குறுங்காலக் கடன்
Skilled labour	—	திறம்பெற்ற தொழிலாளி
Slope	—	சரிவு
Social overhead capital	—	சமூகப் பொது மூலதனம்
Social security	—	சமூகப் பாதுகாப்பு
Specialization	—	சிறப்புத் தேர்ச்சி
Specialized market	—	தனிச் சிறப்புற்ற அங்காடி
Speculation	—	ஊகவணிகம்
Standard of living	—	வாழ்க்கைத்தரம்
Stock	—	இருப்பு
Structural change	—	அமைப்பு நிலை மாற்றம்
Subfactors	—	உபகாரணிகள்
Substitute	—	பதிலீடு
Supply price	—	அளிப்பு விலை
Symmetrical	—	சரிச்சீரமைவுற்ற

T

Trade	—	அட்டவணை
Tangent	—	தொடுகோடு
Tariff	—	இறக்குமதி வரி
Tariff policy	—	இறக்குமதி வரிக் கொள்கை
Technical labour	—	தொழில்நுட்ப உழைப்பு
Technical knowledge	—	தொழில்நுட்ப அறிவு
Techniques of production	—	உற்பத்தி நுட்பமுறை
Technology	—	தொழில்நுட்பம்
Termes of trade	—	வாணிப வீதம்
Theory	—	கோட்பாடு
Toll	—	வழிச்சுங்கம்
Trade	—	வாணிபம்
Trade union	—	தொழிற் சங்கம்
Transaction	—	பரிவர்த்தனை
Transport cost	—	போக்குவரத்துச் செலவு

U

Underwrite — பொறுப்பு ஏற்றல்
Unit — அலகு
Unproductive — ஆக்கமில்லாத
Unskilled labour — பயிலாத் தொழிலாளி

V

Value — மதிப்பு
Vertical axis — செங்குத்து அச்சு
Volume of trade — வாணிப அளவு

W

Wage — கூலி
Wants — விருப்பங்கள்
Water-power — நீர்ச்சக்தி
Working capital — நடப்பு மூலதனம்
Working population — உழைக்கும் மக்கள்தொகை

Z

Zero — சூனியம்
Zollverein — சுங்க ஐக்கியம்

கலைச்சொற்கள்

(தமிழ்—ஆங்கிலம்)

அ

அகச்சிக்கனங்கள்	—	Internal economies
அங்காடி	—	Market
அங்காடித் தொடர்பிணைவுடைய பண்டங்கள்	—	Market-oriented commodities
அங்காடி விரிவு	—	Extent of the market
அச்சுகள்	—	Axes
அட்டவணை	—	Table
அதிக உழைப்பு தேவைப்படும் பண்டம்	—	Labour-intensive commodity
அதிக நிலம் தேவைப்படும் பண்டம்	—	Land-intensive commodity
அதிபர வளைவு	—	Hyperbola
அதிக மூலதனம் தேவைப்படும் பண்டம்	—	Capital-intensive commodity
அமைதி காக்கும் நீதிபதிகள்	—	Justices of peace
அமைப்பு நிலை மாற்றம்	—	Structural change
அயல்நாட்டுச் செலாவணி	—	Foreign currency
அயல்நாட்டு முதலீடு	—	Foreign investment
அரசாங்கத் தலையிடாக் கொள்கை	—	Laissez-faire
அலகு	—	Unit
அளவுக் கட்டுப்பாடு	—	Quantitative restriction
அளவிலி	—	Infinity
அளவுச் சிக்கனங்கள்	—	Economies of scale
அளிப்பு விலை	—	Supply price

ஆ

ஆக்கமில்லாத	—	Unproductive
ஆதார ஆண்டு	—	Base year
ஆயத்தீர்வை	—	Excise duty
ஆள்சார் முதல்	—	Human capital

இ

இங்கிலாந்து பாங்கு	—	Bank of England
இணைப்புச் செலவு	—	Joint-cost
இணைப்புப் பண்டங்கள்	—	Joint products
இயந்திரம்	—	Machinery
இயற்கை வளம், சாதனம்	—	Natural resources
இருப்பு	—	Stock
இறக்குமதி	—	Import
இறக்குமதிக் கட்டுப்பாடு	—	Import restriction
இறக்குமதித் தீர்வை	—	Import duty
இறக்குமதி வரி	—	Tariff
இறக்குமதி வரிக் கொள்கை	—	Tariff policy
இறுதிநிலை	—	Margin
இறுதிநிலை அலகு	—	Marginal unit
இறுதிநிலை உற்பத்தி ஆக்கம்	—	Marginal productivity

உ

உண்டியல்கள்	—	Bills of exchange
உண்டியல் தரகர்	—	Bill broker
உண்மைக் கூலி	—	Real wage
உண்மைச் செலவு	—	Real cost
உண்மை வருமானம்	—	Real income
உபகாரணிகள்	—	Subfactors
உருள்கலங்கள்	—	Rolling-stock
உற்பத்தி	—	Production (output)
உற்பத்திக் காரணிகள்	—	Factors of production
உற்பத்தி சாத்தியக் கோடு	—	Production possibility curve
உற்பத்திசார் பலன்கள்	—	Production functions
உற்பத்திச் சூழ்நிலை	—	Climate of production
உற்பத்திச் செலவு	—	Cost of production
உற்பத்தித்திறன்	—	Productivity
உற்பத்தி நுட்பமுறை	—	Techniques of production

உற்பத்திப் பணிகள்	—	Productive services
உற்பத்தியாளர் பொருள்கள்	—	Producers' goods
உற்பத்தி முறைகள்	—	Methods of production
உழைப்புச் செலவுத் தத்துவம்	—	Labour cost principle
உழைக்கும் மக்கள்தொகை	—	Working population
உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு	—	Labour theory of value
உழைப்பை மிச்சம் பண்ணும் வழிகள்	—	Labour saving devices
உள்ளிடுகை	—	Input
உற்றுழி உதவுவோன்	—	Lender of last resort

ஊ

ஊகவணிகம்	—	Speculation
ஊதுலை	—	Blast furnace

எ

எடுகோள்	—	Assumption

ஏ

ஏழை உழைப்பு வாதம்	—	Pauper labour argument
ஏற்றுமதி	—	Export
ஏற்றுமதித் தீர்வை	—	Export duty
'ஏற்றுமதிப்' பொருளாதாரம்	—	'Export' economics

ஒ

ஒப்பு அகங்கள்	—	Acceptance houses
ஒரே தன்மையான	—	Homogeneous
ஒரே தன்மையற்ற காரணிகள்	—	Non-homogeneous factors

க

கச்சாப் பொருள்கள்	—	Raw materials
கடன்	—	Credit
கடைசல் பொறி	—	Lathes
கட்டுப்பாடு	—	Control (restriction)
கட்டுப்படுத்தப்பட்ட வாணிபம்	—	Restricted trade
கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள்	—	Navigation Acts
கருதுகோள்	—	Hypothesis
கழிவகம்	—	Discount house

கழிவு	—	Discount
கழிவு வீதம்	—	Discount rate
காரணி அளிப்பு அமைப்பு	—	Factor supply structure
கார்ட்டெல்கள்	—	Cartels
காரணி இடப்பெயர்ச்சி	—	Mobility of factors
காரணித் தொகுப்பு	—	Factor combination
காரணிப்பேறு	—	Factor endowment
காரணி விகிதாசாரக் கோட்பாடு	—	Factor proportions theory
குடியேற்றம்	—	Emigration
குடிப்பெயர்ச்சி	—	Migration
குடியிறக்கம்	—	Immigration
குறியீட்டெண்கள்	—	Index numbers
குறுங்காலக் கடன்	—	Short-term credit
குறைந்துசெல் விளைவு	—	Diminishing return
குறைதிறத் தொழிலாளி	—	Semi-skilled labour
கூட்டு	—	Partnership
கூலி	—	Wage
கெழு	—	Coefficient
கைத்திறன்	—	Dexterity
கைவினைத் தொழில்	—	Handicraft
கொள்கைப் பிணக்கம்	—	Ideological split
கோட்டா (பங்களவு)	—	Quota
கோட்பாடு	—	Theory

ச

சம அளவுக் கோடு	—	Isoquants
சம உற்பத்தி அளவுக் கோடு	—	Equal product curve
சமநிலை	—	Equilibrium
சமநிலைக்கேடு	—	Disequilibrium
சமூகப் பாதுகாப்பு	—	Social security
சமூகப் பொது மூலதனம்	—	Social overhead capital
சராசரிச் செலவு	—	Average cost
சராசரி வருவாய்	—	Average revenue
சரிச்சீரமைவற்ற	—	Asymmetrical
சரிச்சீரமைவுற்ற	—	Symmetrical
சரிவு	—	Slope
சர்வதேசக் கொள்கை	—	Internationalism
சர்வாதீனம்	—	Monopoly
சர்வாதீனப் போட்டி	—	Monopolistic competition
சர்வாதீன விலை	—	Monopoly price

சாதகமான வாணிப நிலை — Favourable balance of trade
சாதனங்கள் — Resources
சாதனப் பங்கீடு — Allocation of resources
சிக்கனங்கள் — Economies
சிறப்புத் தேர்ச்சி — Specialization
சுங்க ஐக்கியம் — Zollverein
சுயநிறைவு — Self-sufficiency
சுற்றுவழி முறை — Roundabout method
சூனியம் — Zero
செங்குத்து அச்சு — Vertical axis
செய்முறை (படிமுறை) — Process
செலவுத் திட்டம் — Expenditure plan
செலுத்து — Payment
செலுத்துநிலை — Balance of payment
செவ்வக அதிபர வளைவு — Rectangular hyperbola
சேமிப்பு — Saving
சேமிப்பு நாட்டம் — Propensity to save

த

தடையிலா வாணிபம் — Free trade
தரப்படுத்தல் — Grading
தராதரச் சிறப்பு — Relative advantage
தராதரச் செலவு — Relative cost
தராதர விலை — Relative price
தல அங்காடி — Local market
தல சர்வாதீனம் — Local monopoly
தலவரி — Local tariff
தலா வருமானம் — Per capita income
தளவாடங்கள் — Plants
தற்காலிக வாரம் — Quasi-rent
தனிச் சிறப்பு — Absolute advantage
தனிச் சிறப்புற்ற அங்காடி — Specialized market
தனியார் முயற்சிப் பொருளாதாரம் — Private enterprise system
தன் இயக்கமான பணச்சுருக்கம் — Automatic deflation
தானியச் சட்டங்கள் — Corn Laws
தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் — Anti-corn Law League
திரண்ட விளைவு — Cumulative effect
திறந்த வயல் சாகுபடி முறை — Open-field system
திறம்பெற்ற தொழிலாளி — Skilled labour

திறன் (திறமை)	—	Efficiency
துணைச்சாதனம்	—	Equipment
தேசிய வருமானம்	—	National income
தேய்மானம்	—	Depriciation
தேய்மான நிதி	—	Depreciation reserves
தேவை	—	Demand
தேவைக் கோடு	—	Demand curve
தேவைப் பட்டியல்	—	Demand Schedule
தேனிரும்பு	—	Pig-iron
தொடுகோடு	—	Tangent
தொழில்	—	Enterprise
தொழிற் சங்கம்	—	Trade union
தொழிற்சாலை முறை	—	Factory system
தொழிலிடச் செறிவு	—	Location of industry
தொழில்துணிவோர்	—	Entrepreneur
தொழில்நுட்ப அறிவு	—	Technical knowledge
தொழில்நுட்ப உழைப்பு	—	Technical labour
தொழில்நுட்பம்	—	Technology
தொழில் பயிற்சி	—	Apprenticeship
தொழில் பாதுகாப்பு	—	Protection
தொழில் பாதுகாப்பு வரி	—	Protective tariff
தொழில் புரட்சி	—	Industrial revolution
தொழில்மயமாக்கல்	—	Industrialization
தொன்மைக் கோட்பாடு	—	Classical theory
தொன்மைப் பொருளாதார அறிஞர்கள்	—	Classical economists
தோற்றுவாய்	—	Origin

ந

நடப்பு மூலதனம்	—	Working capital
நடைமுறைச் செலவு	—	Operating cost
நாணயமாற்று	—	Foreign exchange
நிர்வாகம்	—	Management
நிர்வாக உழைப்பு	—	Managerial labour
நில உரிமை முறை	—	Land tenure system
நிலவடைப்பு இயக்கம்	—	Enclosure movement
நிலமானிய முறை	—	Feudalism
நிலுவை	—	Balance
நிறுவனம்	—	Firm

நிறைவுப் போட்டி	—	Perfect competition
நிறைகுறைப் போட்டி	—	Imperfect competition
நீர்ச்சக்தி	—	Water power
நீர்மை விருப்பம்	—	Liquidity preference
நுகர்ச்சி	—	Consumption
நுகர்வுப் பொருள்கள்	—	Consumers' goods

ப

பகிர்வு	—	Distribution
பகுபடாத் தன்மை	—	Indivisibility
படுகிடை	—	Horizontal
பட்டியல்	—	Schedule
பண அளவுக் கோட்பாடு	—	Quantity theory of money
பணக் கூலி	—	Money wage
பணச் சீர்திருத்தம்	—	Monetary reform
பணச் செலவு	—	Money cost
பண வருமானம்	—	Money income
பணவீக்கம்	—	Inflation
பணிகள்	—	Services
பண்டம்	—	Commodity
பண்ட வேற்றுமைப்படுத்தல்	—	Product differentiation
பதிலாள்	—	Agent
பதிலீடு	—	Substitute
பயிலாத் தொழிலாளி	—	Unskilled labour
பரஸ்பரத் தேவை	—	Reciprocal demand
பரிவர்த்தனை	—	Exchange
பன்முக அமைப்பு	—	Multilateral pattern
பன்னாட்டு இடப்பெயர்ச்சி	—	International mobility
பன்னாட்டுப் பொருளாதாரம்	—	International economy
பன்னாட்டு முதலீடு	—	International investment
பன்னாட்டு வாணிபம்	—	International trade
பாங்குக் கொள்கை	—	Banking policy
பாங்குச் செலாவணி	—	Bank notes
பாங்குப் பணிகள்	—	Banking services
பாங்கு வைப்பு	—	Bank deposits
பாதுகாப்பு	—	Defence
பிறவாய்ப்புப் பெறுமானம்	—	Opportunity cost
புத்தாக்கம்	—	Innovation
புலனாகா இனங்கள்	—	Invisible items
பேரளவு உற்பத்தி	—	Large-scale production
பேட்டன்டு	—	Patent

பொதுச் செலவு — Overhead cost
பொதுமைகள் — Generalizations
பொருள்கள் — Goods
பொருளாதாரச் சீரமைப்பு — Economic reconstruction
பொருளாதார நிலைமாற்றம் — Economic transition
பொருளாதார மந்தம் — Economic depression
பொறிசெய் பொருள்கள் — Manufactures
பொறியாண்மைத் தொழில் — Engineering industry
பொறுப்பு — Liability
பொறுப்பு ஏற்றல் — Underwrite
பொன் நாணயத் திட்டம் — Gold Standard
போக்குவரத்துச் செலவு — Transport cost

ம

மக்கள்தொகை — Population
மதிப்பு — Value
மறுபகிர்வு — Redistribution
மாதிரி — Model
மாறுச் செலவு — Constant cost
மாறு விளைவு — Constant return
மாற்று வழிகள் — Alternatives
மாற்று வீதம் — Exchange rate
மீட்சி — Recovery
முடக்கல் — Hoarding
முதலாளித்துவம் — Capitalism
முதலாளித்துவ முறை — Capitalistic method
முதலீடு — Investment
முதலீட்டு நிதி — Investible fund
முதலீட்டு பாங்கு — Investment bank
முதல் நுகர்ச்சி — Capital consumption
முதற்கருவிப் பொருள்கள் — Capital goods
மூலக்காரணிகள் — Original factors
மூலதனம் (முதல்) — Capital
மூலதனம் ஆளா உற்பத்திமுறை — Non-capital using method
மூலதனக் குவிப்பு — Capital accumulation
மூலதன நிதி — Capital fund
மூலப்பொருள்கள் — Primary products
மூலப்பொருள்கள் தொடர்பிணைவுடைய பண்டங்கள் — Materials-oriented commodities
மெர்க்கன்டலிசம் — Mercantilism
மெர்க்கன்டலிஸ்டுகள் — Mercantilists
மெர்க்கன்டலிசக் கருத்து — Mercantilist thought

ல

லண்டன் பண அங்காடி — London Money Market

வ

வட்டி வீதம் — Interest rate
வருமானம் — Income
வருமான ஏற்றத்தாழ்வு — Inequality of income
வருமான வரி — Income tax
வருமான விளைவு — Income effect
வரையிட்ட பொறுப்பு — Limited liability
வழிச்சுங்கம் — Toll
வளர்ந்துசெல் செலவு — Increasing cost
வளர்வீத வரி — Progressive tax
வாங்கும் திறன் — Purchasing power
வாணிப அளவு — Volume of trade
வாணிபச் சரக்குகள் — Merchandizes
வாணிப நிலை — Balance of trade
வாணிபம் — Trade
வாணிப வருமான மாற்றுவீதம் — Income terms of trade
வாணிப வீதம் — Terms of trade
வாழ்க்கைத்தரம் — Standard of living
விகிதம் — Ratio
விலைக்குறிப்பு — Quoting
விலைச் சமன்பாடு — Price equalization
விலைபேதங் காட்டல் — Price discrimination
விலைபேதங் காட்டும் சர்வாதீனம் — Discriminating monopoly
விலை-பொன்-இடப்பெயர்ச்சிக் கோட்பாடு — Price-specie-flow theory
விருப்பம் — Wants
விளம்பரம் செய்தல் — Advertisement
விளைவு — Returns
வீச்சு — Range
வீதம் — Rate
வெளிப்படுகை (உற்பத்தி) — Output
வெளிநாட்டில் மலிவாகக் குவித்தல் (டம்பிங்) — Dumping
வேலைப் பாகுபாடு — Division of labour
வைப்பு — Deposit
ஸ்தாபனம் — Establishment

பொருட்குறிப்பு அகரவரிசை

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1966வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம் - II	... சி. வேலாயுதம்	...	9 00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	... திருமதி ஆர். தாமரஜாட்சி	...	12 00
3.	பொருளாதாரம்—ஓர் அறிமுகம் - I	... தி. சி. மோகன்	...	12 00
4.	,, II	... எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	...	10 75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	... க. முத்தையன்	...	7 00
*6.	பணவியலும் பாங்கியலும் - II	... சி. வேலாயுதம்	...	11 50
7.	நவீன பாங்கு இயல்	... க. வெற்றிவேல்	...	7 50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	... பி. வி. ஸ்ரீநிவாசன்	...	5 50
*9.	அரசாங்க நிதியியல்	... அர. சேஷாசலம்	...	4 75
10.	இந்தியப் பொருளியல் - I	... எம். பாலசுப்பிரமணியன்	...	10 00
11.	,, II	... எம். லூர்துநாதன்	...	4 25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை - I	... சி. சுந்தரராஜன்	...	10 75
13.	,, II	... எஸ். குழந்தைநாதன்	...	10 50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு - I	... கீ. சீ. இராமசாமி	...	6 00
15.	,, II	... ,,	...	6 00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	... தி. சி. மோகன்	...	5 00

17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I	மு. க. சுப்பிரமணியம்	11 00
18.	,, II	பி. வி. சீனிவாசன்	6 00
19.	,, III	,,	6 50
20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	மா. குமாரசாமி	10 00
21.	,, II	அர. சேஷாசலம்	9 50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	தே.வேலப்பன்	10 00
23.	,, II	ஜி. சிதம்பரம்	8 00
24.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10 00
*25.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடையபிள்ளை	9 50
26.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில், வாணிபப் புரட்சி	சு. ரா. கறுப்பண்ணன்	11 00
27.	பென்ஹாம் பொருளாதாரம் - I	ஏ. குழந்தை	11 00
28.	,, II	எஸ். குழந்தைநாதன்	7 00
29.	வரவுசெலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6 00

வரலாறு

*30.	பிரிட்டன் வரலாறு - I	கி. ர. அனுமந்தன்	10 00
*31.	,, II	,,	9 75
*32.	ஐரோப்பிய வரலாறு - I	டி. வி. சொக்கப்பா	4 50
33.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15 00
34.	இங்கிலாந்து வரலாறு - I	இரா. அண்ணுமலை	13 00
35.	,, II	பா. மாணிக்கவேலு	13 00
36.	,, III	என். ஜே. ராஜகோபால்	8 00
37.	,, IV	,,	8 00

*மூலநூல் (Original Book)

வரலாறு—தொடர்ச்சி

38.	இங்கிலாந்தின் வரலாறு - I	க. த. திருநாவுக்கரசு	15 00
39.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8 00
40.	,, III	,,	5 00
41.	இந்தியாவின் சிறப்பு வரலாறு - I	தி. வெ. குப்புசாமி	7 50
42.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	9 00
43.	,, III	அ. பாண்டுரங்கன்	11 00
44.	கிரேக்க நாட்டு வரலாறு - I	சைமன் ஜ. எஸ். பாக்கியநாதன்	7 50
45.	,, II	,,	7 00
46.	,, III	பி. இராமானுஜம் தேவதாஸ்	7 75

அரசியல்

*47.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4 75
48.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8 50
49.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8 50
50.	பன்னாட்டு அரசியல் - I	திருமதி நூர்ஜஹான் பாவா	16 00
51.	பொதுத்துறை ஆட்சி இயல் - I	வீ. கண்ணையா	9 00
52.	,, II	அ. ஜெகதீசன்	7 25
53.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம் - I	வீ. கண்ணையா	7 50
54.	,, II	டி. செல்லப்பா	7 50

உளவியல்

55.	குழந்தை உளவியல் - I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8 00
56.	,, II	,,	7 00
57.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7 00
58.	இளையோர் உளவியல் - I	தி. இரா. அரங்கராசன்	12 00
59.	,, II	,,	9 00

60.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9 25
61.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11 00
62.	பித்தரின் உள்ளம்	,,	3 00
*63.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6 25

தத்துவம்

64.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5 50
*65.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர். இராமானுஜாச்சாரி	3 50
*66.	மேலைநாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	3 50
67.	அத்துவித தத்துவம்	ஜி. எம். காந்தி	6 50
68.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	5 50
69.	இந்தியத் தத்துவம்	வ. அ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம்	3 50

அறவியல்

70.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8 50

அளவையியல்

71.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2 50

மானிடவியல்

*72.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4 75
73.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5 50
74.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3 50

சமூகவியல்

75.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10 00

*மூலநூல் (Original Book)

புவியியல்

76.	ஆசியா - I	கொ. சேஷ. நரசிம்மன்	9 50
77.	,, II	,,	8 75
78.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8 50
*79.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8 50
*80.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8 25
*81.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9 00
*82.	தென் கண்டங்கள் - ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4 00
*83.	,, - ஆஃப்ரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3 25
*84.	புவிப்புறவியல் - II	நா. அனந்தபத்மநாபன்	6 00
*85.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9 00
*86.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6 25
*87.	சமுத்திரவியல்	கோ. இராமசுவாமி	6 50
88.	காலநிலை இயல் - I	கொ. சேஷ. நரசிம்மன்	10 00
89.	,, II	,,	5 00
90.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11 00
*91.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4 75

புள்ளியியல்

*92.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10 00
93.	புள்ளியியல் முறைகள் - I	கோ. சண்முகசுந்தரம்	10 00
94.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14 00
95.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6 50

உயர்கணிதம்

*96.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	12 50
*97.	வகை நுண்கணிதம்	,,	8 00
*98.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	9 00

விலங்கியல்			
*99.	விலங்கியல்	... பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன்	... 12 00
பௌதிகவியல்			
100.	ஒளி நூல்	... ச. சம்பத்து	... 10 00
விஞ்ஞானம்			
*101.	வானவெளி வெற்றி	... டாக்டர் எம். ஏ தங்கராஜ்	... 6 00
*102.	ரேடியோ	... ,, பி. திருஞானசம்பந்தம்	... 4 75
*103.	எக்ஸ்-கதிர்கள்	... பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	... 4 50
*104.	பாம்புகள்	... பெ. மா. அண்ணுமலை	... 3 50
*105.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	... டாக்டர் கு. சீனிவாசன்	... 8 00
*106.	கரும்பு	... கு. பெரியசாமி	... 4 00
மருத்துவம்			
*107.	நீரிழிவு-க்ஷயரோகம்	... டாக்டர் ஜி. வெங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	... 2 50
108.	மகப்பேறும் மாதர் நோயும்	... டாக்டர் (குமாரி) மணிமேகலை	... 8 25
*109.	பாக்டீரியா	... சு. சுந்தரம்	... 2 50
பொறியியல்			
110.	நீங்களே வீட்டைக் கட்டலாம்	... கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்ரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	... 8 50
சட்டம்			
*111.	குற்றவியல் சட்டம்	... எம். சண்முகசுப்பிரமணியம்	... 10 00
பொது நூல்கள்			
112.	மகாத்மா காந்தி	... சரஸ்வதி தங்கையன்	... 3 25
113.	விவசாயப் புரட்சி	... வி. கார்த்திகேயன்	... 8 00
114.	சேமக் கை-நூல்	... ஆ. சுப்பிரமணியன்	... 2 50
*115.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	... எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	... 9 00
*116.	உணவும் ஊட்டமும்	... தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	... 4 50

* மூலநூல் (Original Book)